ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம :

குருபரம்பரைப் புராணம்

பாயிரம்

மாறன் துதி

தேன றாமகிழ்த் தொடையலும் மவுலியும்
திருக்கிளர் குழைக்காதும்
கான றாமலர்த் திருமுகச் சோதியும்
கயிரவத் துவர்வாயும்
மோன மாகிய வடிவமும் மார்வமும்
முத்திரைத் திருக்கையும்
ஞான தேசிகன் சரணதா மரையுமென்
நயனம்விட் டகலாவே.

பரம்பொருள் துதி

மருதிறத் தவழ்ந்தும் சகடிற வுதைத்தும்
மறைதுலங் கிடமலை எடுத்தும்
எருதொடு கரியும் பரிவிழ முனிந்தும்
எண்ணரும் ஆடல்க ளியற்றிப்

குறிப்புரை

1. மகிழ்த் தொடையல் - மகிழம் பூவால் கட்டப்பட்ட மாலை. மவுலி - கிரீடம். கான் - வாசனை. குழை - குண்டலம். 'மகரநெடுங்குழைக்காதர்' என்று தென் திருப்பேரைப்பிரான் புகழப்பட்டுள்ளான். கயிரவம் - செவ்வாம்பல். ஞானதேசிகன் - நம்மாழ்வார்.

தொடையலும், மவுலியும், காதும், சோதியும், வாயும், வடிவமும், மார்வமும், திருக்கையும், சரண தாமரையும் என் நயனம் விட்டு அகலா. இஃது ஐயர் அவர்கள் உகந்த பாடல். புறப்பொருள் வெண்பாமாலையின் முன்னுரையைப் பார்க்க.

பொருதுமல் லினர்கண் பிதுங்கிட நெறித்தும்
புள்ளின்வாய் விரிந்திடக் கிழித்தும்
கருதுறு மடியார் மனத்துறை திருமால்
கமலமா மலர்க்கழல் பணிவீர். 2

அடியார் துதி

திருவாழி திருச்சங்கம் திருத்தண்டம்
திருச்சார்ங்கம் திருவாள் என்னும்
செருவாரும் அரக்கர்கள்தம் சிரமுருட்டும்
ஐம்படையும், தேவர் போற்றும்
மருமாலை அயக்கிரிவர் விச்சுவசே
னரும்,செம்பொன் வரையாம் என்னப்
பொருமேனிக் கருடனும்,அஞ் சனைமகனும்
காப்பாகப் பொருந்தும் மாதோ. 3

நூற்பயன்

பாலாழி நாரணன் சீர்பாடி
யும்பரி பாலனித்தும்
மேலாம் பதம்பெற்ற ஆழ்வார்கள்
ஆரியர் மெய்ச்சரிதம்
நாலா யிரத்துமுந் நூற்றறு
பத்தொரு நற்கவிக்குள்
மாலா யொருகவி கற்கினும்
நல்கிடும் வைகுந்தமே. 4

---

2. மருது - மருதமரம். சகடு - வண்டி. மலை - கோவர்த்தன கிரி. முனிந்தும் - கோபித்து அழித்தும். எண்ணரும் ஆடல்கள் - அலகிலா விளையாட்டு என்ற கவிச் சக்ரவர்த்தியின் பாடலின் சாரம். மல்லினர் - மல்லர். 'மல்லாண்ட திண் தோள்' என்பர் பெரியாழ்வார். புள் - பறவை (பகாசுரன்). திருமால் அடியார் மனத்திற் குடிகொள்ளும்பொருட்டுச் செய்த செயல்கள் இவை.

3. திருவாழி முதலான ஐம்படைகளும், அயக்கிரீவரும், விஷ்வக்சேனரும், கருடனும், ஆஞ்சநேயனும் காப்பாகும். இப்பாடலின் சரியான வடிவை வழங்கியது அரிசமய தீபம் என்ற நூலின் மேற்கோளே.

4. பாலாழி - பாற்கடல். பரிபாலனித்தும் - பாதுகாத்தும். நாரணன் சீர் பாடியும், வைணவ சமயத்தைப் பாதுகாத்தும் மேலாம் பதம் பெற்றவர்கள்

தற்சிறப்புப் பாயிரம்

திருவள ருறை விஜயரா கவன்செந்
தமிழினில் செங்கண்மா லருளால்
மருவள ரும்சீர்ப் பொய்கையார் முதலாழ்
வார்கள்தம் சரிதம துடனே
அருண்மிகு நாத முனிவனே முதலாம்
ஆரியர் சரிதமி தாமிக்
குருபரம் பரையாம் பிரபந்தம் இதனைக்
கூறினன் விருத்தப்பாக் கொண்டே. 5

பதிகம்

பொய்கையார் பூதத்தார் புகழ்பேயார்
மூவர்களும் புவிவந் துற்ற
செய்கையா னதுவுமவர் தமிழ்பாடிப்
பரமபதம் சேர்ந்த வாறும்;
மெய்கையா மகிழ்பெரியார் புவியில்வந்
தரிபரமாய் விளம்பி யாறு
வைகையான் கட்டியபொற் கிழியறுத்துத்
தமிழ்பாடும் வண்ணந் தானும்; 1

ஆழ்வார்களும் ஆசாரியர்களும். ஆழ்வார்கள்: முதலாழ்வார்கள் முதலானவர்கள். ஆசாரியர்கள்: நாதமுனிகள் முதலானவர்கள். மெய்ச்சரிதம் - உண்மையான வரலாறு. இப் பாடலால் குருபரம்பரைப் புராணம் 4361 கவிதைகள் கொண்ட நூல் என்று தெரிகிறது. மாலாய் - பக்தியுடன். இப் புராணக் கவிதைகளில் ஒரு கவி கற்பினும் அக் கவிதையே வைகுந்தத்தை வழங்கும்.

5. இப் பாடலால் நூலாசிரியர் பெயரும், ஊரின் பெயரும், நூலிற் சொல்லப் பட்ட பொருளும் புலப்படுகின்றன. ஊறை - ஊற்றத்தூர். நூலாசிரியர் - விஜயராகவன். இவரைப்பற்றிய குறிப்பை முன்னுரையில் காண்க. பதிகம், நூலுக்குச் சொல்லப்பட்டவற்றைத் தொகுத்துக் கூறுவது.

1. பெரியார் - பெரியாழ்வார். ஆறு வைகையான் - வைகை ஆற்றையுடைய பாண்டியன். பொற்கிழி - தங்கக் காசுகள் வைத்துக் கட்டிய மூட்டை. பெரியாழ்வாரைக் 'கிழியறுத்தான்' என்று பாண்டியபட்டர் தனியனில் இருமுறை புகழ்ந்துள்ளார். வண்ணம் - தன்மை. 'இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்' என்பது கம்ப நாடகம் (பாலகாண்டம்). மெய் கையா - உண்மையை வெறுக்காத.

திருமங்கை மன்னர்பிறந் தரிதனையே
வழிமறித்துத் திருமந்த் ரங்கொள்
கருமங்கள் பலவும்அவர் தமிழ்பாடிப்
பரமபதங் கலந்த வாறும்;
தருமங்கொள் பாற்கவர்பால் மழிசையர்கோன்
உதித்துப்பல் சமய நூலால்
தெருமந்து மால்பரமென் றறிந்துதமிழ்
பாடியடி சேர்ந்த வாறும்; 2

தொண்டரடிப் பொடியர்பர மாதர்தமை
விரும்பிப்பின் தொண்ட ராகி
வண்டமிழின் கவிபாடி யரங்கருடன்
மெய்கலந்த வாறு தானும்;
மண்டுவிடப் பணிகுடங்கை வைத்தகுல
சேகரனார் மனது தன்னில்
விண்டுபர மெனவறிந்து தமிழ்பாடிப்
பரமபதம் மேவு மாறும்; 3

உறையூரிற் பாணனுதித் திராகமொடு
சங்கீத முவந்து பாடிக்
கறைநேமி நாரணனாந் திருவரங்க
ரடியிணையிற் கலந்த வாறும்;
நறையாருந் துளவணிமால் சடகோபனாய்
உதித்து நான்கென் றோதும்
மறையாரும் பொருளினையே தமிழ்செய்து
தம்பதம்போய் மருவு மாறும்; 4

---

2. அரி - திருமால். பார்க்கவர் என்பதைப் பாற்கவர் என்று வழங்குவது இவரியல்பு. பிருகுவின் மரபில் பிறந்தவர் என்பது பொருள். அவர் திருமழிசை யாழ்வாரின் தந்தை. தெருமந்து - மனம் கலங்கி. பரம் - பரம்பொருள்.

3. பரமாதர் - பிற பெண்கள். விடப்பணி - விஷமுடைய பாம்பு. பணம் - படம். பணத்தைப் பெற்றிருப்பது பணி. விண்டு - திருமால். 'இடர் துடைத் தேக விண்டு பிறந்தனன்' என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (சுந்தர காண்டம்).

4. பாணன் - திருப்பாணாழ்வார். கறைநேமி - தியவர்களின் குருதிக் கறை படிந்த சக்கரம். சக்கரத்தின் கறையை வருணன் கழுவிய கதை ஆண்டாள் சரிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. சடகோபன் - நம்மாழ்வார். சடம் எனும் வாயுவை வென்றவர். 'சடம்வளை சடத்தை முனிந்தருள் முனிவன்' என்று இராமானுச நாவலர் (பாத்மத்தில்) திருவாய்மலர்ந்துள்ளார். சடம், ஆன்ம ஞானத்தை அழிக்கும்.

மதுரகவி யுணர்ந்துதிரு வாய்மொழியைப்
புவியிடையே மலியச் செய்து
சதிருடனே சடகோபர் தமைப்பாடிப்
பரமபதஞ் சார்ந்த வாறும்;
புதுவையற்குக் கோதைகுழல் சூடியபூ
மாலைதனைப் பொருந்த நல்கி
முதிர்சுவைசேர் தமிழ்பாடி யவளரங்கர்
தம்மைமணம் முடித்த வாறும்; 5

வேதமதைப் பன்னிருவர் தமிழ்செயுநா
லாயிரமும் விளிந்த வாற்றால்
நாதமுனி விக்கிரமாம் மாறனுரைத்
திடவெழுதி நாட்டு மாறும்;
ஓதுதிரு மந்திரமே முதலான
பொருள்களெலா முய்யக் கொண்டார்
கோதில்மணக் கால்நம்பிக் குபதேசித்
தவர்பதத்திற் குறுகு மாறும்; 6

வாளமருங் கரச்சோழன் குருவாமாக்
கியாழ்வானை வாது தன்னில்
ஆளவந்தார் வென்றுமணக் கால்நம்பி
யிடத்துமந்த்ர மறிந்திட் டாங்கோர்
நாளதனில் பெரியநம்பி முதலானோர்க்
குபதேசம் நவின்ற வாறும்;
மீளவந்த தெரிசனத்தைப் பெரியநம்பிக்
களிக்கவவர் விரும்பு மாறும்; 7

---

5. சதிர் - திறமை; அபிநயமுமாம். மதுரகவியாழ்வார் இறைவனைப் பாடாது நம்மாழ்வாரையே பாடியவர். மதுரகவியின் நெறியை, 'துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும் தொல்நெறி' என்பர் வேதாந்த தேசிகர். பெரிய ஜீயர் 'மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்' என்பர். புதுவையற்கு - ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளியுள்ள வடபத்ரசாயிக்கு. புதுவையன் + கு = புதுவையற்கு.

6. விளிந்தவாற்றால் - மறைந்தபடியால். விக்கிரமாம் மாறன் - அர்ச்சாவதாரமான நம்மாழ்வார். விக்கிரஹம் என்ற வடமொழிச் சொல்லை 'விக்கிரம்' என்று திரித்துக்கொண்டார். மந்திரமே முதலான பொருள்கள் : 1. திருமந்திரம்; 2. த்வயம்; 3. சரமஸ்லோகம்.

7. ஆக்கியாழ்வான் - சோழ மன்னனின் குரு. இவருக்கு "வித்வ ஜன கோஷ்஠கலன்" என்ற பட்டமும் உண்டு. ஆளவந்தாரின் இளமைப் பெயர்.

பரசமய மதகரியை வென்றிடுங்கோ
ளரியெனவே பரவி வானம்
தரைமுழுதும் புகழ்சீர்த்திப் பெரும்பூதா
ரெதிராசர் சரிதந் தானும்;
அரன்பரனென் றெழுதுபடத் துடனடைந்த
கிருமிகண்ட னறைந்த கட்சி
உரைகள்தனக் கெதிருரைக ளுரைத்துரைத்துக்
கூரத்தா னுரைவெல் பாங்கும்; 8

(வேறு)

மகுத்துவ முடையவிவ் வாற தாயதில்
மிகுத்திடுங் கதைகளும் விரித்து ணர்ந்திட
வகுத்துரை மணிப்பிர வாளத் தின்வகை
தொகுத்துப்பா விருத்தமாய்த் தமிழிற் சொல்வனால். 9

அவையடக்கம்

பொருதிரைக் கடலினிற் பொருந்து நீரெலாம்
ஒருசிறு குருவிசென் றுண்ணல் போலவே
பெருகிய காதலாற் பேச ரும்பெருங்
குருபரம் பரையினைக் கூறல் மேயினேன்! 1

"யமுனைத் துறைவர்" என்பது. தெரிசனம் - தரிசனம். "நமது தரிசனத்துக் கடியப்பட்டவற்றால்" என்பது சிலம்பின் உரை. "தரிசனத்துக்காகத் தரிசனம் (கண்) கொடுத்தவர்" என்று கூரத்தாழ்வாரை வைணவர்கள் போற்றுவர். தரிசனம் - சமயம்.

8. பரசமய மதகரியை வென்றிடுங் கோளரி - மற்றைய மதத்தவர்களாகிய யானைக்குச் சிங்கம் போன்றவர். இராமானுஜரைச் 'சிங்க ஏறு' என்பர் மணவாளதாசர். கூரத்தான் - கூரத்தாழ்வார். இதில் 'கூரேச விஜயம்' பேசப் படுகிறது.

1. கடல்நீரை ஒரு சிறு குருவி உண்ணக் கருதுதல்போல என்றும், கடலைப் பூனை பருக நினைப்பதுபோல என்றும், நாய் பருக நினைப்பதுபோல என்றும் சான்றோர் கூறுவர். கவிச்சக்ரவர்த்திகள் தம்மைப் பூனையாகப் பேசினார் சேக்கிழார் தம்மைச் சுணங்கனாகப் பேசினார். விஜயராகவர் தம்மைக் குருவி என்று பேசுகிறார்.

நாறுசெந் தாமரை நாண்ம லர்பெருஞ்
சேறிடை யெழுகினுந் தேவர் கொள்வபோல்
தேறுமாழ் வார்கள்தம் கதையைத் தீமையேன்
கூறினும் பெரியர்கள் உவந்து கொள்வரால். 2

மெல்லிய பாலர்கள் விளம்பி டும்மிளஞ்
சொல்லினைத் தந்தைதாய் சூழ்ந்து கேட்பபோல்
நல்லியல் நாவுடைப் புலவர் நன்கிலேன்
புல்லிய சொல்லையும் பொறுத்துக் கேட்பரால். 3

குலவுமென் மொழியுடைக் கோகி லத்துஎதிர்
நலமிலாப் புன்கொடி நவிற்றல் போலவே
அலகிலாப் பல்கலை யறிந்து ணர்ந்திடும்
புலவர்முன் பரிவிலேன் புகல்கின் றேனரோ. 4

பூவரு நான்முகப் புனிதன் தன்னுடை
நாவரு வெண்கம லத்து நாயகி
மாவருள் மாட்சியால் வைய மீதுளோர்
யாவரு முணரவீ தறைகின் றேனரோ. 5

---

2 தாமரை சேற்றில் தோன்றினும் தெய்வங்கள் ஏற்றுக்கொள்ளும். அது போல் நான் அற்பனாயினும் என்பால் தோன்றிய நூல் பெரியவர்களைப்பற்றிய வரலாறு ஆகையால் பெரியோர்கள் உவந்து கொண்டாடுவார்கள்.

3. குழவியின் மழலையைத் தாய் தந்தையர்கள் சூழ்ந்து விரும்பிக் கேட்பார்கள். அதுபோல் புலவர்கள் என்னுடைய புன்சொற்களையும் விரும்பிக் கேட்பர். நல்லியல் நா-(தீமை பயிலாத செந்நா) நன்மையையே பேசுகின்ற நா. புல்லிய - அற்பமான. மழலைச்சொல்லினை 'இளஞ்சொல்' என்றது புதுமையாகவும் இனிமையாகவும் உள்ளது.

4. அடியேன் கலைகள் பலவற்றையும் உணர்ந்த சான்றோர்கள் முன் இந்நூலை அரங்கேற்றம் செய்வது, குயிலுக்கு எதிரில் காகம் பாடுவதுபோல் உள்ளது. கோகிலம் - குயில். கொடி - காகம். "காரி வாயசம் கொடி கரும்பிள்ளை, தேறின் நான்கும் காக்கை ஆகும்' என்று சேந்தன் திவாகரம் செப்பும்.

5. வெண்கமலத்து நாயகி - சரஸ்வதி. 'வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள்' என்பர் பெரியோர். வையமீதுளோர் யாவரும் - பண்டிதரும் பாமரரும். நாமகள் அருளால் பாடுகிறேன், இரண்டாம் காண்டத்தில் நாமகளையே வணங்குகிறார் ஆசிரியர்.

நாட்டுச் சிறப்பு

வான்சி றந்து மழைபொழிந் தோங்கனீர்
தான்ம லிந்து நதிகள் பெருகிட
ஊன்பொ ருந்தி யுயிர்கள் செழித்திட
ஆன்சு ரந்து அமுத மளிக்குமே. 1

சென்னெ லோங்கி வயல்கள் செழித்திடும்
கன்ன லோடு கமுகுங் கவின்கொளும்
வன்ன மாமலர்ச் சோலை வளம்பெறும்
அன்னம் வாழுந் தடங்க ளமைந்தவே. 2

வாழ்த்து

விரைசெய் யந்தணர் வேதம் விளம்புக
துரைகள் நீதிச்செங் கோலுந் துலங்குக
உரைசெய் தேவ ரடியரு மோங்குக
திரைக டற்புவி வாழ்வு செழிக்கவே. 3

பயன்

இந்த மாக்கதை யின்பொருள் யாவையுஞ்
சிந்தை கொண்டு தெளிந்துரைப் போர்களும்
உந்து காத லுடன்செவி யுள்ளுற
வந்து கேட்டு மகிழ்நரும் வாழ்கவே! 4

ஆற்றுச் சருக்கமும் நகரச் சருக்கமும், முற்றும் சிதைந்து போயின. ஆதலால் இந்த நூலில் குறிப்பிடப்படும் ஆற்றின் பெயரோ நகரின் பெயரோ புலப்படவில்லை.

1. வான் - மேகம். மழை பொழிந்து ஓங்கல் நீர்தான் மலிந்து. ஓங்கல் நீர் - மலையில் இருந்து வருகின்ற வெள்ளம். 'கல்லிடைப் பிறந்து போந்து கடலிடை கலந்த நீத்தம்' என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (பால காண்டம்). ஊன் - உடல். ஆன் - பசுக்கள்.

2. கன்னல் - கரும்பு. கமுகு - பாக்குமரம். கவின் கொளும் - அழகு பெறும். வன்னம் - நிறம். வர்ணம் என்ற வடசொல் வன்னம் என்று தமிழ் வடிவம் பெற்றது. கர்ணன், கன்னன் ஆனாற்போல.

3. விரைசெய் - செய்யும் யாகத்தால் நாட்டையே மணம் பெறச் செய்கின்ற. அந்தணர் - அருளுடையோர். துரைகள் - அரசர்கள். துரை - திசைச்சொல் (தெலுங்கு). உரைசெய் - புகழப்பட்ட. தேவரடியர் - பக்தர்கள்.

4. மாக்கதையின் பொருள்களை மனத்துட்கொண்டு உரைப்பவர்களும் கேட்பவர்களும் வாழ்க! உந்து - பின்னிருந்து முன்னே தள்ளுகின்ற. காதல் - பக்தி. 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி' என்று திருமுறை பகரும்.

கவிஞர்கள், தம் பனுவலை மாக்கதை என்று கூறுவது மரபு. 'இராமாவதாரப் பேர்த் தொடை நிரம்பிய தோமறு மாக்கதை' எனக் கவிச்சக்ரவர்த்தி கம்பர் பகர்வர். 'எடுக்கும் மாக்கதை' என்பர் தொண்டர்சீர் பரவுவார்.

தோற்றுவாய்

உலக மோடய னுருத்திர னும்பர்கோன் முதலாம்
புலவர் பல்லுயிர் யாவையும் பூத்தளித் தழிக்கும்
அலகில் பல்விளை யாடல்செய் தெவற்றையு மகட்டுற்று
இலகப் பாலடை வளருமால் வைகுந்தத் திருந்தே. 1

தொடுத்த பல்லுயிர்த் தொகுதிகள் துவக்கறு மாறாய்
எடுத்த நம்மவ தாரங்க ளெண்ணில வ்வற்றை
அடுத்து நல்லறி விலாமையின் அறிகில ராகிக்
கடுத்தெ திர்ந்திறந் தாரசு ரேசர்நங் கையினால். 2

இப் பகுதியில் ஆழ்வார்களின் அவதார காரணம் கூறப்படுகிறது. பரமபத நாதன் ஆன்மாக்களை உய்விக்கக் கருதுகிறான். நாமே நாட்டிலே படாதன பட்டு அவதரித்தோம்; பயனில்லை. மானைக் காட்டி மானைப் பிடிப்பாரைப் போல, மனிதர்களைக் கொண்டு மனிதர்களைத் திருத்த வேண்டும் என்று கருதுகிறான். அதற்காகத் தம் பக்கல் வாழும் நித்திய சூரிகளை, ஆழ்வார்கள் ஆகவும் ஆசாரியர்களாகவும் அவதரிக்கச் செய்கின்றான்.

1. உலகமோடு, அயன், உருத்திரன், உம்பர்கோன் முதலாம் புலவர் பல்லுயிர் பூத்து அளித்து அழிக்கும் மால். அயன் - பிரமன். உருத்திரன் - சிவன். உம்பர் கோன் - இந்திரன். பூத்து - தோற்றுவித்து. அளித்து - காத்து. அழிக்கும் - தன்னுள் ஒடுக்கும். அழித்தல் என்பதற்கு இல்லாமல் செய்தல் என்பது பொருளன்று. உலகில் உள்ள எப்பொருளும் இல்லாது போவதில்லை. 'கால் மெட்டியை அழித்து வளையலாகச் செய்' என்றபோது, அழிக்கப்படுவது வடிவமேயன்றிப் பொன் அன்று. அதுபோல் உலகை இறைவன் அழித்தான் என்றால் இல்லாது செய்துவிட்டான் என்று கருதக்கூடாது. இதனைச் 'சற்காரியவாதம்' என்பர். கவிச்சக்ரவர்த்தியார் ஒருவரே இந் நுட்பம் உணர்ந்து 'உளவாக்கல், நிலைபெறுத்தல், நீக்கல்' என்பர். புதிய பொருள் தோன்றாது; பழைய பொருள் அழியாது.

'அலகிலா விளையாட்டுடையார்' என்னும் கம்பர் பாடல் மூன்றாம் அடியில் விரிவு பெறுகிறது. அகட்டுற்று - வயிற்றில் உட்கொண்டு. நாலுள் இலகப் பாலடை என்றுள்ளது. பால் அடை. பாற்கடலிலும் ஆலிலையிலும் என்று பொருள் கொள்ளவேண்டும். இலகும் ஆலடை என்றிருப்பின் புராணக் கருத்துடன் முரணாது. இப் பாடல் குளகம். (மேற்பாடலுடன் சேர்க்கவும்.)

2. உயிர்த்தொகுதிகள் - உயிர்க்கூட்டங்கள். துவக்கு - கட்டு. அறுமாறாய் - அறுக்கும் வழியாய். அதனை - அந்த அவதாரங்களை. அறிவின்மையால் நம்மை எதிர்த்து அசுரர்கள் அழிந்தனர். கடுத்து - கோபித்து. நம் கையினால் இறந்தனர். அசுர ஈசர் - அசுரேசர். அசுரர்களின் தலைவர்கள் தங்களை 'ஈசர்' என்று கருதிக்கொண்டமையால், அவர்தம் மதம்பற்றி அசுரேசர் என்றார். தசமுகன் 'ராவணேஸ்வரன்' என்று புகழப்பட்டான்.

மானி டர்சிலர் பரம்பொருள் நாமென மதித்து
ஞான மல்கிநல் லொழுக்கராய் நாடொறும் அன்பு
தானி ழைத்திருந் துலகமா மாயையைத் தடிந்து
வான வர்க்குமெட் டாதவிப் பதவிமன் னினரால். 3

இன்ன வாறுசெய் திவணடைந் தனம்இனி யுலகின்
முன்னர் செய்தவல் வினைகளான் முடிவிலாச் சனனம்
மன்னி வாழ்பல வுயிரெலா மாய்தலுற் பவித்தல்
தன்னை யெவ்வகை யொழித்துநம் பதந்தனிற் சார்வார். 4

நவ்வி காட்டியே வலையினால் நவ்விகள் தமையே
வவ்வு மாறென விவர்களா லவர்மயங் குளத்தைச்
செவ்வி தாக்கியே சேர்த்திடும் செயல்புரி குதலே
ஒவ்வு மென்னவண் டுணுமதுத் துளவமால் ஓர்ந்தான். 5

பாயிரம் முற்றும்

---

3. மானிடரிற் சிலர் எம்மைப் பரம்பொருள் என உணர்ந்து, ஞானம் நிரம்பி, நல் ஒழுக்கம் உடையவராய், அன்பு தழைத்து, மாயையை வென்று பரமபதம் பெற்றனர். ஞானம் மல்கி - அறிவு நிரம்பி. உலக மா மாயை என்றும் உலகமாம் மாயை என்றும் பிரிக்கலாம். 'வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்' என்ற வள்ளுவர் கருத்தை வாங்கிய ஆசிரியர், 'வானவர்க்கும் எட்டாப் பதவி' என்றார். பல குறட்பாக்களின் சாரமாக இப் பாடல் அமைந்துள்ளது. செம்பொருள் காண்பதறிவு, ஒழுக்கம் விழுப்பம் தரல், அன்புற்றமர்ந்த வழக்கு, யான் எனது எனுஞ் செருக்கு அறுப்பான் — முதலான தொடர்களின் ஒலிகளை இப் பாவிற் காணலாம். இது வைணவர்கட்கு இலக்கணம் கூறிய பாசுரம்.

4. இனிமேல் செய்ய வேண்டியவற்றை இறைவன் 4, 5 பாடல்களில் பேசுகின்றான். இன்னவாறு - இந்த விதமாக. இவண் - இங்கு (பரமபதத்திற்கு). வினைகளால் சனனம் மன்னிய உயிர்கள் மாய்தலையும் பிறத்தலையும் நீக்கி, நம் பாதத்தைச் சார்வது எப்படி? மாய்தல் - மறைதல், உற்பவித்தல் - தோன்றுதல்.

5. நவ்வி - மான். 'மானைக் கொண்டு மானைப் பிடிப்பவர்போல் இவர்களால் அவர்கள் உளத்தைச் செவ்வீதாக்குவோம்; பிறகு நம் பரமபதத்தில் சேர்த்துக்கொள்வோம்' என்று திருமால் கருதினான். (குளகம்). பிற அடுத்த அத்தியாயத்தில் தொடரும். ஒவ்வும் - பொருந்தும். 'வண்டு உண்ணும் மதுத் துளவமால்'. அவன் மாலையில் வண்டுகள் தேனை உண்ணும். அதுபோல் ஆன்மாக்கள் இறையருளில் தோய வேண்டும் என்பது குறிப்புப் பொருள். இங்ஙனம் பகர்வதை வடநூலார் 'வியங்கியம்' என்பர்.

முதலாழ்வார்கள் திருவவதார அத்தியாயம்

ஐப்பசியில் ஓணம் அவிட்டம் சதையமிவை
ஒப்பிலா நாள்கள் உலகத்தீர் — எப்புவியும்
பேசுபுகழ்ப் பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார்
தேசுடனே தோன்றுசிறப் பால்.

(உபதேச ரத்தினமாலை, 6.)

திருமாலின் கட்டளை

முத்த ரானவற் குருத்தனை யளித்திடா முகுந்தன்
பத்தி செய்திருந் தவர்களில் மூவரைப் பாரா
நித்தர் கேண்மினோ உலகிடை நீருதித் தெவரும்
இத்த லம்பெறத் திருத்திமீண் டெய்திடும் எனலும்; 6

வெண்பா: உபதேச ரத்தினமாலை. மணவாள மாமுனிகளால் திருவாய் மலர்ந்தருளப்பெற்றது. பக்திச்சுவை நிரம்பியது. இதில் ஆழ்வார்களின், ஆசாரியர்களின் சிறப்புகள் பேசப்படும். நம், விஜயராகவப்பிள்ளை ஒவ்வொரு அத்தியாயத்தின் தொடக்கத்திலும் உபதேச ரத்தினமாலையிலிருந்து ஒரு பாசுரம் கொடுத்துள்ளார். அப் பாசுரங்கள் அவ்வவ்வத்தியாயத்திற்குச் சுவையையும் ஒளியையும் நல்கும்.

ஐப்பசித் திங்களில் ஓணத்தில் பொய்கையாரும், அவிட்டத்தில் பூதத்தாரும், சதையத்தில் பேயாரும் அவதரித்தனர். மூவரும் ஒரே மாதத்தில் மூன்று நட்சத்திரங்களில் அவதாரம் செய்தனர். புவி - உலகம். இங்குப் பெரு மக்களைக் குறிக்கிறது. "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்பர் பெரியோர். தேசுடன் - ஒளியுடன். மூவர்கள் தோன்றிய சிறப்பால் ஓணம், அவிட்டம், சதயம் உயர்ந்தன.

6 — 7. முத்தருக்கு உருவத்தை (பிறப்பை) வழங்காத இறைவன், மூவரைப் பார்த்து, 'நித்தர்களே, நீங்கள் உலகில் தோன்றி மக்களைத் திருத்துங்கள்' என்று கூறலும் (குளகம்). எவரும் - கீழானவரும். இத்தலம் பெற - பரமபதம் அடைய. திருத்தி - கோணலைப் போக்கி. வேண்டுவார் வேண்டுவன ஈவான் இறைவன். ஆனால் முத்தர்கள் கேட்டுக்கொண்டாலும் பிறப்பை வழங்கான். முகுந்தன் - முத்தியையும் உலக இன்பத்தையும் தருபவன். மீண்டு எய்திடும் - திரும்பி வாருங்கள்,

மூவர் மறுப்புரை

கேட்ட மூவரும் பிரிவெனு மருந்துயர் கிளர
வாட்ட மோடுன 'தடிபிரியோ' மென மறுக்க
மீட்டு மாங்கவர் பொருந்துற மிகுநற வருந்திப்
பாட்டு வண்டிமிர் துளவினான் பகர்தன்மே யினனால். 7

திருமால்

வருந்த லீரும துளத்தையா மகல்கிலம் வடிவேற்
கருந்த டங்கணார் புழுமல்கு மகட்டினிற் கருவாய்ப்
பொருந்து றாதுநல் விருந்தெனக் களிப்பொடும் புகுவண்
டருந்து தேன்றுளி மலர்மிசை யதவரித் திடுமின். 8

என்று கூறியுண் மயர்வரு மதியுமீந் திடலால்
ஒன்றும் வேறுரை யுரைத்திடா துரந்தனி லருந்தேன்
துன்று தாரணி மூவரும் சுரபிவிட் டகலும்
கன்று போலவே விடைகொடு மீண்டனர் கடிதில். 9

முதலாழ்வார்கள் அவதாரம்

ஆமி தேயென ஐப்பசி ஓணநாள் அதனில்
மாம திதவழ் மாடமார் கச்சிவந் தொருவர்
காமர் வண்டினங் களித்துணத் துளிமதுக் கமழ்பூந்
தாம ரைதனிற் பொய்கைய ராயவ தரித்தார். 10

---

7. இறைவன் கட்டளையைக் கேட்ட அடியார்கள் பிரிவு என்னும் துயரம் கிளர வாட்டமோடு 'உனதடி பிரியோம்' என மறுத்தனர். மீளவும் இறைவன் வற்புறுத்திப் பேசினான். மிகு நறவு - மிக்க தேனை. பாட்டு வண்டு - பாடுகின்ற வண்டுகள். இமிர் - ஊதும். 'வண்டிமிர் கோதாய்! வாராய்' (பெருங்கதை).

8. திருமால் கூற்று. வருந்தலீர் - வருந்தவேண்டா. வடிவேல் - கூரிய வேல். புழுமல்கும் அகட்டில் - புழு நிரம்பிய வயிற்றில். 'ஈனமில் கிருமிச் செரு' என்பர் மணிவாசகர். வண்டு தேன் நுகரும் மலரில் தோன்றுங்கள்; மகளிர் வயிற்றில் தோன்ற வேண்டா எனத் திருமால் கூறினன். இரத்தம் அருந்தும் புழு நிரம்பிய வயிற்றில் தோன்றாது தேனை அருந்தும் வண்டுகள் மொய்க்கும் மலரில் தோன்றுங்கள் (குளகம்).

9. மயர்வற மதிநலம் - மயக்கமில்லாத அறிவின் நன்மை. 'மயர்வற மதிநலம் அருளினன்' என்பர் சடகோபர். பசுவைப் பிரிந்து செல்லும் கன்றுகளைப்போல் மூவரும் பூமியை உற்றனர். தேன் - வண்டு. துன்று - மொய்க்கும்.

10 ஐப்பசி மாதத்தில் திருவோண நட்சத்திரத்தில் கச்சியில் தாமரை மலரில் மூவரில் ஒருவர் பொய்கையாராய்ப் பிறந்தார். காமர் வண்டினம்,

மருக்கொண் மாலைய ரொருவர்ஐப் பசிஅவிட் டத்தில்
அருக்கன் தேரிட றிடவுயர் மேடைக ளமைந்த
திருக்க டன்மல்லை நகரில் **பூதத்தராய்த்** திகழும்
குருக்கத் திம்மல ரதனிலே யுதித்தனர் குறித்தே 11

பயிலும் ஐப்பசி சதையநாள் **பேயராய்ப்** பரவும்
வெயிலை மாற்றிடும் சோலையும் வெண்சுதை மேவிக்
கயிலை போலுயர் மாடமா ளிகைகளுங் கவினும்
மயிலை மாநகர் நெய்தலி னொருவர்வந் தனரால். 12

தேவ ரும்மலர் சொரிந்திடத் திங்களொன் றினிலம்
மூவ ரும்பதி மூன்றிடை மூன்றுநாள் தெய்வப்
பூவ ரும்மணி போலவிம் முப்பெயர் புனைந்து
யாவ ரும்பத மணுகுறும் படியவ தரித்தார். 13

செந்தி ருப்பதி யானநார ணன்றிரு வடியாம்
அந்த மூவரு மொருவரை யொருவர்கண் டறியார்
பந்த மாகிய காமமுங் குரோதமும் படரார்
வந்த மாநக ரங்களில் வளருமந் நாளில். 14

விருப்பம் மருவிய வண்டுகள். களித்துண - செருக்குடன் உண்ண. துளி - துளிக்கின்ற. மதுகமழ் தாமரை - மதுவின் மணம் மிக்க தாமரை. ஆழ்வார் பிறந்த மலராகையால் வியந்து போற்றுகின்றார் கவிஞர்.

11. மூவரில் மற்றொருவர், ஐப்பசி அவிட்டத்தில் திருக்கடல்மல்லையில் பூதத்தராய்ப் பிறந்தார். தோன்றிய மலர் குருக்கத்தி (குருக்கத்தி - மாதவி). அருக்கன் தேர் இடறிட உயர் மேடைகள் - சூரியனின் தேரை இடறச் செய்யும் மாளிகை. மேடை - மாளிகை. "மாலைப் பொழுதிலொரு மேடை மிசையே", என்பர் தேசியகவி பாரதியார்.

12. ஐப்பசி சதயத்தில் மயிலையில் நெய்தற் பூவில் பின்னொருவர் பேயராய்ப் பிறந்தார். சோலையும் மாடமாளிகையும் அழகு செய்யும் மயிலை. வெண்மையான சுண்ணம் தீட்டப்பட்டிருப்பதால் கயிலாயம்போல் மாட மாளிகைகள் தோன்றுகின்றன. மயிலை - மயிலாப்பூர்.

13. தேவர் மலர் சொரியவும், யாவரும் பதம் பெறவும், மூவரும் முப்பெயர் புனைந்து தோன்றினர்.

14 — 16. குளகம். நாரணன் திருவடியாம் மூவர் - திருமாலின் திருவடி போன்ற மூவர்கள். இம் மூவரும் தனித்தனியாகவே வாழ்ந்தனர். அம் மூவரும் காமம், குரோதம் முதலான தீக்குணங்களின்றி வளர்ந்தனர்.

திவ்ய தேச யாத்திரை

வேறு

மாதேவர் கட்கு ளுயர்தேவ னாகி
வனசப் பொகுட்டி லமரும்
சீதேவி நாத னலதில்லை வேறு
துணையென்று சிந்தை யவராய்
மீதே யெழுந்த குமிழ்போ லழிந்து
விடுதேக மேவ விதுதான்
தீதே யெனப்பி றவிசா கரத்தை
யொழிக்கின்ற சிந்தை யவராய்; 15

ஆனந்த மெய்து மால்லோக மேவி
யணைகின்ற சிந்தை யவராய்
ஞானம் சுரந்த வுளமோ டெவற்கும்
நயமா மொழிப்பு கல்வராய்த்
தானம் விளங்கு தருமங்க ளென்ற
தவமே யிழைக்கு மவராய்
மோனம் பொருந்தி யுடையோர்கள் பாத
மூளரித் தொழுது மெனவே; 16

---

15. மூவரும் திவ்ய தேச யாத்திரை மேற்கொண்டனர். மாதேவர்கட்குள் - சிவன், பிரமன் முதலான தேவர்களுக்குள். வனசப் பொகுட்டில் அமரும் - தாமரையின் நடுவில் உள்ள பொகுட்டில் வீற்றிருக்கும். (பொகுட்டு - தாமரை நடுவில் உள்ள ஓர் உறுப்பு. அடிப்பகுதி சுருங்கி மேற்பகுதி விரிந்திருக்கும்; 'பொகுட்டுத் தாமரை பூங்கொட்டை' — நிகண்டு). சீதேவி நாதன் - திருமகளின் தலைவன். சிந்தை உள்ளி - மனத்தில் நினைந்து. உள்ளி என்பது சந்த நெருக்கத்தால் 'உளி' ஆயிற்று. நீர்மீதே எழுந்த குமிழ்போல் அழிந்துவிடு தேகமேவல் தீதே - தண்ணீரில் தோன்றும் குமிழியைப்போன்று விரைவில் அழியும் தேகத்தில் இருப்பது தீமை. பிறவி சாகரம் - பிறவிக் கடல். பிறவி — கடல். தேகம் — குமிழி. கடலை ஒழித்தால்தான் குமிழி தோன்றாது. ஆதலால் ஆழ்வார்கள் பிறவியை ஒழிக்கத் திவ்ய தேச யாத்திரையை மேற்கொண்டனர்.

16. மூவர்களும், எவர்க்கும் நயமொழி புகன்று, தானமாகவும், தருமமாகவும் உள்ள தவங்கள் செய்து, ஞானிகளைத் தேடிக்கொண்டிருந்தனர். பாதமூளரி - பாத தாமரை. தொழுதும் - வணங்குவோம். 'மோனம் என்பது ஞானவரம்பு' என்ற பகுதி இங்கு நினைக்கத் தகுந்தது.

திருக்கோவலூரை அடைதல்

நாடித் தரும்பொய்கை யார்கச்சி யாம்பொன்
நகரைத் துறந்து லகெலாம்
தேடிப் புகன்று பெரியோர்கள் தம்மைத்
தெரிசித் துயர்ந்த பலநீர்
ஆடித் திருப்ப திகடோறு மெய்தி
அரிதாள்கள் தமது முடிமேல்
சூடிப் புகழ்ந்து திருக்கோ வலூரை
மகிழ்வில் தொடர்ந்த ணுகியே; 17

பெருமாளைப் பணிதல்

சிந்தாகு லம்தவிர்செ யானாய னாரைத்
தெரிசித் தழைத்த கரிமுன்
வந்தாய் அயன்ற னுடனண்டம் யாவும்
வளருந்தி மாம லரிலே
தந்தாய் அரற்கு விதிசாபம் நீக்கு
தலைவா நினைத்தெ ளிவர்யார்?
எந்தாய்உ னம்பொ னடிபோற்றி! போற்றி!
எனமந்த்ர மோதித் தொழுதார். 18

மூவர் சந்திப்பு

இவ்வாறு மீண்டு தொழுதந்த வூரி
னிடையன் றிருந்த வளவில்
அவ்வாறு மற்ற விருவோரு மெண்ணி
யவர்வைகு மூர்கள் அகலா

---

17. பொய்கையார் கச்சிப்பதியை விட்டு, பெரியோர்களைத் தெரிசித்து, தீர்த்தங்களில் மூழ்கி, திருப்பதிகள்தோறும் பெருமாளைப் பணிந்து திருக்கோவலூரை அணுகினார். மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொழுது அதன் பயன் பெறத் திருக்கோவலூர் வந்தார்.

18. பொய்கையார், திருக்கோவலூரில் கோவில் கொண்டுள்ள ஆனாயரைப் பணிந்து போற்றித் தொழுதார். அழைத்த கரி - 'ஆதிமூலமே!' என்ற யானை. அயன்றன்னுடன் - பிரம்மதேவனுடன். உந்திமா மலரில் தந்தாய் - உந்தியில் முளைத்த தாமரையில் வழங்கினாய். அரற்கு - சிவபிரானுக்கு. விதி - பிரமன். நினைந் தெளிவர் யார்? - உன்னை நன்கு தெரிந்தவர் யாவர்?

எவ்வாறு மாடி யடியா ரிணங்கு
பதிதோறு மெய்தி மகிழா
ஒவ்வாத கோவல் நகராய னாரை
யுகவிற் புகழ்ந்து தொழுதார். 19

தொழுதந்த ஊரி னிடைவைக வன்று
தொலையாது காலு மழையும்
பொழுதந்தி மல்கு மிரவிற் செறிந்து
பொழியெல்லை பொய்கை யருநூல்
முழுதும் தெரிந்த வொருவேத னில்லின்
முடுகிப் புகுந்து நடையில்
பழுதொன்றி லர்த சிறுதிண்ணை கண்டு
பரிவோடு பள்ளி கொளலும்; 20

பூதத்த ரும்பெய் மழையால் வருந்தி
யிடநாடிப் பொய்கை துயிலும்
வேதத்த னில்லின் மணிவாயில் வந்துள்
விழைவோ டிருப்ப வர்கள்யார்?
ஊதற் பெருக்கு தடியேன் படுக்க
உளதோ இடமெ னலுமே
தீதற்ற பொய்கை யவர்கண் திறந்து
திருவாய் மலர்ந்து மொழிவார். 21

ஒருவர் படுக்க இடமுள்ள திங்கண்
உறைவேன் விரும்பி வரில்நம்
இருவர்க் கிருக்க இடமாகும் வாரு
மெனவே யெழுந்து கதவைத்

---

19. பொய்கையாரைப் போலவே மற்றைய இருவரும் திருக்கோவலூரை உற்றனர். ஊரினிடை - ஊரின்கண். ஒவ்வாத - உவமையில்லாத. உகவில் - விருப்பத்துடன்.

20. வைக - தங்கியிருக்க. காலும் மழையும் - காற்றும் மழையும். செறிந்து - நெருங்கி. பொய்கையார் வேதன் இல்லில் உள்ள திண்ணையில் பள்ளிகொண்டார். வேதன் - வேதங்களைத் தெரிந்தவன். பரிவோடு - அன்புடன்.

21. பூதத்தார், மழையால் வருந்தி, பொய்கையார் துயிலும் இடத்தை அடைந்தார். ஊதல் பெருக்குது - வாடைக்காற்று மிகுதியாகின்றது. ஆழ்வார் படுக்க இடம் உண்டோ? என்றார்.

துருவித் திறக்க வவருட் புகுந்து
துணையாக நள்ளி ருளின்வாய்
மருவிச் சிறந்த விருவோரு முள்ளம்
மகிழ்வோ டிருந்த விடையில். 22

பேயாரு மந்தத் தலைவா யிடத்துப்
பிறழ்மேனி யோடு மணுகா
நாயேன் தனக்கு முளதோ விருக்கை
நவில்வீ ரெனப்பு கலவத்
தூயோரு மிங்க ணிருவர்க் கிருக்கும்
இடம்நீர் தொடர்ந்த ணுகிடிற்
சாயாது நிற்கு மிடமாகும் என்று
தாழைத் திறந்து விடலும். 23

இறைவன் நெருக்குதல்

நெய்தற் சிறந்த மலரிற் பிறந்த
நிமலன் மகிழ்ந்து விரைவாய்
எய்தப் பொருந்து மவர்மூவர் தாமும்
இனிதோடு நின்ற விடையிற்
கைதக்க வைந்து படையாய னாருள்
கருதித் திருப்பொ லியவே
நொய்திற் புகுந்து புகலங் கவர்க்குள்
நுழையா நெருக்கி யிடலும். 24

---

22. ஒருவர் படுக்க இடம் உள்ளது; உள் நீரும் வரில் நம் இருவர்க்கும் இருக்க இடமாகும் என்று பிரிக்கவும். கதவைத் துருவி-கதவை ஆராய்ந்து தேடி. இருவரும் இடம் குறைந்துவிட்டதே என்று வருந்தாமல் மகிழ்வோடிருந்தனர்.

23. பேயாரும் அங்குற்றார். நாயேன்றனக்கும் - நாய்போன்ற அடியேனுக்கும். இருக்கை - இருப்பிடம். இருவர்க்கு இருக்குமிடம் நீர் அணுகிடில் சாயாது நிற்கும் இடமாகும் என்று பொய்கையாரும் பூதத்தாரும் பகர்ந்து கதவைத் திறந்துவிட்டனர். சாயாது நிற்குமிடம் என்றபதம் கருத்து நிரம்பி யுள்ள பகுதியாகும். பிறழ்மேனி-காற்றாலும் மழையாலும் நலங்குறைந்த உடல்.

24. சிறந்த நெய்தல் மலர் என மாற்றுக. மூவர்தாமும் இனிதோடு நின்ற இடையில்-மூவரும் இனிமையோடு தங்கிய இடைகழியில். ஐந்து படையாயனார்-ஐந்து ஆயுதங்களைக் கையில் ஏந்திய ஆயன் (திருக்கோவலூர்ப் பெருமான் பெயர் ஆயனார்; ஆனாயன்). நொய்தில்-எளிதாக. மற்றவர் இடர்ப்பட்டு நுழைந்தனர். ஆயன் எளிதே புகுந்து நெருக்கினான். எவர் தமக்குரிய இடத்தைப் பிறர்க்கு வழங்குகின்றார்களோ அங்குக் கடவுள் வருவார். 'அப்பொருள் தியாகத்தால் அடையத்தக்கது' என்று உபநிடதம் பகரும்.

தன்னேரி லாத திருமால் புகுந்த
தனைநின்று ளோர்க ளறியார்
முன்னே யிருந்த ததிலும் நெருங்கு
முறையால் வினவு தல்செயாப்
பின்னே யொருத்தர் வரவில்லை வேறு
குரலில்லை பேச்சு தொனியா
என்னே நெருக்க மிதுகாண வேணு
மெனவந்த மூவர் களுமே. 25

விளக்கேற்றுதல்

உள்ளத்து ளுள்ளி யரிதான ஞான
வொளிதீப மேந்தி யடர்பால்
வெள்ளத்து வந்த திருமார்பின் மல்க
மிளிரைம் படைக்க ரமின
நள்ளிற் சிறந்த கருமேக மென்ன
வுருமல்க நார ணரெனுங்
கள்ளத் தடைந்த திருவாய னாரைக்
கனிவோடு கண்டு ருகினார். 26

இறைவனைக் காணுதல்

ஆனந்த மாவர் புகழ்வார் நடிப்பர்
அப்பார் விழுந்து புரள்வர்
மோனம் பொருந்தி யுரையா திருப்பர்
எழுவார்கள் ஓடி முதிர்தேன்

---

25. திருமால் புகுந்த அதனை நின்றுளோர் அறியார். ஆனால் முன்பு இருந்ததைவிட நெருக்கம் இருப்பதை உணர்ந்தனர். ஒருத்தர் வரவில்லை; பேச்சு இல்லை; மூச்சும் இல்லை; காரணம் அறிய மூவரும் விழைந்தனர்.

26. மூவரும் ஞானதீபம் ஏற்றி நோக்கினர். மூவரும் ஏற்றிய ஞானதீப மாண்பை இராமானுச நூற்றந்தாதி நயமுறப் பேசும். அங்கு காண்க. தீப ஒளியில் திருவாயனாரைக் கண்டனர். பால் வெள்ளத்து வந்த திரு-பாற்கடலில் பிறந்த பெரிய பிராட்டி. மார்பில் மல்க-திருமார்பில் பூரிக்க. ஐம்படைக் கரமின-ஐந்து படைகளும் (ஆயுதங்களும்) திருக்கரத்தில் ஒளிவிட. ஐந்து படைகள்-சங்கு, சக்கரம், வாள், தண்டாயுதம், வில். நள்ளில்-ஒளிக்கு இடையில். கள்ளத்தடைந்த-பிறரறியாமல் புகுந்த; இங்கு "பாவரும் புகழால் பேர்பெறு பனுவல் பாவலர் பாதிநாளிரவில்-மூவரும்நெருக்கி மொழி விளக்கேற்றி முதுந் தனைத் தொழுத நன்னாடு" என்ற வரந்தருவார் பாடல் அனுசந்திக்க வேண்டும்.

பானஞ்செய் தோரில் புரிகின்ற செய்கை
யுணரார் பரிந்து தொழுவார்
ஞானம் விளங்கு பரிவான வோடை
யதுமூழ்கி யேந வில்வரால். 27

துதிப்பாடல்கள்

ஆதியே! எம்மை யாளு மையனே! வைய முண்ட
சோதியே! அடியர் நெஞ்சிற் சுடரொளி யாகி நின்ற
வேதியா! முகுந்தா! கண்ணா! விண்டுவே! அரியே! மாலே!
நீதியாய்! உலகம் தாங்கு நிமலனே! கமலை மார்பா! 28

உந்திமா மலரி னீரேழ்
புவனம தளித்த தோங்க
முந்திவே தன்ற னோடு
முக்கணான் தனைச்சிட் டித்துத்
தொந்தநால் வகைப்பி றப்பேழ்
தோற்றமெண் பத்து நான்காம்
அந்தமா ரிலக்க மான
சராசர மவையுண் டாக்கி. 29

உருப்பவித் திடுதல் காத்த
லொழித்திட லெனுமுச் செய்கை
விருப்பொடு புரியு மக்கா
ரணனென விளங்கும் தன்மை

---

27. இறைவனைக்கண்ட மூவரும் பெற்ற உவகைப் பெருக்கை இப்பாடல் படம் பிடிக்கிறது. தேன்பானம் செய்தோரில் - கள் குடித்தவரைப் போல. பரிவான ஓடை - அன்பாகிய ஆறு.

29. வேதன்-பிரமன். முக்கணான்-சிவபிரான். சிட்டித்து-படைத்து. நால் வகைப் பிறப்பையும், எழுவகையான தோற்றத்தையும் எண்பத்து நான்கு லட்ச யோனி பேதத்தையும் தோன்றச் செய்து.

நால்வகைப் பிறப்பு: 1. பையில் பிறப்பவை. 2. முட்டையில் பிறப்பவை. 3. நிலத்தில் பிறப்பவை. 4. வியர்வையிற் பிறப்பவை.

'தோற்றம் நான்காம்; அவை பை, முட்டை, நிலம், வியர்வையில் நிகழும் என்ப' (பொருட்டொகை நிகண்டு).

எழுவகைத் தோற்றம். 1. தேவர் 2. மக்கள் 3. விலங்கு 4. புள் 5. ஊர்வன 6. நீர் வாழ்வன 7. நிற்பன; எண்பத்து நான்காம் சராசரம்: 1. தேவர் 14 இலட்சம்; 2. மக்கள் 9 லட்சம்; 3. விலங்கு 10 லட்சம்; 4. புள் 10 லட்சம்; 5. நீர் வாழ்வன 10 லட்சம்; 6. ஊர்வன 11 லட்சம்; 7. நிற்பன 20 லட்சம்; சரம்-அசைவன. அசரம்-அசையாதன.

கருத்திடை மதித்துத் தேர்ந்து
கண்கணீர் பெருகிச் சோர
வுருக்கமாய்த் தொழுதக் கார்கள்
ஒருவரை யேனும் காணேம். 30

அத்தியின் கனியி னுள்ளே
யறிவரி தாக வைகும்
வித்தெனத் தெரியா வண்ண
மெய்யுயி ரனைத்தி னுள்ளும்
ஒத்துறை கின்ற நின்னை
உருத்திரன் பிரமன் வானோர்
முத்தரு மறியார் எம்மால்
அறியலா முறையுண் டாமோ. 31

இறைவன் கட்டளை

என்றுகொண் டிறைஞ்சி யுள்ளம்
இழுதென வுருகி நின்றே
ஒன்றையு மறியா வெங்கட்
குணர்வளித் தருள்வா யென்ன
நன்றுநன் றென்ன வுள்ளம்
நயந்திள நகையுந் தோன்றக்
கன்றைவந் தடைந்த ஆனிற்
கண்ணருள் பெருக நோக்கா. 32

ஏரியு நிரம்பிக் கொள்ளா
திருங்கரை யுடைத்திட் டேகும்
நீரினைச் சினவா தெய்தி
யடைத்ததை நிரப்பு மாபோற்

---

30. உருப்பவித்திடுதல்-தோன்றச் செய்தல். சுற்பூரம், கருப்பூரம் என்று வரல் போல் உற்பவம் என்ற சொல் உருப்பவம் என்று வந்தது. முத்தொழிற்கும் காரணமானவன் நீ. இதனையறிந்து கண்ணீர் விடுபவரைக் காணவில்லை.

31. அத்திக்கனிக்குள் உள்ள விதையைப் போல் உயிர்தோறும் உடம்பு தோறும் உள்ளாய்! திருமாலே! உன்னைப் பிரமன், சிவன், தேவர், முத்தர் அறியார். எம்மால் அறிய முடியுமா? இதனைக் கவிச்சக்கரவர்த்திகள், 'அதிரேக மாயை' என்று அருமையாகப் பாராட்டுவார் (யுத்தகாண்டம்).

32. இழுதென-வெண்ணெய்போல். ஒன்றையும் அறியா எங்கட்கு உணர் வருள் என்று ஆழ்வார்கள் கேட்டனர். கன்றைக் கண்ட பசு கொள்ளும் பரிவை வடநூலார் 'வாத்ஸல்யம்' என்பர். கன்றை வந்து அடைந்த ஆனில்-கன்றை அடைந்த பசுவைப்போல. நோக்கா-நோக்கி.

சீரிய நுங்கள் தம்மை
விடுகிலேம் தெளிமி னென்னாப்
பாரினை விழுங்கிக் காக்கும்
பச்சைமால் பகர்ந்தா னன்றே. 33

இந்தவா சகங்கள் கேளா
வெமக்கருள் புரியு மந்நாள்
எந்தநாள் அந்த நாளை
யியம்பிட வேண்டு மென்ன
அந்தமா யாதி யாகி
யடிமுடி தெரியொ ணாத
செந்திரு மணாள னம்பொன்
திருவடி வணங்கி னாரால். 34

வணங்கலு மகிழ்ந்து மாயன்
மார்பினோ டிறுகப் புல்லிப்
பணங்களி னரவு தாங்கும்
பாரினுற் றோர்க ளெல்லாங்
குணங்கமழ் தருமா நந்த
பதத்திடைக் குறுகி யாங்கண்
இணங்குநம் மடியா ரோடு
மினிதுவீற் றிருக்கு மாறாய். 35

மன்னெறி பொருந்து மப்போ
தனைகளை மறையைச் சார்ந்த
தன்னைமா மாலை யாஞ்செந்
தமிழினாற் கவிகள் பாடிப்

---

33. 'ஏரியை உடைத்துக் கொண்டு போகும் வெள்ளத்தை யாரும் சினவார்கள்; கரைகட்டி அதனைத் தேக்குவார்கள். அதைப்போல் நீங்கள் என் கட்டளைக்கு அடங்காமல் சென்றாலும் உம்மை விடேன்' என்று மால் பகர்ந்தான்.

34. ஆழ்வார்கள், நீ எமக்குத் திருவருள் புரியும் நாள் எந்த நாள் என்று கேட்டனர். அந்தமாய் - முடிவாய். ஆதியாய் - முதலாய். அடிமுடி தெரிய ஒண்ணாத திருவின் கேள்வனை வணங்கிக் கேட்டனர்.

35-36. மாயன் ஆழ்வார்களைப் புல்லி, 'பாரினுற்றோர் யாவரும் ஆனந்தப் பதவி பெற்று நம் அடியவர்களுடன் இருக்கும்படி, போதனைகளையும், மறையைச் சார்ந்தவற்றையும் செந்தமிழிற் பாடிப் பூமியில் பன்னாள்கள் தங்கியிருந்து பிறகு பரமபதத்துக்கு வாருங்கள்' என்று கூறி விட்டு மறைந்தான். சார்ந்ததனை என்பது சார்ந்த தன்னை என்று எதுகை நயத்தால் விகாரமாயிற்று.

பன்னுமிப் புவியின் மீது
பற்பகல் வைகிப் பின்னர்
துன்னுமின் அங்கென் றோதித்
துளபமால் மறைந்தான் அன்றே. 36

மூவர்களின் அருளிச் செயலின் மாண்பு

மறைந்து போதலு மற்றைய மூவரும் மறுகி
நிறைந்த ஞானமும் கல்வியும் விளங்கிட நிணம்தோய்ந்
துறைந்த நேமிசங் குடையமால் உவப்புடன் வாய்விண்
டறைந்த வாசக முறைவழா தரியநூல் நூற்றார். 37

மாயை யாம்பெரும் பிணிதனை மாற்றுநன் மருந்தாய்
நேய மாம்பெரும் பசியினை நீக்குமா ரமுதாய்
மேய காமவேள் வேட்கையாம் வெயிலொழி நிழலாய்
ஒய்வி லாப்பிற விக்கட னீந்துமோ டமதாய். 38

துன்னி ருட்பட ஞானம்நல் கிடும்சுட ரொளியாய்
பன்னி டும்பர சமயக்கா னொழிபடைத் துணையாய்
அன்ன மின்மையின் வாடுயிர்ப் பயிர்க்கரு மழையாய்
மன்னு நற்பத மேற்செலற் கேணியாய் மலிய. 39

பொய்கை யாழ்வா ரெனும்நாமம்
புனைந்த புலவர் பொய்ம்மையிலா
மெய்ம்மை யுளம்சேர் பாகவதர்
விரும்பி யருந்து நறுந்தேனிற்

---

37. மாயவன் கூறிய வண்ணம் ஆழ்வார்கள் அரிய நூல் நூற்றனர். நேமி சங்கு உடைய மால்-சங்கு சக்கரம் ஏந்திய திருமால். நொய்தில் நொய்ய சொல் நூற்கலுற்றேன் (கம்பநாடகம்).

38.39.40. இவை குளகம். பொய்கையாழ்வாருடைய அருளிச் செயலின் மாண்பு. மாயையாம்பிணி-மாயை என்கின்ற நோய். நேயம்-அன்பு. காமவேள்-மன்மதன். வேட்கை-காமம். காமம் என்ற வெயிலுக்கு நிழலாய். பிறவிக் கடலுக்கு ஓடமாய்.

39. அஞ்ஞான இருளுக்கு விளக்காய். பரசமயமாகிய காட்டிற்குக் கோடரி யாய். வாடுகின்ற உயிராகிய பயிருக்கு மழையாய். நற்பதவிக்கு ஏணியாய்.

40. பாகவதர் அருந்தும் தேனைப்போல் வேதக் கருத்தை நுகர "வையந் தகளி" எனத் தொடங்கி நூறு பாக்கள் பாடினார். அது "முதல் திருநூற்றந்தாதி" என வழங்கப்பெறுகின்றது.

செய்ய மறையோ திடும்பொருளைத்
தெளிந்தே யோர்ந்து திருவாக்கால்
வையந் தகளி யெனநூறு
வெண்பா நவின்றார் வளம்பெறவே. 40

பொய்கையாழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்யதேசங்கள்

அந்த நூறு வெண்பாவென்
றமைந்த திருவந் தாதிதனின்
முந்து பதிபாற் கடலரங்கம்
முதிர்வேங் கடம்பொன் திருவெஃகா
விந்தை யுறையும் திருக்கோவ
லூர்நல் வளஞ்சேர் விண்ணகரம்
இந்த வாறு திருப்பதியும்
பொருந்திச் சிறந்த விசைபெறவே. 41

முன்பே யுலகம் புரிதவத்தான்
முதுமா மறையின் பொருளுணர்ந்தே
தன்போ லிங்குப் பலவுலகந்
தனில்வா முயிர்கள் சிறப்படையப்
பொன்போல் மேனிப் பூதத்து
ஆழ்வார் நாமம் புனைபுலவர்
அன்பே தகளி யெனநூறு
வெண்பா வுரைத்தா ரழகுறவே. 42

பூதத்தாழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்யதேசங்கள்

வடவேங் கடம்தென் னரங்கமுநீர்
மலைபா டகமா லிருஞ்சோலை
யிடவெந் தைபாற் கடல்பேரை
யெழிலார் கோவ லூர்தஞ்சை

---

41. பொய்கையாழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்யதேசங்களின் பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன. பொய்கையார் பாடிய பதிகள் ஆறு.

42. முது மாமறை - பழைய வேதம். "முதுமறை கறங்க முரசம் ஆர்ப்ப" என்பது திருவரங்கக் கலம்பகம்.

43. பூதத்தாழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்ய தேசங்களின் பெயர்கள் சொல்லப்பட்டுள்ளன. அத்திநகர் - காஞ்சிபுரம். கோட்டி நகர் - திருக்கோட்டியூர். தண்காலூர் - திருத்தண்கா. இவர் பாடிய பதிகள் பதினான்கு.

கடன்மல் லைசீ ரத்திநகர்
கோட்டி நகர்தண் காலூரும்
குடந்தை யீரே முடனென்றவ்
வந்தா தியினுட் கூறியதே. 43

திருக்கண் டேனென்றோ துறுஞ்சீர்
சிறந்தே யொளிர்வெண் பாவதனைச்
சருக்க ரைகொண் டருந்துவபோற்
றரையோ ரருந்திக் களிப்புறவே
யிருக்கு முதலா நான்மறையி
னியலும் பொருளை யறிந்துணர்ந்தே
யுருக்க முடன்பே யாழ்வாராம்
நாமம் புனைந்தோ ருகந்துரைத்தார். 44

பேயாழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்யதேசங்கள்

அவ்வந் தாதி தனிற்பதினைந்
தூர்பாற் கடல்வேங் கடமரங்கம்
ஒவ்வுங் குடந்தை யிடவெந்தை
கோட்டி யூர்வே ளுக்கையுடன்
செவ்வெஃ காவை குந்தமட்ட
புயம்விண் ணகர்சீ ரலிக்கேணி
கவ்வி விசும்பார் சோலைமலை
கடிகை கச்சிப் பாடகமே. 45

இந்த முறையா லிருக்கினில்வீற்
றிருக்கும் பொருளை யம்மூவர்
செந்த மிழின்மூன் றந்தாதி
திருந்தப் புகன்று பரசமயத்

---

44. பேயாழ்வார், "திருக்கண்டேன்" என்று தொடங்கும் மூன்றாம் திருவந்தாதியைப் பாடினார். நான்மறையினியலும் பொருள் - நான்கு வேதத்திலும் சொல்லப்பட்ட பொருள்.

45. பேயாழ்வார் பாடிய திவ்யதேசங்கள் பதினைந்து. அவற்றின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

46. இருக்கினில் - வேதத்தில். பரசமயத் தந்தி - மற்றைய சமயவாதியர்களாகிய யானைக்கு. தந்தி - யானை. (தந்தத்தைப் பெற்றிருப்பது.) ஆளரி - ஆண் சிங்கம்.

தந்தி தனக்கா ளரிபோலுந்
தயங்குள் ளிருட்கா தவன்போலும்
எந்த வுலகத் துள்ளோரும்
ஏத்தித் தொழவாழ்ந் தினிதிருந்தார். 46

பரமபதம் உறுதல்

அலகில் பலநா ளிரும்புவிமே
லவ்வா றிருந்து பரமபத
உலகத் துளர்வந் தெதிர்கொளப்பொன்
னோங்கு விமான மதன்மிசைபோய்த்
திலக நுதற்செந் திருமார்பன்
திருவம் புயத்தாள் தொழுதேத்தி
இலகு மணியா தனமிசைவீற்
றிருந்தார் பிரிந்த விடாய்நீங்கி. 47

தோன்று ஞான முடையவராய்த்
துலங்கு மாயை கடந்தவராய்
ஆன்ற மறையந் தணர்முதலாய்
அறையும் நான்கு வருணத்தார்
மூன்று திருவந் தாதிக்குள்
முழுகிக் காப்பிட் டுணர்ந்தோதி
யேன்ற பரம பதந்தனிற்சென்
றிருந்தார் சிறந்தார் அடியரொடும். 48

---

47 ஆழ்வார்கள் பரமபதம் புக்க திறத்தை இக்கவிதை பகர்கின்றது. திலக நுதல் செந்திரு - திலகமணிந்த நெற்றியை உடைய பெரிய பிராட்டி. ஆதனம் - ஆசனம். பிரிந்த விடாய் - பிரிந்தமையால் உண்டான வெப்பம். 'வெள்ளக் குளத்தே விடாயிருவருந்தணிந்தோம்' என்பர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் (நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி). "வேற்றூரான் என்று விடாய் என்றேன்" (தனிப்பாடல்).

48. மூன்று திருவந்தாதிகளையும் ஓதி நான்கு வருணத்தில் பிறந்தவர்கள் பரமபதம் பெற்றனர். அந்தாதிக்குள் முழுகிப் பரமபதம் சென்றிருந்தனர். கோவிலுக்குள் செல்பவர் நதியில் மூழ்கிச் செல்வது மரபு. பரமபதம் செல்பவர் மூன்று திருவந்தாதியாம் நதியில் மூழ்கவேண்டும். காப்பிடுதல் - "வாழித்திரு நாமம்" பாடுதல்.

பயன்

இக்கா தையையன் புடனேட்டில்
எழுதி னவரும் படித்தவரும்
மிக்க விதனுட் பொருள்கடமை
விரித்தே விளம்பி னவருமிதை
யொக்கு மெனக்கேட் டுணர்ந்தவரு
முலகிற் பலநாள் மகிழ்ந்திருந்து
தக்க ஞானந் தழைத்தனந்த
சயனன் பதம்போய்ச் சார்ந்திடுவார். 49

பெரியாழ்வார் வரலாறு பேசுவோம்

முதன்மூன் றாழ்வார் களுமலர்மேன்
முளைத்த சரித மதனையிந்த
விதமா மெனவே விளம்பினம்சீர்
விளங்குந் திருமால் கமலவிரு
பதமார் புயத்தி லணிகருட
பகவான் புவிவந் தவதரித்த
இதஞ்சேர் பெரியாழ் வார்சரித
மிதுவென் றெடுத்திட் டியம்பிடுவாம். 50

மூற்றும்

---

49. முதலாழ்வார் வரலாற்றை அனுசந்திப்பவர் பெறும் பேறு பேசப்பட்டு உள்ளது. எழுதியவர், படித்தவர், விளக்கவுரை கேட்டவர் யாவரும் பரமபதம் பெறுவர். அனந்தசயனன் - ஆதிசேடன்மேல் பள்ளிகொண்டுள்ள திருமால்.

50. பெரியாழ்வார் வரலாறு பேசுவோம் என்கிறார். கமல இரு பதம் மார் புயத்தில் அணிகருட பகவான் - மார்பிலும், புயத்திலும் திருமாலின் இரு பாதங் களையும் மாலையாக அணியும் கருடாழ்வார் மாலையாக மலரைத் தொடுப்பது பெரியாழ்வாரின் இயல்பு என்று தெரிகின்றது. மார் - மார்பு. "நான்என்று மார்தட்டும் பெருமாளே" என்பர் அருணகிரிநாதர் (திருப்புகழ்).

பெரியாழ்வார் திருவவதார அத்தியாயம்

இன்றைப் பெருமை யறிந்திலையோ ஏழைநெஞ்சே
இன்றைக்கென் னேற்ற மெனிலுரைக்கேன் - நன்றிபுனை
பல்லாண்டு பாடியநம் பட்டர்பிரான் வந்துதித்த
நல்லாவ ணிச்சோதி நாள்.

உபதேசரத்தினமாலை—16

உலகநிலை

இவ்வாறினி தம்மூவரு மேகப்பல நாணீங்
கவ்வேலைமெய்ஞ் ஞானம்மகன் றஞ்ஞானம டைந்தே
யொவ்வாதவைம் புலவேடருக் குட்பட்டவ ராகி
வெவ்வேலையு டுக்கும்புவி மேல்வாழ்பவ ரெல்லாம். 1

இறைவன் கருடனுக்கிட்ட பணி

தருமத்துறை நடவாமல தருமத்துறை படவக்
கிரமத்தினி லடைமூடவி லங்குற்றுளங் கலங்கி
யொருவர்க்கெனும் நலமென்பது நிலையாதவிவ் வுலகு
நிருமித்தத ளிக்குந்திரு நெடுமாலுள நினைந்தே. 2

(உப. -16) ஏழை நெஞ்சே-அறிவற்ற மனமே. நம் பட்டர்பிரான். நம் என்ற அடைமொழி ஏற்றத்தால் வருவது. 'நம் பெருமாள், நம்மாழ்வார், நம்சீயர், நம்பிள்ளை-என்பதவரவர்தம் ஏற்றத்தால்' என்று மாமுனிகள் பகர்ந்துள்ளார் அப்புகழ் பெரியாழ்வார்க்கும் உண்டு போலும்.

1. உலகம் மீளவும் சீர் கெட்டது. ஐம்புல வேடருக் காட்பட்டவராய் உலகமாக்கள் மயங்கினர். 'ஐம்புல வேடரின் அயர்ந்தனை' என்று மெய் கண்டார் திருவாய் மலர்ந்தருளினார்.

2. தருமத்துறையில் நடவாமல் அதருமத்துறையில் மக்கள் நடந்தனர். நலம் என்பது நிலையா உலகு-நன்மை நிலைத்திராத உலகம். உலகப்பண்பு நிலையற்றிருத்தல். 'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும் பெருமை யுடைத்திவ் வுலகு'' என்பர் திருவள்ளுவர்.

அருகிற்பெரு வரையைப்பொரு முருவத்துட னணுகும்
கருடப்பெய ரவனைத்தன திருகட்கடை யருளாப்
பொருவற்றவ ரிவர்வாருதிப் புவிவிட்டணு கியபின்
மருவுற்றது பெருகிற்றிருண் மலிமாயைக ளதனால். 3

நீபோய்பெரி யாழ்வாரென நிலமீதவ தரித்தே
மாபாவகொ டும்பாம்பினை மலியாமல டக்கிக்
காபாலிமுப் புரமட்டவ னிருண்மாயைக ளைந்து
பூபாலுயர் ஞானம்மது பெருகும்படி புரிவாய். 4

கருடன் விடைபெற்றான்

எனவேயுரை மொழிமேவித னிருசெஞ்செவி குறுகும்
முனமேயவ னடிமாமலர் முடிமீதுற வணியா
மனமேகொடு மதியாவிழி வழியேகொடு பருகா
கனவாய்கொடு துதியாவிடை கொடுமேல்பதி கடவா. 5

---

3. வரையைப்பொரும்-மலையைப் போலும். இருகட்கடை-இரண்டு கண்களினால். அருளா-அருளப் பாடிட்டு (வரச் செய்து). இவர்-என்றது பக்கத்திலுள்ள முதலாழ்வார்களை. வாருதி புவி-கடல் சூழ்ந்த உலகம். மருவுற்றது-பாலை நிலமாயிற்று. மரு-பாலை நிலம். மாயையதனால் இருள் பெருகிற்று-என மாற்றுக. இருள் என்றது-பொருளையும், காமத்தையும். 'பொருளும் காமமும் என்றிவை போக்கி வேறு இருள் உண்டாமென எண்ணலர்' என்பர் கவிச் சக்ரவர்த்தியார் (சுந்தரகாண்டம்).

4. கருடனை நோக்கிப் பெருமான் 'நீ கருடன் ; உன்னைக் கண்டால் பாவப் பாம்புகள் அழியும். ஆதலால் பெரியாழ்வாராய்ப் பிறப்பாயாக' என்றான். புரமட்டவன்-முப்புர மெரித்த சிவபிரான். பூபால்-பூமியில். ஞானம் அது-அது பகுதிப் பொருளையே தரும் விகுதி. பூ, பால், ஞானம், மது பெருகப்புரி. மலரிலே மது பெருகும் வண்ணம் செய் (சிலேடை).

5. கருடன் விடைபெறுமுன் செய்த செயல்கள் விவரிக்கப்படுகின்றன. அடி மாமலர் முடியில் அணிந்தான், மனமே கொடுமதியா-மனதில் தியானித்து. கனவாய் கொடு துதியா-பெருமை பொருந்திய வாயால் துதித்து. பதிகடவா-பரம பதத்தைக் கடந்து. எனவே உரைமொழி மேவி தன் இருசெஞ்செவி எனப்பிரிக்க,

TAMIL NADU STATE DEPARTMENT OF ... LIBRARY. Acc No 10033 Date ... MADRAS-28.

பெரியாழ்வா அவதாரம்

கனமேனிக ரியமேதி கலக்கும்மடு விடைவாழ்
சினமேவுவ ரால்பாய்தரத் தென்னங்கனி யுதிரப்
புனமேவுக ரும்பிற்றுதிர் மணிகள்பொழி நிலவின்
இனமாமெனக் குமுதங்களி னிதழ்விண்டிடும் வயலார் 6

திருவில்லிபுத் தூரென்றுரை செயுமப்பெரு நகரின்
மருவந்தணர் குலமென்றிசை வகையிற்புனி தமதாய்
குருவென்றுய ரியசோழிய குலனிற்பிர மனைநேர்
ஒருவன்குல மணியென்னமு குந்தப்பெய ருடையான் 7

அறையும்மறை யவன்மாமனை யவள்பற்புமை யென்பாள்
பொறையிற்புவி யனையாளெழில் பொலிவிற்றிரு நிகர்வாள்
நிறைகற்பினில் வடமீனினை நிகர்வாள்குயின் மொழியாள்
பிறையொத்திடு நுதலாளனப் பெடையொப்பிடு நடையாள் 8

அம்மாமட மகளின்றிரு வகடாமிட மதனுள்
இம்மாநில மிடைவாழ்ந்தினி திருக்கும்பல வுயிர்க்கும்
செம்மாவறி வினைமூடிடச் செறியைம்புல விருளை
விம்மாதொழி வகைசெய்திடு மெய்ஞ்ஞான முகிழ்க்க. 9

---

6. கனம் மேனி-மேகம் போன்ற உடல். மேதி-எருமை. 'கார்கள் என்ன வரும் கருமேதி' என்பர் கவிச்சக்கரவர்த்தியார் (பாலகாண்டம்). மேதி கலக்க, அதனாலே வெகுண்ட மீன் பாய, அதனால் தென்னையிலிருந்து காய்கள் உதிர்ந்தன. காய்கள் பட்டதால் கரும்புகள் முறிந்து மணிகளைப் பொழிந்தன. அம்மணியின் நிலவால் குமுதம் மலரும். கற்பனை நன்று (இது பெரியாழ்வார் அவதரித்த சீ வில்லிபுத்தூரின் வளம்).

இதன் உள்ளுறை. மேதிகள் சமயவாதிகள். மீன்-மீனையே கொடியாகக் கொண்ட பாண்டியன். உதிர்ந்த காய்கள்-சமயவாதிகளின் ஆரவாரம். கரும்பு முறிந்து மணி வெளிப்பட்டது-பெரியாழ்வார் சினந்து பரத்துவ நிர்ணயம் செய்தது. குமுதம் மலர்ந்தது-திருமால் காட்சி வழங்கியது. அடியேன் புன்மதிக் கெட்டியது இது. சான்றோர்கள் இன்னும் சிறந்த பொருளைக் காண்பர்.

7. சீவில்லிபுத்தூரில் சோழியர் குலத்தில் தோன்றிய முகுந்தரின் புகழ் பேசப்படுகிறது. அவர் பிரம்மனைப் போன்றவர். 'செங்கமலத் தயனனைய மறையோர்' என்பர் பரகாலர் (பெரிய திருமொழி). இவரே பெரியாழ்வாரின் தந்தை.

8. முகுந்தனின் வாழ்க்கைத் துணையானவளின் புகழ் பேசப்படுகிறது. பெயர்-பற்புமை. பொறை-பொறுமை. பொலிவு-விளக்கம். கற்பினில் வடமீன். வடமீன்-அருந்ததி. 'வடமீனின் திறம் இவள் திறம் என்பர் 'இளங்கோவடிகள் (சிலம்பு). பத்மை என்ற சொல் பற்புமை என்றாயிற்று.

ஒருமாகதி ரவனாயினி துதயஞ்செயு மதுபோற்
கருவாகவ மைந்தேகலந் திடுநாளது முதலாய்
வருமாதம னைத்துங்குறி யவள்பால்மலி தர ஐ
யிருமாதமு நிறைவாய்முடி வெனலாகிய திருநாள். 10

திருவவதரித்த நாள்

மிதுனத்திரு மதியிற்பிறை மிளிர்சுக்கில பக்கம்
அதனுக்குளி னுதிசோதிய தெனுமத்திரு நாளின்
மதனொத்தொளி ருருவத்தொடு வளையுற்றிடு மணிகள்
அதுமுற்றிட சிறகிற்பொரு தரித்தானவ தரித்தான். 11

தந்தையின் செயல்

மைந்த னங்குவந் துதித்தலு முளமது மகிழ்வாய்த்
தந்தை யாகிய முகுந்தனுஞ் சதுர்மறை நெறியைச்
சிந்தி யாசதஞ் சீவவென் றேயெடுத் தெடுத்து
முந்த வாசிகள் பலபல புகன்றனன் முறையால். 12

புதையி ருட்பிழம் பனையமா மாயையைப் பொடியாச்
சிதையு மாறழித் தொழித்திடச் செங்கதி ரவன்வந்
துதைய மாயின னெனவுதித் திடுமக வினுக்காய்
விதைமு தற்பல தானமும் விதம்விதம் வழங்கி. 13

9-10. குளகம். அகடாமிடமதனில்-பற்புமை வயிற்றில். அறிவினை மூடிடச் செயும் இருளகற்ற ஆழ்வார் கதிரவன் போல் உதித்தார். விம்மாது-பூரிக்காமல்.

11. மிதுனமதி-ஆனிமாதம். சுக்கில பக்கம்-வளர் பிறையில். மதன் ஒத்து-மன்மதன் போல். வளையுற்றிடும்-வளைக்கின்ற. அணிகள்-படை வரிசைகள்.

12. முகுந்தர் மைந்தனைக் கண்டு, 'சதம் சீவ!' என்று வாழ்த்தினார். 'இன்னுமொரு நூற்றாண்டிரும்' என்று பல்லாண்டு பாடுவது வைணவ மரபு. சதம்-நூறாண்டு. சீவ-வாழ்க! "சினை மறைந்தொரு குரல் சீவ என்றதே" என்பது நந்தாப் புகழ்கொள் சிந்தாமணி. சிந்தாமணியில் அடிக்குறிப்பை நோக்கில் பல உண்மை புலனாம். 'சதம் சீவ" என்ற வடமொழியை 'நூறாண்டு புகுவீர்' என்று தனித்தமிழில் வைணவர் வழங்குவர்.

13. இருட்பிழம்பனைய-இருளின் திரட்சி போன்ற. மாயையைப் பொடியாய்ச் செய்யும் கதிரவன் போல் தோன்றிய மகவுக்காக விதை முதலான தானங்கள் செய்தார் முகுத்தர்.

மற்றும் செய்வன யாவையுஞ் செய்தனர் மகிழ்வால்
வெற்றி யாழிநா ரணன்றிரு வருளினால் விரைவோ
டுற்ற பாற்கடல் கடைந்தநா ளுதித்தவா ரமுதம்
பெற்ற வானவ ரொத்தன ரந்நகர்ப் பெரியோர். 14

பெரியாழ்வார் வளர்ந்தார்

ஊட்டி யும்முலை யுச்சிநெய் தடவிமஞ் சனநீ
ராட்டி யும்மணித் தொட்டிலிட் டசக்கியம் புலியைக்
காட்டி யும்மடி மிசைவைத்தும் கண்ணிறை கழித்தும்
ஈட்டி யிம்முறை பலபல மகிழ்வினோ டிழைப்ப. 15

கிடந்த சைந்தும்பின் கவிழ்ந்திட்டுந் தவழ்தலாய்க் கெழுமிப்
படர்ந்தி ருந்தும்பின் பார்மிசை நின்றுதத் தடியாய்
நடந்தும் விம்மியும் நகைசெய்துந் தந்தையும் நல்கும்
மடந்தை யுங்களிப் புறப்பல செய்கைகள் மருவி. 16

கதிர்செய் நேமிநா ரணன்பத மலருளங் கருதித்
துதிசெய் தேயுய ரியபதந் தொடர்ந்திடப் புவிமேல்
வதிப வர்க்குமெய்ஞ் ஞானத்தை வளர்ப்பவந் துதித்தோன்
மதிதி னங்கலை வளர்வபோல் வளருமந் நாளில். 17

---

14. நாரணன் அருளால் அமுதம் தோன்றியபோது தேவர்கள் பெற்ற மகிழ்ச்சியை வில்லிபுத்தூர் மக்கள் பெற்றனர். ஆரமுதம்-தேவாமுதம். தேவர்கள் ஆரமுதம் உண்டனர். வைணவர்கள் உண்பது ஆராவமுதம். ஆரமுதம், ஆராவமுதம் வேறுபாடு காண்க. வானவர்-தேவர்.

15. முலையூட்டியும், உச்சிநெய்தடவி மஞ்சள் நீராட்டியும், மணித்தொட்டிலிட்டு அசக்கி அம்புலியைக் காட்டியும், மடிமிசை வைத்தும், கண்ணிறைகழித்தும் இம்முறையிழைப்ப (வளர்ந்தார்). அம்புலி-சந்திரன். கண்ணிறைகழித்தும்-கண்ணெச்சில் போக்கியும்.

16. பெரியாழ்வார் வளர்ந்த பண்பை விவரிக்கின்றார். இப்பாடல் இயற்கை நவிற்சியணிக்கு இலக்கியமாய் உள்ளது. தத்தடி நடந்தும்-தளர் நடை நடந்தும். நல்கும் மடந்தை-ஈன்றதாய்.

17. நேமி - சக்கரம். நாரணன் பதமலர் கருதித் துதிசெய்து, உயர்பதம் தொடர்ந்திடப், புவிமேல் வதிபவர்க்கு மெய்ஞ்ஞானத்தை வளர்க்க உதித்தோர் மதியைப்போல் வளர்ந்தார். புவிமேல் வதிபவர்க்கு-பூமியில் வாழ்பவர்களுக்கு.

பெயர் வைத்தல்

உட்பட் டியாவரும் பொருந்துற வூர்தியாய்க் கருடப்
புட்ப டைத்தவர்க் கேபரப் பெயர்புனை விக்கும்
முட்பொ திந்ததாட் டாமரை நிகர்தரு முகற்கு
விட்டு சித்தனென் றேதிருப் பெயர்புனை வித்தார். 18

காப்பிடுதல்

விண்ணி டைப்பெருங் கருடன்மேற் றோன்றுவிண் டுவுக்கு
மண்ணி டைக்குலப் பாண்டிய னவையின்மா னிடர்தங்
கண்ணி றைப்பொருந் தாதுபல் லாண்டுகாப் பிடுமப்
புண்ணி யர்க்குநற் காப்புமிட் டனர்பொருந் துறவே. 19

அணிகலன் புனைதல்

வண்டு ணும்மது மலரினை மாலையாய்த் தொடுத்து
பண்டு மாநிலப் பரப்பெலாம் பாலன மெனவே
யுண்டு கந்தவற் களிப்பவற் குயர்ந்தபல் கலங்கள்
கொண்டு மெய்யெலா மணிந்தனர் குறைவில தாக. 20

---

18. கருடப்புள் படைத்தலற்கு உட்பட்டு யாவரும் பொருந்துற, பரப் பெயர் புனைவிக்கும் தாமரை நிகர் முகற்கு விட்டு சித்தர், என்று பெயர் வைத்தனர். உட்பட்டு-ஏற்றுக்கொண்டு. பொருந்துற-விரும்ப. முள்பொதிந்த-முள்நிரம்பிய. தாள்-நாளம். தாமரைநிகர் முகற்கு-தாமரை போன்ற முகமுடைய ஆழ்வாருக்கு. விட்டுசித்தன் என்று ஆழ்வார்தம்மை எறத்தாழ 25 இடங்களில் கூறிக்கொள்கிறார்.

19. விண்ணில் திருமால் தோன்றியபோது பொங்கும் பரிவால் பல்லாண்டு பாடிக் காப்பிட்டவற்கு (பெரியாழ்வாருக்கு) காப்பிட்டனர். காப்பு-இரட்சை யாக மஞ்சள் நூல் கட்டுதல்,

20. இறைவனுக்கு, மாலையைக் கட்டித்தருபவருக்குப் பலவகையான கலன் புனைந்தனர். பாலனம் என உண்டு உகந்தவன்-பாதுகாப்பென்று (உலகை) உண்டு மகிழ்பவன். பால்+அனம்-பாலுணவு. உலகத்தைப் பாற்சோறுபோல் உண்பவற்கு. பாலனம்-சிலேடை. பால்-அன்னம் என்றும், பாலனம் என்றும் கொண்டு நயம் காண்க.

அன்னமூட்டுதல்

மன்னு நால்வகை வருணருஞ் செவியெனும் வாயால்
பன்னி டுந்திரு வாய்மொழி யமுதினைப் பருகப்
பின்ன ளித்திடும் விட்ணுசித் தப்பெய ரவனுக்
கன்ன மாமமு தளித்தன ரன்புட னருந்த. 21

சடங்குகள்

தவள நேர்வளை யாழிமாற் கோதுசெந் தமிழாந்
திவளும் வாள்கொடு தெய்வம்வே றுளதெனத் தியங்க
உவளு மாயநூ லிருண்மயி ருகுத்தறுப் பவர்க்குச்
சவள மாவதும் கதிமுறைத் தகவுட னிழைத்தார். 22

இருபிறப்பாளராதல்

ஏலும் வேதசாத் திரம்புரா ணங்களா யினவும்
மேலும் தத்துவ முதலிய பலவென விளம்பும்
நூலெல் லாமறிந் தகத்தணி பவற்குநூன் முறைய
தால ணிந்தனர் முப்புரி நூலுமன் புறவே. 23

இவ்வி தம்புரி வனவிதி முறையெலா மியற்று
மவ்வி தம்புரிந் தார்மகிழ் வாயினர் அவனுஞ்
செவ்வி தாகிய பிரமசா ரியத்தொடும் சிலநாள்
ஒவ்வி வாழ்ந்திருந் தனனுவந் துறையுமந் நாளில். 24

---

21 உலக மக்கள் (நால் வருணத்தவரும்) செவியாம் வாயால் உண்ணத் திருமொழி வழங்கும் ஆழ்வாருக்கு அன்னம் ஊட்டினர். "பன்னிடும் திருமொழி எனும் அமுதினைப் பருக" என்று இருக்க வேண்டும்; நம்மாழ்வாரின் மறையையே திருவாய் மொழி என்பர். பெரியாழ்வாரின் பாசுரங்களின் தொகுப்பைத் திருமொழி என்பதே மரபு. எழுதியவன் ஏட்டைக் கெடுத்துள்ளான்.

22 சவளம் என்னும் சடங்கைச் செய்தனர். சவளம்-மொட்டையடித்தல். தவளநேர் - வெண்மை பொருந்திய. தமிழாம் வாள்கொடு பரசமயத்தை அறுப்பவர்க்குச் சவளம் செய்தனர். புத்திரன் பிறந்த மூன்றாம் வருடம் அஸ்வனி நட்சத்திரத்தில் துலா லக்கினத்தில் சௌளம் செய்ய வேண்டும், என்று ஸ்ரீ கருணீகர் புராணம் செப்பும். இதனை மிகமிக விவரித்து விசுவ பிரம்ம புராணம் பகரும்.

23 உபநயனம் பேசப்படுகிறது. வேதம் முதலான பலவகையான நூல்களை அறிந்தவற்கு முப்புரி நூல் அணிந்தனர் "மார்பிடை முந்நூல் வளையா முன்னர் நாவிடை நன்னூல் பயிற்றி" என்பர் சாத்தனார் (மணிமேகலை). நூல்களை அகத்தில் அணிபவற்குப் புறத்தில் முப்புரிநூல் அணிந்தனர்.

திருப்பணி

ஊர ழித்தவன் தந்தையாம் பிரமனை யுதவும்
நார ணன்திரு வுலகெலா மளந்திடு நளினச்
சீர டிக்குமுன் னுலகுதூ ளென்பதைத் தெளிவு
கூர கத்திடை யறிந்தன னாதியிற் குமரன். 52

அந்த வூருறை வடபெருங் கோயிலி லமர்ந்த
செந்தி ருப்பதி யானமா யவன்றிரு வடியை
முந்து காதலோ டணுகியே முறைமுறை வணங்கிச்
சிந்தை யோடிரு நயனமுஞ் சிறந்திடக் களித்தான். 26

அடிமை செய்திடும் தொழில்களில் யாதினா லிந்த
நெடிய மால்திரு வுளமகிழ்ந் திடுமென நினையாக்
கடிகொண் மாமலரிதழொடுந் தெளிமதுக் கமழ்பூஞ்
செடிகள் வைத்துப்பூ மாலைசாத் திடலெனத் தெளியா. 27

இதுவ லாற்பிரி திலையெனச் சென்றிரு வாட்சி
மதுபொ ழிந்திடுந் துளவமல் லிகைமுல்லை யலரிப்
புதும ணத்தசெவ் வந்தியும் புன்னைசெண் பகமென்
பதுமு தற்பல சாதிபூ வனந்தனைப் படைத்தே. 28

தேன்பொ ருந்துசெந் தாமரை குமுதஞ்செங் கழுநீர்
கான்பொ ருந்தும்வண் டுறையும்வெண் கமலமே முதலாம்
வான்பொ ருந்திடும் தேவரும் விரும்புமன் மலர்க
டான்பொ ருந்திடும் பொய்கையும் அமைத்தனன் றகவாய். 29

---

25 ஊரழித்தவன்-முப்புரங்களை அழித்த சிவன். உதவும் பிரமன்-பெற்ற பிரம்மன். பிரம்மனைப் பெற்ற திருமாலின் திருவடிக்கு முன் உலக போகங்கள் தூசி என்று ஆழ்வார் கருதினார். "சூரழித்தவனும் சுடர் நேமியும்-ஊரழித்த ஒருவனும்" என்பர் கவிச்சக்ரவர்த்தியார்.

26 வடபெருங் கோவிலில் விரும்பி மேவும் பிரானை வணங்கிக் கண்கள் களிக்க வாழ்ந்தார், திருப்பதியான மாயவன்-இலக்குமிக்குக் கணவனான திருமால். பதி-கணவன் "மங்கலங் கண்டவர் பதி இவட்கு" என்று ஆசுகவிராஜர் பேசுவார் (அரிச்சந்திர புராணம்).

27 நெடியமால்-திருவிக்ரமனான திருமால். திருமால் மனம் எதனால் மகிழும் என்று தெளிந்தாள். சோலை வளர்த்து மாலை சார்த்தத் திருவுளம் பற்றினாள்.

28, 29 பாக்களால் நந்தவனத்தையும், பொய்கையையும் அமைத்த முறை செப்பப்படுகிறது.

விடியு முன்றின மெழுந்துபோய்ப் பொய்கையின் மிளிர்நீர்
படித லேமுதற் காலைசெய் பலகடன் முடித்து
நெடிய னாம்வட பத்திர சாயிபொன் னிகர்சீர்
அடிவ ணங்கியே நந்தன வனந்தனை யணுகி. 30

கொத்தி டல்புனல் விடலெருக் கொணர்ந்துபூஞ் செடிவேர்
வைத்தி டல்தண்ணீர் பாய்ச்சுதல் மலிகளை களைதல்
ஒத்தி டச்சுவர் வேலிவைத் திடல்புழு வெடுத்தல்
இத்தி றம்புகல் பக்குவம் குறைவிலா திழைப்பார். 31

விண்ட லர்ந்தபூ மலர்களைப் பத்தியால் விரைந்து
வண்டு ணும்முனம் மணமுறா மற்பரி வட்டால்
கொண்டு நாசியைப் பூட்டிப்பூக் கூடையி லெடுத்துச்
செண்டு மாலைக டொடுத்திடு வான்தினந் தோறும். 32

தொடுத்த செண்டொடு மாலையைத் துலங்குபாற் கடலிற்
படுத்தி டும்வட பத்திர சாயிக்குப் பகல்போய்
அடுத்த சந்தியிற் கொண்டுசென் றற்சகர் கரத்திற்
கொடுப்ப னிம்முறை நடக்குநா ளுற்றகூ றுதுமால். 33

---

30 ஆழ்வாரின் தொண்டுகளை விவரிக்கின்றார். கடன்-கடமை; வடபத்ர சாயியை வணங்கிய பின்னரே மலர் கொய்யச் செல்வார் ஆழ்வார்.

31 ஆழ்வாரின் நந்தவனப்பணிகள் பேசப்படுகின்றன. கொத்துதல், தண்ணீர் பாய்ச்சுதல், எருவிடுதல், களை களைதல், வேலியமைத்தல், புழு எடுத்தல் முதலான பணிகளைப் புரிந்தார். புனல்விடல்-தண்ணீர் பாய்ச்சாமல் காயவிடுதல். வரக்காய்ச்சல் என்பர் உழவர்.

32 மலர் பறிக்கும் முறை: வண்டுணாமுனம்-வண்டுகள் தேனை உண்பதன் முன். "உண்பதன்முன் மலர்பறித் துண்ணா வூரும்" என்று திருமுறை பேசும். வாசனை நாசியில் புகாதபடி திருப்பரிவட்டத்தால் பூட்டிக் கொள்வார். "பூக்களைத் தெரிந்து புழுக்கடி போக்கிப் பொய்யிலா மெய்யனார் புரைதீர் மூக்கிலம் மணம் சென் றடைந்திடா வண்ணம் மூடிவாய் புதைத்து" என்பர் வடிவழகிய நம்பிதாசர் (குருபரம்பரை). தமது நாசியில் வாசனை ஏறாதபடி திருப்பரிவட்டத்தாற் கட்டிக் கொண்டு" என்று குருபரம்பரை ப்ரபாவம் பேசும் (பன்னீராயிரப்படி).

33 பகல் போய் அடுத்த சந்தியில் என்றதால் ஆழ்வார் மாலைக்காலச் சந்திக்கு மாலை முதலானவற்றை வழங்கினார் என்று தெரிகிறது. "பகற் பொழுதைக் கழித்ததற்பின் எய்த்த நறு மலர்ந்தித் திருமாலை நேயத்தால்-பரமனுக்குச் சமைத்தளித்தே" என்பர் வடிவழகிய நம்பிதாசர் (குருபரம்பரை).

பாண்டிமன்னன் செயல்
ஆழ்வார் கிழியறுத்தல்

முருகவிழ் தாமரை முத்தை யீன்றிடும்
கருவென வனங்கிடை காக்கு மாவயல்
மருவிய செந்நெலுங் கரும்பு மல்கிடுந்
திருவளர் பாண்டிய தேய வேந்தனே. 34

நறைகொள்தார் வேந்தராங் கடன டுங்கியே
முறையெனப் புலம்பியுள் கலங்க மொய்ம்புணீர்
கறைகொள்வேல் மலையினாற் கலக்கி யேதரும்
திறைகொள்சீர் சீவல ராய னென்பவன். 35

அறங்களாம் எருவையிட் டறம்பி ழைத்திடுங்
குறும்பராங் களைகளைக் குறைத்திட் டன்பெனு
நறும்புனல் பாச்சிநல் லோர்க ளாமெனும்
உறும்பயிர் விளைத்துச் செங்கோலை யோச்சு நாள். 36

---

34. 35, குளகம். இனி-பெரியாழ்வார் மதுரையில் திருமாலே பரம்பொருள் என்று நிலைநாட்டிய வரலாறு பேசப்படும். பாண்டிய நாட்டு வளம்-தாமரை ஈன்ற முத்தை முட்டை என்று கருதி அன்னம் அடைகாக்கும் நாடு பாண்டிய நாடு. இங்கு நுட்பமான உள்ளுறை உண்டு. அன்னம் முத்தை முட்டை என்று அடைகாக்கிறது. எத்தனை நாட்கள் அடை கிடப்பினும் அதில் அன்னக் குஞ்சு தோன்றாது. அன்னம் சமயவாதிகள். முத்துக்கள் லோகாயதம் முதலான புறச்சமயங்கள். அச்சமயங்களால் பயன் இல்லை என்பதைக் குறிப்பிடுகிறார்.

முருகு-வாசனை, தேன். கரு-முட்டை. கிடைகாக்கும்-அடைகாத்தல்.

35. பாண்டியன் பெயர் சீவலராயன். வேந்தராம் கடல் நடுங்க வேலாகிய மலையினால் கடைந்து திறைப்பொருள் என்னும் அமுதைப் பெறுபவன் சீவல ராயன். நறை-தேன். முறையென-முறையோ என்று.
"முறையிட மாட்டி கோளோ" என்ற தொடர் வைணவ வியாக்யானங்களில் காணப்படுகிறது.

36. சீவலராயன் ஆட்சிமுறை பேசப்படுகின்றது. அறங்களாம் எருவை யிட்டு, குறும்பராம் களைகளைப் பறித்தபின், அன்பென்னும் நீரைப் பாய்ச்சி, நல்லோர் எனும் பயிரை வளர்ப்பவன் பாண்டியன். குறும்பர்-குறுநில மன்னர் அறப்பிழைத்திடும்-மிகக் குற்றம் செய்யும். "துஷ்ட நிக்ர சிஷ்ட பரிபாலனம்" என்ற தொடர் இப்பாலாக விரிந்துள்ளது. செங்கோல் ஓச்சும் நாள்-செங்கோல் செலுத்தும் நாட்களில். சீவலராயன் மாண்பைக் "கூடற் புராணம்" நயம்படப் பேசும்.

ஒருதினம் நகரசோ தனைக்கென் றுற்றுநள்
ளிருளிடை யொருவானா யிலங்கும் வாளொடும்
மருவுமம் மதுரைமா நகரின் மல்கிடுந்
தெருவெலாந் துருவியே செல்லு மெல்லையில். 37

காவலர் பாரிப்போர் மிடைதல் காண்குறாச்
சீவல தேவ னென் றுரைக்குஞ் செவ்வியோன்
தாவியாங் கொருதெருத் திண்ணை தன்மிசை
மேவியாங் கிறைப்பொழு திருந்த வேலைவாய். 38

பாரிபோட் டடைந்தவ ரகலப் பாருடை
கூரிய வேலினா னாங்கு பள்ளிகொள்
சீரிய னொருவனைச் சேர்ந்தெ ழுப்பிநீ
யாரிசைப் பாயென வதட்டிக் கேட்டலும். 39

அன்ன வனுணர்ந்து நீ யாரென்றோதலும்
இன்னகர் காத்திடும் வேந்தன் யானெனச்
சொன்னது கேட்டவத் தூய வேதியன்
தன்னுடை வரவினைச் சாற்று வானரோ. 40

மறையவர் குலத்தன்யான் மறைகள் காணொணா
நறைகமழ் துளவநா ரணன்ப தத்திடை
பிறையணி சடையினன் கொண்டு பின்விடுந்
துறைபடுங் கங்கைநீர் தோய்தற் கேகியே. 41

---

37. நள்ளிருள்-செறிந்த இருள். துருவி-தேடி.

38. பாரிப்போர்-இராக்காவலர். பாரி-இராக்காவல். "பாரியும் அடங்கினது" என்பர் கவிச்சக்ரவத்தியார் (சுந்தர காண்டம்). இராக்காவலர் பாடும் பாட்டு 'சங்கீதப் பாரி' என்று வழங்கப்படும். காவலர்-மெய்காப்போர். மிடைதல்-நெருங்குதல். இறைப்போது-சிறிது நேரம்.

39,40, 41, 42. குளகம். பாண்டியன் திண்ணையில் உறங்கும் அந்தணனை* "நீ யாவன்" என்று கேட்டலும், அவன் தன் வரலாற்றைச் சொல்கிறான். கங்கையில் நீராடிவிட்டுச் சேதுவைத் தெரிசிக்கச் செல்வதாகப் பகர்கிறான். 41. கங்கையின் சிறப்பைப் பேசுகிறான். நாரணன் பாதத்திலிருந்து சிவபிரான் பெற்றுப் பின் தரையில் விட்ட கங்கை. 'நலம்திகழ் சடையான் முடிக்கொன்றை மலரும் நாரணன் பதத்துழாயும்-கலந்திழி புனலால் புகர்படு கங்கை' என்று பெரியாழ்வார் பகர்வார். 42. சேதுவின் சிறப்பு. மாது-சீதை. இராகவன் வகுத்திடும் சேது-இராமனால் அமைக்கப்பட்ட திருவணை.

* அந்தணன் பெயர்-சோழசன்மா, தோசித கோத்திரம் (கூடற் புராணம்).

ஒதுகங் கையையடுத் துகப்பி னாடியே
மாதுகா ரணத்திரா கவன்வ குத்திடுஞ்
சேதுவைத் தெரிசனம் செய்தற் கெய்துவேன்
ஈதுகான் வரவென வரசி யம்புவான். 42

அய்ய நீபற்பல தேயத்தி யாவையும்
கையிலா மலகம்போற் காணும் பெற்றியால்
செய்யநற் கதைபல தெரிந்தி ருப்பையான்
உய்யவோர் நற்கதை யுரையென் றோதலும். 43

யானுணர்ந் திலன்கதை யாயி னும்மொரு
தூனலனு டையதாஞ் சுலோகங் கற்றுளேன்
ஊனுணும் வேலவென் றுரைப்ப வேந்துநீ
தானதை யுரையென வவனுஞ் சாற்றினான். 44

கேட்டிதன் பொருளைநீ கிளத்து வாயென
வாட்டிறன் மன்னவன் வணங்கி யேத்தலும்
ஈட்டிய விரவினுண் டிடுதற் கியாவையும்
நாட்டிய பகலிடைக் கொள்ளல் நன்றரோ. 45

மாரி காலத்தினுண் பவைகண் மற்றைய
சீரிய கோடையிற் சேர்த்தல் செவ்விதாஞ்
சேரிய முதுமையி னுண்டி சேர்த்திடுங்
காரிய மிளமையாங் காலத் தாகுமால்: 46

---

43 பாண்டியன் அந்தணனிடம் 'கதை சொல்க' என்றான். (மற்ற குருபரம் பரைகளில் உறுதிப் பொருள் கேட்டதாகவுள்ளது).

44 அந்தணன், 'எனக்குக் கதை தெரியாது; ஆனால் ஒரு சுலோகம் தெரியும்' என்றான். அந்தணன் சுலோகம் சொல்லினன். அச்சுலோகம் குருபரம்பரைப் பிரபாவத்தில் உள்ளது. "வர்ஷார்த்தம் அஷ்டௌ ப்ரயதேத மாஸான்; நிஸார்த்த அர்த்தம் திவஸம் யதேந வார்த்தகிய ஹேதோர்வயஸா நவேன பரத்ர ஹேதோர் இஹ ஜன்ம நாச". பாண்டியன் அதன் பொருளை விவரி என்றான்.

45, 46, 47 அந்தணன் பொருள் கூறுகிறான். இரவில் உண்பதற்கு வேண்டியவற்றைப் பகலில் சேர்க்க வேண்டும். மழைக் காலத்துக்கு வேண்டிய பொருளைக் கோடைக் காலத்தில் ஈட்ட வேண்டும். முதுமைக் காலத்திற்கு வேண்டியவற்றை இளமையில் தேட வேண்டும். இவற்றைப் போல மறுமைக்கு வேண்டிய உறுதிப் பொருளை இம்மையில் பெற வேண்டும் என்று அந்தணன் விளக்கினான்.

அம்மையில் வேண்டுநல் லேது வானதை
யிம்மையிற் றேடிட வேண்டு மென்னவே
மும்மையு முணருமந் தணனு முன்புசொற்
செம்மைசேர் சுலோகத்தின் பொருளைச் செப்பினான். 47

மன்னனும் கேட்டுள மகிழ்ந்து ருக்கமாய்
நன்னய மொழிபல நவின்று போற்றிசெய்
தன்னவன் றன்னொடு மவிடம் நீங்கிப்போய்த்
தன்னர மனையிடைச் சார்ந்திட் டானரோ. 48

சார்ந்தரு மறையவன் றனக்குக் கண்ணருள்
கூர்ந்துவேண் டுவவெலாங் கொடுத்த னுப்பியே
தேர்ந்தவ னுரைத்தநல் லுரையைச் சிந்தைகொண்
டோர்ந்துயிர்க் குறுதியை யுன்னு மெல்லையில். 49

அன்னவ னுளத்திரு ளழித்து நீக்கிட
மன்னுவன் புதுவையா யென்னும் வாய்மையை
முன்னர்வந் துரைசெய்வான் முடுகல் போலவே
துன்னிருள் ஒழிந்திட விரவி தோன்றினான். 50

காலையி னெழுந்துபல் கடன்கண் முற்றியே
நூலையோர் முனிவரா சிகணு வன்றிட
வேலையின் மிஞ்சொலி விம்ம வேகொலுச்
சாலைவந் தரியணை தன்னின் மன்னினான். 51

---

48. அரசன் அரமனையடைந்தான். அரமனை என்ற சொல் அரண்மனை என்ற சொல்லின் திரிபன்று. வில்லிபுத்தூரார் " இரதமாக அரமனைக் கெய்து முன்" என்பர் விராட பருவத்தில். அங்கு அரமனையை வரமனை என்று பிரித்துச், சொல்லின் பொருளைக் கெடுக்க நேர்ந்தது வருந்தந் தக்கதே.

48, 49. மன்னன் அந்தணனுக்கு வேண்டியவற்றைக் கொடுத்து அனுப்பியதைப் பேசுகிறது.

50. சூரிய உதயம். புதுவையான்-பெரியாழ்வார். பெரியாழ்வார் மன்னவன் உள்ளத்திலுள்ள இருளை நீக்குவான் என்னும் உண்மையை வெளிப்படுத்துவது போல் இருளைப் போக்கி இரவி தோன்றினான். இரவி-சூரியன்.

51 முனிவர்கள் ஆசி நுவன்றிட, ஒலி விம்ம அரசன் கொலுச் சாலையில் உள்ள அரியணையில் வீற்றிருந்தான்.

மந்திரித் தலைவரும் மற்று ளோர்களும்
வந்திரு மருங்கினு ணெருங்கி வைகிட
அந்தரத் தவர்புடை சூழ வாதனத்
திந்திர னிருந்தென விருத்த வெல்லையில். 52

செல்வநம்பியின் பண்பு

ஒவ்விய மோக்கமா முலகு தன்னையே
எவ்வித மடைகுவ தெனநி னைந்திடும்
அவ்வயின் நாரணன் அடியர் தங்களிற்
செவ்விய மாணியன் சிறந்த மேன்மையான் ; 53

பல்கலை நூல்களும் பயில்நற் கேள்வியான் ;
குலமறை யோர்கடங் கொழுந்து போன்றுளான் ;
நலமலா துரைசெயா நாவு கொண்டுளான் !
அலகிலாக் கல்விசே ரறிவு மிக்குளான் : 54

செல்வநம் பிப்பெயர் சேர்ந்து ளான்அவன்
மல்கிய வவையிடை வந்து தோன்றலும்
மல்கவி ராசனும் வணங்கி யாதனம்
நல்கலு மதன்மிசை நண்ணி னானரோ ! 55

---

52 இருமருங்கினும்-இரண்டு பக்கங்களிலும். ஆதனம்-ஆசனம்.

53, 54, 55. பாண்டியனின் புரோகிதனான செல்வ நம்பியின் சிறப்புக்கள் பேசப்படுகின்றன.

53 மோக்கம்-மோட்சம் மாணியன்-பிரம்மச்சாரி " மாணிக்குறள் உருவாய மாயன்" என்பர் பெரியாழ்வார் "மாணியாம் படிவம் அன்று" என்பர் கவிச் சக்ரவர்த்தியார் (கிட்கிந்தா காண்டம்).

54. குலமறையோர் - உயர்ந்த வேதங்களைப் பயின்றவர். குலம்மலை - சிரேஷ்டமான மலை" என்பது வைணவவுரை. மறையோர்தம் கொழுந்து போன்றவன். கண்ணன், ஆயர் கொழுந்து. செல்வநம்பி மறையோர்கள் தம் கொழுந்து.

55. மல்க இராசனும் ஆதனம் நல்க அதன்மிசை நண்ணினான். மன்னன் பணிவும் நம்பியின் சிறப்பும் புலப்படுகின்றது. இச்சிறப்பை எல்லாம் கருதியே பெரியாழ்வார், "அல்வழக் கொன்றுமில்லா அணி கோட்டியர் கோன் அபிமான துங்கன், செல்வனைப் போலத் திருமாலே நானும் உனக்குப் பழவடியேன்" என்றும், நளிர்ந்த சீலன் நயசெலன் அபிமான துங்கனை நாள்தொறும், தெளிந்த செல்வனைச் சேவகங் கொண்ட செங்கண்மால்" என்றும், உருகி உருகிப் பாடு கின்றார். பகவத் சேஷத்வம் பாகவத சேஷத்வத்தில் கனியாகிறது".

மன்னன்வினா

இருந்தவே தியன்முக னோக்கி யேந்தலும்
பொருந்துமிப் பொய்மையாஞ் சமயம் புல்லியே
வருந்துரு துயங்கிய மோக்கம் மன்னியான்
திருந்துறும் வகையைநீ செப்பு கென்னலும் ; 56

நம்பிவிடை

எண்ணிலா தத்துவ நூல்கள் யாவையு
மண்ணிலே யுணர்ந்திடி லறிவுண் டாகியே
விண்ணவர்க் கரியதா மோக்க வீட்டினை
நண்ணலா மென்றனன் செல்வ நம்பியே. 57

என்னலுந் தத்துவக் கியானம் யாவும்தேர்ந்
துன்னிடும் பெரியவ ருலகி லுண்டுசொல்
அன்னவர் தன்னைநீ யறிந்து ளாயெனிற்
பன்னிட வேண்டுமென் றரசன் பன்னலும். 58

இவ்வுலகி யாவையு மினிதி ணாண்டதி
லொவ்வுசெல் வந்தனை யொழியும் புன்னுனிக்
கவ்விய பனியெனக் கருதி மாறிலாச்
செவ்விய முத்தியைச் சேர்த லுன்னினாய். 59

ஆதலா லியாதினு மறுக்கொ ணாதென
ஓது மாயா விருளதனை யுண்மையாம்
நீதியா லொழித்திடு நினைவுண் டாகியே
தீதிலா முத்திவீ டணையுஞ் செய்கையை. 60

---

56. வேதியன் - செல்வநம்பி. பொய்ம்மையாம் சமயம் புல்லி வருந்துறாது மோட்சம் அடையும் வழியைக் கூறுக என்றான் பாண்டியன். பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும் என்ற பழமொழி இங்கு மறைந்துள்ளது.

58. தத்துவம் உணர்ந்தவர்கள் உளரோ? அவர்களை நீ அறிவாயா? என்று மன்னன் கேட்டான்.

59, 60, 61. செல்வநம்பியின் கூற்று. 59. புல்நுனி கவ்விய பனி - புல்லின் நுனி பற்றிக் கொண்டுள்ள பனி. 'கவ்விய'- என்ற தொடர் நயமானது செல்வ நிலையாமை விளக்கப்படுகிறது. "புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை" என்று நாலடி நிலையாமையைப் பேசும்.

அறிவிக்க வல்லவர் யாவ ரோவெனின்
நெறிதக்க வேதநூ னிறைந்த நெஞ்சிடை
குறிதக்க வல்லவ ராங்கும் கொற்றவா
செறிதக்க வுள்ளர்நீ வெருவல் தேர்குவாய் 61

என்றுரைத் திடுதலு மினியர் தங்களிப்பு
ஒன்றிய மனத்தொடு மந்த வுத்தமர்
துன்றிய தெத்தலஞ்? சொல்லி னாங்கடைந்
தின்றடி தொழுதவர்க் கடிமை யெய்துவேன். 62

இனையவா சகந்தனை யேந்த லோதலும்
தினையள வாயினும் பெருமை தேர்கொணா
வனையரை யடைந்துகாண் பரிய தாதலால்
நினையுமோ ருபாயத்தி னிரப்பல் வேண்டுமால். 63

என்னலு மொருவன் வீடெய்த வெய்தியோர்
நன்னதி மூழ்கிட வேண்டு நாளிடை
யன்னதி யெதிரிடை யணுகி நீயுமென்
றன்னிடை மூழ்கெனச் சார்ந்த தன்மைபோல்; 64

ஆயதிம் மொழியென வரச னுண்மகிழ்ந்
தேயவிச் செயலலாற் பிறிதொன் றில்லெனத்
தூயவ னடிதொழு துபாயஞ் சொல்லென
நேயமோ டவனிது நிகழ்த்தன் மேயினான். 65

60, 61. குளகம். யாதினும் அறுக்கொணா மாயையாம் இருள். அது உண்மை என்ற நீதியால் ஒழிக்கலாம், அதனை உணர்த்தவல்லவர் எங்கும் உள்ளனர். வெருவல்-அஞ்சாதே.

62. அந்த உத்தமர் துன்றியது எத்தலம்? சொல்லின் ஆங்கு அடைந்து அவர்கட்கு அடிமை செய்வேன்.

63. பெரியவர்கள் இங்குவர உபாயம் ஒன்று உண்டு என்றார், செல்வநம்பி. பெரியவர்களின் சிறப்பை நம்மால் தினையளவாயினும் அறிய முடியாது.

64. செல்வநம்பி மொழிகேட்ட மன்னவன், நீராட விரும்புவோன் பக்கம் அந்த நதியே வந்தாற்போல மகிழ்ந்தான். "பங்கன் இருந்த பழம்பதி நோக்கி, கங்கை யடைந்த கணக்கென" என்று கவிசார்வபௌமர் பேசுவார் (பிரபுலிங்க லீலை). நதி-நீ என்னில் மூழ்கு என்று கூறுவதுபோல-என்று பழைய உவமைக்கு மெருகு கொடுத்துள்ளார்.

வேறு

கேட்டறிநீ அரச!விது பரமபுரு
டோத்தமனாய்க் கிளருந் தேவன்
ஈட்டியமா மயமெனும் வினோதத்தால்
பலசமய மியைந்த தாமால்; 66

நாட்டியவச் சமயமெலாந் தனித்தனியே
பெரிதென்று நயந்து சொல்லும்;
ஏட்டினிடை யேயெழுதா நான்மறையு
மவ்வாறா யிசைக்கு மன்றே, 67

அச்சமயத் துற்றவரும் பிறசமய
மாகாதென் றறைவா ரந்த
இச்சைபெறும் சமரமெலா நிருமித்த
பரனாகு மிறைவன் றன்னை
நிச்சயங்கண் டறிவார்கள் அப்பரம
னடியார்கள்; நிறைந்த வேதத்
துச்சிமிசை யிருப்பதனை யத்திருநான்
மறைதானு முணரா தன்றே. 67

ஆதலினாற் பலவாகுஞ் சமயற்களிற்
சிலபேர்க ளதுவி தென்றே
யோதுவர்கள் சிலபேர்கள் பொதுவெனவே
யுரைத்திடுவர் உண்மை முற்றும்

---

66 முதல் 71-ஆம் பாடல்கள் வரை செல்வநம்பியின் மொழிகள்.

66. இறைவன் மாயையால் பல சமயங்களை நாட்டினான். அச்சமயம் யாவும் தம்மையே சிறப்பித்துக்கொள்ளும். வேதமும் அப்படியே பேசும். மாயமெனும் வினோதம்.வினோதம்-விளையாட்டு. ''வணங்கும் சமயம் பலபல வாக்கி'' என்பர் சடகோபர்.

67. சமயவாதிகள், பிறசமயம் ஏற்கத் தக்கதல்ல என்று கூறுவர். உண்மையான அடியவர்கள் இந்த ஆரவாரங்களைக் கடந்து, பரமனைக் காண்பார்கள். வேதத்துச்சி-உபநிடதம்.வேதமும் உபநிடத உண்மையை உணராது.

68-69. சமயவாதிகள்-'அது' என்றும் 'இது' என்றும் ஓதுவார்கள். சிலர் 'பொது' என்பார்கள். மாணிக்கக் கல்லுடன் புல்லிய கல் சேர்ந்துவிட்டால் சாணையினில் இட்டுத் தேய்த்து அறிவார்கள். அதுபோல் சமயங்களைப் பட்டை தீட்டிக் காட்டவல்ல பெரியவர்கள் ஒன்றுசேர உபாயம் செய்ய வேண்டும். அப்போது வீணையிசை கேட்டு அசுணமா வருவதுபோல் சான்றோர்கள் வருவார்கள்,

ஈதெனக்கண் டியாவர்களும் தெளிந்துரையார் ;
மாணிக்க மெனுங்கல் லோடும்
தீதுபெறு புன்கல்லுங் கலந்திடின்மற்
றாங்கதனைத் தெரியத் தக்கோர். 68

சாணைதனிற் பிடித்தறிவார் ; அங்கதுபோல்
நீயிளகும் தண்மை யெண்ணி
ஆணையொடு மறையுரைக்கும் பரமபுரு
டோத்தமனை யறிந்து சொல்லும்
நாணையஞ்சே ரடியவர்க ளுளங்கனிந்துள்
நணுக்கிடவோர் நயங்காண் பித்தால்
வீணைபயி லின்னிசைகேட் டசுணமா
வடைவதுபோல் மேவு வாரால். 69

அன்னயம்யா தெனிற்கேண்மோ நினதுதிரு
வரமனையா சார வாயில்
முன்னரிற்பொற் கிழிதூக்கிப் பரமுரைத்திஃ
தறப்பாடு மொய்ம்பு ளோருக்
கின்னபொரு ளுரியதெனத் திருமுகத்தைப்
பொறித்தனுப்பி னெங்கு ளோரும்
மன்னிடுவர் : அவரினதை விழப்பாடு
மவற்குருவாய் வகிக்க லாமால். 70

குருவெனவே வகுத்துமல ரடிபோற்றிப்
பணிந்தவன்றான் கூறு கின்ற
பொருவரிய நெறியிடைநின் றாழ்கிடின்வெள்
ளோலையிடை பொறியா வேதத்
திருமுடியின் வீற்றிருக்கும் பரமபுரு
டோத்தமனை தெரிசித்தி யார்க்கும்
மருவரிய பதவியதா மோக்கவீ
டதினடைந்து வாழ லாமால். 71

---

70. உபாயம் சொல்லப்படுகிறது. நம் அரமனை வாயலில் பொற்கிழி கட்டி வைத்து பரத்துவ நிர்ணயம் செய்து, அதனை அறும்படி செய்பவர்க்குப் பொருள் உரியது என்றால் பலர் வருவர். அவருள் அதனை அறுப்பவரை நாம் குருவாகக் கொள்ளலாம். திருமுகம்-ஆணை. ஆசார வாயில்-அரண்மனை முற்றத்திலுள்ள மண்டபம். வகிக்கலாம்-ஏற்றுக் கொள்ளலாம்.

71. கிழியறுப்பவரைக் குருவாகக் கொண்டால் புருஷோத்தமனைக் கண்டு முத்தி பெறலாம். வெள்ளோலையிடை பொறியா வேதம்-எழுதப்படாத வேதம்,

ஈதலவே றுபாயமிலை யெனவெடுத்துச்
செல்வநம்பி யினிதி னோடும்
ஓதுதலு மரசனுமவ் வாரமுத
மெனுமொழிகேட் டுளத்தி னுற்ற
மாதுயர மதுநீங்கிப் புளகமுடனி
ருபுயங்கண் மலைபோ லோங்கப்
போதவுப சரித்தவர்க்குப் பசும்பொன்மணி
கலன்பலவும் பொருந்த நல்கி. 72

கிழியுயர்த்தினான்

அவனுளத்தி னிடைகுறித்திட் டுரைத்திடுமு
பாயவகை யதனை யேசெய்
குவதுயர்நற் பதவிபெறற் குறுதியெனத்
திருவுளத்துக் கொண்டா னாகி
இவனுமொரு பொற்கிழியை யிழைத்ததனை
யுயரவெடுத் தெழில்வா னோங்கித்
துவளுமணிக் கொடிபொருந்துந் தனதுதிரு
மனைவாயிற் றூக்கிப் பின்னர்; 73

அகலுமலை கடலுடையம் புவியிடைப்பற்
பலசமயத் தமைந்து ளோரிற்
புகலரிய சதுர்மறையும் பலபலசாத்
திரவகையும் போத மார்ந்த
சகலகலை களுமுணரும் தன்மையினர்
பலபலநூல் நுவலத் தக்கோர்
பகலிரவென் றறியாத் தனிப்பொருளாம்
பரஞ்சுடர்போற் படிவங் கொண்டோர். 74

'எழுதாக் கிளவி' என்பர். ஓலை-பனையோலை. வேதத்திருமுடி - உபநிடதம். வேதத்தின் முடிவில் இருப்பதால் உபநிடதம் திருமுடி என்று கூறுப்பட்டது, அத் திருமுடியில் புருஷோத்தமன் உள்ளான்.

72, 73. அரசன் செல்வநம்பிக்குச் சன்மானம் செய்தான். பிறகு செல்வநம்பி கூறியபடி கிழியைக்கட்டினான். மணிக்கொடி-அழகிய கொடி. "தாயின் மணிக் கொடி பாரீர்!" என்று அமரகவி திருவாய் மலர்ந்தது இங்கு நினைவு கூர்க.

74, 75, 76. சதுர்மறையும், சாத்திரவகையும், கலைகளும் உணர்ந்தவர்கள், பல நூல்களை விவரிக்கும் திறமை பெற்றவர்கள், கடவுள் போன்ற படிவம் பெற்றவர்கள், நான்கு சாதியில் எந்த சாதியிற் பிறந்திருந்தாலும் இங்கு வந்து தங்கள்

பூவருமெண் டோளுடைப்புங் கவன்படைத்த
நான்கெனவே புகல்வர் ணத்தின்
யாவரெனு மோக்கமதை யடையும்வழி
தன்னையடை விப்போர் தங்கள்
தேவர்நிலை தனைத்தெரித்திட் டெனையடிமை
கொண்டுசெம்பொற் கிழியுங் கொண்டு
போவதற்குக் கருத்துடையோர் மதுரைநக
ரிடைவந்து பொருது கென்றே. 75

சமயவாதியர் செயல்

திருமுகங்கள் பொறித்துவந்து தூதர்கள்தங்
கைகொடுத்துத் திசைக ளோர்நா
லிருமுகத்தும் விடுப்பவவர் களுங்கொடுபோய்
கொடுத்ததனை யியம்ப லோடும்
மருவுமுவப் பொடுஞ்சைவர் வாமிகள்வை
சேடியர்மா விரதர் புத்தர்
அருகருல காயுதர்க ளாமுகர்மீ
மாங்கிசர்சாங் கியோக ரானோர். 76

பாசுபதர் மாயாவா தியர்முதலாஞ்
சமயத்தோர் பலரும் வந்தார் :
பூசுரர்கண் முதலாநால் வருணத்திற்
பெரியோரும் பொருந்தி வந்தார் :
ஆசில்புக ழிமையவருஞ் சித்தர்வித்யா
தரர்கண் முதலானோர் தாமும்
வீசுதிரைக் கடற்புவியி னிதையறிவான்
மதுரைநகர் மேவி னாரால். 77

தேவரே பரம் என்று நிலைநாட்டி, என்னை யடிமையாக ஏற்றுக்கொண்டு, திரும்பிச் செல்லும் விருப்பம் உடையோர் வாருங்கள் என்று, வரைந்து திருமுகங்கள் அனுப்பினான்.

74. பகலிர வறியாத பரஞ்சுடற்போற் படிவம் கொண்டோர்-சூரியன் உள்ள இடத்தில் இருள் இராது, அதுபோல் இறைவன் உள்ள இடத்தில் அஞ்ஞானம் இராது. அக்கருத்தை உட்கொண்டது இவ்வடிகள்.

75. எண் தோளுடைப் புங்கவன்-பிரமன். தங்கள் தேவர்-தாங்கள் வழிபாடு செய்யும் தெய்வங்கள்.

76-77. மதுரைக்கு வந்த சமயவாதிகளைக் குறிப்பிடுகிறார். சைவர், வாமமார்க்கத்தார், வைசேடியர், மாவிரதர், புத்தர். அருகர், உலோகாயுதர், காளா

வேறு
ஆழ்வாரின் செயல்

இவ்வகை யாவரு மினிதி னடைந்தார்
அவ்வகை செய்யர சவ்வவ ருக்குச்
செவ்வகை செய்வ முறைப்படி செய்தா
ரொவ்விய புதுவை யினுற்ற துரைப்பாம். 78

மருவிய விட்டுணு சித்தனும் மாலாம்
பொருவட பத்திர சாயி பொருட்டு
ஒருபகல் பொன்மலர் மாலை யுஞற்றி
வருபக லின்னொரு வைக விருட்கண். 79

நித்திரை வேளையி னில்லா, விந்தம்
ஒத்துள கண்ணளி யுற்றவண் விட்ணு
சித்த வெனப்பெயர் செப்பி யெழுப்ப
அத்தலை மேனிய சக்கி யெழுந்தே. 80

சிக்கென நோக்கத் திருவரு ளாலே
பக்கமி ருத்தருண் மாலைப சுங்கார்
ஒக்கு நிறத்தோ டுற்றுத் தன்னுளம்
மிக்க களிப்போ டவனடி மீதே. 81

விழும்; புரளும்; புவியிற்; பரிவின்மீண்
டெழும்; புகழும்;நட மிட்டுகை கூப்பித்
தொழும் உருகும்; பரிவோடு துதிக்கும்;
அழும்;பரி சின்ன தறிந்திட லாகா. 82

முகர், மீமாம்ஸர், சாங்கியர், பாசுபதர், மாயாவாதியர் முதலாகிய சமயவாதிகள் வந்தனர். நான்கு வருணத்தவரும் வந்திருந்தனர். தேவர், சித்தர், வித்யாதரர் முதலானவர்களும் நிகழ்ச்சியைக் காணக் கூடினர்.

78. இனிமேல் புதுவையில் நிகழ்ந்ததைக் கூறுவேன் என்கிறார். இறைவன் ஆழ்வார் கனவில் தோன்றி, "நீ பரத்துவ நிர்ணயம் செய்து கிழியறுத்துவர்" என்கிறார். அதனை மேலே விவரிக்கிறார்.

79, 80, 81. குளகம். 79. 3-ஆம் அடியில் வருகிற 'பகல்' என்பதற்கு 'ஒளி' என்று பொருள் கொள்ளவேண்டும், இல்லாவிட்டாற் பொருள் மாறுபடும். மாலையுஞ்ற்றி-மாலையைக் கட்டி.

80. அரவிந்தம் ஒத்துள கண்ணவன்-தாமரை மலர் போன்ற கண்களையுடையவன். அசக்கி-அசைத்து (நாட்டுச் சொல்).

81. சிக்கென-விரைவாக "சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவதினியே" என்பது மணிவாசகரின் திருவாசகம்.

82. திருமாலைக்கண்ட பெரியாழ்வாரின் மெய்ப்பாடுகள். நடமிட்டு-கூத்தாடி. பரிவோடு-அன்புடன்.

இத்தக வாகி யெழுந்தெதிர் நின்றே
கைத்தல மீது கவித்து விளித்த
மத்தகெ ஜத்தெதிர் வந்தருள் செய்த
வித்தக நின்னை வியந்தவர் யாவர்? 83

ஆதியு மாகி யனாதியு மாகிச்
சோதியு மாகிச் சுடரொளி யாகி
நீதியி னாலுல கெங்கும் நிறைந்த
வேதிய னேயுனை யானறி வேனோ? 84

நின்னடி யான்றொழு தற்கு நினைந்தோ?
வின்ன தொழில்புரி யென்பத னுக்கோ?
துன்னு பிறப்பை துலைத்திடு தற்கோ?
வென்னிவ ணுற்றது? இயம்புதி யென்றான். 85

என்றது தன்செவி யின்னிடை யெய்த
நன்றென நாரண னும்நகை செய்யா
இன்று நினக்குரை செய்திடு மின்சொல்
ஒன்றுள கேளென என்னென லோடும். 86

மற்பொரு தோண்மது ரைப்பதி யான்றன்
இற்பொலி வாயி லிடத்தெதி ராகப்
பொற்கிழி கட்டின னாதலி னீபோய்
யெற்பர மென்ன விசைத்த தறுத்தே! 87

---

83. மத்தகெஜம்-கஜேந்திரன். வியந்தவர்-உணர்ந்து பாராட்டியவர்.

84. ஆதியும் அனாதியும் நீ என்கிறார் ஆழ்வார். "ஆதிக்கும் ஆதியுண்டே" என்று பிறர் கூறியதை உட்கொண்டு இவ்வண்ணம் பேசினார்.

"ஆதி எனும் பொருளுக்கப்பால் உண்டாகினும் நீ" என்று கவிச்சக்ரவர்த்தியார் பாசுரமிடுவர் (ஆரண்ய). "சோதியே! சுடரே! சூழொளி விளக்கே" - என்ற மணிவாசகம் இங்கே பதிக்கப்பட்டுள்ளது.

85. 'நீ வந்த காரணம் யாது?' என்று ஆழ்வார் வினாவுகின்றார். இவண் உற்றது என்? இயம்புதி-இங்கே வரக் காரணம் யாது?

87, 88. மதுரைப் பதியான் பொற்கிழி கட்டினன். என்னைப் பரம்பொருள் என்று கூறி "அக்கிழியை அறுத்துவா" என்றான், இறைவன். 88. விருப்பு, வெறுப்பு இல்லாதவர், சாத்திரம் தெரிந்தவரை வெல்லும் ஆற்றல் தனக்கு இல்லை என்று கூறினார்.

அக்கிழி கொண்டிவ ணணுகென லோடும்
மிக்க விருப்பும் வெறுப்பு மிலாதோன்
றக்க மறைப்பல சாத்திர நூலுந்
தொக்க வறிந்து சொலத்தகு வோரை. 88

வாதினில் வென்றிட வல்லவ ரன்றோ
ஓதுகி ழிக்கொள லுக்குரி யோர்கள்?
ஏதெனு மொன்றுண ராவடி யேன்போ
யாதுப கர்ந்த தறுத்திட லாகும்? 89

கொட்டுகை பற்றி குனிந்தடி யேன்மண்
வெட்டுத ழும்பை விரித்து தெரிக்கிற்
கட்டுகி ழிப்படு மோ?படி னுங்கண்
டிட்டிடர் சொற்கறி வின்மை யுணர்ந்தால். 90

பொறுத்தல் செயானவன் பார்த்திப னென்னா
மறுத்திட மாலும் வளக்கிழி யைப்போய்
யறுத்திட லுன்கடன்: நான்மறை முடிவை
நிறுத்துரை செய்கட னென்கட னேர்வாய். 91

என்னலும் மேலவர் யாரும் நெருங்கித்
துன்னவை யின்னொரு சொல்லு மெழுத்தும்
இன்ன தெனத்தெளி யாவெளி யேன்போய்
மின்னுவ தெவ்வண மானமி லாமல். 92

---

89. வெல்பவர் அல்லவா கிழியை அறுக்க வேண்டும். யாது பகர்ந்து கிழி யறுப்பேன்? என்றார்.

90, 91. கொட்டு - மண்வெட்டி. கொட்டுகைபற்றி - மண் வெட்டியதால் உண்டான தழும்பைக் காட்டினால் கிழி அறுபடுமோ? ஒருவேளை உன் அருளால் அது அறுபட்டாலும், பாண்டியன் பொறுத்துக் கொள்வானோ, என்று கூறி ஆழ்வார் மறுத்தார். "அறுத்தல் உன் கடன்; மறைமுடிவை நிறுத்தல் என் கடன்" என்றான் பெருமான். நேர்வாய்-உடன்படுவாயாக.

92. "சொல்லும் எழுத்தும் உணராத யான் எப்படி அவையில் பிரகாசிப் பேன்?" என்று ஆழ்வார் மீண்டும் மறுத்தார்.

ஆதலி னேகுத னன்கல வென்ன
மாதவ னும்நகை செய்து மறித்தும்
ஓதுவ னென்வயி னுள்ளன வாகும்
வேத முனக்கரி தோதெளி விப்பேன் 93

என்னுரை கொண்டவ ணேகுதி யென்ன
அன்னவ னும்அமை வாகி யவன்றன்
பொன்னடி தன்முடி மீது புனைந்து
நன்னய மெய்த நவின்று துதித்தே. 94

ஏக விடைதரு கென்றவ னைத்தன்
ஆக முறத்தழி யன்போ டளித்தே
மேக நிறத்திரு மால்விரை விற்போய்
வாக மணித்திரு கோயிலின் வாழ்ந்தான். 95

ஆழ்வார் மதுரையடைதல்

விடைகொண் டுயர்விட் டுணுசித் தனிரு
புடையும் மடியார் கள்புகன் றுவரக்
குடைவெ ண்மதியிற் குலவச் சிவிகை
இடைவெங் கதிரென் றிடவே றினனே. 96

பூவின் மழைதே வர்பொழிந் திடமுன்
நாவின் மதிபட் டர்நலம் புகழ
வீவின் மிளிர்விண் டுவினுந் திவரும்
தேவின் மகிழ்வோ டுசிறந் தனனே. 97

---

93. மாதவனும், நகைத்து, என்பால் உள்ள வேதம் உனக்கு அரிதோ? என்றான்.

94. அமைவாகி-உடன்பட்டு. 95. ஏக விடைதா என்ற ஆழ்வாரைத் தழுவி அன்போடு கருணை செய்துவிட்டுத் தன் கோயிலை யடைந்தான் பெருமான்.

96. பெரியாழ்வார் மதுரைக்குச் சென்ற பாங்கு விவரிக்கப் படுகிறது. சிவிகை - பல்லாக்கு.

97. சிவிகையில் செல்லும் பெரியாழ்வார் பிரமனைப் போல் விளங்கினார் ''சிவிகையில் அன்னம் ஊரும் திசைமுகன் என்னச் சென்றான்'' (கம்ப நாடகம்). விண்டுவின் - திருமாலின். உந்திவரும் தேவு - பிரமன்.

கதுவிப் பொலிவாய்க் ககனத் துவரும்
விதுவைத் தொடுமா டம்விளங் கியசீர்
புதுவைப் பதிவிட் டுபுலன் கொடிசேர்
மதுரைத் திருமா நகர்கண் டனனால் 98

வேறு

முதிர்மறை வாதினின் முனைகு வோர்தமைச்
சதிர்பெற வெல்கநீ யொல்லை சார்கெனாக்
கதிர்மணி கொடியெனுங் கரங்க ணீட்டியே
மதுரைமா தெதிரின்வந் தழைத்தல் மானுமால். 99

அலைகட லென்னவந் தடைந்த வாதியர்
நிலைதளர்ந் திடநெடு நாணி நெஞ்சுறத்
தலைவளைத் தலின்முதிர் கதிர்கொள் சாலியுங்
குலைதளு மரம்பையும் குனிந்து காட்டுமால். 100

வாதியர் தளர்ந்திட வரசும் மற்றுள
நீதியர் களுந்தலை நிமிர்தல் போலவே
சோதிசெய் கழைகளுங் கமுகுந் துன்னிவான்
மீதினி லோங்கியே விளங்கிக் காட்டுமால். 101

---

98. ககனத்து வரும் விது - விண்ணில் உதிக்கின்ற சந்திரன். புலன் கொடி சேர் மதுரை - கலைமகள் வீற்றிருக்கும் மதுரை. புலன்கொடி என்றது - கலை மகளை. வெறும் கொடியைப் புலன் கொடி என்று உண்மைக் கவிஞர்கள் பகரார். ''நாவீற்றிருந்த புலமா மகள்'' என்பர் தேவர் (சிந்தாமணி).

99. 'பர சமய வாதிகளை வெல்ல வருக!' என்று மதுரை கொடிகளாகிய கரங்கள் நீட்டி அழைப்பது போன்றிருந்தது. மானும் - ஒக்கும். '' ஒல்லை வா என்றழைப்பன போன்ற'' - என்ற கவிச்சக்ரவர்த்தியின் குரல் '' ஒல்லை சார்க '' என எதிரொலிக்கின்றது (தற்குறிப்பேற்றம்).

100. மதுரை மாநகரின் புறத்தே நெற்பயிர் சாய்ந்திருப்பதும், வாழை, குழைதள்ளியிருப்பதும், சமயவாதிகள் பெரியாழ்வாரின்முன் நாணி நிற்றல் போல் உள்ளனவாம். நெஞ்சுறத் தலைவளைத்தலின் - மார்பில் படும்படி தலையை வளைப்பது போல.

101. அரசனும், நீதிமான்களும் உண்மை உணர்ந்தோம் என்று நிமிர்வது போல் கரும்பும், கமுகும் விண்ணை யளாவி நிற்குமாம். கழை - கரும்பு. கமுகு. பாக்குமரம்.

இன்னசீர் மதுரையுள் ளேகிக் கூடலின்
மன்னிய வழகர்தாள் வணங்கி வாழ்த்தியே
துன்னிய களிப்பொடு நிற்குந் தூயனை
யன்னமா லிருகணா லமைய நோக்கியே. 102

பாண்டிய னவையிடை படர்ந்து வாதியர்
ஈண்டியர் தமையெலா மினிதின் வென்றுநீ
மீண்டிடு கென்னவாய் விண்டு ரைத்தபின்
வேண்டிய வரங்களும் விருப்பி னல்கினான். 103

செல்கென விடையொடுஞ் செங்கண் ணாரணன்
நல்கிய வரங்களுங் கொண்டு நண்ணியே
பல்பல மணிமுடிப் பாண்டி யன்கொலு
மல்கிடு மண்டப மன்னு மெல்லையில். 104

மதியென வெண்குடை மலியக் காலையின்
கதிரென மணிமுடி கவின்கொண் டோங்கிட
விதிருடை வாடக மின்ன மாறனும்
அதிர்முர சொலியோடா தனத்தி ருந்தனன். 105

மற்றுள வேந்தரும் மந்திரி மார்களுங்
கொற்றவெஞ் சேனையுங் குடிக ளும்படை
வெற்றிசேர் தலைவரும் வேறு ளோர்களுஞ்
சுற்றும்வந் தவரவர் நெருங்கித் துன்னினார். 106

102, 103. ஆழ்வார் கூடல் அழகரை வணங்கியதும், அவர் அருள் செய்ததும் கூறப்பட்டுள்ளது. இப்பிரானை "நீடுநீர் வையை நெடுமால்" என்பர் இளங்கோ வடிகள். அடியார்க்கு நல்லார் நெடுமால் என்பதற்கு "அந்தரவானத் தெம்பெரு மான்" என்று உரை வகுத்தார். அரும்பத வுரையாசிரியர், "ஸ்ரீ இருந்த வள முடையார்" என்று நயமுறப் பேசினார்.

105. பாண்டியன் திருவோலக்கச் சிறப்பு பேசப்பட்டுள்ளது. 'வாடகர்' என்ற சொல்லின் பொருள் புலனாகவில்லை. உடைவாள் + தகர் என்று பிரித்து தகர் உடைவாள் என்று கூட்டி வலிந்து பொருள்செய்வது முறையன்று. (உணர்ந்தோர் உரைப்பின் மிக்க நன்றி.) வாடகர் என்ற பாடம் பிழைபட்ட தாகவும் இருக்கலாம். வாடக மின்ன என்று திருத்தி-'வாள்தக மின்ன' என்று கொள்வது பொருந்தும், உடைவாள் தகமின்ன என்றால் பொருள் சிறக்கும்.

மறையவர் குழாங்களும் செல்வ நம்பியும்
அறைபல சமயமுற் றடைந்து ளோர்களும்
முறைமுறை மண்டப முன்னி னார்கள்;வாள்
நிறைதரத் தேவரு நெருங்கி நண்ணினார். 107

அவ்வணங் கொலுவமைத் திருக்கு மாயிடைச்
செவ்விய மறைபயில் விட்ணு சித்தனும்
மொவ்விவந் தடைந்தமை யுணர்ந்திட் டானரோ
திவ்விய வுணர்வுடைச் செல்வ நம்பியே. 108

அரசன் உபசரிப்பு

உணர்ந்தவன் வரவினை யரசுக் கோதலும்
நிணங்கமழ் வேலினா னெடிது சென்றடி
வணங்கலு மாசிகள் வழங்கி னானரோ
மணங்கமழ் துவளமா லடிவ ணங்குவோன். 109

அரசனு மகிழ்வினோ டவனை நோக்கியே
விரசுமா மணிகளின் விளங்கு மாமுடிச்
சிரசின்மேல் தாமரைச் செங்கை கூப்பியே
பிரசமொத் தினியசொல் பெருகக் கூறுவான். 110

---

107. வாள்நிறைதர-ஒளி நிரம்ப, 108. திவ்ய உணர்வுடை நம்பி விட்ணுசித்தன் வந்ததை உணர்ந்தான். மறைபயில் விட்ணுசித்தன். வேதம் மூன்றையும் பயின்ற விஷ்ணுசித்தர். பயிலுதல்-இடையறாது ஓதுதல். "இருக்கு, எசு, சாம வேத நாண்மலர் கொண்டு உன்பாதம் நண்ணாநாள் அவை தத்துறுமாகில் அன்று எனக்கு அவை பட்டினிநாளே"-என்பது பெரியாழ்வாரின் அனுபூதி.

109. வரவினை-வருகையை. நிணம்கமழ் வேலினான் வணங்க மணங்கமழ் துளவமால் அடிவணங்குவோன் ஆசி வழங்கினான். நிணம்-தசை. மணம்-வாசனை. நெடிது சென்று-நீண்டதூரம் போய்.

110. மாமுடிச் சிரசின்மேல் செங்கை கூப்பி இன்சொல் பேசினான். பிரசம்-தேன்.

கொடியதீ வினையுநல் வினையுங் கொண்டவிச்
சடிலநா னெடுத்திமன் றன்கை பட்டுயிர்
நெடிதுநாள் வருந்திடல் நீக்கி வீடுறும்
யடியருள் புரிந்தெனைப் பரித்தல் வேண்டியோ. 111

அல்லது மாயையென் றமையும் வல்லிருள்
தொல்லுல குறாததைத் துரத்த லுன்னியோ
பல்லுயி ரினும்வளர் பரம சோதியிந்
நல்லுருக் கொண்டது நவில்க வென்னலும் 112

திருவுள மகிழ்ந்தருள் விட்ணு சித்தனோ
டிருவிசும் பினைப்பொர வெழுந்து மல்கிய
பொருவின்மண் டபமதிற் பொருந்தி வேந்தனுங்
குருமணி யாதனங் கொடுத்திட் டானரோ. 113

கொடுத்தவா தனமிசைக் குரைதி ரைக்கட
லுடுத்தமா னிலத்தின்மீ துற்று ளோர்தமி
லடுத்துவந் துரைந்திடு மறிவில் வாதியர்
நடுக்குற விரவியின் னண்ணி வைகினான். 114

111-112. பாண்டியன் கூற்று. கொடிய தீவினையும் நல்வினையும் நிறம் பிய உடல் எடுத்து எமன் கைப்பட்டு நான் வருந்துதல் நீக்கி என்னைப் பாது காக்கவோ? அல்லது மாயையாகிய இருளைப்போக்க நினைந்தோ? பரம சோதி யிந்த நல்லுருக்கொண்டது என்று மன்னன் புகழ்ந்தான். அகள மாய் யாரும் அறிவரிது அப்பொருள்-சகளமாய்வந்து,என்பது திருவுந்தியார். சடிலம்-உடல், எதுகை சடலத்தைச் சடிலம் ஆக்கிற்று, பரித்தல்-பாதுகாத்தல். வல்லிருள்-வனமையானள இருள்.

112. பல்லுயிரினு வளர் பரமசோதி என்றது திருமாலை. பரம்பொருளே குருவாக வரும் என்பது சைவ வைணவ மதங்களின் கொள்கை. ''பீதக ஆடைப் பிரம குருவாக வந்து'', என்று பெரியாழ்வார் திருவாய் மலர்ந்த ருளியுள்ளார்.

113. குருமணியாதனம்-ஒளிமிக்க மணிகள் பதித்த ஆசனம்.

114. குரைதிரைக்கடல்-ஒலிக்கின்ற அலைகளைப் பெற்றுள்ள கடல். வாதி யர்-மதவாதிகள். இரவியின்-சூரியனைப்போல.

இந்திரன் வாதம் செய்ய பிரஹஸ்பதியை அனுப்புதல்

வைகிய துணர்ந்திவ னறிவு மல்கிடச்
செய்தலி லரசன் வான்செல்வ னாகுவான்
எய்தியிங் கிந்தியழித் திடுதல் வேண்டுமென்
றையிருந் தச்மகத் தரசு மெண்ணியே. 115

தங்குலக் குருமுக நோக்கித் தன்னிரு
செங்கைமா முடிமிசைச் சேர்த்து நீயடைந்
தங்கதை யழித்திடென் றவனி யம்பவென்
பங்கென மானிடப் படிவந் தாங்கியே. 116

புவியின்வந் தவையிடைப் புகுதக் கண்டுவெண்
கவிகைநீ ழலிற்புவி புரக்கும் காவலன்
குவிகரத் தொடுமவ ணிருக்கக் கோதிலாத்
தவிசளித் தியாவனீ சாற்று கென்னலும். 117

யானொரு மறையவன் அறிதி யென்றுபின்
வானொரு வியசுரர் குருவ ழங்கிவான்
தேனொழு கியபுதுத் தெரியல் வேந்த!நீ
தானொரு பொற்கிழி தன்னைத் தூக்கியே. 118

வேதமே முதலிய விளங்கு நூல்களால்
வாதுசெய் தவர்களில் வல்ல மேலவர்
ஈதறுத் ததனைக்கொண் டேகு மின்எனத்
தூதரை விடுத்திட விவர்கள் துன்னினார். 119

---

115. இந்திரன் தன்குருவாகிய பிரஹஸ்பதியை வாதம் செய்ய அனுப்பினான் (வடிவழகியநம்பிதாசரும் பெரியாழ்வார் பிரபாவமும் இப்படியே பேசுகின்றன). ஐயிருந் தரச மகத்தரசு-நூறுயாகம் செய்த இந்திரன், இந்திரனை-வேந்தன் என்பர் தொல்காப்பியர். அதையுட்கொண்ட ஆசிரியர் இத்திரனை 'அரசு' என்றார்.

116. மானிடப் படிவம் தாங்கி-மனித வடிவத்தை மேற்கொண்டு.

117. குவி கரம்-கூப்பிய கை. சுரகுரு-தேவகுரு.

119, 120. "நீ பொற்கிழி கட்டியுள்ளாய். வேதம் முதலானவற்றைக் கற்றுத் துறை போகியவர்களே! இக்கிழியை அறுத்துச் செல்லுங்கள் எனத் தூதுவரை அனுப்பினாய். என்னை இந்த வேதியன் (விஷ்ணு சித்தரை) வென்றால் இவனைப் புகழ்க", என்றான் தேவகுரு.

துன்னினோர் தங்களிற் சுருதி நூல்களா
லென்னைவென் றனனெனி லிந்த வேதியன்
றன்னடி வணங்கினை சாற்று கென்னலும்
மன்னவை யடைந்துள மற்று ளோர்களும் 120

அவ்வுரைக் கொன்றியே யரச ருட்களித்
தொவ்விய திருமுக னோக்கி யோதுவார்
இவ்வயி னெம்முனி தொழவி ருந்துளோன்
செவ்விய கிழியையு மறுத்தல் செய்தபின். 121

இவனுடன் வாதுசெய் திடுவோம் யாமென
வவனையுல் லங்கன மவர்கள் கூறலும்
தவறிலாப் புரோகிதன் தன்னை நோக்கியிவ்
வவமதிக் கென்செய லாகு மென்றனன். 122

என்றவவ் வரசனை யினிதி நோக்குறா
வின்றிதை யறுப்பது மிவரை வாதினில்
வென்றிடு வதுமிந்த விட்ணு சித்தனே
யொன்றுநீ வருந்தலை யென்ன வோதினான். 123

வள்ளலும் புரோகிதன் வழங்கும் வாய்மையால்
உள்ளம துவப்புற உறைந்த காலையிற்
கள்ளவிழ் துளவமால் கழற்குத் தொண்டுறும்
தெள்ளிய னுடன்சுரர் குருவும் செப்புவான். 124

ஆழ்வாரும் பிரஹஸ்பதியும்

பரத்துவ மிதுவெனப் பகர்ந்த பின்புநீ
யுரத்துரு கிழியறென் றுரைப்ப வேதத்தின்
சிரத்துறும் பரம்பொருள் செய்ய வாழிசேர்
கரத்துநா ரணனெனக் கழற லோடுமே. 125

122, 123. அரசன் தேவ குருவின் மொழி கேட்டுத் திகைத்தான். செல்வ நம்பி, "விஷ்ணு சித்தரே வெல்வார்" என்று சமாதானம் கூறினார்.

124. வள்ளல்-பாண்டியன். தெள்ளியன்-பெரியாழ்வார். சுரகுரு-தேவகுரு.

125. பரத்துவ நிர்ணயம் செய் என்றான் சுரகுரு. வேத சிரத்து-உபநிடதத்தில் உறும்பொருள். ஆழிசேர் கரத்துறு நாரணன்-சக்கரத்தை ஏந்திய திருமால்.

நாரணன் பரமல நாலு மாமுகத்
தாரணன் பரமென வவனி யம்பலும்,
வாரண முறையிட வந்து காத்தருள்
காரண னடியனுங் கழறன் மேயினான். 126

நன்றுநீ மொழிந்தனை நான்மு கன்றலை
யன்றறுப் புண்டதை யறிந்திலாய் கொலோ?
என்றுபுத் தூரனு மியம்பக் கேட்டுளோன்
நன்றுமச் சுரர்குரு விதனைச் செப்புவான். 127

ஆகிலும் சிவன்பர மாகு மென்னவே
போகிமுன் விடுத்திடும் புனிதன் கூறலும்
நாகணைப் பள்ளியான் விடுப்ப நண்ணிய
யோகியு நகைத்திதை யோது வானரோ. 128

தானறுத் திடுந்தலை தன்கை மீதுற
லானதை யொழித்திட லாகா மையால்
வானமும், வையமுந் திரிந்து மாழ்கிடத்
தேனமர் துளவமால் தீர்த்த தோர்கிலாய். 129

---

126. நாலுமாமுகத்து ஆரணன்-பிரமன். பரம்-பரம்பொருள். வாரணம் முறையிட - கஜேந்திரன் 'ஆதிமூலமே!' என்று அழைக்க. கழறல் மேயினான் - சொல்லத் தொடங்கினான்.

127. பிரமன் சிரம் சிவபிரானால் அறுக்கப்பட்டது, ஆதலால் அவன் பரம் அன்று என ஆழ்வார் மறுத்தார். புத்தூரன்-பெரியாழ்வார்.

128. சுரகுரு, சிவனே 'பரம்' என்றான். போகி-இந்திரன். நாகணைப்பள்ளியான்-சேஷ சயனத்தில் யோக நித்திரை செய்பவன். பிரஹஸ்பதியை அனுப்பியவன் போகி. ஆழ்வாரை விடுத்தவன் யோகி. ஆழ்வாரும் யோகி. யோகியைப் போகியால் அனுப்பப்பட்டவன் வெல்வது முடியாது என்பது குறிப்பு. "நாகணைப் பள்ளி வெறுந் துயிலன்று", 'வெள்ளை வெள்ளத்தின் மீதொரு பாம்பை மெத்தையாக விரித்ததன் மேலே, கள்ளநித்திரை கொள்கின்ற மார்க்கம்" - என்பர். பெரியாழ்வார். யோக நித்திரையை அறிதுயில் என்பர் அனுபூதிச் செல்வர்கள்.

129. தான் என்றது சிவபிரானை. ஒழித்திட லாகாமையால் - போக்க முடியாத காரணத்தால். துளவமால்-தீர்த்தது-ஓர்கிலாய். "மழுவாளிக் கன்றளித்த ஐயத்தால் சிறிது ஐயம் தவிர்ந்தாரும் உளர்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள். (ஆரண்ய),

எனச்சொலப் பிரபதி யியைந்த காலத்தால்
அனத்தவன் றலைவிட்ட தந்தக் காலமே
மனத்துணர் பரமென மறுத்துச் சொல்லலும்
புனத்துழா யவன்விடும் புனிதன் கூறுவான். 130

காலமே பரமெனிற் கால மூன்றிற்கும்
மேலுமக் கடவுள்யா ரென்னக் கேட்கலும்
ஞானமீ திருளெலாம் ஒழித்து ஞானத்தின்
மேலுறு பொருளெலாம் விளக்க வெய்யவன் 131

எல்லியே பரம்பொரு ளென்ன வாங்கவன்
சொல்லிய புன்மொழி செவியிற் றுன்னலும்
வில்லிபுத் தூரனும் நகைப்ப வேந்திடை
யல்லியம் புயமுக மதனை நோக்குறா. 132

ஈங்கிவ னுரைத்தசொல் லென்னென் றோதலுந்
தீங்குற விறத்தலோர் காலை சேர்ந்துபின்
பாங்குறப் பிறத்தலோர் காலை பாற்கரன்
ஆங்கவன் பரமென லாகு மோவெனா. 133

தேர்ந்திடா ரிம்மொழி செப்ப லல்லதிங்
கார்ந்தநூ லுணர்வின ரறைந்தி டார்களென்
றோர்ந்தர சவையிடை யுரைத்தல் கேட்டுளஞ்
சோர்ந்துவே றுரைக்கிடந் தோன்றி டாமையால். 134

---

130. காலம்-எல்லாவற்றையும் செய்கிறது. ஆதலால் அதுவே பரம் என்றான் சுரகுரு. (பழைய காலத்தில் காலத்தையே பரம் என்று கூறிய மதம் ஒன்று இருந்தது. அதனுடைய எச்சமே வாசிட்டதில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது - வைராக்கிய பிரகரணம்).

131. காலத்துக்கு கடவுள் யார்? என்று பெரியாழ்வார் வினவினார். பிரஹஸ்பதி, காலத்திற்குத் தேவதை சூரியன் என்றான். சூரிய மதம் - சௌரம் என்று பேசப்பட்டது.

132. எல்லி - சூரியன். புன்மொழி - பொருளற்ற மொழிகள்.

133. இவன் என்றது சூரியனை. இறத்தல் ஓர்காலை; பிறத்தல் ஓர்காலை; ஆதலால் பாற்கரன் (சூரியன்) பரமோ? என்று ஆழ்வார் வினவினார்.

134. தேர்ந்திடார்-ஆராய்ச்சி செய்யும் திறமை யில்லாதவர். நூல் உணர்வினர்-சாத்திரங்கற்ற அறிஞர்கள்,

தேவகுரு தோற்றார்

ஊமரிற் சுரர்குரு வுற்றி ருந்தபின்
றாமரு வியபல சமயத் தோரெலாங்
காமர்தந் தம்பெருங் கடவு ளேபர
மாமென வவரவ ரறைத லோடுமே. 135

எவ்வவ ரென்னென விசைத்த போதெலாம்
மவ்வவர்க் கெதிர்மொழி யறைந்திட் டாங்கவ
ரொவ்வநுந் தெவம்பர மெனலொவ் வாதெனச்
செவ்விசேர் புதுவையான் செப்புங் காலையில். 136

செல்வநம்பியின் விண்ணப்பம்

என்னிவ ருடன்விளை யாட லோமறை
தன்னிடை வளர்பரஞ் சோதி தன்னைநீ
மின்னிட வெளியிடல் வேண்டு மென்றனன்
சென்னியங் கரங்கொடு செல்வ நம்பியே. 137

(வேறு)

அந்தசொற் கேளா வாமிகா னடுமீர்
வாளதாய் அருகபஞ் சினுக்கோர்
செந்தழ லாய்வை சேடியாட் டினுக்கோர்
சீறுவெம் புலியதாய் பவுத்த
தந்தமால் கரிக்கோ ரரிய தாய்ச்
சைவ சற்பத்துக் குவணமாய் மற்றும்
வந்தபல் சமய விருட்கிர வியதாய்
மலிந்திடும் புதுவைமா நகரோன். 138

---

136. மற்றைய சமயவாதியர் கூறியவற்றையெல்லாம் பெரியாழ்வார் காரணம் கூறி மறுத்தார். இம் மறுப்புக்கள் முற்றவும், இங்கு கோடிட்டுக் காட்டப்பட்டனவே யன்றி முறையாகப் பேசப்படவில்லை. இதன் விரிவை, உபய வேதாந்த முடிவை முறையே கற்றுத் துறைபோன கி. ஸ்ரீநிவாச ஐயங்கார் விவரித்துள்ள பெரியாழ்வார் பிரபாவத்தில் காணலாம். இந்நூல் பயின்றால் தான் ஸ்ரீவைஷ்ணவ மாண்பை உணர முடியும்.

137. விளையாடல் வேண்டா பரஞ்சோதியைக் காட்டித்தா என்றார் செல்வநம்பி. இதனால், தர்க்கம் செய்வது வேண்டாதது என்பதும், தியான பரராய்க் கடவுளைக் காண்பதே செய்யத்தக்கது என்பதும் புலப்படுகின்றன.

138. பெரியாழ்வார் சிறப்பு விளக்கப்படுகிறது. வாமி-சாத்தர் (சக்தியைப் பணிவோர்). கான்-காடு. ஈர்வாள்-அறுக்கும் வாள். சாத்தர் என்ற காட்டுக்கு

அவையுளோர் திருமுன் கடவுளர் பணிய
வருமறை முடியின்மீ தமர்ந்தும்
சுவையமு தருள்வெண் பாற்கடல் வடத்தின்
றுளிரின்மீ தமர்ந்துகண் வளரும்
நவையினா ரணனாஞ் சிற்பரம் பொருளே
நற்பரம் பொருளென நாட்டி
இவையெடுத் துரைத்தான் கேட்டுளோர் மகிழ்வோ
டிருசெவிக் கமுதெனப் பருக. 139

பொற்கிழியறுந்து வந்தது

அத்தரத் தவர்துந் துமிமுழக் குடன்வந்
தவர்மழை சலசலென் றுதிர்ப்பச்,
செந்தழன் முனிவோ ராசிக ளியம்பச்
செந்தமிழ்ப் புலவர்க டுதிப்ப
முந்துறும் பெரியாழ் வார்திரு வடிமுன்
மொழிந்திடும் பொற்கிழி யறுந்து
வந்துற வதனைத் திருக்கரத் தெடுத்து
மாறன்றன் றிருமுன்வைத் திடலும். 140

மாறனு மகிழ்வோ டெழுந்திரு கரத்தான்
மாமுடி மருவுறப் பொருத்தி
வீறுமா மறையின் றிருமுடி யதன்மேல்
வீற்றிடும் பொருளென வுரைத்த

வாள் போன்றவர். அருகபஞ்சு-அருகர் என்கின்ற பஞ்சு. வைசேடி-வைசேஷியர். பவுத்த மால்கரி - பவுத்தர்களாகிய யானை. அரி - சிங்கம். சற்பம் - பாம்பு. உவணம்-கருடன். சமய இருட்கு-மத இருளுக்கு. இரவியாய்-சூரியனாய்.

139. திருமாலின் பரத்துவம் நுட்பமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மறையின்முடி மீதமர்ந்தும்-வேத உச்சியில் வீற்றிருந்தும். வடத்துளிர் - ஆலிலையின் தளிர். கண்வளரும் - யோகநித்திரை செய்யும். சித்பரம் பொருள் - சித்துக்களுக்குத் தலைவன் (சித்-ஆத்மா). கண்வளர் கையே பரம்பொருளுக்கு அடையாளம். ''ஒரு வினையும் இல்லார்போல் உறங்குதியோ? உறங்காயால்'' என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (ஆரண்ய). செவிக்கமுது-செவியால் உண்ணப்படும் அமுதம். ''செவிநுகர் கனிகள்'' காண்க (கம்ப-நாடகம்).

140-141. பொற்கிழி தானே அறுந்து வந்தது. அதனைப் பெரியாழ்வார் கரத்தில் வாங்கிப் பாண்டியன் திருமுன் வைத்தார். பாண்டியன் பொற்கிழியை முடிமிசை ஏந்தினான். வீறுமாமறை - மற்றவற்றிற்கு இல்லாத சிறப்புடைய வேதம். 'இவன், நாரணன்' எனப் பாண்டியன் (பெரியாழ்வாரை) கருதினான், தேறி-தெளிந்து.

நாறுபூந் துளவ மாலையா பரண
நாரண னிவனென மனத்திற்
றேறியங் கவன்ற னிருபெருங் கமலத்
திருவடி பணிந்துநின் றனனால். 141

மற்புய வரசன் றமைநயந் தருளி
மற்றுள சமயவா தியர்கள்
அற்புத மடையுஞ் சிந்தைகொண் டுருகி
யவரவர் முறைமுறை யணுகிப்
பொற்புறு முதயக் கதிரென விளங்கும்
புதுவைமா நகர்மறை யவன்றன்
நற்பத மிரண்டிற் றமதுமா முடிகள்
நண்ணிடத் தொழுது நின்றனரால். 142

தேவகுரு மறைந்தான்

ஆயவா றெவரு மனையரும வன்பொன்
னடிகளுக் கடிகளா னதுகண்
டேயவிங் கிவனை யாதினும் வெலுதற்
கியைந்திடா தெனமனம் வெறுத்து
ஞாயிறெய் திடும்போ தெதிரிலா திருந்த
நள்ளிருள் தளர்ந்துளம் நாணி
மாயமா - யினபோன் மாயமாய் மறைந்தான்
வாசவன் விடுத்திரு மறையோன். 143

ஆழ்வார் திருவுலா

யாவரு மிவ்வா றடிதொழு மணியா
தனமிசை யிருந்தவாழ் வாரைக்
கோவமை செயலின் சிறப்பெலா மமையக்
குலகிரி நிகர்கசப் பிடர்மேல்

---

142. மற்றைய சமயவாதியரும் ஆழ்வாரை வணங்கினர். உதயக் கதிரவன் என விளங்கும் புதுவை மறையவன்-பெரியாழ்வார்.

143. பெரியாழ்வார் உதய சூரியன் போலிருந்தார். வாசவன் விடுத்திடும் மறையான் இருள்போல் மறைந்தான். அடிகளுக்கு அடிகளாவது கண்டு-திருவடிக்குத் தொண்டரானதைப் பார்த்து.

144, பாண்டியன் பெரியாழ்வாரை யானை மேல் ஏற்றி நகர்வலம் செய்வித்தான். கோ அமை செயலின் சிறப்பு - வெற்றி பெற்ற அரசர்களுக்குச் செய்ய வேண்டிய சிறப்புக்கள். கசப்பிடர் மேல்-யானையின் பிடரியில்.

றேவர்கற் பகப்பூச் செழுமழை பொழியத்
திருந்திட வேற்றி மந்திரிகள்
வாவுமான் றடந்தேர் மதகரி பரியாள்
மருங்குற நெருங்கிவந் திடவும்; 144

வருமுழு மதிபோல் வெண்குடை நிழற்ற
மகரகுண் டலஞ்செவி யிலங்க
விருபுற மதிலுஞ் சாமரை யிரட்ட
விரவியிற் பலகலன் விளங்கப்
பொருகட லெனமா முரசொலி கறங்கப்
பூரிகா களம்பல முழங்க
அருமறை யதுகொண் டிருடிக ளுடனே
யந்தணர் மங்கல முரைப்ப; 145

மூன்றுல கினரும் திருப்புகழ் புகழ
முறைமுறை யரசர்வந் திறைஞ்ச
ஆன்றநல் லறமும் துதிசெய மகிழ்வோ
டைம்புல னாதிதோத் தரிக்க
மான்றுடர் விழியார் நடித்திடப் பலர்கள்
மணிவிளக் காலம தெடுப்ப
ஏன்றவிம் முறையோ டரசன்வேண்ட
எழுந்தனன் பவனிவந் திடவே. 146

சகரர்தொட் டிடுமக் கருங்கட லடுத்த
தரணிமேல் நிகரில தாக
மகரதோ ரணங்களு யர்த்திப்பன் முறையால்
வளம்பெறத் திருத்தியும் மதுரை

---

145. நிழற்ற-நிழலைக் கொடுக்க. இரட்ட - வீச, பூரி, காகளம்-விருதுகள் (வாத்தியங்கள்). இருடிகள்-முனிவர்கள்.

146. ஆன்ற நல்லறம் - பழமையான வேதம். ஐம்புலனாதி-ஐந்து புலன்களுக்கும் உரிய தேவதைகள். மணிவிளக்கு ஆலம தெடுப்ப, எனப் பிரிக்க. இச்சிறப்புக்களை ஆழ்வார் ஏற்றுக் கொண்டதற்குக் காரணம் அரசன் வேண்டுதலே. செருக்கால் அன்று. ஆதலால், 'முறையோடு அரசன் வேண்டுதலால் எழுந்தனன் பவனி வந்திட' என்றார்.

நகரமுள் வலமாய் அரசவீ தியின்வாய்
நண்ணுறு கோலமஃ துணர்வான்
அகரமே முதலா மக்கரத் தெல்லாம்
அமருநா ரணனுமுள் ளுணர்ந்தான். 147

பெருமாள் விண்ணில் தோன்றினான்

இருடனை துரக்கு நவமணி பசும்பொன்
னிழைமுடி முடியின்மே லிலங்க
அருடரு கமலக் கண்முகத் திலங்க
வைம்படைக் கரங்கண் மீதசையச்
சுருடரு குழற்பூந் திருவினோ டுரத்திற்
றுலங்கொளி கவுத்துவம் துளங்கக்
கருடன்மீ தெழுந்தான் பொன்மலை மிசையோர்
கருமலை வருதலைக் கடுப்ப. 148

அம்புயத் துறையு மயன்கயி லையர்கோன்
அமரர்கோன் முறைதொழு தேத்தத்;
தும்புரு வுடனா ரதனியாழ் மிழற்றத்;
தூயமா முனிவர்வாழ்த் துரைப்ப
உம்பர்க ளியக்கர் கருடகந் தருவ
ருயர்பத்த நித்தமுத் தர்களும்
பம்பியெம் மருங்கும் நெருங்குற வாடல்
பாடல்க ளரம்பையர் பயில. 149

---

147. மகர தோரணம்-நான்கு கால்கள் நட்டுச் சதுரமாகக் கட்டப்படும் தோரணம் (நாட்டு-வழக்கு). அக்கரம்-எழுத்து. அமரும் நாரணன் - தங்கியுள்ள திருமால். "எழுத்துக்களுக்குள் அகரம் நான்" என்று கீதாசார்யன் கூறுவன்.

148. பெருமான் ஆழ்வாருக்குக் காட்சி தந்தார். இருள்தனை துரக்கும் நவமணி, துரக்கும் - ஓட்டுகின்ற. அருள் தரு - கமலக் கண். சுருள் தரு குழல் பூந்திரு - சுருண்ட குழலையுடைய திருமகள். கவுத்துவம்-திருமாலின் மார்பில் உள்ள மணி. பொன் மலை மிசை கருமலை போல் திருமால் வந்தான். கருடன் - சிவந்த நிறமுடையவன். திருமால் கரிய நிறமுடையவன். "செம்பொற் குன்றின் மேல் வருவ போல் - கருடன் மேல் வந்து தோன்றினான்" என்பர் கவிச் சக்ரவர்த்திகள் (பால காண்டம்).

149. அம்புயம் - தாமரை. அயன்-பிரமன். கயிலையர் கோன்-சிவபிரான். யாழ்மிழற்ற - யாழை வாசிக்க.

அந்தரத் தெழுந்து துந்துமிக் குழாங்க
ளதிரவை குந்தம்விட் டகலா
வந்தரு டிருநா ரணன்றிரு மேனி
வடிவமு நிறைமதி நிகருஞ்
சுந்தர வதன விலாசமுங் கருணைத்
துணைமலர்க் கண்களி னொளியும்
சிந்தையுள் ளுருகக் கண்களால் விட்டு
சித்தனுந் தெளிவுறக் கண்டான். 150

திருப்பல்லாண்டு

விண்ணவர் மகுட கோடிகள் இறைஞ்ச
விளங்குபொற் கலுழன்றன் புயமேல்
நண்ணுநா ரணன்றன் றிருவுரு வொளிதன்
னலமுரு முளத்துணர்ந் திவரை
மண்ணவ ரெவரு மிருகணு முளமு
மகிழ்வுற நோக்கிடிற் கதுவுங்
கண்ணிறை யெனப்பல் லாண்டெனும்
பதிகக் கவிதையால் காப்பணிந்தனனால். 151

முன்னமோர் மடுவிற் கராவின்வாய்ப் படலான்
மூலமென் றழைத்திடுங் கரிமுன்
மன்னுமச் செயல்போ லிந்நகர்க் கோலம்
மருவுற வீங்கெழுந் தருளும்
நின்னைமா துடன்கண் களிப்புறக் காணல்
நிலையிலா வுருவுகொண் டிடும்யான்
என்னமா தவம்செய் தனனெனப் பல்கா
லேத்தினன் தொழுதனன் மகிழ்ந்தான். 152

---

150. ஆழ்வார் திருமாலின் வடிவத்தைக் கண்டார். இப்பாடலில் நாரணனின் அழகு வருணிக்கப்படுகின்றது. வடிவமும், வதன விலாசமும், கண்களின் ஒளியும், சிந்தை உருக, விஷ்ணு சித்தனும் கண்டான் என இணைக்கவும்.

151. பெருமான் திருமேனியைக் கொடியவர்களும் பார்க்கின்றனரே, இதனால் கண்ணெச்சில் பட்டுவிடுமே என்று ஆழ்வார் பல்லாண்டு பாடினார். பொங்கும் பரிவாலே வில்லிப்புத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான், பெரியாழ்வார் என்னும் பெயர் '' - என்பர் பெரிய ஜீயர் (உபதேச ரத்தின மாலை).

152. பெரியாழ்வார், உன்னைக்காணத் திருமாலே! யான் என்ன மாதவம் செய்தேன் என்றார். பெரியவர்கள் இப்படித்தான் பேசுவார்கள். ''என்ன மாதவம் செய்தனை நெஞ்சமே, மன்னு சோதி நம்பால் வந்து வைகவே'' என்பர் திருநாவுக்கரசர். ''என்ன மாதவம் செய்ததிச் சிறுகுடில்'' என்பர் விதுராழ்வார்.

இத்தகை யினனாய் மீண்டுமா மாலை
யிசைக்கவென் றிதையத்துள் நினையா
வத்தகை யுணந்தந் நாரணன் மகிழ்வா
யவன்றலை மீதுதன் பதங்கண்
டொத்தகைத் தலங்கொண் டஃதிவன் வருடி
யுணர்ந்தவா றின்னதென் றுணர்ந்திட்
டெத்தகை யெனக்கொண் டியம்பலா மெனக்கா
யிரமிலை நாவெடுத் தியம்ப. 153

சமயவாதியர் புகழ்ந்தனர்

சைவரே முதலாஞ் சமயவா தியரும்
தத்தமச் சமயதே வர்களைக்
கைவிடு பவராய்க் கருத்துளே திருவின்
கணவனே பரமெனத் தெளிந்தம்
மைவரை யனையான் திருவடி யதன்கீழ்
வணங்கினர்; நடித்தனர்; குதித்தார்;
செய்வகை யுணரார்; களிப்பெனும் நறவும்
தெவிட்டவுண் டிடுதலாற் றியங்கி. 154

மாறனு செல்வ நம்பியே முதலா
வளைகடற் புவிமருங் கினருந்
தேறுமிப் பரம புருடார்த்த மதனாற்
றேவரு முணர்கிலாப் பரமாம்
நாறுபூந் துளவ நாரண னுருவ
நங்கணாற் கண்டனம்; எனக்கொண்
டுறுபே ருவகைச் சிறந்தநல் லுணர்வோ
டுற்றெதிர் வணங்கி னரன்றே. 155

---

153. திருமால் தன்னுடைய திருவடியை ஆழ்வார் தலையில் வைத்தான். அப்போது ஆழ்வார் அடைந்த நிலையை யியம்ப எனக்கு ஆயிரம் நாக்கள் இல்லையே என்கிறார் ஆசிரியர். "பருப்பதத்துக் கொடி பொறித்த பாண்டியன் குலபதிபோல் திருப்பொலிந்த சேவடியென் சென்னிமிசை வைத்தாய்" என்று பெரியாழ்வாரே கூறியுள்ளார். பெருமான் தன்பதத்தை வைத்த போது ஆழ்வார் தம்முடைய கரங்களால் வருடினார். திருமகளார் வருடும் பதத்தை வருடும்பேறு பெரியாழ்வாருக்குக் கிட்டிற்று. "நினைந்துருகும்" என்று தொடங்கும் தேவாரம் காண்க (திருநாவுக்கரசர்).

154. மற்றைய சமயத்தவரும் திருமாலை வணங்கினர் மைவரையனையான்-கருத்த மலை போன்ற திருமால். களிப்பு-மகிழ்ச்சி.

155. இவராலன்றோ நாம் திருமாலைக் கண்டோம் என்று பாண்டியன் செல்வநம்பி முதலானவர்கள் ஆழ்வாரைப் பணிந்தனர்.

வேண்டுதன் வேண்டு மவ்விதம் அருளும்
வேதமீ துறைந்திடுந் திருமால்
மீண்டுமவ் வாழ்வார் திருமுகம் நோக்கி
விளம்புவன் ; இன்றுதொட் டுனக்கு
மாண்டகும் பட்டர் பிரானெனு மொருபேர்
வழங்கினம் இன்னமும் சிலநாள்
பூண்டுறு நமது கயிங்கிரிய மதனைப்
பொருந்துறும் படிபுரிந் திருந்து. 156

புவியிலஞ் ஞான மடைந்துளோர் ஞானம்
பொருந்துறச் செந்தமி ழதனாற்
கவிபல வியம்பிப் பின்புவை குந்தங்
கலந்துநீ யணைகென வவன்றன்
செவியுறப் புகன்று கருணைகூர்ந் தருளித்
தேவர்சென் றடிதொழுந் திருமால்
குவிமுலைத் துவர்வாய்த் திருவொடு மடியார்
குழாத்தொடும் தன்பதி யடைந்தான். 157

ஆழ்வார் திருவோலக்கம்
(வேறு)

நாரண னகன்றபின் னலங்கொண் மாநகர்
தோரண வீதிகள் பலவும் சுற்றிவந்
தாரண வொலியுட னானை விட்டிழிந்
தேரணி மண்டப மினிதி னெய்தினான். 158

---

156. திருமால், ஆழ்வாருக்குப் பட்டர்பிரான் என்று பெயர் புனைந்தான். திருமாலை, வேண்டுதல் வேண்டும் அவ்விதம் அருளும் திருமால் என்றார். ''வேண்டுவார் வேண்டுவன ஈவான் கண்டாய்'' என்பர் அப்பரடிகள். ''வேண்டத் தக்க தறிவோய் நீ வேண்ட முழுதும் தருவோய் நீ'' என்பர் மணிவாசகர்.

157. 'பாசுரம் பாடிப் பின் பரம பதத்துக்கு வருக' என்று பெருமான் பகர்ந்து மறைந்தான். துவர்வாய்த்திரு - சிவந்த வாயையுடைய திருமகள். துவர்த்த செவ்வாயினார், என்ற தொடரை நினைவு கூர்க. குழாம் - கூட்டம்.

158. ஏரணி மண்டபம்-அலங்கரிக்கப்பட்ட மண்டபம்.

முத்தவெண் குடைமுழு மதியின் மீதுறக்
கத்தைவெண் கவரிகா லசையக் கைகொடு
புத்தரே முதலினர் வணங்கிப் போற்றிடச்
சித்திர வாதனஞ் சேர்ந்து வைகினான். 159

சீவலதேவன் பரம வைஷ்ணவனானான்

சீவல தேவனென் றுரைக்கும் செவ்விசேர்
காவலற் காழிசங் கக்கு றிப்பொறித்
தேவல்செய் தொண்டுகொண் டினிய வொண்பொரு
ளாவலோ டவனருள் யாவும் கைக்கொளா. 160

கூடலி னழகர்தம் கொடிய பாம்பின்மேல்
ஆடிய பதம்பணிந் தவண்விட் டேகியே
நீடிய நெறியெலாங் கடந்து நீள்கொடி
மாடமார் புதுவையின் மன்னி னானரோ. 161

வடபெருங் கோயிலின் மருவி மாதவன்
அடிமலர் முடியுற வணிந்து மன்னருட்
படியவ ணடைந்துள பலவு மீதெனா
முடியவுஞ் செவியுற மொழிந்து மீண்டனன். 162

---

159. பட்டர்பிரானின் திருவோலக்கச் சிறப்பு. தோற்ற வேந்தர்கள் பணிய வென்றவர் வீற்றிருப்பது மரபு. தோற்ற புத்தர் முதலானவர்கள் வணங்க வீற்றிருந்தார் ஆழ்வார்.

161-162. சீவல தேவனை ஆட்கொண்டு அவன் தோள்களில் சங்கு சக்கரம் பொறித்துப் பின் அழகரை வணங்கிவிட்டுப் புதுவை அடைந்தார் ஆழ்வார். இப்பாண்டியன் சாசனத்தில் "பராந்தகன் பரம வைஷ்ணவன் தானாகி"—என்று குறிப்பிடப்படுகிறான். இச்சாசனம் ஸ்ரீவரமங்கலத்தில் உள்ளது. தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ்திருச் சக்கரத்தின் - கோயிற் பொறியாலே", என்பது திருப்பல்லாண்டு.

161. "கொடிய பாம்பின்மேல் ஆடியபதம்" என்று கூடலழகர் குறிப்பிடப் பட்டுள்ளார். ஆண்டவன் பாம்பை அடக்கினான். அடியவர் பாம்பு போன்ற வரை அடக்கினார்.

162. ஆழ்வார் வடபெருங் கோவிலையடைந்து நிகழ்ந்தவற்றைக் கூறினார்.

தன்பெருங் கோயிலைச் சார்ந்து வைகியே
முன்புபல் லாண்டெனு மொழிந்த தாதியாய்
அன்பொடுஞ் சென்னியோங் கந்த மாகவே
இன்புறு மிசையினின் றமிழி யம்பினான். 163

நான்குநூ றெழுபதின் மூன்று நன்கமைந்
தான்நவத் திருமொழி யதனு ளாழிகைத்
தேன்கமழ் துளவமால் திருவு ருக்கொடு
தோன்றுமூ ரிருபதின் மூன்று சொன்னதே. 164

வேறு

அரங்கம் வெள்ளறை குறுங்குடி குடந்தை வதரிகாச்
சிரமம் வேங்கடங் கோட்டியூர் சீர்கங்கைக் கரையின்
மருவு கண்டஞ்சோ லைமலை சாளக்கி ராமம்
பொருவி லாதசீர் பொருந்துபேர் திருக்கண்ண புரமே. 165

திருவை குந்தமோ டாயர்தம் பாடிசீர் வடம
துரைய யோத்திகோ வர்த்தனம் வில்லிபுத் தூரது
வரையொ டுஞ்சித்ர கூடமு மதுரையிற் கூடல்
புருட வுத்தமம் பாற்கட லெனும்பெயர் பொருந்தும். 166

முதும் றைப்பொரு ளருஞ்சுவை முகந்துகொண்டு ரைக்கும்
அதுத னைத்தெரிந் தறிந்துணர்ந் தோதியம் புவியோர்
கதுவி டும்பெரு மாயையா மிருளினைக் கடிந்தே
மதுபொ ருந்திடும் துளவமால் பதத்தின்மன் னினரால். 167

163-164. ஆழ்வார் பிரபந்தம் பாடினார். பல்லாண்டு முதல் சென்னியோங்கு ஈறாக நானூற்றெழுபத்து மூன்று பாசுரங்கள் பாடினார்.

165-166. பெரியாழ்வார் மங்களாசாசனம் செய்த திருப்பதிகள் பதின்மூன்று. அவற்றின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வில்லிபுத்தூர் - துவரை. துவரை-துவாரகை.

167. பெரியாழ்வாரின் பாசுரங்களைப் பயின்று பலர் மாயையாம் இருளைக் கடிந்து துளவ மால் பதம் அடைந்தனர்.

இனைய பாடல்க ளிசைத்தரு ளெம்பட்டர் பெருமான்
அனைய மாநகர் தனிலிருந் தவணுறை திருமால்
புனையு மாலைகட் டொழில்புரி தவனடி போற்றி
நினையு நெஞ்சக மகிழ்வுட னெடிதுநா ளிருந்தான். 168

இன்ன காதையை யெழுதுவோர் களுமிதன் பொருளைப்
பன்னு வோர்களும் பன்னிடும் பொருள்களைப் பரிவாய்
கன்ன முடுறக் கேட்பவர் களுங்கடற் புவிமேல்
மன்னு நாளிருந் துயர்பத மருவிவாழ் குவரால். 169

திருமங்கைமன்னன் வரலாறு புகல்வோம்

அங்கண் மாநிலப் பரப்பினில் புதுவைவந் தருளும்
நங்கள் சீர்ப்பெரி யார்செய லினைநவின் றனமால்
திங்கள் சூடிதன் குடியரிற் குறையலூர் செனித்த
மங்கை யார்புரிந் தருள்செயல் வகுத்தினி துரைப்பாம். 170

பெரியாழ்வார் திருவவதார அத்தியாயம் முற்றும்.

---

168. மாலை கட்டு + தொழில் = மாலைகட்டொழில் புதுப்பிரயோகம்.

170, திங்கள்சூடி - சிவபிரான். திருமங்கையாழ்வார் பிறப்பால் சைவர் என்று ஆசிரியர் கருதுகிறார்; அகச்சான்று வேறுவிதமாக உள்ளது. திருமங்கை மன்னன் பரம்பரை வைணவமே. திருநறையூர்ப் பதிகத்தில் "எம்தாதை தாதை தாதை அப்பால் எழுவர் பழ அடிமை வந்தார். என் நெஞ்சினுள்ளே வந்தாயைப் போகலொட்டேன்" என்று கூறியதை ஆய்க. "எந்தை தந்தை தந்தை தம் மூத் தப்பன் ஏழ்படிகால் தொடங்கி, வந்து வழிவழி யாட்செய்கின்றோம்" - என்ற பெரியாழ்வாரைப் போன்றவரே திருமங்கை மன்னனும்.

திருமங்கையாழ்வார் திருவவதார அத்தியாயம்

பேதைநெஞ்சே! யின்றைப் பெருமை யறிந்திலையே!
யேது பெருமையின்றைக் கென்னெனின்- வோதுகின்றேன்
வாய்த்தபுகழ் மங்கையர்கோன் மாநிலத்தில் வந்துதித்த
கார்த்திகையில் கார்த்திகைநாள் காண்.

(உபதேச ரத்தினமாலை, பக்கம்; 8)

அகம்படியர் குலம்

நிறையு மாமதி முகத்திய ரிளநகை நிலவான்
நறைகொ ளாம்பலின் நாண்மலர் நனைமுருக் கவிழும்
நிறையு நீர்மலித் தடங்களும் வயல்களும் நிரம்பும்
குறைய லூரதன் பெருமையைக் கூறுத லரிதால். 1

அந்த மாநக ரந்தனிற் சிவனடி யவரில்
வந்து வாழகம் படியர்தங் குடிவளம் பெறவே
செந்தி ருப்பதி யானநா ரணன்திரு வடியைச்
சிந்தை கொண்டுல கோர்தொழச் செயும்பர காலன். 2

"வெண்பா. பேதை நெஞ்சே!-அறிவற்ற மனமே. வாய்த்த புகழ் - பொருத்திய புகழ். வள்ளுவர், "பொருள்சேர் புகழ்" என்பார். கார்த்திகை நாள்-கார்த்திகை நட்சத்திரம். "திங்களும் நாளும் விழவறாதா தென் திருப்பேரை" என்பர் வகுளாபரணர் (திருவாய் மொழி).

1. குறையலூரின் சிறப்பு. மதிமுகத்தியர்-சந்திரனைப் போன்ற முகமுடைய பெண்கள். நகை நிலவான்-புன்னகையிலிருந்து புறப்படுகிற நிலா வெளிச்சத்தால் ஆம்பல் முருக்கவிழும்-ஆம்பல் மொட்டுக்கள் மலரும். நனை-மொட்டு. மாநனை தொழுதி மகிழ் குயில் ஆலும்-என்பது சான்றோர் வாக்கு (நற்றிணை).

2, 3, 4, 5, 6, குளகம். அகம்படியர் குலத்தில், நல்லறிவு அணுகிடவும், மாயை புவியை விட்டு ஓடவும், கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சதிரத்தில் ஒன்பது கோள்களும் உச்சத்தில் விளங்க, ஞானத்தின் கொழுந்து எழுந்தது போல் நாரணன் பெருமையை உணராதவர்களைப் பிளக்கும் கோடாரிபோல், பரகாலர் தோன்றினார். பரகாலர்-திருமங்கையாழ்வார்.

ஆழ்வார் அவதாரம்

ஆர்த்தெ ழுந்துமெய்ஞ் ஞானநல் லறிவணு கிடவும்
வேர்த்து மாயையம் புவிதனை விட்டகன் றிடவும்
தீர்த்த னாகிய நாரணன் றிருவரு ளதனாற்
கார்த்தி கைத்திரு மதியினிற் கார்த்திகை நாளின். 3

ஒன்ப தாகியகோட்களு முச்சனன் குறைந்திட்
டன்ப ராகிநற் பலன்றர வமையுமோ ரையினின்
முன்ப கன்றமெய்ஞ் ஞானத்தின் முளைத்திடுங் கொழுந்தோர்
தென்ப டும்புவி யிடைச்சிறந் தெழுந்தது போலும். 4

ஆர ணன்முத லண்டங்கள் பலவுமற் றவையும்
நார ணன்றிரு வுந்தியிற் னோன்றுதன் மகிமைக்
கார ணந்தெரி யாமதக் கசடரைப் பிளக்கும்
ஏர ணிந்தகோ டாலிவந் தெழுந்தது போலும். 5

தோன்றி னானவண் தோன்றிய தோன்றலை நோக்கி
ஈன்று ளோனவற் கியற்றுவ யாவையு மினிதின்
ஆன்ற கேள்வியர் விதித்தநூன் முறையது வாகச்
சான்று ளோரெலா மகிழ்வுற வழங்கினான் தானம். 6

அந்த மாநக ரந்தனி லணுகுவர் பலருஞ்
சிந்தை யோடிரு கண்களும் மகிழ்சிறந் தோங்கச்
சந்திரன்கலை நாடொறும் வளர்வபோற் றழைத்து
மைந்த னுந்தினஞ் சிறப்பொடு வளருமன் னாளில். 7

---

3. வேர்த்து - வியர்த்து. அச்சம் உற்றவர் வேர்ப்பது இயற்கை. ஆழ்வார் பிறந்து மாயையின் உடம்பு வேர்த்ததாம். தீர்த்தன்-தூயவன். தீர்த்தன் உலக ளந்த சேவடி,'- என்பர் மகிழ்மாறர்-(திருவாய்மொழி),

4. கோள்களும் நன்கு உறைந்திட்டு அன்பராகி நல்பலன் தர, என்று பிரிக் கவும். ஓரை-ராசி. மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்-துறந்த ஒழுக்கம் கிழவோர்க்கில்லை'' என்பர் தொல்காப்பியர் (பொருள்). நச்சர் ஓரை என்பதற்கு 'ராசி' என்று உரை வகுத்தார்.

5. ஆரணன் - பிரமன். ஏரணிந்த கோடாலி - எழுச்சி மிக்க கோடாலி. கோடு அரி - கோடரி (கொம்பை வெட்டுவது) நாட்டு வழக்கில் கோடாலி என்று வந்து விட்டது.

6. குழந்தைகளுக்குச் செய்ய வேண்டிய சடங்குகள் செய்யப்பட்டன. ஆன்ற கேள்வியர் - பழமையான வேதங்களைப் பயின்றவர். கேள்வி - வேதம் சுருதி என்பதன் மொழிபெயர்ப்பு.

7. ஆழ்வார், சந்திரன் கலையால் வளர்வதுபோல் வளர்ந்தார். அந்த மாநகர் அடைவோர்கள் ஆழ்வாரின் தோற்றங் கண்டு மகிழ்ந்தனர்,

ஞால மதினிற் காமகை வலமென நவிலுஞ்
சீல மில்லவச் சமயமா யும்படி திருத்தும்
பால னாம்பர காலனுக் கொருபெயர் பரிவாய்
நீல னாமென நவின்றன னீன்றவ னென்போன். 8

வேத நான்கினு முறுநல்ல தாகமே வமுதைத்
தீதில் செந்தமி ழாற் றிரு மொழியெனத் திருத்திக்
கோதி லாதவர் செவியுறக் கொடுப்பவர்க் கீன்ற
மாத ருந்திடு மன்னமு மூட்டினண் மகிழ்வாய். 9

மாயையின் வன்மை

துள்ளி யம்மனத் தெழுதரு மாயையின் றொடர்பால்
நள்ளி ருட்களை பவனுக்குச் சவளநன் கிழைத்தார்
வள்ளி யோர்க்குமெய்ஞ் ஞானத்தை வகுத்துறை வள்ளல்
பள்ளி யின்வட மொழியொடுந் தென்மொழி பயின்றான். 10

அனைய தன்மையி னாயறு பத்துநான் கெனவே
நினையு றுங்கலைக் கியானங் கணிலையெலா முணர்ந்து
வினையி லாப்பரஞ் சோதியி னிலைவெளிப் படுத்தக்
கனைக டற்புவி மீதுவந் தெழுந்தகண் மணியை. 11

---

8. பரகாலருக்கு-நீலன் என்று பெயர் வைக்கப்பட்டது. காம கைவலம் என நவிலும் சீலமில் அவச் சமயம் எனப் பிரிக்க. காமமே மோட்சம் என்று கருதும் மதம். கைவலம்-மோட்சம். வாமமார்க்கம் "வாழவே வல்லை வாமி வலக்கை தா" என்று உலோகாயதராலும் பாராட்டும் பெறும் படியின்பம் துய்ப்பவர். ஆதலின் அவரது சமயத்தை அவச்சமயம் என்கிறார். இராமகிருஷ்ணர் வாம மார்க்கத்தை புறக்கடைவழி என்பார். (கோணலான வழி என்பது பொருள்).

9. வேதக் கருத்தைத் திருமொழியாக்கிச் செவியமுதாக வழங்குபவர்க்குத் தாய் அன்னம் ஊட்டினாள்.

10. ஆழ்வார் வடமொழியும் தென்மொழியும் பயின்றமை பேசப்படுகின்றது. "மண்ணும் வடநெறியே வேண்டினோம்" என்ற பெரிய திருமொழித் தொடர் உணர்ந்த ஆசிரியர் "திருமங்கை மன்னன் வடமொழியும் பயின்றார்" என்றார். "சந்தோகன், பொழியன், ஐந்தழல் ஓம்பு தைத்திரியன், சாமவேதி என்ற பெரிய திருமொழித்தொடர் இவ்வாழ்வாரின் வடமொழிப் புலமையை விளக்கும். விரிப்பின் பெருகும். "தென்சொல் கடந்தான் வடசொற் கடலுக்கு எல்லை தேர்வான்" என்ற கவிச்சக்ரவர்த்தியாரின் மொழிக்கும் பொருத்தமானவர், திருமங்கையாழ்வாரே,

11-12. ஆம் பாடல்களால்-திருமால் மாயைக்குத் திருமங்கையாழ்வார் மயங்கச் செய்தார் என்கிறார். அறுபத்து நான்கு கலைகளும் கற்று, கடவுள் நிலையை வெளிப்படுத்த வந்த கண்மணியாகிய ஆழ்வார் என்று நன்கு பாராட்டு கின்றார். இப்பாடல் நின்று நிதானித்துப் பார்த்தால்தான் "மாயையின் வலிமை புலப்படும்".

மயக்கி யேவருந் திருவிளை யாட்டினை மதிப்பான்
வியக்கு நெஞ்சொடுந் திருமகட் கொழுனனும் விரும்பி
நயக்கு மாயையை விடுத்தலு நண்ணுமங் கதனான்
முயக்கு நெஞ்சின னாயினன் முழுமதி யுள்ளன். 12

ஏன்ற நீர்மிசை யமைவுறுஞ் சைவல மதுபோன்
மூன்று லோகமு முந்தியின் முறைமுறை வழுவா
தீன்று சார்ந்தரு ளிறைவனை யிருத்துநல் லறிவு
தோன்று நெஞ்சினை மறைத்தது மாயையுந் துடர்ந்து. 13

வெங்க ணைக்கொலை வாள்கதை வேல்முத லியவாந்
தங்கு லத்தொழிற் பரிசையு முணர்ந்தனன் றகவாய்
எங்கும் யாரினு மித்தொழிற் பயிற்சிய ரெவரும்
அங்கி வந்தவ னடிகளுக் கபயமென் றடைய. 14

மாயை யானது மலிந்துமூண் டிடவுள மயங்கி
நேய மோடதை நீக்குவான் நினைந்துநீக் குதலுந்
தோய மேற்றுடர் சைவல மலம்பினும் தொடர்ந்து
மேய தாமென ஈண்டவன் றன்னைமே விடுமால். 15

பந்தன்மீதுறப் படர்ந்திடும் பசியமென் கொடியை
வந்து சூறைமா ருதம்விழுத் திடுகின்ற வகைபோல்
சிந்தை மீதுறக் கொழுந்துவிட் டெழுந்திடு மறிவை
முந்து மீதுறுங் காமக்கால் முட்டிவீழ்த் திடுமால். 16

---

13. தண்ணீரைப் பாசி மறைப்பதுபோல் மாயை ஆழ்வாரின் (அறிவு தோன்றுதற்கிடமான) நெஞ்சையே மறைத்தது. அறிவுக்கு விளக்கம்-நோக்குக. இறைவனை வைக்க வேண்டிய அறிவு. மூன்று லோகமும் உந்தியில் வழங்கும் இறைவனை வைக்கவேண்டிய அறிவு தோன்றுவதற்கு நிலைக்களனான நெஞ்சம். சைவலம்-பாசி.

14-15. மாயையால் போர்ப் பயிற்சி பெற்றுப் பகைவரும் வணங்க வாழ்ந்தார். ஆழ்வார் அம்மாயையை விலக்கக் கருதுகிறார். ஆனால் அம்மாயை விடவில்லை. பலமுறை கழுவினும் தண்ணீரை விட்டு நீங்காத சைவலம் போல் மாயை ஆழ்வாரை விடவில்லை.

16. கொடியைக் காற்று வீழ்த்துவதுபோல் காமமாகிய காற்று ஆழ்வாரின் அறிவை வீழ்த்திற்று. சூறை மாருதம்-சூறாவளி, சுழல்காற்று.

அரசர் மாமணி முடிகளை யறுத்திடுங் கூர்வாள்
நிரவு பஞ்சணை மிசையுறின் மழுங்குமந் நெறிபோல்
விரவு நாரணன் பதத்துற நிரப்பு மெய்ஞ்ஞானம்
பரவு மங்கையர் விருப்பினிற் படமழுங் கியதால். 17

இன்ப ஞானவீ டறிந்துயர் வேதமென் றியம்பும்
அன்பு றுந்திரு மடலெனு மாலைசெய் பவனுந்
துன்பு றுந்திரைக் கடலெனுஞ் சிற்றின்பத் துறையின்
றன்பெ ருங்கலை நூலெலா முணர்ந்தனன் றகவாய். 18

மலையி னும்பல கடத்தினு மற்றுள நிலத்தின்
றலைதொ றும்பெயு நீரெலாம் ததிதனிற் செலல்போல்
நிலையு ஞானமும் கல்வியும் வேறுள நெறியும்
விலைம டந்தையர் மலையெனு முலைவிழுங் கியதால். 19

இனய னாய்ப்பதி னாறெனும் வயதுமெய் தியபின்
புனைம லர்க்குழன் மடந்தையர் புந்தியுள் ளவனை
நினைவ ரைங்கணைக் கிழவனாமென நெடிதவனும்
அனையர் தங்களை யிரதிய ராய்நினை குவனால். 20

---

17. அரசர்களின் முடிகளை அறுக்கும் வாள் பஞ்சணையில் கிடந்தால் மழுங்கும். அதுபோல் திருமங்கை மன்னனின் மெய்ஞ்ஞானம் மங்கையர் காதலால் மழுங்கியது.

18. மடல்புனையும் ஆழ்வாரைக் காமக்கடல் கவர்ந்தது என்கிறார். திருமடலின் சிறப்பு நன்கு விளக்கப்படுகிறது. வேதம் என்று இயம்பும் அன்புறும் திருமடல், சின்றின்பத் துறையிலுள்ள நூல்களைத் தகவாய்க் கற்றார் ஆழ்வார். ''வாடினேன் வாடி'' என்ற பாசுரத்தை அகச்சான்றாகக் கொண்டு இப்பாடல்கள் விரிகின்றன.

19 மலையிலும், கடத்தினும் (காட்டிலும்) மற்றுள நிலத்திலும் விழும் நீரெலாம் கடலையடைவது போல் ஆழ்வாரின் ஞானத்தையும் கல்வியையும், மற்றுமுள்ள மார்க்கங்களையும் விலை மடந்தையரின் நகில்கள் விழுங்கி விட்டனவாம். உததி என்ற சொல் தலை குறைந்து 'ததி' யாயிற்று. உததி - கடல், புதுப்பிரயோகம்.

20. மடந்தையர் திருமங்கை மன்னனை ஐங்கணைக் கிழவன் என்றனர். இவரும் அவர்களை 'ரதி' என்று கருதினான். ஐங்கணைக் கிழவன் - ஐந்து மலர்களை அம்பாகக் கொண்ட மன்மதன்.

இவ்வி தத்தனாய்ப் பரத்தைய ரின்பசா கரத்தின்
ஒவ்வி யுற்றலைந் தவரித ழமுதமுண் டுவப்பால்
யெவ்வி தத்தினுந் தணிகிலா திழைந்தனன் இழையும்
அவ்வி தத்தினை யுரைத்திட முடியொணா தென்னால். 21

குமுதவல்லியார்

பூவின் மெல்லியர் கனவிள முலையினர் பொருந்தும்
ஏவு கண்ணியர் முழுமுகத் தெரிவையர் எழில்சேர்
தேவ கன்னியர் திரண்டொரு விமானமேற் சேர்ந்து
மேவ மிக்களி கூர்ந்திட விசும்பைவிட் டிழிந்தே. 22

காலி மேதிகள் கன்றினை நினைதொறுங் கனியும்
பாலி னோடிறா லொழுகுதேன் தினம்சென்று பாய்ந்து
சாலி யோடுசெங் கன்னலுந் தழைத்து வானோங்கும்
ஆலி மாநக ரதனில்வந் தடைகுவா ரன்றே. 23

பொய்கை யார்ந்தநீ ராடுவார்; பூம்பொழிற் களிற்போய்
கொய்கு வார்மலர் ஆலிநா தன்குரை கழலிற்
பெய்கு வார்;பணிந் தேத்துவார்; பின்புவே றியற்றுஞ்
செய்கை நேர்ந்துபின் விமானமேல் விசும்பிடைச் சேர்வார். 24

இன்ன வாறுபற் பலபல புரிந்திடு மிடையின்
மன்னு மோர்பகற் றனித்தொரு மாநெடுந் தூரம்
துன்னி மாமலர் கொய்குவான் றுருவிமற் றுள்ளோர்
அன்ன தோர்கிலா ரவளைவிட் டேகின ரன்றே. 25

---

21. பரத்தையர் இன்ப சாகரத்தின் ஒவ்வி, உற்று, அலைந்து, அவரிதழ் அமுதம் உண்டு தணிகிலா இழைத்தனன். பரத்தையர் - தாசிகள். இன்ப சாகரம்-இன்பக் கடல். இன்ப சாகரம் என்றே ஒரு நூல் இருந்தது. அதில் சில சூத்திரங்களின் மேற்கோளாக உள்ளது (பழைய) கொக்கோகம்.

22. குமுதவல்லியாரின் வரலாறு இனிப்பேசப்படுகிறது. தேவலோகத்தி லிருந்து சிலர், திருவாலி மாநகரை அடைந்தனர். பூவின் பூப்-போல. ஏவு-அம்பு. விசும்பைவிட்டு - தேவலோகத்தை விட்டு.

23. களி-பசுக்கள். மேதிகள்-எருமைகள். இறால்-தேன்டை பாலும் தேனும் பாய்ந்து சாலியும் கன்னலும் வளர்க்கும் ஆலிமா நகர்.

24. ஆலிநாதன்-திருவாலி நகரில் உள்ள திருமால். பிறகு விண்ணுலகு அடைவார். இது அவர்களின் பொழுபோக்கு.

25. இன்னவாறு-இப்படி-தேவகன்னியர் வரும்போது ஒரு முறை குமுத வல்லியை விட்டுவிட்டு விண்ணகம் சென்று விட்டனர்.

பிரிந்து நீங்கிய மாதுமீண் டவர்தமைப் பேணிப்
பரிந்து நோக்கலும் காண்கிலள்; பதைத்துள நெடுங்கண்
சொரிந்த நீர்களும் சரிந்தவிழ் குழல்களுந் தோன்ற
விரிந்த மாமலர்ப் பொய்கையின் கரையின்மே வினளால். 26

ஆங்கு நோக்கலு மாலிமா தவர்க்கனு தினமும்
பாங்கி னோடுமா ராதனம் பரிவோடு புரியுந்
தீங்கி லாமறை யவனிருந் திடத்தெளிந் தவன்றன்
பூங்க ழற்கணின் முடியுறப் பணிந்திது புகல்வாள். 27

ஐய! கேட்டியான் றேவ கன்னிகை யனேகருடன்
வைய மீதிழிந் திந்தவான் பொய்கைநீர் மருவிச்
செய்ய மாமலர் கொய்குவான் சென்றபோ தியானத்
தைய லார்தமைப் பிரிந்தொரு தமியளா யினனால். 28

தேடி னேன்பல விடந்தொறும் தெரிகிலேன் றிகைத்து
வாடி னேனுளம் வருந்தி வந்திவ்விட மருவிக்
கூடி னேன்படர்ந் துளசெயல் நின்செவி குறுகப்
பாடி னேனவர் தமைக்கண்ட துண்டுகொல் பகர்வாய். 29

என்ன வோதவம் மொழிகள் தன்னிரு செவியுறலும்
அன்ன மாதுதன் திருமுக நோக்கியங் கவர்கள்
முன்ன ரேயொரு விமானத்தின் மீமிசை முடுகி
மன்னி யேகினர் வானிடை யென்றனன் மறையோன். 30

---

26. தோழியரைப் பிரிந்து குமுதவல்லி பட்ட பாட்டை இப்பாட்டு விவரிக்கிறது. பதைத்து உள்ளம்-உள்ளம் பதைத்து என மாற்றுக.

27. ஆலிமாநகர் இறைவனுக்கும் ஆராதனம் புரியும் தொண்டன் அங்கு இருந்தான், அவனைப் பணிந்து குமுதவல்லி தன் வரலாற்றைக் கூறினாள்.

28. யான் தேவகன்னி; சென்ற போது யான் அத்தையலார் தமைப் பிரிந்து தமியளாயினேன், தமியளாயினேன்-தனியேவிடப்பட்டேன்.

29. நின் செவிகுறுக - நினது செவி கேட்கும்படி. பாடினேன்-அழுதேன் (பாடினேன் என்பது அழுகை என்ற பொருளின் வழங்கி வருகிறது). உண்டு கொல்-உண்டோ.

30. விமானத்தின் மீமிசை-விமானத்தின் மேலே, முடுகி-விரைந்து. கள்ளி மீமிசைக் கலித்தவீ நறுமுல்லை (நற்றிணை).

STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
CC No.
Date
MADRAS.

அந்த வாசகங் கேட்டலு முளமயர்ந் தினிப்பிறி
எந்த வாறடை குவாதமோ தில்லையா தலினால்
உந்தன் மாமக ளாகும்யாம் நீயெனக் குகந்து
தந்தை யாகுமென் றவனடித் தலத்துவீழ்ந் தனள்நல்லாள்

ஆழ்ந்த வன்பினோ டந்தணன் றனதடி யதன்மேல்
வீழ்ந்த மங்கையை நோக்கிநீ வெருவிடேல் வெகுநாள்
வாழ்ந்து மல்கவென் றாசிகள் பற்பல வழங்கித்
தாழ்ந்தெ டுத்துமார் பிருகுறத் தழீஇனன் றகவாய். 32

விழியி னீர்துடைத் துச்சிமோந் திந்தமெல் லியல்வீட்
டுழியு ளாளெனி லுலகின ரொவ்விடார்; நமது
வழியு ளோர்களும் வசைமொழி புகல்குவர் வளரப்
பழியு மேய்துமென் றஞ்சியே பன்முறை நினைந்தே. 33

ஆலி நாதர்தங் கோயிலில் நடனஞ்செய் பவர்க்குண்
மேலி நாள்தனை யியரிலா தயர்ந்துபெண் விருப்பா
மாலி னோடுற லுணர்ந்தவ னாகியம் மடவாள்
பாலி னிங்கிவ டனைவிடிற் பரிவொடும் வளர்ப்பாள். 34

என்ன வேதியன் கன்னியோ டாங்கவ ளிலின்வாய்த்
துன்ன லோடுமவ் வேசையு மடுத்தெதிர் தோன்றிப்
பொன்ன டிப்பணிந் தேத்திய பூங்கொடி நிகரும்
கன்னி யாரெனக் கேட்டலும் வேதியன் கழறும். 35

---

31. தெய்வப்பெண் யான் உம்மகள்-நீ என் தந்தை என்று கூறி வணங்கினான். வீழ்ந்தனள்-வணங்கினாள் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார் என்பர் தொண்டர் சீர்பரவுவார் (பெரிய புராணம்).

32. வெருவிடேல் - அஞ்சாதே. வெகுநாள் - நீண்டநாள். மல்குக-என்பது மல்க என்றாயிற்று, புதுப்பிரயோகம்.

33. வீட்டுழி - வீட்டின்கண். உளாள் எனின் - இருந்தால். ஒவ்விடார் - உடன் படமாட்டார். நமது வழியுளோர் - நமது குலத்தில் பிறந்தவர்கள். செற்றோரை வழிதபுத்தனன், என்பது புறம். வளர - இவள் வளர்ந்து பருவம் அடைய. பழி - பழிச் சொல்.

34. அந்தணன் தெய்வப் பெண்ணை ஆலிநாடன் கோர்விலில் நடனம் பயிலும் நங்கையிடம் விடக் கருதுகின்றான். மேலிந் நாள்தனை - அந்த நாளிலிருந்து இந்நாள்வரை. தனைவி - புதல்வி, தனையன் என்பதே மரபு. திருவாலி நாடன் என்பது அத்தலத் திருமாலின் பெயர். 'வயலாலி மணவாளன்' என்பர் ஆழ்வார்.

முன்பெ டுத்துள சனனங்க டொறுமுயன் றிழைத்த
என்பெ ருந்தவத் தளித்தது: மகளிலா மையின்நீ
துன்பு றத்தெளிந் தவையொழித் திடும்வகை தோன்றும்
அன்பி னாலிவள் தனையுனக் களிக்குமா றடைந்தேன். 36

என்று ரைத்தவ டன்வர லாற்றையு மியம்பி
நின்ற வக்கொடி தன்னையு நெறிமுறை யளித்துச்
சென்ற டைந்தனன் தனதகம் அளித்தசே யிழையை
நன்றெ னத்தன தகத்தினுட் கொண்டுநண் ணினளால். 37

நாடக அணங்கு நங்கையை வளர்த்தாள்

நாக மங்கையர் நானில மடந்தையர் நவிலும்
மாக மங்கையர் மலரயன் சிவன்குகன் மதன்றம்
போக மங்கையர் எவர்களும் புனிதநா ரணன்றன்
ஆக மங்கையு நிகரிலரி வளழ கறிந்தேன். 38

துமுதம் உற்றெழ மதித்தநாள் தூயபாற் கடலில்
அமுத முற்றெனத் தோன்றிய வணங்கரர் சமுதைக்
குமுத வல்லியென் றொருபெயர் குறித்தழைத் தனளால்;
நமது நாயக வாலியான் கோயிலின் நடிப்பாள். 39

---

36. என் தவத்தால் இவள் கிடைத்தாள். துன்புறத தெளிந்து-துன்பம் அடைதலைத் தெளிந்து. துன்புறல் என்பது துன்புற என்றாயிற்று. தொழிற் பெயரே. தொழிற்பெயர் எச்சம்போல் மாறுவதுண்டு. 'அன்பினால் அளிக் கிறேன்' என்கிறான் அந்தணன்.

37. நெறிமுறை - சாத்திர முறைப்படி. கொடிதன்னை-கொடி போன்ற பெண்ணை.

38. நாகமங்கையர்-நாகலோகப் பெண்கள். மாகம்-விண்ணுலகம். அயன், சிவன், குகன், மதன் தம் போக மங்கையர்-கலைமகள், பார்வதி, வள்ளி, ரதி. போக மங்கையர்-இன்பம் வழங்குவோர். நாரணன்றன் ஆகம் மங்கை-திருமால் மார்பில் இருக்கும் இலக்குமி. நிகரிலர்-ஒப்பாகார்.

39. ஆலியான் கோயிலில் நடிப்பாள்-தெய்வப் பெண்ணுக்குக் குமுதவல்லி என்று பெயர் வைத்தாள். துமுதம்-துளி. மதித்த நாள்-கிடைத்த காலத்தில். அமுதம் உற்றன - அமுதம் பிறந்தாற்போல. அணங்கு அரசு அமுதை-தெய்வப் பெண்கட்கு அமுதம் போன்றவளை. இப்பாடலைக் கட்டளையாகக் கொண்டு சேதுபந்தனப் பாடலுக்கு உண்மையான பாடம் கண்டு பிடிக்கலாம். விஜய ராகவப் பிள்ளை படித்த கம்பராமாயணச்சுவடியில் "குமுதன்-திமுதம்-துமுதம்-அமுதம்". என்று சேதுபந்தனப் பாடல் இருந்திருக்க வேண்டும். இந்த உண்மையான பாடம் ஆராயின் புலனாகும்.

பவள வாயிதழ் குவளைகண் பசியகார்க் கூந்தல்
இவட னால்நமக் களவிலாப் பேருறு மெனக்கொண்
டவளை யாதர வுடன்சுமந் தளித்தபெண் ணாகத்
தவள வாயமு தூட்டியத் தையலும் வளர்ந்தாள். 40

கோதி லாடனக் கமைவன வகைவகை குறிக்கும்
பாத மேமுதன் முடியள வாகவே பலவா
யோது மாவவ யங்களுக் கொழுகொளி பரப்புஞ்
சோதி யாமணிப் பசும்பொனின் கலன்கள்சூட் டினளால்; 41

பாட கம்செழும் பதுமம் நேரிய பதம்வருந்த
நாட கத்தொழில் புரிபவள் யாவுநன் கறிந்தாள்;
சூடகக் கையின் விரல்களாற் றுவன்றிடத் தெரித்திட்
டாகப் பசுந்தந் தியாழ் பயில்வது மறிந்தாள். 42

இனைய தாயதந் தொழிலெலாங் கற்றபின் துளவம்
புனையு மாலிநா யகன்றிரு முன்நடம் புரிந்து
வினைய கற்றுபொற் படிகநீர்த் துளவமு மிசைந்து
மனைய ணைந்துவா சித்திடு பள்ளிமன் னுவளால். 43

ஆலை யின்கரும் பனையமா தெழில்வள மறிந்து
வேலை சூழ்புவிப் பரப்பெலாம் விலங்கிடத் தனிச்செங்
கோலை யோச்சிடு மரசர்கள் குலவுமிங் கிவளை
மாலை சூட்டிடக் கிடைக்குமோ எனமருண் டனரால். 44

---

40. இவள்+தன்னால். பேருறும்-பெருமை உண்டாகும். சுமந்தளித்த பெண்ணாக-பத்து மாதம் வயிற்றில் தாங்கிப் பெற்ற மகளாக.

தவளவாயமுதூட்டி. தவளம்-வெண்மை, அமுதப்பால். தவளம்-அமுதத்துக்கு அடைமொழி. "வாயமுது" என்று இங்ஙனம் வந்தால் நச்சர் ஒரு சொல் நீர்மைத்து என்பர்.

41. கோதிலாள்-குற்றமற்றவள். பாதாதி கேசமாகப் பேசுகிறார். தெய்வப் பெண்களின் ஒழுகொளி-மிக்கஒளி. கலன்கள்-ஆபரணங்கள்.

42, குமுதவல்லி பாடவும் ஆடவும் தெரிந்து கொண்டாள். யாவும்-அறுபத்துநான்கு கலைகளும். பாதகடகம்-என்பது பாடகம் என்றாயிற்று என்பர் கம்பன் அடிப்பொடியார். சூடகம்-பொன்.

43. இனையதாம்-இப்படிப்பட்ட. வினையகற்று-தீவினைகளைப் போக்கும். படிக நீர்த்துளவமும்-தீர்த்தமும் திருத்துழாயும். படிகம்-கற்பூரம். தீர்த்தத்தில் கற்பூரம் சேர்ப்பது மரபு.

44. அரசர்களும் குமுதவல்லியை மணக்க விரும்பினார். ஆலையின் கரும்பனைய மாது-பேய்க்கரும்பை விலக்க ஆலையின் கரும்பு என்றார். மாலை சூட்டிடல் கிடைக்குமோ-மாலையணியும் பேறு கிட்டுமா. மருண்டனர்-மயங்கினார்.

கனியும் பாகும்நற் பாலுடன் கைத்திட மிழற்றும்
இனிய சொல்லினாட் கேவலிந் திரியத் தையவித்த
புனிதவ ரும்மதன் னூன்முறை புரிகுவ ரென்னின்
மனித ராயினோர் யாவரே மருளுறா தவரே? 45

பரகாலரின் காதல்

வேறு

அன்னவ ளிவ்வா றாக விருக்கும் மதுதன்னைப்
பன்னரும் சீர்த்திக் குறையலூர் வாழும் பரகாலன்
றன்னி லுணர்ந்தே யங்கவ ளாசைத் தளைமேலும்
துன்னிட் வவ்வூ ரேகுவ தற்குத் துணிவானான். 46

தங்க முடன்பன் மணியொளி ருந்தண் டிகையேறிப்
பொங்க ரெனும்திண் புயவலி தோழர் புடைசூழ
மங்கு லளாவும் பொன்மதி டன்னை மதியோடுஞ்
செங்க திருஞ்சூ ழாலி நகர்க்கண் சென்றனனால். 47

ஆங்கொ ரிடத்திற் றுன்னி யிருந்திட் டதன்பின்னர்
தீங்கனி யொக்குஞ் சொல்லினண் மேனித் திறயோடும்
பாங்குற வைகும் நல்லிட முங்கண் படனோக்கி
ஈங்க டைமின்னென் றேவிட நால்வ ரினிதோடும். 48

45, கனியும். பாகும், நற்பாலுடன் கைத்திட மிழற்றும் இனிய சொல்லி னாள்-குமுவல்லி. கைத்திட-கசக்க. மிழற்றும்-பேசும். ஏவல் இந்திரியத்தை அவித்த புனிதர்-மனத்துக்குக் கட்டளையிகின்ற பொறிகளை அடக்கிய தூயவர் கூட. மதன் நூன் முறை-காமசூத்திரத்தின் படி.

புரிகுவர்-விரும்புவார். புனிதரே மயங்கும்போது மனிதர் எம்மாத்திரம் என்று வியக்கின்றார் கவிஞர்.

46. குமுதவல்லியாரின் அழகை உணர்ந்த பரகாலர் திருவாலிநகரடைய உறுதி பூண்டார். ஆசைத்தளை-ஆசையாகிய கட்டு.

47. தண்டிகை-பல்லக்கு. பொங்கரெனும் - மலை போன்ற. மங்குல்-மேகம் சூரியனும் சந்திரனும் வலம் செய்யும் மதில்.

48. குமுதவல்லியார் இருக்குமிடத்தைத் தெரிந்துவர, நால்வரை அனுப் பினார் ஆழ்வார்.

அன்னவள் வைகும் பொன்மனை சென்றா ரதில்காணார்
துன்னி நடஞ்செய் சாலையி னும்துன் னினர்காணார்
நன்னரி யாழ்வல் லாரொடு கற்றே நவில்கூடந்
தன்னில டைந்தே யங்குறு பெண்ணமு தந்தன்னை. 49

கண்ட னரம்பொன் மேனியின் வடிவம் கண்ணென்னும்
புண்டரி கங்கொள் ளாம லுளமற் புதமெய்தி
எண்டிசை யுள்ளும் கண்டில மிப்பே ரெழிலுக்குத்
தொண்டுறும் நந்தம் தோழனு மென்னத் துணிவுற்றே. 50

மீண்டனர் தாமுன் வைகுறு மிலின்மே வினர்தம்மைக்
காண்டலு முள்ளங் களிமகிழ் துன்னக் கலிகன்றி
பூண்டிடு மன்பின் கண்டுளி ரோநீர் புகல்வீரென்
றாண்டவ னோதக் கேட்டலு மவள்வடி வறைகின்றார். 51

மழையள கம்தண் பிறைநுதல் விற்புரு வம்வாட்கண்
குழையணி வள்ளைக் கன்ன மெளின்பூ கொடிநாசி
அழகமை யும்கண் ணாடிக போலும் அமுதஞ்சொல்
பழமுதிர் தொண்டை யிதழ்தர ளங்கள் பல்லாமால்; 52

49, 50. பொன்மலை முதலான இடங்களில் குமுதவல்லியாரைக் காணாதவர்கள் அவரைக் கீத சாலையில் கண்டனர். இப்பேரெழில்-இந்தப் பெருமை மிக்க அழகை.

51. கலிகன்றி-திருமங்கை மன்னன். கண்டுளிரோ-கண்டீர்களா.

52, 55. பாடல்கள் வரை குமுதவல்லியின் அழகைத் தோழர்கள் விவரிக்கின்றனர்.

52. மழை அளகம்-மேகம் போன்ற முன் நெற்றி மயிர். கன்னம் - காது. கர்ணம் என்ற வடசொல் கன்னம் ஆயிற்று. எளின்பூ-எள்ளின்பூ. நாசி-மூக்கு. கொடி நாசி - நீண்ட நாசி. "கொடி மூக்கு உருப்பசியை உருக்கும்" என்பர் தேவர். அங்கு நச்சர் நீண்ட மூக்கு என்று உரை வகுத்தார். "கொடி மூக்கும் அரிந்தக்கால் அங்கண்ணரசே ஒருவர்க்கு அழியாதோ அழகு" என்றார் கவிச்சக்கரவர்த்திகள் (ஆரண்ய). கன்னம், எ(ள்)ளின் பூ, கொடி எனப் பிரிக்கவும். கபோலம்-கன்னம். தொண்டை முதிர்பழம் இதழ்-ஆதொண்டையின் பழம்வாய், தரளம்-முத்து.

விதுவ தனம்வளை கந்தரம் வேய்த்தோள் யாழ்முன்கை
பதுமம கங்கைத் தளிர்விரல் கிளிபாலி கையினுகிர்
புதுமலை முலையா லிலைவயி றாமெறும் பூரோமம்
உதக மெழுந்திரை வரைதுடி யிடைசுழி யுந்தியதே. 53

அராவ நிதம்பம் கதலிகுறங் கலவன் சரணாம்
வராலின் கணைக்கா லாமைப் புறவடி மன்னும்சீர்
தராசு பரட்டாம் பந்துகுதித் துகிர்தான் விரலாம்
பராவிய தாளங் கந்திகழ் பஞ்சு பதந்தானே. 54

அன்ன மெனப்படர் மெல்லிய நடைமயி லஞ்சாயல்
இன்னத னமைதிக ளொப்பிட ஒவ்வா எழிலுற்ற
கன்னியை யாயிர மாதரு ளோர்பெண் கனியென்ன
முன்ன ரிழைத்துள நின்றவ மேமுன் னியதென்ன. 55

அண்டர் மத்திட வெண்கடல் வந்தெழு மமுதென்னக்
கொண்ட லுதித்தெழு முன்னெழு மின்னற் கொடியென்னப்
புண்டரி கத்திரு மலரிடை வாழும் பொன்னென்னக்
கண்டன மெம்மிரு கண்கள் களிப்பக் கடிதென்றார். 56

அச்சொற் கேளா வுள்ள மதற்குள் ளவளாசைப்
பிச்சுற் றேயங் கேகு தலுன்னிப் பெயர்போதின்
மச்சுத் தேரோ டாதவ னாழி மறைவுற்றான்
நச்சுற் றென்ன நள்ளிருள் உள்ளில் நணுகியதால். 57

---

53. விது - சந்திரன். வளைகந்தரம் - சங்குக்கழுத்து. வேய் - மூங்கில், பாலிகையின் உகிர்-இளம் பெண்ணின் நகம். எறும்பு ஊர் - எறும்பின் வரிசை. உதகம்-கடல். திரை-அலைகள். வரை-வயிற்று மடிப்பு. துடி-உடுக்கு.

54. வரால்-வரால்மீன். ஆமைப் புறவடி-தராசு. பரடு, பந்து, குதிகால். பஞ்சு-செம்பஞ்சு. பதம்-பாதம், சரண் அலவன்-முழந்தாள் நண்டு.

55. நின்தவம், ஆயிரம் பெண்களுக்குள் அவளைப் பெண்கனியாகப் படைத்துள்ளது. "பெண்கனி" என்ற தொடர் கவிச்சக்கரவர்த்தியாரிடம் பெற்றதாம். நின்தவமே முன்னியது-உன்னுடைய தவமே முதன்மை பெற்றது.

56. அண்டர் - தேவர்கள், மத்திட - கடைய, கொண்டல்-மேகம். அமுதென்ன, மின்னற்கொடியென்ன, பொன் என்ன கண்டோம். என்ன-போல, பொன்-திருமகள்.

57. மச்சுத்தேர்-பலகையால் அடைக்கப்பட்ட மேல் தளத்தை உடையதேர். அன்றி மச்சு என்ற சொல்லைத் திசைச்சொல்லாகக் கொண்டு (தெலுங்கு) நல்ல என்னும் பொருள் கொள்ளலாம்.

"மச்சிது செய்தார் யாரே"-என்றார் கண்ணப்பர் (பெரியபுராணம்).

வேறு

இந்த வுலகம் தனில்பிறந்திட்
டிறக்கும் பிறவி தன்னையொழித்
தந்த வுலகம் பெறுஞான
மறிய வுரைக்கும் குருபரனை
நிந்தித் திகழ்ந்திட் டஞ்ஞான
நெறியோ துவர்த மதியுள்ள
சிந்தைக் கருப்போ டியதெனவே
திசையோர் எட்டு மிருண்டனவால். 58

துன்னிச் சிறந்த நள்ளிருள்வாய்த்
தோழ ரொடுமவ் விடமகன்றக்
கன்னி யுறைபொன் மாடமதைக்
கலந்தாங் கிருந்தோர், தமைவினவி
யன்ன மடமா தாடலுக்காய்
யாலிப் பெருமான் றிருக்கோயின்
மன்னி யடைந்த துளந்தெளிந்தம்
மணியா லயம்போய் மன்னினனால். 59

பரகாலர் குமுதவல்லியைக் கண்டார்

அங்கண் பிரான்முன் குமுதவல்லி
ஆடல் புரியும் போதினிலே
திங்க ளனைய முகத்தாடன்
திருமே னியினைப் பதமுதலாய்
மங்கு லளக மீறாய்த்தன்
மலர்க்கண் களிப்பக் கண்டுருகிப்
பொங்கு மகிழ்வோ டாலியன்றாட்
பேர்திற் பணிந்து நின்றனனால். 60

---

58. குருபரனை இகழ்பவர் எண்ணத்தில் உள்ள கருப்பு பரவியதுபோல் எட்டுத் திசைகளும் இருண்டன. பிறப்பையும் இறப்பையும் நீக்கி அந்த வுலகம் அடைய ஞானம் உரைக்கும் குருபரன். மதி உள்ள சிந்தை கருப்பு-அறிவின்கண் இருக்கின்ற எண்ணத்தின்கண் கருமை நிறம்.

59. திருமங்கை மன்னன், குமுதவல்லியாரின் வீட்டை யடைந்து வினாவிய பிறகு கோவிலை அடைந்தார். மடமாது ஆடலுக்காய் கோவில் அடைந்தமை அறிந்தார். அதனால் அங்கு சென்றார்.

60. ஆடல்புரியும்போதில் குமுதவல்லியைக் கண்டார், ஆழ்வார். பாதம் முதல் முடியீறாகப் பார்த்தார். பிறகு ஆலி யெம்பெருமானைப் பணிந்தார்.

நின்றங் கிருந்தப் பேரழகன்
நிகரில் வடிவந் தனைக்காணா
மன்றல் கமழுங் குழல்மடவாள்
மதனோ வானத் திந்திரன்றான்
இன்றிங் கிழிந்து வந்தனனோ?
வெனவே குவளை யிருத்டங்கண்
ஒன்ற வவன்றன் றிருமேனி
முழுதும் நோக்கி யுன்னுவளால். 61

மருமந் துளவ மணிகாணேம்;
வதனந் திருமண் குறிகாணேம்;
மிருமந் தரநேர் மணிப்புயத்தி
லெஃகம் வளையின் பொறியிலையால்;
திருவின் மகிழ்நர்க் கடியனலன்
எனவே சிந்தை தெளிந்தவன்பாற்
கரும மிலையென் றுளமுமிரு
கண்ணும் திருப்பிக் கசிந்தனளால். 62

கசிந்த மடந்தை திருவாலிக்
கண்ணன் றிருமுன் னரிற்காலில்
விசிந்த சதங்கை கலகலென
வேற்கண் சுழலக் கரமசைய
ஒசிந்த கொடியி னிடைநுடங்க
வொளிர்வா ரிறுக்குந் தனங்குலுங்கப்
பசந்த மேனி வெயர்வரும்ப
வுரோமம் பொடிப்ப நடம்பயின்றாள். 63

---

61. குமுதவல்லியாரும் திருமங்கை மன்னனின் அழகில் ஈடுபட்டார். மதனோ? - இந்திரன்தான் இறங்கி வந்தனனோ? என்று குவளை போன்ற கண்கள் அவர் மேனியில் அழுந்த நோக்கினார் குமுதவல்லியார்.

62. ஆழ்வார்பால் வைணவ அடையாளங்கள் இன்மையால் குமுதவல்லியார் மனத்தையும் கண்களையும் திருப்பிக் கொண்டார். ஆனால் உள்ளம் கசிந்ததாம். மருமம்-மார்பு. துளவமணி-துளசியால் செய்யப்பட்ட மணிமாலை. மணிப்புயத்தில் சங்கும் சக்கரமும் பொறிக்கப்படவில்லை. திருவின் மகிழ்நர்க் கடியனவன்-பெரிய பிராட்டியின் காதலனுக்குத் தொண்டனவன் என்று மனத்தைத் திருப்ப நினைத்தாள். "எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க" என்ற மணிவாசகமும் இங்கே காட்சி தருகிறது.

63. கசிந்த மடந்தை-கண்ணன் முன் சதங்கை கலகல என்ன ஆர்க்க வேற்கண் சுழல, கரம் அசைய, இடை நுடங்க, தனம் குலுங்கப் பசந்த மேனியில் வியர்வரும்ப

நடனம் புரிந்து பெறுவதெலா
நல்கு வதுகொண் டவணீங்கி
மடம தருள்வார் கள்புடைசூழ
மாட மணுகிப் பசுங்கிளிக
ளுடன்நன் மொழிகள் பலபயின்றிட்
டுணவு பொசித்திட் டுறைபள்ளி
இடமங் கணுகிப் பஞ்சணைமே
லிசைந்தே திருக்கண் வளர்ந்தனளால். 64

பரகாலரின் விரகம்

பரகா லனுந்தங் கிடமணுகிப்
பஞ்ச சயனத் தினிதமர்ந்திட்
டிரவான் மதிபெய் கொடுங்கனலால்
எய்தும் பொதியத் தென்றலினால்
அரவார் கடலி னொலிக்கூற்றால்
அன்றிற் புலியால் வென்றிமதன்
கரவாய்ப் பொழிஐங் கணைவிடத்தாற்
கலங்கி யுறங்கா துருகினனால். 65

நடித்தாள். நுடங்க-துவள. ஈண்டு பசலை குறிப்பாகக் காதலை உணர்த்திற்று. பசலை – காமநோயால் உண்டாகும் நிற வேறுபாடு. உரோமம் பொடிப்ப-உரோமம் சிலிர்க்க.

64. மடமதருள்வார்கள் - அறியாமையை வழங்கும் பெண்கள் (தோழியர்கள்). திருக்கண் வளர்ந்தாள் - உறங்கினாள். "அம் மாமலர்க்கண் வளர்கின்றான்" என்பர் சடகோபர் (திருவாய்மொழி).

65. பரகாலர் பஞ்ச சயனத்தில் அமர்ந்தபடியே இருந்தார். அவர் இரவால், கனலால், தென்றலினால், கூற்றால், புலியால், விடத்தால் உறங்காது உருகினார். பஞ்ச சயனம்-படுக்கை. அஞ்சுருவிட்டுச் செய்த படுக்கை. பஞ்சவிதமான படுக்கை. அழகு, குளிர்த்தி, மார்த்தவம், பரிமளம், தாவன்யம் ஆக ஐந்துருவிட்டுச் செய்த படுக்கை" என்பர் வியாக்யான சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை (திருப்பாவை). ஐந்து மூன்றெடுத்த செல்வத்தமளி என்ற சிந்தாமணித் தொடருக்கு நச்சர் வழங்கிய உரையும் அதற்கு ஐயர் காட்டிய மேற்கோளும் காண்க. (பரகாலரின் விரகதாப மொழிகளை நயம்படப் பேசியவர் வடிவழகிய நம்பியார், அப் பகுதி ரசபுஞ்சகம்).

உருகி யுருகி நினைந்துநினைந்
துண்ட காம விடமதனாற்
கருகி மேனி யவளையின்னும்
காணு மாசை யெனுமமுதம்
பருகி யுயிர்பெற் றிவ்வகையா
யிரவை யொழித்தான் பகலோனும்
பெருகி யொளிருங் கிரணமுடன்
பிறந்தான் குணபாற் பெருங்கடலின். 66

காலைப் பொழுதி னெழுந்துசெய்யுங்
கரும மியற்றி முடித்திடுமவ்
வேலை தனதா ருயிர்த்தோழர்
மேவ வவர்தம் முகம்நோக்கி
மேலைப் படருங் கருமமெலா
முணர்வீர் நீவிர் விரைந்தெய்தி
யாலைக் கரும்பின் மொழியளெனை
யனையும் வகைசெய் தருண்மினென்றான். 67

அந்த மொழியை தோழர்கள்சென்
றகல்வா னொழிந்திங் கடைந்தவடன்
தந்தை தாயா ருடன்மொழிய
வவருங் கேட்டுச் சாற்றுமவர்
எந்த வூர்யார் குலம்பெயரென்
னெனவே கேட்க வுளதுரைக்கச்
சிந்தை மகிழ்ந்திட் டவற்கவளைத்
திருமா மணஞ்செய் திடநேர்ந்தார். 68

குமுதவல்லியாரின் திருவுள்ளம்

அதனை யறிந்தக் குமுதவல்லி
யவன்றன் செய்கை யறிந்ததனால்
விதனத் துடன்யா னிவ்வுலகின்
விண்விட் டிழிந்த துணர்வீரான்

---

66. காமம் என்ற விடத்தால் கருகியவர், அவளை இனிமேல் காணலாம் என்ற ஆசையாகிய அமுதைப் பருகி உயிர் பெற்றார். குணபாலன்-கிழக்கு. உருகி உருகி நினைந்து நினைந்து உண்ட காமம். காமத்தின் இயல்பை இப்படி இது வரையில் யாரும் கூறவில்லை.

68. தோழர்கள் பரகாலரின் குலம், ஊர், பெயர் முதலியவற்றைக் கூறக் குமுதவல்லியாரின் தாயும் தந்தையும் திருமணத்துக்கு உடன்பட்டனர்,

மதனொத் துளனே யாயினும்பல்
வளத்தின் மிகுந்தோ னாயினுமச்
சுதனுக் கடியா னல்லனவன்
சுடலை யாடிக் கடிமையுளான். 69

ஆத லாலங் கவர்க்களித்த
லடுக்கா தவனைச் சேர்வதிலும்
வீத லேநன் கெனவடியேன்
விரும்பி யனலிற் புகுவனென
வோத லோடு மம்மொழிகேட்
டுனது நினைவஃ தெனிலுன்மேற்
காத லாலங் கவன்றிருமால்
கழற்குத் தொண்டா குவன்கண்டாய். 70

என்ன வந்த வவன்றோழ
ரிதனை யெடுத்திட் டியம்புதலும்
அன்ன செய்கை யவன்புரியி
லவனை மணநான் புரிவனெனச்
சொன்ன மொழிகேட் டவர்களுந்தந்
தோழ ரிடத்தில் விரைந்தெய்திப்
பன்ன வதனைப் பரிவுடனே
பரகா லனுங்கேட் டுளமகிழ்ந்தான். 71

பரகாலர் மாலடியாரானார்

அந்த மடமா தென்னுடனோர்
அணியா தனத்தி னிருப்பளெனில்
இந்தவ கைசெய் திடவரிதோ
வென்றக் கணத்தென் றலைசிரைத்து

---

69. குமுதவல்லி திருமணத்துக்கு உடன்படவில்லை. காரணம், பரகாலன் அச்சுதனின் தொண்டனாக இல்லாமையே. அவன் மன்மதன் போன்று அழகாக இருந்தாலும், செல்வ வளம் பெற்றிருந்தாலும் வேண்டேன். அவன் அச்சுதனுக்கு அடியன் அல்லன், சுடலை ஆடிக்கு அடியன் என்று குமுதவல்லி மறுத்தாள்.

70. அவனை அணைவதிலும் வீதலே நன்று என்றார். வீதல் - இறத்தல். தோழர்கள் திருமங்கை மன்னன் உனக்காகத் திருமாலின் கழற்குத் தொண்டனாவான் என்றனர், உடன்பட்டார்.

71, 72. தோழர்கள் குமுதவல்லியாரின் கருத்தை உரைத்தலும் பரகாலர் காம்பறத் தலை சிரைத்து, தோளில் சங்கு சக்கரம் பொறித்து, திருமண் காப்பு-

முந்து மிரண்டு புயந்தனிலு
மாழி வளைமுத் திரைபொறித்துச்
சிந்தை தெளிகே சவவாதித்
திருமண் காப்புந் தரித்தனனால். 72

தளங்கொள் வனமா லிகையினொடுந்
தாளார் தண்ணந் தாமரையின்
வளங்கொள் மணியின் றாழ்வடமும்
மணப்பூண் டயங்குந் திருமார்பில்
விளங்கும் படியாய்த் தரித்தவனும்
விரைந்து வருத லறிந்துமுயற்
களங்க மிலாத மதிமுகக்கா
ரிகையு மணத்தற் கொருமித்தாள். 73

ஒருமித் திடப்பொற் றூணிறுத்தி
யுயரச்செழும்பட் டதுவிரித்துக்
குருநித் திலச்சா லர்கள்தூக்கி
குலமா மணியின் விளக்கேற்றி
யருகிற் கமுகுங் கதலியுஞ்சேர்த்
தண்டி மனுக்கட வுள்தச்சன்
நிருமித் திடுமோ ரண்டமென
மணிப்பந் தலினை நிரப்பினரால். 74

சாந்தால் மெழுகிச் சுண்ணத்தாற்
றயங்கும் கோலந் தனையெழுதி
பூந்தா மரைகள் பூத்ததுபோற்
பொற்பா லிகையைம் பதுமுதலாய்

அணிந்து, வைணவரானார். மதம் மாறும் போது தலை சிரைப்பது மரபு என்பதை வடிவழகியாரும் குறிப்பர் (திருமங்கையாழ்வார் பிரபாவம், எம்பெருமானார் வைபவம் காண்க).

73. திருமங்கை மன்னரின் வைணவக் கோலம் காவியம் நயம்படப் பேசப்படுகிறது. வனமாலிகை-துளசி மாலை. முயல் களங்கம் இல்லா மதிமுகத்துக் காரிகை (இல்பொருள் உவமை, முயலாகிய களங்கம் இல்லாத சந்திரன்).

74. மணப்பந்தலின் அழகு பேசப்படுகிறது, சாலர் - அலங்காரத் தொங்கல், கடவுள்தச்சன்-விஸ்வகர்மன், (அசுரத்தச்சன்-மயன்).

75. சுண்ணம்-வாசனைப்பொடி. வீட்டின் முற்றத்தில் இடப்படும் கோலம் முற்றிப் பேசும் நூல், இது ஒன்றே என்று கருதுகிறேன்,

மாந்தர் பலர்சேர்ந் தவரவர்கள்
மற்று மியற்று வகையெல்லாம்
வேந்தர் தமக்கு மிவ்வளமை
விளையா தெனவே யமைவித்தார். 75

மங்கல நாண் புனைந்தார்

உருமின் முரச வகைமுழங்க
வொளிர்சங் கினங்கள் பலகுமுற
விருவர் தமையு மணக்கோலம்
இயைவித் தோரா தனமிசையே
மருவ விருத்தக் கனன்முகஞ்செய்
வகைக ணிரப்ப மகிழ்வினொடுந்
திருமங் கிலியங் குமுதவல்லிக்
கணிந்தா னுயர்சீர்ப் பரகாலன். 76

மணமார் முறைகள் பலவும்விதி
வகையின் வழுவா தியற்றியபின்
குணமார் மடந்தை யொடுமறையுட்
குறுகி யணையுட் பொருந்துதலும்
கணவ னாக வந்தபர
காலன் றிருமே னியையரவின்
பணமா ரல்குற் குமுதவல்லி
பாரா விதனைச் சிந்தித்தாள். 77

நடனம் புரியத் தமதுருவ
மாற்றி வேறோர் நற்கோலஞ்
சடல மணியு மவர்போலத்
தாங்குங் கோல மகத்தினுளே

---

76. முரசம் முழங்க, சங்கினம் குமுற, இருவரையும் மணத்தவிசில் இருக்கச் செய்தனர். கனன்முகம் செய்வகைகள்-வேள்விக்கனலுக்குச் செய்ய வேண்டிய உபசாரங்கள். திருமங்கிலியம் - மங்கலநாண், திருமங்கிலியத்தைக் கவிச்சக்ர வர்த்தியார் 'மங்கலம்' என்பர்.

78. திருமங்கை மன்னர் உடலில் வைணவக் கோலம் உள்ளது. ஆனால் அகத்தில் திருமால் இல்லை. ஆதலினால் என்னைத் தொடல் ஆகாது என்று கூறி அகல நின்றார் அம்மையார்.

அடல்சே ராழிக் கரத்திருமா
லணுகக் காணோம் ஆதலினால்
தொடலா காதென் றணைதனைவிட்
டெழுந்தா ளவனுஞ் சோர்ந்துரைப்பான். 78

என்னே யென்னை யிகழ்ந்தெழுந்த
தியம்பு கெனவாங் கவன்கேட்பப்
பொன்னே யனையா ணினைந்ததனைப்
புகலக் கேட்டாங் கவன்மகிழ்வாய்
முன்னே நீயென் னண்பருடன்
மொழிந்த நெறியின் முறைபுரிந்தே
னின்னே புரியும் வகையுரைக்கி
னதையு மிழைப்ப னெனவுரைத்தான். 79

குமுதவல்லியாரின் நிபந்தனை

அனைய மொழிகேட் டாங்கவளும்
அவனம் புயமா முகனோக்கி
யெனைநீ தொடவேண் டினையென்னிற்
றிருமா லிருநா லெழுத்ததனை
நினைபா கவதர் நூற்றெண்மர்
நிதமு மருந்தா ரமுதளித்து
வினைநீங் கவர்தம் பதவுதக
மிசைந்து வரவேண் டிடுமென்றாள். 80

அன்ன திழைத்து வருவேனென்
றம்மா நகர்வா ழந்தணர்கள்
பன்னு மொருநூற் றெண்மருக்குப்
பரிவிற் றேவா வமிர்தமென

---

79. நீ சொல்லியபடி செய்தேன். அகலக் காரணம் யாது என்றார் பரகாலர், குமுதவல்லியார் கருத்தை உணர்த்தினார், பரகாலர் வேறு நிபந்தனைகள் இருந்தால் கூறுக என்றார்.

80. தொட வேண்டினை என்னில்-தொடவிரும்பினால். திருமால் இருநால் எழுத்து-அஷ்டாட்சரம். 108 பாகவதர்களுக்கு அமுதம் வழங்க வேண்டும். பதவுதகம்-திருவடித்தீர்த்தம்.

81. திருமங்கை மன்னர் தினமும் 108 பாகவதர்களுக்கு அமுதருத்தி அவர்களின் பததீர்த்தம் அருந்தித் தூயவராய் மீண்டார். அப்பூதியடிகளின் வரலாற்றை நினைவு கூர்க "ஆராக் காதலுடன் முனைவரை உள் எழுந்தருளு

மன்னு மிருமூ வகைச்சுவையின்
மலியா ரமுத மருத்தியிவர்
துன்னும் பததீர்த் தமுமருந்தித்
தூயோ னாய்மீண் டடைந்தனனால். 81

கண்டா ளவனுட் டிருமாலுங்
கலந்த பரிசா னுளங்கனிந்தவ்
வண்டார் குழலி யவனுடனோ
ரணையின் மருவி யிதழமுதம்
உண்டா ரொருவர்க் கொருவர்முலை
யுடன்மார் பிறுகும் படிதழுவிக்
கொண்டார் மதனூல் வழுவாம
லின்பக் கடலுட் குளித்தெழுந்தார். 82

வேறு

இம்மா முறையே தினம்நூற்
றெண்பே ரும்மா னகர்வாழ்
செம்மா மறையோ ருண்டு
தெவிட்டும் படி யாரமுதம்
எம்மா நிலமும் புகழும்
படியங் கவனு மியைவித்
தம்மா னிதழ்வா யமுதுண்
டுறையு மன்னா டனிலே. 83

கையிற் பொருணீங் கியபின்
கடன்கொண் டதிலம் முறையே
செய்யு மளவிற் பலநாள்
சென்ற பின்னர் கடனும்

வித்து அவர் தாள் முன் விளக்கும் புனை மலர்நீர் தங்கள் மேல் தெளித்து உள்ளும் பூரித்தார்" என்பர் தொண்டர் சீர் பரவுவார். தொண்டர்களின் பாதோதகப் பெருமையை வீரசைவ சித்தாந்த சிகாமணியிற் காண்க. விரிப்பின் பெருகும்.

82. திருமங்கை மன்னர் திருமாலின் மெய்த்தொண்டரான திறத்தை உணர்ந்த குமுதவல்லியார் அவருக்கு இன்பம் வழங்கினார். இப்பாடல் சிருங்கார ரசம் நிரம்பிய பாடல்.

83. மாலடியவர்களுக்குப் பகலில் அமுதருத்தி, இரவில் குமுதவல்லியாரின் வாயமுதுண்டார்,

வையத் தெவரும் நல்கா
தொழிப்ப மனமங் கவனும்
நையுற் றொருநாள் புரியா
துறைவீ டதைநண் ணுதலும். 84

மன்றன் மலர்சே ரளகக்
குமுத வல்லிப் பெயர்மான்
நன்றங் கெதிர்சென் றவனை
நோக்கா விதனை யறைவா
ளென்றும் நின்னோ டாலிக்
கிறைவன் வருவா னவனும்
இன்றுன் னுடனே கூடி
வருதல் காணா மென்னா. 85

கதவந் தனைமூ டித்தாழ்
காப்புக் கடிதிட் டிடலும்
மதனொத் திடுமக் கலியன்
வாடித் தெருவின் கண்ணின்
றிதமுற் றிடநல் வசனம்
மவடன் னிருகா துறுமவ்
விதமொத் திடவோ தினனாய்
மீண்டும் பகர்வா னானான். 86

மானேர் விழியாய் தினமும்
பிரியா துடனே வருமத்
தேனார் கமலைக் கிறைவ
னின்றென் னுடனே செல்லா

---

84. பரகாலர் பொருள் உழந்து ஏழையானார். கடன் வாங்கித் திருப்பணி செய்தார். ஆனால் ஒருநாள் யாரும் கடன் தரவில்லை. திருப்பணி நின்றது. அன்று பணியை நிறைவேற்றாமல் வீட்டிற்கு வந்தார்.

85, 86. அவனை நோக்கி - பரகாலரைப் பார்த்து. ஆலிக்கிறைவனனா திருமால் என்னும் பரகாலன் பின் வருவான். இன்று வரவில்லை. அதனால் குமுதவல்லியார் கதவை மூடித் தாழிட்டாள். தெருவின்கண் நின்ற பரகாலர் அம்மையாரிடம் ஒரு ஐயம் கேட்டார். என்பின் எப்போதும் ஆலிக்கிறைவன் வருவான். இன்று வரவில்லை. காரணம் யாது? அவருக்கு இதுவரை நீ ததியாராதனம் செய்தாய். அதனால், தொடர்ச்சி அடுத்த பாடலில்,

தேனோ வதனைத் தெளிய
வுரைநீ யெனலும் மவளும்
ஆனா வன்னாள் ததியா
ரதனஞ் செய்வா யதனால். 87

உன்னோ டேசீ ராலித்
திருமா லுற்றா னவைதா
னின்னாள் புரியா தமையா
லெய்தா தொழிந்தா னறிநீ
யென்னா மொழியக் கேளா
வென்கைப் பொருளுள் ளனவும்
பொன்னே யனையாய் பலநாள்
புரிந்தே னதுபோ யினபின். 88

சிலனாள் கடன்கொண் டதனைச்
செய்தேன் கொடுப்போர் வேறிந்
நிலமீ திலையா லதையா
னிகழ்த்தும் வகையே தென்னக்
குலமா மணியே யனைய
குமுத வல்லிக் கொடியும்
பலர்தம் பொருணீ வழியிற்
பறித்தா லுஞ்செய் தடைவாய். 89

என்றங் கவளும் புகல்வ
திருசெஞ் செவிவந் துறலும்
நன்றென் றவண்விட் டேகி
நலிசெய் தொழிலின் மிக்கோர்
குன்றம் பொருதோட் பலரைக்
கூட்டிக் கொண்டே தானிற்
சென்றங் கடைவோர் பொருளைப்
பறிக்கும் செய்கை யறைவாம். 90

87-89. உன்பின் திருமால் வந்தான். இந்நாள் புரியாமையால் அவன் வரவில்லை, என்றார். கேளா-கேட்டு. கடன் கொடுப்பவர் இல்லை, அதனைச் செய்வது எப்படி என்றார் பரகாலர். குமுதவல்லி, வழிபறித்தேனும் அப்பணி செய்க என்றார்.

90. நலிசெய் தொழில்-வருத்தும் தொழில் (திருடுதல்). பலர்-நீர்மேல் நடப்பான், நிழல் ஒதுங்குவான், தாழுதுவான், தேலா வழக்கன், முதலானோர்.

பரகாலர் கள்வராதல்

குடபாற் கடலின் கிழக்கில்
குணபாற் கடலின் மேற்கில்
வடமே ருவினிற் றெற்கில்
வதிதென் கடலின் வடக்கில்
இடமெங் கணினும் வழியின்
னியல்வோர் பொருள்கொண் டிடவே
கடவீ ரென்றே பலரை
யேவிப் பரகா லனுமே. 91

சேரன் சோழன் மாறன்
தேசத் திடைபா தைகளின்
ஓரங் களில்பல் லோரை
யேவி யுறுமங் கவர்கள்
ஆரத் துடனே பொருளு
மாடை பலவுங் கொண்டு
வாரும் மெனவே தானோர்
மரநீ ழலின்வை கினனால். 92

ஏவும் பலசே கவர்க
ளெங்கும் வழிபா தைகளின்
மேவும் மவர்கைப் பொருளும்
மிளிரா பரணம் முதலாய்
யாவுங் கொடுமென் றடியா
வதட்டா வெருட்டா வெருவி
நாவும் மனமும் முடலும்
நடுங்கப் பறித்தா ரன்றே. 93

அவர்கைப் பறியுண் டவர்செய்
ததனா லெவரும் வழியுந்
தவருற் றேகும் மவரைத்
தனியங் குறையுங் கலியன்

---

91. குடபால் கடல்-மேற்குக் கடல். குணபால் கடல்-கிழக்குக் கடல்.

92. அவர்களை ஏவிவிட்டு, இவர் மரத்தடியில் தங்கியிருந்தார்.

93. அடியா-அடித்து. வெருட்டா-வெருட்டி. பறித்தார்-பொருளை அபகரித்தனர்.

எவரிம் முறைசெய் தனரென்
றறியான் போலிம் முறைசெய்
குவரு முளரோ வென்ன
மொழிதன் பலவுங் கூறா. 94

ஒருவே ளையினுக் குணவும்
பழவத் திரமொன் றுந்தந்
தருகாய் வருவித் தவரை
யாற்றிப் போமென் றனுப்பித்
தருவார் நிழல்வை குதலுந்
தன்றா துவர்போய்ப் பறித்து
வருமாப் பொருள்கள் பலவும்
கொண்டே யூர்போய் மருவி. 95

திருவின் கொழுனன் னடியார்
நூற்றெண் டிருநா மங்கள்
பருகும் படியா ரமுதம்
முன்பிற் பரிவின் னமையாப்
பொருவில் லவர்தம் பதனீர்
கொண்டே புனிதத் துடனே
வருமங் கவனைக் குமுத
வல்லிப் பெயராள் கண்டே. 96

இன்றுன் னுடனெம் பெருமான்
வந்தா னென்றே மகிழ்வா
யன்றங் கவனை யழையா
வளாயுள் ளணுகி யவனோ
டொன்றும் மனதா யனைமே
லொருமித் தின்பந் தந்திட்
டென்றும் மிவ்வா றாக
வெய்தத் தகும்நீ யென்றாள். 97

94, 95, 96. பொருளிழந்து வருபவர்க்குப் பழைய ஆடை கொடுத்து, சமாதானம் சொல்லியனுப்பினார், பரகாலர். தூதுவர் தரும் பொருள் கொண்டு திருப்பணி செய்தார்.

97. இன்று உன்னுடன் திருமால் வந்தான் என்று கூறிப் பரகாலற்கு இன்பம் வழங்கினார்.

எம்பெருமான் தடுத்தாட் கொள்ளல்

அவ்வா றிவனும் புரியா
பலனா ளவளோ டணுகுற்
றொவ்வா வின்பந் துய்த்திட்
டுறைநாள் தனின்முன் னாள்வாய்
செவ்வாய் திருமாழ் மார்பத்
தேவன் ஏவும் மாயை
யெவ்வா றிவனோ டுறைவ
தெனநா ணுற்றே கியதால். 98

மாயைத் தொடர்பாங் ககல
மயர்வற் றிடுநன் மதியைக்
காயைத் தின்போ னுக்குத்
கனியீ வதுபோ லருளச்
சேயைப் பரிவிற் றேடி
விரைந்தே யதன்பின் செல்லும்
தாயைப் போலத் திருமால்
கலியன் றன்பா லுறவே. 99

நினையும் பொழுதிற் பின்னும்
வேறிந் நினைவுங் கொண்டான்
அனையன் களவின் றொழிலின்
னகப்பட் டவன்செய் திடுமவ்
வினையந் தனையும் பறிசெய்
வேடிக் கைகளுங் கண்டு
தனைபின் பவனுக் கறியும்
படிசாற் றுதுமென் பவனாய். 100

---

98. பரகாலருடன் பல மாதங்கள் வாழ்ந்த மாயை, ஒரு நாள் நாணமுற்று விலகிப் போய்விட்டது.

99. திருமால் கலியனைத் தடுத்தாட் கொள்ளக் கருதுகின்றான். காயைத் தின்போனுக்குக் கனியை யீவதுபோல், மயர்வற்றிடு நன்மதியை அருள, சேயைத் தேடும் தாயைப் போல திருமால் கலியன்பாலுற, என்று கொண்டு கூட்டுக. மயர்வற-மயக்கமில்லாத.

100. திருமால் தொண்டனுடன் விளையாட விரும்பினான். களவின் தொழிலில் அகப்பட்டு, அவன் செய்திடு வினையந்தனையும், பறிசெய் வேடிக்கைகளும் கண்டு, பின்பு அவனுக்குத் தன்னைக் காட்ட நினைத்தான். அகப்பட்டு - சிக்கிக் கொண்டு. வினையம்-செயல்கள் (அம்சாரியை).

தன்பொற் பாதம் தொழுமவ்
விதிசங் கரனிந் திரனை
யன்பிற் பாரா நீவி
ரமரர் கூட்டத் துடனே
முன்பிற் செலுமென் றுரையம்
மொழியின் மனையா ருடனே
இன்புற் றவரும் மவ்வா
றேகற் கிவ்வா றமைவார். 101

பிரமன் கலைமா துடன்மா
தவர்தம் வடிவம் பெறலும்
பரமன் னுமையா ளொடுசங்
கமர்தம் படிவங் கொண்டான்
சுரமன் னயிரா ணியோடும்
நரர்தம் சொருபங் கொளலும்
வரமன் னிடுநித் தர்களும்
திருமுத் தர்களும் மற்றும். 102

வானந் தனில்வை குவரும்
மவர்தம் மனையா ருடனே
மோனம் பெறுசித் தர்களும்
முனிவோர் களுமா னிடராய்
கானந் தனிலா பரணம்
கவினப் பலருஞ் செல்லத்
தானும் திருமா துடனே
மறையோர் படிவம் தாங்கா. 103

---

101. விதி-பிரமன். பாரா-பார்த்து. பிரம்மன் முதலானவர்கள் வேற்று வடிவுடன் பரகாலர் இருந்த காட்டிற்குச் சென்றனர்.

102. பிரமன் கலைமாதுடன் மாதவன் ஆனான். மாதவன் - பைராகி. சிவபிரான் ஜங்கம வடிவம் கொண்டான். சுரமன்-சுரர்களின் அரசன். அயிராணி - இந்திராணி. சொருபம்-வடிவம்.

103. மற்றைய தேவர்களும் வேடமிட்டுக் கொண்டனர். தானும்-திருமாலும். தாங்கா-மேற்கொண்டு.

பின்னே கிடலும் மதன்முன்
பெருங்கா னிடையே வைகும்
தன்னே ரில்பர காலப்
பேரார் வருவா ருண்டோ
வென்னா வுயரும் மரசத்
தருமீ தேறிப் பாரா
வன்னோர் வரவைக் காணா
வகமுண் மகிழ்வா யிழியா. 104

தன்சே வகரைக் கூவா
தடிவாள் வேல்கைக் கொள்ளா
வன்போ டெதிர்சென் றவரை
வழியின் மறியா வுமது
பொன்பூ டணமுள் ளவெல்லா
மேல்விட் டாவி போக்கா
முன்போ டுமெனா மொழியா
முனிவாய் வரன்மே னோக்கா. 105

புருகூ தனனே முதலாம்
புலவோர் நித்தர் முத்தர்
அருமா முனிவர் சித்த
ரெவரும் மவர்தே வியரும்
வெருவா மிரட்டிட் டவர்தம்
மேலுள் ளவத்தி ரம்மும்
குருமா மணியா பரணம்
எவையும் வலுவிற் கொண்டான். 106

---

104. யாராயினும் வருவாருண்டோ என்று அறியப் பரகாலப் பெயரார் அரச மரத்தில் ஏறிப் பார்த்தார். அன்னோர்-அவர்கள்.

105, 106. கூவா - கூவி. கைக்கொள்ள - கையிற்கொண்டு. உமது பொன் பூடணம் உள்ளவெல்லாம் உடம்பினின்றும் கழற்றி, ஆவி போக்காமல் முன் போடுங்கள் என்றார் ஆழ்வார். முனிவாய் வரல்நோக்கி - கோபத்துடன் வருவதைப் பார்த்து. இந்திரன் முதலானவரை மிரட்டினார். வத்திரம், ஆபரணம் எல்லாவற்றையும் வலுவிற் கொண்டார்.

அவரே கியபின் கமலத்
தயலுந் தளவெண் முளரித்
துவர்வா யவளு மிகலூர்
துணிவா யவர்தம் பொருளுங்
கவர்வா நினைப்போ டவிடம்
கடிகித் தடியா னதுகொண்
டிவரே குதலும் வெருவா
விதனைக் கலைப்பெண் பகர்வாள். 107

ஐயா நீவீ ரெம்மை
அடித்துத் துடிக்கக் கொலைதான்
செய்யா துயிரோ டேகும்
படியே யருள்கொண் டிடிலெம்
மெய்யா பரணம் பலவும்
மேல்வத் திரமு முதலாய்க்
கையாற் றருவோ மென்னக்
கழற்றித் தந்தே கின்றால். 108

உடனே சிவனும் முமையும்
வரலும் மொளிர்வா ளுடனே
அடல்சேர் தடிகொண் டிவனும்
மதட்டிச் செல்லு மளவிற்
குடலும் வயிறும் முயிருங்
குலையப் பயமுற் றுமையுங்
கடலின் விடமுண் டவன்மெய்
யுடனே கரவா யினளால். 109

---

107. கமலத்தயல்-இலக்குமி. வெண்முளரி-வெண்டாமரை. வெருவா-அஞ்சி. கலைப்பெண்-சரஸ்வதி.

108. எம்மை அடித்துத் துடிக்கக் கொலை செய்யாது விடின் ஆபரணம் முதலானவற்றைத் தருவோம் என்று கூறி எல்லாவற்றையும் தந்தனர்.

109. உமாதேவி, திருமங்கை மன்னனைக் கண்டு, பயந்து சிவனுடன் இரண்டறக் கலந்துவிட்டாள். "உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்" என்ற மொழியை அம்மை உண்மையாக்கினாள்.

மறையக் கிழிசங் கமநின்
னுடனே வந்தா ளெங்கென்
றறையப் பயமுற்று றுவனும்
மறியே னெனவே செவியுள்
உறைகுண் டலமே முதலா
யுளதுங் காவி யுடையுங்
குறையற் பதியுற் றவன்கைக்
கொடுத்திட் டவனும் போனான். 110

இவ்வா றெவருந் தந்திட்
டேகும் பொழுதோ ரொருவர்
செவ்வாய் மடமங் கயருக்
கொருசே லையுமா யவருக்
கொவ்வா வொருகோ வணமும்
முதவா மற்றுள் ளவெலாம்
எவ்வா வெருட்டிப் பறியா
ஏகும்படிவிட் டனனால். 111

அனைய பொருண்கண் முழுதும்
மாலிப் பதியின் னமது
மனையிற் கொடுபோ யடைமின்
னெனமற் றவரை யேவி
தனையொத் துயரு மரசின்
றருவின் னடிநீ ழலின்வாய்
தனையொப் பவரும் நிகராக்
கலியன் றனிவை குதலும். 112

வேறு

வானி லுணரப் படுமயனும்
மழுவா ளியுமவ் வாறேகத்
தேனி லினிய விளங்குதலைத்
திருபின் றுடருந் திருமாலும்

---

110. சங்கமராக வந்த இறைவன் குண்டலங்களையும், காவியுடையும் கொடுத்துவிட்டுப் போனான்.

112. பறித்த பொருள்களைத் தூதுவர் மூலமாக வீட்டுக்கு அனுப்பிய பரகாலர் தனித்திருந்தார்.

மேனி முழுது மாபரணம்
விளங்க நடந்து வருவதனைக்
கானி லுறையும் பரகாலன்
காணா விதனைக் கருதினனால். 113

முனிவோ ரிமையோ ருனற்கரிதாய்
முதுமா மறையின் முடிவிளங்கும்
தனிமா முதல்வேற் றுருவமதாய்த்
தன்னைத் திருத்தக் கருதியுளம்
கனிவா யடைத லுணரானங்
கவர்தம் பொருளைக் கவர்ந்துகொளில்
இனிநா மென்றும் வேறுபொருட்
கிச்சை வேண திலையெனவே. 114

உள்ளங் களிப்பாய் ஏவனடநீ
யோடா தேநில் லெனவெதிர்போய்
புள்ளந் தனைவான் மிசைசுழற்றிச்
போவ தெங்கென் றதட்டியுன்வாய்
விள்ளப் புகுவென் றங்கவர்பால்
விளங்கும் பணிதிக் ககமகிழ்வாய்
துள்ளித் துள்ளி நடம்புரித
லுணரா மறையோ னிவைசொல்வான். 115

அப்பா! கேணாம் வேட்டகம்போய்
யாங்குற் றிடுமென் மனையவளாம்
இப்பா வையொ டுமுனதாலிக்
கேகு வெனநீ யெதிர்வந்தே

---

113. முடிவில் திருமால் திருமகளுடன் ஆபரணங்களுடன் வருவதைக் கண்டு பரகாலர் சிந்தித்தார்.

114. இவர் தம் பொருளைக் கவர்ந்தால் இனி நாம் வேறு பொருளில் இச்சை வையோம் என்று ஆழ்வார் கருதினார். இதில் உள்ள நுட்பம் சிறப்புடையது. முனிவர்களாலும் தேவர்களாலும் நினைக்க முடியாததாய், மறையின் முடிவில் விளங்கும் பரம்பொருள் ஆட்கொள்ள வந்திருப்பதை ஆழ்வார் அறிந்திலர். வேணதில்லை - வேண்டுவதில்லை. இப்பாடலில் பரம்பொருளை உருகி உருகிப் பாடுகிறார் ஆசிரியர்.

115. புள்ளம் - கொடுவாள். 'வனத்திடை வளைந்து கூர்த்த புள்ளமும் கொண்டு'' என்று கீழையூர்ச் சடகோபதாசர் பகர்வர் (அரிசமய தீபம்). பணிதிக்கு- ஆபரணங்களுக்கு.

கைப்பா யிடுங்கட் குடித்தாடுங்
களிபோற் குதித்த லெவனெனவே
செப்பா வதற்குத் திருமங்கை
மன்ன னிதனைச் செப்பிடுவான். 116

பரகாலர் நிகழ்ந்தவை கூறல்

மறையோய்! கேட்டி யுயிர்போல
மருவு மெனது மனையவளாம்
மிறைபோ னுதற்சேர் குமுதவல்லிப்
பெயராள் தினமு மிவ்வூரில்
உறைபா கவதர் நூற்றெண்ம
ருண்ணத் ததியா ராதத்தை
முறையோ டிழைக்கி னலாலென்மேன்
முனிவாய்த் தன்னைத்தொட வொட்டாள். 117

அதனாற் பொருள்கை யுள்ளனவு
மந்த முறைசெய் தனன்பின்னர்
இதமாய்ப் பிறர்பாற் கடன்கொண்டிட்
டிழைத்தேன் அதற்பின் கடன்யாரு
முதவா தொழிய வுற்றதற்பின்
இதெலா மவளோ டுரைத்திலியான்
எதனாற் புரிவ தெனக்கேட்ப
விவ்வா றிழையென் றவளுரைத்தாள். 118

அந்த முறையால் வழிபறித்தங்
கதனை முயல்வேன் பலர்பொருளோ
டிந்தந் தினமும் வரப்பறித்தெம்
மில்லத் ததனை தூதுவர்பான்
முந்த வனுப்பி யினும்வருவா
ருண்டோ வெனவிம் முறையிருக்க
வந்த வுமது பொருள்பறியா
விடுகேன்; எனக்கு வழக்கீதே. 119

---

116. கைப்பாயிடுங்கள்-சுவைக்கும் போது இனிப்பாய்ப் பிறகு வாழ்வைக் கசக்கும்படிச் செய்யுட்கள். களி-கள் குடிப்பவன்.

117. முனிவாய்-கோபமாய். தொட ஒட்டாள்-தொடுவதற்கு உடன்படாள்.

119. பறியா விடுகேன்-பறிக்காமல் விடமாட்டேன். வழக்கு-வழக்கம்.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
MADRAS-28.

ஆத லாலும் மிடத்துளதாம்
பொருள்க ளனைத்து மெனக்களித்துப்
போத லேநன் கல்லவெனிற்
புடைத்துப் பறித்திட் டுமதுயிரைக்
காது வென்கை யுடைவாளா
லென்னக் கதித்திட் டருகணைய
மாது தாட்டா மரைவதனம்
நோக்கி மறையோன் வகுத்துரைப்பான். 120

மனையா டனது காதலினால்
வழியில் வருவோர் தமதுபொருள்
தனையாங் கவர்கள் துயரமுற
வாள்கொண் டடர்த்துக் கவர்ந்திடுமிவ்
வினையான் கள்வ னோவலதிம்
மிகுந்த பொருள்கொண் டருந்தியிடும்
அனையார் கள்ள ரோ?விதனை
யறிய வுரைநீ யென்றனனே. 121

கேட்ட மடவா ளிக்கொடியோன்
கிடைத்தற் கரிதா யெனையளித்தோர்
பூட்டும் பணிகள் பலவுமது
போதா தெனவீன் றவரையருள்
பாட்டன் பாட்டி யவரிடுநற்
பணிதி பலவும் பலபலவாய்
வேட்ட வகத்தோ ரிட்டதுவும்
விரும்பிப் பறிக்கத் துணிந்ததனால். 122

---

120. காதுவென் - கொல்வேன்.

121. திருமால், திருமகளை நோக்கி, "மனையாள் காதலாள் பொருள் கவர்ந்து பிறர்க்கு உதவும் இவன் கள்வனா? மிக்க பொருளை யீட்டித் தாமே நுகரும் பிறர் கள்வரா?" என்று வினவினான். அன்றே புரட்சிக்கு வித்திட்டு விட்டான் பெருமான்.

122, 123. என் பொருள் முழுவதும் இவன் பறிக்கத் துணிந்தான். அதனால் எனக்கு ஒன்றும் புலனாகவில்லை, என்றாள் திருமகள். வாள் சுழற்றி உம் முடியைத் துணிப்பேன் என்றார் பரகாலர்,

அந்த பயத்தால் எனக்கொன்றும்
தோன்ற விலையென் றவளுரைப்ப
இந்த விதமா யொருவர்முகம்
ஒருவர் நோக்கி யிருந்திடலும்
சிந்தை முனிவாய்ப் பரகாலன்
செங்கை யுறைவாள் தனைச்சுழற்றா
வுந்தன் முடியான் றுணிப்பனென்றவ்
வொளிர்வாள் தன்னை யோங்குதலும். 123

அஞ்சி நடுங்கு மவர்போன்மெய்
நடுங்கா வவனை நோக்கியெமைத்
துஞ்சப் பொருதா லதிலுனக்கென்
பயனோ சொல் ?லெம் பாலுளவாம்
விஞ்சு மணியா பரணமெலாந்
தருவே மெனவேண் டுதலாகக்
கஞ்சன் றனையுந் தியினளித்த
கடைமா மறையோன் கழறலுமே. 124

அதுவெஞ் செவியுற் றிடலுமுறை
யணிவா ளிட்டுக் கதைகரத்திற்
கதுவப் பிடித்திட் டடிப்பதுபோற்
கப்பி யிடவம் மறையவனும்
மதுகைப் புயத்தோய்! நீயடியே
லென்னா மேல்வத் திரமதனை
இதுகைக் கொள்ளென் றெறிந்திடலு
மவனு மிதனை யியம்பிடுவான். 125

உனதுத் தரியம் தந்ததனா
லென்னோ பலனுள் ளதுமேலும்
மனதுக் கிசையு மனையவளென்
றுரைதந் திடுமிம் மடமங்கை

---

124. துஞ்ச-இறக்க. பொருதால்-போர் செய்வதால். கஞ்சன் - பிரமன், கஞ்சனுக்கு அப்பன், ஆபரணம் எல்லாம் தருவேன் என்றான். கஞ்சன்-சிலேடை, கருமி என்ற பொருளுடன் மீளவும் படித்தால் பாட்டின் நயம் புலனாம். கடைமா மறையோன்-எல்லாம் அழிந்த பிறகும் எஞ்சியிருப்பவன்.

125. கப்பி - ஒருவகை ஆயுதம் (பிளவுபட்ட கொம்பு) நாட்டுப்புறத்தில் அதனைக் கவட்டை என்பர்.

தனது பணிக ளுள்ளவெலாந்
தரிக்கு மொருவத் திரம்தவிர
வெனது திருமுன் வைத்திடுவா
யெனமங் கையர்கோன் அதட்டலுமே. 126

மறையோ னெனுமத் திருமாலு
மணியா பரணந், தனைமடவாண்
முறையோ வெனத்தன் றிருக்கரத்தாற்
கழற்ற வேகு முறையறிந்து
நிறைநா ணொன்றும் வேண்டேன்மற்
றுளவெ லாம்நீ தருகென்றே
கறைவாட் டொழிலில் நிகரில்பர
கால னுரைப்ப வதுகேளா. 127

நீல னுரைத்த படிமடவா
ணிறைநா ணொன்றும் தவிர்ப்பித்துச்
சால வணியும் பணிகளெலாங்
கழற்றி யவன்கை தந்தனனால்;
கால னெனப்பூந் தடத்தடருங்
கராவின் வாய்ப்பட் டுளங்கலங்கி
மூல மெனவன் றழைத்தகரி
முன்வந் ததன்பே ரிடர்தவிர்த்தோன். 128

அந்த மணியா பரணங்கள்
யாவும் கைக்கொண் டதன்பின்னர்
உந்தன் மேனி தொடுகிலன்யா
னொளியா துன்மே லுள்ளவெலாந்

---

126. உனது உத்தரியத்தால் பயனில்லை. தரிக்கும் வத்திரம் தவிர உன் மனையாளின் ஆபரணம் யாவும் தா என்றார் பரகாலர்.

127. அந்தணனாக வந்த திருமால் தன் மனையாட்டியின் ஆபரணங்களையும் வேகத்தைப் பார்த்த பரகாலர், "நிறை நாண் (மாங்கல்யம்) தவிர மற்றவை தருக!" என்றார்.

128. மங்கல நாண் தவிர எல்லாவற்றையும் அந்தணன் வழங்கினான். வழங்கியவன் சிறப்பைப் பின் இரண்டு அடிகளால் விவரிக்கின்றார். காலன் என - யமனைப் போல. அடரும் கரா - வாட்டும் முதலை. அழைத்த கரி - கூப்பிட்ட கஜேந்திரன். யானையைக் காத்தவன் தன்னைக் காக்க முடியாதவன்போல் நடித்தான் என்பது குறிப்புப் பொருள்.

தந்தி டெனக்கை விரலணியுந்
திருவா ழிதனைத் தவிர்ந்திடமற்
றெந்த வெந்த வாபரண
மெல்லாங் கழற்றி யீந்தனனால். 129

அதுவுங் கரத்திற் கொண்டதற்பின்
னம்மா மறையோன் மேனிதனைப்
பதும நிகரும் பதமுதலாய்
முடியீ றாகப் பார்த்திடலும்
கதுவுங் கரத்தி லாழிதனைக்
கண்ணிற் காணாப் பெருங்களவா
இதுநீ யொளித்தால் விடுவேனோ?
வதையும் தருக வென்றனனால். 130

கொழுந்து பொருந்திப் படர்கீர்த்திக்
கலிய னிதனைக் கூறுதலும்
எழுந்து பெருகு முவகையையுள்
ளடக்கி யிஃதென் கைவிரலில்
அழுந்து முறையாற் கழற்றுதலுக்
கொவ்வா வெனக்கேட் டாங்கவனும்
செழுந்து ளவன்றி ருக்கரத்தைக்
கையாற் பிடித்துச் செப்பிடுவான். 131

இவ்வா றாகக் கழற்றுகென்றங்
குலியைக் கரத்தாற் பிடித்திழுக்க
அவ்வா ழியுங்கை வராமையினா
லதனை வாய்கொண் டீர்த்தனனால்
கவ்வா விழுக்கும் பொழுதெமது
"கலியனோ" வென்றவன் முடிமேல்
ஒவ்வா வலது கரந்தனைவைத்
துகந்தா னனைபா லுண்டுகந்தோன். 132

---

130. கைவிரல் மோதிரம் விட்டுப் போயிற்று. அதையும் தருக என்றார், பரகாலர்.

131. கழற்றுதலுக் கொவ்வா-கழற்ற முடியாது.

132. பரகாலர், கைவிரலில் உள்ள திருவாழியை வாய் கொண்டு கடித்து இழுத்தார். அப்போது பெருமான் உவந்து "எமது கலியனோ" என்று கூறி அவர் முடிமேல் வலதுகரத்தை வைத்தான். ஒவ்வா-நிகரில்லாத. அன்னைபால் உண்டு உகந்தோன்-திருமால்.

தலைமேல் கரம்வைத் துகந்திடவுந்
தெரியா னாகி யதைத்தவிர்த்தே
மலைபோற் குவித்த பணிமூட்டை
தனைச்சென் றெடுக்க வதுபுவியின்
நிலையா யழுந்தி வராமையினை
யறிந்தாங் கிதனை நினைவுற்றான்
வலைபீ றிடுஞ்சேற் றடம்பலவாய்
மருவுங் குறைய லூர்வள்ளல். 133

முன்னே யடைந்தோர் தமதிடத்துங்
கவர்ந்த தெடுத்தோம் இவன்பணிகள்
என்னே புவியிற் பொருதந்லிவன்
செய்மந் திரிப்பா மெனவுணர்ந்திட்
டன்னோன் தனைப்பார்த் ததட்டியடா
மறையோய் யறிமந் திரவன்மை
றன்னால் கவ்வை யழுந்திடச்செய்
தனைசொல் சாற்று கென்னலுமே. 134

அந்த வுரைகே ளாமுனங்கற்
றறிந்த திருமந் திரமதனால்
இந்த முறைசெய் தவன்யானே
யிதனை யறிநீ யென்றுரைத்தான்
முந்த வொருவா ளவுணனிடம்
குறளாய் மண்மூ வடியிரந்திட்
டெந்த வுலகும் ஓரடிகொண்
டளந்தே கவர்ந்த வெம்பெருமான். 135

---

133. பணிமூட்டை-ஆபரண மூட்டை. அது வராமையினால் கலியன் சிந்தித்தார். வலை-வலையை. பீறிடும்-கிழிக்கின்ற. தடம்-குளம். 'மீன்கள் வலையைப் பீறிடும்' என்ற தொடரில் உள்ளுறை உண்டு. மீன், வலையைக் கிழித்துத் தப்பிக் கொள்வது போல் பரகாலர் மாயை வீசிய வலையிலிருந்து வெளிவந்து விட்டார். சிந்தித்தே இங்கு இப்படி நாட்டு வளம் பேசப்பட்டுள்ளது. இடம் நிரப்ப வந்த சொற்கள் அன்று.

134, 135. அறிந்த மந்திரத்தின் வன்மையால் யான் கவ்வையில் (துன்பம்) அழிந்திடச் செய்தனை. வாள் அவுணன்-மகாபலி. குறள்-வாமனன். இரந்திட்டு-யாசித்து. "முன்னமோரவுணன் செங்கை நீரேற்று மூவுலகமும் உடன் கவர்ந்தோன்" என்ற வில்லியின் தொடரை உரித்துக் கொண்டு பின் இரண்டு வரிகளும் பிறந்துள்ளன.

ஆழ்வார் மந்திரம் பெறல்

ஆனா லந்த மந்திரத்தை
அறியும் படியிங் கெனக்குரைத்துப்
போனா யெனிலுன் றனையுனதூர்
போக விடுப்பேன் அலையெனிலுன்
னானா ருடலந் தனையென்கை
யொளிர்வா ளதனாற் றுணித்துயிர்போய்
வானா டாளும் படிவிடுப்பேன்
மறையோய் யிதைநீ யறியென்றான். 136

கொடியோ னான பரகாலன்
கொதிப்பா யுள்ளங் களிப்பெய்தி
வடிவா ளதனை யுறைகழற்றா
வையம் நடுங்கும் படிநடந்துன்
முடியான் றுணிப்பே னெனவவனும்
முடிகி வரலும் பயந்தவன்போல்
படிமீ தவ்வாள் வைத்துவரிற்
பகர்வே னென்றான் படியுண்டோன். 137

புகலு மொழிகேட் டவ்வாளை
யுறையுட் புகுவித் தருகணையும்
இகலோன் வளது திருச்செவியி
லுள்ளத் திருளை வெகுண்டெரிக்கும்
பகல்போ லிருநா லக்கரமாந்
திருமந் திரத்தைப் பகர்ந்திட்டான்
அகல்பூ விடைவா ழுயிரளித்த
வயனுக் கனமாய் மறையறைந்தோன். 138

---

136. துணித்து-துண்டாக்கி.

137. உறை கழற்றா-உறையிலிருந்து கழற்றி. வையம் நடுங்கும்படி-உலகமே நடுங்க. வாள் படிமீது வைத்துவரின் - வாளைப் பூமியில் வைத்துவிட்டு வந்தால்.

138. இகலோன் - மாறுபாடுடையவன் (பரகாலர்) உள்ளத்து இருளை வெகுண்டு எரிக்கும் பகல் போல் (உள்ள) இரு நாள் அக்கரமாம் திருமந்திரம் எனப் பிரிக்க. அஷ்டாட்சரத்தின் மகிமை. பேசப்படுகிறது. சூரியன் இருளை ஓட்டுவான். அதனால் அவ்விருள் மீளவும் வருகிறது, ஆனால் அஷ்டாட்சரமோ உள்ள இருளை எரித்து விடுகிறது. அயனுக்கு அறைந்த மந்திரம்-ஹம்ச கீதை. "அன்னமாகி அருமறைகள் அருளிச் செய்த அமலன்" என்று பெரிய திருமொழி பேசும். "அன்னமாய் அறைந்தாய் நீ" என்பர் கவிச்சக்ரவர்த்திகள்.

மாயை நீங்கியது

வானே முதலாம் பலவுலகும்
வயிற்றுள் ளடக்கு நாரணனுந்
தானே தன்னை யவனறியச்
சாற்றுந் திருமந் திரமதனால்
கானே வருவோர் தம்மைவாள்
காட்டிப் பறித்த பரகாலன்
ஊனே யுடல்சோ ஷித்தாந்தி
ரயங்க ளும்விட் டோடினவால். 139

தன்னுள் ளிருந்த கொடுமாயை
தனைவிட் டொழிந்த தன்மையும்பூ
மன்னுந் திருமா துடன்திருமா
லுகந்த செயலும், மற்றவர்தம்
பொன்னம் பதங்க ளறியுணர்வும்,
பரம பதத்திற், புகும்வழியும்,
துன்னு முயிர்கள் பெறுவாழ்வுந்,
திருமந் திரத்துட் டோன்றலுமே. 140

மனம்வாய் யொருமித் தவன்றுருத்தி
வைத்தூ திடுமக் கொல்லனுலைக்
கனல்வா யுருகு மெழுகெனலாய்க்
கசிந்து கசிந்திட் டுளமுருகித்
தனதா முடலந் தன்துவசந்
தானா காமற் றனிமுதலின்
முனமே விழுந்து புரண்டுபுரண்
டெழுந்தே முறையா னோக்கலுமே. 141

---

139. உடல் சோஷித்து - ஊனுடல் வற்றி. திரையங்கள்-காம்மயக்க வெகுளிகள். "சோஷியாத பிறவிக்கடல்," என்பது ஆசாரிய ஹிருதயத் தொடர். "ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி" என்ற திருவாசகத் தொடரை இங்கே அனுசந்திக்கவும்.

140. திருமந்திரத்தால் ஆழ்வார் உணர்ந்தவற்றை ஆசிரியர் விவரிக்கிறார். கொடு மாயை ஒழிந்த தன்மையும், திருமால் உகந்த செயலும், பதங்கள் அறி உணர்வும், பரமபதத்திற் புகு வழியும், உயிர்கள் பெறுவாழ்வும், திருமந்திரத்தால் தெரிந்தன. இவற்றை ஸ்ரீவைஷ்ணவர்கள் "அர்த்த பஞ்சகம்" என்பர்.

141. கொல்லன் உலைக்களத்திற்பட்ட மெழுகுபோல் ஆழ்வார் உருகினார். 'புரண்டு புரண்டு' - என்ற இடத்தில் "தேட்டருந்திறல்" என்று தொடங்கும் குலசேகரர் பதிகத்தை ஒப்பிட்டுப் பார்க்கவும்.

இறைவன் கோலங் காட்டல்

மறையோ னான திருவுருவம்
மாற்றிக் கமலத் திருவுடனே
சிறையார் கருட னெருத்தமிசைச்
செம்பொன் முடிமா முடியோங்கக்
கறையா ராழி வளைசிலைவாள்
கதையைம் படையும் புடைதயங்க
நறையார் துளவப் படலையொடுங்
கவுத்து வமும்நன் மார்பொளிர. 142

அரையிற் பீதாம் பரம்விளங்க
வணியம் புயத்தின் வலயமின
வுரைசெய் நயன மணிவாய்கை
யுந்திச் சரண மெனவொளிரும்
விரைசெய் கமல வனமலர்ந்தோர்
மேகம் விசும்பி னிடைபசும்பொன்
வரையின் மிசையுற் றெழுந்திருந்து
வருத லெனலாய் மாணுறவே. 143

சிவனும் வேளும் கரிமுகனுஞ்
செங்கேழ் கமலந் தனிலுறையும்
அவனும் புருகூ தனும்வானத்
தனைவோர் களுமைம் புலனவித்த

142-143. எம்பெருமான் ஆழ்வாருக்கு வழங்கிய திருக்கோலத்தை ஓவிய மாக்கி உள்ளார் ஆசிரியர். எருத்தம்-கழுத்து. துளவப்படலை-திருத்துழாய் மாலை. 'கொய்துழாய்ப் படலையங்கொண்டல்' என்பர் செவ்வைச் சூடுவார் (பாகவதம்). பீதாம்பரம்-பொன்னாடை.

நயனம், வாய், கை, உந்தி, சரணம், இவைகள் தாமரைக்காடு போன்றி ருந்தன. திருமால் கமலவனம் பூத்த மேகம் போன்றிருந்தான். கருடன் பொன் மலை போன்றிருந்தான். "கருமுகில் தாமரைக்காடு பூத்து, செம்பொற்குன்றின் மேல் வருவபோல் கருடன் மேல் வந்து தோன்றினன்" என்ற கவிச்சக்கரவர்த்தி களின் (பால) பாடலுக்கு விரிவுரை இங்கு உள்ளது.

தவரும் நித்தர் முத்தர்கள்கின்
னரர்கந் தருவர் சித்தர்முதல்
எவரும் புடையிற் சயசயவென்
றேத்தித் தொழுது வணங்கிடவும். 144

அண்டத் துறுதுந் துமியினங்க
ளலைமாக் கடல்போல் அதிர்ந்தொலிக்க
கண்டொத் திடுஞ்சொல் லரம்பையர்க
ணடனம் புரியக் கைப்பிரம்பாற்
றெண்டித் தெதிரிற் சேனையர்கோன்
விலக்கத் திருந்து முலகமெலாம்
உண்டிட் டுமிழ்ந்த திருமாலா
மொருவன் விளங்கல் தனைக்கண்டான். 145

கண்டான் பின்னும் புவியின்மிசை
விழுந்தான் எழுந்தான் கரந்தலைமேற்
கொண்டான் நந்தா தோடினன்பின்
குதித்தான் நடித்தான் களிநறவ
முண்டான் போலச் செயல்களொன்று
முணரான் றெளிவா யொருமுறையே
வண்டார் துளவன் றிருமேனி
மகிழ்ந்து நோக்கா வகுத்துரைப்பான். 146

வேறு

உன்னைநீ யுணர்கிலா யுனது மாயைகள்
தன்னையா னறிந்திடுஞ் தகைய தாகுமோ?
வன்னையா யத்தனா யகில முந்தரும்
பொன்னைமார் பகத்தணி புனித மூர்த்தியே! 147

144, 145. வேள்-முருகன். கரிமுகன்-விநாயகப்பிரான். செங்கேழ்-சிவந்த ஒளி. புருகூதன்-இந்திரன். "புருகூதன் முதலான முப்பது முக்கோடி புத்தேளிர்" என்பர் வில்லியார், (பாரதம்). ஐம்புலன் அவித்த - ஐந்து புலன்களையும் அடக்கிய, கண்டு-கற்கண்டு. "கன்னல் அமுதெனவும், முக்கனி எனவும், வாயூறு கண்டெனவும்" என்று தாயுமானவசுவாமிகள் பேசுவார். தெண்டித்து - கட்டளையிட்டு.

146. நந்தாது-குறையாமல். வண்டார் துளவன்-வண்டுகள் மொய்க்கும் துளசி மாலையணிந்த திருமால்.

147 முதல் 150 வரை பரகாலனின் துதிகள். 147. உன்னை நீ உணர்கிலாய்-உன்னுடைய பெருமையை நீயே அறியமாட்டாய். "உன்னை நீதானும் உண

காலநேர் கனகனை கடிந்த வன்றரும்
பாலனைப் பரித்தருள் பரம சோதியே!
மூலமென் றழைத்திடுங் கரிதன் முன்பினோர்
நீலமால் வரையென நின்ற மூர்த்தியே. 148

ஆலமுண் டவற்கருந் துயர கற்றியே
சூலமு மளித்தருள் சுருதி நாதனே!
நீலவாண் கண்ணழற் பிறந்த நேரிழை
யோலமிட் டரற்றிட வுடைவ ழங்கினோய். 149

அராவணை துயிறுறந் தமரர்க் காகவே
மராமர மனையதோள் வலியி ராவணன்
விராதனே முதலினோர் தமைவி ளித்திட
இராமனென் றயோத்தியி னெய்து மையனே. 150

அடியனை யொருபொரு ளாக வெண்ணியே
கொடியிடை முளரிவாழ் கோதை யோடுமிப்
பொடியுடைக் கானம்நீ புகுத வாளொடும்
தடியொடும் வழியிடை தடுத்திட் டேனரோ. 151

பதைபதைத் திடவுயிர் பாரித் திட்டவிக்
கதையினா லடிக்க வுங் கருதி வாட்கொடு
வகைசெய நினைந்தனன் வலிய பாவியேன்
இதைவிடப் பிறிதின்ன மென்செய் கின்றதே. 152

ராதாய்'' என்பர் வில்லியார் (பாரதம்). அத்தனாய்-தந்தையாய் ''அன்னையாய் அத்தனாய் என்னை ஆண்டிடும் தன்மையான்'' - என்பர் மதுர கவிகள்.

148. காலம் நேர் கனகன்-காலம் போன்ற இரணியன். எல்லாவற்றையும் அழிப்பது காலம். ஆதலின் காலம் நேர் கனகன் என்றார். காலத்தின் வன்மையை ஞானவாசிட்டம், வைராக்கியப் பிரகரணம் விவரிக்கும்.

149. சிவபிரானுக்குச் சூலத்தைக் கொடுத்தவனே. கண்அழல் - சிவபெருமானின் கண்ணாகிய நெருப்பு, அழலிற் பிறந்த நேரிழை திரௌபதி. ''வாமன் நுதற்கண்மேல் இன்றும் இவள் பிறந்தாள்'' என்பர் வில்லியார்.

150. அராவணை-பாம்புப் படுக்கை. விளித்திட-கொல்ல.

உனதுநற் பணியெலாம் பறித்திவ் வுத்தமி
தனதுயர் பணிகள்கொண் டாழி தன்விரல்
எனதுபுன் வாயினாற் கவ்வி யீர்த்திட
மனதுகொண் டிழைத்தனன் மற்றென் செய்வதே. 153

நல்லிய லல்லபுன் மொழிக ணாவினாற்
சொல்லியும் பலகொடுந் தொழிலி யற்றுமிப்
புல்லிய னுய்வினிற் பொருந்தப் புன்றலை
கல்லிடை மோதியான் கழித்தல் நன்றரோ. 154

என்றுகொண் டினையன பன்னி யேடவிழ்
மன்றவிழ் துளவணி மாலை மார்பினான்
றன்றிரு முன்னரில் கலியன் றானுமே
கன்றிய மனதொடு முருகும் காலையில். 155

அம்மொழி பலவுங்கேட் டருளி னாழியான்
விம்முறு கலியனை விருப்பி நோக்கித்தன்
செம்மைசேர் பவளவாய் நகை சிறந்திட
இம்மொழி தனையெடுத் தியம்பு வானரோ. 156

யாமே மயக்கினோம்

உன்னைநீ வெறுத்திடே லுனது நல்லுளந்
தன்னையாம் மயக்கவித் தகைமை செய்துளோம்
முன்னைய துவக்கெலா முடிந்து நீங்கின
வென்னைகொ லின்னமும் மிரங்க லய்யனே. 157

151-153. முள்ளிவாழ் கோதை-தாமரை வாழ்கின்ற இலக்குமி. பாரித்திட்ட-வளைத்த. உத்தமி-இலக்குமி. உத்தமியின் பணிகளையும்,மோதிரத்தையும் கவர்ந்தேன் என்கிறார் (இங்கு குருபரம்பரை பன்னீராயிரப்படி பார்க்கவும்).

154. புல்லியன்-அற்பனாகிய யான். உய்வினில் பொருந்த-உய்தியடைய. புன்தலை கல்லிடை மோதி-அற்பத் தலையைக் கல்லிலே அறைந்து, அழித்தல்-இறத்தல். "தலையுடை யொலிக்கும் சிலையிடை மோதியும்" என்ற நால்வர் நான்மணிமாலை காட்சி தருகிறது. (திருக்குறிப்புத் தொண்டரின் செயற்கருஞ் செய்கை).

155. இனையன பன்னி - இத்தகைய மொழிகளைப் பேசி. கன்றியமனம் - வெதும்பிய மனம்.

157. திருமால் பரகாலரைத் தேற்றுகின்றான். துவக்கு-கட்டு.

அன்றியுஞ் செய்விளை யாட்டு மின்சொலும்
தன்றிரு மகன்செயத் தந்தை கொள்வபோல்
இன்றுள மகிழ்ந்தனன் நீயி ழைத்ததற்
கொன்றுநீ யஞ்சிடே லுளங்கொள் வாயரோ. 158

இன்னமும் புகல்வதொன் றுளது யாதெனில்
அன்னது கேட்டியா லாழி சேர்விரல்
தன்னைநீ கவ்விடைத் தமிழின் வாசனை
யுன்னணி வாயில்வந் துற்ற தாதலால். 159

இமிழ்திரைக் கடற்புவி இடைவந் துற்றுளோர்
அமிழ்தெனப் பருகிவீ டணையு மாறதாய்
யுமிழ்மணங் கமழிசை யுற்றி டுஞ்செழுந்
தமிழ்கொடு கவிதைகள் பலவும் சாற்றியே. 160

இரங்குமா கடலென விரைத்தி ரைத்துத்தன்
கரங்களால் வருடல்போற் கவினு முத்துறும்
தரங்கமார் காவிரித் தார ணிந்துள
வரங்கமா நகரினை யணுகி யாங்கதில். 161

திருப்பணி வேலைகள் செய்து முற்றியே
விருப்பொடுங் காதலி யோடு மேவிப்பின்
னிருப்பதாம் வைகுந்த மென்னு நற்பதிப்
பொருப்புறழ் தோளினாய் பொருந்து கென்றனன். 162

என்று பற்பல மொழி யியம்பி யாவரும்
மொன்றியே திரண்டிரு மருங்கு முற்றிடக்
கன்றைவிட் டகன்றிடுங் கறவை போலவே
தன்றிரு வுலகிடைச் சார்ந்திட் டானரோ. 163

---

158. மைந்தன் விளையாட்டும், இன்சொல்லும் கண்டும், கேட்டும் இன்புறல் போல் மகிழ்ந்தோம். இழைத்ததற்கு-செய்த செயலுக்கு.

159, 160. நீ, என் மோதிரத்தைக் கழற்றும் போது தமிழ் வாசனை வீசிற்று, ஆதலால் என்மேற் றமிழ்க் கவிதை இசைக்க.

161, 162. அரங்கமா நகரடைந்து, திருப்பணிகள் செய்து முற்றியபின் உன் காதலியோடும் பரமபதம் வருக. 161. பாற்கடலைப் போலத் திருவடிகளை வருடும் திரைகளைக் கொண்டுள்ள திருக்கர்விரியை மாலையாகக் கொண்டுள்ள திருவரங்கம். "பொன்னி திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும் கருமணி" என்பர் குலசேகரர்.

163. கன்றை விட்டகன்றிடும் கறவை-கன்றைப் பிரிகின்ற பசு. கறவை-பசு. கறக்கப்படுதலின் கறவையாயிற்று, காரணப்பெயர். "கன்றுபிரி காராவின் துயருடைய கொடி" என்பர் கவிச்சக்ரவர்த்திகள்.

மாயவன் றிருவொடும் மறைந்து நீங்கலும்
ஆயவன் றிருவடி யதனை யுன்னியே
தூயவ னாம்பர காலன் துன்புறாத்
தாயகண் றிடுங்குழந் தையினி ரங்கினான். 164

பிறிவாற்றாமை

ஐயனே! யமலனே! அடியருக் கெலாம்
மெய்யனே! சுருதியின் முடிவி ளங்கிடுந்
துய்யனே! சிவன்முத லோர்க்குந் தோன்றுறாப்
பொய்யனே! யென்னவும் புலம்பி னானரோ. 165

செந்திருப் பொலிந்திடச் சிவன யன்றனோ
டிந்திரன் முதலினோர் ஏற்றிப் போற்றிட
வந்தரத் திடைவரு மமல! யானினி
எந்தநாள் காண்பதென் றேங்கி னானரோ. 166

ஏங்கின னொருமுறை தெளிவு மெய்தியே
ஆங்குவிட் டணிநக ரதில டைந்துதன்
தீங்கரும் பனையசொற் றேவி தன்னொடும்
பாங்குற வாலியான் பதம்வ ணங்கியே. 167

ஆரண மறிந்திடற் கரிய சோதியாம்
நாரணன் புவித்திருப் பதியி னல்லுருப்
பூரண மாகவே பொருந்தி வைகுறும்
காரணந் தனையுளே கருதி னானரோ. 168

---

164 முதல் 166 வரை உள்ள பாடல்களில் இறைவனைப் பிரிந்த பரகாலரின் வருத்தம் பேசப்பட்டுள்ளது.

167. தீங்கரும்பனைய சொல்தேவி-குமுதவல்லியார். ஆலியான் - திருவாலி நகரில் எழுந்தருளியுள்ள பெருமான் (திருவாலி மணவாளன்).

168. ஆழ்வார் அர்ச்சையின் சிறப்பை உணர்ந்தார். சோதி வடிவமான திருமால் அந்தப் பூமியில் திவ்யமங்கள விக்ரகத்துடன் இருப்பதன் காரணத்தை உள்ளத்தில் சிந்தித்தார்.

அன்னமால் மருவிடு மலைகொள் பாற்கடற்
றன்னையும் பரமவை குந்தம் தானெனப்
பன்னுமிவ் விருநகர் தவிரப் பார்மிசை
மன்னுனூற் றாறெனும் பதிவ ணங்குவான். 169

அமுதமொத் தினியசொல் லிரதியோ வெனும்
குமுதவல் லிப்பெயர்க் கோதை தன்னொடும்
கமலமொத் திடுமுகம் கவின வாலியாம்
அமலநற் பதிதொழு ததைவிட் டேகினான். 170

ஆழ்வாரின் திவ்யதேச யாத்திரை

அத்தியூர் புட்குழி யரங்கம் வேங்கடம்
வித்துவக் கோட்டிபோர் பேரை விண்ணகர்
பத்தவி லோசனங் குடந்தை பாடகஞ்
சித்ரகூ டம்முத லாகச் செப்பிடும். 171

நூறுட னாறென நுவறி ருப்பதி
வீறுமங் களங்கொள்விக் கிறக மாகிய
நாறுபூந் துளவணி நார ணன்பத
மூறுமன் புடன்பணிந் துருகி னானரோ. 172

உரியனாய்ப் பற்பல உயிரு ணன்றுறை
கரியமால் பெருமையைக் கண்ண கன்றிடும்
விரிகட லுலகெலாம் விளங்கு மாறதாய்
அரியசெந் தமிழினா லறைத லுன்னியே. 173

பெருந்திரு மொழியொடும் பெருமை சேர்மடல்
திருந்திரண் டொடுமெழு கூற்றி ருக்கையும்
பொருந்திருத் தாண்டக மிரண்டும் பொய்யிலிங்
கரும்பொரு ளாறையும் மறைந்து பின்னரின். 174

169, 170. பாற்கடல் வைகுந்தம் தவிர மற்றறய 106 திருப்பதிகளை வணங்குவதற்குக் குமுதவல்லியாரோடும் புறப்பட்டார்.

174. ஆழ்வார் திருவாய் மலர்ந்த நூல்களின் பெயர்கள் இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளன. பெருந்திருமொழி-பெரிய திருமொழி, மடல் இரண்டு - பெரிய திருமடல், சிறிய திருமடல். எழுகூற்றிருக்கை. தாண்டகம் இரண்டு-சிறிய திருத்தாண்டகம், பெரிய திருத்தாண்டகம்.

கருவரங் கந்தனை யொழிக்குங் கார்முகில்
பெருவரங் காதலித் தவர்பெ றும்படி
இருவரங் கந்தனி லிருப்பப் பள்ளிகொள்
திருவரங் கந்தனைச் சேர்ந்திட் டானரோ. 175

அத்தலத் தற்புத மனைத்துங் காண்குறா
வெத்தலங் களுமொவ்வா திதற்கென் றெண்ணியே
சித்திர மிழைத்தகோ புரத்துட் செம்மைசேர்
கைத்தலந் தலைமிசை கவினச் சென்றனன். 176

அந்தர மிசையடைந் தலர்க டுவியே
சந்திர மவுலியான் றாம ரையுளான்
இந்திரன் முதலினோ ரெட்டெ ,ழுத்தெனும்
மந்திர மோதியே வணங்கி வாழ்த்திட. 177

பன்னக வணைமிசைப் பள்ளி கொண்டிடும்
அன்னமா மலரடி யதனைப் பூந்திரு
முன்னிலை யாய்முடி யுறவ ணங்கியே
தன்னர மனையிடை சார்ந்து வைகினான். 178

---

175. கருவரங்கம்=கரு+அரங்கம் - கர்ப்பமாகிய நாடகசாலை. கார்முகில் கரிய மேகம் போன்ற திருமால். பெரு வரம்+காதலித்தவர்-பெரிய வரத்தை(வீடு) விரும்பியவர். இருவர்+அங்கந்தனில் இருப்ப.சிவபிரானும் திருமகளும் வீற்றிருக்க. பள்ளிகொள்-படுத்துள்ள. திருவரங்கச் சிறப்பு பேசப்படுகிறது.அரங்கன் மார்பில் சிவபிரான் இருப்பதை-மாதங்கத்தானை, என்று தொடங்கும் திருவரங்கத் தந்தாதியில் காண்க. 'தன்பால் மாது அங்கத்தானை வைத்தானை வைத்தேன் என் மதியகத்தே' என்பர் ஐயங்கார், பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து என்றும் வலத்தனன் திரிபுரம் எரித்தவன் என்றும் சடகோபர் திருவாய் மலர்ந்தருளுவார்.

176, 177, 178. பாடல்களில் ஆழ்வார் திருவரங்கச் சிறப்பைக் கண்டு மகிழ்ந்து, திருமகளை முன்னிட்டுப் பிறகு தன் அரமனை சார்ந்தமை பேசப்படு கிறது

176. காண்குறா-கண்டு. சித்திரம் இழைத்த கோபுரம்-பொம்மைகள் பெற் றுள்ள கோபுரம். இன்று ஏட்டில், சுவரில் பொறிக்கப்பட்டதை மாத்திரம் சித்திரம் என்பர். படிமங்களையும் சித்திரம் என்பர் கம்பன் அடிப்பொடி. "ஓவியச் செந்நூல்" கண்டால் ஐயம் தீரும். ஆபாச சித்திரம், அர்த்த சித்திரம், பூரண சித்திரம் எனச் சிற்ப நூல்கள் பகரும். 'மாடக்குச் சித்திரம்' என்ற நன்னூலைக் காண்க,

அந்தநாள் நாரண னறைந்தி டும்பணி
யெந்தவா றிழைத்திட லாகு மென்னவோர்
தந்திரம திற்செயல் தகுதி யாமெனச்
சிந்தையி னொருமுறை தெளிவு கொண்டனன். 179

ஆழ்வார் திருப்பணி

புத்தர்தம் பொருள்புவி புதைத்தி டும்பொருள்
பத்தர்தம் பொருள்அரன் பட்டு ளோர்பொருண்
மித்திரர் பொருண்முடி வேந்தர் தம்பொருள்
இத்தகை யாகிய பொருளு மின்னமும். 180

ஊமர்தம் பொருள்முட முற்று ளோர்பொருள்
வாமியர் தம்பொருள் வல்ல டிப்பொருள்
ஆமிதென் றவைகள்கொண் டணுகு வீரென
நேமியா வருவர்பின் ஒதுங்கு நீர்மையான். 181

நீர்மிசை நடப்பவ னிழலொ துங்குவோன்
தோர்விலா வழக்கின னுயரத் தொங்குவான்
நேரினா னாதுவோ நேர்ந்து தந்திரம்
சோர்வுறப் பலபொருள் தொகுத்திட் டாரரோ. 182

விற்பொலி யட்டகோ புரங்கள் வேறிரண்
டுற்றிடு மதின்மடைப் பள்ளி யோங்கிடும்
நெற்களஞ் கியமுநெற் குத்து மண்டபம்
பற்பல வாந்திருப் பணிகள் செய்தனன். 183

புத்தர்க ளருகர்கள் பொருந்து றுஞ்சிவ
பத்தர்கள் மாயவா தியர்கள் பற்பல
இத்தகை யாம்பர சமயத்தி யாவரும்
யெத்தகை வாதின்வந் தெவரி யம்பினும். 184

180, 181, 182. பொருளைச் சேகரித்த முறை பேசப்படுகிறது.

182. பாடலில் ஆழ்வார்களின் தோழர்களின் பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ளது.

183. ஆழ்வார் திருவரங்கத்தில் செய்த திருப்பணிகள் சுருக்கிக் கூறப் பட்டுள்ளன. அஷ்டகோபுரம்-எட்டுறுப்புக்களைப் பெற்ற கோபுரம்.

184-185. ஆழ்வார் பரசமயவாதியரை வென்று பற்பல விருதுகள் பெற் றமை பேசப்படுகின்றன. மாயவாதியர்-மாயைதான் உள்ளது, பிரம்மம் இல்லை என்பவர், பிரம்மம் ஒன்றே உண்டு என்பவர் பிரம்மவாதிகள்.

அவ்வவைக் கெதிருறை வேத மாதிகொண்
டிவ்வித மாமென வெடுத்தெ டுத்துரைத்
தொவ்வுற வாதுவென் றவரு ரைத்திடும்
செவ்விநேர் நாமங்கள் பலசி றந்தனன். 185

இந்தநன் முறையினால் எவரு மேத்திடச்
செந்திரு வனையசீர் தேவி தன்னொடும்
மந்திர மனையதோண் மங்கை வேந்தனும்
அந்தமா நகரிடை யமரும் நாடனின். 186

ஒருபக லரங்கர்பா லடைந்து வப்பொடும்
திருவனந் தன்மிசை துயிலும் செவ்வியோய்!
இருவினை யொழிந்துள தெனக்கு நற்பதந்
தருதியென் றிருபதம் தாழ்ந்து நின்றனன். 187

ஆழ்வார் திருநாடலங்கரித்தது

நின்றவக் கலியனை நீல மால்வரை
யொன்றிய வுருவினா னுவந்து நோக்கியே
நன்றது புரிகுதும் நமக்கோ ரில்லதாம்
தென்றிருக் குறுங்குடி சேர்தி யென்றனன். 188

என்னவாட் கலியனும் மினிய வானந்தம்
துன்னிட வவன்பதந் தொழுது போற்றிசெய்
தன்னநற் குறுங்குடிக் கணுக லுன்னியே
பொன்னிவர் தண்டிகை பொலிய மேவினான். 189

சுற்றினு மடியர்தங் குழாந்து வன்றிடக்
கொற்றமெய் திடும்பர சமய கோளரி
யுற்றன னெனத்திருச் சின்ன மூதிடப்
பொற்றிரு வரங்கம் விட்டரிதிற் போயினான். 190

---

187. ஆழ்வார், எனக்கு இருவினைகளும் நீங்கிவிட்டன, முத்தி அருள் என்று திருவரங்கனிடம் விண்ணப்பித்தார்.

188. 'குறுங்குடிக்கு வா' என்றான் அரங்கன். நீலமால்வரை ஒன்றிய-பச்சைமாமலை போன்ற திருவரங்கன். சேர்தி-சேர்வாயாக.

190. பரசமயகோளரி-மற்றைய சமயத்தார்க்குச் சிங்கம் போன்றவன். திருச்சின்னம், வாத்திய விசேடம் என்று திருச்சின்னமாலை வியாக்கியானத்தில் வங்கீபுரம், நவநீதம் ஸ்ரீராம தேசிகாசாரியர் விளக்கினார். நீண்ட ஊது குழலை ஊதியபடி அத்திகிரி அருளாளப் பெருமான் வந்தார் என்பது போன்ற புகழ் மொழிகளைச் சாற்றுவார்கள். நிகமாந்த தேசிகரின் திருச்சின்ன மாலையை அனுசந்திக்கவும்,

ஆலைசா றடும்புகை புயலென் றண்மியே
காலைமா மயிலினங் களிந டஞ்செயும்
சோலைமா மலையினைத் துன்னி யேவன
மாலைமார் பழகரை வணங்கி யேகினான். 191

வெதிரினா லொழுகுதேன் மேவிப் பாய்தலில்
கதிருடை செந்நெல்வான் கவின்கொண் டோங்கிடும்
மதுரையிற் கூடலின் அழகர் வண்பதம்
சதிருடன் முடியுறத் தாழ்ந்து போற்றினான். 192

வில்லிபுத் தூரினை யணுகி மேல்வரும்
மல்லரைக் குமைவட பத்திர சாயிதாள்
அல்லியின் வணங்கிப் பல்லாண் டெனுந்தமிழ்
சொல்லிய பெரியரைத் தொழுது போயினான். 193

குருமணி யினம்பல கொழித்தி ரைத்தலை
இருபுற மொதுக்கும்வே றிணையி லாதசீர்ப்
பொருனையின் வடகரை பொலியப் பெற்றிடை
மருவுவை குந்தநா தரைவ ணங்கினான். 194.

வைத்தமா நிதிக்குழைக் காதர் வண்டினம்
மொய்த்ததா மரைக்கணர் மாயக் கூத்தர்முன்
பெய்த்தவெம் மிடர்கடி வாறெண் ணார்தமைக்
கைத்தொழி காசினி வேந்தைக் காண்குறா. 195

---

191. ஆலை சாறடும் புகையை மேகம் என்று மயில்கள் ஆடும், திருமாலிருஞ் சோலையை அடைந்து அழகரை வணங்கினார் ஆழ்வார்.

192. மூங்கில் தேன் பாய்ந்து செஞ்நெல் வானளாவ வளரும் மதுரையை அடைந்து கூடல் அழகரைப் பணிந்தார். வெதிர்-மூங்கில். சதிர்-அழகு. "சதிரிள மடவார்", என்பர் சடகோபர்.

193. வில்லிபுத்தூரில் பல்லாண்டு பாடிய ஆழ்வாரைப் பணிந்தார். மல்லரைக் குமை-மல்லர்களை வென்ற. வடபத்ரசாயி-ஆலிலையில் சாய்ந்து துயிலும் பிரான். "சாய்ந்த திருவரங்கம்" என்பர் திவ்யகவி (அஷ்டப்பிரபந்தம்).

194. ஸ்ரீவைகுண்ட நாதரைப் பணிந்தார். மணியின் கூட்டங்களைத் தாமிரபரணி இரண்டு கரையிலும் ஒதுக்கும் வைகுந்தம்.

195, வைத்த மாநிதி-திருக்கோளூர்ப்பெருமான். குழைக்காதர்-தென் திருப்பேரைப் பெருமான். தாமரைக் கண்ணர்-தொலைவில்லி-மங்கலப்பெருமான். மாயக்கூத்தர் - திருக்களந்தைப் பெருமான். இடர்கடிவார் - சிரீவர மங்கைப் பெருமான். காசினிவேந்து-திருப்புளிங்குடிப்பெருமான்,

அவ்வவ ரிணைத்திரு வடியம் போருகம்
ஒவ்வுறத் தன்முடி தனைக்கொண் டொற்றியே
யெவ்வமற் றுளமகிழ் வெய்திப் போற்றியச்
செவ்விய நகரினைத் தீர்ந்திட் டேகினான். 196

முருகவிழ் முளரிமுத் திளநி லாவினால்
அருகுறு குமுதம்விண் டலரு மாவயல்
குருகையா திப்பிரான் குலவு தண்முடி
மருவுற வணங்கியே வாழ்த்தி யேகினான். 197

கூனிலாம் பிறைமணிக் கோயின் மேற்றவழ்
வானமா மலைதனை யணுகி வண்டுணுந்
தேனமர் துளவதோத் தாத்ரி நாதர்செம்
பூனிகர் பதந்தொழு தேத்திப் போயினான். 198

நறுங்குழன் மடந்தையர் நடைந டந்திடுந்
தொறுங்களி சிறந்திடத் துடர்வ தற்கவா
வுறுங்குலப் பெடையன முறையு மாவயல்
குறுங்குடித் திருநகர் குறுகி னானரோ. 199

அத்தலத் தருச்சகர் முதல யாவருங்
கொத்துடன் மகிழ்ந்துவந் தெதிர்கொண் டேகிட
முத்தெறி பாற்கடன் முழுகிப் பன்னிரண்
டொத்திடு திருமண்காப் புவந்து சாற்றியே. 200

---

196. திருவடிஅம்போருகம்-திருவடித்தாமரை. எவ்வம்அற்று-துன்பம் நீங்கி.

197. தாமரையிலிருந்து உண்டான முத்துக்களால் குமுதம் மலரும் வயல் சூழ்ந்த திருக்குருகை. முருகு-தேன். முளரி-தாமரை. ஆதிப்பிரான்-குருகைப் பெருமான் பெயர்.

198. பிறைதவழ்-கோயிலையுடைய வானமாமலை.

199. மடந்தையர் நடையைக் கற்கப் பெடையன்னம் விரும்பும் குறுங்குடி. கற்க ஆங்கு உறும் குலப்பெடை அன்னம் என்று பிரிக்கவும்.

200. பாற்கடல்-தீர்த்தப் பெயர். பன்னிரண்டு திருமண்காப்பு-கேசவாதி நாமங்கள் பன்னிரண்டு ஆகலின் திருமண்காப்பு பன்னிரண்டாயிற்று. நாமங்களைச் சொல்லிக் கொண்டு இடுவதால் திருமண் நாமம் என்ற பெயர் பெற்றது. "ஈராரு நாமம் உரை செய்து மண்கோடிடுவார்கள் காணும் இமையோர்" என்று வில்லிபுத்தூராழ்வார் பாசுரமிடுவார்-(பாரதம்). வைதீகர் யாவராலும் போற்றப் படும் பெயர்கள் கேசவாதி நாமங்களே.

இரண்டெனும் துயந்தனை துதிசெய் தியாவரும்
திரண்டிரு மருங்குறச் சேர்ந்து கோயிலுள்
கரண்டமா டிடும்பொய்கைக் கரும்ப னைக்கனி
மிரண்டிள வாளைபாய்ந் தெழும்ப வீழ்வதை. 201

இருகணு மகிழக்கண் டிருந்த மானம்பி
திருமலை நம்பிபாற் கடலி னம்பிசீர்
பெருகநின் றருணம்பி கிடந்த நம்பிப்பேர்
மருவுமை வர்கண்மல ரடிவ ணங்கினான். 202

அழகிய நம்பிபொன் னடியிற் கண்ணநீர்
ஒழுகுறும் படியணிந் துகந்தெ ழுந்துகைத்
தொழுதடி யேற்கரு டுய வீடெனா
இழுதென வுருகிநின் றேத்து மெல்லையில். 203

அளித்தனம் முத்திவீ டணைதி யென்றுதேன்
துளித்திடும் துளவமா லுரைப்பத் தூவுளம்
களித்துயர் விமானமேற் கவின்கொண் டோங்கியே
குளித்தனன் விரசயிற் குலவு நீரிடை. 204

படிகநன் மேனியாய்ப் பரம வான்பதி
நெடியசெம் பொன்மணி நிரப்பு மண்டபத்
தடியவர் குழுவொடு மணுகி வாழ்ந்தனன்
வடியுடை வாட்கர மங்கை மன்னனே. 205

201-202. த்வயத்தைச் சொல்லியபடி பரகாலர் கோவிலுக்குள் சென்றார். செல்லும்போது பனைக்கனியஞ்ச, மீன்கள் பாய்வதைக் கண்டு கொண்டே போய்ப் பெருமான்களை வணங்கினார்.

201-ஆம் பாடல் "அரண்ட மாடு பொய்கையுள் கரும்பனைப் பெரும் பழம் புரண்டுவீழ, வாளைபாய் குறுங்குடி நெடுந்தகாய்" என்ற திருமழிசைப் பிரான் பாடலின் சாரமாகும்.

202. ஐந்து பெருமான்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன. 1. இருந்த நம்பி, 2. திருமலை நம்பி, 3. பாற்கடல் நம்பி, 4. நின்ற நம்பி, 5. கிடந்த நம்பி.

203. பிரதானமான பெருமானின் பெயர் வைஷ்ணநம்பி, உகந்து-விரும்பி. 'அடியேற்கு அருள் தூய வீடு' என்றார் ஆழ்வார். இழுது-வெண்ணெய். 'எடுக்கும் இழுதோடு அழுது ஓடியேகத் தொடரும் அசோதை கரத்து, எட்டப் படவும் ஒருவருக்கும் எட்டப்படாத புயல்' என்பர் கவிகாள ருத்திரர் (அழகர் பிள்ளைத் தமிழ்).

204, 205. பரகாலர் விமானத்தின் மேல் ஏறி விரசா நதியிற் குளித்து, படிகமேனி பெற்று, பிரமபதத்திலுள்ள செம்பொன் மண்டபத்தில் அடியவர்

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY,
Acc No. ....
Date ....
MADRAS-28.

மறுவிலான் பிரபந்தம் வகுத்த வாறினுள்
உறுகவி யாயிரத் தொடுமுந் நூறுடன்
அறுபது மொன்றதா மதனுட் செங்கண்மால்
பெறுபதி யெண்பதோ டிரண்டும் பேசுவாம். 206

வேறு

சீரங்கம் வேங்கடம் மாதனூர்தஞ்சை
சேறை வெஃகா நின்றவூர்
கார்கம் நந்திபுர விண்ணகர்நைமிசார்
ணியம் விண்ணகர் கணபுரம்
நீரகந் தேவனார் தொகையயிந் திரபுரம்
நிலாத்திங்க டுண்ட நறையூர்
ஊரகம் புல்லாணி சித்திரகூ டமெவ்வ
ளூர்வதரியாச் சிரமே. 207

அரிமேய விண்ணகரம் நாகையட் டப்புய
மலிக்கேணி யாலிமோகூர்
பிரிதிவெள் ளறைகுறுங் குடிதெற்றி யம்பலம்
பேர்தலைச் சங்க மெய்யம்
புருடோத்த மங்கவளம் பாடிகூ டறிருப்
புட்குழி கண்ண மங்கை
பரமேச் சுரவிண் ணகர நீர்மலை
வேளுக்கை பாடகம் மூழிக்களம். 208

கடன்மலைக் காழிசீ ராமவிண் ணகரம்வை
குந்த விண்ணகர் கண்டியூர்
இடவெந்தை செம்பொன்செய் கோயில் பார்த்தன்
பள்ளி இந்தளூர் கண்ணங்குடி
குடந்தைவெள் ளக்குளம் அழுந்தூர் கரம்பனூர்
கோவ லிடைகழி கூடலூர்
கடிகை நாங்கூ ரின்மணி மாடகோ
விற்சிங்க வேள்குன்று கார்வானமே. 209

குழுவுடன் வாழ்ந்தார். வடி-வடிக்கப்பட்ட (கூர்மையாக்கப்பட்ட). "அடியார் நடுவுள் இருக்கப் புரியாய்" என்பர் மணிவாசகர். அப்பேற்றை இறைவன் ஆழ்வார்க்கு வழங்கினான்.

206. ஆழ்வார் பாடிய பாசுரத்தொகை 1361. மங்களாசாசனம் செய்த திவ்ய தேசங்கள் 82, அவற்றின் பெயர்களை 207, 208, -211-ஆம் பாடல்களில் காண்க. 207. திருமங்கையாழ்வாரின் பாடலைப் பயின்று பரமபதம் பெற்றனர்.

வேறு

திருக்கச்சியில் சீர்ப்பவள வண்ணம்
திருப்பாற்கடல் சீராய்ப்பாடி
திருப்பேரகஞ் சீர்வட மதுரை
திருநாவாய் சீர்புலியூரே. 210

வேறு

புள்ளம் பூதங் குடித்தண் காசிறு புலியூர் சோலை
வெள்ளி யங்குடி கோட்டியூர் விளங்கு சாளக் கிராமங்
களவனூர் வல்ல வாழ்தங் கால்மணிக் கூட மாகுந்
தெள்ளுசீர்க் கமலை மார்பன் செழுத்திரு பதிகண் மாதோ. 211

அன்னசெந் தமிழைப் பார்மேல் அநேகர்கற் றுணர்ந்து தம்முன்
றுன்னுமஞ் ஞான நீங்கித் தூயநல் லறிவுண் டாகி
மின்னுசக் கரஞ்சேர் செங்கை விண்டுவாழ் திருவை குந்தந்
தண்ணிடை களிப்பினோடுஞ் சார்ந்துவீற் றிருந்தா ரன்றே. 212

பயன்

இந்தமாக் கதையை யன்போ
டெழுதினோர் பரிவிற் கற்றோர்
சிந்தையுள் ளுருகக் கேட்டோர்
செப்பினோர் யாவ ரேனும்
முந்துதீ வினைக ணீங்கி
முளரிமா மலர்மேல் வாழுஞ்
செந்திரு வருளுண் டாகிச்
சீர்பதம் பெறுகு வாரே. 213

திருமழிசையாழ்வார் வரலாறு பேசுவோம்

மங்கையார் குறைய லூரில் வந்தவ தாரஞ் செய்திட்
டங்கண்மா ஞால மேத்த வருந்தமிழ்க் கவிகள் செய்தே
செங்கண்மால் பதவிதன்னுட் சேர்ந்தமை யுரைக்தோ மிப்பால்
நங்கள்சீர் மழிசை யான்றன் சரிதமு நவில்வா மன்றே. 214

திருமங்கையாழ்வார் திருவவதார அத்தியாயம் முற்றும்.

213, 214. திருமங்கை மன்னனின் வரலாற்றை எழுதுபவர், கறபோர், கேட்போர், சொல்லுபவர், யார்வராயிருந்தாலும் சிறந்த பதவி பெறுவார்கள்.
214, மழிசையான்-திருமழிசையாழ்வார். நவில்வாம்-சொல்வோம்,

திருமழிசையாழ்வார் திருவவதார அத்தியாயம்

வெண்பா

தையில் மகமின்று தாரணியி லேற்றமிந்த
தையில் மகத்துக்குச் சாற்றுகின்றேன் - றுய்யமதி
பெற்ற மழிசைப் பிரான் பிறந்த நாளென்று
நற்றவர்கள் கொண்டாடு நாள்.

(உபதேச ரத்தினமாலை: 12.)

திருவிருத்தம்

இன்னவா றாகப் பன்னா ளேகவைம் புலன்வென் றோராய்
மன்னியே கானந் தன்னில் வளம்பெறு வரையின் சார்பில்
பன்னருந் தவங்கள் செய்யும் பாற்கவன் முதலா னோர்கள்
உன்னின ரொருநா ளுள்ளத் தொருமுறை யாக மன்னோ. 1

மும்மையா முலகோ டீசன்
முளரியன் முதலா னோர்கள்
தம்மையுள் ளடக்கி யாலந்
தளிரிடை குழவி யாகிச்

வெண்பா: தாரணியில்-உலகத்தில். மழிசைப்பிரான் பிறந்த நாள் என்று தை மகத்தை நற்றவர்கள் கொண்டாடுகின்றார்கள்.

1 முதல் 15 பாடல் வரை திருமழிசையின் சிறப்பு (பௌராணிக முறைப்படி) பேசப்படுகின்றது. இந்த வரலாற்றைத் திருக்கச்சி நம்பிகள்:

"உலகும் மழிசையும் உள்ளுணர்ந்து தம்மில்
புலவர் புலக்கோலால் தூக்க-உலகுதன்னை
வைத்தெடுத்த பக்கத்தும் மாநீர் மழிசையே
வைத்தெடுத்த பக்கம் வலிது-"

என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார். [பரிபாடல் திரட்டில் ஐயர் குறிப்பைக் காண்க]

1. கானந்தன்னில், வரையின் சார்பில் தவங்கள் செய்யும் பாற்கவர் முதலானோர் ஒரு முறை (சிறந்த திருப்பதி யாது) என்று ஆராய்ந்தனர்.

செம்மைசேர் கரத்தாற் பார்மின்
திருவொடும் வருடத் தங்கும்
நம்மையாண் டருளுஞ் சோதி
நாரணன் அமல நாதன். 2

இப்புவி தனிலும் வந்துற்
றெழில்பெறப் பலவென் றோதும்
ஒப்புவே றிலாத தாகும்
பதிகளி னுறைந்து வாழ்வான்
அப்பெருந் தலங்கட் குள்ளாய்
அகன்றிடா தோரூர் தன்னில்
செப்புமம் மாலெப் போதுஞ்
சேர்ந்துறைந் திருப்பா னன்றோ. 3

அனையவாந் தலம்யா தென்றா
ராய்ந்திட வேண்டு மென்னும்
நினைவுகொண் டறிவிப் பார்கள்
ணீனிலத் திலையென் றோர்ந்தும்
மனையென மலரின் வாழும்
மறையவ னுலகந் தன்னை
வினையற நோற்று நின்ற
மேலவ ரடைந்தா ரன்றே. 4

சென்றடைந் தவர்க ளந்தத்
திசைமுகன் செழும்பொற் பாதம்
ஒன்றிட முடிகள் சேர்த்தித்
தொழுதெழுந் துகப்பின் முன்னர்

2, 3, 4 ஒரு தொடர். மும்மையாம் உலகம் - மூன்று தன்மையைப் பெற்ற உலகம். (தோற்றல், இருத்தல், அழிதல்). முளரியன்-தாமரையில் வீற்றிருக்கும் பிரமன். எல்லாவற்றையும் உண்டு ஆலந்தளிரில் குழவியாகி, பார்மின்னும் (நில மகள்) திருமகளும் வருடத்தங்கும் நாரணன்.

திருமால் பல தலங்களில் இனிதே உறைவான் - அப்பெரும்தலங்கட்குள் எப்போதும் நீங்காது உறையும் பதி யாது? என்று முனிவர்கள் அறிய விரும்பிப் பிரம்ம லோகத்தை அடைந்தனர். மனையென-வீடென்று. வினையற-தீவினைகள் நீங்க.

நின்றிட லோடுஞ் ஞான
நெறியுளீ ருமையொப் பார்யார்
என்றவர்ப் புகழ்ந்திட் டாசி
யியம்பியாங் கிருமி னென்றான். 5

என்றவாங் கிருந்திட் டந்த
விருஞ்சிறைத் தாவிச் செங்கால்
அன்னமூ ரெண்கண் ணான்றன்
அம்புய முகத்தை நோக்கா
முன்னர்நா ணின்னை யுந்தி
முன்னின னீன்று லோகந்
தன்னைச்சிட் டிக்கு மாறு
சாற்றியோர் சோதி தானாய். 6

அஞ்சுபூ தங்கட் குள்ளும்
அந்தரி யாமி யாய்நின்று
உஞ்சுமா றவைக ளெல்லா
மோங்குறக் காவல் பூண்டுந்
துஞ்சுதல் பிறத்த லென்ப
திலாதவச் சுருப னாகி
விஞ்சுவை குந்தத் தும்பார்
மிகுபல தலத்தும் வாழ்வோன். 7

மருவுமப் பதிக டன்னில்
வளங்களோர் காலந் தன்னுள்
ஒருபக லேனும் நன்றா
யொருகண மேனுநீங் காமல்

---

5. திசைமுகன்-பிரம்மன். பாதம் ஒன்றிட-பாதத்தில் பொருந்த. அவர் புகழ்ந்திட்டு-அம்முனிவர்களைப் புகழ்ந்து.

6, 7. அன்னம் ஊர் எண் கண்ணான்-அன்னத்தை வாகனமாகக்கொண்டு செலுத்தும் எட்டுக் கண்களை உடைய பிரமன். நோக்கி (முனிவர்கள்)-பார்த்து. முன்னர்நாள்-முற்காலத்தில். முன்னினன் ஈன்று-சங்கற்பத்தால் படைத்து. அந்தரியாமியாய்-உள்ளுரைப் பொருளாய் .உஞ்சுமாறு - உய்ந்து - என்ற சொல் போலியாகி உஞ்சு என்று வந்துள்ளது. பிழைக்கும்படி என்பது பொருள். துஞ்சுதல்-இறத்தல். ஸ்வரூபன்-என்ற வடசொல் சுருபன் என்று வந்துள்ளது. இயற்கையானவன். "தோற்றக் கேடில்லாத தொல்மால்" என்பர் திவ்யகவி.

திருவொடு மிருந்து வாழ்வா
னென்னவே தெளியு மாறாய்ப்
பொருவிலா மறைக டன்னிற்
புகன்றுளாய் நீயு மன்றே. 8

அந்தநற் றலமீ தென்ன
வறிகிலே மறியு மாறாய்
எந்தமக் குரைத்தி யென்ன
வியம்பினன் அயல்நீங் காமல்
செந்திரு வுடனே செங்கண்
மால்செழு மறையோர் போற்ற
வந்துவாழ் கின்ற சீரூர்
மழிசையென் றுணர்மி னென்றான். 9

அத்திரு நகர்க்கு நேராய்
அங்கண்மா ஞாலந் தன்னுள்
எத்திரு நகரு மோங்கு
மெழில்வளம் புனிதம் தன்னால்
ஒத்திடா துணர்மி னென்னா
வுயர்தவ முனிவோர் தங்கள்
சித்தம துவக்கு மாறு
மீளவும் தெரிவித் தானால். 10

கேட்டவம் முனிவோர் மீட்டக்
கிளர்வளம் பெறுந்த லத்தின்
மாட்டுள மேன்மை யாங்கள்
மனந்தெளி வுறுமா றாகக்
காட்டிட வேண்டு மென்னக்
கருஞ்கிறை யறுகால் பொம்மென்
பாட்டுவண் டிமிரும் பங்கே
ருகத்தயன் பரிவி னோடும். 11

8, 9. ஒரு பகலேனும்-ஒரு முகூர்த்தம்கூட. திருவொடும் இருந்து வாழ்வான் என்று மறையில் புகன்றுளாய். அந்த நற்றலம் யாது? உரைத்தி - உரைப்பாயாக. பிரமன் அது மழிசை என்றான்.

10. அங்கண்மாஞாலம்-இடமகன்ற பெரிய உலகம். வளம்புனிதம் தன்னால்-வளத்தாலும், தூய்மையாலும். மீளவும் - திரும்பவும்.

11. மீட்டு-இவ்வளவு பேசிய பின்னும். தலத்தின் மாட்டுள-தலத்தின்கண் உள்ள. காட்டிட வேண்டும்-பிரத்தியட்சமாகத் தெரிவிக்க வேண்டும். கருஞ்

ஆங்கவர் தம்மோ டண்மி
யத்திரு நகரின் மேன்மை
பாங்குற வுணர்த்த லுன்னிப்
பணிகள் புற்றடைவ தாக
ஓங்கிவா னுயருங் காவி
லுறுஞ்சிறைக் கருட னேபோல்
மாங்குயிற் றொகுதி கூவும்
மழிசைவந் தடைந்தா னன்றே. 12

வந்தொரு துலைகோல் தன்னை
மனத்தினா னிருமித் தன்னோன்
முந்தொரு தட்டி லேசீர்
மழிசையை முயல வைத்திட்(டு)
இந்தபே ருலகை மற்றோர்
தட்டினிட் டெடுத்துக் காட்ட
அந்தமார் மழிசைத் தட்டு
மழுந்திக்கீ ழிருந்த தாலோ. 13

உலகுறு தட்டு மேலிட்
டோங்குற வதனைக் காணா
இலகுமிம் மழிசைக் கொப்பா
யில்லையிப் புவியின் வேறென்(று)
அலகின்மா தவர்கள் யாரு
மற்புத மடைந்தா ராகி
மலரவ னம்பொற் றாளின்
வணங்கிவாழ்த் தினர்கள் மாதோ. 14

சிறையறுகால் - கரிய சிறகுகளையும் ஆறு கால்களையும் உடைய வண்டு. பொம்மென்று - ஆரவாரித்து. 'பூநனை கூந்தன் மாதர் பொம்மெனப் புகுந்து மொய்த்தார்' என்பர் (பால காண்டம்) கவிச்சக்ரவர்த்திகள். பங்கேருகம் - தாமரை.

12. உணர்த்தல் உன்னி - உணர்த்தக் கருதி. பணிகள் - பாம்புகள். புற்று அடைவதாக - புற்றையடைய. கருடனேபோல் குயில் கூவும் மழிசையை அடைந்தான்.

13. துலாக்கோல்தன்னை - தராசை. நிருமித்து - படைத்து. மழிசைத் தட்டு - திருமழிசையை வைத்த தட்டு. அந்தம் - அழகு.

14. அலகில் மாதவர்கள் – எல்லையற்ற தவத்தைப் புரிந்தவர்கள்.

இம்முறை தெளிவித் தந்த
விருந்தவர்க் காசி நல்கிப்
பொம்மென வறுகாற் பாடும்
மலரயன் போய பின்னர்
கொம்மைமா முலைப்பூ மாதின்
கொழுநனைக் குறித்திட் டாங்குச்
செம்மைசேர் யாகம் செய்வான்
பார்தனைக் கீண்டிட் டானால். 15

வேண்டுவ கலப்பை கொள்ளா
விதிமுறை துடங்கி யுள்ளம்
தூண்டுள முவகை துள்ளித்
துள்ளிமீ தெழுந்த தென்ன
மூண்டெழு கனற்க ணானெய்
முதலிய சொரிந்து முற்றும்
ஆண்டதொன் றதனில் நந்தும்
அருமகம் முடித்தான் அன்றே. 16

மகமது முடித்த லோடும்
வைகுந்த வாசு தேவன்
அகமகிழ்ந் தரவிந் தம்வாழ்
பவளுட னணுகித் தோன்றிச்
செகமதி னின்போல் யாகம்
செய்துளோ ரிலையென் றேத்தித்
தகவுடன் தருதும் வேண்டும்
வரந்தனைச் சாற்று கென்றான். 17

என்னலு முவகை யுள்ளத்
தெழுந்துமீ தோங்க வென்கண்
முன்னரென் னன்னை யான
முளரிமா தோடு நீவந்

15, 16, பிரம்மன் உண்மை உணர்த்தித் தன் உலகுக்குப் போன பின் பார்க்கவன் யாகம் செய்யப் பூமியை உழுதான். பூமாதின் கொழுநன் - திருமகளின் கணவனான திருமால். முனிவனின் உள்ளம் துள்ளுவதுபோல் எழுகின்ற கனலில் ஆன் நெய் முதலியன சொரிந்தான். ஆண்டது ஒன்றதனில் - ஒரு வருடத்தில். மகம் - யாகம்.

17. வாசுதேவன் - திருமால். அரவிந்தம் வாழ்பவள் - திருமகள். வேண்டும் வரம் தருதும் - வேண்டிய வரங்களைக் கொடுப்போம்.

துன்னிடத் தெரிசித் தேற்குத்
தூயன விஃத லான்மற்று
இன்னமும் வேண்ட லென்னென்(று)
இருந்தவ னியம்பி னானால். 18

கேட்டவத் திருமால் பின்னும்
கிளர்த்துவா னினிது ளத்தின்
மாட்டுள துணர்கு வோமால்
ஆயினு மகத்திற் கெய்தி
நாட்டுமொன் றேனு நல்கா
தேகல்நல் லறம தாமோ?
சேட்டிளம் பருதி போலோர்
சிறுவனை யளித்தோ மென்றான். 19

ஆழ்வார் அவதாரம்

அவ்வர மளித்துச் செங்கேழ்
அணிமலர் மாதி னோடும்
செவ்விசேர் திருவை குந்தஞ்
சிறப்புற வடைந்தான்; மேனாள்
வெவ்விய விடங்கர் கானின்
விரைமல ரோடை தன்னுள்
கவ்விடத் தளர்ந்து கூவும்
கரியருந் துயரந் தீர்த்தோன். 20

ஆங்கவ னிவ்வா றாக
அகன்றபின் தைமா தத்தில்
பாங்குறும் மகநாள் தன்னிற்
பார்க்கவ னென்னு நாமத்

---

18. முளரிமாது - திருமகள். முளரி - தாமரை. உன்னைக் கண்டேன் - இதனினும் உயர்ந்தது உண்டோ? என்று முனிவன் கூறினான்.

19. கிளர்த்துவான் - சொல்லத் தொடங்கினான். ஒன்றேனும் நல்காது ஏகல் நல்லறம் அன்று. ஓர் சிறுவனை அளித்தோம் என்று திருமால் கூறினான்.

20. வரம் நல்கிய பின், கரியின் துயர் தீர்த்தோன், வைகுந்தம் புக்கான் - வெவ்விய கானில், ஓடைதன்னுள் (விடங்கர்) முதலை கவ்வத் துயர் தீர்த்த திருமால் அலர்மாதினோடும் வைகுந்தம் சேர்ந்தான்.

தீங்கிலா முனிவன் றன்பால்
செனித்திடு மகவைக் காணில்
தேங்குழ லுமையோர் பாகச்
சிவனயன் மகிழ்வர் மாதோ. 21

செந்திருப் புதல்வன் றன்போற்
றினகர னுருவந் தாங்கி
வந்திரும் புவிமே லுற்ற
வாறென வந்து தோன்றும்
அந்தநன் மகவைக் காணா
அம்முனி மகவுள் ளோர்க்குச்
சிந்தையுட் கடவுட் டியானந்
திருப்புமென் றுள்ளந் தேர்ந்தான். 22

தேர்ந்தவம் முனிவன் றானுந்
சிந்தையுண் மகவி னாசை
தீர்ந்துசெங் கரங்கண் மீதச்
சிறுகுழ வியைக்கொண் டவ்வூர்
பேர்ந்துபோ மளவி னாங்கோர்
பிரம்புறு புதரின் கீழாய்ச்
சேர்ந்ததை வளர்த்தி னானோர்
சிறியவத் திரத்தின் மீதே. 23

இந்தநற் குழவி தன்னைப்
புரந்தரல் இதனை நம்பால்
தந்தவர் கடனென் றுன்னித்
தவஞ்செயும் சாரல் தன்னில்

21, 22. அம் மகவைக் கண்டால் சிவனும் பிரம்மனும் மகிழ்வர். ஆனால், பார்க்கவன் புத்திரபாசத்தால் கடவுள் தியானம் திரும்பிப் போய்விடும் என்று நினைத்தான். தினகரனே, புதல்வன்போல் வந்தானோ என்று கருதும்படி விளங்கும் புதல்வன். தினகரன் - சூரியன்.

23. ஆசை தீர்ந்து - ஆசையை விட்டுவிட்டு, பிரம்புறு புதரின்கீழ் சிறிய வத்திரத்தின்மீது வளர்த்தினான். வளர்த்தினான் - உறங்கச் செய்தான். 'நளினப் பிள்ளை வளர்த்திய மழலைப் பிள்ளை' என்பர் (பால காண்டம்) கவிச்சக்ரவர்த்திகள்.

அந்தமா முனிவன் சார்ந்த
தறிந்துல கன்னை யான
செந்திரு வன்புற் றாங்குச்
சேர்ந்தழுஞ் செய்கை நோக்கா; 24

திருமகளின் திருவருள்

மனதினுள் இரக்கம் கொண்டோர்
மதுரிக்கும் தேனி றாலாய்
தனதுமா முலைப்பால் தன்னைச்
சமைத்துமே லிருத்தி வைத்திட்(டு)
அனையதப் பாலன் வாய்விண்(டு)
அழுதுண வதனை யுன்னி
நினைதொறுந் துளிக்கு மாறாய்
நியமித்திட் டேகி னாளால். 25

உழுவைகாத் தளிப்பக் காவிக்
கதிரிள வெயிலு றாமல்
நிழலுறப் பணம்வி ரித்தே
நீளர வுறைய மீதாய்
ஒழுகுதேன் றுளிவாய் வீழ்வ
துண்டுண்டு மகிழ்வி னோடப்
பழுதில்சேய் வளரு மன்னாள்
உற்றது பகர லுற்றாம். 26

24, 25. புரந்தரல் - பாதுகாத்தல். 'ஈன்று புறந்தருதல் என் தலைக்கடன்' (சங்கப் பா). தந்தவர் கடன் - நம்மிடம் வழங்கியவர்களின் கடமை. செந்திரு இதனை அறிந்து ஆங்குச் சேர்ந்து அக் குழவி அழுவதைப் பார்த்து இரக்கம் கொண்டாள்.

திருமகள் தனது பாலைத் தேனிறாலாய் மாற்றி அக் குழவியின் வாயில் தேன் துளி படும்படி நியமித்துவிட்டுப் போய்விட்டாள். மதுரிக்கும் - இனிக்கின்ற. சமைத்து - அமைத்து. வாய்விண்டு - வாய்திறந்து. நினைதொறும் - நினைக்கும் போதெல்லாம். (அரிசமய தீபம் திருமகளே பால் வழங்கியதாகவும், திருமகள் தனது பால் குழவியின் பெருவிரலில் உண்டாகும்படி செய்துவிட்டுப் போனதாகவும் கூறியுள்ளது.)

26. உழுவை - புலி. நீளரவு உறைய - நீண்ட பாம்பு தங்க. அந்தக் குழவியைப் புலி காத்தது. வெய்யில் படாதபடி பாம்பு படம் விரித்தது.

திருவாளன் ஆழ்வாரை வளர்த்தது

அத்திரு மழிசையென் றறையு மாநகர்
ஒத்துவாழ் மேதையர் குலத்தி லுற்றிடும்
உத்தம னாந்திரு வாள னென்றுளோன்
பத்தினி பங்கய வல்லி பண்புளாள். 27

அவ்விரு வோர்களு மனமொன் றாகியே
வெவ்விய கானிடை விரைவி னெய்தியாங்(கு)
ஒவ்விய பிரம்புகொண் டூரின் மேவியே
செவ்விய கூடைகள் திருந்தக் கட்டுவார். 28

ஆங்கதை விலைசெயற் கமைந்து கொண்டுசென்(று)
ஓங்குமம் மாநக ருறுமவ் வீதிவாய்
வாங்குவார் தருபொருள் வாங்கி வந்ததில்
பாங்குறு சீவனம் பண்ணு வார்களால். 29

ஆயவ ரம்முறை யணுகு நாளிடை
சேயிலா மையினுளந் தியங்கி யேங்கியே
தூயவ ருளத்தினுஞ் சுருதியுள் ளும்வாழ்
மாயனை மகிழ்வொடு மனத்தி லுன்னியே. 30

ஒருபகற் பிரம்புகொண் டறுத்த லுன்னியத்
திருநகர் கடந்துகான் செல்லு மெல்லையில்
கருடனும் வலியனுங் கருது றும்மிடம்
வருதலும் அகமிக மகிழ்வுற் றேகினார். 31

---

27. மேதையர் குலம் - முறம் கூடை முதலானவற்றை வனைபவர் குலம். நாமக்கல் பகுதியில் அந்தக் குலத்தினரை 'வேதக்காரர்' என்பார்கள். அவர்கள் தாய்மொழி தெலுங்கு. தெலுங்கில் 'மேதரவாள்ளு' என்பர். 'பொருந்தரே, வேதக்காரர்' என்பது சூடாமணி நிகண்டு. மேதையர் குலத்தில் பிறந்தவன் திருவாளன். அவன் மனையாட்டியின் பெயர் பங்கயவல்லி. இவர்களே தெய்வக் குழவியை வளர்க்கின்றனர்.

28, 29. பிரம்புகொண்டு கூடை கட்டுவார்கள். அதனை விற்றுச் சீவனம் பண்ணுவார்கள்.

30. சேயிலாமையில் - குழந்தையில்லாமையால், தூயவர் உள்ளத்திலும் சுருதியுள்ளும் வாழ் மாயனைத் தியானிப்பார்கள்.

31. ஒருமுறை அவர்கள் காட்டுக்குப் போகும்போது நல்ல சகுனம் உண்டாயிற்று. கருடனும் வலியனும் இடப்பக்கம் சென்றன. வலியன் - கரிக்குருவி.

ஏகவப் புதரின்கீ ழிளங்கு ழந்தையுஞ்
சோகமுற் றழுங்குரல் தொனிசெ விக்கணுற்(று)
ஓகைகொண் டவனிலங் குறுமுன் காத்துறை
நாகமு முழுவையு நழுங்கிப் போயதால். 32

போயபின் பிவர்களு மருகிற் புக்கியச்
சேயினை யிருகரஞ் சேர்த்தெ டுத்துமுன்
பாயின சகுனமும் அதனுக் கொவ்வுற
மாயவ னருளின னெனம கிழ்ந்தனர். 33

அங்குவிட் டூர்புகுந் தகத்துட் சேரலும்
பங்கய வல்லியாம் பெயர்ப டைத்துள
செங்கய லனையகட் டிருவ னாட்கிரு
கொங்கையுஞ் சிறந்துபால் சுரப்புக் கொண்டதால். 34

சுரந்துறு மமுதையச் சுதற்க ளித்திட
நிரந்தர முண்டுபன் னேயங் காட்டலால்
பரந்தசீ ரவர்கண்முன் படைந்த துன்பநோய்
கரந்தகன் றிடவுளங் களிப்புற் றாரரோ. 35

---

32. சோகமுற்று - வருத்தம் அடைந்து. ஓகைகொண்டு - மகிழ்ந்து. அவன், இல் - அவனும், அவனுடைய மனைவியும். அங்கு உறுமுன் - அவ்விடம் அடைவதற்கு முன். நாகம் - பாம்பு. உழுவை - புலி. நழுங்கி - நழுவி. (நழுவிப் போயதால் என்று இருப்பின் நன்று.)

33. திருவாளனும் பங்கயவல்லியும் குழவியை எடுத்தனர். சகுனம் பலித்தது; இக் குழவியை மாயவனே அருளினான் என்று மகிழ்ந்தனர்.

34. செங்கயலனைய கண்ணி திருவன்னாட்கு - சிவந்த கயல்மீன்போன்ற கண்களுடைய பங்கயவல்லிக்கு. (ஞானசம்பந்தர் வருகையைக் கேட்டலும் பாண்டிமாதேவியின் நகில்களில் பால் சுரந்ததாகத் திருக்களிற்றுப்படியாரும் நால்வர் நான்மணிமாலையும் பேசும். அவற்றைப் பயின்ற சமயச்சான்றோர்கட்கு இங்கே ஐயம் தோன்றாது.)

35. அமுதை - பாலை. அச் சுதற்கு - அந்தப் பிள்ளைக்கு. நேயம் காட்டலால் - அக் குழந்தை அன்பைக் காண்பித்தலால், அவர்கள் அடைந்த துன்பம் அகன்றிட உள்ளம் களிப்புற்றார். அரோ! மகிழ்ச்சிப் பெருக்கைக் காட்டும் சொல், இன்று அசையாகிப் பொருளற்றுள்ளது.

தூயதே வகிவயின் மதுரை தோன்றியுற்(று)
ஆயர்பா டியினடைந் தசோதை யாள்திருச்
சேயென வளர்ந்துபன் னடனஞ் செய்திடும்
மாயனென் றியாவரும் மகிழ வைகினான். 36

ஆளனும் பங்கய வல்லி யாளெனும்
தாளதா மரைமுகத் தவளும் தாம்பெறுங்
காளையிங் கிவனெனக் கருத்து ளுன்னியே
நாளுற வளர்த்தனர் நயப்புற் றென்பவே. 37

மைந்தனு மாங்கவர் மகிழ்வொ டுந்தனைத்
தந்திடுந் தந்தையும் தாயு மாமெனச்
சிந்தையுள் மகிழ்ச்சியுஞ் சிறப்பு மோங்கிட
இந்தநன் முறையதாய் வளரு மெல்லையில். 38

தங்குல வியற்கையிற் றகுவ யாவையும்
அங்கவர்க் கிழைத்துற வவனு மாயையாங்
கங்குலை யொழித்திடக் காலை யுற்றெழுஞ்
செங்கதி ரவனெனச் சிறந்திட் டானரோ. 39

ஆழ்வாரின் யோகம்

மறந்துடர் சினமுங்கா மமும்ம னத்திடைத்
துறந்துய ரியபரஞ் சுடரைக் காணுமா(று)
அறந்துடர் யோகவப் பியாச மாகவே
சிறந்துற வாண்டெழு நூறு சென்றதால். 40

---

36. ஒருத்தி மகனாய்ப் பிறந்து, ஒருத்தி மகனாய் வளர்ந்த கண்ணனைப் போல இவரும் வளர்ந்தார். தேவகியின் - தேவகியிடத்திலே. யசோதையாள் திருச்சேயென - யசோதையின் மகன் என்று உலகம் கூற. நடனம் செய்திடும் மாயன் என, வெண்ணெய்க் கூத்தாடும் பிள்ளையாகலின் கண்ணன் புகழப் பட்டான்.

37. தாள தாமரை முகத்தவள் - தாளையுடைய தாமரை போன்ற முகத்தை உடையவள். நாளுற - ஆயுள் வளர. நயப்புற்று - விரும்பி.

39. ஆழ்வார் தாம் பிறந்த குலத்தொழிலைச் செய்து வந்தார். மாயையாம் கங்குல் - மாயை என்கிற இரவு. கதிரவன் என - சூரியன் போல.

40. மறம் துடர் - பாவத்தைப் பின்பற்றிச் செல்கிற. மனத்திடைத் துறந்து - மனத்திலிருந்து விலக்கி, யோகாப்பியாசத்திலேயே எழுநூறு வருடம் கழிந்தது.

அத்திரு மழிசைமா ணகரி னம்முறை
ஒத்திருந் தியோகத்தி னொன்றுங் காண்கிலா(து)
எத்தலைச் சமயமுற் றிறந்து சோதியாம்
வத்துவை யறியலா மெனம யங்கியே. 41

தேறுவ தெவ்வகை யென்னச் சிந்தையுள்
ஊறிய நினைவுகொண் டுலகி னுற்றுள
ஆறெனும் உட்சம யமுமற் றாறென
வேறுள பிறசம யமும்வி ரும்பியே. 42

ஒவ்வொரு சமயம தாக வேயுழன்(று)
அவ்வதிற் பலபக லமர்ந்திட் டாங்கதின்
செவ்விய நூலெலாந் தேர்ந்தும் பாடியும்
எவ்விதத் தினுமுயர் வத்து வென்பதை. 43

கண்டறி யாமையால் கருத்தின் உள்ளுற
உண்டிலை யெனவரும் உணர்வு தோன்றிட
விண்டுரை யாமையை விரும்பி யேயவன்
தொண்டெவர்க் குறுவதென் றுள்ளம் சோர்ந்தனன். 44

இலகுறு மவனிவ்வா றிருக்கு மெல்லையில்
உலகுறு மவரெலா மடத்தி லேயுழன்(று)
இலகுறு நாள்கழிப் பவருக் கெம்முறை
நலமுறுத் துவதென நினையு நாரணன். 45

---

41. யோகத்தின் ஒன்றும் காண்கிலாது - யோகத்தால் சிறு பயனும் பெறாது. எத்தலைச் சமயம் உற்று - எந்த மேலான சமயத்தை அடைந்து. இறந்து - கடந்து. சோதியாம் வத்துவை - சோதிமயமான இறைவனை. எனமயங்கி - என்று பலபடியாகச் சிந்தித்து மயங்கி.

42, 43. அகச் சமயங்களையும் புறச் சமயங்களையும் விரும்பி, ஒவ்வொரு சமயமும் ஆராய்ந்து, உழன்று பல நாள்கள் அவ்வச் சமயங்களில் இருந்தும் அவ்வச் சமயங்கள் எல்லாம் கற்றும் பரம்பொருளைக் காணாமல் வாடினார்.

44. உண்டு இலை எனும் உணர்வு - (கடவுள்) உண்டோ இல்லையோ என்கின்ற ஐய உணர்வு. விண்டுரையாமை - மௌனம். எவர்க்குத் தொண்டுறுவது - எந்தக் கடவுளுக்குத் தொண்டு செய்வது. உள்ளம் சோர்ந்தனன் - ஊக்கம் தளர்ந்தான். 'உள்ளம் உடைமை' என்ற முப்பாலை நோக்குக.

45, 46. ஒரு தொடர். உலக மக்களுக்கு நன்மை செய்ய நினைக்கும் நாரணன், திருமழிசையாருக்கு ஞானக்கண் வழங்கித் தன்னுடைய வடிவத்தைக் காண்பித்தான். உலகுறுமவர் - உலக மக்கள். மடத்திலே - அறியாமையால்,

இறைவன் காட்சி வழங்கல்

அரியதா கியதன்னந் தாமத் தின்னுடைச்
சொருபமத் திருமழி சையினுட் டோன்றிடத்
தெரிவுறு ஞானக்கண் திருந்த வேயளித்(து)
இருசிறைக் கலுழன்மே லிவர்ந்து தோன்றினான். 46

சோமனை முடியணிச் சுடலை யாடியும்
நாமகள் கொழுநனு நவிலு மோர்சத
மாமகன் முதலினோர் களும்வ ணங்கிடப்
பூமக ளொடுமெதிர் பொலிந்து ளான்றனை; 47

கண்ணுறக் காண்டலுங் களிது ளங்கிட
விண்ணுற நோக்குவான் மீண்டும் தன்னுடல்
மண்ணுற வணங்குவான் வாழ்த்து வான்புகழ்ந்(து)
எண்ணுவ னவன்றிரு வெழிலை யென்பவே. 48

இன்னவா றுளங்களித் துருகி யேத்திடும்
அன்னவன் கண்படா தகன்று போயினான்
பன்னகத் திடைநடம் பயின்றி டைக்குலக்
கன்னியர் துயில்கவர் கரிய கோவலன். 49

நலம் உறுத்துவது - நன்மை செய்வது. அரியதாகிய தன் அந்தாமம் - பரமபதம். தன்னுடைய சொருபம் - தன்னுடைய இயற்கைநிலை. திருமழிசை - திருமழிசையாழ்வார் (ஆகுபெயர்).

செம்மங்குடி, முசிறி என்பன இசையுலக வழக்கு. இலக்கிய உலகிலும் உள்ளது. 'அங்கை ஒடு ஏந்திப் பலிதிரி கருவூர் அறைந்த சொல் மாலை' என்பது கருவூராரின் வாய்மொழி. ஞானக் கண் திருந்தவே யளித்து - அறிவுக் கண்ணைத் திருத்தமாக வழங்கி. திருந்த அளித்தலாவது விபரீத ஐயங்களில்லாமற் கொடுத்தல். முப்பாலில் பரிமேலழகரின் திட்ப நுட்பம் செறிந்த உரையைப் பயின்று தெளிக. கலுழன் - கருடன். 'கலுழன்மேல் வந்து தோன்றினான்' என்பர் (பால காண்டம்) கவிச் சக்ரவர்த்திகள்.

47, 48. ஒரு தொடர். ஆழ்வார் திருமாலை நோக்கி மகிழ்ந்து பலவற்றை எண்ணினார். சோமன் - சந்திரன். சுடலையாடி - சங்கார காரணன் சிவபிரான் ஆதலால் இங்ஙனம் புகழப்பட்டான். சதமாமகன் - இந்திரன். களி - களிப்பு, பெருமகிழ்ச்சி.

49. காட்சி தந்த பெருமான் மறைந்தான். கண்படா - கண்களுக்கு எட்டாதபடி. பன்னகம் - பாம்பு (காளிங்கன்). நடம் பயின்று - கூத்தாடி. கோவலன் - கோபாலன் என்ற வடசொல்லின் திரிபு (சிலம்பு-உரை). கோவலனை 'விருத்த கோபால' என்பர் அடிகள்.

கோவல னகன்றிடுங் கொள்கை கண்டுளத்(து)
ஆவலோடி ரங்கியீன் றளித்த ழித்திடும்
மூவராம் வடிவுகொள் முகுந்த னாந்திருத்
தேவனே பரமெனத் தெளிவுண் டாகியே; 50

பலசம யங்களிற் படிந்த வற்றிலே
அலகில்நா ளொழித்ததுக் ககம்நெ கிழ்ந்துபின்(பு)
இலகுமூ லப்பொரு ளினைய டைந்தனம்
நலமிதின் வேறென நயக்க லாவதே. 51

திவ்ய தேச யாத்திரை

என்னவா னந்தமுள் ளெழுந்து பொங்கவே
அன்னமா மழிசைவிட் டாம்ப லும்செழுங்
கன்னலுஞ் சாலியுங் கவினு மாவயல்
மன்னுசீர் திருவல்லிக் கேணி மன்னினான். 52

சீர்த்ததா மரையுதிர் மணிசெ ழித்திடும்
நீர்த்தட மாடியும் நிமலன் ஆகிய
பார்த்தசா ரதிப்பதம் பணிந்து மிம்முறை
தீர்த்தனாண் டேழெழு நூறு சென்றபின்; 53

ஒருபகல் மழிசையுத் தமனை யோங்கெழில்
பெருகுவெஃ காவெனும் பெரும்ப திக்கணீ
வருகவென் றுணர்த்தினன் மலரின் வைகுறும்
திருமகள் மகிணனாந் தேவ தேவனே. 54

50, 51, 52. ஒரு தொடர். ஆழ்வாருக்குத் திருமாலே பரம்பொருள் எனும் உணர்வு தோன்றி, பல சமயங்களிலே 'வாடினேனே' என்று உளம் உருகி, இப்போதாவது உண்மை உணர்ந்தோமே என்று மகிழ்ந்து, பிறகு திருவல்லிக் கேணியை அடைந்தமை பேசப்படுகிறது.

50. திருத்தேவன் - திருமகள் மணாளன். பரம் - பரம்பொருள். 'திருவில் லாத் தேவரைத் தேறேன்மின்' என்று திருமழிசைப்பிரான் திருவாய் மலர்ந் ததை உணர்ந்து இத் தொடர் இங்கு ஆளப்பட்டுள்ள நயம் சிந்திக்கத்தக்கது.

51. அலகில் நாள் - பல நாள்கள். அகம் நெகிழ்ந்து - மனம் வருந்தி.

52. மழிசை விட்டு - திருமழிசையை விட்டுவிட்டு. கவினும் - அழகு செய் கின்ற.

53. தீர்த்தன் - தூயவராகிய ஆழ்வார். 700 வருடம் ஆழ்வார் திருவல்லிக் கேணியில் வாழ்ந்தார்.

54. வெஃகாவிற்கு வருக என்று அப்பதியில் மேவும் பெருமான் கட்டளை இட்டான்.

அம்முறை கச்சிவெஃ காவ டைந்தெணார்
தம்முள மாமனை சார்ந் திடாதொழி
செம்மைசேர் நாரணன் திருப்ப தந்தொழு(து)
இம்முறை யேழுநூ றாண்டி ருந்தனன். 55

கணிகண்ணன் வரலாறு

அந்தநா டனிற்கணி கண்ண னும்பெயர்ச்
செந்தமிழ்ப் புலவரிற் சிறந்து மாண்புடன்
வந்துமா மழிசையன் பதம்வ ணங்கியே
சந்தத முளந்தனி லன்பு சார்ந்தரோ. 56

மழிசையன் றன்புகழ் வளங்கள் பாடியே
அழிவில்சீர் திருத்திய னணுக வோர்பகல்
மொழியுமந் நகர்மனு முறையி னாண்டருள்
எழில்பெறு மரசனு முலாவந் தெய்தினோன்; 57

புவியுடை வேந்தனும் புலவன் வைகிடத்
தவிசொடும் பலபொரு டந்தென் மீதிலோர்
கவிசொலென் றுரைத்தசொற் கனலிற் காய்ச்சியே
செவியுடு மூசியொப் பாகச் சேர்தலும்; 58

---

55. வெஃகாவில் ஆழ்வார் 700 வருடம் வாழ்ந்தனர்.

56ஆம் பாடல் முதல் கணிகண்ணர் ஆழ்வாரை அடைந்ததும், அரசன் சினந்ததும், வெஃகா இறைவன், சொன்னவண்ணம் செய்த பெருமாள் ஆனதும் பேசப்படுகிறது,

56, 57. கணிகண்ணன், புலவரில் சிறந்து, மழிசையன் பதம் வணங்கி, உள்ளந்தனில் அன்பு சார்ந்து, அவன் புகழ்பாடி வாழுங் காலத்தில் அந்நகர் அரசன் உலாவந்தெய்தினான்.

56. பெயர் - புகழ். சந்ததம் - எப்போதும்.

57. திருத்தியன் - திருப்தி உடையவனாய். ஓர் பகல் - ஒரு நாள். 'பகலே நாள் ஒரு முகூர்த்தம்' (சூடாமணி நிகண்டு). மனு முறையின் - மனுதர்ம சாத்திரப்படி. மனுவே அத்திரி விண்டு வாசிட்டம் - தரும நூலின் பெயரெனச் சாற்றுவர் (பிங்கலம்).

58. வைகிட - தங்க. மன்னன் தவிசொடு பல பொருள் தந்து என்மேல் கவி பாடுக என்றான். அச் சொல், கணிகண்ணன் செவியில் காய்ச்சிய ஊசிபோல் பாய்ந்தது.

இனியவெம் பரன்புக ழியம்பு நாவினால்
மனிதர்மேற் கவிதையான் வழங்கு கின்றிலேன்
பனியென வழிவுறும் வாழ்வைப் பற்றியே
குனிசிலை வயங்கொளேன் என்று கூறுவான். 59

அரும்பொரு ளிஃதெலா மற்ப வோடதாம்
துரும்பதாம் நீயெனச் சொல்லி வீறுடன்
பெரும்புக ழாளனும் பெயர்தல் காண்குறா
இரும்புவிக் கரசனு மிதையி யம்புவான். 60

அன்னதே யாமெனி லருந்த மிழ்வலோய்
என்னதாந் தேயமீ திருக்க லாகுமோ
பன்னுக நீயெனப் பாரை யாள்பவன்
சொன்னசொல் லவன்செவி சுருக்குற் றெய்தலும்; 61

கணிகண்ணனும் ஆழ்வாரும் பெருமாளும் கச்சியை விடுத்தல்

உன்றிருத் தேயமீ துறைவ தில்லையான்
என்றுரைத் தக்கணம் விரைவி னெய்தியே
துன்றுசீர் மழிசையன் றாய டித்துணை
தன்றலை மீதுறத் தரித்தி யம்புவான். 62

---

59. பரன்புகழ் - திருமாலின் புகழ். யான் மனிதர்மேல் கவி வழங்குகின்றிலேன் - நான் மனிதர்கள்மேல் கவி பாடமாட்டேன். 'வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவியேன் அல்லேன்' என்ற சடகோபரின் திருவாய்மொழியை நினைவுகூர்க. குனிசிலை வயங்கொளேன் - வளைகின்ற வில்லின் தன்மைபோல் (உனக்கு) வளைய மாட்டேன். கூறுவான் - மேலும் கணிகண்ணன் பேசத் தொடங்கினான்.

60. அரும்பொருள் - நீ அருமையான பொருள் என்று கருதுகின்ற இவைகள். நீ துரும்பதாம் - நீ துரும்பு போன்றவன். பெயர்தல் - நீங்குதல். காண்குறா - கண்டு.

61. அன்னதே யாமெனில் - உன் கொள்கை அப்படியிருந்தால். என்னதாந் தேயமீது - என்னுடைய நாட்டில். இருக்கல் ஆகுமோ - இருப்பது முறையோ ?

62. உன் திருத்தேயமீ துறைவதில்லை - உன் நாட்டில் வசிக்கமாட்டேன். மழிசையாரின் அடித்துணை தலைமீதுறத் தரித்து (கணிகண்ணன்) விண்ணப்பித்தான்.

(வேறு)

ஐய! கேட்டியின் றென்னையித்
தேயமா ளரசனும் வருவித்துச்
செய்ய வோர்கவி தன்மிசைப்
பாடெனச் செப்பிட மறுத்தேனால்
வெய்ய னும்எனைத் தனதுதே
யந்தனை விட்டக லெனச்சொன்னான்
துய்ய நின்பதந் தொழுதகல்
குவனெனச் சொற்றனன்; நடவுற்றான். 63

அனைய னேகலும் நின்னைவிட்
டிங்ஙனம் அணுகிலன் யானென்ன
வினையி லாமழி சையனுநா
கணைமிசை விளங்குற வளர்கின்ற
புனைது ழாய்வெஃகு மார்பினன்
பொன்னடிப் போதினைப் பணிந்தேத்தி
இனைய சற்கணி கண்ணனித்
தேயம்விட் டேகுதற் கமைந்தானால்; 64

அவனை நீங்கியா னீங்குறை
கின்றிலே னாதலா லவன்பின்னே
குவனின் னாகணை சுருட்டிக்கொண்
டென்னுடன் கூடவா வெனலோடுஞ்
சிவனுந் தேர்கொணான் வேறொரு
தேயநீர் சேறலென் னோவென்னாப்
புவன வேந்தனும் தன்மிசை
கவியிவன் புகல்கிலா மையினாலே. 65

---

63. வருவித்து - தன்பக்கம் வரச் செய்து. விட்டகல் - விட்டு நீங்குக. அகல்குவன் - நீங்குவேன். நடவுற்றான் - நடக்கத்தொடங்கினான்.

64, 65. நின்னைவிட்டு இங்ஙனம் அணைகில்லேன் - உன்னை விட்டு யான் இங்குத் தங்கமாட்டேன். நாகணைமிசை - பாம்புப் படுக்கையில். துழாய் வெஃகு மார்பினன் - திருமால். சற்கணிகண்ணன் - நற்குணம் மிக்க கணிகண்ணன்.

65. அவனை நீங்கி - அவனைப் பிரிந்து, 'யான் அவன்பின் செல்வன்; நீயும் நாகணை சுருட்டிக்கொண்டு என்னுடன் வா' என்றான். சிவனும் தேர் கொணான் - சிவபிரானும் ஆராய்ந்து அறிய முடியாத திருமால். காரணம் கேட்டான்.

இந்தத் தேயம்விட் டேகென
இவன்றனக் கியம்பின னெனலோடும்
அந்தப் பேரவ மதியுன
தடியற்கன் றதினிற்பதின் மடங்காக
எந்தனைச் செய்த தாகுமா
லுனைப்பிரிந் திருக்கில னிவண்விட்டே
உந்த னோடுசெல் குவனென
வுரைத்துவந் துறங்குநா கணைதன்னை; 66

சுருட்டு றாவெடுத் தேகலும்
மருகுறு தூய்மையார் மடவார்கள்
மருட்டு றும்மிவ ரொடுமறு
தேயம்யான் மருவுவன் இன்றென்னா
இருட்டி னீங்குவிட் டேகலென்
னெனவவ ரிசைத்தலு மடியார்தம்
பொருட்டெ னாநடந் தமையெலாம்
புகன்றனன் புவிதனை யளித்துண்டோன். 67

---

66. உன் பக்தனுக்குச் செய்த அவமானம் எனக்கேயாகும். திருமாலும் மழிசையானுடன் செல்ல ஒருப்பட்டான்.

திருமழிசையாழ்வார் நகரைப் பிரிவதற்குரிய காரணத்தை ஒரு வெண்பாவாற் பாடினார்.

கணிகண்ணன் போகின்றான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீ கிடக்கவேண்டா — துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன் நீயும்உன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்.

கணிகொண்ட தண்டுழாய்க் காடலைத் தோடுதேங்
கலுழிபாய்ந் தளறு செய்யக்
சுழனிபடு நடவையிற் கமலத் தணங்கரசொர்
கையணை முகந்து செல்லப்
பணிகொண்ட முடவுப் படப்பாய்ச் சுருட்டுப்
பணைத்தோள் எருத்த லைப்பப்
பழமறைகள் முறையிடப் பைந்தமிழ்ப் பின்சென்ற
பச்சைப் பசுங் கொண்டலே.

என்று. அனுபூதிச் செல்வர் குமரகுருபரர் மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழில் திருவாய்மலர்ந்த பாசுரம் இங்கு நினைவுகூர்க.

67. மடவார்கள் - பூமகளும் திருமகளும். 'மறுதேயம் யான் மருவுவன் இன்று என்று' இருட்டினில் நீங்கக் காரணம் யாது ? என்று கேட்டனர். அடியார்தம் பொருட்டு - இஃது அடியவர்பொருட்டாகச் செய்த செயலாம். புவிதனையளித் துண்டோன் - திருமால். எழுவாய்.

அம்மொ ழித்திரு மகளொடும்
புவிமக ளாகிய விருவோர்கள்
தம்மி ருஞ்செவி யுறுதலுந்
தியங்கியே தனித்திவ ணுறையேம்யாம்
உம்மு டன்துடர்ந் திடுவமென்
றெழுந்தவ ருடன்வர விரைவோடுஞ்
செம்மை சேரும்வெஃ காவைவிட்
டேமறு தேயஞ்சென் றனர்மாதோ. 68

இச்செ யற்கண்மற் றுளதிருப்
பதிகள்வா ழிறைவர்தேர்ந் துடனேக
நிச்ச யித்தவ ரவர்கடந்
தேவியர் நெருங்கித்தம் முடன்செல்ல
கச்சி தன்னைவிட் டேகினர்
மறுதினங் காலையிற் புனறோய்ந்து
குச்சி னிற்கத வந்திறந்
தர்ச்சகர் கோயிலுட் புகுந்தாரால். 69

புகுந்து நோக்கலு முபயநாச்
சியார்களாம் பூவைய ரொடுஞ்செந்தேன்
உகுந்து ழாய்முடி நாரணர்
தங்களை யொருவருங் காணாராய்
மிகுந்த வற்புத மடைந்தவ
ராகியே மீண்டொரு விடத்தொன்றித்
தகுந்த யோசனை புரிந்த
னர்திருத் தலங்கள்வாழ் மறையோர்கள். 70

---

68. யாம் தனித்திவணுறையோம் - யாங்கள் உன்னைவிட்டு வாழமாட்டோம். வெஃகாவைவிட்டு மறுதேயம் சென்றனர் - வேற்று நாட்டை அடைந்தனர்.

69, 70. மற்றைய திருப்பதியில் எழுந்தருளியுள்ள இறைவர்களும் தம்தம் தேவியருடன் கச்சியை விட்டுவிட்டு வேறு நாடுற்றனர். அர்ச்சகர்கள், குச்சினில் (திறவுகோல்) கதவம் திறந்து பார்க்க வெறுங்கோவில்களைக் கண்டு சிந்தித்தனர். உபயநாச்சியார் - இரண்டு தேவிகள் (வைஷ்ணவ வழக்கு). ஒருவிடத்து - ஓரிடத்தில்.

முரச றைந்திடு படைத்தலை
யுடையவம் முதுநகர்ப் புரந்தோம்பும்
அரசன் மாடணைந் தித்திறம்
யாவுமங் கறைதலு மதுகேளாப்
புரசை யானைய னுள்மிக
நடுங்கியிப் புதுமையை அமைச்செய்தும்
பிரச மாலையீர்! புகலுமி
னென்னவப் பெரியரு மிதைச்சொன்னார். 71

பணிமு டித்தலை சுமந்திடு
மிரும்புவி பரித்திடுந் திணிதோளாய்
கணிக ணற்குநீ பிழைத்திடும்
பிழைகளக் கணிகணன் றனக்கல்ல
மணிவ ணற்கிழைத் துளதென
வுணர்திமற் றவன்றிரு மலர்போன்ற
அணிப தத்தினிற் றொழுதுப
சரித்திடி லவரணை குவரென்ன; 72

கேட்ட போதுவெஃ காவிடை
யேகியே கேட்கலு முளதாமிந்
நாட்டி லில்லையக் கணிகண
னிவ்வழி நடந்தன னென்வாங்குக்
கூட்ட மிட்டவ ருரைத்தலு
மந்நெறி குறித்துப்பா ரளப்பான்போல்
ஓட்ட மிட்டொரு நொடியினிற்
சென்றன னொளிர்மணி முடிவேந்தன். 73

---

71. முதுநகர் - பழைய நகர். புரந்தோம்பும் - பாதுகாக்கும். புரசை யானையன் - கழுத்திற் கட்டப்பட்ட கயிற்றையுடைய யானைகட்குத் தலைவனாகிய மன்னவன். புரசை - யானையின் கழுத்தில் கட்டும் கயிறு. 'புரசை யானையிற் போகவும்' என்பர் (சுந்தர காண்டம்) கவிச்சக்ரவர்த்திகள். அமைச்சு எய்தும் - மந்திரிகளாக வந்துள்ள. பிரச மாலையீர் - தேன் நிரம்பிய மாலையை அணிந்தவர்களே.

72. பணிமுடி - பாம்பின் (ஆதிசேஷன்) தலையில். பரித்திடும் - சுமக்கின்ற. நீ கணிகண்ணனுக்குச் செய்த பிழை மணிவண்ணனுக்குச் செய்த பிழையாகும்.

73. வெஃகாவிடை எய்தி மன்னன் கணிகண்ணனைப்பற்றி விசாரித்தான். கணிகண்ணன் இவ்வழி நடந்தனன் என்று அங்குள்ளவர் கூறினர். ஓட்டமிட்டு - வேகமாக.

மின்னி ழிந்திரும் புவிமிசை
நடந்தென விரைவொடும் நடந்தேகும்
பொன்னி னோடுமம் புவிமகள்
தமதடிப் போதினைப் பணிந்தேத்தி
என்னி லென்பிழை கண்டுநீ
ரேகுவ தியம்புவி ரெனலோடும்
உன்னி லோர்பிழை யாங்கள்கண்
டுணர்கில முலகிய லதுகேண்மோ. 74

கணவன் போம்வழி மனைவிய
ரேகுதல் கடமையா மதனாலெம்
மணவன் போகயாம் பின்றுடர்ந்
தேகுவ மன்னனீ யவரைக்கேட்(டு)
உணர்கு வாயென வாங்கவ
ருரைத்தலு மொளிர்மணி முடிவேந்தன்
பணவ ராவணை சுருட்டிமுன்
பெயருமப் பச்சைமாற் கெதிர்சென்றே; 75

திருவ டிக்கணின் றடியனே
னென்பிழை செய்தன னெனநீயும்
மருவு கோயில்விட் டேகுவ
தென்னலும் மன்னவன் றனைநோக்கி
முருக விழ்த்தபூந் தொடையவ
ரென்வயின் முளரிசேர் வண்டென்னப்
பெருகு மன்பின ராரிதினம்
யானெனப் பேசுத லுணர்வாயால். 76

---

74. மின் - மின்னல். புவிமிசை நடந்தென - பூமியில் நடப்பதுபோல். பொன் - திருமகள். புவிமகள் - நிலமகள். ஏகுவது - செல்வதற்குரிய காரணம்.

75. கணவன் போம் வழியில் மனைவியர் ஏகுதல் கடமை. மற்றவற்றை அவரைக் கேள் என்றனர் நாச்சிமார்கள். பணவராவணை - படத்தை உடைய பாம்புப் படுக்கை. பச்சைமாற்கு - பச்சை நிறமுடைய திருமாலுக்கு.

76. அடியனேன் - உன் தொண்டனாகிய நான். பிழை - குற்றம். ஏகுவது என் - செல்வதற்குக் காரணம் யாது? என்வயின் - என்னிடத்தில். முருகு அவிழ்த்த பூந்தொடையவர் - மணத்தை வெளிப்படுத்தும் மாலையணிந்த தொண்டர்கள். முளரிசேர் - தாமரையைச் சேர்ந்த.

ஆத லாலென தடியனாம்
மழிசைய னின்னகர் தனைநீங்கிப்
போத லோடுமங் கவனுடன்
யானுமே போகின்ற தறியுன்பால்
தீதுண் டாமெனி லவனைநீ
வினவிடிற் றெரிந்திடு மெனமாயன்
ஓத லோடுமன் னவனுமன்
னவனிடத் துகந்துசென் றனன்மாதோ. 77

சென்ற வன்றிருப் பாதவம்
புயங்கடன் றிருமுடி யுறச்சூடி
இன்று நான்பிழை யிழைத்துள
தென்கொனீ யேகுதற் கெனலோடும்
வென்றி வேலினோய் நின்னுட
னொருமொழி விளம்பிய திலையான்மற்(று)
ஒன்று நீயப சாரமெற்
கிழைத்தது முணர்கில மதுகேண்மோ. 78

பிரிய முற்றெனைச் சார்ந்துள
கணிகணப் பெயர்பெறும் புலவோனும்
புரியு நின்புவி யெழுந்துவிட்
டேனெனப் போயின னவன்றன்பால்
பரிவு கொண்டயான் அடைந்துளே
னவனிடம் படர்ந்துநீ வினவுற்றால்
தெரியு மாங்கவன் திரும்புறில்
அவன்பினே திரும்புவன் யானென்றான். 79

---

77. உன்பால் தீதுண்டாம் எனில் - உன்னிடம் தீமையிருக்குமானால். அவனை வினவிடில் தெளிந்திடும் - திருமழிசையாழ்வாரைக் கேட்டால் தெளிவு உண்டாகும்.

78. திருமழிசையாழ்வாரை உங்கட்கு இன்று யான் செய்த பிழையுண்டோ ? என்றான். நீ அபசாரம் செய்யவில்லை. என்னுடன் ஒரு மொழியும் பேசிய தில்லை; வேறொரு குற்றம் உண்டு, அது கேள் என்று ஆழ்வார் கூறினார்.

79. புரியும் - நீ விரும்புகின்ற. புவி - நாடு. பரிவு கொண்ட யான் - அன்பு கொண்ட நான். அவன் திரும்புறில் - அவன் மீண்டால்.

என்ன வோதலு மலைகட
லுடையுடை யிரும்புவி தனையாளும்
மன்ன வன்விரைந் தடைந்துதன்
முடியுறு மணிமுடி கணிகண்ணன்
பொன்ன டித்துணைப் போதுவைத்
திங்கியான் புரிந்துள பிழையாவும்
அன்னை பாலிளங் குழவிசெய்
துளதென வகம்பொறுத் திடல்வேண்டும். 80

மூவரும் திரும்பினர்

என்று பற்பல வினியநன்
மொழிபுகன் றேத்திவேண் டுதலோடும்
நன்றெ னாநயந் தவன்வெஃ
காவழி நடக்கலு மவன்பின்னே
கன்றி னைத்துடர் பசுவென
மழிசையன் கடுகின னவன்பின்பாய்
வென்றி யாழிய னடந்திட
அவன்பினே மின்னனார் களுஞ்சென்றார். 81

வேந்த னும்மகிழ் வுடன்வரப்
பின்செல விரைந்துசீர் வெஃகாவுள்
காந்து பன்மணிக் கோயிலுள்
யாவருங் கலந்துபின் மலையொன்றை

80, 81. மன்னவன் கணிகண்ணனிடம் மன்னிப்பு வேண்டினான். அவன் மன்னித்துக் காஞ்சியை நோக்கி நடந்தான். கணிகண்ணனை ஆழ்வார் பின் பற்றிச் சென்றார், ஆழ்வாரைப் பின்பற்றிப் பெருமாள் சென்றான். பெருமாளைப் பின்பற்றி நாச்சிமார்கள் சென்றார்கள்.

கன்றினைத் துடர் பசுவென - கன்றைப் பின்பற்றிச் செல்லும் பசுவைப் போல. மின்னனார் - திருமகளும் நிலமகளும். ஆழ்வார் திரும்பும்போது,

"கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங் கச்சி
மணிவண்ணா நீகிடக்க வேண்டும் — துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன்; நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்விரித்துக் கொள்."

என்று பாடினார். அவ் வரலாற்றைக் காவிய நயம்படக் குமரகுருபரர் மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழில் (காப்பு) ஓவியமாக்கியுள்ளார்.

ஏந்தி மாமழை தடுத்திளங்
கோவிய ரிளமுலை வளம்வேட்ட
பூந்து ழாய்முடி மாயனை
நோக்கியம் மழிசையன் புகல்வானால். 82

மன்னி னன்கணி கண்ணன்யா
னவன்பினே வந்துளே னினியுன்றன்
பன்ன கப்பெரும் பாயலை
விரித்ததிற் படுமெனப் படுத்தானால்
அன்ன நாண்முத லத்திருப்
பதியின்வா ழாழியங் கையற்குச்
சொன்ன வண்ணஞ்செய் தருள்பெரு
மாளெனத் தோன்றிய தொருநாமம். 83

மற்ற வத்திருப் பதியுறை
பவர்களும் மனைவிய ரொடுதம்மூர்
உற்ற டைந்துயர் கோயிலுண்
மகிழ்வொடு முறைந்தனர்; புவியாளும்
வெற்றி வேந்தனு முளங்களித்
தரமனை மேவிவாழ்ந் தன்னவ்வூர்
சொற்ற பார்க்கவன் மதலையுஞ்
சிலபக றுன்னிவாழ்ந் ததன்பின்னர்; 84

(வேறு)

மருவுவெஃ காவை நீங்கி
மாங்கனித் தேற லும்பார்
பருகிள மேதிப் பாலும்
பாசமா றிறாலின் றேனுங்

---

82. காந்து - ஒளி வீசும். மலை - கோவர்த்தனம். வேட்ட - விரும்பிய.

83. இனி - இப்போது. பன்னகப் பெரும் பாயல் - பாம்புப் படுக்கை. 'பன்னகப் பெரும்பாயலோ ? பச்சையாலிலையோ ?' என்பர் வில்லியார். படும் - படுத்துக்கொள்ளும். அன்ன நாள் முதல் - அந்த நாளிலிருந்து 'சொன்ன வண்ணம் செய்தருள் பெருமாள்' என்ற பெயர் வந்தது.

84. மற்றத் திருப்பதியுறையும் இறைவர்களும் தத்தம் ஊரை அடைந்தனர்; கோவிலுள் உறைந்தனர். சில பகல் - சில நாள்கள். பார்க்கவன் மதலை - பார்க்கவனின் புதல்வராகிய ஆழ்வார்.

குருமணிக் கரும்பின் சாறுங்
    குளம்பல நிரம்பப் பாயும்
திருவளர் குடந்தை யென்னுந்
    தெய்வமா நகரஞ் சேர்ந்தான். 85

அத்திருப் பதிவா ழாரா
    வமுதரின் அம்பொற் பாதஞ்
சித்தமுள் ளுருகி யன்பு
    செழிப்பவா லயத்துட் சேர்ந்தே
நித்தமும் வணங்கிப் போற்றி
    நிகழுமாண் டதுவோ ராயி
ரத்துநா னூறவ் வூரி
    னமர்ந்துவாழ்ந் திருந்த பின்னர்; 86

பெரும்புலியூர் நிகழ்ச்சி

குரும்பையங் கொங்கை நீலக்
    கூர்விழிப் பணையின் மென்றோள்
சுரும்பிமிர் கரிய கூந்தல்
    றோகையர் முத்த ளக்க
அரும்பின நிலவில் வாய்விண்
    டலர்ந்திடுங் குவளைப் பண்ணைப்
பெரும்புலி யூரின் வாழும்
    பிரபல னொருவ னன்னோன்; 87

---

85. ஆழ்வார் திருக்குடந்தையை அடைந்தார். மாங்கனித் தேறலும், மேதிப்பாலும், இறாலின் தேறலும், கரும்பின் சாறும் குளம் பல நிரம்பப் பாயும் குடந்தை. தேறல் - தேன். மேதி - எருமை. இறால் - தேனடை. குருமணி - ஒளியுள்ள மணிகள். ஆராவமுதம் இருக்கும் நகரம் ஆதலின், இனிப்பான பொருள்களைக் கொண்டு குடந்தையை அறிமுகப்படுத்துகின்றார்.

86. ஆராவமுதனை வணங்கி ஆழ்வார் குடந்தையில் 1400 வருடம் வாழ்ந்தார்.

87. பெரும்புலியூரை ஆழ்வார் அடைந்தார். மங்கையர்கள் அளக்கின்ற முத்தால் உண்டாகும் நிலவால் மலர்கின்ற குவளைப் பண்ணைகளையுடைய பெரும்புலியூரில்—ஒருவன் சிறப்புடன் இருந்தான். முத்தளக்கும் மங்கையர்களை ஓவியமாகத் தீட்டியுள்ளார் கவிஞர். பணையின் மென்தோள் - மூங்கில் போன்ற தோள். சுரும்பு இமிர் - வண்டுகள் பாடல் பாடும். தோகையர் - மயில் போன்ற பெண்கள். வண்டுகள் பண்பாடுவதாகப் பாடல்; கவிசமயம் — "மூசு வண்டு வாசம் மண்டு காவில் மொண்டு தேனை உண்டு மோகன முகாரி ராகம் பாடுமே" — என்பர் (காவடிச் சிந்து) அண்ணாமலை ரெட்டியார்.

செகந்தனி லுயர்ந்த கீர்த்திச்
செழுமறை யவன்றா னாங்கோர்
மகந்தனை யியற்றல் கேட்டம்
மாமகம் காண்பா னாய்த்தன்
அகந்தனி னினைவுற் றாங்கண்
அணுகியவ் வூர்வாழ் கோயில்
உகந்துறை செங்கண் மாலை
யுணர்ந்திவன் வலம்வந் தானால். 88

வலமதாய் வரும்போ தந்த
மண்டபம் கோயிற் றம்பம்
இலகுறு பெருமான் மற்றும்
இயைவன மற்றும் யாவும்
நலமுறு மழிசை யான்பின்
நடத்தல்போற் றிரும்பல் காணாப்
பலருமாங் கதிச யித்தங்
கவர்பதம் பணிந்து போற்றி; 89

இந்தமாப் புருடன் யாவன்?
இவன்மகத் துவந்தா னென்னோ?
பைந்தலை யரவி னாடும்
பரமனிவ் வுருவந் தாங்கி
வந்தன னாம லாவிவ்
வணஞ்சுழன் றிடுமோ வென்னாச்
சிந்தையின் மகிழ்ந்து கொண்டா
டினர்களச் சீரோன் றன்னை. 90

---

88. பெரும்புலியூர் அந்தணன் செய்யும் யாகத்தைக் காண ஆழ்வார் விரும்பி அவ்வூரை அடைந்து, அவ்வூரில் உள்ள திருமாலை வணங்கி வலம் வந்தார். கேட்டு, அம் மாமகம் காண்பான் — என்று பிரிக்க.

89. ஆழ்வார் வலம் வரும்போது, மண்டபம், தம்பம், பெருமாள் முதலான யாவும் மழிசையார் சென்ற திசைதோறும் சுழன்றன. அது கண்டவர் அதிசயித்து அவருடைய திருவடியைப் பணிந்தனர்.

90. மகத்துவம் - சிறப்பு. பைந்தலை யரவினாடும் பரமன் - காளிங்கன்மீது கூத்தாடிய கண்ணன்.

மழிசையன் றானு மவ்வூர்
வைகினன் மகம்செய் வோனும்
விழிதுயி லுணர்ந்து காலை
விதிமுடித் தெக்ய சாலை
உழிமிகு நியம மாய்ச்சென்
றுற்றவ னேக லோடும்
வழியினோர் மடவாள் தன்கால்
நீட்டலும் மறையோன் காணா; 91

வேலைவென் றிடுங்கார்க் கண்ணாய்!
வேலையின் வளர்வ னத்தாய்!
மாலைசேர் மாலை நோக்கி
மகம்புரிந் திடுமவ் வெக்ய
சாலையான் சால நேமந்
தன்னுடன் விரைவி னேகுங்
காலைநீ காலை நீட்டிற்
றென்னெனக் கனன்று சொன்னான். 92

சொன்னவம் மொழிதன் காதிற்
சுருக்குற முத்த மூரல்
மின்னிட நகைசெய் திப்பார்
மிசையொரு கடவு ளாக
இன்னகர் தனில்வந் தெய்தி
யிருக்குமம் மழிசை யான்றன்
பொன்னடி வணங்கிப் பூசை
புரிந்திடு புலமை யில்லோய். 93

91, 92. புலியூர் அந்தணன் வேள்விச்சாலைக்குச் செல்லும்போது ஒருத்தி நீட்டிய காலை மடக்காமல் அவமதித்தாள். அந்தணன் காரணம் கேட்டான்.

91. வைகினன் - தங்கியிருந்தான். விதி - அனுஷ்டானங்கள். எக்ய சாலை - வேள்விச்சாலை. நியமமாய் - ஆசாரத்துடன்.

92. வேலை வென்றிடும் - வேலையே வெல்கின்ற. கார்க்கண் - கருங்கண். வேலையின் - கடலைப்போல. வளர் - மிக்க. வ(ன்)னத்தாய் - நிறத்தை உடையவளே (கரிய நிறமுடையவளே - இகழ்ச்சிக் குறிப்பு). ஏகும் காலை, காலை நீட்டிற்று என்? எனப் பிரிக்க.

93, 94. சுருக்குற – சுருக்கெனப் படிய. இவ்வூருக்குத் திருமால்போல ஆழ்வார் வந்துள்ளார். அவரை வணங்கிப் பூசைபுரியும் அறிவற்றவனே! உனக்கும் புகழ் உண்டா? நீ செய்வது யாகமா? என்று அப் பெண் கூறினாள். கேட்டவன்

நினக்கொரு மொழியு முண்டோ?
நின்மகம் மகந்தா னாமோ?
எனக்கொடி மடவாள் கூற
இருசெவி புகுத லோடும்
கனக்கவு நாணங் கொண்டக்
கன்னியைப் புகழ்ந்து வாழ்த்தி
மனக்கவ லையினோ டேயம்
மறைவலான் சாலை புக்கான். 94

புக்கவன் மடவாள் சொற்ற
புனிதனை விரைவி னோடுஞ்
சிக்கென வவ்வூர் முற்றும்
தேடினன் தெரியா னாகி
மிக்கவாந் துயரி னோடும்
மெய்தளர்ந் துயிர்த்து வாடித்
தக்கதே தறிதற் கென்னாத்
தன்னகஞ் சார்ந்தா னன்றே. 95

மனதுவெந் துயரொ டுங்க
வளர்வுழி மழிசை யுற்றோன்
தனதுரு விதுதேர் கென்னத்
தானவ னுருவந் தாங்கிக்
கனவினிற் றெரித்துப் போனான்
கஞ்சனா ருயிர்போய்த் துஞ்சச்
சினவரா வணையை நீங்கித்
தேவகி வயிற்றின் வந்தோன். 96

நாணத்துடன் யாகசாலையை அடைந்தான். புலமையில்லாய் - அறிவற்றவனே. கனக்க - மிகுதியாக.

95. சிக்கென - விரைவாக. உயிர்த்து - பெருமூச்சு விட்டு. தக்கது ஏது அறிதற்கு என்னா என்று பிரிக்க. அறிதற்கு தக்கது ஏது - அறிவதற்கு உபாயம் யாது? அகம் சார்ந்தனன் - வீட்டையடைந்தான்.

96. மனது வெந்துயர் ஒடுங்க - மனமானது துயரிலே ஒடுங்கிப்போக. வளர்வுழி - உறங்கும் சமயத்தில். தான் அவன் உருவம் தாங்கி - திருமால் திருமழிசையாழ்வாரின் வடிவத்தை மேற்கொண்டு. தெரித்து - தெரிவித்துவிட்டு. வந்தவன் யாரெனின்? கஞ்சன் - கம்சன். துஞ்ச - இறக்க. சின அராவணை - கோபத்துடன்கூடிய பாம்புப் படுக்கை. தேவகி வயிற்றில் வந்தோன் - தேவகியின் வயிற்றில் பிறந்த கண்ணன்.

கண்டுயி லுணர்ந்து பின்பவ்
வுருவினைக் கண்கா ணாமல்
விண்டுவந் துணர்வித் தானென்
றுளந்தனில் வியப்புற் றானால்!
மண்டுறு முவகை யோடம்
மறைவலோன் றிருமா லுக்குத்
தொண்டுறு மவனை நாடித்
துரிதமுற் றெழுந்து காலை; 97

ஆங்கொரு வனுமா யுற்றோர்
ஆவண வீதி யின்கண்
பாங்குறு பிரப்பங் கூடை
பரிவொடு முடைந்திட் டந்தத்
தீங்கிலான் விற்றல் காணாச்
செழுந்துயில் கனவிற் கண்டோன்
ஈங்கிவ னாகு மென்னா
வெண்ணியுள் மகிழ்வுற் றானாய்; 98

ஐய!நீ யிவ்வா றுற்ற
தறிந்திலே னறியத் தக்கோர்
வையமீ தில்லை; இந்த
மானிட வடிவங் கொண்டு
உய்யுமா றுற்ற தேவே!
எனவுள முருகி யன்னோன்
செய்யபங் கயத்தாள் மேலே
திருமுடி சேர்த்திச் சொல்வான். 99

---

97. விண்டு - திருமால். வியப்புற்று - ஆச்சரியப்பட்டு. மண்டுறும் உவகை யோடு - மிக்க மகிழ்ச்சியுடன். துரிதமுற்றெழுந்து - வேகமாய் எழுந்து.

98. ஆழ்வார் பிரப்பங்கூடை விற்றுக்கொண்டிருப்பதைக் கண்டு மறையவன் கனவிற் காணப்பட்டவர் இவரே என்று மகிழ்ந்தான்.

99. மானிட வடிவம் கொண்டு - மனித வடிவத்தை மேற்கொண்டு. உய்யுமாறு - கடைத்தேறும்படி.

என்பெருந் தவமோ? முன்னோர்
இழைத்திடுந் தவமோ? இப்பார்
தன்பெருந் தவமோ? இந்தத்
தனிமகந் தனக்குற் றோர்கள்
முன்புரி தவமோ? யாதோ?
தெரிகிலேன்; முளரி யொப்பாம்
நின்றிரு வடிக ணோவ
வந்திவ ணடைந்த தென்னா; 100

என்னநன் மொழிகள் பேசி
யான்புரி கின்ற வேள்வி
தன்னைநீ காணு மாறு
சார்ந்திட வேண்டு மென்னா
அன்னமா மறையோன் வேண்டி
அழைத்திடு மின்சொல் யாவுங்
கன்னமு டுறலு முள்ளங்
காப்புட னவன்பின் சென்றான். 101

யாகசாலையில் நிகழ்ந்தது

மகம்புரி சாலை யெய்தி
மறைமுறை வழுவா தங்கி
யுகந்திட வாவி நெய்கொண்
டோமமுற் றியபின் தேவர்
முகந்திட வவிக ணல்கி
முடிந்தபின் மழிசை யானுக்(கு)
அகங்களித் தெழுந்து சம்பா
வனைமுன மளித்தா னன்றே. 102

---

100. நீ இங்கு வரத் தவம் செய்தவர் யாரோ என்று அந்தணன் வியந்தான். 'நிலம்செய் தவம் என்றுணரின் அன்று' என்று தொடங்கும் இராமாவதாரப் பாடலை நினைவுகூர்க.

101. என் மகம் காண வரவேண்டும் என்று அந்தணன் விண்ணப்பித்தான். உள் அங்காப்புடன் - மன விருப்பத்துடன்.

102. சம்பாவனையை மறையவன் ஆழ்வார்க்கு வழங்கினான். அவிகள் - தேவர்கட்கு வழங்கவேண்டிய உணவு.

அன்னவர்க் களித்தல் காணா
ஆங்கணுற் றிருந்தோ ரெல்லாம்
இன்னவன் மகத்திற் கெய்தி
யிருந்துள மேலோர் தம்மில்
முன்னரிற் பூசை கொள்வோன்
முறமொடு கூடை தட்டும்
பின்னிவிற் பவனோ வென்ன?
வெகுண்டனர் பெரிது மன்னோ. 103

நிருபர்கள் பலரை வென்று
நெறிவழா திராய சூயந்
தருமன்செய் திடுநாள் முற்பூ
சனையுயர் வசுதே வன்றன்
திருமகற் களித்த காலை
தனிற்சிசு பாலன் வெம்பி
உருமெனத் தெழித்தற் கொப்பாய்
உதாசினம் பலவும் சொன்னார். 104

அவ்வுரை பலவுங் கேளா
வந்தணன் மழிசை யான்றன்
செவ்விய முளரி யொப்பாந்
திருவடி தனது சென்னி
ஒவ்வுறப் பணிந்திட் டின்னார்
உரைத்தபுன் மொழிகள் எண்ணா
இவ்வயி னடியேற் காப்பாற்
றருள்மிகப் புரிவை யென்ன; 105

---

103. அந்தணர்கள், கூடையையும் முறத்தையும் விற்பவன் முதற்பூசை பெறுதல் தகுமோ என்றனர்.

104. கண்ணனுக்குத் தருமபுத்திரன் முதற்பூசை வழங்கியபோது சிசுபாலன் வெம்பி வைதாற்போல, அந்தணர்கள் ஆழ்வாரை உதாசினத்துடன் இகழ்ந்து பேசினர். நிருபர்கள் - அரசர்கள். நெறிவழாது - வழி பிசகாமல். வசுதேவன் திருமகன் - கண்ணன்.

105. அந்தணன் ஆழ்வாரை வணங்கி, 'இவர்களுடைய புன்மொழிகளை எண்ணாது அடியேற்கு அருள்புரிக' என்று விண்ணப்பித்தான். எண்ணாது - மதிக்காமல். இவ்வயின் - இவ்விடத்தில்.

பன்மொழி நயக்கு மாறாய்ப்
பண்புறப் பகர்ந்து போற்றி,
சின்மயப் பொருளா யிப்பார்
செனித்துறை சோதி யான
நின்மகத் துவமிப் புல்லோர்
நெஞ்சுறத் தெரித்தி யென்னா
நன்மகத் தலைவ னான
மறைவலோ னவில லோடும்; 106

இறைவன் காட்சி

அந்தநன் மொழிகள் கேளா
அவனுமைம் படையோன் றன்னைச்
சிந்தையுள் ளுணர்த்த லோடுஞ்
சிவனய னுடனே யண்டத்
திந்திரன் முதல்வா னோர்க
ளேத்தவந் தரத்தின் மீதாய்ச்
செந்திரு வுடனே மாயோன்
உவணன்மேற் சிறந்து தோன்ற; 107

காண்டலு மழிசை யான்றன்
கண்களித் துளத்தி னூடு
பூண்டபே ரன்பி னோடும்
புவியுற வணங்கி யென்னை

---

106. சின்மயப் பொருளாய் - அறிவு வடிவமாய். சோதியான நின் மகத்துவம் - ஒளிமயமான உன் பெருமையை. நெஞ்சுறத் தெரித்தி - நெஞ்சத்தில் நிலைத்து நிற்க அறிவிப்பாயாக.

107. கேளா - கேட்டு. ஐம்படையோன்றன்னை - ஐந்து ஆயுதங்கள் தாங்கிய திருமாலை. இறைவனை ஆழ்வார் சிந்தித்தார். உடனே மாயோன் கருடன் மேல் காட்சி தந்தான். உவணன்மேல் - கருடன்மீது.

இச் சமயத்தில், ஆழ்வார்,

"அக்கரங்கள் அக்கரங்கள் என்றுமாவ தென்கொலோ
இக்குறும்பை நீக்கியென்னை யீசனாக்க வல்லையேல்
சக்கரங்கொள் கையனே சடங்கர்வா யடங்கிட
உட்கிடந்த வண்ணமே புறம்பொசிந்து காட்டிடே"

என்று பாடியதாக வரலாறு பேசும்.

ஆண்டருள் பரம மூர்த்தி
அண்ணலே விண்ணோர் காணாத்
தூண்டருஞ் சுடரே யென்னப்
புகழ்ந்துகை தொழுது சொல்வான். 108

அஞ்சனை யளித்தாய் போற்றி!
அலகைமா முலைவைத் தூட்ட
நஞ்சமுண் டுவந்தாய் போற்றி!
நாகமே னடித்தாய் போற்றி!
கஞ்சனை வதைத்தாய் போற்றி!
கரிபரி யிடப மெல்லாந்
துஞ்சுறப் பொருதாய் போற்றி!
தூயனே போற்றி! போற்றி! 109

எனதுமா தவத்தி னால்வந்
தெய்தினை யினிநா யேன்வந்து
உனதுமாப் பதாம்பு யத்தை
யுறும்வகை யளித்தி யென்றான்
மனதுவந் தருளி யன்னான்
மாமுகந் தன்னை நோக்கிப்
புனைதுழாய்ப் படலை எம்மான்
புகல்குவ னிதனை மன்னோ. 110

இன்னமும் சிலநா ளிப்பா
ரிடையிருந் துலகு ளோர்பால்
துன்னுமா மாயை நீங்கி
உயர்பதந் துடரு மாறாய்

108, 109. ஒரு தொடர். மழிசையான் கண்களித்து, பேரன்பினோடும் வணங்கி (திருமாலை)ப் புகழ்ந்தான். தூண்டரும் சுடரே - தூண்டா விளக்கே.

109. அஞ்சனை - அஞ்சனா தேவியை. கரி - யானை (குவலயா பீடம்). பரி - குதிரை (கேசி) இடபம். - எருது (அரிஷ்டாசுரன்).

110, 111. ஆழ்வார் இறைவன்பால் முத்தியை வேண்டினார். இறைவன் உலக மக்களின் மாயையை நீக்கப் பாசுரங்கள் புனைந்து, பின்னர் பரமபதம் வருக என்றான்.

110. துழாய்ப் படலை - திருத்துழாய் மாலை.

பன்னுசெந் தமிழி னாற்பல்
பாடல்க ளிசைத்துப் பின்னர்
மன்னுதி யென்னத் தன்செவ்
வாய்மலர்ந் தருளி னானால். 111

அப்பொழு தாழி மாய
னடியினை வணங்கி யேத்தி
இப்பெரும் புருட னாலுன்
னிணையடி தொழுது யான்செய
ஒப்பரு மகத்தி னுற்ற
வுயர்பல னடைந்தே னென்னாச்
செப்பரு மகிழ்வி னோடுஞ்
சிந்தையுள் ளுருகி நின்றான். 112

மற்றுமவ் வேள்விக் குற்றோர்
மனமகிழ்ந் தடைந்து ளோரும்
நற்றுணை யாகிக் காக்கும்
நாரண னென்னு நாமம்
வெற்றிசே ராழி சங்கம்
விற்கதை வாள்கைக் கொண்டோன்
பொற்றிரு வடியின் வீழ்ந்து
புகழ்ந்தனர் துதிசெய் தாரால். 113

பாங்கொடு மிவ்வா றாகப்
பரிந்தடி தொழுது போற்றும்
ஆங்கவர் தமக்குக் காட்சி
யளித்துத்தன் பதவி சார்ந்தான்;
பூங்கம லத்து வாழும்
புனிதனன் றிட்ட சாபம்
தாங்கிய வரனுக் கையந்
தனையழித் தொழித்த நாதன். 114

112. இந்தப் பெரியவனால் உன்னைக் காணும் பேறுபெற்றேன்; வேள்விப் பயனை உற்றேன் என்று அந்தணன் திருமாலைப் பணிந்தான்.

113. மற்றவர்களும் திருமாலைப் பணிந்தனர். இப் பாடலில் பரமாத்மாவின் புகழ் விரிக்கப்பட்டுள்ளது. ஆழி, சங்கம், வில், கதை, வாள் என்னும் திருமாலின் ஐந்து ஆயுதங்களும் பேசப்பட்டுள்ளன.

114. இறைவன் காட்சி வழங்கிய பின் தன்னுடைய பரமபதத்தை அடைந்தான். கமலத்து வாழும் புனிதன் - பிரமன். இட்ட சாபம் - கொடுத்த சாபம் (பிச்சை எடுத்தல்). அரனுக்கு - சிவபிரானுக்கு. நாதன் - திருமால்.

மாயவ னகன்ற பின்னர்
மகம்புரி மறையோ னண்மி
ஆயநன் மகத்திற் காவந்
துளபல ரும்யாஞ் செய்த
தீயன பொறுத்தி யென்னத்
திருச்செவி யின்ப முற்ற
தூயவன் கமல பாதந்
தொழுதன ரேத்திச் சொன்னார். 115

இன்னண மவனைத் தேர்ந்த
யாவரு மினிதி னோடும்
பின்னரு மியற்றல் யாவும்
முடித்தபின் னிருக்கை தன்னில்
அன்னவ ரடைந்து வாழ்ந்தா
ரப்பெரும் புலியூ ரென்னும்
பொன்னகர் மழிசை யானும்
பொருந்திவீற் றிருக்கும் நாளில். 116

ஒருநாட் கிழிந்த வத்திரந்தத்
துறுபோ துமையு முருத்திரனாம்
எருதே றினனும் கயிலையெனு
மில்லம் விடுத்தந் தரமிசையே
வருபோ தவர்மே னிச்சாயல்
மற்றிம் மழிசை யாழ்வார்தன்
திருமே னியிற்றாக் குதலுமுளந்
திகைத்துப் பின்பா லொதுங்கினனால். 117

---

115. தீயன பொறுத்தி என்று இகழ்ந்தவர்கள் விண்ணப்பித்துக்கொண்டனர்.

116. செய்ய வேண்டிய செயலை முடித்த அந்தணர்கள் தம்மிடம் அடைந்தனர். மழிசையார் புலியூரில் தங்கியிருந்தார். வேள்வி இயற்றியவரின் பெயர் ,புலியூரடிகள்' என்று அரிசமயதீபம் பேசும். பெரும்புலியூரடிகள் என்று பன்னீராயிரப்படியும் அழகிய நம்பியின் குருபரம்பரையும் பேசும்.

117 முதல், ஆழ்வார் சிவபிரானையே வென்றார் என்று பேசப்படுகிறது. கிழிந்த வத்திரம் தத்துறும்போது - (ஆழ்வார்) கிழிந்த ஆடையைத் தைத்துக் கொண்டிருந்த சமயத்தில் சிவபிரான் அப்போது வான் வழியே வந்தான். ஆழ்வார் அந்த நிழல்படக்கூடாது என்று விலகினார்.

கண்ட வுமையா ளீவனிடையும்
கருமம் யாதென் றிடக்கேட்டு
வண்டுண் துளவத் திருநெடுமால்
மலர்நே ரடிமைக் கடிமையுறும்
தொண்ட னதனா னஞ்சாயற்
றோயா திடைந்தா னெனக்கடல்நஞ்
சுண்ட பெருமான் கூறிடக்கேட்
டொருபா கத்தி னுமையுரைப்பாள். 118

படியை யிரந்தோ ரடியதனுட்
படுமா றளந்து கொண்டருள்புட்
கொடியை யுயர்த்தும் திருமாலின்
குரைபொற் கழலார் கோகனக
அடியை வழுத்தும் திருத்தொண்ட
னாமே யெனினு மரவொடுவெண்
பொடியை யணிநீ கடவுளன்றோ?
புவியிற் பிறந்தோர் தமக்கெல்லாம். 119

அதையா மெய்தி யுணர்த்துமென
அரனு மவன்பா லடையினமை
மதியா னெனலும் மதியான்பால்
மதிப்பா யெய்தி மற்றவன்பால்
எதுவேண் டினுமஃ தளித்தல்கடன்
எனக்கேட் டவளின் மொழிமறுக்கும்
விதமின் மையினா லுடன்பட்டு
மேவு மவன்மா முகநோக்கி; 120

---

118. இவன் இடையும் கருமம் யாது - இவன் விலகுகின்ற காரணம் யாது என்று உமை கேட்டான். சிவபிரான், இவன் திருமாலின் தொண்டர்களின் தொண்டன். அதனால் நம் சாயல் தன்மேல் படாதபடி விலகினான் என்று சிவபிரான் கூறினான்.

119, 120, 121. உமாதேவி, இவன் திருமாலின் தொண்டனாயிருக்கட்டும். ஆனால் நீ உலகிற் பிறந்தவர்கட்குக் கடவுள் அல்லவா? அதை உணர்த்த வேண்டும் என்றாள். உமையின் மொழியை மறுக்க அஞ்சிய சிவபிரான், ஆழ்வார்

வேண்டும் வரங்கே ளெனவூசி
மேவும் வழியவ் வூசிதனிற்
பூண்ட நூல்போம் வரந்தருதி
யெனவே புகலப் பொற்கண்ணான்
ஈண்டுன் வறுமைதவிர் வரங்கே
ளெனலுந் தனது முதுகதனைத்
தீண்டி வெயர்வை தனையுருட்டிச்
சிந்திப் புவிமேற் றெரித்தனனால். 121

பொன்னின் மலைபோ லதுகுவியப்
பொருணின் றனக்கு வேண்டிலிது
தன்னைக் கொடுபோ வெனமழிசை
தனில்வந் துதித்தோன் சாற்றுதலும்
அன்ன மொழிவந் திருசெவியுள்
ளனல்போற் புகுதப் பொறாமையினால்
கன்னி பாகன் வெகுண்டுநெற்றிக்
கண்ணைத் திறந்தான்; திறந்திடலும், 122

புகைகொண் டெழும்பும் வடவனல்போற்
பொங்கும் கனல்விண் தொடர்ந்தெழும்ப
நகைகொண் டருளி யணிமழிசை
நகர்வந் துதித்தோ னவைநணுகா
வகைதன் பதத்தார் விரல்நகக்கண்
மலியா ரழலைத் திறந்துவிடப்
பகைகொண் டதனை வளைந்துறழ்வாய்
படுத்திக் கணத்திற் பருகியதே. 123

பால் அணுகி, "என்பால் ஒரு வரம் கேள்" என்றான். ஆழ்வார் "ஊசி போம் வழியில் நூல் செல்ல வரம் தருக" என்று அசதியாடினார். சிவபிரான், வறுமை நீங்க வரம் பெற்றுக்கொள் என்றான். ஆழ்வார் தன் முதுகின் வியர்வையை உருட்டிப் புவியில் தெளித்தார்.

122. அது பொன் மலையாகக் குவிந்தது. விருப்பமிருந்தால் நீ இதை எடுத்துச் செல் என்றார். கன்னி பாகன் - உமாதேவியைத் தன் இடப் பாகத்தில் கொண்ட சிவபிரான். "மூவிலை நெடுவேல் ஆதி வானவன் இடமருங் கொளிக்கும் இமயக் கிழவி" என்ற அருமையான ஆசிரியமாலையை நினைக. சிவபிரான் நெற்றிக் கண்ணைத் திறந்தான்.

123. ஆழ்வார் நெற்றிக் கண்ணின் நெருப்புக் கெதிராய் தன்னுடைய பாத விரலின் நகக் கண்ணிலிருந்து அழலைத் திறந்துவிட்டார். நவை அணுகா வகை - குற்றம் வராதபடி. உறழ்வாய் - மாறுபட்டு. கணத்தில் - சிறிது நேரத்திற்குள். "கணமேயும் காத்தல் அரிது" என்பது முப்பால். "கணமெனும் கிளவி சால நுட்பம்" என்பது பிங்கலம்.

பின்னும் வெகுண்டு புரமட்ட
பெருமான் வேறு நிகரிலதாய்
மன்னுஞ் சூலந் தனைவிடுப்ப
மதித்தாங் கதனைக் கைக்கொளலும்
அன்ன துணர்ந்த வசரீரி
யமரர் தமக்கு மறிவறியாய்
இன்ன படைநீ விடுத்திடினும்
எய்தி யவனா லழிவெய்தும். 124

ஆத லாலிங் கிதனைவிடா
தகல்தி யெனவம் மொழிகேட்டுச்
சீத மதியுங் கங்கையுந்தண்
செழுங்கொன் றையுஞ்சேர் செஞ்சடையோன்
பாதி யுடலங் கொண்டமலை
பயந்த மடவா டனைவெறுத்துப்
போத நாணுற் றிடபமிசைப்
பொருந்தி விசும்பிற் போயினனால். 125

(வேறு)

ஆங்கவன் போய பின்னர்
அணிமழி சையின்வந் துற்ற
தீங்கிலா வுளத்தா னந்த
செழுநக ரதனிற் சின்னாள்
தேங்கமழ் துளவப் பைந்தார்
திருமக டலைவன் செய்ய
பூங்கழன் மதிக்கு முள்ளம்
பொருந்திவீற் றிருக்கும் நாளில். 126

124, 125. ஒருதொடர். புரமட்ட பெருமான் - சிவபிரான். சூலம் விடுப்ப - சூலத்தை ஏவுதற்கு. அசரீரி - உடலில்லாதது. அமரர் தமக்கும் அறிவறியாய் - தேவர்களாலும் அறிய முடியாத பெருமை உடைய பெருமானே. "தேவரும் மறையும் இன்னமும் காணாச் செஞ்சடைக் கடவுள்" என்பர் வரந்தருவார்.

இப் பாடல்கள் அரிசமய தீபத்தில் காட்டப்பட்டுள்ளன.

சீதமதி - குளிர்ந்த சந்திரன். மலை பயந்த மடவாள் - உமாதேவி. இடபமிசை - ரிஷப வாகனத்தில். பயந்த - அஞ்சிய என்ற பொருளைச் சிலேடையாக உணர்த்துகிறது.

குடந்தையி லமர்ந்த பொன்னங்
கோயிலுட் டிருவ னந்தன்
படந்தனிற் றுயிலு மாரா
வமுதினைப் பரிவி னோடுந்
தொடர்ந்தனு பவித்த வானந்
தத்தினைத் தொடர்பை யெல்லாம்
கடந்தவம் மழிசை யானுங்
கருதிப்பா விசைக்க லுற்றே; 127

நான்முகன் திருவந் தாதி
நாற்பதோ டைம்பத் தாறும்
தேன்பொழி யாறீர் பத்துத்
திருச்சந்த விருத்தம் தானும்
வான்மரு வமுத மென்ன
மண்ணுளோர் துய்க்கு மாறாய்த்
தான்கனிந் துரைத்தா னஃதைச்
சாற்றிவீ டடைந்தார் பல்லோர். 128

அவ்விரு நூற்றுப் பத்தோ
டாறெனுங் கவிதை தன்னு
ளொவ்வியே கமலை கேள்வ
னுவந்துறை கின்ற வாகும்
திவ்விய தேச மீரெண்
செப்பிய ததனுக் குற்ற
செவ்விசேர் நகரந் தன்னைத்
தெரிவுறப் புகல்வா மன்றே. 129

---

127. அரவில் துயிலும் அமுது - ஆராவமுதப் பெருமாள். பாம்பில் இருக்கும் அமுதம். நயம் நன்குள்ளது. தொடர்பை எல்லாம் - எல்லாக் கட்டுகளையும்.

128. ஆழ்வார் திருவாய் மலர்ந்த பிரபந்தங்களின் விவரம் தரப்பட்டுள்ளன.

129, 130. ஆழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்ய தேசங்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வேங்கடம், அன்பில் எனப் பிரிக்க. பேர் - திருப்பேர்.

சீரரங் கம்வெஃ காவுந்
திருவல்லிக் கேணி தன்னோ
டூரகங் குடந்தை கோட்டி
யூர்குறுங் குடியோ டோதும்
பேரெவ்வுள் வேங்க டம்அன்
பில்திருப் பாட கம்து
வாரகைக் கூடலும் பாற்க
டலும்வை குந்த மாமே. 130

இப்ரபந் தங்கள் பாடி
யினிதொடுஞ் சிலநாள் வாழ்ந்து
முப்பரம் பொருளாய் வைகும்
முகுந்தனா ரருடன் னாலே
ஒப்பிலா விமான மேறி
யுயர்ந்திடும் விரசை யாடிச்
செப்பிடும் அமான னார்தந்
திருவடி சென்னி சூடி; 131

படிகநன் மேனி தாங்கிப்
பரமமா பதத்துட் சார்ந்து
குடியதாய்ச் சாம வேத
கீதங்கள் குலவிப் பாடி
நெடியநா ரணனோ டண்மிப்
பொருந்தின னிகழிக்காதை
அடிதொடங் குதலாய்க் கற்பார்
அடைகுவர் பதவி மாதோ. 132

131, 132. ஆழ்வார் முத்தியடைந்தார். விரசை யாடி - விரசை என்னும் நதியில் நீராடிவிட்டு. அமானன் - பரமபதத்தில் உள்ள தேவதை. இத்தேவதை தான் ஆன்மாக்களுக்குத் திவ்ய சரீரம் கொடுக்கிறது என்பது வைணவர் கொள்கை. இங்கு, "மன்னுயிர்காள்! இங்கே வம்மின்! மணவாள மாமுனிதன் பொன்னடியாம் செங்கமலப் போதுதனை — உன்னிச், சிரத்தாலே தீண்டின் அமானவனும் நம்மைக் கரத்தாலே தீண்டல் கடன்" என்ற எறும்பியப்பாவின் பாசுரத்தை அனுசந்திக்க.

தொண்டரடிப்பொடியாழ்வார் வரலாறு பகர்வோம்

சுழிகட லாடை யாகச்
சூழ்ந்தபா ரதனி ன்மீதே
அழிவில்சீர் மழிசை தன்னி
லவதரித் தருளுஞ் சீர்த்தி
மழிசையான் சரிதந் தன்னை
வகுத்துரைத் தனமால் இப்பால்
மொழிகுதுந் தொண்டர் தங்காற்
பொடிகதை முழுதுந் தானே. 133

திருமழிசையாழ்வார் திருவவதார அத்தியாயம்
முற்றும்.

133. தொண்டரடிப்பொடியாழ்வாரின் வரலாற்றைப் பாடுவோம் என்று தோற்றுவாய் செய்கிறார்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவவதார அத்தியாயம்

வெண்பா

மன்னியசீர் மார்கழியில் கேட்டையின்று மாநிலத்தீர்
என்னிதனுக் கேற்ற மெனிலுரைக்கேன்—துன்னுபுகழ்
ஆமறையோன் தொண்ட ரடிப்பொடி யார்பிறப்பால்
நாமறையோர் கொண்டாடு நாள்.

(உபதேசரத்தினமாலை, 11.)

மண்டங்குடிச் சிறப்பு

வண்டங்குடி யிதின்வேறிலை யெனவேவனம் விட்டே
கண்டங்குடி விலினேவுக ணையர்கார்க் குழலுறல்போல்
அண்டங்குடி துறவாகட வுளர்வந்தணு குறுசீர்
மண்டங்குடி யெனுமோர்பதி வளமேவிய பதியே. 1

வெண்பா: மார்கழியில் கேட்டை - இதற்கு ஏற்றம், தொண்டரடிப் பொடியார் பிறப்பால் மறையோர் கொண்டாடும் நாள். நாமறையோர் - மறை பயிலும் நாவினையுடையோர். நான்மறையோர் என்ற பாடமே பெருக வழங்கப்படுகிறது. நாமறை என்பது எதுகை நயம் கொண்டதாக உள்ளது.

1. "வண்டுகள், அம் குடி யிதின் வேறு இல்லை" என்று வனம்விட்டு, கண்டு அம் குடி வில்லின் ஏவு கணையர் கார்க்குழல் உறல்போல் என்ப் பதப் பிரிவு செய்க. வண்டுகள் (நாம்) தங்குவதற்கு ஏற்ற இடம் இதனினும் சிறந்த இடம் இல்லை என்று கண்டு, அழகிய வளைந்த வில்லின்கண் ஏவப்படுகின்ற அம்பை யுடைய (கண்) மகளிரின் கூந்தலில் தங்குவதுபோல்.

அண்டம் குடி துறவா கடவுளர் வந்து அணுகிய சீர் உடைய மண்டங்குடி - தேவலோகத்தில் குடியிருப்பதை விட்டுவிட்டுத் தேவர்கள் வந்து தங்குகின்ற மண்டங்குடி.

வண்டுகள் வனம்விட்டு மங்கையர் கூந்தலில் தங்குவதுபோல் தேவர்கள் விண்ணுலகை விட்டுவிட்டு மண்டங்குடியில் வந்து தங்குவர் என்க. வில்லின் ஏவு கணையர் - புருவமாகிய வில்லிலே ஏவுகின்ற கண்ணாகிய அம்பை உடையவர் (மங்கையர்). துறவா - விட்டுவிட்டு.

ஆழ்வார் அவதாரம்

அம்மாணக ரிடைவாழ்மறை யவர்தங்குல மதனில்
இம்மாணில முழுதும்புக ழிசைகொண்டுறு மொருவன்
செம்மாமட வரல்கற்பினில் தெளிநீர்மையி னிறையில்
எம்மாதரு மொவ்வாத்திரு வெழிலாளவள் வயிற்றின். 2

நாராயண னுருவாமென நவில்மார்கழி யெனுமச்
சீரார்மதி தனிலிந்திர தினமாகிய திருநாள்
ஏராரற மொழியோங்குற இருமாகட லெழுமவ்
ஆராவமு தெனவந்தவ தரித்தான்வினை யெரித்தான். 3

அண்டர்களி கூரப்பெறு மாயத்தனு மகிழ்வாய்
தொண்டர்கழல் பொடியர்க்குறு சுபகாப்பணிந் ததற்பின்
உண்டிட்டிடு மன்னத்தொடு சவளம்உப நயனம்
பண்டைக்குல மறையின்முறை பலவும்புரி வித்தார். 4

திருமணம்

உருவம்மத னெனலாயணை குறுநாடனின் மதனூல்
பருவம்வரு தலுமன்பொடு பனிமாமலர் வளருந்
திருவும்நிக ரலவென்றுரை செயுமொப்பில வடிவம்
மருவுங்குல மடமங்கையை மணமும்புரி வித்தார். 5

2, 3. ஒரு தொடர். ஒருவன் - ஒப்பற்றவன். (தொண்டரடிப்பொடியாரின் தந்தை பெயர் குறிப்பிடப்படவில்லை.) மடவரல் - பெண் (மனைவி). கற்பினில், தெளி நீர்மையினில், நிறையில், எம் மாதரும் ஒவ்வாத் திரு (மகள்) போன்ற எழிலாள். தெளிநீர்மை - ஐயமற்ற பண்பு. "நீர்மையுடையார்" என்பர் வள்ளுவர். நிறையில் - மனம் தீய வழியில் போகாதபடி நிறுத்துவதில். இவ்வடை மொழிகள், திருமகளுக்கும் ஆழ்வாரின் அன்னையார்க்கும் ஏற்கும். இந்திரன் நாள் - கேட்டை நட்சத்திரம். "துளங்கொளி வல்லாரை, வேதி, எரி, அழல்—கிளந்த இந்திரனாள் சேட்டையும் கேட்டை" என்பது பிங்கலம். நாரணன் உருவாம் நவில் மார்கழி - கண்ணன் வடிவமான மார்கழி (பகவத் கீதை). அறம் எழில் - தருமத்தின் எழுச்சி. இருமாகடல் - மிகப்பெருங்கடல் (பாற்கடல்).

4. ஆழ்வார்க்கு முறைப்படி சடங்குகள் செய்யப்பட்டன. ஆய் அத்தன் - பெற்றோர்.

5. ஆழ்வார் உரிய பருவத்தில் மணம் புரிந்துகொண்டார். மதன் எனலாய் - மன்மதன் என்று கூறும்படி. மதன் நூல் பருவம் - மன்மதனுடைய வஞ்சிக்கும் எண்ணத்திற்குள் அகப்படும் பருவம். நூல் - வஞ்சகம். "ஏதில ஏதிலார் நூல்" என்ற பகுதிக்குப் பரிமேலழகர் வகுத்த உரையைக் காண்க.

துவளுங்கொடி யிடையொல்கிது வண்டெய்திட வரைபோல்
திவளுந்தன மகலும்உரம் ஞெமுங்கத்திரு வணைமேல்
பவளம்பொரு மிதழின்சுவை பருகும்படி யொருமித்
தவளும்மிவ னொடுகூடிய ணைந்தின்பம டைந்தாள். 6

கயற்கண் வலையில் படல்

இவ்வாறவ ளொடுகூடியி ருந்தும்பிற வழகார்
செவ்வாய்மட வியர்தங்கடி றத்தாசைசெ லுத்தா
ஒவ்வாவவ ரொடுகூடியு றைந்தாரமு தெனவே
கவ்வாவிதழ் பருகாமிகு கனிவாயணை குவனால். 7

தவரும்முள னெகிழும்படி தங்கண்வலை தனைவீ
சவர்சுந்தர வடிவங்களி லகமுந்துற வொழுகா,
துவர்செவ்விதழ் முதல்யாவையுந் துதியாற்புக ழுதலால்
எவரும்மிவன் மதனாமென இயைவுற்றணை குவரால். 8

(வேறு)

இறைவன் தடுத்தாட்கொளல்

படியெ லாமுட் படிய வளர்த்திடும்
நெடிய நாரணன் நீள்பத பங்கயத்(து)
அடிய ராக வகையுளத் தொண்டர்கால்
பொடிய னிவ்வணம் நாள்பல போக்கலும். 9

---

6. இன்பத் துய்ப்பு. ஒல்கி - தளர்ந்து. திவளும் - விளங்கும். திகழும் - திவழும் (ககர வகர ஒற்றுமை). சிவப்பு - சிகப்பு; உவப்பு - உகப்பு முதலியன நோக்குக. ஒருமித்து - உடலும் உள்ளமும் ஒன்றுபட்டு.

7. புறவொழுக்கம் கூறப்படுகிறது. மடவியர் - இளம் பெண்கள். செலுத்தா - செலுத்தி. ஒவ்வா அவர் - மனத்தால் ஒன்றுபடாமல் உடலால் கூடுபவர். உறைந்து ஆரமுதெனவே எனப் பிரிக்க.

8. தவரும் - முனிவர்களும். தம் கண்வலை வீசு அவர் - தங்களுடைய கண்களாகிய வலையை வீசும் பெண்களின். அகம் முந்துற - மனம் முந்திச் சென்று பாய. யாவும் - எல்லா அங்கங்களையும். துதியாற் புகழ்தல் - பெருநயப் புரைத்தல். திருக்கோவையார், மாறன் கோவை முதலானவற்றிற் காண்க.

9. பொடியன் (சாடு). (சாடு - குறிப்பால் உயர்வும் தாழ்வும் தோன்றக் கூறுதல். பிரித்துப் பார்த்தால் சிலேடைப் பொருள்; சேர்த்துப் பார்த்தால் ஆழ்வார் பெயர்.

பொய்ய தாகும் புலவ னடத்தையை
மெய்யெ னாமனம் வீணிற் செலுத்தியே
செய்ய வாய்மட மங்கையர்ச் சேர்வுறும்
மையல் கொண்டு மறந்தனன் நம்மையே. 10

ஆத லாலிவ னுள்ளமம் மங்கையர்
மீது றாதுதன் மேனி யொளியிடைக்
காத லெய்து கருத்தரு ளத்திரு
மாது கேள்வன் மனத்திடை யுன்னியே. 11

மடை மாறிற்று

அந்த வாறவ னுக்கரு ளிச்செயச்
சிந்தை தன்னைத் திருத்தி யடைகெனப்
பந்தெ னுந்தனப் பாவையர் காதலை
நொந்து விட்டுளம் நோன்மைய னாயினான். 12

ஆங்க வன்றெறு மாழியன் பாலிறை
யோங்க வுள்ள முருகி யுருகிநைந்
தேங்கி யேங்கி யிருக்குமவ் வெல்லையத்
தீங்கி லானுளங் தேறிய தோர்ந்தரோ. 13

---

10. புலம் வன் நடத்தை - புலன்களின் வன்மையான ஒழுக்கத்தை. மெய்யெனா - உண்மை என்று கருதி. மறந்தனன் நம்மையே - நம்மை (திருமாலை) வணங்குதலை மறந்துவிட்டான். (தேவதேவியின் வரலாறு பேசப்படவில்லை. அரிசமய தீபம், சிருங்கார நயம்பட அதை விவரிக்கும்.)

11, 12. மங்கையர் மீது உறாது, தன் மேனி யொளியிடைக் காதல் எய்தத் திருமாது கேள்வன் உன்னி, அருளிச்செய, ஆழ்வார் பாவையர் காதலைவிட்டு நோன்மையர் ஆயினார் என முடிக்க. தன் மேனி ஒளி - தன்னுடைய திவ்ய மங்கள ரூபத்தின்கண் உள்ள ஒளியில். திருத்தி - மனம் மாற்றி வைத்து. ''மடைமாற்றி உன்றன் திருவடிக்கே செல வைத்தருளே'' என்பர் திவ்ய கவி.

13, 14, 15. ஒரு தொடர். 13. ஆழ்வார் தவற்றை உணர்ந்து ஏங்கும் சமயத்தில் திருமால் கருடன்மீது வந்து காட்சி வழங்கினான். தெறும் - பகை

இறைவன் காட்சி

மூல காரண னாயிய லுந்திரு
மாலு மாதுடன் மாவயி னன்மிசை
நாலு மாமுகன் நாகர் முனிவர்கள்
கால காலனுங் கைதொழு தேத்தவே. 14

விண்ணின் மீதுவி ளங்கித்தன் மேன்மையைக்
கண்ணி னூடுறை காட்சி யளித்தலும்
மண்ணி னின்றவம் மண்டங் குடியனும்
எண்ணி யுள்ள மிழுதென லாயினான். 15

ஆடி னான்விழுந் தானெழுந் தானெழுந்
தோடி னான்குதித் தானுரு கிப்புகழ்
பாடி னானவன் பங்கயச் சேவடி
சூடி னான்றொழு தான்களி துள்ளவே. 16

கழிந்தகாலங் கருதிக் கனிந்தார்

அகந்தெ ளிந்திவ் வமுத மிருக்கவே
உகந்து மங்கையர் பாலுற வாம்விடம்
முகந்து கால முடித்தன மேயெனா
இகழ்ந்து ளத்தைப்பின் பின்னணம் பன்னுவான். 17

நார ணாசிவன் நான்முகன் நாடிடுங்
கார ணாஅடி யார்தங் கருத்துறை
பூர ணாமுகுந் தாபுனி தாவளர்
ஆர ணாஉனை யாரறி வார்களே. 18

வரை யழிக்கின்ற. இறை - தங்குதல் (தியானித்தல். புதுப்பிரயோகம்.) உருகி உருகி ஏங்கி ஏங்கி இருக்கும் எல்லையில்.

மா வயினன் - சிறந்த கருடன் (பெரிய திருவடி). காலகாலன் - காலனையே அழித்த சிவபிரான். எல்லாவற்றையும் காலன் அழிப்பான்; அவனை அழிப்பவன் சிவபிரான். ''கால காலனைக் கம்பன் எம்மானை'' என்று நயமுறப் பேசுவார் சுந்தரமூர்த்திகள். கைதொழுது - கை கூப்பி. ஏத்த - புகழ.

15. எண்ணி - தன் சிறுமையையும் பெருமாளின் மேன்மையையும் நினைந்து. இழுதெனவாயினான் - வெண்ணெய்போல உருகினான்.

17. அமுதம் இருக்க, மங்கையர் உறவாம் விடம் உண்டு காலத்தை முடித்து விட்டோமே என்று பச்சாதாபப்பட்டார் ஆழ்வார்.

18 முதல் 21 பாடல் வரை ஒரு தொடர். ஆழ்வாரின் உணர்ச்சி மிக்க துதிகள்.

அருந்து மாறம ரர்க்கன் றலைகடல்
மருந்து கந்து வழங்கினை வாணகை
முருந்து மாதர் கலைகொடு முன்வளர்
குருந்து றுங்கருங் கொண்ட னிறத்தனே. 19

கத்தி னம்அழு தேங்கக் கனவரை
அத்தி னஞ்சுமந் தாயென் விழிகணீர்
முத்தி னஞ்சொரிந் தானந்த முத்திட
இத்தி னம்மெதிர்ந் தாயென தய்யனே. 20

என்னை யோர்பொரு ளாமென எண்ணியென்
அன்னை யாகு மமுதிடைத் தோன்றிய
பொன்னை மார்பிற் பொருத்திவந் தெய்திய
உன்னை யான்கண் டுரைக்கத் தகுவனோ. 21

என்று பற்பல கூறி யிரங்கிமுன்
நின்று கைதொழு தேநெட் டுயிர்த்தலும்
நன்று நன்றென் றிளநகை தோன்றிடக்
குன்று தாங்கிய கோவலன் கூறுவான். 22

பெருமாள் தேற்றினான்

எனது மாயை யெனுமிரு ளெய்தியே
உனது நல்லறி வைமயக் குற்றிட
மனதவ் வாறு மயங்கினை யாகும்நின்
தனது ளத்தைத் திருத்துறச் சார்ந்தனம். 23

வருந்து றேலினி மாயையும் நீங்கிற்றால்
பொருந்து சீரங்கம் வந்து புகுகெனாத்
திருந்தும் இம்மொழி செப்பி மறைந்தனன்
விருந்து முன்னம் விதுர னிடத்துண்டோன். 24

---

19. அலைகடல் மருந்து - தேவாமிர்தம். நகை முருந்து - பற்களாகிய மயில் இறகின் அடியைப் பெற்றுள்ள. குருந்து - குருந்த மரம்.

20. கற்றினம் என்பது கத்தினம் என்று வந்துள்ளது. இஃது எதுகையால் வந்த வினை. எதிர்ந்தாய் - வெளிப்பட்டாய்.

21. அமுதிடைத் தோன்றிய பொன் - திருமகள். ''அமுதின் வந்த தேவி'' என்பர் கவிச்சக்ரவர்த்திகள்.

22. குன்று தாங்கிய கோவலன் - மலையைக் குடையாகக்கொண்ட கண்ணன். 'கிரிதாரி' என்ற மந்திரத்தின் பெருமை அன்னை மீராவுக்குத்தான் தெரியும்.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
Acc No. ....
Date ....
MADRAS-28.

(வேறு)

திருவரங்கம் அடைந்தார்

மாயன் மாயம தாக மறைதலுந்
தூய னானவன் சிந்தை துளங்குறா
ஆய காலையொ ருவகை யாறியே
சாயை போலுந் தொடர்பைத் தவிர்த்தரோ. 25

முன்னர் அம்கம லத்துறை வோன்சிவன்
அன்ன ரங்க மமர வனந்தனை
மன்ன ரங்க மதாய்த்திரு மால்வளர்
பொன்ன ரங்கம் புகுந்தன னென்பவே. 26

அங்கு வைகு மடியர்க ளாயினோர்
தங்கள் பொன்னடி தன்முடி தாங்கினான்
செங்க ரங்கொ டவரிவன் சேவடி
பொங்கு மன்பொடு பூசித் துளாரரோ. 27

ஒருவர் தம்மை யொருவ ருபசரித்
துருவ மாத லிறத்தலென் றோதிடும்
இருமை யெய்த லிறுக்கு மவரொடுங்
குரும ணிச்செழுங் கோயிலுட் போயினான். 28

---

24. 'எனது மாயையால் மயங்கினாய். உன்னைத் திருத்தவே வந்துள்ளேன். வருத்தம் அடையாதே. உன்னைவிட்டு மாயை விலகிப்போய்விட்டது. திருவரங்கம் வருக' என்று கூறி இறைவன் மறைந்தான்.

25, 26. துளங்குறா - நடுக்கம் அடைந்து. ஆறி - குளிர்ந்து. சாயைபோலும் தொடர்பு - நிழலைப்போன்ற மாயை. ஆழ்வார் மாயை நீங்கித் திருவரங்கம் அடைந்தார்.

26. திருவரங்கச் சிறப்பு. முன்னர் அம் கமலத்து உறைவோன், சிவன், அன்னர் அங்கு அமர, அனந்தனை மன் அரங்கமதாய்த் திருமால் வளர் பொன்னரங்கம் எனப் பிரிக்கின் பொருள் எளிதே புலனாம்.

அன்னர் - போன்றவர்கள். அமர - விரும்பியிருக்க. அனந்தன் - ஆதிசேஷன். அரங்கமதாய் - உறங்கும் படுக்கையாக (அரங்கம் என்பதற்கு உள்ளறை என்று பொருள் உள்ளதென்று தமிழ் லெக்ஸிகன் குறிக்கிறது). பொன்னரங்கம் - திருவரங்கம்.

28. பிறத்தல் இறத்தல் என்கின்ற இருமையை நீக்கியவர்களுடன் ஆழ்வார் கோயிலுக்குள் புகுந்தார்.

நச்சு றும்பணை நாகணை மேற்றுயில்
பச்சை மாமலை மேனிப் பவளவாய்
மொச்சு வண்டிமி ரும்முள ரிச்செங்கண்
அச்சு தற்பணிந் தானந்த முற்றனன். 29

ஆழ்வார் திருப்பணி

இந்த மாயனுள் ளின்புற் றுகக்குமாறு
எந்த வேலை யிழைத்திட லாமெனச்
சிந்தை யூடு நினைப்ப வதுதெரிந்
தந்த மாலு மிதனை யறைகுவான். 30

(வேறு)

தொண்டர்தங் காற்பொடி யேசொல் லென்னிலன்
புண்டெனக் கதுகவி யுகக்கு முண்மையே
கண்டறி மஞ்சனக் காப்பொ டும்பல
கொண்டிழைப் பதுமது வாகுங் கோதிலாய். 31

ஆதலாற் கவியணி மாலை சாத்தியே
தீதொழித் தெந்தனைச் சேர்தல் வேண்டும்பா
வோதிட முடிவுறா தெனின்மற் றொன்றுகேள்
போதணி மாலையைப் பொருந்தச் சாத்தியே. 32

என்னைவந் தடைந்திட வேண்டு மீதலால்
பின்னையொன் றிலையென வுரைத்துப் பின்னரும்
முன்னைநாள் விட்ணுசித் தன்மு யன்றிது
தன்னையே யிழைத்தன னெனவுஞ் சாற்றினான். 33

---

29. நாகணைமேல் துயில் பச்சை மாமலை மேனி, பவளவாய், முளரிச் செங்கண் அச்சுதனைப் பணிந்தான். "பச்சை மாமலை போல்" என்ற திருமாலையை உரித்துக்கொண்டு இப் பாடல் வந்துள்ளது. மொச்சு - மொய்த்து. வண்டு இமிர் - வண்டுகள் பாடுகின்ற.

31. சொல் என்னில் - சொல்வாயாக என்று கேட்டால். அன்பு உண்டு எனக்கு, அது கவி உகக்கும் உண்மையே எனப் பிரிக்க. மஞ்சனக் காப்பு - பெருமாளுக்குச் சாத்தும் மஞ்சள், விழுது முதலானவை. "திருக்காப்பு நான் உனைச் சாத்த" என்பர் பெரியாழ்வார்.

எனக்குக் கவிதையே மஞ்சனக் காப்பும் பிறவுமாகும். "புனையும் கண்ணி என்னுடைய வாசகம் செய் மாலையே, வான் பட்டாடையும் அஃதே" என்பர் வ்குளபூஷண பாஸ்கரர். (திருவாய் மொழி - கோவை வாய்.)

32, 33. கவிதை புனைய முடியாவிட்டால் மாலையைச் சாத்து. 'விட்டுணு சித்தன் இதையே செய்தனன்' என்று தன் விருப்பத்தைப் பெருமாள் வெளியிட்டான்.

அவ்வுரை கேட்டலு மவ்வி ரண்டையும்
வெவ்வியேற் கருள்செய வேண்டு மென்றிவன்
ஒவ்விய மனதொடு முரைப்ப வாழியான்
செவ்வியோ யம்முறை செய்கென் றோதியே. 34

திருப்பள்ளியெழுச்சி உதயம்

அன்னவன் திருமுடி யதிற்பொ ருந்துறத்
தன்னிரு பதந்தனைச் சார்த்த லோடுமே
இன்னிசை திருப்பள்ளி யெழுச்சி யென்பதைப்
பன்னினன் கதிரவ னென்னும் பத்தரோ. 35

திருமாலை புனைந்தார்

தலங்களிற் சிறந்தசீ ரரங்கந் தன்னிலே
யிலங்குமா லலதுவே றறிந்தி லேனென்றே
அலங்கலை யிசைபெறு மன்ப றைந்தனன்
நலங்கெழு செய்யுளோர் நாற்பத் தைந்தரோ. 36

நந்தவனப் பணி

இம்முறைப் பாவைம்ப தைந்தி சைத்தபின்
விம்முறு முவகையின் விரைவி னேகியே
மும்முதல் ஆகுமம் முகுந்த னோதிய
அம்முறை திருநந்த வனம்வைத் தானரோ. 37

---

34. அடியேன், 'பாமாலையும் பூமாலையும் சாற்றுகிறேன், அருள்' என்றார் ஆழ்வார்.

35. திருவரங்கப்பிரான், ஆழ்வாரின் திருமுடியில் தன் திருவடியைச் சார்த்தினான். அப்போதே ஆழ்வார்க்குக் கவித்துவ ஆற்றல் உண்டாயிற்று. திருப்பள்ளியெழுச்சி பன்னினன் - திருப்பள்ளி எழுச்சி என்ற பிரபந்தத்தைத் திருவாய் மலர்ந்தருளினார்.

36. "அரங்கந் தன்னிலே இலங்கும் மால் அல்லது வேறு அறியேன்" என்பது தொண்டரடிப்பொடியாரின் உறுதிப்பாடும் உளப்பாடுமாகும். திருவேங்கடமுடையான் இது குறித்து வருந்தியதாகச் சொல்லப்பட்டு வருகின்றது. "தென்டிரைசூழ் அரங்கரையே தெய்வமென்றான் வாழியே" என்பர் அப்பிள்ளை. "தென்னரங்க மணவாளற் கன்பு மிக்குச் செப்பிய நற்றிருமாலை" என்பர் கவிதார்க்கிக சிம்ஹர் (பிரபந்த சாரம்).

37 முதல் 39 வரை ஆழ்வாரின் திருநந்தவனப் பணி விளக்கப்படுகின்றது.

குல்லைபா திரிமருக் கொழுந்து கூவிளம்
முல்லைபுன் னைகரு முகைகு ருக்கத்தி
மல்லிகை யொடுமிரு வாட்சி யேமுதல்
சொல்லுபூஞ் செடியெலாந் துன்ன வைத்தனன். 38

பக்குவம் செய்தவன் யாவும் செய்தலால்
மிக்கபூ மாலைகள் விளங்கு றத்தொடுத்
தொக்குமா றரங்கர்க்கு மரங்கம் வாழ்த்திட
மிக்குறச் சாத்துவன் விருப்பி னோடுமே. 39

அரங்கன் அருளிப்பாடு

இன்னணம் பலபக லியற்ற வோர்பகல்
பொன்னரங் கேசர்பூ மாலை கொண்டணை
யன்னவன் மாமுக நோக்கி யன்றுநீ
சொன்னபா மாலையைச் சொல்லு கென்னலும். 40

இப்பெரும் பாக்கிய மெய்திற் றெற்கெனா
ஒப்பரு மகிழ்சிறந் தோங்கத் தான்முனஞ்
செப்புமப் பாடல்கள் செவியு றும்படி
அப்பொழு தோதினா னடிவ ணங்கியே. 41

பாடினார் உருகினார்

பண்கொளப் பாடல்கள் பாடல் தோறுந்தன்
கண்களா னந்தநீர் கனிந்து திர்ந்திடப்
புண்களா ருடல்மயிர் பொடித்திட் டோங்குறும்
எண்கொளா வுருக்கமுற் றிரங்கி நின்றனன். 42

---

38. குல்லை - திருத்துழாய். குல்லை வேய்ந்த கொண்டல் (பாகவதம்). கருமுகை - சண்பகம்.

40—43. ஆழ்வார் பரமபதமெழுந்தருளல். அரங்கன், ஆழ்வாரை நோக்கி அன்று சொன்ன பாசுரம் பாடுகென்றான். ஆழ்வார் ஓதினார்.

42. ஆழ்வார் பாசுரம் பாடும்போது உண்டான மெய்ப்பாடு பேசப்படுகிறது.

ஆழ்வார் அரங்கனில் கரைந்தார்

இரங்கிநின் றிடுமவற் கிரங்கி யின்பமோ
டரங்கரு மருகழைத் தழுந்த வேதன
துரந்தனி லணைந்திட வவனு மொன்றியே
கரந்தனன் நீர்ப்பனிக் கரைந்த தொப்பவே. 43

பயன்

ஆங்கவ னிம்முறை யரங்கர் தந்திருப்
பூங்கழற் பாடியே பொருந்தி யுற்றவித்
தீங்கிலாச் சரிதத்தைச் செவியி னுள்ளுறப்
பாங்குடன் கேட்பவர் பதவி சேர்வரே. 44

அன்னசீர்க் கவிகளோ ரைம்பத் தைந்தினில்
பன்னக வணையினான் பதிகள் மூன்றதாம்
பொன்னரங் கம்வட மதுரைப் பூம்பொழில்
மன்னுசீ ரயோத்திமா நகர மென்பவே. 45

குலசேகரர் வரலாறு கூறுவோம்

தோகைய ரின்பங்கொள் தொண்டர் காற்பொடி
நாகணை யானைநண் ணியது ரைத்தனஞ்
சாகரம் சூழ்புவி தன்னை யாள்குல
சேகரன் சரிதமுஞ் செப்பு வாமரோ. 46

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவவதார
அத்தியாயம் முற்றிற்று.

---

43. அரங்கன் உகந்து ஆழ்வாரைத் தழுவிக்கொண்டான். பனிக்கட்டி நீரில் கரைவதுபோல் ஆழ்வார் அரங்கனுக்குள் கலந்துவிட்டார். ஆழ்வார் பனிக்கட்டி; அரங்கன் கடல். நீர் - கடல். முந்நீர் என்ற வழக்கை நோக்குக. "நீர் ஒலித்தன்ன நிலவுவேல் தானை" என்பர் மாங்குடி மருதனார் (மதுரைக் காஞ்சி).

45. தொண்டரடிப்பொடியாழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்விய தேசங்கள் மூன்று. அரங்கம், வடமதுரை, அயோத்தி. பாடிய பதி - திருவரங்கம் ஒன்றே. மற்றைய இரண்டு திவ்ய தேசங்கள் சார்பாகப் பேசப்பட்டுள்ளன.

46. குலசேகரர் வரலாறு பாடுவோம் என்று தோற்றுவாய் செய்கிறார்.

குலசேகராழ்வார் திருவவதார அத்தியாயம்

வெண்பா

மாசி புனர்பூசங் காண்மினின்று மண்ணுலகீர்
தேசித் திவசத்துக் கேதென்னிற்—பேசுகின்றேன்
கொல்லி நகர்க்கோன் குலசே கரன்பிறப்பால்
நல்லவர்கள் கொண்டாடும் நாள்.

(உபதேசரத்தினமாலை, 13.)

வஞ்சியர் மன்னர்

நாடக வரங்கினு ணடம்ப யின்றிடும்
ஆடர வல்குலார் யாழி னாங்கிசைப்
பாடலைக் குயிலினம் பயிலுஞ் சோலைசூழ்
கூடலிற் கோத்திரை கொண்டிட் டாள்பவன். 1

நஞ்சினுங் கொடுந்தொழில் நடத்தும் தீயரை
அஞ்சுற வடக்கிநல் லறத்தி னுற்றுளோர்
விஞ்சுறத் தனிச்செங்கோல் விளங்க வோச்சிடும்
வஞ்சியர் வேந்தனாம் மன்னர் மன்னனே. 2

வெண்பா: இத் திவசம் - இந்நாள். தேசு - ஒளி (சிறப்பு). கொல்லிநகர்க் கோன் - குலசேகரர். "கொல்லி காவலன் கூடல் நாயகன் கோழிக்கோன் குல சேகரன்" என்னும் பெருமாள் திருமொழியை நோக்குக. திவசம் - புனர்பூசம். பிறப்பால் - திருவவதாரங் காரணமாக.

1. யாழின் இசைப் பாடலைக் குயிலினம் பயில் கூடல். கூடல் - மதுரை. கூடலிற்கோ - பாண்டியன். திரை - திரைப்பொருள்.

2. தீயரை அடக்கி, அறத்தின் விஞ்சுளோர் ஓங்குறச் செங்கோல் ஓச்சும் வஞ்சியர் வேந்தன் (குலசேகரன் தந்தையார் பெயரில்லை). வஞ்சியர் வேந்தன் - சேரன்.

ஆழ்வார் அவதாரம்

அன்னவன் தவத்தினா லவன்றன் தேவியாம்
பொன்னனாள் வயிற்றிடைப் பூவு ளாரயன்
தன்னொடும் வேதமுந் தரும மும்மகிழ்
துன்னிடப் புகழ்ந்துமுன் துதிசெய் தேத்தவே. 3

ஆசில்சீர் வைகுந்தத் தமரும் நாரணன்
நேசமா ரருட்படி நிமல மாமதி
மாசியிற் புனர்த்தநாள் வளமுற் றோங்குறத்
தேசுறு புதல்வனும் செனித்து ளானரோ. 4

வானுளோர் மலரின்மா மழைபொ ழிந்தனர்
மோனமா ருளங்கொளும் முனிவர் வாழ்த்தினர்
ஞானமுந் தருமமும் நனிம கிழ்ந்தன
தானமும் மெய்மையுந் தலையெ டுத்ததால். 5

சடங்குகள் செய்தனர்

இத்தக வாகவந் தெழுந்த மைந்தனுக்
கத்தனு மன்னையு மடுத்து ளோர்களுஞ்
சித்தமுள் மகிழ்வுறச் செய்வ செய்துபின்
வித்தமும் வழங்கினர் விதிவ ழாமையே. 6

தன்னிகர் தனத்தின்பாற் றாய ளிப்பவேழ்
துன்னுநற் றினத்திடைக் காப்பு மிட்டனர்
மன்னுமோ ராறெனும் மாம திக்கணே
அன்னபி ராசன மதுவுஞ் செய்தனர். 7

3, 4. ஒரு தொடர். அவன் (சேரன்) தவத்தால், அவன் தேவியின் வயிற்றில் அயனும் வேதமும் தருமமும் புகழ நாரணன் அருளின்படி மாசியில் புனர்த்த நாளின் (குலசேகரர்) அவதரித்தார். புனர்த்த நாள் - புனர்பூச நட்சத்திரம். "அதிதி, நாள், கழை, ஆவணம், எரியே — புனர்த்தம் கரும்பிவை புனர்பூசமாகும்" என்பது பிங்கலம்.

5. மலரின்மழை - மலர்மழை (இன் - அல்வழிச் சாரியை). 'பூவின் தாமரை' என்ற ஆலந்தூர்க்கிழாரின் பாடலை நோக்குக (புறம்).

6, 7. வித்தமும் வழங்கினர் - தங்கத்தை இரவலர்களுக்குத் தானமாக வழங்கினர். "ஆடகம் வேங்கை....வித்தம் நிதியே எல்லாம்பொன்னே"— பிங்கலம்.

7. ஆறெனும் மதிக்கண் - ஆறவது மாதத்தில் அன்னப் பிராசனம் - அன்னம் ஊட்டுதல். "அருமறை விதியால் ஆறாம் திங்களில் அமுதம் ஊட்டி" என்பர் வடிவழகியநம்பி தாசர் (குருபரம்பரை).

வில்லிடு பானுவின் விளங்கு மெய்யெலாம்
புல்லிடப் பலபல பணிகள் பூட்டியே
கொல்லியங் கோன்குல சேக ரன்எனச்
சொல்லின ரொருதிரு நாமந் துன்னவே. 8

அம்புலி யழைத்தலு மணிகொள் சிற்றிலை
வெம்பியே சிதைத்தலும் விலங்குஞ் சிற்றிர
தம்புவி நடத்தலுஞ் சாற்று மற்றவும்
பம்புமப் பருவத்திற் பயிற்று வித்தனர். 9

ஒத்திடச் சவளமோ டுபன யம்பல
வித்தையப் பியாசமும் வேலும் வாளொடும்
சித்திரச் சிலைமுத லாகச் செப்புமுப்
பத்துட னிரண்டெனும் படைப யிற்றலும். 10

திருமணமும்—ஆட்சியும்

ஈதெலா மமைவுற வியற்று வித்தபின்
ஓதுமங் கலத்தின முறுநல் லோரையில்
சூதெனு மிருதனத் துவர்த்த செய்யவாய்
மாதினை விதிமுறை மணஞ்செய் தாரரோ. 11

பணிமுடி சுமந்தபார் பரிக்க வவ்விரு
திணிபுய வரைகுல சேக ரன்றனை
அணியரி யாசனத் திருத்தி யம்பொனின்
மணிமுடி தரித்தனர் மகிழ்வி னென்பவே. 12

---

8. வில்லிடு - ஒளி வீசுகின்ற. புல்லிட - அழகு குன்ற. "உமிழ்சுடர்க் கலன்கள் நங்கை உருவினை மறைப்ப தோரார்" என்ற கவிச்சக்ரவர்த்திகள் ஆசிரியரை இங்ஙனம் பாடச் செய்தனர். பலபல பணிகள் - பலவிதமான ஆபரணங்கள். கொல்லியங்கோன் - சேரன் (குலசேகரனின் தந்தை).

9. விளங்கும் சிறு இரதம் புவி நடத்தலும் எனப் பிரிக்க. பொருள் வெளிப் படை (சிறுதேர் உருட்டல்). பயிற்றுவித்தனர் - பழகச் செய்தார்கள்.

10. ஆழ்வார் முப்பத்திரண்டு படைக்கலப் பயிற்சி பெற்றனர். அகராதி 30 வகையான படைகளையே பேசுகின்றது. ஆய்தல் வேண்டும்.

11. சூது - சூதாடு கருவி (வட்டு என்பர் பின்.) துவர்த்த செவ்வாய் - மிகச் சிவந்த வாய். நல்லோரையில் ஆழ்வார் திருமணம் செய்துகொண்டார்.

12. ஆழ்வார் மணிமுடி புனைந்து மன்னர் ஆனார். பரிக்க - சுமக்க.

ஆங்கவன் புவிபுரந் தருளு நாளினில்
தீங்குறு கலிமுகம் சிறுத்து நைந்தது;
ஓங்கின நல்லறம்; உரைத் திடும்மிடி
நீங்கின; செல்வமும் நிலைபெற் றிட்டதால். 13

ஆழ்வார் மாண்புகள்

தேறுள மதனிற்றன் றேவி பாலலால்
வேறொரு மடந்தையர் விருப்பு றான்;மனு
கூறிய நூன்முறைக் குடிகள் பாலிறை
ஆறினி லொன்றலா லதிகங் கொள்கிலான். 14

வலிவுறும் பசியிலான் கன்றி னம்வரும்
புலிமுலைப் பாலினைப் பொருந்தி யுண்டிடும்
நலிவுறும் பூனையின் முலையை நாவுகொண்
டெலியினம் பற்றொடு மினித ருந்துமால். 15

மாந்தர்தங் குலத்தரு மத்தி னுண்மையைத்
தாந்திறம் பாவகை சமைத்தி ழைப்பரால்;
ஏந்திள முலைநலா ரிசைகொள் கற்பினின்
றார்ந்தத னிலுந்தவி ராது தாங்குவார். 16

மதிதொறு மும்மழை வழங்கும்; மாவயல்
கதிர்பெறுஞ் செந்நெலுங் கரும்பும் வாழையும்
முதிர்சுவைக் கனிபலா முதல வோங்கிட
நதிகளுங் குளங்களு நிறைந்து நண்ணுமால். 17

---

13. கலிமுகம் சிறுத்து நைந்தது. நல்லறம் ஓங்கின. மிடி (தரித்திரம்) நீங்கின. செல்வம் நிலைபெற்றுவிட்டது. புவி புரந்தருளும் நாளினில் - பூமியைப் பாதுகாத்த நாள்களில்.

14. ஆழ்வாரின் ஒழுக்கம் சிறப்பிக்கப்படுகிறது. 'வேறொரு மடந்தையை விரும்புறான்' என்றதால் சீலச் சிறப்பும், 'இறை (வரிப் பொருள்) ஆறினில் ஒன்றலால் அதிகம் கொள்கிலான்' என்றதால் ஆட்சிச் சிறப்பும் பேசப்படுகின்றன.

15. ஆழ்வார் ஆட்சியில் பகைமையில்லை. ஆன்கன்றினம் புலிமுலைப் பாலை உண்ணும்; பூனையின் முலையைப் பற்றி எலியினம் பற்றொடும் பால் இனிது அருந்தும். வலியுறும் பசி - பத்தையும் பறக்கச் செய்யும் பசி; ஆதலின் இங்ஙனம் கூறப்பட்டது. ஆன்கன்று - பசுங்கன்று.

16. திறம்பா வகை - மாறுபடாதபடி. சமைத்து - அமைத்து. இழைப்பர் - நயம்படச் செய்வர். நின்று - நிலைபெற்று. ஆர்ந்து - நிறைவு கண்டு.

இத்திறம் யாவுமாங் கெழில்பெற் றோங்கிடத்
தத்தம நெறிமுறை தவிர்கி லாதமை
சித்திரச் சிலையிரா கவன்றன் செல்வநா
டொத்திட வவனுல கோம்பு நாளிடை. 18

(வேறு)

இறைவன் திருவருள் பெறல்

ஒருபக லிரவின் வேந்த
னுறுதுயில் வளருங் காலைப்
பெருகுறு தனது நித்ய
விபூதிலீ லாவி பூதிப்
பெருமைக ளிரண்டுங் காண்பித்
தரிதினிற் பெயர்ந்து போனான்
மருதிறத் தவழ்ந்து வஞ்ச
மல்லரைக் குமைத்த மாயோன். 19

அந்தநல் லுருவங் காணா
வதிசய மிகவுந் தோன்றிச்
சிந்தையா னந்த வெள்ளந்
தேக்கிட வெண்க ணான்வாழ்
உந்திநா ரணன்வி பூதி
களையனு பவித்து றாமல்
இந்தநா ளளவும் எல்லே
யிழந்தன மெனநைந் தானால். 20

---

18. ஆழ்வார் ஆட்சியின்போது நாடு ராமராஜ்யம்போலிருந்தது. சித்திரச்சிலை - அழகிய வில். "சித்திரச் சிலைக்கை விசயன்" என்பது வில்லி பாரதம்.

19. ஒரு பகல் - ஒரு நாள். இறைவன் தன்னுடைய லீலா விபூதியையும் நித்திய விபூதியையும் காண்பித்தான். லீலாவிபூதியைக் காட்டியது பந்தபாசங்கள் நீங்குதற்காக; நித்திய விபூதியைக் காட்டியது உள்ளத்தில் ஞானமும் வைராக்கியமும் வருவதற்காக. மருது - மருத மரம். இற - முறிய.

20. எண்கண்ணான் - பிரமன். "எல்லே - ஐயோ. "எல்லே இரக்கம்" என்பது தொல்காப்பியம். "எல்லே என் செய்வாள்" என்று திருமாலையுள் வரும் பாடலை நோக்குக.

ஆழ்வாரின் விரக்தி

ஆயவ னிவ்வா றாய்நொந்
தழுங்கிநெஞ் சுருகுங் காலை
மாயிரு ஞாலத் தூடு
மகிழ்ந்துபல் லிடங்கள் தோறும்
பாயிரு ளகலக் கீழ்பாற்
பருப்பதத் துதித்த வெய்யோன்
சேயிரு விசும்பின் மேலாய்ச்
செலுத்தின னெழுமாத் திண்தேர். 21

பருதிவந் துதித்த லோடும்
படர்வுறுங் கருமந் தம்முள்
கருதியோ தமைச்சர் தானைத்
தலைவர்கள் கணித நூலோர்
சுருதியந் தணர் களேவற்
றொழில்வலோர் பலருந் தெவ்வர்
குருதிதோய் வடிவாள் வேந்தன்
கொலுமணிக் கூடஞ் சார்ந்தார். 22

சார்ந்தவ ருதையங் கண்டோர்
சாமநே ரளவும் பள்ளி
தீர்ந்தர செழுந்தி லாத
செய்கைதேர்ந் தென்னோ வென்னா,
பேர்ந்தவ ரணுகித் தாதிப்
பேதையர்க் குணர்த்த, அன்னோர்
சார்ந்தரு குணரு மாறு
சைகைகள் பலவுஞ் செய்தார். 23

21, 22. பல்லிடங்கள்தோறும் - பல இடங்களிலும். பாயிருள் - பரவிய இருட்டு. பருப்பதம் - உதயகிரி. எழுமா திண்தேர் - ஏழு குதிரைகள் பூட்டப் பட்ட தேரை. அமைச்சர் முதலானவர்கள் கொலுக்கூடம் சார்ந்தனர்.

23, 24. ஆழ்வாரை எழுப்ப அமைச்சர் முதலானவர்கள் தாதியரை விடுத்தனர். எழுந்த ஆழ்வார் ஆசார வாசலையடைந்து ஓர் அமைச்சருடன் சில உறுதி மொழிகள் பேசத் தொடங்கினார். ஓதரும் பணிகள் நாளும் உரைத்தலின் - பேசத்தக்க அருமையான வேலைகள் எப்போதும் பேசுவதுபோல.

ஆதலா லரச னுள்ளந்
தணிந்தெழுந் தவர்க ளோடும்
கோதிலா சார வாசல்
குறுகியே குறுகி னோர்கட்
கோதரும் பணிகள் நாளு
முரைத்தலி னுரைத்தி டாதோர்
மூதறி வமைச்ச னோடும்
மின்னணம் மொழிய லுற்றான். 24

ஆழ்வார் மொழிகள்

உதியுற்ற குமிழி போலா
யொழியுமிவ் வுடலத் தோடும்
பதிமனை தனங்கள் தாரம்
பாலர்கள் மாதா என்ன
மதிமருண் டுறுமிப் பொய்யாம்
வாழ்வினில் நிசங்க ளுண்டோ?
கதியுயிர் பெறுமா றுன்னா
தவத்தினிற் கழிந்த திந்நாள். 25

இன்னுமெத் தனைநா ளிவ்வா
றொழிக்கலா மினிமே லேனும்
மன்னுசாத் மீக ரோடும்
மருவியங் கவர்க ளான்மற்
றென்னுயிர்க் குறுதி நாடல்
வேண்டும்நீ யிதற்கு பாயம்
பன்னுதி மதிவ லோயென்
றன்னவன் பகர்த லோடும். 26

---

25. இவ்வுலக வாழ்வில் உண்மைகள் உண்டா? ஆன்மா நல்வழியில் செல்வதற்கேற்ற நற்சிந்தனைகளைச் செய்யாது வீணே என் காலம் கடந்து விட்டது. உதி - கடல்; உததி என்பது உதியாயிற்று (புதுப்பிரயோகம்). பதி - ஊர். மனை - வீடு. தனங்கள் - செல்வங்கள். மதி மருண்டுறும் - அறிவு மயங்குதற்குக் காரணமான. உயிர் கதிர்பெறும் ஆறு உன்னாது - ஆன்மா வீடு அடைவதைக் கருதாமல். அவத்தினில் - வீணாக. "அவத்தமே பிறவி தந்தாய்" என்பர் தொண்டரடிப்பொடியாழ்வார்.

26. இனிமேலேனும் - இதற்குப் பிறகாவது, சாத்மீகர் - சத்துவகுணம் உடையவர். என் உயிர்க்கு உறுதி நாடல் - என்னுடைய ஆன்மாவுக்கு நன்மை தர செய்தல். "என்னுயிர்க் குறுவதும் செய்ய எண்ணினேன்" என்பான் தசரதன்

அடியார்களின் நட்பு

நல்லுரை பகர்ந்தான் வேந்தன்
எனவுளம் நயந்தா னாகிச்
சொல்லுமுன் பரம பாக
வதர்கள்சூழ்ந் தணுகு மாறாய்
மல்லுறுந் தோளான் முன்னர்
வரவழைத் திருத்த லோடும்
அல்லல்தீர்ந் தவர்க ளம்பொன்
னடிபணிந் திருக்கை நல்கி; 27

அவருடன் சிறந்த காலச்
சேபஞ்செய் ததற்பின் மற்றோர்
எவர்களு முடன்சென் றெய்த
வெழிற்கொலுக் கூட மெய்தி
இவர்மணி யணையின் மேல்வீற்
றிருந்தர சாட்சி மேவி
உவர்க்கட லுடுத்த பாரோம்
புறுதொழில் நத்தி லானால். 28

ஆழ்வார் சுவைத்த பாசுரங்கள்

இன்னவா றாகப் பன்னா
ளிசைபெறு முதன்மூன் றாழ்வார்
மன்னுசீர் பெரிய ஆழ்வார்
மங்கையர் மழிசை யாழ்வார்

(அயோத்தியா காண்டம்). பன்னுதி - சொல்வாயாக. "தேட்டருந்திறலில்" குலசேகரர் தம் திருவுள்ளத்தை விவரித்துள்ளார். அப் பாடல்களின் சாரமே இப் பாடல்.

"மாலை உற்று எழுந்து ஆடிப்பாடித் திரிந்து அரங்கன் எம்மானுக்கே, மாலை யுற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு மாலை உற்றதென் நெஞ்சமே" என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

27, 28. அமைச்சனின் உதவியால் பாகவதர்கள் தொடர்பு உண்டாயிற்று. ஆழ்வார் மன ஆறுதல் பெற்று, ஆட்சி புரிந்துவந்தார். மல்லுறு தோளான் - மற்போர் செய்வதில் வல்ல ஆழ்வார். அல்லல் தீர்ந்து - துன்பம் நீங்கி. உவர்க் கடல் - உப்புக்கடல்.

துன்னுநற் றொண்டர் தங்காற்
பொடியிவர் சுருதி சாரம்
பன்னுசெந் தமிழ்க ளெல்லாம்
பரிவினோர்ந் துருகி னானால்; 29

வேறுள முனிவர் பல்லோர்
விளம்புநல் லிரத மூறும்
நாறுபூந் துளவ மாலை
நாரணன் சரிதம் கேளாப்
பாறுசூழ் வடிவாள் வேந்தன்
பரிவினாள் தொறுமிவ் வாறாய்த்
தேறுளத் துடனே செங்கோல்
செலுத்தினன் வருமந் நாளில்; 30

பாம்புக் குடத்தில் ஆழ்வார் கைவிடல்

ஒருபக லதனில் வந்த
உயர்குல சேக ரன்றன்
திருமனைக் கருலூ லத்தில்
திகழிரத் தினப்பொன் னாழி
பொருவில தொன்று கெட்டுப்
போகலுங் காவ லாளர்
வெருவிமந் திரியி னோடு
விளம்பினர்; விளம்ப லோடும், 31

29, 30. ஆழ்வார் — முதலாழ்வார்கள், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார், திருமழிசையாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார் ஆகியோர் வேதசாரமாக இயற்றிய செந்தமிழ்ப்பாக்களை ஆராய்ந்து உருகினார். மற்ற முனிவர்கள் விளம்பிய புராணங்களையும் இதிகாசங்களையும் கேட்டுத் தெளிந்து செங்கோல் செலுத்தினார்.

இரதம் ஊறும் - சுவை பெருகும். ரசம் என்ற சொல் இரதமாயிற்று. 'கோதற வடித்து இரதம் வாய்ப்ப வளம் நாறு தமிழ்' என்பது அழகர் பிள்ளைத் தமிழ். கேளா - கேட்டு. பாறு சூழ் - கழுகுகள் வட்டமிடும். தேறு - தெளிந்த.

31ஆம் பாடல் முதல் ஆழ்வார் பாம்புக் குடத்தில் கைவிட்ட வரலாறு பேசப்படுகிறது.

31. கருலூலம் - பொக்கிஷம். இரத்தினப் பொன் ஆழி - ரத்தினம் பதிக்கப் பட்ட மோதிரம். கெட்டுப் போகலும் - காணாமற் போகவும்.

மந்திரத் தலைவர் சென்றவ்
வள்ளலுக் குரைத்த லோடும்
அந்தவா சகங்கள் கேட்டவ்
வரசனு மவரை யாங்கண்
வந்தவர் யாவர்? வந்த
வாறுணர்ந் ததனை நம்பால்
தந்திடு மாறன் னோர்க்குச்
சாற்றுமென் றுரைத்தான் அன்றே. 32

இனையவா றவர்கள் சென்றாங்
கியம்பலு மதனைக் கேளா
அனையகா வலரு மெவ்வா
றாய்ந்திட லாகு மென்றோர்
நினைவுகொண் டரவந் தன்னை
நிறைகுடம் பொருந்த விட்டுத்
தனையணி முடிகொள் வேந்தன்
தன்றிரு முன்னர் வைத்தே; 33

இங்குளோ ரிதனிற் றங்கை
யிட்டிட வேண்டு மென்று
அங்கவர் மொழியைக் கேளா
அரசனிவ் வவையி னுற்றோர்
தங்களி லெவர்மே லையஞ்
சாற்றுமி னென்ன லோடும்
துங்கமா முடியோய் கேட்டி
யெனவவர் சொல்ல லுற்றார். 34

---

32. ஆங்கண் - அந்த இடத்துக்கு. வந்த ஆறு உணர்ந்து - வந்த முறையைத் தெரிந்து.

33. காவலர்கள் உண்மை தெரிவதற்காகப் பாம்புக் குடத்தைக் கொண்டு வந்து ஆழ்வார் முன் வைத்தனர்.

34, 35. ஆழ்வார், உங்கட்கு யார்மேல் ஐயம்? சாற்றுமின் என்றார். அவர்கள், பாகவதர்கள்மேல் ஐயம் என்று கூறினர். தம் கை இட்டிட வேண்டும் ஏளப் பிரிக்க.

அந்தக னேவல் கொண்டா
ருயிர்கவர் வார்க ளேனும்
வந்தணு குதற்கொவ் வாநின்
மணியர மனையின் வாயில்
இந்தபா கவத ரல்லால்
யாருமிங் கெய்திற் றில்லைச்
சிந்தையுள் ளிவர்மே லைய
மெனவவர் செப்ப லோடும்; 35

(வேறு)

செப்பு மம்மொழி யிருசெவி குறுகலுஞ்
செங்கண்மாற் கடியாராம்
விப்பி ரர்குடம் பாம்பினிற் றங்கர
மேவவைத் திடுதற்காய்
ஒப்பு றாவுள மமைந்த னருலகினை
யோம்பிடு முடிவேந்தன்
குப்பு றாஅரி அரியென விருகரங்
கொடுசெவி மறைத்தானால். 36

வார ணம்முறை யிடுதலின் விரைவொடு
வந்துகாத் தருள்செய்த
நார ணன்றி ருவடியர்மேற் கொடுமொழி
நாடியிங் குரைசெய்யுங்
கார ணம்நினை வுறிலிவர் மேற்குறை
கருதுதல் வழக்கென்றால்
தார ணிப்புரந் திடலினம் பாலினோர்
தவறெனத் தளர்வுற்றான். 37

---

35. அந்தகன் - எமன். ஏவல் கொண்டார் - கட்டளையை மேற்கொள்ளும் தூதுவர். அணுகுதற்கொவ்வா - அடைய முடியாத.

36. விப்பிரர் - அந்தணர். அமைச்சர் முதலானவர்கள் பாம்புக்குடத்தில் கைவிடற்குரியவர் மாலடியரே என்று கருதினர். அவர் மொழி கேட்ட ஆழ்வார் அரிஅரி என்று கூறிச் செவிகளை மூடிக்கொண்டார்.

37. இவர்கள், திருமால் அடியார்மேல் குற்றம் கூறுகின்றனர். இக் குற்றம் இவருடையதன்று. குற்றம் என்னுடையதாகும் என்று தளர்ந்தார் ஆழ்வார். வாரணம் - யானை. தாரணி - பூமி. புரந்திடலின் - பாதுகாப்பதில். நம்பாலின் - நம்மிடத்தில்.

உருகி னானுளந் தீயங்கினான் பசும்பொனொத்
தொளிர்ந்திடுந் திருமேனி
கருகி னானவை நினைதொறு நினைதொறுங்
கண்களா னீர்முத்தம்
பெருகி னான்வரை கொடுகடன் மதித்தநாட்
பிறந்தெழுங் கொடுநஞ்சம்
பருகி னானென ஊசலா டிடவுயிர்
பதைபதைத் தனன்;பின்னும், 38

ஆழியைக் குடத்தில் இருந்து எடுத்தார்

சிந்தை யோர்முறை தெளிவுகொண்
டரியணை தீர்ந்தெழுந் தெதிர்சென்றே
இந்த மெய்யடி யார்களவ் வாழியை
எடுத்தில ரெனவேதான்
முந்தி யேயர வுறுங்குட மதிற்கர
முறையினிட் டதற்குள்ளாய்
அந்த காவலர் வைத்திடு மணிவிர
லாழியை யெடுத்தீந்தான். 39

கண்ட பேரவை யமைச்சர்கள்
முதலினோர் காவல னடிவீழ்ந்தார்
தொண்டர் யாவரும் மன்புகூர்ந் தின்புறத்
தொழுதுரைத் தெழுந்தார்த்தார்
அண்டர் யாவரு மந்தர மிசையெழுந்
தலர்மழை பெய்தார்நஞ்
சுண்ட சங்கரன் பிரமனே முதலினோ
ருளமகிழ்ந் தனர்மாதோ. 40

---

38. அடியவர்மேல் குற்றம் சுமத்தப்படுவதைக் கண்ட ஆழ்வார் பட்ட துன்பத்தின் மெய்ப்பாடு காட்டப்பட்டுள்ளது. வரைகொடு - மலையைக் கொண்டு. மதித்த நாள் (மத்தித்த நாள்) - கடைந்த காலத்தில்.

39. ஆழ்வார் குடத்தில் கையை விட்டார். மணி விரலாழியை எடுத்துக் கொடுத்தார். அரியணை தீர்ந்து - சிம்மாசனத்தை விட்டு. ஆழ்வார் குடத்தில் கை விட்ட அருமைப்பாட்டை "வாரங்கொடு குடப்பாம்பிற் கையிட்டவன்" என்பர் மணக்கால் நம்பிகள். "குடப்பால் விடப்பெரும் பாந்தள்வாய் கையிட்ட கோவேந்தன் அரசர் ஏறு; கோப்பெருஞ் சேரமான்" என்பது அழகர் பிள்ளைத் தமிழ்.

40. அற்புதங் கண்டு அனைவரும் மகிழ்ந்தனர். அண்டர் யாவரும் - எல்லாத் தேவர்களும். நஞ்சுண்ட சங்கரன், கருத்துடை யடைமொழி.

திருவரங்கக் காதல்

பின்ன ரும்பல நாள்குல சேகரன்
பெருகுவப் பொடும்வாழ்நாள்
மன்னு மிவ்வுட லெடுத்திடுஞ் சிலுகினை
மாய்த்தொழித் திடுமாறு
கின்ன ரங்கொடு தும்புரு நாரதர்
கிளர்த்துமின் னிசையோங்கும்
பொன்ன ரங்கமா நகரினைக் காண்குறப்
பொருந்துமோ நமக்கென்னா; 41

நெஞ்சி னூடுற நினைந்திரு ளிரியவின்
றேனிரம் புறும்பாடல்
அஞ்சி ரண்டினை யாதிமுப் பதுமிசைத்
தழகிய மணவாளர்
நஞ்ச ராவணை மிசையிலங் காபுரி
நகரமா னதைநோக்கா
விஞ்சு கண்வளர் கோலமே மனதினுள்
விளங்குற வியப்புற்றான். 42

தரங்க மாகடல் வளைபுவி புரந்திடற்
றணந்துதன் சுதனான
உரங்கொ டோளினன் றன்வயப் படுத்திப்பொன்
னொளிர்மணி முடிசூட்டிக்
குரங்கி ளங்கதிர் செங்கனி யாமெனக்
குதிகொளும் பொற்கோயில்
அரங்க மாநகர் யாத்திரைக் கேகுவான்
அமைந்தவ ணடைந்தானால். 43

---

41. சிலுகு - சிறுமை. மாய்த்து - அழித்து. அரங்கமா நகரினைக் காண்குறப் பொருந்துமோ - திருவரங்கத்தைச் சேவிக்கும் பாக்கியம் கிட்டுமோ ?

42. ஆழ்வார் 'இருளிரிய' என்ற பதிகம் (ஆற்றாமை தோன்றப்) பாடினார். இன்தேன் நிரம்புறும் பாடல். பாசுரங்களில் ஆழங்காற்பட்டு வியந்து போற்றுகின்றார். ஆழ்வாரின் ஞானக்கண்ணுக்குத் திருவரங்கனின் திருக்கோலம் புலப்பட்டது.

43. ஆழ்வார், புதல்வனுக்கு முடிசூட்டிவிட்டுத் திருவரங்கம் அடைந்தார். புவி புரந்திடல் தணந்து - பூமி காவலை விட்டு. "கம்பமத யானை கழுத்தகத்தின் மேலிருந்து இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான் வேண்டேன்" என்னும் பெருமாள் திருமொழிப் பாசுரம் நினைவுக்கு வருகிறது.

அரங்கம் அடைந்தார்

கடைந்த பாற்கட லிடைவரு மமுதினைக்
கண்டவா னவரென்ன
அடைந்து ளான்றனை யெதிர்கொளத் தலத்தடி
யவர்களிப் புளங்கொள்ளா
உடைந்து கண்வழி யொழுகுநீ ராறெனு
முயர்விர சையின் நன்னீர்
குடைந்து வைணவ ரடிமலர் தொழுதலும்
ஆசிகள் பலகூறி, 44

ஐய நீயிவண் வந்ததெங் குலத்தவ
மாமென வுபசாரம்
செய்யு மாங்கவ ரொடுமிவ னலைமணி
சிந்துகா விரியாற்றின்
துய்ய நீர்படிந் தாறிரு திருமணும்
துலங்கிட வளங்கண்டு
பைய வேகடந் துட்புகுந் திருகணீர்
பனித்துமுத் துதிர்த்தானால். 45

கண்டார் அரங்கனை

திருந்து றுந்திருப் பெட்டகந்
தனைப்பிர தக்கணம் புரிந்தாங்குப்
பொருந் துறும்மணத் தூணரு
காகியே புதியதா மரைபூத்தோர்
கருந்த டங்கிரி யெனவளர்
மாயனைக் கண்டிரு கணினாலும்
அருந்து வானென நோக்கிநின்
றுருகியே ஆனந்த மடைந்தானால். 46

---

44. ஆழ்வாரைக் கண்ட அடியவர்கள் பாற்கடலில் தோன்றிய அமுதத்தைக் கண்ட தேவர்கள்போலானார்கள். அவர்கள் விட்ட ஆனந்தக்கண்ணீர் ஆறு விரசை மாநதி போல இருந்தது. அதில் ஆழ்வார் முதலில் நீராடினார்; வைணவர்களைத் தொழுதார். அவர்கள் ஆசிகள் கூறிய தோடன்றி;

45. நீங்கள் இங்கு வந்தது யாங்கள் புரிந்த தவப்பயனாகும் என்று கூறி உபசரித்தனர். ஆழ்வார் திருக்காவிரியில் நீராடிவிட்டு, ஆறிரு திருமண்ணும் அணிந்துகொண்டு கோவிலுட் புகுந்து கண்முத்துதிர்த்தார்.

46. திருப்பெட்டகந்தன்னை, திருமணத் தூணைப் பற்றிக்கொண்டு கண்டார். தாமரை பூத்த கிரியைப்போல் பள்ளிகொண்டுள்ள மாயனை இரண்டு

முகுந்தமாலை தொடுத்தார்

மிகுந்து மேல்வரும் பிறப்புடன்
இறப்பையும் விடுத்துயர் வைகுந்தம்
புகுந்து ளோர்களும் மீண்டுற
அருத்திகொள் பொன்னரங் கனைவாழ்த்தத்
தகுந்த தேதென நினைவுகொண்
டேதிறத் தமிழினால் தொடுத்தாற்போல்
முகுந்த மாலையொன் றரங்கவோங்
கலைவட மொழியினால் துதிசெய்தான். 47

வேங்கடம் செல்க

பாத தாமரை மீதுதன்
முடியுறப் பணிந்தெதி ரிடைநின்ற
தீதி லாக்குல சேகரற்
குகந்தவன் திருமுகந் தனைநோக்கி
தாது சேர்மலர்ப் பொழில்வட
வேங்கடந் தனைமதித் தெய்தென்னா
ஓதி னானிக்கு வாகுவாற்
சத்திய உலகநீத் திவண்வந்தோன். 48

கண்களாலும் பருகுவான்போல நோக்கி, உருகி ஆனந்தமடைந்தார். திருவரங்கக் கோவிலைப் பெட்டகம் என்கின்றனர். அரிசமய தீபம் ஐந்து இடங்களில் இவ்வாறே பேசுகிறது.

"பாங்கு பெருந்திரு வைந்நூற் றிரட்டிப் பணவிடையில்
தூங்கு மதிலொரு மாவேற் றமுண்டு சுரர்முனிவர்
ஆங்கவர் செப்பிற் கடங்கா துலகமனைத் தும்பெறும்
ஓங்கு மரங்கத் திருப்பெட் டகத்து ளொருமணியே"

என்ற பாடல் தனிப்பாடல் திரட்டில் உள்ளது; சுவைமிக்கது. "இருந்த குலக்குமரர் தமை இருகண்ணின் முகந்தழகு பருக நோக்கி" என்பர் கவிச் சக்ரவர்த்திகள் (பாலகாண்டம்).

"திருவனுரு நயனமுற நாடிமணத் தூணதனைப் பற்றி மன்னன்
மருவுமனம் வாய்ந்தவடி யாருடனே கூடிமிக வாழ்த்தி நின்றான்"

என்று ஆழ்வார்கள் வரலாறு என்னும் காப்பியத்துள் உ. வே. T. S. இராஜ கோபால அய்யங்கார் அவர்கள் பாடியுள்ளது நினைவுகூரத்தக்கது.

47. முக்தியுற்றவரும் பணிய விரும்பும் பொன்னரங்கனை 'முகுந்த மாலை' என்ற வடமொழி நூலைப் பாடித் துதி செய்தார். 'மாண்டு பிறக்கும் துயர் போய் வைகுந்தம் புக்கவரும் — மீண்டு தொழக் காதலிக்கும் வேங்கடம்' என்னும் திவ்யகவி பாசுரம் நினைவுகூர்க.

48. திருவரங்கன் திருவேங்கடத்திற்கு வருக என்றான். இக்குவாகு - இட்சுவாகு. சத்திய உலகம் - சத்திய லோகம். நீத்து - விட்டு. "பணியரங்கப் பரஞ் சுடரை யாங் காண—அணியரங்கந் தந்தானை அறியாதார் அறியாதார்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (பால காண்டம்).

இருசெ விக்கணவ் வாசக
முறுதலு மிதுவதென் றிரண்டுரார்
ஒருவ ராமென வுளந்தெளிந்
தற்புத முறப்பெரு குவப்போடும்
வருவ னாங்குநின் மலர்ப்பதந்
தொழற்கென மறித்தவன் றனைப்போற்றிக்
குரும ணிச்செழுங் கோயிலன்
பர்களுளங் கொண்டன னடந்தானே. 49

திவ்ய தேச யாத்திரை

வச்சி ரப்படை வானவர்
வேந்தனும் மலர்மிசை யுறைவோனும்
முச்சி ரப்படைச் சுடலையி
னாடியு முளரியங் கரம்தங்கள்
உச்சி கைக்கொடு முறைதொழு
தேத்திட வுவந்தவர்க் கருள்செய்யும்
கச்சி யம்பதி பேரரு
ளாளர்தம் கழல்பணிந் தவணீங்கி; 50

மரும லைச்செழு மணியின
மெறிதரும் வளமலி மலரோடை
செரும லைக்கொடு விடங்கரின்
வாய்ப்படுஞ் சிறுகண்மும் மதவேழம்
பொரும லைத்தவிர்த் திடவொரு
கருமலை போலவந் தவன்வாழும்
திரும லைத்தல மடைந்தனன்
வளமெலாஞ் சிந்தையுள் தெளிவுற்றான். 51

49, 50, 51 ஒரு தொடர். ஆழ்வார் அரங்கன் மொழியால் இரண்டு ஊரில் இருப்பவரும் ஒருவர் என்று தெளிந்து, கச்சியில் பேரருளாளரைப் பணிந்து திருவேங்கடத்தை அடைந்தார்.

50. கச்சியம்பகுதியின் சிறப்பு — வச்சிரப்படை ஏந்திய இந்திரனும், மலரவனும், சுடலையில் ஆடும் சிவபிரானும் பணிய அருள் செய்யும் திருக்கச்சி. முளரி அங்கரம் - தாமரை போன்ற அகங்கை.

51. திருவேங்கடச் சிறப்பு — மலர் ஓடையில் முதலையின்வாய்ப் பட்ட மத வேழத்தின் பொருமலைத் தவிர்க்கக் கருமலைபோல் வந்த திருமால் வாழும் திரு மலையை ஆழ்வார் அடைந்தார். மரு - வாசனை. ம(ல்)லைச் செழுமணி - வள மான மணிகள் எறி - வீசுகின்ற மணத்தையும் மணிகளையும் வீசுகின்ற ஓடை. செருமலை - போர் செய்கின்ற. மலைத்தல் - போர் செய்தல். இடங்கர் - முதலை வகை. [கொடுந்தாள் முதலையும் இடங்கரும் (குறிஞ்சிப்பாட்டு) — சாதி விசேடம் என்பர் நச்சர்]. பொருமல் - துன்பம்.

திருவேங்கடம் அடைந்தார்

மூவ ரும்அயன் கயிலைவா
ழிறையவன் புரந்தரன் முதலாய
தேவ ருங்கண நாதரும்
முத்தரும் சித்தர்மற் றுரைசெய்யும்
யாவ ரும்அவ ரவர்களோ
ருருவமைந் தணுகுறும் பெருஞ்சீர்த்தி
மேவ ருந்திரு வேங்கட
மகிமையை வியந்துளங் கனிவுற்றே. 52

(வேறு)

பதிகம் பாடினார்

ஊனேறு செல்வமென வோர்பதினோர் பாவுரைத்து
மானேர் விழியலர்மேன் மங்கைதிரு முன்னிலையில்
தானே தனக்குநிக ரானான்றன் தாள்வணங்கிக்
கோனேரி யாடிக் குலவிப்பன் னாளுறைந்து; 53

வித்துவக்கோடு

அம்மா நகர்விட் டணிவித் துவக்கோடாம்
செம்மா நகரடைந்து சிந்தை தளர்ந்தழைத்த
கைம்மா இடுக்கண் களையக் கரைசார்ந்த
பெம்மான் கழலிணையைப் பேணித் தொழுதனனால். 54

தருதுயரந் தடாயேலுன் சரணல்லாற் சரணிலையென்
றொருபதிகந் தன்னை யுகந்தாங் குரைத்தருளிப்
பொருவில் புகழாளன் போயொழியப் பற்பலநாள்
மருவி யுறைந்துபினம் மாநகர்விட் டேகினனால். 55

---

52. மூவரும் - கிழத்தனம் அடையாத; பிரமன் முதலானவர்கள் வேற்றுருவத்தோடு வந்து பணியும் திருவேங்கடம். குருடருக்கு வைத்த தண்ணீர்ப் பந்தலில் கண்ணுடையார் புகுவதுபோல மானிடர்க்கமைந்த திவ்ய தேசங்களைத் தேவர்கள் பணிகிறார்கள் என்று கூறும் வழக்கு இங்கே சிந்திக்கத்தக்கது.

53. "ஊனேறு செல்வம்" எனத் தொடங்கும் பதிகம் பாடி, அலர்மேல் மங்கையை முன்னிட்டுப் பெருமாளைத் தொழுது, கோனேரி எனும் தீர்த்தத்துள் நீராடிப் பன்னாள்கள் அங்கு வாழ்ந்தார் ஆழ்வார். தானே தனக்கு நிகரானான் - ஒப்பிலியப்பன் என்ற பெயரை நோக்குக. 'தனக்குவமையில்லாதான்' என்பார் வள்ளுவர்.

54, 55. வித்துவக்கோடு அடைந்த ஆழ்வார், பெருமாள் கழலைப் பணிந்து "தருதுயரம் தடாயேல்" என்னும் பதிகம் பாடினார்.

திருவாய்ப்பாடி

தாய்ப்போல் வடிவாகத் தன்னுருவம் மாற்றிவந்த
பேய்ப்பா டுறமுலையிற் பெய்விடத்தோ டாருயிரை
வாய்ப்பா லுறிஞ்சியிடும் மாதவனார் தாம்வாழும்
ஆய்ப்பாடி சென்றே யடைந்தவன்தாள் பூசித்தே; 56

முத்தாரம் பூணும் முகிண்முலைச்செவ் வாம்பலின்வாய்
கொத்தார் மலரின் குழற்கோ வியர்கூடி
வித்தார மாக விரித்துரைக்குஞ் சொற்பொற்பா
பத்தாங்கு பாடிப் பலநா ளுறைந்தனனால். 57

வட மதுரை

முன்புசன னத்தில் முயன்ற பெருந்தவந்தான்
பின்பு தொடர்ந்தடுத்த பெற்றியால் பேருலகில்
அன்பு மிகுந்தே யடுத்தோர் தமக்குதவ
என்பு முரியான் வடமதுரைக் கெய்தினான். 58

தேவகியாதல்

தேவகியா டானீன்ற செல்வத் திருமதலை
நாவி லினிதாக நவில்குதலைச் சொற்கடமை
ஆவலொடுங் கேட்டிலமே யென்றாங் கவளுரைத்த
பாவனையா கப்பதினோர் பாட லுரைத்தனனால். 59

---

56. தாய்போல் வடிவாகி - அன்னை போன்ற வடிவத்தை மேற்கொண்டு. பேய் பாடுற - பூதனையிறக்க. விடத்தோடு உயிரை உறிஞ்சியிடும் மாதவன் என்றது கண்ணபிரானை. அவன் வாழும் ஆயர்பாடி அடைந்தார்.

57. இடைப் பெண்களின் அனுபவத்தைப் பத்துப் பாவாற் பாடினார். கோவியர் - இடைப்பெண்கள். ஆய்ச்சியர் உரடி அமலனை ஏசிய பாடல்.

58. ஆழ்வாரின் பண்பு விவரிக்கப்படுகிறது. முன்பு முயன்ற பெருந்தவத்தால் பேருலகில் (தோன்றி) அன்பு மிகுந்து அடுத்தவர்க்கு என்பும் உதவும் ஆழ்வார், வடமதுரை உற்றார். அன்பு பெற வேண்டுமானால் அதற்கு முற்பிறப்பில் தவம் செய்திருக்க வேண்டும்.

59. தேவகி, ''கண்ணனை வளர்க்கவும், அவன் திருவிளையாடலைப் பார்க்கவும், பேறுபெற்றிலேனே'' என்று வருந்திய வருத்தத்தைப் பதினொரு பாடலால் பாடினார், ஆழ்வார். அப் பாடல்கள் யாவும் சோகம் நிரம்பிய பாடல்கள்.

கண்ணபுரத்தில் உறைதல்

அப்பதியி லன்னோ னடைவுடனே வைகுதலும்
செப்பமுடன் பற்பலநாள் செல்ல வவணீங்கி
எப்புவியி னுள்ளு மிணைதனக்குத் தானல்லால்
ஒப்பிலாக் கண்ணபுரத் துற்றாங் குறைந்தனனால். 60

தாலாட்டுப் பாடினார்

கண்ண புரத்தானைக் கவுசலையா டானீன்ற
விண்ணவர்க டந்துயர வேர்களைந்த ராகவனை
வண்ணமணித் தொட்டில் வளர்த்தித்தா லாட்டுதலாய்
பண்ணியலும் பாடல்களோர் பதினொன்று பாடினனால். 61

தசரதனானார்

பின்னுந் தசரதனார் பிள்ளைவனம் போயிடலும்
அன்னதனைக் கேட்டவனும் ஆராமை பட்டதனைப்
பன்னும் பனுவல்களோர் பதினொன்றி னைப்பாடி
மன்னி யிருந்தானம் மாநகரிற் பற்பலநாள். 62

சித்திரகூடம்

அம்மா நகர்விட் டணிசித்ர கூடமெனும்
செம்மா நகரதனைச் சேர்ந்தணுகித் தில்லையுறை
கைம்மா வுரித்துகந்த கண்ணுதலான் போற்றிடவாழ்
பெம்மான் திருவடியைப் பேணித் தொழுதனனால். 63

---

61. திருக்கண்ணபுரம் அடைந்த ஆழ்வார், கண்ணபுரத்தொளிர் காகுத்தன் மேல் தாலாட்டுப் பாடினார். துயரவேர் - துன்பத்தின் வேரையே.

62. தனையன் கான்புகுத் தசரதன் புலம்பிய புலம்பலையும் திருக்கண்ண புரத்தில் பாடினார் ஆழ்வார்.

63. பிறகு, திருச்சித்திரகூடம் பணிந்தார் ஆழ்வார். கைம்மா உரி - யானை யின் தோல். கண்ணுதலான் - நெற்றிக்கண்ணையுடைய சிவபிரான்.

இராம காதை இசைத்தார்

வானவர்க ளேத்துபுகழ் வான்மீக னென்றுரைக்கும்
மோனமுனி முன்னாள் மொழிந்தவிரா மாயணத்தை
ஞானமொழி யாந்தமிழி லைந்தோ டறுகவிதை
கானமுட னேயிசைத்தான் கன்னலிர தம்மெனவே. 64

தில்லைச்சித் திரகூடத் துட்சேர்ந் தினிதுறையும்
தொல்லைச் செழுமறைக்கும் தோன்றாதான் தாள்தொழுது
கொல்லி மலைக்கோன் குலசே கரப்பெருமாள்
எல்லையில்சீ ரின்பத் தினிதுறையு நாளின்கண். 65

ஆழ்வார் திருநாடலங்கரித்தார்

நாரா யணனெனவே நான்மறையால் விப்பிரர்கள்
பாரா யணஞ்செய் பரந்தாமன் றன்னருளால்
ஆராய்ந் துணர்த்தற் கரிதாம்வை குந்தத்தின்
சீரார் மணிமண் டபஞ்சேர்ந் தினிதிருந்தான். 66

அன்ன குலசேக ராழ்வாருந் தண்தமிழால்
பன்னும் பனுவல்க ளோர்பத்துப் பதிகங்கள்
மன்னுங் கவிதையதில் மாதுகுடி வாழ்மார்பன்
துன்னுந் திருப்பதிக ளெட்டெனவே சொல்லுவரால். 67

சீராரும் பொன்னரங்கஞ் சித்திரகூ டத்துடனே
ஏராரும் வித்துவக்கோட் டெழுனைநதி கண்ணபுரம்
காரார் வடவேங் கடம்வல்லை வாழொடுமேற்
பேரா ரயோத்தி நகரெனவே பேசுவரால். 68

---

64. வான்மீகி முனிவர் திருவாய் மலர்ந்த இராம காதையை ஆழ்வார் பதினொரு கவிகளாற் பாடினார். வானவர்களும் கொண்டாடும் வான்மீக முனிவர் மோனமுனி - மவுனமாயிருந்தவர். ஞானமொழியாம் தமிழ் - ஞானத்தைப் பற்றிப் பேசுவதற்கேற்ற மொழி. கன்னல் இரசம் - கரும்புச்சுவை.

65. செழுமறைக்கும் தோன்றாதான் - வளமான வேதத்துக்கும் எட்டாத திருமால். எல்லையில் - முடிவில்லாத.

66. விப்பிரர் - அந்தணர்கள். பரந்தாமன் திருவருளால் ஆழ்வார் பரம பதம் அடைந்தார். ஆராய்ந்து அறிவித்தற்கரிதாகிய வைகுந்தம் என்ற இடம். "சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின்" என்ற பரிமேலழகரின் தொடரைக் கருதுக.

67. பனுவல் - பாடல்கள். இவர் பாடியது பத்துப் பதிகங்களாகும். மங்களாசாசனம் செய்த பதிகள் எட்டாகும். இவற்றின் பெயர்களை 68ஆம் பாடலிற் காண்க.

பயன்

இந்தப் பெருங்கதையை யின்பமுடன் கேட்பவரும்
சிந்தை தெளிந்துரைக்குஞ் செய்கையருந் தேனாரும்
பைந்துளவோன் பாதம் பரிவுடனே தான்பணியுஞ்
மைந்தருண்டாய் வாழ்ந்திருந்து வைகுந்தம் மன்னுவரால். 69

பாணர் காதை பகர்வோம்

நலமார் பெருஞ்சீர்த்தி நண்ணுதிருக் கூடல்வரும்
குலசே கரன்சரிதம் கூறினோம் மாகடல்சூழ்
தலமேலு றையூர் சனித்ததிருப் பாணர்கதை
சொலவே தெரிந்தளவுஞ் சொல்வாந் தொகுத்தினியே. 70

குலசேகராழ்வார் திருவவதார அத்தியாயம்
முற்றிற்று.

---

69. இந்த வரலாற்றைக் கேட்டவர், உரைப்பவர் எல்லோரும் திருமாலை வணங்கும் புதல்வர்களைப் பெற்று, வைகுந்தம் அடைவர். தேனாரும் பைந்துளவோன் - திருமால்.

70. திருப்பாணாழ்வார் வரலாற்றை விவரித்தின்றேன் என்று தோற்றுவாய் செய்கிறார். தொகுத்து - சுருக்கி.

திருப்பாணாழ்வார் திருவவதார அத்தியாயம்

வெண்பா

கார்த்திகையில் ரோகிணிநாள் காண்மினின்று காசினியீர்
வாய்த்த புகழ்ப்பாணர் வந்துதிப்பால் — ஆத்தியர்கள்
அன்புடனே தானமல னாதிபிரான் கற்றதன்பின்
நன்குடனே கொண்டாடும் நாள்.

(உபதேசரத்தினமாலை, 10.)

உறையூர்

பிறைவாணுதல் மடவாரெழில் பெருகுந்திரு முகமும்
நறையார்மது கமழுஞ்செழு நளினப்புது மலரும்
சிறையாரறு பதவண்டுக டெரியாவல மருசீர்
உறையூரெனும் பெயர்மேவிடு மொருமாநக ருளதால். 1

ஆழ்வார் அவதாரம்

வளமேவுறு மம்மாநகர் மருவுங்கடை யவரென்
றுளபஞ்சம குலமிக்கட லுலகிற்புகழ் பெறவுந்
தளமார்செழு மணிமேவுறு தண்டாமரை மலர்வந்து
அளறாமதில் வளருஞ்செய லதுவேநிக ரெனவும். 2

வெண்பா : கார்த்திகை மாதத்தில் ரோகிணித் திருநட்சத்திரம். ஆத்திகர்கள் 'அமலன் ஆதிபிரான்' கற்ற பிறகு கொண்டாடும் நாளாகும். காசினியீர் - உலகமக்களே! ஆத்தியர்கள் - ஆஸ்திகர்கள். ஆத்தியர் என்றது ஸ்வாமி தேசிகன்போன்றாரை. "பாண்பெருமாள் உரை செய்த பாடல் பத்தும் பழமறையின் பொருள் என்றே பரவுகின்றேன்" என்று அவர் புகழ்ந்ததை அறியாதார் அறியாதாரே.

1. மடவார் முகத்திற்கும் தாமரை மலர்க்கும் வேற்றுமை தெரியாமல் வண்டுகள் மயங்கும் உறையூர் - தாமரைக்கும் முகத்துக்கும் வண்டுகட்கு வேற்றுமை தெரியாமல் இருப்பதுபோல், அறிஞர்கட்கு, அமலனாதி பிரானுக்கும் வேதத்துக்கும் வேற்றுமை தெரியாது என்பது உள்ளுறை. வாள்நுதல் - ஒளிமிக்க நெற்றி. நறை - வாசனை. அலமரும் - கலங்கும்.

2, 3, 4. ஒரு தொடர். தாமரை, சேற்றில் தோன்றுவது போல், பஞ்சம குலம் கடலுலகிற் புகழ்பெறவும்; சிவபிரானும், பிரமனும், தேவரும், முனிவர்களும், மண்ணாட்டவர்களும், விண்ணாட்டவர்களும் மகிழ்வுறவும்; கார்த்திகை, மாதத்தில் ரோகிணித் திருநட்சத்திரத்தில் செந்நெல்லின்மேல் திருப்பாணாழ்வார் அவதரித்தார். 2. அளறு - சேறு.

கண்ணார்நுத லிடைவைகுறு கயிலைப்பெரு மானுந்
தண்ணாருமம் புயமாமலர் தனில்வாழிறை யவனும்
பண்ணார்செழு மறையும்முனி வரரும்பல பலவாம்
மண்ணாடரும் விண்ணாடரு மெவருமகிழ் வுறவும். 3

(வேறு)

கார்த்திகை யெனும்பெயர் கவினுந் திங்களில்
சீர்த்திடு முரோகிணி நாள்சி றந்திடத்
தீர்த்தன தருளினால் செந்நெ லின்மிசை
பார்த்தவர் களிப்புறப் பாணன் தோன்றினான். 4

பாணன் வளர்த்தான்

அத்தகை யுறவவ தரித்த மைந்தனைப்
புத்திர னிலாவொரு புலையன் கொண்டுபோய்
சித்தமின் புற்றிளந் திங்க ளின்கலை
ஒத்திட வளர்த்தன னுரிமை யோடுமே. 5

இசைப்புலமை

ஆன்றவம் மைந்தனு மரிய தும்புரு
சான்றநா ரதருமே சமான மில்லென
ஏன்றநல் லிராககா னங்க ளென்பவை
மூன்றெனும் வயதுளே முயன்று ளானரோ. 6

ஏவிரி திணறுமுன் பெழுந்து தாமரைப்
பூவிரி கதிர்குணப் பொருப்பு றாமுனம்
மீவிரி கங்கையின் மேன்மை யெய்திய
காவிரி படிந்துசெய் கடன்க ளாற்றியே. 7

---

3. நுதலிடை கண்ணார் கயிலைப்பெருமான் - சிவபிரான். அம்புய மா மலர் - தாமரைப்பூ. இறைவன் - பிரமன். பண்ணார் செழுமறை - சாமவேதம்.

4. தீர்த்தன் - திருமால்.

5. ஒரு புலையன் ஆழ்வாரை வளர்த்தான். திங்கள் (சந்திரன்) கலையுடன் வளர்வதுபோல் வளர்ந்தார்.

6. ஆழ்வார், தும்புருவும் நாரதரும்கூட இவருக்குச் சமமில்லை யென்னும்படி, பண்களில், பாசுரங்களில் மூன்று வயதிற்குள் புலமை பெற்றார்.

7. ஏ, விரி, திணறும் முன்பு - மன்மதன் அம்புகள் ஆகிய மலர்கள் விரிந்து (மலர்ந்து) நெருங்குவதற்குமுன். தாமரைப் பூவை விரிக்கின்ற சூரியன் உதய மாவதற்குமுன், ஆழ்வார் காலைக்கடன்கள் முடித்துத் திருக்காவிரியில் நீராடுவார். குணப்பொருப்பு - உதயகிரி (கிழக்குத் திசையில் உள்ள மலை). "கங்கையிற் புனிதமாய காவிரி" என்ற திருமாலைப் பாடலை நோக்குக.

அரங்கன் காதல் பண் பாடுதல்

வரங்களா ரணனரன் வழங்கப் பெற்றுளான்
சிரங்களீ ரைந்தொடுஞ் சிலையோ டம்புகொள்
கரங்கணா ன்கைந்தையுங் கடிந்த ழித்தசீர்
அரங்கநா யகரிடத் தன்பு கூரவே. 8

கல்லொடு மலைகளும் கடுஞ்சு வர்களும்
புல்லொடு மரங்களும் புள்ளின் கூட்டமும்
வல்லிய முதல்விலங் கினமும் மற்றவாம்
பல்லுயிர் யாவுமா லுருகப் பாடுவான். 9

சந்திர மவுலியும் சரச வாசியும்
இந்திரன் முதலிமை யவரும் யாழ்வல
கந்திரு வருமுளங் கரையு மாறதாய்
அந்தரத் தடைந்துகேட் டதிச யிப்பரால். 10

அன்னகா விரிக்கரை யநேக நாழிகை
யின்னவா யாழிசை யினிது பாடிப்பின்
பொன்னணி விமானத்தைப் பணிந்து போற்றியே
தன்னக மதனிடை சார்கு வானரோ. 11

---

8. இராவணனை அழித்த அரங்கநாதரிடம் ஆழ்வார்க்கு அன்பு பெருகிற்று. இராமபிரானின் புகழ் விவரிக்கப்படுகிறது. ஆரணன், அரன் வரம் வழங்கப்பெற்றுளான் (இராவணன்) சிரங்கள் ஈரைந்தொடு கரங்கள் நான்கைந்தையும் அழித்த அரங்கநாயகர் எனக்கொண்டு கூட்டுக. ஆரணன் - பிரமன். அரன் - சிவபிரான். சிரங்கள் ஈரைந்து - பத்துத்தலை. சிலையோடு அம்புகொள் கரங்கள் - வில்லையும் அம்பையும் ஏந்தும் கைகள்.

9. ஆழ்வார், கல் மலை முதலானவை உருகப் பாடுவார். வல்லியம் - புலி. "சொல்லும் தன்மைத்தன்றது குன்றும் சுவரும் திண்கல்லும் புல்லும் கண்டுருகப் பெண்கனி நின்றாள்" என்ற கவிச்சக்ரவர்த்திகளின் பாடல் இங்கே நினைவுக்கு வருகிறது.

10. சரசவாசி - சரஸ்வதி - புதுப்பிரயோகம். சரசம் - தாமரை. வாசி - வசிப்பவள். சிவபிரான், கலைமகள் போன்றவர்கள் ஆழ்வாரின் பாசுரம் கேட்டு அதிசயிப்பர்.

11. காவிரிக்கரையில் அனேக நாழிகை யாழில் பாடியபின் பொன் விமானத்தைப் பணிந்து போற்றித் தன் வீட்டை அடைவார் ஆழ்வார். சார்கு வான் - அடைவார்.

நாடொறு மிம்முறை நயந்து பாணனும்
ஆடர வமளிசே ரரங்கர் தம்புகழ்
பாடுறு மிசையின்முன் பட்டு லர்ந்துவீழ்
காடுறும் மரங்களும் கப்பு மல்குமால். 12

பற்பல நாளவன் பாடும் பாடல்கேட்
டற்புத மடைந்தன ளரங்க நாயகி
உற்பல நயனமு மொளிமி குந்திட
விற்பொலி புருவமும் விளங்கு வாளரோ. 13

அரங்கநாயகி புருஷகாரம்

நாயகி மகிழ்வொடு நாக ணைத்துயில்
மாயவ னணிபெறும் வதனம் நோக்குபு
ஏயவவ் வடியனாங் கிசைக்கு மின்னிசை
தூயநும் மிருசெவி துன்னிற் றில்லையோ? 14

அன்னவன் வீணைகொ டரிய கானத்திற்
பன்னுமின் னிசைகொளும் பனுவற் கொப்பதாய்
என்னிலத் தினுமிலை யென்ன வானுறை
கின்னரர் முதலினோர் கீழ்மை யெய்தினார். 15

---

12. ஆழ்வார் பாடிய பாசுரங்களால் பட்ட மரங்களும் கிளைத்துச் செழித்தன. ஆடு அரவு அமளிசேர் அரங்கர் - படமெடுத்து ஆடும் ஆதிசேஷனாகிய படுக்கையில் உறங்கும் திருவரங்கர். கப்பு மல்கும் - கிளைகள் நிரம்பும்.

13. ஆழ்வாரின் இசையைக் கேட்டு, அரங்க நாயகி, அற்புதம் அடைந்தனள். உற்பல நயனம் - நீலோற்பலம் போன்ற கண்கள். வில்பொலி புருவம் - வில்லைப் போன்ற புருவம்.

14 முதல் 17 வரை ஒரு தொடர். பிராட்டியின் புருஷகாரம் பேசப்படுகிறது. நாயகி மகிழ்வுடன் அரங்கன் முகம் நோக்கி, ''ஆழ்வார் பாடல் உம் செவிக்கு எட்டவில்லையா ? அவரின் பாசுரத்துக்கு நிகரில்லை என்று கின்னரர் முதலானோர் அடிமையாயினர். பிரமன், சிவபிரான் முதலானவர்கள் அவர் இசையை வியந்து கேட்கின்றனர்.

14. நோக்குபு - பார்த்து. துன்னிற்றில்லையோ - அடையவில்லையா ?

15. இசைகொளும் பனுவல் - பண்ணொடு கூடிய பாடல். கீழ்மை எய்தினார் - அடிமைப்பட்டனர்,

அன்புநம் பிடந்தனி னதிக மாகக்கொண்
டென்புமுள் ளுருகிட இசைக்கு மின்னிசை
இன்புற விதிசிவன் முதலி னோரவன்
முன்புவந் தந்தர முயன்று கேட்கின்றார். 16

ஆதலின் நாம்புறம் பாக வைப்பது
நீதியன் றவனைநின் னருகு றும்படி
காதலோ டழைத்திடல் கரும மாமென
மாதுகூ றலுமண வாள னோதுவான். 17

என்கருத் தினுமதே யாயிற் றென்னினும்
நின்கருத் துணர்குவா னேர்ந்த தாமினி
உன்கருத் துருகிடப் பாடு வோன்றனை
நன்குநீத் துடன்வரு விப்பன் நாயகீ. 18

பாணனை அழைக்கப் பரமன் பகர்ந்தான்

என்றுகொண் டவளுள மிசையு மாறுரைத்
தொன்றிய மனத்தொடு முலக முண்டுளோன்
சென்றுநம் தொண்டனாஞ் சிறந்த பாணனை
இன்றுநீர் கொணர்மினென் றியம்ப லோடுமே. 19

அவ்வுரை கேட்டெதி ரணுகும் வாயிலோர்
ஒவ்விய மனதொடும் விரைவி னோடியே
திவ்விய மணிபல சிதறுங் காவிரி
செவ்விய திருமுகத் துறையிற் சேர்ந்தரோ. 20

---

16. அந்தரம் – விண்ணிலிருந்து.

17. புறம்பாக - வெளியே. நீதியன்று - முறையல்ல. அழைத்திடல் கருமம் - அழைப்பது செய்யத்தக்கது. மணவாளன் - திருவரங்கன்.

18 — 20. திருவரங்கன் நம் பாணனைக் கொணர்மின் என்று வாயிற்காப்பாளரிடம் கூற அவர்கள் விரைவின் ஓடிக் காவிரிக் கரையை அடைந்தனர்.

18. நின் கருத்து - உன் எண்ணம். உணர்குவான் - அறிவதற்காகவே. நேர்ந்தது - நிகழ்ந்தது (காலதாமதம் செய்தது). நீத்து - மற்றைய மனிதர்களிடமிருந்து விலக்கி (கோது நீக்கிக் கரும்பின் சாற்றைக் கொள்வதுபோல்).

19. உலகம் உண்டுளோன் - உலகங்கள் யாவற்றையும் உண்டவனாகிய அரங்கன்.

20. திவ்விய் மணி - சிறந்த மணிகள்.

பாலுறு பிரையெனப் பல்லு யிர்களுற்
றேலுமற் றவைகடன் னிடத்திற் கொண்டுசேர்
ஆலிலை துயிலொழிந் தரங்க முள்வளர்
மாலினை யிதயமேல் வளர்த்தி னான்றனை; 21

பன்னிரு திருமணும் பன்னிடந் தொறும்
துன்னிட மார்பினிற் றுளவ மாலிகை
மன்னிட யாழ்முறை வழங்கப் பாடுறுங்
கன்னலா ரமுதெனுங் கானத் தான்றனை; 22

பாணர்பிரான் திடுக்குற்றார்

கண்டன ரரங்கனாங் கமலப் பூவடித்
தொண்டனென் றவனடித் தொழுது நின்றுளோர்
புண்டரீ கந்தனைப் பொருவ டிக்கணில்
தெண்டனிட் டிம்மொழி தெரிப்ப தாயினார். 23

என் கருதி வந்தீர்?

ஐயநீர் புரிந்திடற் கடுக்கொ ணாததைச்
செய்யநும் பான்மனஞ் சேர்ந்த தென்கொலோ
வெய்யனே னிதனிடை வினையொ ழித்துமேல்
உய்யுமா றெவண்கொலென் றுருகிப் பின்னரும். 24

ஈங்குநீ ரடைந்துள தென்கொ லென்னிடை
ஆங்கதை யுணருமா றறிவிப் பீரெனத்
தீங்கிலா னுரைத்தசொற் செவியிற் சேர்தலும்
பாங்குற வவர்களும் பகர்தல் மேயினார். 25

21, 22. வாயில் காப்போர் ஆழ்வாரைக் கண்டனர். திருமாலைத் தன் னுடைய இதயத்தில் வளர்ப்பவனை, பன்னிரு திருமண் காப்பு அணிந்து மார்பில் திருத்துழாய் பூண்டு கரும்போ அமுதோ என்றும் பாடியாடும் ஆழ்வாரை.

21. பாலுறு பிரையென - பாலில் பிரை கலப்பதுபோல். பல்லுயிர்கள் உற்று - ஆன்மாக்கள்தோறும் தங்கி. ஆலிலையில் துயில்வதைவிட்டுவிட்டு அரங்கம் உள்வளர் - திருவரங்கத்தில் துயில்கின்ற. இதயம் - உள்ளம். "இதயம் இருந்தவையே ஏத்தில்" என்பர் பூதத்தாழ்வார்.

22. துளவ மாலிகை - திருத்துழாய் மாலை. கன்னல் - கரும்பு. ஆர்அமுது - மிக்க அமிர்தம். கானத்தான் - திருப்பாணாழ்வார்.

23, 24, 25. ஆழ்வாரைக் கண்டதும் வாயிற் காவலர் பணிந்தனர். அது கண்ட பாணர்பிரான் அவர்கள் திருவடிகளில் பணிந்து தன் திருவுள்ளத்தைக் கூறினார். செய்யத் தகாததைச் செய்ய நும் மனம் உடன்பட்டது என்ன காரணம்? கொடியவனாகிய யான் (உம்மால் வணங்கப்பட்டதால் உண்டான) தீவினைகள் நீங்கி உய்வது எப்படி? என்று உருகினார். தாங்கள் இங்கு வந்த காரணம் யாது? என்று வினவினார்.

அரங்கன் கட்டளை

யாந்தொழ லரிதல யாவை யும்தரும்
பூந்தவி சுறைந்துளோன் புராரி இந்திரன்
தாந்தொழு குவர்இறை தாளி ரண்டையும்
யேந்தினை திருவுளத் தின்பம் ஓங்கவே. 26

அன்னது கிடக்கயா மடைந்த காரணம்
என்னெனில் நின்னுளத் திருக்கும் பைந்துழாய்ப்
பன்னக வணையரங் கேசர் பண்பொடுஞ்
சொன்னசொல் உண்டதைச் சொல்ல வந்தனம். 27

அம்மொழி யாதெனி லறியக் கேட்டிநீ
தம்மரு கணைந்திதைச் சாற்று மாறதாய்
உம்மரு கணைந்தழைத் துறுமி னின்றென
எம்மொடு முரைத்ததால் வருதி யென்றனர். 28

அரங்கம் புக அருகனல்லேன்

என்னலுஞ் சாதியிற் கடையி னெய்தினேன்
பொன்னரங் கந்தனிற் புகுதப் போதுமோ?
அன்னது தகுதியென் றறிகி லேனெனப்
பன்னலு மீண்டனர் பட்ர்ந்து ளோர்களே. 29

---

26. யாம் உம்மை வணங்குவது அரிய செயலன்று. உம்மை, பிரமன், சிவன், இந்திரன் முதலானவர்களே பணிவார்கள். ஏனெனில், இறைவனின் இரண்டு திருவடிகளையும் தாங்கும் திருவுள்ளம் பெற்றுள்ளாய். அரிதல - அருமையான செயலன்று. பூந்தவிசுறைந்துளோன் - தாமரையாகின்ற ஆசனத்தை விரும்பும் பிரமன். புராரி - முப்புரம் எரித்த சிவபிரான்.

27, 28. நின்னுளத்திருக்கும் அரங்கன் சொன்ன வாசகம் ஒன்று உண்டு. நீங்கள் தன்பக்கல் வந்து இசைபாட உம்மை அழைத்து வா என்றான் என்று வாயிற் காவலர் சாற்றினர்.

29. சாதியிற் கடையன், அரங்கத்துள் புகுதல் ஏற்குமோ? அது தகுதியன்று; என்று ஆழ்வார் மறுத்தார். அன்பர்கள் மீண்டனர், திருநாளைப்போவார், "இன்னல்தரும் இழிபிறவி இது தடை" என்று கருதியதாகச் சேக்கிழார் திருவாய் மலர்ந்தருளினார்.

மீண்டவ ரரங்கர்பால் மேவி யெந்தமை
ஆண்டுளோய் அருட்பெரி யவனை யாம்வர
வேண்டினம் அவனுந்தான் விரும்பி மேல்வரத்
தீண்டரும் புலைக்குலஞ் செனித்த தாதலால்; 30

அரங்கன் மாற்றம்

வருகிலே னென்றவன் வழங்கி னான்என
மருவிய வாயிலோர் வகுத்துக் கூறலும்
முருகவி ழிதழவிழ் முளரி வைகுறுந்
திருமரு மார்பனு மிதனைச் செப்புவான். 31

வேதியர் முதற்குலத் தருமம் வேதங்கள்
நீதிசார்ந் திருப்பினும் நிகழ்த்தும் யாவையும்
ஆதியில் யானுரைத் தவர்க ளுற்றிடுஞ்
சாதிதான் இனதெனச் சாற்றற் பாலதோ? 32

பிறப்பால் சாதியில்லை சிறப்பால் உண்டாம்

செம்மையாந் தெளிவிலார் செப்புங் கீழ்மையால்
அம்மையாங் கீழ்மைய ராவர்; சார்தலால்
எம்மர புதிக்கினு மவர்க ளெய்திடும்
அம்மர பேயிழி பாகு மாதலால்; 33

தக்கநல் லறிவுளந் தரித்து ளார்களே
மிக்கவ ராகுவர்; விளம்பு மாங்கவர்
எக்குலத் துதிப்பினு மவர்க ளெய்திடும்
அக்குல மேகுலத் ததிக மாகுமால். 34

30, 31. ஒரு தொடர். அரங்கன்பால் வாயிற்காவலர், ஆழ்வாரின் திருவுள்ளத்தைப் பகர்ந்தனர். அருட்பெரியவனை - திருவருளால் பெருமை பெற்ற ஆழ்வாரை. முருகு அவிழ் இதழ் அவிழ் எனப் பிரிக்க. முருகு - வாசனை - தேன். இதழ் - இதழுடன் மலர்கின்ற. திருமார்பன் - திருமகள் தங்கிய மார்பை உடையான்.

32. அரங்கன் உண்மையை விவரிக்கின்றான். தற்போது வேதியர் முதலானவர்கள் மேற்கொள்ளும் தருமம், வேதங்கள் கூறும் நீதியைச் சார்ந்து இருந்தாலும் என்னால் ஆதியில் சொல்லப்பட்ட சாதி இப்படிப்பட்டதென்று (இன்றுள்ளவர்களால்) சாற்றும் அளவு எளியதா? வேதங்கள் நீதி சார்ந்திருப்பினும் - வேதங்கள் கூறும் நீதியைச் சார்ந்து இருந்தாலும். 'இன்னது' என்பது 'இனது' என்று வந்துள்ளது. இன்னது - இப்படிப்பட்டதென்று.

33, 34. தெளிவு இல்லார், கீழ்மையராவார். அவர்கள் எப்படிப்பட்ட உயர் குலத்தில் பிறக்கினும் அம்மரபே அவரால் இழிவுறும். நல்லறிவு சார்ந்துளோர் உயர்ந்தவராவர். அவர்கள் எப்படிப்பட்ட தாழ்ந்த குலத்தில் பிறப்பினும் அக்

மீளவும் அடியாரை அனுப்பினான்

ஆதலா லவனமக் கடிமை பூண்டுளோன்
போதமுங் கல்வியும் புகலுஞ் சாத்திர
வேதமு மவன்வயின் விளங்கும் மெய்ம்மையே
ஈதுவைத் தழைத்திவண் வருதி ரென்னலும்; 35

என்ன வோதலு மினிதி னால்வர்கள்
பொன்னரங் கத்துறு புரிசை நீங்கியே
துன்னு சீர்முகத் துறையி டந்தனில்
மன்னு பாணர்பால் மருவி; யன்னவர், 36

வேத மென்பதின் முடிவி ளங்கிடும்
மாத வன்புகல் வாச கந்தனை
ஓதி நீவரு கெனவு ரைத்தலுங்
கோதி லாதவ னிதனைக் கூறுவான். 37

மாலே பகரினும் வாரேன் அரங்கம்

என்னை யுஞ்சரர் சரமி ரும்புவி
தன்னை யுந்தருந் தூய தாமலர்ப்
பொன்னை யாளுடைப் புனித னாயகன்
சொன்ன சொற்சரி யாகுந் தூய்மையீர்! 38

ஆயி னும்பொன் னரங்கம் மேவிய
மாய னார்கடல் சூழும் வையகம்
தூய சீரடி சார்ந்து போற்றிடத்
தூய ராம்திருத் தொண்ட ருக்கலால்; 39

குலமே உயர்வுறும். "தக்க இன்ன தகாதன இன்ன என்று—ஒக்க உன்னலராகி உயர்ந்துள மக்களும் விலங்கே—மனுவின்நெறி புக்கவேல் அவ்விலங்கும் புத்தேளிரே" என்று கவிச்சக்கரவர்த்திகள் திருவாய் மலர்ந்தருளி உள்ளார் (கிட்கிந்தா காண்டம்). உலாவும் பெருமான் (இராமன்) பேசியதை, உறங்கும் பெருமான் (அரங்கன்) பேசிய திறம் நோக்கி மகிழ்க.

35. அரங்கன் விருப்பம். அவன் நமக்கு அடிமை பூண்டுளோன். போதமும் கல்வியும் சாத்திர வேதமும் அவன்வயின் விளங்கும். மெய்ம்மை ஆதலால் ஈது (மனத்துள்) வைத்து அழைத்து வாருங்கள் என்றான். போதம் - அறிவு. அவன் வயின் - ஆழ்வாரிடம்.

36. புரிசை - மதில். பாணன்பால் மருவி - திருப்பாணாழ்வாரை அடைந்து.

37, 38, 39. மாதவன் புகல் வாசகம் - அரங்கன் கூறிய மொழிகள். கோதிலாதவன் - குற்றமில்லாத ஆழ்வார். அரங்கன் கூறிய மொழிகள் உண்மையே ஆயினும், உலகளந்த பாதங்களைப் பணியும் தகுதி தொண்டர்கட்கே உரியது.

மாசு றும்முளந் தனில்வ ரிச்சிறை
மூசு வண்டிமிர் முளரி யாமெனத்
தேசு றும்மவன் சீர டிக்கொளா
நீச ருக்கது நீதி யல்லவாம். 40

ஆத லாலர வணையின் மீமிசைப்
போத மார்ந்துளோன் புரமெ ரித்துளோன்
மாத வத்தினோர் வணங்க வேதுயில்
நாத னார்திரு நகரந் தன்னிலே. 41

தீய ருண்மிகுந் தீய னாகிய
நாயி னேனிடம் நலமி லாததால்
தோயு றும்படி துன்னி லேனென
ஆய பாணனா ரனுப்பப் பின்னரும்; 42

சிந்தை யுள்ளவன் தெளியு மாறதாய்
எந்த வாறவ ரொடுமி யம்பினும்
வந்தி லேனென மறுத்துக் கூறல்கேட்
டந்த வேதிய ரவனை நோக்கியே; 43

உலக முண்டுமிழ் ஒருவ னெம்மொடுஞ்
சொலுமொ ழிப்படி துன்னி டாயெனில்
வலுவி லம்மண வாளர் பாற்கொடு
செலுது மென்றவர் செப்ப லோடுமே; 44

40, 41, 42. நீசர் அரங்கத்திற்குள் புகுதல் முறையன்று. ஆதலால் அடியேன் வர விரும்பவில்லை என்றனர் ஆழ்வார்.

40. வண்டுகள் மொய்க்கும் தாமரை போன்ற பாதம். வண்டு இமிர் - வண்டுகள் பாடுகின்ற. முளரி - தாமரை. தேசுறும் - ஒளிமிக்க. நீதி - முறை.

41. அரவணை - பாம்புப் படுக்கை. போதம் ஆர்ந்துளோன் - அறிவு மிக்கவன் (பிரமன்). புரம் எரித்துளோன் - முப்புரம் அழித்தவன் (சிவபிரான்). துயில்நாதன் - யோக நித்திரை மேற்கொண்ட அரங்கன்.

42. நாயினேன் - நாய் போன்ற என்னிடம். நலம் - நற்குணம். தோயுறும்படி - கலந்து மகிழும்படி.

43. வேதியர் மீளவும் வற்புறுத்தினர். ஆழ்வார் மறுபடியும் மறுத்தார்.

44. அந்தணர்கள், ''வற்புறுத்தி உம்மைக் கொண்டு செல்வோம்'' என்றனர். உலகம் உண்டுமிழ் ஒருவன் - திருவரங்கன்.

திட்டி வாவெனச் செப்பி னுந்தலைக்
குட்டி யுங்கதை கொண்டு மோதியுங்
கட்டி யீர்ப்பினுங் கடியவாள் கொடு
வெட்டி னும்வரே ரென்னவி ளம்பியே; 45

அடியவர் பற்ற ஆழ்வார் தென்கரையுற்றார்

அக்க ணத்தெழுந் தவனு மேதனைப்
புக்க ணைந்திட வேபொ ருந்தினோர்
கைக்கொ ளக்கனிந் தோடிக் காவிரி
தெக்க ணக்கரை சேர்ந்து ளானரோ. 46

அனையர் பேர்ந்தவ ரரங்கர் பாலணைந்
தினைய செய்திக ளியம்பு தும்மெனா
வனையுங் காவிரி வடக ரைத்தலை
நினையு முன்னரின் நீங்கி யேகினார். 47

ஏகி னோர்களாங் கெய்து செய்கைகள்
நாக ணைத்துயி னாத னாகிவாழ்
ஆக மம்புய வனம லர்ந்தகார்
மேக மொத்துளா னொடுவி ளம்பினார். 48

---

45. ஆழ்வார் தாங்கள் என்ன செய்யினும் வாரேன் என்று கூறினார். திட்டி வா எனச் செப்பினும், தலை கொட்டியும், கதை கொண்டு மோதியும், கட்டி யீர்ப்பினும், வாள்கொடு வெட்டினும் வாரேன். ஈர்ப்பினும் - இழுத்தாலும்.

46. அந்தணர்கள், வற்புறுத்திப் பற்ற முயன்றனர். ஆழ்வார் பொன்னி யைத் தாண்டித் தெற்குக் கரையை அடைந்தனர். தெக்கணக்கரை - தென்கரை.

47, 48. அந்தணர்கள் மீண்டு வந்து நிகழ்ந்தனவற்றை அரங்கனிடம் கூறினர். பேர்ந்து - திரும்பி. இயம்புதும் - சொல்வோம். நினையும் முன்னர் - எண்ணுவ தற்கு முன்.

48. எய்து செய்கைகள் - நிகழ்ந்த (ஆழ்வாரின்) செயல்களை. ஆகம் - உடல். அம்புய வனம் - தாமரைக் காடு. கார் மேகம் - கரிய மேகம். தாமரை மலர்ந்த மேகம் போன்ற திருவரங்கன்.

சாரங்கமாமுனிக்கு இட்ட கட்டளை

விளம்ப லோடுமின் மேதி னிப்பதத்
தளந்து ளான்றனை யர்ச்ச னைசெயும்
வளம்பொ ருந்துசா ரங்க மாமுனிக்
குளங்க னிந்திட விதனை யோதுவான்: 49

தான லம்பெறும் சாதி யிற்கடை
யீன னென்றன னேவ லிற்புகல்
வானி ரும்புகழ் வளரும் பாணனை
நான வன்னவன் னானெ னக்கொடே; 50

கோயின் மேவிடும் கொத்து டன்வர
நீய டைந்திட நேர்ந்திடா னெனில்
தூய நின்றிருத் தோண்மி சைக்கொடு
நேய மோடுபல் வளம்நி ரம்பவே; 51

சுந்த ரம்பெறத் துலங்கு வீதிசூழ்
இந்த மாநகர் வலம தெய்தியே
வந்து சேரென வழங்கும் வார்த்தைகேட்
டந்த வாறதா யவனு மெய்தினான். 52

குரும ணித்திரை கொழிக்குங் காவிரித்
திருமு கத்துறை சேர்ந்து நெஞ்சகம்
உருகு பாடல்க ளோதி நின்றிடும்
பொருவி லானொடும் புகறல் மேவினான். 53

முனி மொழிகள்

ஐய்ய! கேட்டிநம் அரங்க நாயகர்
பைய்ய வேநினை யனுப வித்திட
எய்த லாதமெய் இயம்பி னானினிச்
செய்வ தில்லையென் றன்பிற் செப்பினான். 54

49, 50, 51, 52. அரங்கன் சாரங்க முனிவரிடத்தில் "ஆழ்வார் தன்னை ஈன னாகக் கருதுகிறார். அவரை. "நானே அவன், அவனே நான்" எனக் கருதித் தோளில் சுமந்து திருவரங்கத்தை வலஞ்செய்து வருக" என்று கட்டளையிட்டான்.

53. சாரங்கமாமுனிவர் காவிரியை அடைந்து உருகு பாடலை ஓதும் பாணரிடம் பேசத் தொடங்கினார். குருமணி - ஒளி வீசும் மணிகள். பொரு விலான் - ஒப்பற்ற ஆழ்வார். முனிவாகன போகத்தில் தேசிகன் பாணர்பிரானின் ஒப்பற்ற தன்மையை விளக்கியுள்ளார்.

54. அரங்கநாயகர் உன்னை அனுபவிக்க விரும்புகின்றார். செய்யலாவது - செய்யத்தக்க கடமை.

மீளச் சார்ங்கமா முனியும் மெய்யரை
ஆளு நாயகன் அருள்வ ழாமலென்
தோளின் மீதுனைச் சுமப்பன் ஐயனே!
ஏளு கென்றவ ணெய்தி னானரோ. 55

பாணர் ஒதுங்கினார்

சென்ற போதினில் தீய சாதியன்
என்ற வென்னைநீ சுமப்ப தேற்குமோ?
நன்று நன்றெனா நவின்று மெய்விதிர்த்
தொன்ற வேபயந் தோடி னானரோ. 56

ஓடு வான்றனை யோடிக் கைக்கொளா
மாடு சென்றெதிர் வளைத்து நிற்றலும்
பாடு நாயகன் பனுவல் நொந்துளம்
வாடு றத்திரு மதிலைச் சார்கிலேன்; 57

நீச னீசனா னென்னை நீள்மொழி
பேசிப் பேசியே பிடித்தல் தீதெனாக்
கூசி யோடலுங் கூவல் மேவினான்
மாசி லாதொளிர் மணியின் மேனியான். 58

எத்தி சைக்கணும் எய்திப்போந் தொறும்
அத்தி சைபுகுந் தடைகி லேனெனத்
துத்தி நாகணைச் சோதி தன்னுளக்
கொத்தி டுங்கொலென் றுள்ள யர்ந்தனர். 59

---

55. ஏளுக - எழுந்தருளுக (வைணவ வழக்கு).

56. ஏன்ற - பொருந்த. ஏற்குமோ – பொருந்துமோ? மெய்விதிர்த்து - உடல் நடுங்கி.

57, 58. சாரங்கமா முனிவர் வளைத்துப் பற்றினார். பனுவல் - வேதம். வேதம் வாட அடியேன் மதிலையும் சார மாட்டேன். நீசன் நீசன் நான் - நான் மிக இழிந்தவன். "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்பர் சடகோபர். இங்ஙனம் பெருமாள் வந்தபோது நம்மாழ்வார் விலகி ஓடியதை ஈட்டு விரிவுரையில் காண்க. முனிவர் கூவல் மேவினார். கூவுதல் - முறையோ! முறையோ! என்று ஓலமிடுதல்.

59. அரங்கன் திருவுள்ளத்துக்கு இச்செயல் ஒக்குமோ என்று சாரங்கமுனிவர் வாட்டமுற்றனர். துத்தி - புள்ளி. நாகணைச் சோதி - பாம்புப் படுக்கையில் உள்ள பெருமாள்.

ஆழ்வார் முனிவாகனர் ஆனார்

பின்னு மெங்கணும் பெயர்க்கொ ணாமையால்
இன்னு மவ்விளை யாட்டெ லாம்விளைத்
தன்ன பாணனை அம்பு யந்தனில்
உன்னி யேற்றினன் உவமை வேறிலான். 60

இடரி னாற்கலுழ்ந் திருந்த மெய்யன்தாள்
மடன விழ்ந்தநன் மனதி னுள்ளுறு
முடலை நீங்கிட முத்தமே கொடுத்
தடலின் ஏந்தினான் அன்பை ஏந்தினான். 61

மருவு சூரன்முன் மரைம லர்ந்தென
உருகு காதலால் உளத்தொ ளிர்ந்திடப்
பெருகும் அன்பினிற் பிறங்கு வோன்றனைப்
பொருவில் தோளினிற் பொலிய வைத்தனன். 62

முனிவர் கருடன்போலிருந்தார்

அளவி லாதநல் லன்புக் காழியைப்
பளகு வெம்பவம் பாற்று மருந்தினை
இளகு மன்பினால் ஏந்திச் செல்பவன்
களவில் நெஞ்சுடைக் கலுழ னாயினான் 63

---

60. சாரங்க முனிவர் ஆழ்வாரைப் பற்றித் தோளில் ஏற்றிக்கொண்டார். உவமை வேறிலான் - சாரங்கமுனிவர்.

61. மனதின் உள்ளுறும் முடலை - உள்ளத்தில் உள்ள நாற்றம். முடலை - கோணல் என்றும் கூறலாம். மெய்யன் திருவடியை மதியின் உள்ளுறு முடலை நீங்கிட முத்தம் கொடுத்து ஆற்றலால் ஏந்தினான். அன்பை ஏந்தினான் - அன்பை ஏந்திய சாரங்கமுனிவர்.

62. சூரன் - சூரியன். அன்பினில் - அன்பாலே. பொருவில் தோள் - ஒப்புவமையற்ற தோள்.

63. அன்புக்கடலை, பிறவிப்பிணிக்கு மருந்தை (ஆழ்வாரை) ஏந்திச் செல்பவர் திருமாலைச் சுமக்கின்ற கலுழன்போன்றிருந்தார். (இங்கு இப்படியே பாடுவார் வடிவழகிய நம்பிதாசர்.) பளகு - குற்றம்.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY LIBRARY MADRAS

அனுமனுமானார்

ஒப்பிலா ரகுகுலம் தனிலு தித்தருள்
அப்பனை யப்பினு ளமுதொப் பான்றனைத்
துப்பணைப் பியன்மிசை சுமந்து வாகைகொள்
எய்ப்பிலாக் கான்மக னெனலு மாயினான். 64

முனிவன் பூரிப்பு

தகவுறு பாணன்றன் சரண்கைத் தாங்கினோன்
உகவையின் திருவுளம் ஓங்கி டத்தவ
மகமிழைப் பவருறு மகிழ்ச்சி யெய்தினான்
துகளிலா வாச்சியம் துவைத்த தெங்குமே. 65

நிதியின் மிக்கொளிர் நெடிய கற்பகப்
புதிய மாமழை பொழிய வானவர்
அதிச யித்துமா தவர்க ளன்பொடுந்
துதிசெய் யப்புகழ் பட்டர் சொல்லவே. 66

துன்று தோரண முதல்து லங்குற
அன்ற ரங்கம தலங்க ரித்துளது
என்றும் இச்சிறப் பில்லை என்றிடச்
சென்ற டைந்தனன் தேவர் செய்கையான். 67

---

64. சாரங்க முனிவர், இராமபிரானைத் தோளிற் சுமந்த அனுமனைப் போலவும் இருந்தார். "அப்பினுள் அப்பனை அமுதொப்பான் றனை" என்பது கவிச்சக்ரவர்த்திகள் வழங்கிய கடன். பியல் - பிடரி. "ஞானக்கன்றினை முன் புக்கெடுத்துப் பியலின்மேற் கொண்டு களிகூர்ந்து செல்ல" என்பர் தெய்வப் புலமைச் சேக்கிழார். கால்மகன் - வாயுதேவனின் புதல்வன் அனுமன்.

65. பாணன்றன் சரண் - திருப்பாணாழ்வாரின் திருவடிகளை. கை தாங்கினோன் - கைகளில் சுமக்கும் சாரங்கமுனிவர். மகம் இழைப்பவருறு - யாகத்தைச் செய்கின்ற அந்தணர் அடைகின்ற. அச் செயலைப் புகழ்வதுபோல் வாத்தியம் முழங்கிற்று. வாச்சியம் - வாத்தியம், துவைத்தது - முழங்கிற்று. 'துடியொடு சிறுபறை துவைத்த' என்பர் தேவர் (சிந்தாமணி).

66, 67, 68. ஒரு தொடர். வானவர் கற்பக மழை பொழிந்தனர். மாதவர்கள் துதித்தனர். பட்டர்கள் புகழ்ந்தனர். 'அன்றுபோல் திருவரங்கம் என்றும் அலங்கரிக்கப்படவில்லை' என்று கண்டவர் கூற, ஆழ்வார் அரங்கமாநகரை அடைந்

நீலமேனியன் முன் நிறுத்தினார்

நாலு வீதியு நண்ணி யன்புடன்
கோல மாமணிக் கோவி லின்கணே
மூல மென்றுகூம் முனியின் முன்வரும்
நீல மேனியன் முன்னி றுத்தினான். 68

ஆழ்வார் அனுபூதி

அந்த மாதவன் கேச வன்திருப்
பைந்து ழாயணி பாதமே முதல்
சுந்த ரங்களின் சோபை யாவையும்
முந்த வர்க்குறும் முறையிற் காட்டினான். 69

புண்ட ரீகம்வாழ் போத னும்விடம்
உண்ட பேயனும் உம்பர் யாவரும்
தொண்ட ராயடி தொழும ரங்கரைக்
கண்ட கண்கள் களித்த பாணற்கே; 70

ஒளித்தி லந்தொறு முறியில் வெண்ணைபால்
களித்த ருந்திடுங் கள்வ னேகரி
விளித்த ழைப்பமுன் விரைவி னோடிவந்
தளித்த கார்வணா! அரங்க நாதனே! 71

என்று போற்றிசெய் திறைவன் மேனிமேல்
சென்ற அன்பெலாந் திரட்டி அன்பளாய்
அன்று பாடினா னமல னாதியென்
றொன்றோ டொன்பது முவப்பி னோடுமே. 72

தார். நான்கு வீதியும் வலம் செய்வித்து ஆழ்வாரை நீலமேனியன் முன் நிறுத்தினார் சாரங்க முனிவர்.

மூலம் என்று கூம் - ஆதிமூலமே என்றழைத்த. முனி - யானைக்கன்று. 'முனியுடைக்கவளம்' என்பர் ஓரம்போகியார் (நற்றிணை).

69. சாரங்கமுனிவர் ஆழ்வார்க்கு அழகிய மணவாளனின் திருமேனிப் பொலிவைக் காண்பித்தனர். சுந்தரங்கள் - அழகுகள். சோபை - ஒளி.

70. போதன் - பிரம்மன். விடம் உண்ட பேயன் - சிவபிரான்.

71, 72. ஒரு தொடர். ஒளித்து - மறைந்து. இலந்தொறும் - வீடுகள் தோறும். கரி - யானை. விளித்தழைப்ப - ஆதிமூலமே என்று கூப்பிட.

72. அன்பு அளாய் - அன்பு கலந்து.

பாடி யேகளிப் பாழி யிற்படிந்
தாடி யாடிப்பொன் னடியின் வீழ்ந்தெழுந்
தோடி யோடிமெய் யுருகி வேர்வெழக்
கூடி வந்தெதிர் குறுகி நின்றனன். 73

துன்று மன்புறும் தொண்டன் நீண்முடி
ஒன்ற நற்பத முவந்து வைத்தனன்
கன்றி னால்விள வெறிந்து கன்மலி
குன்றை யேந்திடும் கரிய கோவலன். 74

அரங்கக் கடலில் பாண நதி கலந்தது

பன்னு கூவங்கள் படுகு லைக்கணே
புன்னை யார்கடல் புகுந்த டங்குறும்
உன்னு மன்பினால் உருகு பாணனும்
மன்னி யொன்றினான் மாயன் றாட்குளே. 75

கண்டு போற்றினர் கண்ணி மைத்திடா
அண்டர் யாவரும் அதிச யித்தலர்
கொண்டி றைத்தனர் கோயின் மேவிவாழ்
தொண்டர் யாவரும் களிது ளங்கினார். 76

அன்ன செய்கையான் ஆய பாணனும்
பன்னு செந்தமிழ்ப் பனுவல் பத்தினுள்
பொன்ன ரங்கநற் புகழ்கொள் வேங்கடம்
என்னு மிப்பதி யிரண்டு மெய்துமே. 77

---

73. களிப்பாழியில் - களிப்புக்கடலில். வேர்வு எழ - வியர்வு தோன்ற.

74. கரிய கோவலன், தொண்டர் முடியில் நற்பதம் உவந்து வைத்தனன். கன்றினால் - வத்ஸாசுரனால் (அவன் கன்றுருவுடன் வந்தான்). விளவு - விளா மரம் (விளா மரமாக நின்றவன் கபித்தாசுரன்). ''கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்'' என்று இளங்கோவடிகள் பாடுவார் (சிலம்பு).

75. கூவம் - கிணற்று நீர். குலை - கரை. கூவத்தின் புனல் கடலில் அடங்குதல்போல, திருப்பாணாழ்வார் அரங்கன் திருவடிகளில் கலந்தனர். ''கூவத்தின் சிறு புனலைக் கடலயிர்த்தல் ஒவ்வாதோ கொற்ற வேந்தே!'' என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (யுத்த காண்டம்).

77. ஆழ்வார் மங்களாசாசனம் செய்த திவ்ய தேசங்கள் இரண்டு.

பயன்

இப்பெ ருங்கதை யெழுதிக் கற்றுளோர்
செப்பு வோரிரு செவியிற் கேட்டுளோர்
ஒப்பு வேறிலா உயர்வை குந்தமாம்
அப்பெ ரும்பதி யணுகி வாழ்குவார். 78

நம்மாழ்வார் புகழ் நவில்வோம்

வேறில் ஒப்பென விளங்கு பாணர்செய்
வாறி தாமென வழங்கி னோமினி
நாறு பூந்துழாய் நாத னாருரு
மாற னாங்கதை வகுத்துக் கூறுவாம். 79

திருப்பாணாழ்வார் திருவவதார அத்தியாயம்
முற்றிற்று.

---

79. மாறன் (நம்மாழ்வார்) வரலாற்றைக் கூறுவோம் என்று தோற்றுவாய் செய்கின்றார்.

சடகோபாழ்வார் திருவவதார அத்தியாயம்

வெண்பா

ஏரார்வை காசி விசாகத்தின் ஏற்றத்தைப்
பாரோ ரறியப் பகர்கின்றேன் — சீராரும்
வேதந் தமிழ்செய்த மெய்யன் எழிற்குருகை
நாதன் அவதரித்த நாள்.

(உபதேசரத்தினமாலை, 14.)

எம்பெருமான் சிந்தனை

மருவை குந்தன மலிந்ததா மரையே .....
பொருவை குந்தனுக் கதற்கு ....
கருவை குந்தமே முதலினோர் களையும் .....
திருவை குந்தமா நகரதன் சீர்மையா ருரைப்பார். 1

வெண்பா: வைகாசி மாதத்தில் வருகின்ற விசாகம் சிறப்புடைய நாளாகும். அதன் ஏற்றத்தைப் பகர்கின்றேன். வேதத்தையே தமிழாக்கிய சடகோபர் அவதரித்த நாளாகும்.

நான்கு வேதங்களுள் ருக் வேதம் திருவிருத்தம் ஆகவும், யஜுர் வேதம் திருவாசிரியம் ஆகவும், அதர்வண வேதம் பெரிய திருவந்தாதி ஆகவும், சாம வேதம் திருவாய்மொழி ஆகவும் வெளிவந்தன என்பர்.

"அருமறை துணிந்த பொருள் முடிவை இன்சொல் அமுது ஒழுகுகின்ற தமிழின் விளம்பியருளிய சடகோபர்" என்பர் திவ்யகவி (புய வகுப்பு). இதனை அழகர் பிள்ளைத் தமிழ் ஆசிரியர் சுவைபடப் பேசுவார். ஆண்டுக் காண்க.

1. முதல் பாடல் சிதைந்துள்ளமையால் பொருள் புலப்படவில்லை. இதனை

"மருவை கும்தளம் மலிந்ததா மரைமுதற் பூக்கள்
பொருவை குந்தனுக் கிருப்பிட மாகிமுப் புவனக்
கருவை குந்தமம் முதலினோர் களையும்ஆண் டருளும்
திருவை குந்தமா நகரதன் சீர்மையா ருரைப்பார்?"

என்று திருத்தத் தோன்றுகிறது.

மரு - வாசனை. வைகும் - தங்கியிருக்கின்ற. தாமரை முதல் பூக்கள் - தாமரை நீலோற்பலம் முதலான மலர்களை. பொரும் - ஒத்திருக்கின்ற. வைகுந்தனுக்கு - திருமாலுக்கு. இருப்பிடமாய் - தங்கும் இடமாய். முப்புவனம் - மூன்று உலகமாகிய. கரு - முட்டையில். வைகும் - சிறையிடப்பட்ட. தமம் முதலினோர் - தமம் என்று கூறப்படும் நரகத்துக்கு உரியவர்களையும். ஆண்டருளும் - பாதுகாக்கும் திருவைகுந்தம் என்க.

அச்சி றந்தநா டதனிடை அருள்விளக் கிடும்நல்
வச்சி ரஞ்செழு மரகத முதலிய மருவ
வுச்சி தந்தனை விச்சுவ கருமனே உஞற்ற
மெச்சு றுந்திரு மாமணி மண்டபம் விளங்கும். 2

அந்த மண்டபத் தரியணைப் புறத்தினில் அயனோ
டிந்தி ரன்முதற் கடவுள ரெவர்களு மீண்டி
வந்து வந்தவக் கணம்நெருங் குறப்பிரம் பதுகொண்
டுந்தி யுந்திருச் சேனையர் கோன்விலக் குறவே. 3

இருபு றத்தினு மரிவைசா மரங்கள்கொண் டிரட்ட
பொருவில் முத்தவெண் மதித்திருக் கவிகைமேற் பொலிய
குருக வின்கவுத் துவமணி மார்பினிற் குலவத்
திருவொ டும்பொலிந் திருந்தனன் நாரணன் சிறப்பால். 4

இருந்த கோவிய ரணியுடை களைக்கவர்ந் தெடுத்துக்
குருந்த மேலுறுங் கோவலன் கொன்றையன் முதலாம்
அருந்த போதனர் வரங்கள்பெற் றகன்றதன் பின்னர்
திருந்த வேயுளத் தோர்முறை சிந்திப்ப தானான். 5

உலகத்தை முட்டை என்று பாடியவர் நம்மாழ்வார். அதனால் கரு என்பதற்கு முட்டை என்று பொருள் கூறப்பட்டது. "காட்டி நீ கரந்து உமிழும்" என்று தொடங்கும் திருப்பாசுரத்தைப் பார்க்கவும். "முட்டைக் கோட்டையினிற் கழித்து என்னை உன் கூட்டரிய திருவடிக்கண் எஞ்ஞான்று கூட்டுதியோ" என்ற பகுதி நயம் மிக்கது. திருவடிக்கண் என்ற பாடமே சிறப்புடைத்து. [மர்ரே பதிப்பில் பாட பேதத்தைக் கண்டு இங்ஙனம் மாற்றப்பட்டது], தமம் - நரகம் (இருள்).

2. அந்த நாட்டில், விஸ்வகர்மாவால் படைக்கப்பட்ட திருமாமணி மண்டபம் ஒன்று உண்டு. உச்சிதம் - சிறப்பு (கோபுரம்). உஞற்ற - செய்ய.

3 — 4. அந்தத் திருமாமணி மண்டபத்தில், பிரமன் முதலானோர் வணங்க, சேனையர்கோன் பிரம்பால் கூட்டத்தைக் கட்டுப்படுத்த, அரிவையர்கள் சாமரை இரட்ட, திருக்குடை மேலே விளங்க, மார்பில் வீற்றிருக்கும் திருமகளுடன் நாரணன் வீற்றிருந்தான். இரட்ட - வீச. "தண்பொழில் பூகம் பசும்பாளை மூத்த வெண்சாமரை யிரட்ட" என்பது ஆண்டாள் சந்திரகலா மாலை. குரு - ஒளி. "குருமணி வெயில்விட மரகதநிழல் விரிகுன்றே" என்பர் குமரகுருபர சுவாமிகள்.

5. பரமபதநாதன் சிவபிரான் முதலான தேவர்கள் வரம்பெற்றுச் சென்றபின் தனக்குள் சிந்தித்தான். கோவியர் - இடைப்பெண்கள். குருந்தம் - குருந்த மரம். கோவலன் - திருமால். "கோவலன் குளிர் சோலை மலைக் காவலன்" என்பர் திவ்ய கவி (அழகர் அந்தாதி). கொன்றையன் - கொற்றைப் பூவால் தொடுத்த மாலையணிந்த சிவபிரான். தபோதனர் - தவம்செய்பவர்கள். சிவபிரானைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் "நீரற வறியாக் கரகத்துத் தாழ்சடை பொலிந்த அருந்தவத்தோற்கே" என்பர்.

அருளில் வைகுறத் தக்கசீ வாத்மகோ டிகளவ்
விருளெ லாம்தடிந் திரிந்திடும் நல்லறி வெய்தித்
தெருள்கொள் அன்பினால் நம்வயின் சேர்தரு போதில்
மருளு றப்புரி வஞ்சரை மாய்த்திட வேண்டி, 6

நைதல் ஓட்டுநன் னீரராய் நன்னலம் பொருந்தும்
செய்கை யோர்களைப் புவிமிசை செனிப்பித்தங் கவரால்
உய்தல் வேண்டினோம் உற்றுணர் ஞானங்க ளுரைத்த
மெய்மை யோர்களை வெறுப்பொடும் தடிந்தன ரல்லால், 7

ஒருமு கப்படும் உணர்வொடும் உறுபகை யொழித்தெம்
அருக ணைந்திலர்; இன்னம்யாம் வருந்தியங் கவர்பால்
கருணை கூர்தரப் பிறந்திடக் கருதினோம்; உதவ
வருதல் ஆரியர் செயலெனத் திருவுளம் மதித்தே, 8

பெருமாள் கட்டளை

பாய லாயுறும் அரசையும் பணிக்குலந் தன்னைக்
காயும் வெஞ்சிறை ஊர்தியாம் பொற்கரு டனையும்
கூய ழைத்துநீர் புவியினில் விரைவொடுங் குறுகி
நேய மோடிரும் எனஅடி தொழுதெதிர் நின்றார். 9

6, 7, 8. பெருமாளின் சிந்தனை, உலகில் உள்ள ஆன்மாக்கள் அஞ்ஞானம் நீங்கி நல்லறிவடைந்து, அன்பினால் நம்மிடத்தில் சேரும்போது, அவ்வான்மாக்கள் மயக்கமடையும்படி செய்கின்ற வஞ்சகரை அழிக்கப் பல சான்றோர்களைத் தோற்றுவித்தோம். ஞானம் பேசிய சான்றோர்களை வருத்தினரே அன்றி ஒன்றுபட்ட உள்ளத்தோடு நம்பக்கல் வந்திலர். ஆதலால் நாமே பிறப்போம். பிறருக்கு உதவுவது ஆரியர் செயல் என்று மதித்தான்.

(தீர்க்கதரிசிகள் உலகமக்களால் இழிவுபடுத்தப்படுவதை ஏசுநாதர் உவமை மூலம் குறிப்பிட்டுள்ளார். விருந்தருந்த அரசன் தன் மகனையே மக்கள்பால் அனுப்புகிறான். மக்கள் விருந்துக்கு அழைத்த அரசகுமாரனையே கொல்கின்றனர்.)

7. நைதல் - வருந்துதல். செனிப்பித்து - பிறக்கச்செய்து. தடிந்தனர் - தண்டித்தனர்.

9, 10, 11. திருமால் ஆதிசேடனையும் கருடனையும் அழைத்தான்; அவர்கள் வந்து பணிந்து நின்றனர். அவர்களை நோக்கிய இறைவன் யாம் நிலஉலகில் பிறந்திட நினைந்துள்ளோம். நீங்கள், திருக்குருகூரிலும் திருக்கோளூரிலும், திருப்புளியாகவும் அந்தணனாகவும் பிறந்திருங்கள் என்றனன்.

9. பாயலாய் உறும் அரவு - ஆதிசேடன். பணிக்குலம் - பாம்புக் கூட்டம். ஊர்தி - வாகனம் (கருடன்).

நின்று ளோர்முகம் நோக்கி,யாம் நிலமிசை யுருவம்
ஒன்றி யேபிறந் திடவுளத் தோர்ந்தன மதனால்
சென்று நீர்முனம் வழுதிநாட் டிடைத்திருக் குருகூர்
என்று கூறுமா நகரினு மன்னகர்க் கிணையாய், 10

சிறந்தொ ளிர்ந்தகோ ளூரினுந் திருப்புளி யெனவும்
அறந்த ழைத்தசீர் மறையுண ரந்தண னெனவும்
பிறந்தி டும்மெனப் பேருல குண்டசெம் பவளம்
திறந்து ரைத்தலு மங்கவ ரிம்மொழி தெரிப்பார்: 11

கடவு ளோர்களு முனிகளும் வேண்டவாங் கவர்கட்
கிடர்பு ரிந்தவாள் வேல்கெழு மிராக்கதக் குழுவைப்
படியின் மீதுவேற் றுருவமாய்ப் பலவவ தாரம்
அடிகள் கொண்டடைந் தழித்துமீண் டிவ்விட மடைந்தீர். 12

மாறு மோர்பகை புவிமிசை யுளதுகொல்? மதித்துக்
கூறு தற்கிலை மீண்டுமோ ருருக்கொளக் குறிக்கின்
வேறு காரணம் யாது?யாம் முன்னுரைத் திட்ட
வாறு தித்திடில் அடிகளெவ் வுருக்கொள்வீ ரறைமின்? 13

எந்த வூர்தனி லெந்தநா ளினில்உல களந்த
உந்த மம்புய வடிகளைப் பிரியும்தீ தறுவோம்;
வந்து காண்குறும் வகையையும் மாறுத லின்றி
முந்த வோதிலம் முறைபுரி குதுமென்றார்; முறையாய், 14

---

10. ஓர்ந்தனம் - யோசித்தோம். வழுதி நாட்டிடை - பாண்டிய நாட்டில்.

11. அறம் தழைத்த சீர் - அறத்தால் செழிப்புற்ற சிறப்பினையுடைய. பிறந்திடும் - அவதரியுங்கள். பேருலகுண்ட செம்பவளம் என்றது இறைவனின் திருவாயை. அது கேட்ட கருடனும் ஆதிசேடனும் பின்வருமாறு கேட்டனர்:

12, 13, 14. இறைவனே! தாங்கள் தேவர்களின் வேண்டுகோளின்படி பல முறை பூமியில் தோன்றி அரக்கர்களை அழித்துத் திரும்பினீர். தங்கட்கு மாறு பாடான பகை இன்றும் உள்ளதா? தாங்கள் பிறப்பதற்கு வேறு காரணம் இருக்க வேண்டும். அடிகள் எவ்வுருவத்தோடு பிறப்பீர்? எந்த ஊரிலே எந்த நாளிலே யாங்கள் தங்களைப் பிரியும் தீமையிலிருந்து விலகுவோம்? தங்களை யாங்கள் எப்படி வந்து காண்பது? கூறுங்கள். கட்டளையின்படி நடப்போம் என்று சேடனும் கருடனும் கூறினர்.

12. அடிகள் - சுவாமிகள்.

13. எவ்வுருக்கொள்வீர் - எந்தவிதமான வடிவத்தை மேற்கொள்வீர்கள்.

14. பிரியும் தீது - பிரிந்து வாழ்தலாகிய தீமை.

மொழிந்த வாசகங் கேட்டலும் முகுந்தன்மற் றன்பே
பொழிந்த கண்களால் நோக்கினன்; புகழ்பரந் தாமம்
ஒழிந்த கன்றிட விம்மொழி உவப்புட னுரைத்தான்
வழிந்து தேன்பொழி துழாய்முடி புனையுமா தவனே. 15

அறிஞர்கள் பேயராயினர்!

சீத நீர்க்கடல் வரைப்பினிற் றெளிவுளோர் உணர
வேத மெந்தனை யுண்மையாய் விளம்பியும் வேதம்
ஓது மந்தண ரந்நிலை யுணரகில் லாராய்ப்
பேதா பேதமா யுரைத்திடும் பேயரா யினரால். 16

---

15 — 23. ஒரு தொடர். பெருமாள் அன்பர்களைக் கருணையுடன் பார்த்து, வேதம் என்னைப்பற்றித் தெளிவாகக் கூறியிருந்தும், வேதம் பயிலும் அந்தணர்கள் பேதமாகவும் அபேதமாகவும் பேசும் பேயராகிவிட்டனர். மாயையின் வலிமையால், வேதியர் இப்படிப் பேசினர்; முனிவர்கள் மயங்கினர். ஆதலால், உலகைத் திருத்தப் பலரை அனுப்பினோம். அவர்களையும் மாயை மயக்கப் பார்த்தது. அவர்கள் மயங்காமல் ஞானோபதேசம் செய்தனர். ஆனால், அந்தணர் முதலானவர்கள் மையலால் பிறவியைக் கடக்கும் திறன் இன்றிக் கெட்டுப் போயினர். ஆகையால், பேதையரும் பெண்களும் உணரும்படி வேதப்பொருளைத் தமிழால் விளக்கிப் பொருள் நுட்பமும் தொகுப்பும் அறியச் செய்யப் பெருநூல் இயற்றுவதற்குச் சங்கற்பித்துள்ளோம். (திருவாய்மொழியின் சிறப்பை, ஆசார்ய ஹ்ருதயம் என்ற அற்புத நூலால் உணர்ந்த விஜயராகவப்பிள்ளை நுட்பமாகப் புகழ்கிறார்.)

15. அன்பே பொழிந்த - அன்பு ஒன்றையே கொட்டுகின்ற. தேன் வழிந்து பொழி துழாய் - தேன் நிரம்பிப் பொழிகின்ற திருத்துழாய். முடிபுனையும் - கிரீடத்தில் அணியும்.

16. கடல் வரைப்பினில் - கடலை எல்லையாகக் கொண்ட உலகத்தில். ''தண்கடல் வரைப்பில் தாங்குநர்ப் பெறாது'' என்பது பெரும்பாணாற்றுப் படை. எந்தனை - என்னை (திருமாலை). உணரகில்லாராய் - உணரும் ஆற்றல் அற்றவராய். 'கில்' என்பது ஆற்றலை உணர்த்தும் இடைச்சொல். ''கிற்பன் கில்லேன் என்று இலன் முனம் நாளால்'' என்பது சடகோபரின் பிரயோகம். இப்படி வேறு யாரும் கூறினாரில்லை. ''அகலகில்லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறைமார்ப'' என்ற பகுதியும் நோக்குக. பேதாபேதமாய் என்பது பேதமாய் அபேதமாய். பேதமாய் என்றது துவைதத்தை; அபேதமாய் என்றது அத்துவிதத்தை. நம்மாழ்வார் இரண்டையும் உளப்படுத்தி 'விசிட்டாத்துவிதம்' பேசியுள்ளார். பேயராயினர் என்று ஆசிரியர் பொய்ம்மை வாதிகளைக் கண்டிக்கிறார்.

கற்ற வேதிய ரிவ்வகைக் கழறினர் என்னில்
மற்று ளோர்களெவ் வாறினி வாழ்வர்முக் காலம்
முற்று மோர்தவ முனிவரு மயங்கினர்; முறைசேர்ந்
துற்ற மாயையின் வலிமையவ் வாறதா முணரில் 17

அன்ன தன்மையை தாதலால் அளப்பரும் புவியோர்
என்னை யுண்மைதேர்ந் தெவருமிப் பதியின்வந் தெய்தி
மன்னி வாழ்ந்திடும் வகையுணர்ந் திலார்மதி யருள்வ
துன்னி யோதுமி னெனவவர்க் குரைத்தபின் விடுத்தேம். 18

அவர்கள் சென்றுறுப் படைந்திடு மளவி லிம்மாயை
கவியு மாங்கதற் கிங்குபல் வலிமைகாட் டுகினும்
புவியி லெய்தினர் பொலியுமெய்ஞ் ஞானபோ தகத்தைச்
செவியின் மேவுறத் தெளிவுறப் புகட்டிச்சின் னாளில்; 19

மருவி யோங்கிடும் வெவ்வினை மருவுமற் றவர்கள்
இருநி லத்திழிந் திடாமலெச் சரிக்கைசெய் தவராய்
பொருவில் நல்லறம் புகன்றனர்; புவிமிசை வதியும்
அருள்கொ ளந்தண ரரசர்கள் வசியர்பின் னவர்கள்; 20

இடிந்த நெஞ்சொடும் இவர்மறித் தன்னைதன் வயிற்றிற்
படிந்து தித்துப்பின் இறந்திடும் பிறவியாம் பவ்வம்
கடந்தி டும்திறம் அறிந்திலர் காசினி யதன்மேல்
நடந்தொ ழிந்தனர் மையலால் நவிலவே றிலையால். 21

---

17. வேதங்களைக் கற்றவர்களே இப்படி யிருந்தால் மற்றவர்களைப்பற்றிப் பேச என் உளது? முனிவர்களும் மயக்க உற்றனர். மாயையின் வலிமை - மாயையின் பலம் அவ்வாறது - அப்படிப்பட்டது. (மாயையின் ஆற்றலைத் தாயுமானவர் "இமையளவு போதை யொரு கற்பகாலம் பண்ணும்" என்ற பாடலில் விளக்குகிறார்.)

18. ஞானிகளைப் பூமிக்கு அனுப்பும்போது எல்லோரும் இந்தப் பரமபதம் வர ஓதுங்கள் என்று சொல்லி அனுப்பினோம். மதியருள்வது உன்னி - அறிவு கொடுப்பதை லட்சியமாகக் கொண்டு.

19. அவர்கள் - என்னால் அனுப்பப்பட்டவர்கள். உறுப்படைந்திடும் அளவில் - பிறந்தவுடனே. மாயை வலிமை - மாயையானது தன் ஆற்றலைக் காண்பித்தாலும். ஞான போதகம் - அறிவு நிரம்பிய உபதேசத்தை.

20. இழிந்திடாமல் - மாயைக்குத் தோலாமல். வசியர் - வணிகர். பின்னவர்கள் - வேளாளர்கள்.

21. இடிந்த நெஞ்சொடும் - பின்னப்பட்ட உள்ளத்துடன். பிறவியாம் - பிறப்பென்கின்ற. பவ்வம் - கடல். காசினியதன்மேல் - பூமியில். ஒழிந்தனர் - சிதைந்துபோனார்கள். மையலால் - மயக்கத்தால்.

தமிழ்மறை ஓத அவதரிப்போம்

ஆத லாலிவர் யாவர்க்கு மினியதா யமைந்து
பூத லத்தினில் இழிகுலத் தவரும்பூ வையரும்
ஓதி யின்புறற் கிடமதாம் யோக்கிய முறவவ்
வேத நூற்பொருள் தமிழினால் விரித்தினி துரைத்து; 22

சொற்றி டும்பொருள் நுட்பமும் முறைமையின் தொகுப்பும்
கற்று ணர்ந்திடும் கலைஞரும் மாந்தர்தம் கணமும்
மற்றும் மேவிடும் கணங்களும் மாண்புறப் பெருநூல்
பெற்றி டும்படி நடத்துவித் துறல்கடைப் பிடித்தேம். 23

அதனுக் கொத்திடக் குருகைவாழ் காரிமா றனுஞ்சீர்
சுதனி லாமையின் மனைவியோ டருந்தவந் தொடங்கி
இதமு றத்தவம் இயற்றுவ னினிச்சில நாளில்
உதவு வேம்மக வெனவளித் தவருவப் புறவே. 24

கலியு கத்தினி லவதரித் தனைத்துக்கும் கலங்கா
வலிகெ ழுந்திரு வனந்தனீ குருகைமா நகரின்
மலித ருஞ்சினைப் புளியெனுந் தருவதாய் வளரில்
பொலியு மத்தரு நிழலில்யாம் பொருந்திவை குதுமால். 25

---

22. இனியதாய், இழிந்த குலத்தவரும் பெண்களும் இன்பம் அடைவதற்குத் தகுதியாய், வேதப்பொருளைத் தமிழினால் விரித்துப் புகலக் கருதியுள்ளேன். பூதலத்தினில் - பூமியில். பூவையரும் - பெண்களும்.

23. சொற்றிடும் - சொல்லப்படுகின்ற, முறைமையின் தொகுப்பு - இன்ன தன்பின் இன்னது வைக்கவேண்டும் என்னும் ஒழுங்கின் தொகுதி. கலைஞரும், மாந்தர் கூட்டமும், ஏனைய கூட்டங்களும் மாண்படைய. பெருநூல் - பெரிய சாத்திரம். நடத்துவித்துறல் - நடக்கும்படி செய்ய. கடைப்பிடித்தோம் - சித்தமாகக் கொண்டோம்.

24. என் எண்ணத்துக் கேற்பக் காரிமாறன் இனிச் சில நாட்களில் மகவு இன்மையால் மனைவியுடன் தவம் செய்வான்; யான் உதவுவேன் என்று கூறி. சுதன் - மகன்.

25. கலியுகத்தில் அவதரிப்பேன். அனந்தன் நீ - சேடனாகிய நீ. புளியெனும் தருவதாய் வளர்க. உன் நிழலில் தங்குவோம். வைகுதும் - வீற்றிருப்போம்.

அந்த மாநகர்க் கடுத்தகோ ளூர்வயின் அருளே
முந்து வஞ்சிறைக் கலுழன்நீ முறைவழு வாமல்
செந்த மிழ்க்கவி யாகிநாம் செப்புவாய் மொழிக்கு
வந்து றைந்துபட் டோலைநீ மகிழ்வொடு பிடிக்க; 26

அறிந்து நீவிர்க ளிருவரு மாழிசூ ழுலகிற்
பிறந்து வைகுமி னெனவரி பிறங்குபாட் டிசைக்கும்
நறுந்து ழாயணி மாலையான் நவிறலு மிரவிற்
செறிந்த தாமரை மலரெனத் திருமுகம் குவிந்தார். 27

ஐய! நின்மொழிக் கெதிரெவ ரறைகுவர்? ஆனால்
வெய்ய திக்கொடு மொழிகளை விளம்பினை; ஆயின்
செய்ய வேண்டுமென் றியம்பினை; செய்குதும் என்றே
வைய மீதுற விடைகொடு நடந்தனர் மகிழ்ந்தே. 28

(வேறு)

மதுரகவி அவதாரம்

நடந்தவிற் கலுழன் நண்ணியடி யார்கள்
தொடர்ந்துகுடை யும்புனலிற் றோய்ந்துள மகிழ்ந்து
படர்ந்தரவ மேற்றுயில் பதிக்கண்மலர் மேவும்
மடந்தைநிக ராகுமொரு மங்கைவயி றுற்றான். 29

---

26. கலுழன் நீ - கருடனாகிய நீ. செந்தமிழ்க்கவியாகி - செவ்விய தமிழ்க் கவிதை புனையும் கவிஞனாய். பட்டோலை பிடிக்க - பட்டோலை பிடிப்பாயாக. (பட்டோலை பிடித்தல் - எழுதுதல்.) நேமிநாதர் பட்டோலை பிடிக்கக் கூத்தர் பாடியதாகத் தமிழ் நாவலர் சரிதை பேசும் (செங்கால் மடவண்ணம்).

27. இறைவன் மொழி கேட்டதும், இருவரின் முகமும் இரவில் தாமரைமலர் குவிவதுபோல் குவிந்தன. பிறந்து - தோன்றி. வைகுமின் - தங்குங்கள். அரி - வண்டுகள். பாட்டு இசைக்கும் - பாட்டுப்பாடும். நவிறலும் - கூறியவுடன். நவில்தல் நவிறல் ஆயிற்று.

28. இருவரும் அரிதின் விடைபெற்றுச் சென்றனர். வெய்யது - வெப்ப மானது. இக் கொடு மொழி - இந்தக் கொடிய சொல்.

29. கருடன் பூமியில் வந்து குபேர தீர்த்தத்தில் நீராடி விட்டு, மகிழ்ந்து வைத்தமாநிதிப்பிரான் உறங்கும் திருக்கோளூரில் மலர்மடந்தையனைய ஒரு மங்கையின் மணிவயிற்றை அடைந்தான். தொடர்ந்து குடையும் - விடாமல் நீராடும். புனல் - குபேர தீர்த்தம் (தாமிரபரணி என்றும் சொல்லலாம்).

(வேறு)

அருமா மறையின் வடிவா மமலன்
உருமா மதன்வந் துலகத் திடையே
வருமா னுடனாய் மருவுற் றிடல்போல்
திருநாள் பொலியச் செகமுற் றனனே. 30

(வேறு)

வந்த மதலைத் திருமுகமும்
வடிவத் தெழிலும் புன்னகையும்
முந்த வருமா மகளிரெலாம்
முறையின் நோக்கிக் கண்களுடன்
சிந்தை மகிழ்ந்து நிறைவுற்றார்
தேவன் இவனே என்றுரைத்தார்
அந்த நகர்வா யுறையுயிர்கள்
அனைத்தும் இன்பத் தோங்கினவே. 31

மதுரகவி ஆழ்வாரின் கல்விப்பயிற்சி

அறிய வொண்ணா மறைகளைக்காட்
டம்மா மறையோர் அமைவிதிகள்
நெறியிற் பகர இருகுரவர்
நிகழ்வித் தன்பின் வளர்க்குங்கால்
நறிய புனிதத் துளவமென
நாளும் வளர்ந்து வடகலையும்
செறியும் இன்பத் தென்கலையும்
சேர வுணர்ந்தான் சின்னாளில். 32

---

30. வேத வடிவமான கருடன், மன்மதன் போன்ற வடிவமுடையவனாய் நல்ல நாளில் திருவவதரித்தான். செகம் - உலகத்தை. உற்றனன் - அடைந்தான். உருவமுடைய மன்மதன் — இல்பொருளுவமை. "அவ்வனங்கன் நல்லுருப் பெற்றனனாம் எனப் பெயர்த்தும் எண்ணுவாள்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (ஆரண்ய காண்டம்).

31. மதுரகவியின் வடிவழகைக் கண்ட மகளிர் வியந்தனர். நிறைவு உற்றார் - நிரம்பிய இன்பம் பெற்றனர். அந்த நகர் என்றது திருக்கோளூரை. அனைத்துயிரும் - எல்லா ஆன்மாக்களும்.

32. அந்தணர்கள் கூறியபடி மதுரகவியார்க்குச் செய்யவேண்டிய சடங்குகள் செய்தனர். மதுரகவிகள் திருத்துழாய்போல மணத்துடன் வளர்ந்தார். தென்மொழியும் வடமொழியும் பயின்று நுண்பொருள்களை உணர்ந்துகொண்டார். இருகுரவர் - தாய் தந்தையர். "அரசன், உவாத்தியான், தாய், தந்தை, தம்முன் நிகரில் குரவர் இவர் ஐவர்" என்பது ஆசாரக்கோவை.

தீர்த்த யாத்திரை

சீரார் மறையின் பொருளுணர்சோத்
திரபண் டிதனாய்ச் சாற்றுபல
பாரார் கலைதேர் சால்புடையோர்
பரவிப் புகழ வுறைந்ததன்பின்
நாரா யணன்வாழ் பதிபணிந்து
நல்லோர் பாதம் பணிந்தேத்தி
ஆரா மஞ்சூழ் கங்கைகண்
டாட நினைந்தான் அயர்வில்லான். 33

நிகரில் வளஞ்சார் திருக்கோளூர்
நீங்கி நெடிதாம் நெறிகடந்து
ககன வமரர் தினந்தோயும்
கங்கா நதிகண் டந்நீரில்
மகிழ்வின் இன்பப் புனலாடி
மருவிப் புரிதற் கரியதவம்
புகலும் மாயை தனைவிடுத்துப்
போக இருந்தான் புகழ்வல்லோன். 34

திருப்புளி ஆழ்வார் அவதாரம்

பன்னற் கினியான் உவப்பெய்தப்
பலவே டங்கொள் திருவனந்தன்
தென்னன் முதலாம் வேந்தர்களும்
தேவர் குழுவும் சித்தர்களும்
கன்னல் மொழிகொள் அரம்பையரும்
கலந்தோர் முகமா யடைந்துதொழப்
பொன்னின் ஒளியை நனிநல்கும்
புனிதம் பெறுஞ்சீர் குருகூர்வாய்; 35

---

33. மதுரகவிகள் சோத்திர பண்டிதராயிருந்தார். உலகர் புகழ வாழ்ந்தார். கங்கையாட எண்ணிப் புறப்பட்டார். சோத்திர பண்டிதன் - வேதங் கற்று அரசனால் மதிக்கப்பட்டுக் கொடுக்கப்படும் மானியம் பெறும் அந்தணன். அந்த மானிய நிலத்தைச் 'சுரோத்திரியம்' என்பர். அது சோத்திரம் என்று தற்பவ மாயிற்று. ஆராமம் - சோலை. ''ஆராமம் சூழ்ந்த அரங்கம்'' என்பது திருமங்கை மன்னனின் சிறிய திருமடல்.

34. மதுரகவிகள், திருக்கோளூர் நீங்கி, நெடிதாம் நெறி கடந்து, கங்கை நதியில் நீராடி, மாயை நீங்கத் தவம்புரிந்து வாழ்ந்தார். ககன அமரர் - விண்ணுலகில் வாழும் தேவர்கள்.

35, 36. ஆதிசேடன் பெருமாள் கட்டளையின்படி திருக்குருகூரிலே, ஆதிநாதனின் திருக்கோவிலின் வடக்குப் பக்கத்தில் திருப்புளியாய் அவதரித்தார். பல

குலவு மாதி நாதன்றன்
கோவில் வடபாற் பொருனைநதி
அலகில் வளஞ்சார் தீர்த்தநுகர்ந்
தணிசேர் இளையார் திருப்புளியாய்
மலர்சூழ் பொய்கைக் கிடையொடுங்கி
வருக மூலம் எனப்போந்த
நலமார் திருமால் எனஓங்கி
நாகம் முற்றும் அளந்தனனே. 36

காரிமாறன் கவலை

வாசி யில்லாச் சான்றோர்கள்
மறையோன் எனவும் புளிஎனவும்
மாசில் லாமற் பொலிந்தார்கள்;
மதியோன் கதிரோன் வலம்செய்யும்
காசற் றொளிருங் குருகூரில்
காரி மாறன் உலகுபுகழ்
தேசுற் றிலங்கு முடையநங்கை
தேவி யுடனே சேர்ந்திருந்தான். 37

பூடும் வாடப் பொறாதவர்கள்
புதல்வ னில்லாக் காரணத்தால்
வாடி வாடி உளந்தளர்ந்தார்;
மகிழ்விற் புரிந்த தருமமெலாம்

வேடங்கொள் திருவனந்தன் என்றது, ''சென்றால் குடையாம்'' என்ற பிரபந்தப் பாசுரத்தைத் திருவுளங்கொண்டே. இத் திருப்பாசுரத்தை அடியொற்றி ''இராம ஜெயம்'' என்ற நூல் ''ஆசனம் என அடங்கி, நீள் குடையென விளங்கி, ஆடைய தென வணங்கி, வளர்பாயல் ஆமென உடன் விரிந்து, பாதுகையென ஒடுங்கி, ஆரிருள் கடிய முந்து சுடராகி, தேசணி திருவனந்தன் மீளவும் இளவல் என்று தீவனம் உடன் அலைந்து தொழுபாதம்'' என்று நயப்படப் பேசும். வேந்தர்களும் தேவர்களும் பணியும் திருக்குருகூரில்.

திருப்புளியாழ்வார் பொருனை நதியின் தீர்த்தம் நுகர்ந்து மூன்று உலகங்களையும் அளந்த திருமால்போல் ஆகாயம் முற்றும் அளாவி நிறைந்திருந்தார். பொய்கைக்கிடை - குளத்தின்கண். நாகம் முற்றும் - ஆகாயம் முழுவதையும்

37. சான்றோர்கள் இருவரும் மதுரகவியாகவும் திருப்புளியாகவும் பொலிந்தனர். திருக்குருகூரில் காரிமாறர் உடைய நங்கையுடன் இல்லறம் ஆற்றிவந்தார். வாசி - ஒப்பு. மதியும் கதிரோனும் வலம் செய்யும் குருகூர்.

வீடி யொழிந்து போயினவோ?
மேவும் கொடுமை யாதென்னா
நாடி மேலோ ரொடும்புகல
நயந்து கேட்டோ ரிவைபகர்ந்தார். 38

சான்றோர் இன்னுரை

காரார் குழல்சேர் மனைவியொடும்
கலங்க வேண்டா; நன்மையுறும்;
ஏரார் புதல்வர் தமைவேண்டி
இளமா மதியம் தவழ்கின்ற
சீரார் மாடக் குறுங்குடியைச்
சேர்ந்து புனிதப் பாற்கடலில்
நீராடி யபின் திருமாலை
நினைந்து தவங்கள் செயுமென்றார். 39

---

38. பூடும் வாடுவதைக் காணப்பொறாதவர்கள் (காரி மாறனும் உடைய நங்கையும்), புதல்வன் இல்லாக் காரணத்தால் வாடித் தளர்ந்தார்கள். புரிந்த தருமம் யாவும் வீணாயிற்றோ? யாங்கள் செய்த குற்றம் யாதோ? என்று கவலையுடன் இருந்தனர். இங்கு,

கற்றாவும் கன்றும் கதறப் பிரித்தோமோ ?
பெற்றாரைப் பார்த்துப் பெருமூச் செறிந்தோமோ?
பேதலித்து முற்பிறப்பில் பிள்ளைப்பால் வார்த்திலமோ?
காதலித்து மைந்தருண்ணும் கையைப் பிடித்தோமோ?

என்னும் நம்மாழ்வார் தாலாட்டுப் பாடல் காட்சி தருகிறது. "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்னும் வள்ளலார் திருவருட்பா நினைவுக்கு வருகிறது. இருவரும் கருணீகரல்லரோ? (கருணையுடையவர்கள்).

உடைய நங்கையாரும் காரிமாறரும் குழந்தையின்றி வாடியதை நம்மாழ்வார் தாலாட்டு நயம்படப் பகரும். "குதலைமொழிக் கின்கிணிக்கால் கோகனகச் செவ்வாய் மதலையரை யில்லாத வாழ்வுமொரு வாழ்வாமோ ? புக்கடிசில் உண்டு புறம்புல்கிக் கூத்தாடும் மக்கள் முகம் காணாத வாழ்வுமொரு வாழ்வாமோ? ஐந்தடக்கி, வேண்டும் அறங்கோடி செய்தாலும் மைந்தரைப் பெற்றுய்யாத வாழ்வுமொரு வாழ்வாமோ? மிகப்பேறளித்து விரசை நீராட்டும் மகப்பேறடையாத வாழ்வுமொரு வாழ்வாமோ?" என்ற பகுதியைச் சுவைக்க வேண்டும். (ஆசிரியர் – உபயகவி அப்பா.)

39. சான்றோர்கள், "திருக்குறுங்குடி சென்று பாற்கடல் என்ற தீர்த்தத்தில் நீராடி, திருமாலை நினைந்து தவம் செய்யுங்கள்" என்றனர். இளமாமதி - இளமையான சந்திரன்.

அச்சுத களப்பாளர் புத்திரப்பேறின்றி வருந்தி முறையிட்டபோது, அவரது குலகுருவாகிய சகலாகம பண்டிதர், அடங்கன் முறையாகிய தேவார ஏட்டைப் பூசித்துக் கயிறு சாத்திப் பார்த்தபோது, திருஞானசம்பந்தருடைய திருவெண்காட்டுத் தேவாரப் பதிகத்துள் இரண்டாவதாய் உள்ள,

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம்பெறுவர், ஐயுறவேண்டா ஒன்றும்:
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீவினையே!"

என்னும் திருப்பாடல் காணப்பட்டது என்றும், குருவும் மகிழ்ந்து ஆணையிட்டபடி' திருவெண்காடு சென்று முக்குளத்தில் நீராடி வழிபட்டபின்னரே, அவருக்குக்

தம்பதியர் கண்ட கனா

நெடுநாள் தவஞ்செய் போதினிலே
நிகரில் கதிரோன் உதயகிரி
படுகா லையினில் கனவின்கண்
பரவுந் திருப்பா லாழிவரும்
கொடுமா விடத்தை யரற்களித்த
கோமான் நிரம்பிப் பெருகிடுமன்
பொடுமாங் கவர்தம் திருமுன்னர்
உற்றுத் திருவாய் மலர்ந்தனனால். 40

மகவி லாத கொடுந்துயரால்
மறுகி யிரவும் வெயில்காயும்
பகலும் அரிய தவம்புரிந்தீர்;
படாத துன்பம் நனிபெற்றீர்;
புகலு முமக்கிப் பிறவியினிற்
புதல்வற் பெறும்பே றிலை;ஆனால்
அகமுட் பொருந்தி யித்தலம்வந்
தடைந்தோர் நினைந்த தெய்துவரால். 41

துதிசெய் பவர்கள் அருந்துயரைத்
துடைப்ப தெமது கடனாகும்
அதினா லுமையுற் றிடுவினைகள்
அனைத்தும் போக்கிச் சோதிடத்தின்

குழந்தை பிறந்து சுவேதவனப் பெருமாள் என்னும் திருநாமத்துடன் வளர்ந்த அவர், குழந்தைப் பருவத்திலேயே திருவருள் துணையால் சைவ சிந்தாந்த சாத்திர மரபைத் தோற்றுவித்த மெய்கண்டார் ஆயினார் என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

40, 41, 42. சாரி மாறரும் உடைய நங்கையாரும், தவம் செய்யும்போதில் ஒருநாள் கனவில் திருமால் காட்சி வழங்கி, "நீங்கள் மகவின்றித் தவம் புரிந்தீர்கள். உங்கட்கு இப் பிறப்பில் அப் பேறு இல்லை. நீங்களோ கடுந்தவம் புரிந்துள்ளீர்கள். இத்தலத்தில் நினைந்தது நிறைவேறும். ஆகையால், சோதிட விதியை மாற்றி யாமே புதல்வனாய்ப் பிறப்போம். நீங்கள் உங்கள் பதியை அடையுங்கள்" என்று கூறி மறைந்தான்.

40. கதிரோன் உதயகிரி மருவுகாலை, என்றதால் கண்ட கனவு உடனே பலிக்கும். பாலாழி - பாற்கடல். விடத்தை அரற்களித்த - விஷத்தைச் சிவபிரானுக்கு வழங்கிய.

41. மறுகி - வாட்டமுற்று. இத் தலம் உற்றோர் பயன்பெறுவர். பேறு - பாக்கியம்.

விதியை யொழித்திட் டுமதிடத்தில்
விரும்பி மகவாய் அவதரிப்போம்;
பதிசென் றடைமின் எனப்பகர்ந்து
பரந்த விண்ணிற் கரந்தனனால். 42

அந்தக் கனவை கண்டுணர்ந்திட்
டருளார் காரி வியப்புடனே
சிந்தை களிகூர்ந் தியம்புதலும்
திகழும் அலர்மேல் மகள்போலும்
கந்தம் மேவுங் குழலாளும்
கண்டேன் கண்டேன் ஈதேஎன்
றுந்து காத லுடன்மொழிய
உவந்தான் வழுதி நன்னாடன். 43

ஆழி முதலைம் படையொடும்பால்
ஆழி நடுவிற் றுயில்மாயன்
ஊழி பலவாங் கோடிகளென்
றுரைக்கும் காலம் கணமென்ன
வாழி யெனவக் குறுங்குடிவாழ்
வார்க்குப் பல்லாண் டினிதோதிச்
சூழி மதமா கரியனையான்
துணைவி யொடுந்தன் நகரடைந்தான். 44

---

42. துயரை - துன்பத்தை. எமது கடன் - எம்முடைய கடமையாகும். வினைகள் அனைத்தும் - தீவினைகள் முற்றும். சோதிடத்தின் விதியை ஒழித்து - சோதிட சாஸ்திரக் கொள்கையை மாற்றி. -யாமே, மகவாய்ப் பிறப்போம், உங்கள் பதிக்குச் செல்லுங்கள் என்று பெருமாள் பகர்ந்தான். விண்ணிற் கரந்தனன் - மறைந்தனன்.

43—44. காரிமாறரும் உடைய நங்கையாரும், கனவு கண்ட மறுநாள் தம் நகர் அடைந்தார்கள். அலர்மேல் மகள்போலும் - திருமகள் போன்ற. கந்தம் மேவும் குழலாள் - வாசம் மிக்க கூந்தலையுடைய உடைய நங்கையார்.

44. ஆழிமுதல் - சக்கரம் முதலான. பாலாழி - பாற்கடல். மாயன் வாழி என்று பல்லாண்டு பாடி இருவரும் தம் நகரை அடைந்தனர். சூழி - யானையின் முகத்தில் இடப்பட்ட படாம்.

நம்மாழ்வார் திருவவதாரம்

அடைந்து துயர்நீத் துறைநாள்வாய்
ஆழி தனைமந் தரவரையால்
கடைந்து மருந்தன் றளித்தான்றன்
கழற்றொண் டியற்றி வருநாளில்
முடங்கி நலிந்த சிறியவரும்
முயற்சி யின்றிப் பதவிபெறக்
குடைந்து தேனுண் சுரும்பார்க்கும்
குழலார் நங்கைத் திருவயிற்றில்; 45

கடல்சூழ் உலகம் புகழ்ந்தேத்தக்
காரி யெனும்பேர் புனைந்தோன்செய்
திடமார் தவத்தால் துவாபரத்தில்
திகழும் அந்தத் தாவணியில்
இடமார் இருபத் தேழென்னும்
இசைசேர் தேதி தனிலொளியாய்
அடல்சேர் கலியின் வெப்பகற்ற
அருள்மா முகில்போல் சென்றுற்றான். 46

மங்கு லனையான் தாய்வயிற்றில்
மருவிக் கருவாய் உருவாகித்
திங்கள் வதனம் விளர்ப்பெய்தத்
தெரிய மருங்குல் பெருந்தனத்துப்
பொங்கு முகத்துக் கருமைநனி
பொலிய வியர்வோ டயர்வெய்த
மங்கை தென்றல் நடைகற்க
வளர்ந்தான்; மதியை யிரண்டளவும், 47

45, — 46. காரியாரும் உடைய நங்கையாரும் ஆதிநாதனுக்குத் தொண்டு இயற்றி வரும் காலத்தில், திருமால் நங்கையாரின் மணிவயிற்றில் காரி புரிந்த தவப் பயனால் துவாபரயுக முடிவில் வந்த ஆவணி மாதத்தில், இருபத்தேழாம் தேதியில் கலியின் வெப்பம் அகற்ற முகில்போல் சென்று தங்கினான்.

45. ஆழிதனை - கடலை. மந்தர வரையால் - மந்தர மலையால். மருந்து அளித்தான் - அமுதம் கொடுத்த திருமால். கழல் தொண்டு - திருவடித் தொண்டுகள். சிறியவரும் பதவி பெற நங்கை வயிற்றில் திருமால் சென்று தங்கினான்.

46. மூன்றாம் யுகத்தில் உடைய நங்கையார் வயிற்றில் திருமால் சென்று தங்கினான்.

47. உடைய நங்கையாரின் கர்ப்பக்குறிகளை நயமுறப் பேசுகின்றார் ஆசிரியர். மேகம் போன்ற திருமால் உடைய நங்கையாரின் திருவயிற்றில் மருவி உருவானான். நங்கையாரின் முகம் விளர்த்தது. இடை வெளிப்படையாகத்

மெலியும் கலிவை காசியினில்
மேவும் விசாக நன்னாளில்
பொலிவு மிக்க கடகமெனப்
புகழ்சேர் ஓரை தனில்பொங்கி
மலியுங் கடல்கள் அத்தனையும்
மகிழ்வி னெழும்பி மறிதிரையாம்
ஒலிகொள் முரசம் இனிதார்ப்ப
உதித்தான் ஒருசூ ரியனெனவே. 48

காரியாரும் உடைய நங்கையும் உற்ற களிப்பு

பெற்றி மிக்க அறம்வளரப்
பேரார் இராமன் தோன்றியநாள்
சற்றும் பொய்யில் தசரதன்கோ
சலையோ டந்நாட் டவர்கள்முகம்
செற்றம் நீங்கிப் பேரன்பில்
சிறந்த தென்னக் காரியுடன்
பற்று மிக்க நங்கையரும்
பதிவாழ் வாரும் களிப்புற்றார். 49

பேரிற் சிறந்து நிறைசுடரைப்
பெற்ற கொடியு முளங்களிப்பக்
காரி யாரும் விரைந்துற்றுக்
கவினார் சேயின் முகங்கண்டு

தெரிந்தது. பெருந்தனத்தின் முகம் கருத்துப் பொலிந்தது. வியர்வும் அயர்வும் உண்டாயிற்று. தென்றல் போல மெதுவாக நடந்தாள். மங்குல் - மேகம். ஐயிரண்டு மதி - பத்து மாதம். "மங்கல மங்கையராய்" என்று தொடங்கும் தனிப்பாடல் தென்றல் நடைக்குக் கருவுற்ற பெண்களின் நடையை உவமையாக்கியுள்ளது. "திங்கள் நிறைந்து வரும் சேயிழையார் நடைபோல் தென்றல் தவழ்ந்து வரும்" என்ற பகுதியைப் பார்க்கவும்.

48. கலியுகத் தொடக்கத்தில் வைகாசி விசாகத்தில், கடக ஓரையில், கடல்கள் யாவும் முரசமாக ஒலிக்க, நம்மாழ்வார் சூரியன் போல் உதித்தார். கலி மெலியும் வைகாசி - கலியுகம் மெலிவதற்குக் காரணமான வைகாசி. திரையாம் - அலைகளாகின்ற.

49. இராமபிரான் திருவவதரித்தபோது, தசரதனும், கோசலையும், நாட்டவர்களும் வெறுப்பு நீங்கிக் களித்தாற்போல், காரியாரும், நங்கையாரும், திருக்குருகூராரும் களிப்புற்றனர். பெற்றி - தன்மை. செற்றம் - வெறுப்பு. "ஆர்வமும் செற்றமும் நீங்கிய அச்சுதனே" என்று திருநூற்றந்தாதி கூறும்.

வேரி மலர்ச்சந் தனமுடைபொன்
விதையா பரணம் சருக்கரையும்
மாரி பொழிவ தெனத்தானம்
வழங்கி யுளத்தின் மகிழ்வடைந்தார். 50

மாறன் என்று வைத்தனர் நற்பேர்

புரமட் டவனும் நான்முகனும்
புருகூ தனும்விண் ணாட்டவரும்
பரவிப் புகழ்தற் கரிதாமப்
பரமன் செயல்க ளாராய்ந்தார்;
மரபிற் புகலும் பெயர்காரி
மாறன் என்று சுற்றத்தார்
கரமிட் டுழக்க வைத்திட்டார்
களிப்பா மமுதம் அளித்திட்டார். 51

மாறன் மாயையை வெல்லுதல்

இம்முறை யவர்களெல் லாரு மின்புறச்
செம்மலு மாயையைச் சிதைய வென்றதால்
விம்மிவாய் திறந்தழான் விழிதி றந்திடான்
அம்மலர் பொருவுதா ளசைந்தி டானரோ. 52

---

50. பேரிற் சிறந்த ஆழ்வாரைப் பெற்ற நங்கையார் மகிழ, விரைந்து வந்த காரியார் சேயின் முகம் கண்டு, மகிழ்ந்து, மலர், சந்தனம், உடை, பொன், விதை, ஆபரணம், சருக்கரை முதலான பொருள்களைத் தானமாக வழங்கி மகிழ்ந்தார். நம்மாழ்வார் பிறந்ததும் வழங்கப்பட்ட தானங்களைப் "பொருவிலொண் கனகம் பொருபபெனக் குவித்து வித்தின் நற்றானமும் இமிரும் இருநிதிக் குவையும் எண்ணில் ஆநிரையும் இசைபெறப் புனலொடும் அளித்து" என்பர் தேவேச பாரதி (சடகோப திவ்ய சரிதம்). "பூதானம் கோதானம் பூரிதானம் வித்தின் மாதானம் பூசுரர்க்கும் மாசுரர்க்கும் தான் வழங்கி" என்பர் உபயகவி அப்பா நம்மாழ்வார் தாலாட்டில்).

51. பரமனின் திருவுள்ளக் குறிப்பறிந்த காரியார், சுற்றத்தார் கரங்கொட்டி ஆரவாரிக்கக் காரிமாறன் என்று திருநாமம் வைத்தார். அதனால் மக்கட்குக் களிப்பாகிய அமுதை வழங்கினார். புரமட்டவன் - சிவபெருமான். புருகூதன் - இந்திரன்.

52 — 54. மாயையை (சடம் என்ற காற்றின் வடிவாய் வந்ததை) வென்றதால் காரிமாறர் விழி திறவார்; வாய் திறந்தழார்; திருவடியையும் அசைக்கமாட்டார்; மலசலம் விடார்; பாலுண்ணார்; யோகத்திலிருந்தார்; அழகிய வடிவுடன் பிறந்தும் லீலாரசங்கள் வழங்கமாட்டார். தாயின் வயிற்றில் பிறந்தும் மாயையை வென்றது எப்படி ? என்று தூய முனிவர்கள் ஆராய்ந்தனர்,

மலமொடு சலம்விடான் மருவிப் பாலுணான்
இலகுயோ கந்தனி லினிதி ருந்தனன்
உலகிடை ஒப்பிலா வுருவந் தாங்கியும்
அலகிலா இன்பங்கள் அளித்தி டானரோ. 53

தாய்வயிற் றுதித்திடில் சார்ந்து வாட்டிடும்
மாயையைத் தடிந்ததெவ் வாறு? மற்றிதற்
காயதோ ருபாயம்யா மறிந்தி லேமெனத்
தூயநன் மனத்தினர் தொடர்ந்து நோக்கினார். 54

(வேறு)

மேனிவா டாமல் உள்ளம்
வெதும்புதல் சற்றும் இன்றி
மோனியாய் நாளும் நாளும்
முகமலர் விளக்கம் பெற்று
வேனிலான் இவனே என்று
விளம்பிட வனப்பை யுற்றான்
வானிடை உறைவோர் பூவின்
மழைபொழிந் தார்த்திட் டாரால். 55

இசைதரு புனித மைந்தன்
எழிலுறு முகார விந்தம்
அசைவிலா திருப்ப நோக்கி
யருந்தவத் தினிதின் ஈன்ற
வசையிலா மயிலை யொப்பாள்
காரியார் மாழ்கி நைந்து
நசைநனி பெருகி யோங்க
இன்னணம் நவில்வ தானார்: 56

---

54. தடிந்தது - வென்றது (அழிந்தது).

"வடம்வளை கலசம் பொழிந்தெழு கலசம் மாந்திடா தணைகொளா தமலன்
தடம்வளை ஞானத் தடம்படிந் தருளாம் தண்ணெனும் அமிழ்துவாய் மடுத்துச்
சடம்வளை சடத்தை முனிந்தருள் முனிவன் சரணம்நம் குலங்கள்வாழ் அரனே"
என்பர் நாவலர் சுவாமிகள் (பத்ம புராணம் - உத்தரம்.)

55. காரிமாறர், மேனி வாடாமல் உள்ளம் வெறுப்பு இல்லாமல், மோனத்துடன் தினந்தோறும் விளக்கம் பெற்று மன்மதன்போல் இருப்பதைக் கண்ட தேவர்கள் பூமழை பொழிந்து ஆரவாரித்தனர். வேனிலான் - மன்மதன்.

56. காரிமாறர், முகம் அசையாமல் (கண்மூடி) இருப்பதைப் பார்த்து உடைய நங்கை, காரியார் மாழ்கி நைய இந்தவிதமாக வருந்திப் பேசினார். முகாரவிந்தம் - திருமுகத்தாமரை. மயிலை ஒப்பாள் - உடைய நங்கையார். நசை - விருப்பம்.

உடைய நங்கையின் புலம்பல்

அந்தமில் காலம் யாம்செய்
அருந்தவப் பயனால் வந்த
விந்தையார் மகனே! தூய
விரதியே! உனக்கு நாயேன்
சிந்தையால் செய்தீங் கென்னோ?
திரண்டஎன் முலையை உன்பொன்
சுந்தர வாயிற் சவ்விச்
சுவைத்தும்பா லுணவொ ணாதோ? 57

கண்ணினுள் மணியே! பொன்னே
கண்டிகை ஒதுக்கி என்றன்
தண்ணமு தனைய பாலைத்
தகவுடன் சுவைத்தல் தீதோ?
புண்ணியத் தாள்க ளாலெம்
புயத்திடை யுதைக்கொ ணாதோ?
நண்ணுநின் சிரிப்பால் யாங்கள்
நற்களிப் புறலா காதோ? 58

என்றும்நீ யன்பின் மேவும்
எழிலுறு புதல்வ னாக
ஒன்றிய வுள்ளத் தோடும்
உலகளந் தவனை நோக்கி
நின்றுபன் னாட்கள் நோன்பில்
நிறைந்தநின் தந்தை யானோன்
தன்றிரு வுளத்தி லன்பு
தழையநீ நோக்கி டாயோ? 59

---

57. நான் உனக்குச் செய்த தீங்கு யாது? சுந்தர வாயால் பால் உண்ணக் கூடாதோ? விந்தையார் - ஆச்சரியமான. விரதியே - விரதத்தையுடையவனே!

58. கண்ணின் மணி போன்றவனே! என் ஆபரணத்தை ஒதுக்கிவிட்டுப் பாலைச் சுவைப்பது தீமையோ? உன் பாதத்தால் எங்கள் புயத்தில் உதைக்கக் கூடாதோ? உன் சிரிப்பால் யாங்கள் களிப்படையக் கூடாதோ? கண்டிகை - ஆபரணம். "ஆரம், பதக்கம், கண்டிகை, மாலை மாதர் முலைமேல் அணிவட மாகும்" என்பது சேந்தன் திவாகரம்.

59. நின் தந்தை உள்ளம் மகிழும்படி, அவர் உள்ளம் மகிழ, அன்பு தழைய நீ நோக்கமாட்டாயோ? நோன்பில் நிறைந்த - தவத்தால் பூரணத்துவம் பெற்ற.

நலமெலா மினிதின் ஓங்க
நான்மக வுயிர்த்த காலைப்
பலமணிக் கணங்கள் மேவிப்
பயின்மணித் தொட்டில் ஏற்றி
யலம்வரல் முற்றும் தீர்த்திட்
டம்புலீ! வருக என்னக்
கலமென இனிய தாகக்
காண்தவம் செய்தி லேனோ? 60

அருத்தியில் லானென் றோரா
ஐயவிக் கொங்கைத் தீம்பால்
உருத்தலால் வருத்து கின்ற
துயரேனும் ஒழிக்கொ ணாதோ?
உரத்தலர் மங்கை வாழும்
ஒருவனன் றினிதின் ஈன்ற
வரத்திலென் வயிற்றில் வந்த
மைந்தனே! முறையோ? சொல்லாய். 61

பெருமைசால் பரிசா ரம்வாழ்
பெருந்தகை யுனது பாட்டன்
அருமைமீ தூரப் பொன்னால்
அழகுறப் புனைந்து தந்த
குருமணித் தொட்டில் குற்றும்
கோலமார் வெயிலி னாலே
திருமுகம் மலர்ந்து கண்கள்
சிறப்பயாம் நோக்கொ ணாதோ? 62

---

60. உன்னைத் தொட்டிலில் ஏற்றி "அம்புலீ! வருக இவனுடன் விளையாட என்று கூறும் பாக்கியம் பெற்றிலேன். மணிக்கணங்கள் - மாணிக்கக் கூட்டங்கள். அலம் வரல் - துன்பம் அடைதல். கலமென - ஆபரணங்களைப் போல. (மைந்தர்கள் வீட்டுக்கு ஆபரணம் போன்றவர்கள்.)

61. நீ உண்ணமாட்டாய் என்பதை உணராத என் மார்பில் ஊறும் பால் வருத்துவதால் ஏற்படும் துயரத்தை ஒழிக்கக் கூடாதோ? அலர்மேல் மங்கை மணவாளன் வரத்தால் வந்த மகனே! முறையோ! சொல்க. அருத்தி - விருப்பம். உரத்து - மார்பில்.

62. வண்பரிசாரத்தில் இருந்து உன் பாட்டன் பொன்னால் புனைந்து தந்த மணித்தொட்டிலின் வெயிலால் உன் முகம் (தாமரை) மலர்ந்து யாங்கள் சிறப்புற நோக்கக் கூடாதோ ? தொட்டில் குற்றும் - தொட்டில் தாக்கும்.

ஓவிய மனையாய்! நின்பே
ரொளியினிற் கண்வை யாதே
காவியங் கண்வேற் கொண்ட
காரிகை மார்கள் தம்முள்
நாவினால் ஏசி ஏசி
நகைசெயல் பிறர்வாய்க் கேட்டேன்
பாவியேன் இதலால் வேறு
படுமொழி கேட்கொ ணாதோ? 63

உன்திரு முகத்தின் கோலத்
தோங்கிநல் லுவகை காட்டும்
புன்சிரிப் புடனே என்னோ
புரிந்துநீ நோக்கிப் பாரா
தின்பமுற் றிருக்கின் றாற்போல்
இருந்தனை யோகி போலத்
தென்படு கின்ற தையா
திருமுலைப் பாலு ணாயோ? 64

உள்ளத்து ளுணருந் தன்மை
யுற்றுளாய்! வாட கில்லாய்!
வள்ளலோ டலதென் னோடிம்
மர்மத்தை யுரைக்கொ ணாதோ?
மெள்ளவாய் மலரொ ணாதோ?
விம்மிநன் கழவொ ணாதோ?
கள்ளமோ? எம்மோ டென்னோ
காழ்ப்புனக் குற்ற தைய! 65

---

63. உன் அழகைப் பார்க்கத் தெரியாத மகளிர் தங்களுக்குள் என்னை ஏசுவதைப் பிறர் சொல்லக் கேட்டேன். வேறு நற்சொல்லை நான் கேட்கக் கூடாதோ? கண் வையாதே - பாராமல். "சமஸ்கிருத சாஸ்திரங்களிலே பலகாலும் கண் வையாமல்..... திருவாய்மொழி முதலான அருளிச்செயலிலே பரிசிலனம் பண்ணிக்கொண்டு" என்பது "யதீந்த்ரப்ரணவப் பிரபாவம்".

64. புன்சிரிப்புடன் நீ எங்களைப் பாராமல் இன்பமுற்றிருப்பவனைப் போல இருக்கின்றாய்; யோகி போலத் தோன்றுகிறது. பால் உண்ணமாட்டாயோ?

65. நாங்கள் பேசுவதை அறிகிறாய். வாடாமல் இருக்கின்றாய். உன் தந்தையிடமாவது, அல்லது என்னிடமாவது இந்த மர்மத்தைச் சொல்லக் கூடாதோ? கள்ளமோ? எங்கள்மேல் உனக்கு இவ்வளவு காழ்ப்பு ஏன்? மர்மம் - ரஹஸ்யம். காழ்ப்பு - வைரம் (காரம்).

உடையநங்கையார் பாங்கிமாரொடு புலம்பல்

இன்னணம் பலவா றாக
எடுத்தெடுத் தியம்பும் போதும்
அன்னமா மதலை மேனி
யசைத்திடான்; விழியால் காணான்;
மன்னுமவ் வாறு காண
மலர்க்கணீ ரருவி சோரப்
பின்னரும் பாங்கி மாரோ
டின்னணம் பேச லுற்றாள்: 66

வரமிருந் தடியேன் பெற்ற
மதலைபோற் செய்கை தானும்
திரமுறும் வடிவும் பெற்ற
சிறுவரை உததி சூழும்
கரையிலா வுலகில் யாண்டும்
கண்ட துண்டோ?மற் றோர்கள்
பிரமையாய் உரைத்த துண்டோ?
பேசுவீர்! பேசு வீரால். 67

செகமெனுங் கவளந் தம்மைச்
சிறுபசி வந்த வாற்றால்
அகமுவப் புடனே உட்கொண்
டணிகுறுங் குடிசேர்ந் தாங்குத்

---

66. இவ்வண்ணம் பலவிதமாகப் பேசியும் காரிமாறர் அசையாமல் அப்படியே இருந்தார். உடைய நங்கையார் தோழிகளுடன் ஆற்றாது புலம்பினாள்.

இங்கே வடிவழகிய நம்பிதாசர் உடைய நங்கையார் வாயிலாகப் பாடும் பாடல்கள் யாவும் கல்லையும் கனியச் செய்யும் நீர்மையன. "தப்பா நிலையார் தவமே! தமிழ்மாறா — அப்பா முலையிரண்டும் விம்மிநான் ஆற்றகில்லேன் — ஒப்பாரில்லாதாய்! சுரந்து பீர் ஒடுகின்றது; — இப் பால் அருந்தாய்! நான் என் பிழைத்தேன் இன்னமுதே" — "ஒக்கலைமேல் வைத்தோர் கரத்தால் உனைத் தாங்கித்—தக்கமுலை யூட்டத் தவம் முன்பு செய்யாதேன்; — மக்கடமைப் பெற்ற மடவார் முகம் நோக்கி — வெட்கினேன் மைந்தா, விதியிலியேன் ஆனேனே" என்னும் பாடல்கள் முற்றும் சோகமயமானவை. அங்குக் கண்டு உருகுக.

67, 68, 69. தோழிகளே! என்னைப்போல் பிள்ளையைப் பெற்றவர்களை நீங்கள் எங்காவது கண்டதுண்டோ? சொல்லுங்கள். உததி சூழும் - கடலால் சூழப்பட்ட.

தகவுடன் மேவு பெம்மான்
தான்பிறக் குதுமென் றாற்போல்
மகமுயர் வெய்தி யோங்க
மாயனே உதித்திட் டாலும்; 68

தண்ணிய அன்பு ளாள்போற்
சார்ந்தபூ தனையாம் வஞ்சப்
பெண்ணுவப் புளாள்போல் தந்த்
பெருந்தனி விடத்தோடம் பொன்
வண்ணமார் முலைப்பா லுண்டு
மகிழ்ந்துளோன், வருந்திப் பெற்று
நண்ணியான் தருபா லுண்ண
நாணமுற் றிருக்கின் றானோ? 69

மருவுமாய்ப் பாடி யின்கண்
வளரும்நாள் மனத்தி னூடே
வெருவுறு வஞ்சத் தோடு
வேற்றுரு வமதாய் வந்து

---

68. திருமாலே மகனாய் வந்தாலும், பூதனையின் விஷப்பால் உண்டானே! நான் தரும் பாலை உண்ண நாணமுற்றிருக்கின்றானோ? சிறு பசி வந்தபோது உலகமாகிய கவளத்தை உண்ட மாயவன். பிறக்குதும் - பிறப்போம். மகம் - யாகம்.

69. அன்புள்ளாள் போல் நடித்து - அன்பு உள்ளவள் போல் நடித்த பூதனையின் விஷப்பாலை உண்டவன். குருகை மான்மியம் பாடிய கவியரசர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர், மாறன் திருவவதாரச் சருக்கத்தில்,

"அலகை வஞ்சகக் கஞ்சன்என் பான்விடும்
அலகை மாமுலை உண்டுஅதன் ஆவியுண்டு
உலக முண்டவன் உள்ளமுண் டான்குலத்
திலக நங்கை திருமுலை உண்கிலான்"

என்றும்,

"வெள்ளத் தாலிலை மேற்றுயில் வித்தக
உள்ளத் தானை உணர்வெனும் கண்ணினுள்
கொள்ளப் பார்வை குறிப்பல் லால்புறக்
கள்ளத் தால்வரும் காட்சிகள் காண்கலான்"

என்றும் திருவாய் மலர்ந்தருளி உள்ளார்.

கருதரும் துயர்செய் தோனைக்
காலினால் உதைத்தோன், தன்னை
அருகுறும் என்னை மெல்ல
அசைத்துதைத் தழவொண் ணாதோ? 70

உறுசுவைத் தயிர்பால் வெண்ணெய்
உறிக்குட மிறக்கி யுண்ணச்
செறுவுடன் ஆய்ச்சி வந்து
சினந்துபின் தொடர்ந்து பற்றிப்
பெறுகுறுங் கயிற்றால் அந்நாள்
பிணித்தகல் லுரலி னோடு
மறுகிடத் தவழ்ந்தோன் என்கண்
மலரமுன் தவழொ ணாதோ? 71

சருவமும் செய்ய வல்ல
தலையயன் எழுத்திவ் வாறோ?
மருவுநீர்ச் சிரத்தா னோடு
மலர்மிசை யிருந்து வாழும்
ஒருவனும் அறியொ ணாத
ஒப்பிலான் புனித மூர்த்தி
திருமகிழ் துளவத் தாரான்
திருவிளை யாட லாமோ? 72

---

70 — 73. ஆயர்பாடியில் சகடாசுரனை உதைத்த கண்ணன் (மாறன்) என்னைக் காலால் உதைத்து அழக்கூடாதோ? தயிரையும் பாலையும் திருடினான் என்று உரலுடன் பிணிக்கத் தவழ்ந்தவன் இன்று என்முன் தவழக்கூடாதோ? பிரம்மன் எழுதிய எழுத்து இப்படியிருக்கிறதோ? திருமாலின் திருவிளை யாட்டோ? படுக்கவைத்தால் படுத்தபடியே இருப்பான்; மார்பில் தழுவினால் அவ் விடத்தை விட்டும் பெயரான். இடையில் வைத்தால் அமர்ந்தபடியே இருப்பான்; இவ்வாறு நீங்கள் வேறு எங்கேனும் கண்டதுண்டோ? என்று புலம்பினாள்.

70. துயர் செய்தோன் - சகடாசுரன். தன்னை அருகுறும் - தன்பால் வருகின்ற.

71. உறுசுவை - மிக்க சுவை. செறுவுடன் - கோபத்தோடு, மறுகிட - வருந்த. "மறுகல் செய்யும் வானவர் தானவர்" என்பது திருவாய்மொழி.

72. சருவமும் - எல்லாம். சர்வம் என்ற சொல்லின் திரிபு. நீர்ச்சிரத்தான் - கங்காதரன் (சிவபிரான்). திருமகிழ் என்ற தொடரில் நயம் உண்டு. திருமால் நம்மாழ்வாராய்ப் பிறந்தபோது "திருமகள்" மகிழ் மாலையாகப் பிறந்தாள் என்று திருக்குருகூர்க் கோவில் அர்ச்சகர்கள் கூறுகின்றனர். (நூலாதாரம் தேட வேண்டும்).

படுக்கவைத் திடிலவ் வாறே
படுத்தவா றிருப்பன்; மார்பத்
திடத்தில்வைத் திடிலவ் வாறே
இசைந்தசை வற்றி ருப்பன்;
எடுத்திடை தனில்வைத் திட்டால்
இருந்தவா றிருப்பன்; நங்காய்!
அடுக்குமோ இவ்வா றெங்கும்
அவனியிற் கண்ட துண்டோ? 73

சான்றோர் உரை

இந்தவா றாகத் தான்தன்
பாங்கியோ டிரங்கிக் கண்ணீர்
சிந்திநித் திலம்போல் வீழச்
சிந்தையில் தளருங் காலை
வந்திடுங் குரவ ரோடவ்
வாசகம் முற்றுங் கூறத்
தந்தம துளந்தேர்ந் தங்குச்
சாற்றினர் ஏற்றம் மிக்கார். 74

அம்மகே ளிவ்வா றெய்தும்
அருந்துயர் முற்றும் ஆதிச்
செம்மறன் வதனம் நோக்கிச்
செப்பிடில் நீங்கி டும்மென்
றெம்முள மதனிற் றோன்றும்;
இதனைநீ ராய்ந்து கேண்மின்;
உம்முளத் திட்ட தேவை
யுகந்துநீர் வேண்டிக் கொள்வீர். 75

---

73. அடுக்குமோ - பொருந்துமோ?

74 — 76. உடைய நங்கையார் வருந்தும்போது அங்கு வந்த பெரியவர்கள் ஆதிநாதரிடம் முறையிடுங்கள்; உங்கள் துன்பம் நீங்கும் என்றனர். அவர்கள் கூறியவாறே செய்ய முற்பட்டனர். மனக் கலக்கம் நீங்கிற்று.

74. நித்திலம் - முத்து. குரவர் - பெரியவர்கள் (ஆசாரியர்கள்).

75. ஆதிச்செம்மல் - ஆதிநாதன். இட்டதேவு - இஷ்டதெய்வம். சிந்தை - மனம்.

என்றுகொண் டவர்க ளெல்லாம்
இயம்புதல் கேட்ட லோடும்
நன்றுநன் றென்னச் சிந்தை
நலமருள் உவப்பின் மூழ்கித்
தன்றிருத் துணைவ னோடுஞ்
சஞ்சலம் முற்றும் ஓட
ஒன்றிய மனத்த ராகி
யுள்ளினார் பரிவு மிக்கார். 76

வையம் முழுதும் திரிந்துழன்று
வாடி வாடிப் பிறைசூடி
கையம் படையாய் எனைஉகந்து
காத்தி காத்தி எனப்பணிய
ஐயம் பெய்தன் றிரப்பகற்றும்
அமலன் ஆதித் தனிமூர்த்தி
செய்யும் பரிசிங் கிவையல்லால்
பிரிதொன் றில்லை எனத்தேர்ந்தார். 77

ஆதிநாதன் கோயிலை அடைந்தார்

அதுவுந் தெளிது மெனவுளங்கொண்
டம்பொன் மணித்தொட் டினிலோடும்
புதல்வன் றனைக்கொண் டக்குருகூர்
பொருந்து மாதிப் பெருநாதன்
குதுக லத்தோ டினிதமரும்
கோயில் முக்கால் வலம்வந்து
இதயந் தெளிந்து மிக்குறுமன்
பெழிலார் தொட்டி லுடன்வைத்தார். 78

---

76. உவப்பின் மூழ்கி - மகிழ்ச்சியிற்குளித்து. உள்ளினார் - (அவர்கள் கூறியபடி செய்யத்) தீர்மானித்தார்கள்.

77. இவ்வாறு நேர்ந்தது, ஆதிநாதனின் திருவிளையாடலே என்று உணர்ந்தனர். சிவபிரானின் துன்பம் போக்கிய வரலாறு விவரிக்கப்பட்டுள்ளது. பிறைசூடி - சிவபிரான். கை அம்படையாய் - திருக்கரத்தில் அழகிய ஆயுதங்களை ஏந்தியவனே. ஐயம் - பிச்சை. இரப்பு - யாசிப்பதை. பரிசு - தன்மை. "மழுவாளிக் கன்றளித்த ஐயத்தால் சிறிது ஐயம் தவிர்ந்தாரும் உளரையா" என்பர் கம்பநாட்டாழ்வார்.

78. அதையும் பார்த்துத் தெளிவடைவோம் என்று காரியும் உடையநங்கையாரும் கருதி, மகிழ் மாறனைத் தொட்டிலுடன் ஆதிநாதன் சன்னிதியை மும்முறை வலம் வந்து இறைவன் முன்பு வைத்தனர். குதுகலம் - மகிழ்ந்து. "குதுகலத் துளவின் தாமம் மிலைந்து செஞ்சாந்து கொட்டா வதுவையின் கோலம் கொண்டான்" என்பர் கீழையூர் சடகோபதாசர் (அரிசமய தீபம்).

ஆழ்வார் தவழ்ந்து திருப்புளி உற்றார்

வைத்த உடனே வைத்திட்ட
வாறே கிடக்கும் தவக்குழவி
கைத்து நெகிழ்வார் தமைப்பார்த்துக்
கண்கள் களிப்பாய் நங்கையெனும்
மைத்த டங்கண் பெருந்தேவி
மகிழ நோக்கி முறுவலித்துத்
தத்தித் தத்தி முடுகுற்றுத்
தனிமா முகில்போல் தவழ்ந்தேகி; 79

நம்மாழ்வாரின் திருக்கோலம்

ஒப்பில் பெருமான் கோவில்புறத்
துற்ப வித்த திருப்புளிக்கீழ்
வைப்பென் றமரர் புகழ்ந்தேத்த
மருவி மகிழ்வோ டினிதிருந்து
செப்பற் கரிய பொருளுணர்த்தும்
திருமெய்ஞ் ஞான முத்திரையை
நட்பில் வலப்பாற் கரங்காட்ட
நவில்செங் கரத்தை மடியிருத்தி; 80

பாரோர் வியப்பின் மயமாகப்
பதும மலர்க்கண் விழியாமல்
ஏரார் மவுனக் குகையின்கண்
எய்தா வாக்கி னைச்செலுத்தி
ஓரா உணரா நம்பெருமான்
ஒருகால் வருவா னோவெனவோ
சீரார் தென்றல் முகம்வருடத்
தெற்கு முகமாய்த் திகழ்ந்திருந்தான். 81

---

79. உடனே மகிழ்மாறர், அருகுளோர் வியப்பத் தவழ்ந்து சென்று திருப்புளிக்கீழ் அமர்ந்தார். கைத்து - கசந்து (நல்லவர்க்கு இப்படி நேர்ந்ததே என்று).

80, 81. தேவர்கள் க்ஷேமநிதி என்று புகழ, இனிதே யமர்ந்து சொல்லுக்கடங்காத பொருளைக் காட்டும் முத்திரையை வலக்கரங் காட்ட, இடக்கரத்தை மடியில் இருத்தி, உலகத்தவர் வியப்பே வடிவமாய் இருக்க, கண் விழியாமல் மவுனமாகிய குகையிலே வாக்கை வைத்துவிட்டுத் திருமாலின் வருகையைக் கருதித் தென்திசை நோக்கியபடி இருந்தார் (நம்மாழ்வார்). வைப்பு - க்ஷேமநிதி.

இரு முதுகுரவரும் பிரியாதிருந்தனர்

கருதற் கரிய தவக்கோலம்
கண்ட காரி மாறனும்கார்
மருவு வண்ணக் குழற்செங்கை
மடவாள் தானும் அந்நாளில்
பொருவில் கனவிற் பகர்ந்தபடி
போந்த நாரா யணன்என்றே
இருளில் நெஞ்சிற் றெளிவெய்தி
யென்றும் பிரியா திருந்தனரால். 82

மதுரகவியின் வரலாறு

இங்கனம் இன்னவர் இருக்கு நாளிடை
சங்கையில் பகிரதன் தவத்திற் றோன்றிய
கங்கையா டிடச்செலும் கனத்த மாதவ
மங்கலத் தணுகிய மதுர கவியரோ. 83

"ஈசனை யிலங்கு சோதியை எந்தையை எனக்கு எய்ப்பினில் வைப்பை" என்பர் திருமங்கைமன்னர். ஞானமுத்திரையின் சிறப்புப் பேசப்படுகிறது. வடிவழகிய நம்பிதாசர் "வேத முடிவினைப் பிடித்த ஞான முத்திரை" என்பர் (ஆளவந்தார் வைபவம்). "மும்மலம் வேறுபட்டொழிய மொய்த்து உயிர், அம் மலர்த்தாள் நிழலடங்கும் உண்மையைக் கைம்மலர்க் காட்சியில் கதுவ நல்கிய, செம்மலை அலதுளம் சிந்தியாதரோ" என்பர் கவிராட்சசர் கச்சியப்பமுனிவர் (திருவாளைக்கா புராணம்). தென்திசை நோக்கும் பெரியார் இருவரும் ஒருவரே. மரந்தான் வேறு. ஒன்று ஆலமரம்; இன்னொன்று புளியமரம். இரு ஆசிரியர்களும் இளைஞர்கள். மாணாக்கர்கள் வயது முதிர்ந்தவர்கள். இருவரும் உபதேசித்தது ஒன்றையே. முதலாழ்வார் பாசுரம் நோக்குங்கள்.

82. மகிழ்மாறரின் தவக்கோலம் கண்ட தாய் தந்தையர்கள் நம் செல்வன் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி என்னும் உண்மையை உணர்ந்து தெளிவடைந்து அவரைப் பிரியாமலிருந்தனர்.

இனி, மதுரகவியாழ்வாரின் வரலாற்றைப் பேசுகிறார். மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய்த் தொழுபவர்க்கு நல்ல குரு வாய்ப்பது உண்மை. மதுரகவியார்க்கு நம்மாழ்வார் குருவாய் அமைந்த வரலாறு சுவை மிக்கது.

83 — 93. மதுரகவிகள் ஒரு நாள் தெற்குத் திசையில் பேரொளி ஒன்றைக் காண்கின்றார். அதனை நோக்கி யாத்திரை மேற்கொண்டார். யமுனையை அடைந்தார். வேங்கடம் உற்றார். திருவரங்கத்துக்கு வந்தார். திருமாலிருஞ் சோலைமலையை எய்தினார். மதுரையைச் சேர்ந்தார். ஸ்ரீவில்லிபுத்தூரைப் பணிந்தார். ஸ்ரீவைகுண்டம் கண்டார். குருக்கை மாநகரை அணுகி அங்கே அவ்வொளி திருப்புளியில் அடங்குவதை நோக்கினார்.

83. சங்கையில் பகிரதன் தவம் - எண்ணமுடியாத பகீரதனின் தவம். மங்கலத்து - சிறந்த பண்பால். அணுகிய - இறைவனைக் கிட்டிய.

மதுரகவியார் சோதி கண்டார்

ஓர்தினம் தெக்கண முவந்து நோக்கலும்
பார்மிசை யிருந்துபல் கோடி கோடியாம்
சூரிய ராமெனத் துலங்கி யோங்கிடும்
பேரொளி விண்மிசை பிறங்கக் கண்டனன். 84

சோதியைத் தொடர்ந்தார் - யமுனை உற்றார்

கண்டுள மதனிடைக் கலக்க நெஞ்சகம்
கொண்டதை யறிகுவம் என்னும் கொள்கையால்
தெண்டிரைக் கங்கையை நீத்துச் சேந்தநெய்
உண்டமா தவனுறை யமுனை யுற்றனன். 85

வேங்கடம் பணிந்தார்

தீங்கட லெண்ணியச் சிறுமை செய்தவர்
தாங்கடை தேறவே சார்ந்து காத்தவன்
வேங்கட மெய்தியே விரும்பிப் போற்றினன்
தேங்கட மாலினின் னருளைத் தேக்கினான். 86

திருவரங்கம் சேவித்தார்

கரங்களாற் பணிந்துளங் கசியுந் தொண்டர்போல்
கரங்களா லேற்றியே கனியும் பொன்னிசூழ்
அரங்கமா நகரினை அன்பின் உற்றனன்
அரங்கமாய் வளர்மனத் தாசை பொங்கவே. 87

---

84. மதுரகவி சோதியொன்றைக் கண்டார். தெக்கணம் - தெற்குத் திசை. கோடி கோடியாம் சூரியர் - எண்ணற்ற சூரியர்களைப் போல. பிறங்க - விளங்க.

85. ஒளியைத் தெரிந்துகொள்ள விரும்பிய மதுரகவிகள் கங்கை நதியை நீங்கிக் கண்ணன் உறையும் யமுனையை அடைந்தார். தெண்டிரை - தெளிந்த அலை. நீத்து - நீங்கி. சேந்தநெய் - சிவந்தநெய். "செறிநறுந் தயிரும் பாலும் வெண்ணெயும் சேந்த நெய்யும்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (பால காண்டம்).

86. மதுரகவிகள் திருவேங்கடம் அடைந்தார். தீங்கு - தாம் செய்த தீச் செயலின் பயனை. அடல் எண்ணி - அழிக்கக் கருதி. சிறுமைசெய்தவர் - கீழான செயல்கள் செய்தவர். கடைத்தேற - ஈடேற. தேம் - இனிய. கடம் - கடோப நிஷதத்தில் புகழப்படுகிற. மால் - திருமால். கடோபநிஷதத்தில் "புருஷன்" என்றது, மகாவிஷ்ணுவையே.

87. மதுரகவிகள் திருவரங்கத்தை உற்றார், தொண்டர்களைப் போலக் கரங்களால் வருடிக் கனியும் காவிரி சூழ்ந்த திருவரங்கம். அரங்கமாய் - சபையாக. கரங்கள் - அலைகள். "திரைக்கரத்தால் அடிவருட" என்பர் குலசேகரர்.

அழகரைப் போற்றினார்

காலையும் மாலையுங் கனிந்து தேவர்சூழ்
சோலையம் பொருப்பினைத் துன்னி யன்புடன்
பாலையுந் தயிரையும் பாடி யில்நுகர்
மாலையவ் வழகரை வணங்கிப் போற்றினான். 88

கூடலழகரைப் பரவினார்

பாடலும் மனைதொறும் பந்தொ டம்மனை
ஆடலும் அணைமிசை யணையு மன்பரோ
டூடலும் மலிந்தசீர் மதுரை யுற்றுப்பொற்
கூடலின் அழகன்தாள் குறுகிப் போற்றினான். 89

வில்லிபுத்தூர் மேவினார்

மிகுந்தவத் துயரினை மேவி டாதுநல்
வகுந்தினை யருள்வட பத்ர சாயிவான்
புகுந்திருப் பாதமும் புகழ்ப்பல் லாண்டினாற்
சுகந்தரு பதங்களுந் தொழுது வாழ்த்தினான். 90

வைகுண்டக் கள்ளபிரானை வாழ்த்தினார்

இரும்பொழிற் காரிரு ளெறிந்தி டுந்திரை
பெருந்திரு மணிகளால் பிறங்கு சீர்பெறும்
திருந்துநற் பொருனையைச் சேர்ந்த மாநகர்
வருங்களப் பிரானடி வணங்கி வாழ்த்தினான். 91

---

88. மதுரகவிகள் திருமாலிருஞ் சோலைமலையை அடைந்தார். சோலையம் பொருப்பு - திருமாலிருஞ் சோலைமலை. பாடியில் - ஆயர்பாடியில்.

89. மதுரகவிகள் மதுரையை உற்றார்; பாடலும், அம்மனை ஆடலும், அன்பரோடு ஊடலும் மலிந்த மதுரை என்க. அழகன் - கூடலழகர். தாள் - திருவடி.

90. ஸ்ரீவில்லிபுத்தூரை அடைந்தார். மிகும் தவத்துயரினை மேவிடாது, நல்வகுந்தினை யருள் வடபத்ரசாயி. தவத்துயர் - தவஞ்செய்தலாகிய துன்பம். நல்வகுந்து - நல்வழி. "வகுந்துசெல் வருத்தத்து வழிமருங் கிருப்ப" என்பது சிலம்பு. (இங்கே நல்வழி என்றது, சரமஸ்லோக நெறியை.) வான்புகும் திருப்பாதம் - வானையளந்த திருவடி. பல்லாண்டினால் - திருப்பல்லாண்டு சேவித்தால்.

91. ஸ்ரீவைகுண்டம் அடைந்தார். காரிருள் - கரிய இருட்டை. எறிந்திடும் - போக்குகின்ற. மணிகளால் சீர்பெறும் பொருநை என்க. பொருனை - தாமிரபரணி. மாநகர் - ஸ்ரீவைகுண்டம். அப்பெருமானின் திருநாமம் கள்ளப்பிரான்.

தகவுறும் தனியிடஞ் சார்ந்துள் ளன்பொடும்
அகமறப் பொருநைநீ ராடித் தென்கரை
சகமெலாம் வியப்புறத் தயங்கு மாடமேல்
முகில்தவழ் குருகைமா நகரம் முன்னினான். 92

மதுரகவியாழ்வார் கண்ட சோதி

நாடியா யிரம்பண ரேந்தி நாடொறும்
பாடுற உயருபு படர்ந்து மீதெழும்
பீடுறு புளியினிற் ப்ரகாச மொன்றியே
ஆடலார் பொந்தினு ளடங்கக் கண்டனன். 93

கண்டுளங் கனிந்துநின் றவர்க்குக் காசினி
உண்டவன் திருவருள் உவப்பின் நல்கலும்
பிண்டமாம் வினையறப் பிரதெக் கணம்புரிந்
தண்டரும் எய்திடா அகமுற் றானரோ. 94

வலம்புரி காலையில் வடபு றத்தினில்
இலங்குறு கண்களா லினிது நோக்கலும்
துலங்குறப் பொலிதவச் சோதிக் காதியை
நலங்கெழு புளியுளே நாடிக் கண்டனன். 95

---

92. பொருநை நதியில் நீராடி விட்டு, மாடத்தில் மேகம் தவழும் நகராகிய திருக்குருகையை அடைந்தார். சகமெலாம் - உலகம் முற்றவும். சகமெலாம் வியப்புற என்ற அடைமொழியால் ஈண்டு முகில் என்றது திருமாலை. மற்றைய ஆழ்வார்கள் தலந்தோறும் சென்று பாடினர். நம்மாழ்வாரிடம் இறைவன் வந்து பாடல் பெற்றுச் சென்றான். ஆதலால் முகில் என்பது குறிப்பால் திருமாலை உணர்த்திற்று. நம்மாழ்வார் தாலாட்டில், "சிலைக்கோல நெற்றித் திருமாது கேள்வர்—இலைக்கோ ரொருவராய் என்னைப்பா டென்னைப் பாடு — என்னத் தமக்கேற்ற எம்பெருமாள் யாவரையும் — பன்னத் திருப்புளிக்கீழ்ப் பாடியுவப் பாக்குவித்து" எனப் பாடப்பட்டுள்ளதை நோக்கி மகிழ்க.

93. கங்கைக் கரையில் கண்ட ஒளி திருப்புளியின் பொந்திலே மறைவதைக் கண்டார் மதுரகவிகள். ஆயிரம் பணர் - ஆயிரம் கொப்புகள். பாடுற - பெருமை உண்டாகும்படி. உயருபு - உயர்ந்து. ஆடல் - வெற்றி.

94. இறைவன் மதுரகவிகட்கு ஞானம் வழங்கினான். உடனே வினைகள் நீங்கின. மதுரகவிகள் கோவிலை வலம் செய்தார். காசினி - உலகம். பிண்ட மாம் வினை - தொகுப்பாக இருக்கின்ற வினைகள். அகம் உற்றான் - மன ஒடுக்கம் பெற்றான். "உள்ளிக் கெடுத்து இறை உள்ளில் ஒடுங்கே" என்பர் சடகோபர்.

95. மதுரகவிகள் கோவிலின் வடக்குப் பக்கத்தில் தான் கங்கைக் கரையில் கண்ட சோதிக்கு மூலப் பொருளைக் கண்டார். புளியுள் - புளிய மரத்தின் பொந்துக்குள்.

இந்தசிற் றிடந்தனில் எங்கும் யாவுமாய்
அந்தநற் பராபரன் அடைந்து ளானெனச்
சிந்தையுட் டெளிந்திடத் தேர்ந்து காதலால்
வந்தவ ணிருந்துளோர் வதனம் நோக்குபு; 96

மதுரகவிகள் வினா

ஈங்குறும் அதிசயம் ஏது? கூட்டமாய்
நீங்களெல் லோர்களும் நின்று நோக்கல்என்?
பாங்குற விழைந்திடாப் பரமன் யாவனோ?
ஆங்கதை விளம்புமென் றன்பின் ஓதினான். 97

காரிமாறன் விடை

நீரிய னுரைத்தசொல் நெறியிற் கேட்டவர்
ஆரியர் திலகநீ யறிதி யாலெனா
மாரியிற் பொழிகர வள்ளல் மாதவக்
காரிமா றனுமெதிர் கழறல் மேவினான். 98

புத்திர னிலாமையாற் புந்தி நொந்தழும்
பத்தினி யுடனடி பேணிப் பற்றுடன்
எத்திசை களும்புகழ் எழிற்கு றுங்குடி
அத்தல மதனிடை யணுகிப் போற்றினோம். 99

---

96. 'எங்கும் எல்லாப் பொருள்களுமாய் இருக்கும் பரம்பொருள் இந்தச் சிறிய மரப்பொந்துள் அடைந்துள்ளது' என்று தெளிந்தார். பக்கத்தில் இருப்பவரைப் பார்த்துத் தம்முடைய ஐயங்களை வினா ஆக்கினார். உய்வான் - உய்யும்பொருட்டு. அலண் - அவ்விடத்தில். வதனம் - முகம். நோக்குபு - பார்த்து.

97. அதிசயம் யாது? நீங்கள் எல்லாம் பார்ப்பது எதனை? பக்கத்தில் ஒன்றையும் விரும்பாதவர் எவர்? விளம்புங்கள் என்று மதுரகவிகள் கேட்டனர். அதிசயம் - ஆச்சரியம். ''அடிகள் இவ்வழிப் போந்த அதிசயம் அறியேனே!'' என்பது தேவாரம்.

98. காரிமாறர் மதுரகவிகட்கு விடை வழங்கினார். 'ஆரியர் திலகனே! நீ அறிக' என்று விளித்துப் பேசத் தொடங்கினார். மாரியில் - மழையைப் போல. கழறல் - கூறுதல். மேவினான் - மேற்கொண்டான்.

99. புத்திரனில்லாத குறையால் நொந்து பத்தினியுடன் குறுங்குடிப் பெருமானைப் போற்றினோம்.

அருந்தவ மிழைத்திட வந்தக் கங்குலில்
பொருந்துறக் கனவினிற் புகுந்து மாதவன்
திருந்துறு புதல்வரிச் செனனத் தில்லையால்
வருந்தியெம் மிடந்தனில் வந்து வேண்டினீர்; 100

ஆதலா லுமதிடத் தன்பு கொண்டுயாங்
காதல னாகுவங் கருத்து ளுற்றிடும்
வாதனை தீர்ந்துமா நகர மன்னுமென்
றோதினான் மகிழ்வொடிவ் வூர்வந் துற்றனம். 101

உற்றபின், என்மனை ஒருசு தன்றனைப்
பெற்றனள்; அன்னவன் பேச லுண்ணுதல்
அற்றனன்; மலசலம் யாதும் கண்டிலோம்;
மற்றுமன் பிலாமலே மவுனி யாயுளான். 102

மாசிலா அன்புளாய்! வைய மீதுறப்
பூசுரர் பெருந்தவம் பொருந்திற் றாதலால்
கூசியாம் எம்தவக் குலமு றைப்படி
வாசியார் சீருடை மதலை யைக்கொடே; 103

---

100. அரிய தவத்தைச் செய்தோம். கனவில் திருமால் தோன்றி, இப் பிறப்பில் உங்கட்குக் குழந்தையில்லை; வருந்தி வரங் கிடக்கின்றீர். செனனத்து - பிறப்பில்.

101. ஆதலால், யாமே உமக்குப் புதல்வனாகப் பிறப்போம்; உங்கள் நகருக்குச் செல்லுங்கள் என்று (திருமால்) ஓதினான். எங்கள் ஊர் வந்து சேர்ந்தோம். காதலன் - மகன். "கொழுநன் கைத்தலம், காதலன் கைத்தலம், அன்றிக் கன்றின் வால், ஆதலிம் மூன்றிலொன்று அங்கை பற்றி நீராடுதல் மரபு" என்பர் பரஞ்சோதியார். வாதனை - கவலை.

102. வந்தபின் என் மனைவி ஒரு மகனைப் பெற்றாள். அவன் பேசலும் உண்ணுதலும் அற்றான். மலசலம் யாதும் கண்டிலோம். மவுனமாகவே உள்ளான். இங்கே நம்மாழ்வார் தாலாட்டைப் பார்க்கவும்.

"பாலுண்ண வில்லை, பசித்தழவோ தானுமில்லை;
மேலுண்பான் என்றால் விழியும் திறக்கவில்லை;
உச்சி குளிரவில்லை; உள்ளங்கால் வேர்க்கவில்லை;
அச்சங்கை யுண்டாம் அரிவையரிங் கெய்தவில்லை"

என்று நயம்படப் பாடப்பட்டுள்ளது.

103, 104. அந்தணர் தவம் பலித்தபடியால் அவன் நிலைகண்டு அஞ்சிய யாங்கள் எங்கள் குலதர்மப்படி எம் புதல்வனை, ஆதிநாதன் முன்பு வைத்தோம். பூசுரர் - அந்தணர். கூசி - அஞ்சி. "கூசின அல்ல பேச நாணின" என்று கவிச்சக்ரவர்த்திகள் குறிப்பர்.

செம்மலே! எம்துயர் தீர்த்தி நீயென
இம்மகன் றன்னொடும் எய்தி யாம்மிக
விம்மலுற் றழுதருள் வேண்டிச் செப்பியே
மைம்முகில் மாதவன் முன்பு வைத்தனம். 104

வைத்தலும் சீரிய மதலை யாங்கணே
சத்துவம் பொலிவுறத் தவழ்ந்து சென்றிவண்
இத்திறம் நிட்டையி லிருந்த திவ்வணம்
புத்திர ரிருப்பதிப் புவியு லுண்டுகொல்! 105

அன்றுதொட் டின்றள வாக ஆண்டுகள்
சென்றன எட்டிரண் டிதனைத் தேர்ந்திட
என்றுமிங் கெய்துவர்; இவர்கள் யாவரும்
ஒன்றியே காணவந் துற்று ளோர்களாம். 106

தேன்றுளி துளவணி செங்கண் மாயவன்
யான்றவ மிழைத்ததற் கமைய என்மனை
யீன்றவிம் மதலையா மென்று வெம்பினோன்
சான்றுளோ னுணர்ந்திடச் சாற்றி னானரோ. 107

மதுரகவிகள் வினாவும் ஆழ்வார் விடையும்

அன்னது கேட்டதும் அருளின் ஆழியாய்
மன்னுமாழ் வார்மருங் கெய்தி மாண்புறக்
கன்னமாங் கிரண்டினிற் கதுமெ னப்புகத்
துன்னிட வெடுத்திது சொல்ல லுற்றனன். 108

---

105. வைத்தவுடனே குழந்தை தவழ்ந்து சென்று இப்படி நிஷ்டையில் இருக்கிறான். இப்படிப் புத்திரர் இருப்பதைப் பூமியில் கண்டதுண்டோ? சத்துவம் - சத்துவ குணம்; முக்குணங்களில் ஒன்று. சத்துவ குணத்தின் தன்மை எட்டாகும். அவை: ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மோனம், மேன்மை, நயம், பொறியடக்கல், அருள் ஆமே'' என்று பொருட்டொகை நிகண்டு பேசும்.

106, 107. 16 வருடங்கள் கடந்துவிட்டன. இதனைக் காணவே மக்கள் வருவது வழக்கம். இவர்கள் யாவரும் அதிசயம் காண வந்தவர்களே. மாயவன் அருளால் யான் செய்த தவத்தால் என் மனைவி பெற்ற மகன் இவன் என்று மதுரகவிகள் உணரக் (காரியார்) கூறினார். மதலை - மகன். வெம்பினோன் - மனம் வருந்திய காரியார்.

108, 109. அம் மொழி கேட்ட மதுரகவிகள் ஆழ்வார் பக்கல் எய்தி, அவர் செவியிற் படும்படி, ''செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று

சிற்றிதின் வயிற்றினிற் சிறிய தாயதொன்
றுற்றிடி லெதனைத்தின் றுறையும் எவ்விடம்
மற்றிது புகலென மதுர மாக்கவி
சொற்றலு மவன்விடை சொல்லி னானரோ. 109

தெய்வம் நீயே எனப் பணிதல்

எத்தைத்தின் றெவ்விடம் இருக்கும் என்றனை
அத்தைத்தின் றங்கனே அமையும் என்றுயர்
உத்தரஞ் சொல்லலும் ஒப்பில் வேதியன்
சித்தமுள் ளுறைந்திடும் தெய்வம்நீ என்றான். 110

(வேறு)

படியின் மீதினில் — வடிவு கொண்டருள்
அடிகள் மீதுதன் — முடிய ணிந்தனன். 111

காரி மாறனும் — பாரி நங்கையும்
சேரு மானந்த — வாரி மூழ்கினார். 112

போரி யங்குகோ — ளூரில் வந்தருள்
சீரி யோனுமுள் — வாரி யாயினான். 113

எங்கே கிடக்கும்'' என்று வினவினார். அருளின் ஆழியாய் மன்னும் - கருணைக் கடலாய் நிலைபெற்ற. கன்னம் - செவி. கதுமென - வேகமாக. சிற்றிதின் - சிறியது - செத்தது.

110. ''எத்தைத் தின்று எங்கே கிடக்கும் என்று வினாவினாய். அத்தைத் தின்று அங்கே கிடக்கும்'' என்று ஆழ்வார் உத்தரம் சொன்னார். கேட்ட வேதியன் 'தெய்வம் நீ' என்று கூறினான்.

செத்தது - பிரகிருதி (உலகம் - உடல்). சிறியது - ஆன்மா. எத்தைத் தின்று - எதை அனுபவித்து. எங்கே கிடக்கும் - எங்கே இருக்கும் (வினா). அத்தைத் தின்று - அப் பிரகிருதியை அனுபவித்து. அங்கே கிடக்கும் - அந்தப் பிரகிருதியிலேயே வாழும் (விடை).

நம்மாழ்வாரைக் கண்டதும் மதுரகவிகள் ''இச்சோதியோ என் இதயம் உருக்கியது; முச்சோதியினும் முழுச்சோதி என்றிறைஞ்சினார்'' என்று பேசியதாகத் தாலாட்டுக் கூறும்.

111. மதுரகவிகள் நம்மாழ்வாரின் திருவடிகளில் முடியை அணிந்தார். படி - பூமி.

112. காரி மாறனும் உடைய நங்கையாரும் மகிழ்ந்தனர். பாரி - மனைவி. ஆனந்தவாரி - மகிழ்ச்சிக்கடல்.

113. கோளூரில் அவதரித்த மதுரகவிகளும் மனம் கடலெனப் பூரித்துப் பொங்கினார்.

மன்னு மன்பினான் — தன்னை யீன்றவர்
உன்ன ருங்களி — துன்ன ஓதுவான். 114

மதுரகவிகளின் புகழுரை

ஒப்பி லாப்பரம் — குப்புற் றெய்தநீர்
செப்பருந் தவம் — நட்பிற் செய்துளீர். 115

பொங்கு மாழியில் — அங்கு பாலனாய்த்
தங்கு மாதவன் — இங்கு வந்தனன். 116

ஊசி யின்மிசை — நேச மோடிருந்
தாசில் நற்றவம் — தேசிற் செய்துளீர். 117

பூர ணன்றனைச் — சீரிற் பெற்றுளீர்
நேர தாகினோர் — பாரி லில்லையால். 118

நன்று செய்துளீர் — ஒன்று மஞ்சலீர்
என்று ரைத்துணர்ந் — தன்று வைகினான். 119

.... — ....
.... — 120

.... — ....
.... — 121

---

114 — 119. தம்பதிகளைப் பார்த்து, "நீங்கள் பரம்பொருளே புதல்வனாக வரத் தவம் செய்துள்ளீர்கள். கடலில் உறங்கும் மாயனை மகனாகப் பெற்றுள்ளீர்கள். ஊசியின் மேலே நின்று தவம் செய்திருக்கின்றீர்கள். பூரணனை மகனாகப் பெற்றுள்ளீர்கள். உங்கட்கு நிகரானவர்கள் இல்லை. அறம் செய்திருக்கின்றீர்கள் என்று கூறினார்.

115. குப்புற்று - குதித்து. அவதாரம் செய்யும் இடத்தைக் குதித்த இடம் என்பது வைணவ மரபு.

116. ஆழியில் பாலனாய் என்றது, இறைவன் யுகமுடிவில் கொண்ட கோலத்தை. (120 — 121. பாடல் வரிகள் செப்பம் செய்ய முடியவில்லை).

இங்கு, தாலாட்டு, நம்மாழ்வாரைப் பார்த்து, "கரிய திருமேனி எங்கே? கை நான்கில் இரண்டெங்கே? பெரிய திருவுந்தியினில் பெற்ற பிரமனெங்கே? பாகத்தில் வாழும் பரசுதரித்தோன் எங்கே? ஆகத்தில் வாழும் அலர்மேல் மடந்தையெங்கே? அண்டமுண்ட செவ்வாய் அரவிந்தப் பூ விதுவோ? பண்டகிலம் ஏழும் பரந்தளந்த தாளிதுவோ? ஆலம் தளிரில் அடங்கும் வடிவிதுவோ? சீலம் பலவுந் தெளிந்துணரக் கூடுமோ" என்று மதுரகவிகள் பேசியதாகக் கூறுகிறது.

சிவனு நான்முகத் — தவனு மேத்துமா
தவனிவ் வாறதாய் — புவன மெய்தினான். 122

காத லாலினி — வேத மாவதை
ஓது வான்றமிழ் — போத மாகவே. 123

என்ன வேயுளத் — துன்னி யங்கதை
முன்னர் நாளரி — சொன்ன வாறினே. 124

மதுரகவிகள் பட்டோலை பிடித்தார்

சட்ட மோடுகை — தொட்டுப் பண்புடன்
பட்டி னோலையைக் — கிட்டி யேந்தினான். 125

மதுரகவிகள் விண்ணப்பம்

அம்மா றன்றன் அருகினில்வந்
தழகார் நான்கு புயம்மறைத்து
இம்மா நிலத்தை மேன்மேலும்
இனிதாய் உயர்த்த வேண்டுமென
நம்மாழ் வாராய்ப் புவியுற்றாய்!
நாரங் களினுள் ளுறுபொருளே!
தம்மா மனத்தி லுணராமல்
சலிக்கின் றார்கள் இவரெல்லாம். 126

மாய்கை யியற்று மகிமையதால்
மண்ணில் தோன்றும் ஆன்மாக்கள்
தாயி னகமுற் றிடுமனிதன்
சகத்தை உணராத் தன்மையைப்போல்

122—125. திருமாலே புவியில் வந்துள்ளான். இனி, வேதம் ஓதுவேன் என்று முன்பு திருமால் சொன்னதை மதுரகவிகள் நினைந்து ஆழ்வார் பக்கம் சென்று பட்டோலை ஏந்தினார்.

126 — 127. மதுரகவிகள் ஆழ்வார் புக்கல் வந்து, நான்கு புயம் மறைத்து உலகை உயர்த்த நம்மாழ்வாராய் வந்து தோன்றினீர்! ஆன்மாக்கள்தோறும் வசிக்கும் பரமனே. இம் மனிதர்கள் சலித்துள்ளனர். மாயையின் மகிமையால் திருமாலையே மறந்தனர். உபதேசம் வழங்குக என்று கூறினார்.

நாரம் - நித்தியப் பொருள்கள் (உயிர், உலகு முதலானவை). 'ர' என்ற சொல்லிற்கு அழிவுள்ளது என்பது பொருள். நகாரம் அதை மறுக்கிறது. ஆக இரண்டு சொற்களும் சேர்ந்து அழிவற்றது என்ற பொருளைத் தரும் (செம் பொருள் என்ற முமுட்சுப்படியை நோக்குக).

நேய முடையான் றனைமறந்தார்;
நிகரில் பெரியோய்! இப்போதே
ஆய வருக்குற் றுபதேசம்
அளிப்பாய் என்றான் கோளூரான். 127

பெருமாள் காட்சி வழங்கல்

எண்ணி யுளத்திற் கருடன்மிசை
ஏறி உலகம் உவப்பெய்தக்
கண்ணு தலும்பூ வுறைவோனும்
கரங்கள் கூப்பி மருங்குவர
விண்ண வரும்பூ வடிபணிந்து
விரும்பிப் போற்றக் கடல்சூழும்
மண்ணி லுறையும் சடகோபன்
மருங்கு வந்தான் மாயவனே. 128

நறவ வனமா லிகையணியும்
நலமார் மகுடந் தருசுடரும்
பறவை யினங்கள் தமக்கரசாய்ப்
பயிலும் பெருமான் விடமகற்றும்

தாயின் அகம் உற்றிடும் மனிதன் - தாயாரின் கர்ப்பத்தில் இருப்பவன். சகத்தை உணராத் தன்மைபோல் - உலகத்தை அறியாமல் இருப்பதைப் போல. "நெருப்பானது புகையினாலும், கண்ணாடி அழுக்கினாலும், சிசு கருப்பையினாலும் மூடப்பட்டிருப்பதுபோன்று, ஞானம் ஆசையினால் மூடப்பட்டிருக்கிறது" என்ற பகவத் கீதையைப் பார்க்க (ஸ்வாமி சித்பவானந்தர் மொழி பெயர்ப்பு). ஆன்மாக்கள் இறைவனை உணர முடியாத தன்மையை,

"அத்தியின் இன்கனி உள்ளுறை சில்உயிர் அத்தரு நேர்அறியும்
சத்தியிலா ததுபோல், உனதாகிய தத்துவம் உன்னிடை உற்
பத்திய அண்டமெ லாம்உறை சங்கரர் பல்பிர மாதிகளால்
புத்தி செயற்கரியாய், அரியே! பரி பூரணனே நமவே"

என்று இருசமய விளக்கப் பாடல் விளக்கும்.

நான்கு புயம் மறைத்து என்ற இடத்தில்,

"சேமம் குருகையோ ? செய்யதிருப் பாற்கடலோ?
நாமம் பராங்குசமோ ? நாரணமோ ? — தாமம்
துளவோ ? வகுளமோ ? தோளிரண்டோ ? நான்கோ ?
உளவோ பெருமான் உனக்கு"

என்ற சங்கத்தார் பாடலை ஒப்பிட்டுக் காண்க.

128. அப்போது ஸ்ரீமந்நாராயணன் கருடாழ்வார்மேல், சிவபிரான் முதலானவர்கள் பக்கத்தில் வர, விண்ணவர்கள் போற்றச் சடகோபர் எதிரில் தோன்றினான். கண்ணுதல் - சிவபிரான். மருங்கு - பக்கம்.

சிறகி னொலியும் விசும்பிடையே
சிறப்பக் கரிய ஞாயிறென
உறலு மகிழ்மா றனுமிதெனோ
ஒலியென் றுறப்பிற் கண்விழித்தான். 129

இருகண் விழித்து நோக்குதலும்
எழிலார் கடலின் புனல்உண்ட
கருமா முகில்செந் தாமரையின்
கானம் மலர்ந்து தடித்திலங்கும்
பருதி யொடுவெண் மதியினொடும்
பலவா முடுவின் குலமுடனும்
உருமே றுடனுங் ககனமிசை
யொளிர்ந்திப் புவிக்க ணுறுவதுபோல்; 130

வயங்கு கங்கை தருபொற்றாள்
வதனம் இருகண் வாய்கரங்கள்
தயங்கு மகுடம் மணிக்குழைகள்
சங்கம் திகிரி வாள்தண்டம்
தியங்கு கதைபொற் பணிதியுடன்
சீரார் விசும்பில் மலர்பூத்த
கயங்கொள் எழிலோ டமலன்வரக்
கண்டு மாறன் களிப்புற்றான். 131

---

129. துழாய் மலரின் மணத்தாலும், கிரீடத்தின் ஒளியாலும், கருடனின் சிறகின் ஒலியாலும் நம்மாழ்வார் கண் விழித்தார். நறவம் - தேன். வனமாலிகை - திருத்துழாய் மாலை. பறவையினங்கட்கரசு - கருடன். விடம் சிறகின் ஒலியாலே நீங்கும் என்கிறார். கரிய ஞாயிறு — இல்பொருள் உவமை "கரு ஞாயிறு போல்பவர்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள். "நீலக் கரு ஞாயிறு சுடர் கால்வது போல், இருள்விரி சோதிப் பெருமான்" என்பர் அனுபூதியில் கண்ட சடகோபர்.

130. மேகம், தாமரைக் காடுகளைப் பூத்து, மின்னி, சூரியனையும் சந்திரனையும் ஏந்தி, நட்சத்திரக் கூட்டங்களுடன், இடியுடன் விண்ணில் இருந்து பூமியில் வருவது போலவும். தடித்து - மின்னி. "எல்லொளி மழுங்கத் தடித்து" என்பர் கவிவேந்தர் பரஞ்சோதியார் (திருவிளையாடல்). உடுக்குலம் - நட்சத்திரக் கூட்டம். உறுமேறு - ஆண்இடி.

131. திருவடியும், முகமும், கண்களும், வாயும், கரங்களும், மகுடமும், குண்டலங்களும், ஆயுதங்களும், ஆபரணங்களும் விளங்க ஆகாயத்தில் பூக்கள் பூத்த குளம்போல அமலன் வர நம்மாழ்வார் கண்டார். கயங்கொள் எழில் - பொய்கை பெற்றுள்ள அழகு. எம்பெருமான் திருமேனியை ஓவியமாக்கியுள்ளார். கங்கை தரு பொற்றாள். "கங்கையைப் பெற்ற பாதசாரியாய்க் கடிதின் வந்தான்" என்பது "கஜேந்திரமோட்சம்".

ஏரார் கோலந் தனைக்கண்டான்;
எதிர்சென் றாடிப் புவியுறவே
வேரா விதிரா அழலினிடும்
மெழுகா யுருகி யெதிர்நின்றான்;
ஆரா வமுதே! எனப்புகன்றான்:
அழுதான் சிரித்தான் பாடிட்டான்;
சீரார் மலர்ப்பூந் திருவடிக்கீழ்
சென்னி யிருத்தித் துதிசெய்வான். 132

நம்மாழ்வார் துதித்தல்

ஐயா! போற்றி! கருணைநிறை;
அத்தா! போற்றி! ஐம்படைசேர்
கையாய்! போற்றி! பேரன்பிற்
களித்தாய்! போற்றி! கருங்கொண்டல்
மெய்யாய்! போற்றி! வேதாந்த
விளக்கே! போற்றி! மாணிக்கப்
பையாய்! போற்றி! ஒப்பில்லாப்
பரமா! நின்பொற் பதம்போற்றி! 133

மாயா! போற்றி! மரகதமா
மலையே! போற்றி! செம்பவள
வாயா! போற்றி! மறைதேடும்
வடிவோய்! போற்றி! பாடிவளர்
ஆயா! போற்றி! விதிக்கு மறை
யறைந்தாய்! போற்றி! பூவையொடுங்
காயா மலர்மே னியா!போற்றி!
கருணா கரநின் கழல்போற்றி! 134

---

132. பெருமாளைக் கண்ட ஆழ்வாரின் மெய்ப்பாடு. கோலங் கண்டார்; ஆடினார்; வியந்தார்; நடுங்கினார்; உருகினார், ஆராவமுதே என்றார்; அழுதார்; சிரித்தார்; பாடினார்; துதித்தார்.

133 — 136. ஆழ்வாரின் தோத்திரம். பொருள் வெளிப்படை.

ஆழி மதித்த புத்தமுதை
யமரர்க் களித்தாய்! தொலையாத
ஊழி பலவாங் கோடிகளும்
ஒழியாய்! புகழ வாயில்லாத்
தாழி தனக்கும் உயர்வீடு
தந்தாய்! இடங்கர் வாய்ப்பட்ட
சூழிமா மதமா கரியினருந்
துயரந் துடைத்தாய்! பல்லாண்டு! 135

விண்ணி லுறையும் கடவுளர்கள்
மேவிக் காப்பாய் என்றுரைப்ப,
மண்ணி லயோத்தித் தயரதன்சீர்
மகவாய் உதித்தாய்! அருள்மீதிட்
டெண்ண லரிய கோடிகளாய்
இலங்கு மரக்கர் தமைக்காலற்
குண்ண அளித்த கோதண்ட
முடைய பரனே! பல்லாண்டு! 136

என்னப் பலவாம் செய்கைகளை
எண்ணி யெண்ணி மனங்குளிர்ந்து
பன்னி மகிழ்விற் றுதிசெய்து
பரமா! பரமா! தேனுண்டு
தென்ன தெனவென் றளிமுரலும்
சீரார் துளபம் பொலிமார்பா!
பன்னு மிதனைக் கேட்டியெனப்
பராங்கு சனுமீ துரைத்திட்டான். 137

---

135. இடங்கர் - முதலை. சூழி - முகபடாம். "சூழிமால் யானையான்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள்.

137. தென்ன என்றும் தெனா என்றும் வண்டுகள் ஆளத்தி (ஆலாபனம்) செய்யும். "ஆளத்தி செய்யுமிடத்துத் தென்னா என்றும் தெனா என்றும் இரண்டசையும் கூட்டித் தென்னாதெனா என்றும் பாடப்படும்" என்பர் அடியார்க்குநல்லார். "தென்னா தெனா என்று வண்டு முரல் திருவேங்கடம்" என்பர் சடகோபர். இங்கு நம்பிள்ளையின் விளக்கம் நயம் மிக்கது. கண்டு மகிழ்க. அளி - வண்டு.

கூவிக்கொள்

இந்த வுடலத் துடன்புவியில்
இந்நாள் காறு மிருந்தலுத்தேன்;
உந்த னடியைப் பிரிந்தடியேன்
உழன்றேன்; மாலே, இனியாற்றேன்;
வந்து மாயை தொடருமுனம்
வந்தே யெய்தத் துடிக்கின்றேன்;
அந்தப் பரம பதவுலகம்
அடைய விழைந்தேன் என்றனனே. 138

பெருமாள் விருப்பம் — வேதம் பாடுக

சீரின் மிக்க மொழிகேட்டுச்
சிவனோ டயனே முதலானோர்
பாரில் தவங்கள் புரிந்தாலும்
படிவம் தெரியாப் பரஞ்சுடராய்
வேரி மருவும் தீங்கனியாய்
வித்தாய் இலங்கி, வரையளித்த
நாரி விரும்பு முயர்ந்ததிரு
நாம முடையோன் இதைநவில்வான்: 139

உலகை எழுப்பும் கதிரவன்போல்
ஒளியார் மணிகள் கொழியாழி
இலகு திரைபோல் வரும்பிறவி
இடரால் உயிர்கள் வாடினகாண்

---

138. ஆழ்வார் விண்ணப்பம். திருமாலே இத்தனை நாள்கள் இந்த உடலுடன் இருந்து அலுத்துவிட்டது. உன் பிரிவால் உழன்றேன். மாயை என்னைப் பின்பற்றுமுன் உன்னை யடையத் துடிக்கின்றேன். பரமபதம் அடைய விழைந்தேன் என்றார் ஆழ்வார்.

139 — 142. சிவன் முதலானவர்கட் கெட்டாத பெருமாள் பேச்சு. உலக உயிர்கள் வாடுகின்றன. கருணையில்லாமல் "நான் பரமபதம் வருவேன்" என்றால், அவ்வுயிர்களை ஈடேற்றுபவர் எவர்? வேத முடிவின் கருத்தைத் தமிழ் மொழியால் நான்கு வருணத்தார்க்கும் கூறிய பின் வருக. இச்செயல் புரிவதற்கு முன் வருவது முறையன்று. மாயை வசப்படாமல் திருவாய்மொழியை வெளியிட்ட பின் வருக.

139. படிவம் - திருமேனி. வேரி - வாசனை. வித்து - விதை. விதையாகவும் தனியாகவும் இருக்கும் பிரான். வரையளித்த நாரி - உமாதேவி.

மலரு முளத்தாய்! அருளின்றி
வருவேன் என்னில் அக்கருமம்
தலமீ தன்பி னுடன்புரியத்
தக்கோர் எவரே சாற்றுவையால். 140

கோதில் வேத உச்சியினிற்
கூறு முடிவாம் பொருளதனை
நாத முறுசெந் தமிழ்மொழியில்
நான்கு வருணத் தவர்தமக்கும்
சாத னஞ்செய் யோகியர்கள்
தமக்கு மாகும் படியோதி
மாத வத்தின் பெரும்பயனை
மாந்தர் இனிதே பெறவுஞற்றி; 141

(வேறு)

வாய்மொழி வழங்கி வருக

மருவு மிச்செயல் புரிதற்கு முன்வரல் வழக்கன்
றருமை யாம்செயல் புரிகுதி; மாயையென் பதுதான்
இருமை யுங்கெடுத் தெய்திடும்; இதன்வயப் படாமல்
வெருவு றாமல்நீ வாய்மொழி வெளியிட்டு வருவாய்! 142

மாயம் வல்லவன் இன்னவா றியம்பி,வை குந்தத்
தேயும் ஆசையான் இப்புவி இருப்பனோ என்று
நேய மாய்வெகுண் டென்மொழி நீமறேல்; அருளின்
நாய கா!எனப் பகர்ந்தனன் நான்மறை முதல்வன். 143

---

140. அலைபோன்ற பிறவி. ஒரு அலை பின்னுமோர் அலையைத் தோன்றச் செய்யும்; அதுவும் அப்படியே செய்யும். இச் செயலுக்கு முடிவில்லை. இது போன்றதே பிறவியும். இதனை "வீசிதரங்க நியாயம்" என்பர்.

141. வேத உச்சி - வேத முடிவு (உபநிடதம்). நாதம் - இசைப்பாட்டு. உஞற்றி - செய்து.

142. வழக்கு - முறை. இருமை - இம்மை, மறுமை. வெருவுறாமல் - பயப் படாமல் வாய்மொழி - வேதம். "மாயா வாய்மொழி உரைதர", "வாய் மொழி ஓடை மலர்ந்த", "வாய்மொழிப் புலவ". என்றெல்லாம் பரிபாடல் கூறும்.

143. 144. திருமால், ஆழ்வார் நம் மொழியையும் மறுத்துப் பரமபதம் வர விரும்புவாரோ என்று "என் மொழியை மறக்காதே. அருளின் நாயகா" என்று

பந்தம் யாவையும் நீக்கிடும் பசியகார்க் கொண்டல்
இந்த வாறுரைத் தேகினன்; ஏகலும் கலங்கும்
சிந்தை யிற்றெளி வெய்தினன்; திருவுளங் களித்தேற்
றந்த மாறனும் அயர்வெலா மகற்றினன் அம்மா! 144

மாறன் பெயர்ந்திலன்

முன்பு தானமைந் திருந்துள முறைமையைத் தேர்ந்து
துன்ப மாமெனச் சொலும்பெருஞ் சாகரம் துறக்க
இன்ப மாமெனும் மரக்கலங் கொடுக்கவந் திடுதல்
பின்பு தானமைந் திடுதலால் பெயர்ந்திலன் மாறன். 145

நிலமி ருந்துமா மாயையை நீக்குதற் கரிதாம்
பலவு யிர்களும் படித்துநல் லுணர்வினைப் படைத்திட்
டலகின் மாதவத் தவர்களு மறியொணா வமலன்
உலக மேவியாங் குறையடி யார்களோ டுறவும்; 146

மாய னாருரை வழுவுறா தியற்றவும் மனதுள
நேய மாய்மறைப் பொருளினைத் தமிழ்செய்வா னினைந்திட்
டாய மாறனு மத்திருப் புளியிடை யமர்ந்து
தூய மாமது ரக்கவி சுடர்முக நோக்கா; 147

சினந்து கூறி மறைந்தான். திருமால் மொழிகேட்டு நம்மாழ்வார் அயர்வு அகன்றார். அயர்வு - தளர்ச்சி.

145. பரமபதத்தில் இருந்து மண்ணுலகிற்கு வந்ததே பிறவிக் கடலில் வருந்தும் உயிர்கட்கு இன்பம் என்கின்ற மரக்கலம் கொடுப்பதற்கே என்று அறிந்த நம்மாழ்வார் இருந்த இடம்விட்டுப் பெயரவில்லை. சாகரம் - கடல். துறக்க - கடக்க.

146, 147. ஆழ்வார் திருவுள்ளம். உலக மக்கள் படித்து நல்ல அறிவைப் பெறவும், அவர்கள் பரமபதம் அடைந்து நித்தியசூரிகள் தம்முடன் வாழவும், திருமாலின் கட்டளையை நிறைவேற்றவும், வேதப் பொருளைத் தமிழாக்கவும் நினைத்த ஆழ்வார் மதுரகவிகளின் திருமுகம் நோக்கினார்.

அமலன் - திருமால். உலகம் - பரமபதம். உணர்வு - ஞானம். "உணர்வாவ தெல்லாம் உடம்பின் பயனே — உணர்க வுணர்வுடையார்" என்பர் அவ்வையார். "ஓதி ஓதி உணரும்தொறும் உணர்ச்சி உதவும் வேதம்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள்.

வேதம் அவதரித்தது — இருக்கு வேதம்

நன்று நீயெழு துகவெனா நவின்றருங் கவியாய்
ஒன்று மாறுபொய் நின்றஞா னமும்பொல்லா வொழுக்கும்
என்றெ டுத்துயர் திருவிருத் தம்மென இருக்கில்
துன்று கின்றசா ரந்தனைத் துலங்கநூ றுரைத்தான். 148

யசுர் வேதம் — அதர்வண வேதம்

விரிவ தாமெசுர் வேதசா ரந்தனைத் திருவா
சிரிய மென்றெழு கவிதையாய்ச் செப்பினன்; அதன்பின்
பரிவி னோடதர் வணம்பகர் சாரத்தைப் பெரிய
திருவந் தாதியென் றெண்பத்தேழ் கவியதாய்ச் செய்தான். 149

சாம வேதம் — திருவாய்மொழியின் மாண்பும் கருத்தும்

செழியுஞ் சாமவே தத்தின்சா ரந்தனைத் திருவாய்
மொழியோ ராயிர நூற்றிரண் டோடுகவி மொழிந்தான்;
அழிவி, லாதுயர் பதவிசென் றணுகுறு வோர்க்கு
வழியெ லாங்குளிர் மரங்களே மல்கிட வம்மா! 150

அப்பெ ருந்திரு வாய்மொழி தனிலறைந் ததுவோ
இப்பெ ருங்கட லுலகெலா மீன்றுகாத் தழிக்கும்
முப்ப ரம்பொரு ளாகியும் முடியுமன் னாள்வாய்
ஒப்ப ருந்திருப் பாலனா யோருரு வமைந்தே. 151

---

148. 'மதுரகவிகளே! எழுதும்' என்று கூறிய ஆழ்வார் "பொய்ந்நின்ற ஞானமும்" என்று தொடங்கி, திருவிருத்தம் திருவாய் மலர்ந்தார். அது இருக்கு வேதத்தின் சாரம். இருக்கில் - இருக்கு வேதத்தில்.

149. எசுர் வேதத்தின் சாரத்தைத் திருவாசிரியமாய்ப் பாடினார் (7 பாடல்கள்). பிறகு, அதர்வண வேத சாரத்தைப் பெரிய திருவந்தாதியாகப் பாடினார் (87 பாடல்கள்).

150. சாம வேதத்தின் சாரமாகத் திருவாய்மொழியைத் திருவாய் மலர்ந்தார்; அதைப் பயில்பவர் செல்லும் இடம்தோறும் குளிர்ந்த மரங்களே செழித்திடும்படியாக.

151 — 155. இதனுள் திருவாய்மொழியின் கருத்தும், கண்ணபிரானின் எளிமை நினைந்து (ஆழ்வார்) ஆறுமாதம் மோகித்துக் கிடந்ததும் பேசப்படுகின்றன.

151 — 153. திருவாய்மொழியின் கருத்து. உலகம் யாவையும் படைத்துக் காத்து முடிவில் தன்னிடத்தொடுக்கும் திருமாலே பரம்பொருள். உடல் நிலை அற்றது. அத் திருமால் அடியவர்க்கு எளியவன்; பிறர்க்கு அரியவன்.

அடைய லைக்கடல் வண்ணமோ டயனரன் முதலாய்
அடைய வுந்தன துருவினுள் ளடக்கியோ ராலின்
அடைய டைந்திடு நாரண னேபர மவன்றாள்
அடைய வேண்டுமிவ் வுடலமோ நிலையிலா தழியும். 152

படிய ளந்தநா ளயனொடு பரமனும் பிறரும்
முடியொ டுங்கழற் றெரிவுற நோக்குதன் முடியா
நெடிய தாந்திரு விக்ரம வடிவநேர்ந் தவனோ
அடிய ராமவர்க் கெளியவன் பிறர்தமக் கரியான். 153

பரவு மப்பெரும் பராபரன் பாடியின் வளர்நாள்
கரவி னூடுநெய் பால்ததி பருகுதல் காணா
அரவ வல்குலி னாய்ச்சியர் வெகுண்டுவந் தடித்திட்
டுரலு டன்பிணித் திடவெவ்வா றுறைந்தனன் என்னா; 154

ஆழ்வாரின் மோக பரவசம்

தேறு ளந்தனி னினைதொறும் நினைதொறும் தியங்கா
கூறு தற்கருஞ் சோகமுட் கொளப்பொறா மையினால்
வேறு மோருரை விளம்புறா மோகமே விளங்கி
ஆறு திங்கள்தன் வாய்திற வாமலங் கிருந்தான். 155

---

152. அலை அடை கடல்வண்ணம் - அலைகள் வீசும் கடல் போன்ற நிறம். அடையவும் - முழுவதும். ஆலின் அடை - ஆலந்தளிர். பரம் - பரம்பொருள். அவன் தாள் - அவனுடைய திருவடியையே. அடைய வேண்டும் - சேர வேண்டும்.

153. உலகத்தைத் திருமால் பேருருக்கொடு அளந்தான். அவன் திருமேனியைப் பிரமன் முதலான தேவர்களும் அறியார். அத்தகைய அறப் பெரியவன் அடியவர்க்கெளியவன்; பிறருக்கு அரியன். படி - பூமி. பரமன் - சிவன். கழல் - திருவடி.

154 — 155. அத்தகைய பெரியவன் ஆய்ச்சியர் கையால் அடிபட்டதும் உரலில் கட்டப்பட்டதும் நினைந்து ஆழ்வார் மோகித்துக் கிடந்தார்.

154. பாடியின் - ஆயர்பாடியில். கரவினூடு - பிறரறியாதபடி. எவ்வாறு உறைந்தான் - எப்படிக் கட்டுப்பட்டுத் தங்கினான் ?

155. இறைவன் சுலபனான தன்மையை நினைந்து வேறொன்றும் பேசாமலிருந்தார். "பத்துடை யடியவர்க் கெளியவன்" என்று தொடங்கும் பதிகம் பாடிய ஆழ்வார் நிலையை விவரிக்கிறது. உட்கொளப்பொறாமையினால் - உள்ளே அடங்காமையால். விளம்புறா மோகம் - பேச முடியாத மோகம்.

தாயார் பாசுரம்

மீள வுந்தெளிந் தொருமுறை விளம்பியே தானோர்
வாள மைந்தகண் மடமங்கை யாகவும் வளர்முள்
தாள தாமரை மலர்மிசைச் சார்ந்துறை திருவை
ஆளு நாரணன் புருடனா கவுமுளத் தமைத்து; 156

கள்ள லம்புயைந் துளவவக் காகுத்த ரிடத்தில்
புள்ளி னங்களைத் தூதுதான் விடுவது போலும்
உள்ள மைந்தவா தனத்திடத் துறுவது போலும்
தெள்ளு செந்தமிழ்க் கவிபல செய்திடு மமைதி. 157

நூற்றெண்மர் காட்சி வழங்கல்

ஒளிய ரங்கமே முதலநூற் றெண்பதி யுறையும்
துளிம துக்கமழ் துளவணி மாலைமார் பினரும்
களிது லங்கவக் கவிகளைக் கேட்குதல் கருதிப்
புளியென் றோதுமத் தருவரு கினிற்பொருந் தினரால். 158

பனுவல் பாடுமின்

பின்ன ருங்களி துலங்கிப்பற் பலவிதம் பெறவே
மன்னு மாறன்முற் றுணர்ந்தவ னாமென மனதுள்
உன்னி நன்குணர்ந் துகந்துகந் துருகுறப் புகழ்ந்து
பன்னு செந்தமிழ்ப் பனுவல்கள் பாடுமின் என்றும்; 159

---

156 — 157. ஆழ்வார் பெருமாளைப் பிரிந்து ஆற்றாமையால் தாயார் பாசுரம் பாடியது பேசப்படுகிறது. தான் மங்கையாகவும், நாரணன் புருடனாகவும் அமைத்து, பறவை முதலானவற்றைத் தூது விடுவது போலவும், காதலால் வருந்துவது தனக்குத் தகுதி என்பது போலவும் கவிதைகள் புனைந்தார்.

156. புருடன் - காதலன்.

157. காகுத்தன் - திருமால். உறுவது - தகுதி "உறுவதாவது நீள்குடக் கூத்தனுக் காட்செய்வதே" என்று திருவாய்மொழி பேசும் "ஞானத்தில் தம் பேச்சு, பிரேமத்தில் பெண் பேச்சு" என்று ஆசார்ய ஹ்ருதயம் பேசும். (திருவாய்மொழியின் கருத்தைக் கூறுகின்றார்.)

158. ஆழ்வார் பறவை முதலானவற்றைத் தூதாக விட்டதும், நூற்றெட்டுத் திருப்பதியிலும் வாழும் இறைவர்கள் நம்மாழ்வாரின் பாசுரங் கேட்பதற்காகத் திருப்புளியடியில் வந்து தங்கினர்.

159 — 160. காட்சி தந்த எம்பெருமான்கள், ஆழ்வாரைப் பன்முறை புகழ்ந்து பாசுரம் பாடுமின் என்றனர். பனுவல் - நூல் "பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாக" என்பது நன்னூல். உடனே ஆழ்வார் இறைவன் இன்பம் தருபவன் என்பதை உணர்ந்தார்.

கனையு மாகடல் கடைந்தெழு மருந்தைமோ கினியாய்
நனைகொள் கற்பக நாடருக் களித்தரு ணாதன்
நினைவு றும்பொழு தேநெடி தாம்பல வின்பந்
தனையு ளங்களி துளங்கிடத் தருகுவ னெனவும்; 160

கதிர வன்றனை யமரிடைத் துற்சளைக் கணவன்
மதிம ருண்டுயிர் மாளவும் வானுறை புலவோர்
அதிசெ யம்பெரி தடையவு மறைத்தவா ழியர்க்குத்
துதிசெய் தேத்துமத் தோத்ரமே முக்கிய மெனவும்; 161

சவையி னிற்றுரோ பதியபி மானந்தாங் கெனவே
கவலை யுற்றழைத் திடவுடை யருள்கண்ண னடியார்
அவய வங்களி லணுகிவீற் றிருந்தவர் தம்பால்
எவையு மின்புற வனுபவித் திடுபவ னெனவும்; 162

(வேறு)

துவரிதழ்க் கருங்குழற் றூய மெய்த்தவச்
சவரியுற் றிடப்பதந் தந்த மாண்பினான்
எவரிடத் தினுங்கைமா றெதுவும் நோக்குறா
தவரிடத் தன்புவைத் தளித்து ளானென்றும்; 163

மாத்துய ரங்கொளும் வார ணந்தனைக்
காத்தரு ளும்செழுங் கமல நாபனைப்
பார்த்திடா தெனைநிக ராகப் பாருளோர்
தோத்திரிக் கின்றனர் துயருற் றென்னவும்; 164

---

160. கடல் கடைந்து அமிர்தத்தை மோகினி வடிவத்துடன் வந்து தேவருக்குக் கொடுத்த திருமால் அருள் செய்வான். கனையும் - ஒலிக்கின்ற. மருந்து - அமிர்தம். அளித்தருள் நாதன் - திருமால். நெடிதாம் பல இன்பம் - நீண்ட நாள்கள் நிலைத்து நிற்கும் பலவித இன்பங்களை. உளங்களி துளங்கிட - ஆனந்தம் பொங்க.

161. பெருமானைத் தோத்தரிப்பதே (சிறந்தது) முக்கியம்; மற்றவை சிறந்தவையாகா. சூரியனைப் போரில் சக்கரத்தால் மறைத்தவன் கண்ணன். துற்சளை கணவன் - சயத்திரதன். உயர்வற உயர்நலம் உடையவன்; ஆதலால் தோத்திரச் சிறப்பை உணர்ந்தார் ஆழ்வார்.

162. துரௌபதியின் மானம் காப்பதற்காகத் துகில் வளர உதவிய கண்ணபிரான் அடியவர்களின் அங்கங்கள்தோறும் தங்கியிருப்பான். அபிமானம் - தன் மதிப்பு.

163. சபரியின் அன்பு நோக்கிப் பரமபதம் தந்த பெருமான், பயன் கருதாது உதவுபவன். துவரிதழ் - சிவந்த இதழ். கைம்மாறு - பிரதி உபகாரம். "பரிவதில் ஈசனைப் பாடி" என்ற பதிகம் பார்க்கவும்.

164. கஜேந்திரனைப் பாதுகாத்த திருமாலையே என்னைப் போன்றவர் துன்பம் வந்தால் போற்றுவர். வாரணம் - யானை, கமலநாபன் - தாமரையை உந்தியிற் கொண்டவன்.

சிந்தையுண் ணினைந்திடச் சீக்கி ரத்தெதிர்
வந்தருள் புரிபவன் வஞ்ச முற்றெதிர்
முந்திவந் தமர்புரி முட்டி கன்னொடும்
தந்தமா கரிபடச் சாடினோ னென்றும்; 165

எருதுகைக் கரிபரி யெதிர்ப்பக் காய்ந்திடும்
அருமறை முடிவனை அனுப வித்திட
மருவியுற் றென்னொடும் வரத்த குந்துளோர்
இருநில மிசையெ வரிருக்கின் றாரென்றும்; 166

வன்புறப் புகலிலா துலகில் வாழுயிர்
தென்புறப் பகைவர்மேல் திகிரி யேவினோன்
முன்படைந் தொழிவிலா முத்தர் தம்மொடும்
அன்புடன் கண்டனு பவிக்கின் றேனென்றும்; 167

நிரைக்குலங் காத்திட நீள்வி ரல்கொடு
வரைக்குடை பிடித்துக்கன் மாரி மாற்றிய
திரைக்கடல் வண்ணர்பாற் சேர்ந்தென் செய்கைகள்
உரைப்பரோ விவர்களென் றுரைத்த தாகவும்; 168

பன்னருந் துயரினைப் பாங்கி மார்களும்
அன்னையர் களுமடைந் தம்பு யத்துவாழ்
பொன்னையா ளுடைப்புரு டோத்த மன்னொடுஞ்
சொன்னதா கவுங்கவி சொல்லுங் காலையில்; 169

---

165. நினைத்தவுடனே அருள்புரிபவன், முட்டிகன் என்ற மல்லனுடன் குவலயாபீடம் என்ற யானையைச் சாடிய திருமாலே. முட்டிகன் - முஷ்டிகன். சாடினோன் - மோதியவன் (அழித்தவன்). "பத்துடை யடியவர்க்கு எளியவன்" என்ற பகுதியைப் பார்க்க.

166. எருது, யானை, குதிரை இவைகள் போர் செய்ய அவற்றை யழித்த திருமாலை அனுபவிக்க என்னுடன் வருபவர் யார்? (ஊனில் வாழ் உயிரே). மறைமுடிவன் - வேதமுடிவுப் பொருளாகிய திருமால். இருநிலம் - பெரிய பூமி.

167. சரணாகதியின்றி வாடும் உயிர்கள் உறுதியடையப் பகைவர்மேல் சக்கரம் ஏவிய திருமாலை முத்தர்களுடன் அனுபவிக்கிறேன். புகல் - சரணாகதி. "அந்தாமத்து அன்பு சேர்" என்ற பதிகம்.

168. பசுக்கூட்டங்கள் கலங்க, விரலைக் கொண்டு மலையையே குடையாகப் பிடித்த பெருமானிடம் என் செய்கைகளை யாராவது சொல்வார் உளரோ? கல் மாரி - கல்மழை. "வருவார் செல்வார்" என்ற பாசுரம்.

169 — 172. ஆழ்வார் துன்பங்களைத் தோழிகளும் அன்னைமார்களும் பெருமாளிடம் பகரும்போதில், திருமால், ஆழ்வார்க்கு வைகுந்தக் கோலத்தைக் காண்பித்தான். ஒளிமயமான பெருமாளைப் பார்த்த ஆழ்வார் பாசுரங்களால்

பெருமாள் பரமபதக் கோலங் காட்டினான்

அந்தபா சுரங்களுக் கன்புற் றாங்கவன்
சிந்தையுட் டோன்றியே சிறப்ப மைந்த,வை
குந்தநல் லிருப்பதாங் கோலங் காட்டினான்
பைந்தலை யரவணைப் பள்ளி நாரணன். 170

தூண்டருஞ் சுடர்விளக் கனைய சோதியைக்
காண்டலு முளந்தனிற் களிப்புற் றோங்கிட
மீண்டுபா சுரங்களை விளம்பி யேத்தினான்
யீண்டிது வேயழ காகு மென்றனன். 171

கடுவமர் களனொடுங் கமலத் தோனொடும்
நெடுமுகின் மேனியோய் நிகரி லாதநின்
வடிவிலுன் றிருவடி வலிந்து ளேனினி
விடுகில னென்னவும் விளம்பு மெல்லையில்; 172

இரு முதுகுரவர்கள் பரமபதம் பெறல்

சிரீதரன் பணிவிடை செய்து வைகுவோர்
காரியார் நங்கையார் கழறுஞ் சுற்றத்தவ்
ஊரினோர் தமக்குமே லுலகம் நல்கினான்
வேரியந் துளவணி விமல மாதவன். 173

பாடிப் பரவினார். பெருமான் இதுவே அழகு என்று கொண்டாடினான். உடனே ஆழ்வார் உன்னை விடமாட்டேன் என்று கூறினார். "வைகுந்தா" என்ற பாசுரம்.

169. அம்புயத்து வாழ் பொன் - திருமகள்.

170. வைகுந்த நல்லிருப்பு - ஸ்ரீவைகுந்தத்திலே நித்தியசூரிகளுடன் இருக்கும் திருவோலக்கம். அரவணை - சேஷசயனம்.

171. காண்டலும் - பார்த்தவுடனே. மீண்டு - திரும்பவும் (உம்மைத் தொகை). இதுவே - இப் பாசுரமே.

172. கடுவமர் களன் - நஞ்சு கலந்த கழுத்தை உடைய சிவபிரான். முகில் மேனியாய் - மேகம் போன்ற நிறத்தை உடையவனே. வலிந்துளேன் - இறுகப் பற்றிக்கொண்டேன்.

173 — 175. திருமால், தன்னைப் பெற்ற தாய் தந்தையர்களுக்கும், சுற்றத் தினருக்கும், தம்மூரில் உள்ளோர்க்கும் பரமபதம் வழங்கியதைக் கேள்வி யுற்ற ஆழ்வார், "என்னையொப்பாக என்னைச் சார்ந்தவர்களையும் கருதி வீடு வழங்கினான். இத்தகைய பரமபதம் உங்கட்கும் வேண்டிடில் எம்பெருமான் திரு வடிகளுக்குத் தொண்டு புரிமின்" என்று இசைத்தார். "கேசவன் தமர்" என்ற பதிகம்.

173. வேரியந்துளவு - வாசனையும் அழகும் நிரம்பிய திருத்துழாய் மாலை,

அன்னதை யுணர்ந்தமா றனுமுள் ளன்பொடும்
பின்னரு மோதுவான்: பிரமன் றாதையார்
என்னையொப் பாகவென் சுற்றத் தார்களும்
மன்னிட வுயர்பதம் வழங்கி னாரென்றும்; 174

இத்திற முயர்பத முமெமக்கு மெய்திடற்
குத்திடு முலகுளீ ருலகம் யாவையும்
வைத்திடு மகடுள மாத வன்மலர்
ஒத்திடு மடித்தொழி லுஞற்று மென்னவும்; 175

வேதமுற் றுரைதவம் விழைந்தி ழைத்திடு
மாதவ ருளந்தொறும் வாழு மாதவ
நாதனை யளித்திடு நளின மாமலர்ப்
பாதனைத் துதிசெயும் பதவிக் கென்னவும்; 176

குரைகடல் வண்ணர்தங் கோல மெய்துதா
மரைநிகர் திருவடி வாழ்வு வேண்டினோர்
தரைபுகழ் சோலைகள் ளழகர் தம்மிடம்
விரைவுட னேவரு வீர்க ளென்னவும்; 177

மீண்டும் சேவை சாதித்தல்

இவ்விதங் களிற்கவி யிசைக்குங் காலையில்
அவ்விய மவித்தநெஞ் சவனுக் கன்பொடும்
செவ்விய திருவுருச் சேவை காட்டினான்
ஒவ்வியா லடைக்கட லுறங்கு நாரணன். 178

---

175. இத்திறம் - இப்படிப்பட்ட. உத்திடு - (உற்றிடும்) விரும்புகின்ற. அகடுள - வயிற்றைப் பெற்றுள்ள. அடித்தொழில் - திருவடித்தொண்டு.

176. மக்களே! பரமபதம் பெற வேதம் சொன்னபடி, தவம் செய்யும் முனிவர்களின் சிந்தைதோறும் வீற்றிருக்கும் திருமாலை, தாமரை மலர்போன்ற பாதம் உடையவனைத் துதி செய்யுங்கள். அளித்திடும் - உலகையெல்லாம் படைக்கின்ற. இறைவன் திருவடியில் இருந்து உலகம் பிறந்தது. "நீலமேனி இருதாள் நிழற் கீழ் உலகம் முகிழ்த்தன" என்பது ஐங்குறுநூற்றுக் கடவுள் வாழ்த்து. "பரிவதில் ஈசனைப் பாடி" என்ற பாசுரம்.

177. இறைவன் திருவடியை அடைய விரும்புபவர், திருமாலிஞ்சோலை மலை அழகனைப் பணிய வாருங்கள். குரைகடல் - ஒலிகின்ற கடல். விரைவுடன் - (இளமை மாறுவதற்குமுன்) வேகமாக. "கிளர் ஒளி இளமை" என்ற பாசுரம்.

178 — 180. ஆழ்வார் இவ்வண்ணம் பாசுரங்கள் பாடும்போது திருமால் தன்னுடைய திருமேனிப் பொலிவைக் காண்பித்தான். இறைவன் திருமேனியை

திவ்விய மேனி வேண்டினார்

அவ்வுரு வனுபவித் ததற்பின் பாசுரம்
பவ்வனே ரியவதை யனுப வித்திடற்
கிவ்வுரு வமைந்ததா காதெ னக்கினித்
திவ்விய வுருவருள் செய்யு மென்னவும்; 179

அந்தநல் லுருவின்வேங் கடவர்க் காட்செய்யுஞ்
சிந்தைகொண் டலரின்மேல் மங்கை தேவனே
இந்தபூ வுலகுட னேழி ரண்டுடன்
எந்தபே ருலகமும் யாரு மென்றனன். 180

கனிவுறு முளந்தனிற் கருதி யன்புடன்
தனுவளைத் திலங்கையர் தானை செற்றவன்
பனிமல ரடியினைப் பணிந்து போற்றிசெய்
தனுபவி யார்தமை யிகழ்ந்த தாகவும்; 181

தண்டுவா ளிருஞ்சிலை சங்கு சக்கரம்
கொண்டுளான் றிருவுருக் கோலச் சேவையைக்
கண்டுள மகிழ்ந்திரு கண்க ளிப்புடன்
தொண்டுறு மவர்புகழ் சொன் னதாகவும்; 182

அந்தரி யாமியா முருவ மாவதைச்
சிந்தைநேர்ந் தறிகுத லரிது சீதரன்
வந்தவர்ச் சாவதா ரமதை வன்மையோ
டுந்தமுட் பற்றலே யுற்றவீ டென்றும்; 183

அனுபவிக்க வேறு உயர்ந்தவுடல் வேண்டினார். அவன் வழங்கிய அந்தத் திரு மேனியுடன் திருவேங்கடத்து எம்பெருமானே யாவும் என்று பாடினார். "இவையும் அவையும் உவையும்" என்ற பதிகம்.

181. வில் வளைத்துக் கருணையுடன் இலங்கை யரக்கர்களை அழித்த திரு மாலைப் பணிந்து அனுபவியாதவர்களை இகழ்ந்து பாசுரம் பாடினார். தனு - வில். "பொய்ம்மாம் பொழில்" என்ற பாசுரம்.

182. கரங்களில் படைகளைத் தரித்த திருக்கோலத்தைக் கண்டு சேவித்து மகிழ்பவரைப் புகழ்ந்து பாடினார். தொண்டுறும் அவர்கள் - அடிமை செய் பவர்கள். "பயிலும் சுடரொளி மூர்த்தி" என்ற பாசுரம்.

183. எம்பெருமான் அந்தர்யாமியாக இருப்பதை அறிந்து பணிவது கடினம். ஆதலால், அர்ச்சாவதாரத்தைப் பணியுங்கள். அதுவே வீடு. அந்தரியாமை - எல்லாப் பொருளுக்கும் உள்ளுறைப் பொருளாயிருத்தல். "தனஞ்சயா! எனக்கு

பாகவதர் சிறப்பைப் பேசினார்

பொன்னையா ளுடையவப் புனிதன் பார்மிசை
மன்னிய திருவர்ச்சா வதார மாவது
தன்னைநெஞ் சதுகொடு தரித்து ளோர்களே
என்னையா ளுடையவ ரென்ப தாகவும்; 184

வடிவது குறளின்மூ வடிமண் வாங்கியே
படியெலாம் கொண்டடிப் படுத்தி மாவலி
முடிமிசை யடிகவித் துளமு குந்தனார்
அடியவர்க் கடியனா னாகு மென்னவும்; 185

மக்களைப் பாடாதீர்

பாங்குறு மனிதரைப் புகழ்ந்து பாடியே
யேங்கியுற் றிழிந்திடா தினிதி னோடுமுந்
தீங்கடப் புலவர்காள் தேவ தேவனாம்
வேங்கட வனைக்கவி விளம்புவீ ரென்றும்; 186

காற்றருண் மதலையாற் கண்ணி லானருள்
நூற்றுவ ராவியை நுதிகொள் சூலவெங்
கூற்றுணா வளித்தகோ விந்த னல்லது
வேற்றொரு வரைக்கவி விளம்பிடே னென்றும்; 187

மேலானது வேறு எதுவும் இல்லை. நூலிலே மணிகள் போன்று இவை யாவும் என்மீது கோக்கப்பட்டிருக்கின்றன'' என்பது கண்ணன் வாய்மொழி (கீதை). ''ஓது மாமணி யநேக முடுருவு கோவை நூலினொரு பான்மைபோல், பேதமான பொருள்தோறும் நான் மருவி நின்றவாறு நனி பேசுகேன்'' என்பது தமிழ்ப் பகவத்கீதை. ''செய்ய தாமரைக் கண்ணாய்'' என்ற பதிகம்.

185. எம்பெருமானின் அர்ச்சாவதாரத்தை உள்ளத்தில் தரித்தவர்களே என்னை அடிமை கொள்பவர்கள். ''அடியார்ந்த வையம் உண்டு'' என்ற பதிகம். வாமன வடிவுடன் சென்று உலகை எல்லாம் தன் வசப்படுத்திக்கொண்ட திருமாலின் அடியவர்க்குத் தான் அடிமை. குறள் - வாமனன் என்ற சொல்லுக் கேற்ற தமிழ்ச்சொல். கவித்து - அணிந்து. ''கவித்தானை மன்னர்க்கு முடி கவித் தானை!'' என்பது அழகரந்தாதி.

186. புலவர்களே! உங்கள் திமை கெடத் திருவேங்கடமுடையானைப் பாடுங்கள். மனிதர்களைப் பாடாதீர்கள். இழிந்திடாது - இழிவுறாமல். இனிதி னோடும் உம் தீங்கு அட எனப் பிரிக்க. ''வம்மின் புலவீர்'' என்ற பாசுரம்.

187. அடியேன், வாயுபுத்திரனாகிய வீமன் மூலமாகத் துரியோதனன் முதலானவர்களின் உயிர்களை யமனுக்கு உணவாக வழங்கிய கோவிந்தனைத் தவிர, மற்ற மனிதர்களைப் பாடேன். காற்றருள் மதலை - வீமன். கண்ணிலான் - திருதராஷ்டிரன். நுதி - நுனி. ''நுதிமுகம் மழுங்க மண்டி ஒன்னார் கடிமதில் பாயும் நின்களிறடங்கலவே'' என்பது புறம். ''சொன்னால் விரோதம்'' என்று தொடங்கும் பாடல்.

செல்வமே நிலையிலை தெளிவுற் றொல்லையில்
கல்வடி வகன்றக லிகைக விண்பெறும்
நல்வண மெய்தமுன் னடந்த நாரணன்
பல்வளம் பொருந்துதாள் பற்றுவீ ரென்றும்; 188

அன்றிரா வணன்வ்லி யழித்தொ ழித்துப்போர்க்
கின்றுபோய் நாளைவா வென்றி யம்பிய
வென்றிவெஞ் சிலையனை மேவி யன்பணி
மன்றலர் மாலையை வழங்கு கென்றனன். 189

உவந்தவ னிவ்வண மோதுங் காலையில்
கவந்தனைக் காய்ந்தகா குத்தன் றானணி
நிவந்தபைந் துளவொடு நிரம்ப வைத்திடும்
சிவந்தபூ மாலையைச் சேர்ந்த ளித்தரோ. 190

பெருமாள் சேவை

அந்தமாப் புகழ்ச்சட கோப னாயினோன்
சிந்தைதன் னையும்புகல் செய்யு டன்னையும்
சந்தனம் பணியு டையாகத் தாங்கியே
வந்தவன் றிருமுனம் மருவி நின்றனன். 191

நின்றவச் செய்கையை நெடிது நோக்குறா
ஒன்றுமவ் வாறவ னுவந்து பாடலும்
கன்றினால் விளவினை யெறிந்த கார்வணன்
அன்றது கேட்டுவந் தகன்று போயினான். 192

---

188. செல்வம் நிலையில்லை. கல் வடிவம் நீங்க இராமனாகக் காட்டில் நடந்த திருமாலின் பாதங்களைப் பற்றுங்கள். ஒல்லையில் - விரைவாக. "ஒரு நாயகமாய் ஓட" என்ற பதிகம்.

189 — 190. ஆழ்வார், "இன்று போய் போர்க்கு நாளை வா" என்று இராவணனிடம் கூறிய திருமாலை நோக்கி, "நீ அணிந்த திருமாலையை வழங்குக" என்றார். உடனே, கவந்தனை அழித்த காகுத்தன் தான் அணிந்திருந்த பூ மாலையை வழங்கினான்.

191 — 192. திருமால், சடகோபர் பாடிய பாடல்களையே சந்தனமாகவும், ஆபரணமாகவும், உடையாகவும் கொண்டு காட்சி வழங்கினான். திருமால் அவ்வாறு வந்த கோலத்தையே (ஆழ்வார்) பாடினார். அதனைக்கேட்ட பெருமான் மகிழ்ச்சியுடன் நீங்கிச் சென்றான். "கோவை வாயாள் பொருட்டு" என்று தொடங்கும் பதிகம்.

மீளவும் ஒப்பிலா விரக முற்றிட
வாள்பொரு கண்ணினார் வாச கந்தனை
தாளினாற் சகடிற வுதைத்துச் சாடினோன்
கேள்வியுற் றிடும்வகை கிளர்த்தும் வாறதாய்; 193

பாட்டிவன் பாடலும் பைய ராவின்மேல்
ஆட்டினோ னாங்கவ ரறைந்த வாசகம்
கேட்டுள மகிழ்ந்துதன் கிருபை கிட்டியே
காட்டலு மிருகணுங் களிப்புக் கொண்டரோ; 194

இத்தக வுடையனா மென்க ணான்றனக்
கத்தனைப் பாடுவேற் கரிய துண்டுகொல்
சித்தமுட் குறையெனோ வென்று செய்யபா
ஒத்திடத் தனைவியந் துரைக்கு மெல்லையில்; 195

ஆழ்வாரின் பிரிவாற்றாமை

பின்னரு மாயவன் பெயர்ந்து போகலும்
அன்னதற் கிரங்கிமா தரின முங்கியே
பன்னரும் விரகவா ழியிற்ப டிந்திடக்
கன்னியர்ச் செயலினைக் காண்ட லோடுமே; 196

அனையநோய் தீரவே வலிதி னாட்கொள
நினையவு மதுதனை நீக்கித் துன்புடன்
தனைநிகர் வேறிலாத் தன்மை யுள்ளவன்
எனையுறப் பிடித்தன னென்ப தாகவும்; 197

---

193 — 195. ஆழ்வார் பிரிவாற்றாமையால் (விரக நோயுற்று) திருமால் செவியிற் படும்படி பாசுரம் பாடினார். இறைவன் மீளவும் காட்சி வழங்கினான். திருமாலைக் கண்ட ஆழ்வார் பூரித்து, திருமாலைக் கண்ட எனக்கும் முடியாத செயல் உண்டோ? என்று பாடினார். "முடியாதது என் எனக் கேல் இனி" என்ற பாசுரம்.

193. விரகம் - பிரிவாற்றாமையால் உண்டாகும் நோய். கேள்வியுற்றிடும் வகை - செவியிற் படும்படி. கேள்வி - செவி. "காது கேள்வி அள்ளே சுருதி கன்னம் செவியே சோத்திரம் ஆகும்" என்பது பிங்கலம்.

194. ஆட்டினோன் - ஆடுதலைச் செய்தவன் (வினையாலணையும் பெயர்).

195. வியந்து - ஆச்சரியப்பட்டு.

196 — 198. திருமால் முன்போலவே மறுபடியும் மறைந்துவிட்டான். அவன் பிரிவாற்றாமையால் வாடி வருந்தினார் ஆழ்வார். திருமால் அவ் விரக

சானகி யெனுந்திரு தன்னை நாடியே
கானினும் வரையினுங் கடுகிச் சென்றுள
மீனமாக் கடல்வணன் வேண்டி லானெனில்
நானும்வேண் டிலனென நவில்வ தாகவும்; 198

உலகுளோர் கொடுமையை யுள்ளத் துன்னியிந்
நிலமிசை யிருந்திடேன் நீல மேனியாய்
சலசலோ சனமுளாய் தயர தன்றவக்
குலமணி யேயெனைக் கூவிக் கொள்ளென்றும்; 199

திருக்குரு கூரெனும் பதியிற் சேர்ந்துவாழ்ந்
திருக்குமால் பரம்பிற தேவர் யாவரும்
தருக்கிலா வபரமா மெனவுந் தன்னுளத்
துருக்கமுற் றுறுங்கவி யோது மெல்லையில்; 200

சமயவாதியர் வருகை

(வேறு)

இருமா நிலத்தில் உறுபொருள்க
ளெவையும் பெருவாய் மலர்ந்துண்ட
பெருமான் ஒப்பில் பரமென்றும்
அபரம் பிறதே வர்களென்றும்
அருமா மறைகள் விரித்துரைக்கும்
அவ்வா றெடுத்துச் சடகோபன்
திருவாய் மொழியாம் பிரபந்த
மதனுள் வகுத்துச் செப்புதலும்; 201

நோய் தீர்த்து ஆட்கொளக் கருதினான். சீதையின் பொருட்டாகப் படாதன பட்ட திருமால் என்னை வேண்டாவிடின் நானும் விரும்பமாட்டேன் என்று பாடினார். (ஆழ்வார் ஊடலின் மிகுதி.) சானகி - சீதை. "மின்னிடை மடவார்கள்" என்ற பாசுரம்.

199. உலக மக்களின் கொடுமையை நினைந்த ஆழ்வார் இவ்வுலகில் இருக்க விரும்பவில்லை. என்னை அழைத்துக்கொள் என்று பாடினார். சலசலோசனம் - தாமரைக்கண். "நண்ணாதார் முறுவலிப்ப" என்ற பதிகம்.

200. திருக்குருகூரில் உள்ள திருமாலே பரம்பொருள். மற்றைய தேவர்கள் கீழானவர்கள் என்று ஆழ்வார் கவிதை இசைத்தார். மால் பரம் - திருமாலே பரம்பொருள். அபரம் - கீழானவர்கள். "ஒன்றும் தேவும்" என்ற பதிகம்.

201 — 204. உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் உண்ட திருமாலே பரம்பொருள். மற்றவர்கள் அபரம் என்று வேதம் கூறியதைச் சடகோபர் திருவாய்மொழியிற் பாடினார். அதுகேட்ட, பிற சமயத்தவர் எங்கள் தெய்

சைவ ருலகா யதர்பவுத்தர்
சமணர் முதலாஞ் சமயர்கள்நீ
செய்வ தாமிவ் வருந்தமிழின்
திருவாய் மொழியில் வேண்டுபொருள்
கைவந் தணுகா மலகமெனக்
காட்டி யருள்செய் திடுமெமது
தெய்வங் கள்தமை யபரமமெனச்
செப்ப லெவ்வா றெதுகொண்டே? 202

வேதங் களினு மிவ்வாறாய்
விளம்பக் காணோம்; நீர்தாமே
ஓது கின்ற வகையோவென்
றுரைப்ப; அதற்கு நகைத்தருளிப்
பேதித் துரைத்த திலைவேதம்;
பேசு முறையே யுரைத்தேனென்
றாதி பரனாம் மகிழ்மாற
னருளிச் செய்தும்; அவரறைவார்; 203

அருமா மறையின் முறைவழுவா
தறைந்தே னென்றாய்! அம்மறைகள்
ஒருநான் கினையு முழுதுணர்ந்தே
யோதி னவரு முரைத்ததில்லை;
குருபோ தனைசெய் திடவுணராய்;
குறிக்குந் தெய்வ வருளதனால்
வருமோ வென்னோ? வந்திருந்தால்
வகுப்பா யதையிவ் வாறெனவே; 204

வங்கள் அபரம் என்றது எது கொண்டு? வேதங்களில் இப்படிச் சொல்லவில்லை என்றனர். அதுகேட்டு ஆழ்வார் புன்னகையோடு 'வேதம் கூறியபடி பேசினேன்' என்றார். சமயவாதிகள், 'வேதம் உணர்ந்தவர் தாங்கள் கூறியபடி உரைக்கவில்லை. தாங்களோ குருவிடம் படித்ததில்லை. ஒருவேளை தெய்வ அருளால் உணர்ந்தீரோ? உணர்ந்தால் கூறுங்கள்' என்றனர்.

202. கைவந்து அணுகு ஆமலகம் எனப் பிரிக்க. ஆமலகம் - நெல்லிக்கனி. "வாளதிகா வன்கூற்றின் நாவை அறுப்பித்தாய் ஆமலகம் தந்து" என்பர் அவ்வையார்.

203. பேதித்து - மாறுபட்டு. (சமயவாதியர் ஆழ்வாரை வேதம் ஓதும்படி கூறினர்.)

என்ன வவர்க ளியம்புதல்கேட்
டிவ்வா றுங்கட் கம்மறையை
வன்ன பேத மாதலினால்
வகுத்திட் டுணர்த்த லாகாவே;
அன்ன மறையு ளெப்பொருணீ
ரறிய லாகா மெய்ப்பொருள்கள்
இன்ன விதமென் றெடுத்துரைப்பி
னியம்பு வேனென் றியம்பினனே. 205

அந்த மொழிகேட் டவர்களெலா
மதனுள் தமக்கு வேண்டுவன
எந்த வெந்தச் சங்கிதைக
ளெவ்வெவ் விதமாய் வினவினதற்
கிந்த விதமா மதன்பொருளென்
றெடுத்துப் பொருந்த விசைத்திடலும்
தந்தம் முளத்தில் பரமாவோன்
தனிநா ரணனென் றவர்தெளிந்தே; 206

ஐய மிலதா மிப்பொருள்தேர்ந்
தறியா மையினால் அடியேங்கள்
வெய்ய மொழிகள் பலபலவாய்
விளம்பிற் றெல்லாம் பொறுத்தருள்நீ
செய்ய வேண்டு மெனவவர்கள்
திருமா லுருவாய்த் திகழ்மாறன்
துய்ய கமல மலரடியில்
தொழுதாங் கெதிர்நின் றிவைசொல்வார். 207

---

205. வேதங் கூற வேண்டும் என்றபோது ஆழ்வார், நீங்கள் வேத நம்பிக்கை யற்றவர்களைச் சேர்ந்தவர்கள். ஆதலால், நான் உரைத்தாலும் உங்களால் அறிந்து கொள்ள முடியாது. உங்கட்கு விளங்காதவற்றைக் கூறுங்கள் அவற்றிற்கு விளக்கம் தருகின்றேன் உணர்த்தல் ஆகா - அறிவிக்க முடியாது.

206. சமயவாதிகள் தங்கள் ஐயங்களைக் கூறினர். ஆழ்வார் அவற்றின் விளக்கத்தைப் பகர்ந்தனர். சமயவாதிகள் நாராயணனே பரமாத்மா என்று தெளிந்த ஞானம் பெற்றனர். (இருசமய விளக்கத்தில் தடைவிடை கூறித் தெளிய வைத்ததை அரிதாசர் விளக்கியுள்ளார். பயின்று மகிழ்க.) சங்கிதைகள் - செய்தித் தொகுப்பு (வேதப் பிரிவு).

207 — 209. சமயவாதிகள், யாங்கள் புரிந்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும். உலகில் வேறு நூல்கள் சொன்ன கடவுளர்கள் பொய் உயிர்கள் பல

வைய மதன்மேற் பரநூல்கள்
வகுத்துக் கூறுங் கடவுளெலாம்
பொய்ய தெனவும் மெய்ஞ்ஞானம்
பொருந்திப் பலவா முயிரெனவும்
உய்யும் வகைநீ செயுங்கவிக்குள்
ளுரைத்த பொருளாம் நாரணனே
மெய்ய தாமப் பரமெனவும்
விளங்க வுணர்ந்தோ மாதலினால்; 208

சமயவாதியர் திருந்தல்

எமையிங் கடிமை கொளவேண்டு
மெனவாங் கவர்க ளதற்குமுனம்
அமையுங் கோலந் தனைமாற்றி
யாழித் திருநா ரணனடியார்
தமையொப் பாகும் திருவேடந்
தாங்கி நிகழ்ந்தோர் தமைநோக்கி
உமையெம் பெருமான் களிப்பாக
உகந்தாட் கொள்வா னெனவுரைத்தான். 209

பெருமாள் காட்சி

மாற னவர்கள் உரைத்ததிரு
வாக்கெட் கிடையும் வழுவாதவ்
வாறுற் றுரைத்தான்; அருள்வேண்ட
வயினத் திருவா கனமதன்மேல்

என்று தாங்கள் கூறிய நூல்களினால் திருமாலே பரம்பொருள் என்று தெளிந்தோம். எம்மை ஆட்கொள்ள வேண்டும் என்று கூறித் திருமாலடியார்களாய்த் தங்கள் கோலத்தை மாற்றிக்கொண்டனர். ஆழ்வார், 'உம்மை எம்பெருமான் அடிமையாக ஏற்றுக் கொள்வான்' என்றனர்.

207. நீர் பொறுத்து அருள் செய்ய வேண்டும் என்றனர்.

208. பரநூல்கள் - மற்ற நூல்கள். "பரசமயக் குறும்பரை வெல் பரம ஞானக் கோமான்" என்பது ஆண்டாள் பிள்ளைத்தமிழ். மெய்ஞ்ஞானம் - தர்ம பூத ஞானம். உயிர்கள் பல என்பது வைணவ சித்தாந்தம்.

209. முனம் அமையும் கோலம் - முன்பு தாங்கள் பின்பற்றியிருந்த சமயத்துக்கு ஏற்றபடி கொண்ட கோலங்கள். திருவேடம் - பாகவத கோலம்.

நாறுந் துளவப் படலையணி
நாரா யணன்வந் தெய்தினனால்
நீறு புனையுஞ் சிவன்முதலோர்
நெருங்கிப் பணிந்து துதிசெயவே. 210

விண்ணிற் பொலியுங் கருடன்மிசை
விளங்குந் திருநா ரணனுருவம்
மண்ணுற் றிருந்த பரசமயம்
மருவித் துறந்த அவர்கள்தம்
கண்ணுற் றிடலும் மகிழ்வடைந்து
கருத்துள் ளுருகிக் கரையவெதிர்
நண்ணிப் பணிந்து துதித்தேத்தி
நணுகா னந்தக் கடல்படிந்தார். 211

மங்களாசாசனம்

உகமோர் கோடி தவஞ்செயினு
மொருவர்க் கெனுந்தோன் றாயடியேன்
புகலு மளவி லடைந்திவர்கள்
புகழ வெதிர்வந் தணுகினையால்
மிகவுஞ் சிறந்த பலனருள
வேண்டு மெனவே பராங்குசனும்
அகமுண் மகிழ்ந்தே திருமங்க
ளாச னத்தை யருள்செய்தான். 212

ஏய வருக்கிங் கிவ்வாறா
யெழில்சேர் காட்சி யளித்ததற்பின்
தூய பரம பதமதனைத்
தொடர்ந்தாங் கணைந்து வீற்றிருந்தான்

---

210 — 213. நம்மாழ்வார் மொழிந்த வார்த்தை பொய்யாகாதபடி திருமால் கருடவாகனத்தின்மேல் காட்சி வழங்கினான். வைணவக் கோலங் கொண்ட பக்தர்கள் திருமாலின் கோலங்கண்டு, ஆனந்தக் கடல் படிந்தனர். கோடி யுகம் தவஞ் செய்தாலும் காட்சி தராத நீ, அடியேன் மொழிந்ததும் வந்து காட்சி தந்தாய். இவர்கட்கு மிக்க பலன் தரவேண்டும் என்று ஆழ்வார் மங்களாசாசனம் செய்தார். தொண்டர்களுக்குக் காட்சி தந்த பரமன் பரமபதம் சென்று சேர்ந்தான்.

210. எட்கிடையும் - எள்ளளவும். "எட்கிடை நெற்கிடை கெச நேத்திரக் கிடை மாத்திரை வெளிவிட்டு" என்பது கடம்பவன புராணம். வயினத் திருவாகனம் - கருட வாகனம். துளவப் படலை - திருத்துழாய் மாலை.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY.
Sc No ...
Date ... 213
MADRAS 28.

ஆயர் பாடி தனின்மதுரை
யதைவிட் டடைந்து முடையடுத்துத்
தோயுந் தயிர்பால் நவநீதம்
தொட்டுண் டுரலிற் கட்டுண்டோன்

புயலார் மேனித் திருநெடுமால்
பூங்கண் மலரா திருந்ததனால்
கயலார் கருங்கண் மடந்தையர்போற்
காரி மாறன் தானுமிக
மயலாய் மெழுகிற் கரைந்துருகி
வாடித் திருமே னியுந்தளர்ந்திட்
டியலா ருளத்திற் றிருமடலூர்ந்
திருந்தா னிருந்த வெல்லையின்வாய்; 214

காம ரிளங்கன் றினையடையுங்
கறவை போலக் குறுங்குடிவாழ்
நாமஞ் சிறந்த வழகியசீர்
நம்பி யுளத்தின் நயப்புறவே
சோமன் றவழு மதிள்குருகூர்
துலங்கும் புளிக்கீ ழுறைவகுளத்
தாமம் புனைந்த சடகோபன்
றனக்குக் காட்சி யளித்திடலும்; 215

யானே அனைத்தும் செய்தேன்

சீரா ரிருகண் களிப்பெய்தத்
தெரிசித் துளத்தின் மகிழ்வெய்தி
நீரார் கடல்சூழ் புவியனைத்தும்
நிறைபல் லுயிர்க்குள் ளுயிராகி

---

213. நவநீதம் - வெண்ணெய். கட்டுண்டோன் வீற்றிருந்தான் என முடிக்க.

214 — 215. திருமால் மறைந்ததும் மீளவும் ஆழ்வார் பிரிவாற்றாமையால் திருமடலேறத் திருவுள்ளம் பற்றினார் இதனையறிந்த திருக்குறுங்குடி எம்பெருமான் 'கன்றைத் தேடிவரும் பசுவைப்போல்' வந்து காட்சியளித்தான்.

214. கயலார் நெடுங்கண் - கயல்மீன் போன்ற கண். உளத்தில் மடலூர்ந்தார்; வெளிப்படையாக அன்று என்பதை "உளத்தில் திருமடலூர்ந்திருந்தான்" என்பதால் குறிப்பிட்டார். "மாசறு சோதியன் செய்யவாய்" என்ற பதிகம்.

215. காமர் - அழகிய. கறவை - பசு. "கற்றுக் கறவைக் கணங்கள்" என்பது கோதையாரின் பாசுரம். நாமம் சிறந்த நம்பி - வைஷ்ணவ நம்பி. தாமம் - மகிழ்மாலை,

வேராய் மூல காரணனாய்
விளங்கி மருவுந் திருவுருவ
நாரா யணனார் புரிந்ததெலாம்
நானே புரிந்த தாமென்றும்; 216

கான மதனில் நட்பமையுங்
கதிரோன் புதல்வன் கலக்கமற
வானந் தொடரும் ஏழுமரா
மரமன் றுருவ வாளிதொட்டோய்!
மோனம் பொருந்தும் அடியவர்சேர்
மோட்ச வீட்டிற் பேரின்பம்
ஞான முதலா யினவெவையும்
நண்ண வெனக்கு நல்கெனவும்; 217

சீறு மரவா பரணனெடுஞ்
சிலையை முறித்துச் சானகிக்கு
நாறு மலர்மா லையைப்புனைந்த
நளினக் கரத்தோய்! அயடியேற்கு
ஈறும் பதவி யளித்திடினும்
அளியா விடினும் உனையல்லால்
வேறு மொருவ ராதரவாய்
விரும்பி விளம்பற் கிலையெனவும்; 218

---

216. (திருமாலைக் கண்ட பெருநிறைவாலும், அவன் தம்முடைய திருவுளத்தில் இருத்தலினாலும், தாம் அவனுக்குத் திருமேனியாய் இருப்பதை உணர்ந்தமையாலும்) திருமால் புரிந்த செயல்கள் யாவும் தாமே புரிந்ததாகப் பாசுரம் இட்டார். "கடல் ஞாலம் செய்தேனும் யானே" என்ற பதிகம். உயிர்க்குள் ளுயிராகி, வேராய், மூல காரணனாய் இருப்பவன் திருமால். "எப்பொருட்கும் வேர் முதலாய், வித்தாய் பரந்து தனி நின்ற கார்முகில்போல் வண்ணன்" என்ற சடகோபரின் அனுபவம் இங்கே காட்டப்பட்டுள்ளது.

217. "சூரியனின் புதல்வனான சுக்ரீவனின் மனக்கலக்கம் நீங்க மராமரங்களைத் துளைத்தவனே! அடியேனுக்கு இன்பத்தையும் ஞானம், பக்தி, வைராக்கியம் முதலானவற்றையும் நல்குக" என்றார். வாளி - அம்பு. தொட்டோய் - தொடுத்தவனே! "ஈதே யான் உன்னைக் கொள்வது" என்ற பாசுரம்.

218. சிவபிரானின் வில்லை முறித்து, பிராட்டிக்கு மாலையை யணிந்தவனே! நீ எனக்குப் பதவி கொடுத்தாலும் கொடாமற் போனாலும் உன்னைத் தவிர வேறொருவரை அடையமாட்டேன். சீறும் அரவாபரணன் - சிவபிரான். ஆதரவாய் - சரணாகதியாக.

மறையோர் செயுமா மகப்புகையும்
மடவார் நனைகார்க் குழற்புலர்த்தும்
நறையா ரகிலின் கொழும்புகையும்
நண்ணி யெழலும் புயலெனவே
சிறையார் மயில்கள் நடம்பயிலுஞ்
சீரார் வல்லை வாழுறுமெம்
மிறையோ னடைந்து காட்சியளித்
திடலும் நீயே கதியென்றும்; 219

காண்ட வனத்தைப் பசிபொருந்துங்
கனலி யருந்த வளித்தருளும்
பாண்ட வர்க்குண் ணடுப்பிறந்த
பார்த்தன் மணியா ழியினிரதம்
பூண்ட கவனத் தவளநிறப்
புரவி நடத்தும் புயல்வண்ணா!
ஈண்டிங் கடியேன் றன்னையுவந்
திரட்சித் தருளு வாயெனவும்; 220

அறுகால் பொம்மென் றிசையுடன்சார்ந்
தணுகி யுறுந்தேன் களித்துண்ணும்
நறவார் துளவ வலங்கறிரு
வண்ண நாய கன்னிடத்தில்
உறுகா தலினை விரைவினடைந்
துரைமி னெனவாங் குறுதூதாய்
பறவை யினங்க டனக்குரைத்துப்
பரிவின் விடுத்த பரிசாயும்; 221

---

219. இப்படி ஆழ்வார் சோகமுறும் சமயத்தில் 'ஓமப்புகையும் மகளிர் கூந்தற்கு ஊட்டும் புகையையும் மேகம் என்று மயில்கள் ஆடும்' திருவல்லவாழ் பெருமான் காட்சி வழங்கினான். ஆழ்வார், 'நீயே அடியேனுக்குக் கதி' என்றார். மகப்புகை - யாகப்புகை. நனை - நனைந்த. கார்க்குழல் - கருங்கூந்தல். "மானேர் நோக்கு நல்லீர்" என்ற பாசுரம்.

220. காண்டவ வனத்தைப் பசியால் வாடிய அக்கினி தேவனுக்கு வழங்கிய அர்ச்சுனனுக்குத் தேரோட்டியவனே! அடியேனைக் காப்பாயாக கனலி - அக்கினி தேவன். பார்த்தன் - அர்ச்சுனன். தவள நிறப் புரவி - வெள்ளைக் குதிரை. "வென்றிசேர் அமர் தொடங்கும் எல்லையினில் வெள்ளைமா நடவு தேரின்மேல் நின்ற போர் விசயன்" என்பது பட்டனார் பாடிய பகவத் கீதை. கவனம் - வேகம்.

221. திருத்துழாய் மாலையணிந்த திருமாலிடத்தில் என் காதலைக் கூறுங்கள் என்று பறவைகளைத் தூதாய் விடுத்தார் ஆழ்வார். அறுகால் - வண்டுகள். பொம்மென்று - 'பொம்' என்ற ஒலியுடன். "வைகல் பூங்கழிவாய் வந்து" என்ற பதிகம்.

ஊடலும் கூடலும்

(வேறு)

நாடியம் மாறன தருகு நண்ணிட
வாடிய மனம்தெளி வாய்ம ருங்கிருந்
தூடியுந் தேற்றிட வுளங்க லங்கியும்
கூடியு மிருந்துள கொள்கை செப்பியும்; 222

அந்தர்யாமித்துவம்

முந்திய விண்ணகர் மாயன் மோகமாய்க்
கந்தமா மலரிடைக் கலந்த வாறுபோல்
அந்தரி யாமியா யணுகி வைகுதல்
சிந்தியா ஞானமே சிறக்கச் செப்பியும்; 223

குறைவிலேன்

கருமுகி லெனவொளிர் கண்ண னாகியே
மருவுகோ வியரொடு மகிழ்ந்து லீலைசெய்
திருவிளை யாடல்கள் செப்பு மென்றனக்
கொருதுறை யும்படர்ந் துற்றிடா தென்றும்; 224

அலைபுனற் றடவரா லருகிற் றெங்கினின்
குலைபழ முதிர்தரக் குதித்த றைந்திடும்
துலைவிலா மங்கலந் துன்னு சார்ங்கவெஞ்
சிலைவல மாறனைச் சேர்ந்த தாகவும்; 225

---

222. நாடித் திருமால் வரும்போது மனம் தெளிவுற்றும், அவன் செயலை நினைந்து ஊடியும், (பிரிவானோ என்று) கலங்கியும், கூடியும் தன்னுடைய அன்பை வெளிப்படுத்தினார். மால் தனது அருகு நண்ணிட எனப் பிரிக்க. தேற்று மொழியே, கலக்கத்துக்குக் காரணமாயிற்று (இறையனார் அகப் பொருள் காண்க).

223. மலரின்கண் மணம்போலத் திருமால் எங்கும் உள்ளனன் என்று ஞானத்தைப் பேசினார். இதனை அந்தரியாமித்வம் என்பர். கந்தம் - வாசனை. சிந்தியா - சிந்தித்து.

224. கோபியர்களுடன் விளையாடிய பெருமானை மறவாத எனக்குக் குறைவில்லை. "சன்மம் பலபல செய்து" என்ற பாசுரம்.

225. துலைவில்லி மங்கலத்தில் எழுந்தருளியுள்ள பெருமானை அடைந்தேன். வராலமீன்கள் பாய்வதால் தென்னங்குலைகள் உதிரும் தொலைவில்லி மங்கலம். மால் தன்னை எனப் பிரிக்க. திருமாலின் வில்லின் பெயர் சாரங்கம். தேங்காய் நெற்றைப் பழம் என்பது மரபு. "நாய் பெற்ற தெங்கம் பழம்" — பழமொழி.

வான்பொழி கன்மழை வரையின் மாற்றியே
ஆன்புரந் தளித்தவவ் வாழி யானொடும்
தான்படுந் துயரங்கள் தனைத்தன் தாயர்போய்
தேன்பொழி மொழியிற்செப் பியது போலவும்; 226

உண்பது முதலிய வுரைக்கும் யாவையும்
தண்படு புனற்றடஞ் சார்க ரம்மென
விண்படிந் தருந்துகோ ளூரின் மேவிவாழ்
பண்படு மளிவனப் படலை மாலென்றும்; 227

அந்தசெங் கதிருமி ழாழி மாலுக்கென்
சிந்தனை பகர்ந்திடச் செல்லும் புள்ளுகட்
கந்தமில் லாதமூன் றடுக்கு லோகமும்
தந்தன னாமெனச் சாற்றிற் றாகவும்; 228

இருவிசும் புறைபவ ரிறைஞ்சி யேத்திட
மருவுவேங் கடமெனும் வரையின் மீதுவாழ்
கருமுகில் வண்ணச்செங் கமலக் கண்ணனைத்
திருமகள் முதன்மையிற் சேவித்தே னென்றும்; 229

இன்னவா முறைமையி னிசைபெ றுங்கவி
பன்னுமா றனுமது வரையிற் பண்பொடுந்
தன்னையம் மாயவன் தனது யர்ப்பதம்
மன்னிடும் படிவர வழைத்தி டாமையால்; 230

---

226. கல்மழையைக் கோவர்த்தனம் கொண்டு பாதுகாத்தவன் முன்னிலையில் தான் படும் துன்பங்களைத் தாய்மார்கள் கூறியதாகப் பாடினார். ஆன் - பசு. "மாலுக்கு வையம் அளந்த" என்ற பதிகம்.

227. உண்பதும் பருகுவதும் யாவும் திருக்கோளூரில் வாழும் மாயவனே என்று பாடினார். புனல் தடம் - நீர்ப்பொய்கைகளை. விண் - மேகம். பண்படும் - பண்ணொடுகூடிய. அளி - வண்டு. வனப்படலை - திருத்துழாய்மாலை. "உண்ணும் சோறும்" என்ற பதிகம்.

228. ஒளியுமிழும் சக்கரம் ஏந்திய திருமாலிடம் தன் குறையைச் சொல்லும் பறவைகட்கு மூன்று உலகம் தருவேன். சிந்தனை - காதல். "பொன்னுலகு ஆளீரோ" என்ற பதிகம்.

229. திருவேங்கடத் தெம்பிரானை அலர்மேல் மங்கையை முன்னிட்டுச் சரண் புக்கேன். விசும்புறைபவர் - நித்திய சூரியர். "மாண்டு பிறக்கும் துயர் போய் வைகுந்தம் புக்கவரும், மீண்டு தொழக் காதலிக்கும் வேங்கடம்" என்பர் திவ்யகவி. "உலகம் உண்ட பெருவாயா" என்ற பதிகம்.

230, 231. இவ்வாறு பலபடியாகப் பாடியும் திருமால் தன்னுடைய பரமபதம் வழங்காமையால், "இறைவனே! இவ்வுடம்பை ஐம்புலன்களும் வாட்டுகின்றன. என்னைக் காப்பாற்றியருள்" என்று பாடினார். புவியளந்த தாள் - உலகையளந்த திருவடி. "உண்ணிலாவிய ஐவரால்" என்ற பதிகம்.

மயலைப் போக்க வேண்டல்

அம்புவி யளந்ததாட் கடிமை யாமென
நம்பினோர் தமக்குவீ டளிக்கும் நாரணா
வெம்பியிவ் வுடலினை வெதுப்பு கின்றதாம்
ஐம்புலன் வயத்தெனை யளித்தியோ வென்றும்; 231

மயல்கொடிவ் வாறதாய் வருந்து மாதினைக்
கயல்விழி யன்னையர் கடிது கொண்டுபோய்
புயல்வணம் மால்முனம் பொருந்தி யிட்டவள்
செயல்களை யவரொடுஞ் செப்பு கின்றதும்; 232

நாட்டிய தறியுளே நார சிம்மமாய்க்
காட்டிய திருவுருக் கமல நாபியான்
வேட்டைசென் றுறுந்திருப் பேரை மேயவன்
தாட்டுணை யடைந்திடுஞ் சார்ப தாகவும்; 233

சித்தமுள் ளுருகிடச் செய்ய கண்முகம்
கைத்தலம் உந்திதாள் கமல மாமலர்
ஒத்திடுங் கருமுகி லுருவ நாரணன்
பத்தவ தாரமும் பணிதல் வேண்டியும்; 234

உடுத்திடு முடைக்கட லுடைய பார்மிசை
எடுத்தவவ் வுருவுக டோறு மெம்பிராற்
கடுத்துள வரும்பகை யகலு மாறதாய்
கடுத்தொழி கருமமுங் காண வேண்டியும்; 235

---

232. ஆழ்வார் ஆற்றாமை மீதூரத் தலைவியின் நிலையை அடைந்தார். தாய்மார்கள் பராங்குச நாயகியைத் திருமால் திருவடியில் சமர்ப்பித்து, 'இவள் திறத்து என் செய்கின்றாய்?' என்று முறையிட்டனர். "கங்குலும் பகலும்" என்ற பதிகம்.

233. திருமால் வாழும் தென்திருப்பேரை அடைந்து அவன் பாதங்களை அடைந்ததாகப் பாடினார். தறி - தூண். கமலநாபியான் - பதுமநாபன். "வெள்ளைச் சுரிசங்கொடு" என்ற பாசுரம்.

234 — 238. ஆழ்வார் எம்பெருமான் கொண்ட பத்து அவதாரங்களையும் சேவிக்க ஆசைப்பட்டார். இறைவனும் அந்தத் திருமொழிப்படியே அவதாரங்களைக் காண்பித்தான். அவதாரங்களைப் புகழ்ந்து பாடினார். இறைவன் ஆதியில் இரண்டு வடிவம் கொண்டதையும், பின்னர் அவை ஆராயும்படியான வடிவங்களானதையும் பாடினார். "ஆழியெழச் சங்கும் வில்லும் எழ" என்ற பதிகம்.

இச்சைகொண் டுரைப்பதை யுளத்தி லெண்ணியே
பச்சைமா மலையெனும் படிவ வச்சுதன்
மச்சமே முதலுரு வமைந்து வாய்த்துள
அச்செயல் யாவையு மறியத் தோன்றலும்; 236

வெந்திற லவுணர்கள் முதல வெம்பகை
வந்தது மவைகளை மாற்றக் கொண்டுள
அந்தமில் கோலமு மமைந்த யாவையும்
சிந்தைகொண் டுணர்ந்திடுஞ் செய்கை தன்னையும்; 237

சீருறு காரணச் செம்ம லாதியில்
ஈருரு வங்களி னியந்த தியாவுமோர்
ஓருரு வங்களா யுற்ற செய்திகள்
பாருளோ ருணர்வகைப் பரிவிற் பாடியும்; 238

பரிந்துளத் தழைத்தபாண் டவர்தம் பத்தினிக்
குரிந்தவத் திரமுவந் துதவு மாலுரு
தெரிந்திடா தகன்றிடச் சிந்தை வாடியே
பிரிந்துள துயர்களைப் பின்பு சொல்லியும்; 239

உருவெளிக் காட்சி உரைத்தது

அருவென வுருவென் அதல மாமுதல்
இருநிலம் விசும்புபல் லிடத்து முற்றுமாய்ச்
சுருபமா னவவெலாந் துலங்கு மாறதாய்
உருவெளி கண்டதை யுரைத்த தாகவும்; 240

---

239. 'கோவிந்தா!' என்று அழைத்த பாஞ்சாலிக்கு ஆடை வழங்கிய பெருமாளின் திருவுரு தெரிந்திடாமையால் துயரமுற்றுப் புலம்பினார். அகன்றிடலில்லிப் போக. "பாமருவு மூவுலகு" என்ற பதிகம்.

240. அருவமாகவும் உருவமாகவும், பாதாளத்திலும் பூமியிலும் விண்ணிலும் இன்னும் மற்றைய இடங்களிலும் எல்லாப் பொருள்களாகவும் இறைவன் இருப்பதைக் கண்டதாகக் கூறினார். அதலம் - பாதாளம். "அதல விதலமுதலந்தத் தலங்களென" என்பர் அருணகிரிநாதர் (திருப்புகழ்). சுருபம் - ஸ்வரூபம். "மாயா வாமனனே" என்ற பதிகம்.

கூவிக்கொள்ளாக் காரணம் யாதோ?

அன்னமாய் மறையயற் கறைந்த மாதவா
நின்னுயர் பதந்தனை நேர்ந்து வைகுதற்
கின்னமு மடியனை யழைத்தி டாததிங்
கென்னகா ரணமென விசைக்குங் காலையில்; 241

கவியிசைப்பதற்கே

மாதவ னவனெதிர் வந்து மன்னியே
பூதலந் தனிலுனைப் பொருந்த வைத்துள
தேதுகா ரணமெனி லிசைபெ றுங்கவி
ஓதுதற் காமென வுரைத்துப் போயினான். 242

சொன்னசொல் லிருசெவி துன்னி யெய்தலும்
இன்னணம் வாழுப காரமேற்கிலேன்
அன்னமா யவன்றனக் கரிய மாமறை
என்னகை மாறுள திழைத்த தென்கையும்; 243

அத்தகை யியற்றுமா றனைவி வப்பதி
ஒத்துறை நாரண னொளிருந் தாள்களில்
சித்தமுற் றடிமையான் செய்தி டுந்தினம்
எத்தின மோவறிந் திடுகிலே னென்றும்; 244

---

241. அன்னமாய் அவதரித்து பிரம்மனுக்கு வேதம் பகர்ந்தவனே, உன்னுடைய பரமபதத்துக்கு அடியேனை அழைக்காத காரணம் யாது? என்று வினாவினார். "என்றைக்கும் என்னை" என்ற பதிகம்.

242. இறைவன் காட்சி வழங்கி, 'யான் உம்மைப் பூமியில் தங்க வைத்தது பண்ணொடுங் கூடிய பாசுரங்களை நீங்கள் பாட வேண்டும்" என்பதற்காகவே எனச் சொல்லிவிட்டு மறைந்தான். "ஓதுதற்காம்" என்றதனால் ஆழ்வார் பாடுபவை வேதம் என்று தெரிகிறது. "ஓதல் ஓதுவித்தல்" என்ற தொடரை நோக்குக.

244. திருமாலின் விவப்பதியில் (பரமபதத்தில்) இலங்கும் திருவடிகளில் அடிமை செய்வது எப்போதோ? என்று வருந்திப் பாடினார். விவப்பதி என்ற இடத்தில் திவப்பதி என்று இருப்பின் பொருள் எளிதாகும். "திவத்தினும் பசுநிரை மேய்ப்புவத்தி" என்பது திருவாய்மொழி. மால் + தனை = மாறனை, "இன்பம் பயக்க" என்ற பதிகம்.

மாசிலா முழுமதி யனைய வாண்முகக்
கோசலை திருவயி றுதித்த கோவலன்
ஓனசயுற் றுளகட லுலக வாழ்க்கையின்
ஆசைவிட் டவர்வய மாவ னென்னவும்; 245

முருகவிழ் துளவணி முகுந்த னம்புயத்
திருவடி யிணைகளைத் தமது சிந்தையுள்
மருவவைத் திடுமவர் வைகுந் தத்தினுக்
கருகர்க ளாகவே யமைவ ரென்னவும்; 246

அத்தகைய மாயவ னமருங் சீர்வைகுந்
தத்தினுக் கருகர்க ளாகச் சார்ந்திடும்
முத்தரைத் தெரிசியா முகம லர்ச்சியாய்
சித்தமுள் மகிழ்ந்திடுஞ் செய்கை யாகவும்; 247

முத்தர்கள் தம்மொடு முளரி வாழயற்
கத்தனாம் மாதவ னாங்க மைந்தொரு
மித்துறை பெருமித விதங்க ணோக்கியே
புத்தமு தருந்தலிற் களிபொ ருந்தியே; 248

நீர்மடையாயினான்

கார்நிற வவுணர்தங் குலத்தைக் காய்ந்திடுங்
கூர்வளர் திகிரிகை மாயக் கூத்தனார்
வார்மழை யுறும்புனல் வரத்தன் னுள்ளகால்
நீர்மடை யாமென நேய மாயினான். 249

---

245 கோசலை வயிற்றில் தோன்றிய திருமால் உலக வாழ்வில் ஆசைவிட்ட வரின் வசப்படுவான் என்றார். இங்கே கோவலன் என்றது திருமாலை.

246. முகுந்தனின் திருவடிகளில் தமது மனத்தை வைத்தவர் வைகுந்தம் அடைவதற்குத் தகுதி பெறுகின்றனர். முருகு - வாசம் (தேன்). "முருகவிழ்க்கும் பசுந்துளப முடியோனே" என்பர் வில்லிபுத்தூரார் (பாரதம்). அருகர் - தக்க வர்கள் (பக்கத்திலிருப்பவர்).

247 — 249. பரமபதத்தில் வாழும் முத்தர்களைக் கண்டு மகிழ்ந்தார். இறைவன் முத்தர்களுடன் வாழும் பெருமிதம் நோக்கி அமுதம் உண்டவர்போல் மகிழ்ந்தார். மழைத் தண்ணீர் மதகில் பாய்வதுபோல், மாயக் கூத்தன் தம்முள் புகும்படி நேயம் பெருகினார்.

247. தெரிசியா - கண்டு.

248. முளரி வாழ் அயற்கு - தாமரையில் வாழும் பிரமனுக்கு. அத்தன் - தந்தை.

249. கால்நீர் மடை - வாய்க்காலில் இருக்கின்ற மதகு. "மடைமாற்றி உன்றன் திருவடிக்கே செலவைத்தருளே" என்பர் திவ்யகவி.

எம்பெருமான் ஆழ்வார் உள்ளக் கோவிலில் வாழ்தல்

நேயமுட் கொண்டவ னெறிவ ழாமலே
தூயநல் லுள்வழி யாகத் துன்னியுற்
றாயவ னுயிர்ப்புலத் தணுகி வைகினான்
மாயமான் பின்தொடர் மாய னென்பவே. 250

கனைக்குமா திரைக்கருங் கடலின் வண்ணமால்
நினைக்குமுன் றனதுயி ரெனநி ரப்பிய
மனைக்கலந் துறைந்தமை மனங்கொண் டிவ்வணம்
எனைப்பிரி யாதுநீ யிருந்தி டென்னவும்; 251

முலைமிசைப் பிறைநிகர் முத்தின் றாழ்வடக்
கலையணி மாதரிற் கரிய மாணிக்க
மலையவ னேயென மற்ற வன்புகழ்
நிலைமையைப் பின்னரும் நேர்ந்து சொல்லியும்; 252

அடியார்க்கடியேன்

படியினைச் சுருட்டுமோர் பாயெ னக்கொளும்
கொடியனை ஏன்மாய்க் கொலைபு ரிந்திடும்
நெடியமால் திருவடி நேயங் கொண்டுள
அடியவர்க் கடியவர்க் கடியன் யானென்றும்; 253

மல்லலம் புவியுளீர் வழங்கி டும்கைமா
றில்லது புரப்பவ ரிலங்கு மாலடி
அல்லது வேறிலை யதனை நீரறிந்
தொல்லையி லவன்பதத் துறுமி னென்னவும்; 254

---

250. ஆழ்வாரின் ஆன்மாவுக்குள் இறைவன் புகுந்து தங்கினான். இதை அறிந்த ஆழ்வார் எப்போதும் இப்படியே இருப்பாயாக என்றார். ஆழ்வார் நாயகியாகி இறைவன் புகழை விவரித்தார்.

253. உலகைப் பாயாகச் சுருட்டிய இரணியாட்சனைக் கொன்ற திருமாலின் அடியவர்கட்கு அடியவன் யான் என்று பாசுரம் பாடினார்.

254. பயன் கருதாது உதவுகின்றவர் உலகில் இல்லை. திருமாலின் திருவடியே உதவும். ஆதலின், அதனையே பற்றுங்கள் என்றார். மல்லல் - வளம். கைம்மாறில்லது - பிரதி உபகாரம் கருதாமல். ஒல்லையில் - விரைந்து. "கொண்டு பெண்டிர்" என்ற பதிகம்.

திருப்பதிகள் மங்களாசாசனம்

பொருப்பென மாளிகை பொருந்து செம்மணி
அருக்கனென் றம்புய முகைய விழ்ந்திடும்
திருப்புளிங் குடிகிடந் திடுமத் தேவனை
விருப்புடன் கவிபல விளங்கப் பாடியும்; 255

கரமலர் குவித்திரு கண்ணிற் கண்டுளோர்
பரகதி யணுகுறும் படிய ளித்தருள்
வரகுண மங்கைவீற் றிருந்த மால்புகழ்
விரகுடன் கவிபல விரித்துப் பாடியும்; 256

வைகுந்த மல்குல்க டெரிய வாவிசேர்
வைகுந்த மனையகண் மாத ரார்புட
வைகுந்த மதன்மிசை மருவ வைத்திடும்
வைகுந்த நின்றமால் வளங்கள் பாடியும்; 257

மீண்டுமப் புளிங்குடி விளங்கப் பள்ளிகொள்
தாண்டுறு திரைக்கருஞ் சலதி வண்ணனை
ஈண்டுணர்ந் தெனக்கொரு கைங்கிரி யஞ்சொல
வேண்டுமென் றுளந்தனில் விரும்பிக் கூறலும்; 258

---

255. திருமாளிகையில் உள்ள மாணிக்கங்களைச் சூரியன் என்று கருதித் தாமரை மலரும் திருப்புளிங்குடி மாயனை விரும்பிப் பாடினார். பொருப்பு - மலை அருக்கன் - சூரியன். அம்புய முகை - தாமரை மொட்டு. "பண்டை நாளாலே" என்ற பதிகம்.

256. கரங்குவிப்பவருக்குப் பரமபதம் தரும் வரகுணமங்கைப் பெருமானைப் புகழ்ந்து பாடினார். "புளிங்குடி கிடந்து" என்ற பாசுரம்.

257. மறைவிடம் தெரியும்படி வாவியில் (குளத்தில்) நீராடும் கூர்மையான குந்தம் என்ற ஆயுதம் போன்ற கண்களையுடைய மாதர்களின் புடவையை வாரிக் கொண்டு குருந்த மரத்தில் வைத்திருந்த (ஸ்ரீவைகுண்டம் என்ற திருப்பதியில் இருக்கின்ற) திருமாலைப் பாடினார். இது "வைகுந்தர் தாமரை" என்று தொடங்கும் திருவரங்கத்தந்தாதியைப் பின்பற்றிய பாடல். "வைகும் தம் அல்குல் கள் தெரிய வாவிசேர், வை குந்தம் அனைய கண் மாதரார் புடவை, குந்தம் மிசை மருவ வைத்திடும் வைகுந்த நின்றமால்" என்று பதங்களைப் பிரித்தால் பொருள் எளிதாகப் புலப்படும் வாவி - குளம். வை - கூர்மையான. குந்தம் - ஈட்டி. குந்தம் - குருந்த மரம். வைகுந்தம் - ஸ்ரீவைகுண்டம் என்னும் திருப்பதி.

258, 259. மறுபடியும் திருப்புளிங்குடி இறைவனிடத்தில் அடியேன் செய்ய வேண்டிய பணி யாது? கூறுக; என்றான். "நீ பாடும் பணியே பணி" என்றனன் இறைவன்.

கேட்டுள மகிழ்வொடுங் கிளர்த்து மின்னிசைப்
பாட்டினா லவன்றனைப் படலை மாதவன்
ஈட்டுறு முளந்தெளிந் தெழுந்து செய்வினை
யாட்டுறு கயிங்கிரிய மதனைச் செப்பினான். 259

மாயவா வருக!

அம்மொழி யிருசெவி யணுகத் தன்னுளம்
விம்முறு முவகையின் மீண்டு மாயவா
கைம்மலர் மிசைகதி ராழி சங்குடன்
வம்மென வழைத்தனன் மகிழ மாலையான். 260

வந்தனன் பிரான்

அழைத்தவம் முறைகதி ராழி சங்குடன்
தழைத்தவன் பொடுமவன் முன்பு சார்ந்தனன்
பிழைத்தன வுளங்கொளா தடியர் பேணிமுன்பு
இழைத்ததீ வினையெலா மிரிக்கும் நாரணன். 261

மறைய வருந்துதல்

(வேறு)

சார்ந்த கேசவன் றனையறிந் தாவலார்ந் தொழியச்
சேர்ந்த வன்றிரு வடிவினைச் சிறந்தபே ரன்பு
கூர்ந்த நெஞ்சொடு மனுபவித் திடலுமக் கோலம்
தீர்ந்து கண்மறைந் திடுதலுந் தனதுளந் திகைத்தே; 262

260, 261. அம்மொழி கேட்ட ஆழ்வார். சங்கு சக்கரத்துடன் காட்சி தர வேண்டும் என்று திருமாலை அழைத்தார். அப்படியே இறைவனும் காட்சி வழங்கினான். மாயவா - மாயவனே. கதிர் ஆழி - சூரியனைப் போன்ற சக்கரம். பிழைத்தன - குற்றங்களை. உளங்கொளாது - மனத்தில் வைக்காமல். முன்பு இழைத்த - முன்பு செய்த. இரிக்கும் - போக்கும்.

262. ஆழ்வார் எம்பெருமானை ஆவலுடன் அனுபவித்து மகிழ அவன் தன் திருவுருவினை மறைத்துக்கொண்டான். ஆழ்வார் திகைத்தார். ஆவல் ஆர்ந்து - ஆசை நிரம்பி. ஒழிய - (மற்றைய விருப்பங்கள்) நீங்க. தீர்ந்து - (எதிரே) இல்லாதபடி.

பறவை கூவுபே ரொலியொடு பாவைய ரொலிகா
துறலு மஞ்சிநெஞ் சழிந்துபற் பலவகை யுரைத்தும்
நறவ லங்கல்நா ரணனினி நணுகிலாங் கவர்க்குத்
திறமு டன்பல கைங்கிரியங் செய்கருத் திருந்தான். 263

இறைவன் அடியன் ஆதல்

இருக்கு மெல்லையவ் வடியருக் கெளியனா மவனும்
பொருக்கெ னாவடைந் திவர்க்குப்பூங் கேசமே முதலாய்
திருக்க ழன்மல ரளவதாய்ச் செயுங்கயிங் கிரியம்
உருக்க மோடிழைத் திடுதலும் அதையுள முணர்ந்தே. 264

நம்மிருவருக்கும் பேதமில்லை

ஈதெ னோவென மாறனாங் கியம்பலும் எழிற்பூ
மாது கேள்வனு மகிழ்வொடு நம்மிரு வருக்கும்
பேத மில்லையொன் றாயிடும் பேரின்ப மெனவே
ஓத லோடுமவ் வாசகங் கேட்டுப்பின் புரைப்பான். 265

தடியெ யிற்றிரா வணன்றனை தனதுவால் கொண்டே
முடியு றப்பிணித் தெழுந்துசென் றிடுமுரண் வாலி
நெடிய மார்பக முருவிடக் கணைவிடு நெடுமால்
அடிய ருக்கடி யவனென அகமகிழ்ந் துரைத்தும்; 266

---

263. பிரிவாற்றாமையால், பறவையின் ஒலியும் பாவையர்களின் பேச்சும் துன்பத்தைத் தந்தன. ஆழ்வார் இறைவன் வந்தால் அவனுக்குப் பணி செய்ய லாம் என்று கருதியிருந்தார்.

264 — 267. ஆழ்வார் திருவுள்ளம் உணர்ந்த பெருமாள் விரைந்து வந்து ஆழ்வாருக்குப் பணிவிடை செய்தான். ஆழ்வார் இது முறையோ? என்றார். பெருமாள் நம்மிருவருக்கும் வேறுபாடில்லை; ஏகமாக இரும். இதுவே பேரின்பம் என்றான். வாலியைக் கொன்ற மாயவன் அடியார்க்கு அடியான் என்று கூறினார்.

264. கேசம் முதல் கழல் மலர் அளவாய் - முடிமுதல் அடிகாறும். கயிங் கிரியம் ஆவது பூச்சூடுதல், ஆபரணமணிதல், சிலம்பு திருத்துதல் முதலான செயல்கள்.

265. நம்மிருவருக்கும் - நம் இருவருக்குள்ளும்.

266. தடி எயிறு - மின்னல் போன்ற பல். இராவணனையே வாலால் கட்டும் வாலி.

தூதனுப்புதல்

கார்ப்பெ ருங்கடற் பிரமகற் பந்தனிற் கலிசெய்
ஆர்ப்புங் கோடையின் முகின்முழக் கதிர்ச்சியு மவிய
வார்ப்பெ ருர்முழ வதிருமூ ழிக்கள மால்பாற்
பார்ப்பி னங்களைத் தூதனுப் பியதெனப் பகர்ந்தும்; 267

குருதி வேல்ஐவ ரிழந்தநாட் டினைப்பெருங் கொள்கை
கருதி மாநக ரடைந்துகாந் தாரிகா தலநீ
தருதி யென்றுரை தூதனைத் தூதிபோய் சார்ந்து
வருதி யென்றழைத் துறுதன்முன் மனம்பொறா மையினால்.

திருநாவாய் அணைய விரும்பினார்

மன்னர் மூவெழு குலத்தைவேர் களைந்தபோர் மழுவோன்
தன்னி ருஞ்சிலை வாங்கியெய் கணைதனக் கன்னோன்
முன்ன ருந்தவந் தனையிலக் கருளிய முகுந்தன்
துன்னி வாழுநா வாயினைத் தொடர்ந்திட நினைத்தும்; 269

---

267. திருமூழிக்களத்துப் பிரானிடம் பறவைகளை ஆழ்வார் தூதுவிட்டார். ஊழியின் முடிவில் கடல் செய்யும் ஆரவாரமும், கோடை மேகத்தின் இடியும் அடங்க மத்தளம் முழங்கும் திருமூழிக்களம். பிரமகற்ப முடிவில் - பிரம்ம தேவனால் கற்பிக்கப்பட்ட உலகம் முடியும் காலத்தில். அவிய - குறைய. "எங்கானல் அகம் கழிவாய்" என்ற பதிகம்.

268 — 270. திருமூழிக்களத்துப் பிரானிடம் தூது சென்ற பறவைகள் பெருமானை அழைத்து வருவதற்குள் ஆற்றாமையால் ஆழ்வார் திருநாவாய் என்ற திவ்ய தேசத்தை அடைய நினைத்தார். அடைய முடியாமையால், அன்றில், குயில், யாழ் முதலானவற்றின் ஒலியால் வாடினார். "மல்லிகை கமழ் தென்றல்" என்ற பதிகம்.

268. பாண்டவர் இழந்த நாட்டைப் பெறத் தூது சென்ற பெருமாள். குருதிவேல் ஐவர் - இரத்தம் தோய்ந்த வேலினை ஏந்திய பாண்டவர்கள். காந்தாரி காதல - காந்தாரியின் மகனே.

269. பரசுராமனின் வில்லை வாங்கி வளைத்து அவனுடைய தவத்தையே கணைக்கு இலக்காக்கிய பெருமாள். மழுவோன் - பரசுராமன். "செருவிற் சினவி இருபத்தொருகால் அரசு களைகட்ட பரசுராமன்" என்று கல்வெட்டுக் கூறும்.

மெய் தளர்ந்தார்

ஆங்கு மெய்துதற் கமைந்திடா தன்றிலின் தொனியும்
மாங்கு யின்முழங் கொலியும்யாழ் வழங்கிடு மொலியும்
தேங்க மழ்ந்தபூந் தென்றலும் வருந்திடத் திகைத்திட்
டேங்கி மெய்தளர்ந் திதயமுங் கலங்கியே யிருந்தும்; 270

வணங்குமின்

அந்த ரத்தவ ரலைகடல் கடைந்தநா ளழுந்தும்
மந்த ரத்தினைக் கமடமாய் தாங்கிய மாலைக்
கந்த ரத்தமர் கடுவனோ டயன்கட வுளர்கள்
வந்தி செய்கண புரம்சென்று வணங்குமி னெனவும்; 271

மதத்த வாரணம் அழைத்திட வந்திடங் கரினைக்
கதத்த ழித்தமோ கூரில்வாழ் கண்ணனே பரம
பதத்தி னுக்கருந் துணையென வருகுவன் பாரீர்
இதத்து டன்நலத் திருவடி வணங்குமி னெனவும்; 272

குரும ணிச்செழுங் கோயின்மேற் குளிர்ந்துகண் ணுறங்கும்
திருவ னந்தமா புரமெனச் சிறந்தமா நகரே
பொருவில் சீர்ப்பர மப்பத மாகுமம் புவியீர்
மருவி யாங்குவாழ் மால்பதம் வணங்குமி னெனவும்; 273

---

270. பிரிந்தார்க்குக் குயில் ஒலி முதலானவை துன்பம் செயும்.

271. தேவர்கள் கடல்கடைந்தபோது மந்தரமலையை ஆமையாய்த் தாங்கிய திருமாலை, சிவபிரான் முதலானவர்கள் வணங்கும் திருக்கண்ணபுரம் சென்று வணங்குங்கள் என்று ஆழ்வார் உபதேசம் செய்தார். கமடம் - ஆமை. "மீன மாகியும் கமடமதாகியும்" என்பது வில்லிபாரதம். கந்தரம் - கழுத்து. கடுவன் - விஷத்தையுண்ட சிவன். வந்திசெய் - வணக்கம் செய்யும். "குஞ்சியார வந்தி செய்ய" என்பது தேவாரம். "மாலை நண்ணித் தொழுமினோ" என்ற பதிகம்.

272. 'கஜேந்திரன் அழைக்க வந்து முதலையைக் கொன்று திருமோகூரில் வாழும் இறைவனே முத்திக்குத் துணையாவான்' வணங்குமின். வாரணம் - யானை. இடங்கர் - முதலை. கதத்தழித்த - கோபத்தாலே அழித்த. இதம் - இன்பம். "இதந்தரு மடந்தையொ டிருந்துயி ருடம்புபோல்" என்பது திருவாதவூரர் புராணம். "தாள தாமரை" என்ற பதிகம்.

273. மணிகள் பதித்த கோவிலில் குளிர்ந்து கண்ணுறங்கும் பெருமானின் திருவனந்தபுரமே பரமபதமாகும். உலக மக்களே சென்று வணங்குமின். "கெடும் இடராய வெல்லாம்" என்ற பதிகம்.

அவன் அடியவர்க்கு எளியவன்

மீண்டு மாயர்தம் பாடியின் மதுரைவிட் டணுகி
வேண்டு றும்விளை யாட்டெலாம் விரும்பிச்செய் விதங்கள்
தூண்டு மன்பொடு சொல்லியு மாங்கவன் தொண்டு
பூண்ட அன்பருக் கெளியவ னாமெனப் புகன்றும்; 274

பின்ன ருங்கவி புகலுவான் கண்ணபி ரானே
பன்னு சீர்ப்பரம் பொருளதா மாதலிற் பாரீர்
துன்னு மன்பொடு தொடர்ந்துசென் றெதிர்தொழு தேத்தி
அன்ன வன்திருப் பதமல ரடைகுமி னெனவும்; 275

மேனியுடன் பரமபதம் வருக

அன்ன காலைவாட் டாறுடை யச்சுதப் பெருமான்
தன்னை யன்பொடு பாடலும் மகிழ்ந்தவன் றனைத்தான்
பன்னு சீர்ப்பர மப்பத வீட்டின்மெய் யுடனே
மன்னு மாறுகொண் டேகுவான் மனத்திடை நினைந்தான். 276

ஆழ்வார் மறுப்பு

அச்சு தன்திரு வுளந்தனை யறிந்துநம் மாழ்வார்
பச்சை மாமுகில் மேனியோய் பல்புழுக் கூடாம்
இச்ச ரீரம தனைக்கொடு போவதற் கிதையத்
துச்ச ரித்திட லொழித்திட வேண்டுமென் றுரைத்தான். 277

---

274 — 275. மதுரையை விட்டு ஆயர்பாடி யடைந்த கண்ணனின் திருவிளை யாடல்களைச் சொல்லி, அவன் தொண்டருக் கெளியவன். கண்ணபிரானே பரம் பொருள். ஆதலின் அவனுடைய திருவடியை அடையுங்கள் என்றார். பாரீர் - உலகமக்களே. "வேய்மரு தோளினை" என்ற பதிகம்.

276 — 278. திருவாட்டாற்றுப் பெருமானை அன்புடன் பாடினார். பெரு மான் ஆழ்வாரைப் பூத உடலுடன் பரமபதம் கொண்டுசெல்லக் கருதினான். 'இந்தப் புல்லிய உடம்பைப் பரமபதத்துக்குக் கொண்டு செல்வதை மனத்துக் குள்ளும் பேசாதே' என்று ஆழ்வார் மறுத்தார். 'எனக்கு இவ்வுடலுடன் கொண்டு செல்வதே மகிழ்ச்சி; மறுக்காதே' என்று தன்க்குவமையில்லாதவன் பகர்ந் தான். இங்குத் திருமால் "என்சொன்னீ ரிப்புவிதன்னில் இலங்கும் சாந்தம் அணி பவர்கள்; தஞ்சமாக அவையிருந்த பாண்டமுடைத்தோ சாத்துவர்கள்" என்று கூறியதாக வடிவழகிய நம்பிதாசர் கூறுகிறார். "அருள்பெறுவார் அடியார்" என்ற பதிகம்.

எம்பிரான் வேட்கை

எனக்கு கப்பெனி லென்னிடை யிருந்துவந் துதித்த
உனக்கு கப்புறா தெனாதுட லுடன்கொடு போவேன்
மனக்கொள் நீமறுத் திடலென மனமகிழ்ந் துரைத்தான்
தனக்குத் தானலா தொருவரு நிகரில்மா தவனே. 278

மாயவன் மடிபிடித்திழுத்தான்

ஏது ரைப்பினு மினியவ னணுகுற வியையிக்
கோது றும்பல புழுமல்கு கூடுகொண் டவணி
போத வீரெழு புவனமோ டகிலமும் பூத்த
மாது கேள்வனே தகாதென மடிபிடித் திழுத்தான். 279

அர்ச்சராதி மார்க்கம்

இழுத்தி டும்பராங் குசன்தனக் கிதயமுட் கனிந்து
பழுத்த வன்பொடர்ச் சராதிமார்க் கப்பரி சறிவித்
தழுத்து கைமடி யதுதனை விடுவித்துக் கொண்டான்
வழுத்து வார்தமக் குயர்பத மருளுமா தவனே. 280

காட்டு மர்ச்சரா மார்க்கமே கடிதுசென் றாழ்வார்
மீட்டு மானிட வுருவமாய் மிகுமலப் புழுசேர்
கூட்டு வைகின மாதலாற் கூடியே பரம
நாட்டு றும்மடி யவருடன் பொருந்துதல் நயந்து; 281

---

279. ஆழ்வார் மறுத்துப் பேசியும் பெருமாள் உடலுடன் பற்றிச் செல்ல அருகில் வந்தனன். ஆழ்வார் என்னைப் பற்றி இழுத்துச் செல்லாதே என்று கூறி இறைவனின் மடியைப் பற்றி இழுத்தார். இனியவன் - திருமால். பல புழு மல்கு கூடு - பலவிதமான புழுக்கள் நிரம்பிய உடல். அகிலமும் பூத்த - உலகத்தை யெல்லாம் படைத்த. "செஞ்சொற் கவிகாள்" என்ற பதிகம்.

280. பெருமாள் அர்ச்சராதி மார்க்கமெனும் ஒளிவழியை அறிவித்துத் தன்னை விடுவித்துக்கொண்டான். இதயம் உள்கனிந்து பழுத்த அன்பு என அன்பின் தன்மையை விவரிக்கிறார் கவிஞர். வழுத்துவார் - புகழ்பவருக்கு. மாதவன் - மது என்ற வித்தையால் உபாசிக்கப்படும் திருமால். மா+தவன் எனக் கொண்டு திருமகள் கேள்வன் என்பதே பெருவழக்கு. சஹஸ்ரநாம பாஷ்யம் பார்க்க. "சூழ்விசும்பு அணிமுகில்" என்ற பதிகம்.

281 — 282. எம்பெருமான் காட்டிய அர்ச்சராதி மார்க்கத்தில் சென்று மீளவும் புல்லிய உடம்பில் தங்கினோமே என்று வருந்திப் பரமபதத்தில் அடியவர் களுடன்கூடி வாழ்தலை விரும்பினார். ஆழ்வார்க்குப் பரமபக்தி அதிகரித்தது. ஆழ்வார் ஆணையிட்டு என்னை வரவழைத்துக்கொள் என்றார். கஜேந்திரனைப் போலக் கூவினார்,

பெருமாள் ஆணை

பரம பத்திமீ தோங்குறப் பலவுமீன் றருளும்
பிரம னைத்தருந் தாதையைப் பேரன்பிற் றலைமேற்
கரம லர்க்குவித் தாணையிட் டடியனைக் கடுக
வரவ ழைத்திடென் றானைபோற் கூவினன் மாதோ. 282

எம்பெருமான் காட்சி வழங்கினான்

கூவு பேரொலி யிருசெவி குறுகநா ரணனும்
வாவு வெஞ்சிறைக் கலுழன்மேல் மரகத மலைபோல்
தேவர் கின்னரர் சித்தர்கள் சிவனயன் முதலோர்
யாவ ருந்தொழு தேத்திடத் திருவொடு மடைந்தான். 283

ஆழ்வார் பெற்ற பேறு

தெள்ளு தண்புனல் பெருகியே யருகுறச் சேர்ந்த
பள்ள மெய்துறு பான்மையிற் பராங்குசப் பெருமான்
புள்ளின் மேல்மர கதமலை போலவந் தருளும்
கள்ளு றுந்துள வணியுநா ரணனொடுங் கலந்தான். 284

(வேறு)

இத்தன்மை யாக வுயர்நா ரணன்ற
னெதிர்பேசி யேக மனதாய்
ஒத்துச் சிறந்த பரிசும் அவன்ற
னொடுதான் கலந்த செயலும்
சித்தம் மகிழ்ந்து ரகஸ்யார்த் தமான
திருவா சகங்கள் பலவும்
வைத்துச் சிறந்த திருவாய் மொழிக்கண்
வகையோ டுரைக்கு மளவில்; 285

---

283. பேரொலி கேட்ட பெருமாள் கருடன்மேல் மரகதமலைபோல் தேவர், கின்னரர், சித்தர்கள், சிவபிரான், பிரமன் முதலானவர் புடைசூழத் திருப்புளியை அடைந்தான்.

284. குளிர்ந்த தண்ணீர் பெருக்கெடுத்துப் பள்ளத்தை (கடலை) அடைவது போல் பராங்குசப்பிரான் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியுடன் கலந்தார். பள்ளம் - கடல். "பள்ளக் காரியுண்டவனிடத் தன்புபதிந்து" என்று கவியரசர் பரஞ் சோதி முனிவர் பகர்வர் (திருவிளையாடற்புராணம்).

285 — 286. இப்படி நம்மாழ்வார் இறைவனுடன் எதிர்த்துப் பேசி, அவனுடன் கலந்த தன்மையை — ரகஸ்யமான வாசகங்களை— திருவாய்மொழியில் பாடும்போது, இறைவன் என் நகர்க்கு வா என்று கூறினான். அதுகேட்ட மதுர கவிகள், "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்ற பதிகம் நம்மாழ்வார்மேல் பாடினார்,

அவ்வா றிசைத்த கவிதன் செவிக்கண்
அணுகக் குளிர்ந்த மதியும்
ஒவ்வாத கோல முறுமா முகங்க
ளினவே யொளிர்ந்த பவளச்
செவ்வாய் திறந்து நகர்நீ செலற்கு
திருகென்ன வெய்து கெனவே
இவ்வாறு மாலு மாழ்வாரு மொன்றி
யுரையாடு மெல்லை யதின்வாய்; 286

கண்ணிநுண் சிறுத்தாம்பு

மறுவொன்றி லாத மதிமா முகத்து
மதுரக் கவிச்சொ லவனும்
உறுகாத லோடு மனதுள் ளிரங்கி
யுருகா மகிழ்ந்து கணினுண்
சிறுதாம் பெனச்சொல் பதினொன்று பாடல்
செழியச் சிறந்து வகுள
நறுமாலை சூடு சடகோபன் மீது
நவிலா அளித்து நவில்வான். 287

மதுரகவியாழ்வாரின் துயரம்

அனையைப் பிரிந்த தனமுண் குழந்தை
யதுபோ லருந்து யரினோ
டுனையின் றிழந்து கடல்சூழு மிந்த
வுலகிற் பொருந்தி டுவனோ
புனையுங் கவுத்வ மணிநார ணன்றன்
புகழ்வீட் டினிற்பு குதுநீ
எனையுங் கனிந்த மனதோ டுடன்கொ
டேகென் றுரைத்த வளவில்; 288

---

286. மதியும் ஒவ்வாதமுகம் கவின - சந்திரனும் ஒப்புரைக்க முடியாத முகம் அழகுபெற. நகர் - பரமபதம். திருகு - திரும்புவாயாக.

287. மறு ஒன்றிலாத மதி - களங்கமில்லாத சந்திரன் (இல்பொருள் உவமையணி). உறு காதல் - மிக்க காதல். நவிலா - நவின்று (பாடி).

288. 'பால் உண்ணும் குழந்தை தாயைப் பிரிந்து வருந்துவதுபோல் உன்னைப் பிரிந்து யான் உலகில் வாழ்வேனோ? என்னையும் அழைத்துக் கொண்டு செல்க' என்றார் மதுரகவிகள். தனமுண் குழந்தை - பாலையுண்ணும் குழந்தை. நாரணன்தன் புகழ் வீடு - பரமபதம்.

திருமால் கட்டளை

அஞ்சக் கரன்முளரி யயன்மா வரங்கள்
அவைகொண்டு வையம் நலியும்
வஞ்சக் கரன்ற சக்கிரிப னாதி
மாவா ளரக்கர் மடியச்
செஞ்சக் கரம்வெள் வளையும் துறந்து
சிலையும் வயங்கொள் கணையும்
கஞ்சக் கரங்கொள் திருமால் மகிழ்ந்து
கனிவாய் மலர்ந்து ரைசெய்வான்; 289

மதுரம் பொருந்து தமிழா லெடுத்து
மகிழ்வோ டுரைத்த கவியோர்
பதினொன்று தானு மெனையே துதித்த
பரிசாகு மாற னையுநீ
நிதமும் கனிந்து பிரியா திருக்கு
நெறிகே ளிவன்ற னிகராய்
சதிரொன்று மூர றிகழ்விக்ர கத்தை
சமைவித் தெழிற்கொ ளதனை; 290

---

289. சிவபிரான், பிரமன் முதலானவர்கள் வழங்கிய வரங்களால் உலகை வருத்திய கரன், தசக்கிரீவன் முதலானவர்களை அழிக்க, சக்கரத்தையும் சங்கையும் விட்டுவிட்டு, வில்லையும் அம்பையும் ஏந்திய திருமால் மதுரகவியிடம் இப்படி உரைத்தான். அஞ்சக்கரன் - அஞ்சு அக்கரன்; பஞ்சாட்சரத்தின் பொருளான சிவபிரான். முளரி அயன் - தாமரையில் வீற்றிருக்கும் பிரமன். வஞ்சக்கரன் - வஞ்சம் கொண்ட கரன். தசக்கிரிவன் - பத்துத்தலையான் (இராவணன்). வெள்வளை - வெள்ளையான சங்கு. கஞ்சக்கரம் - தாமரைமலர் போன்ற கை.

290 — 291. 'மதுரகவிகளே! தாங்கள் பாடிய பதினோரு பாசுரமும் (கண்ணிநுண் சிறுத்தாம்பு) என்னைப் பாடிய பண்புடையதேயாகும். தாங்கள் நம்மாழ்வாரை அர்ச்சையாக்கி, பொருனை நதியின் தென்கரையில் உள்ள திருப்புளியில் பிரதிஷ்டை செய்து ஆராதனம் செய்மின். இந்த நம்மாழ்வாரை நாமாக நினையும்' என்று திருமால் கூறினான்.

290. சதிர் ஒன்று மூரல் திகழ் விக்ரகம் எனப் பிரிக்க. சமைவித்து - படைக்கச் செய்து.

நீரார் செழும்பொ ருனையாறு தன்தென்
கரையில் நிகழ்ந்து வளரும்
ஏராரு மிந்தப் புளியென் றியம்பி
யிடுமா மரத்தி னடியில்
சீரா யெழுந்த ருளுமா றுஞற்றித்
தினமும் விதித்த முறையே
ஆரா தனஞ்செய் திவனாம தென்ன
வகமுட் பொருந்த நினைவாய். 291

மாறன் மறையை விளக்குக

பின்னும் இவன்செய் மறைநான் கெனச்சொல்
பிரபந்த நான்க வையையும்
மன்னும் புவிக்க ணிடையே விளங்கி
யிடுமாறு மானி டரெலாம்
பன்னும் படிக்கு முன்ஞான மெய்து
பலர்க்கும் உயர்ந்த பதவி
துன்னும் படிக்கும் அறிவித்து மாயை
தொடர்பைக் கழித்து விடுவாய்; 292

அத்தன்மை யெய்தி புவிமீ திருந்து
பலநா ளகன்ற வவதி
இத்தன்மை யாக யிவணெய்தி யாமும்
இவனுக் களிக்கு முறையே
சித்தங் கனிந்து நினையும் உயர்ந்த
திருநாடு மீது கொடுபோய்
வைத்தும் கலங்க லெனவன்பி னோடு
மதுரக் கவிக்குரை செய்தான். 293

---

291. 'இவனை நாம் என்று கருதுக' என்றான். உஞற்றி - செய்வித்து.

292 — 293. 'ஆழ்வார் திருவாய்மலர்ந்த நான்கு பிரபந்தத்தையும் மக்கள் புரியும்படி செய்து, அவர்கள் உயர்ந்த பதவி பெற உதவி மாயையைத் தொலைப்பாயாக. பல நாள்களுக்குப்பின் இவருக்கு இப்போது வழங்கும் திருநாட்டை உமக்கும் வழங்குவோம்' என்று எம்பெருமான் மதுரகவிகளிடம் உரைத்தான்.

மாறனுடன் திருமால் பரமபதம் உறுதல்

படிமீ துதித்துப் பெருமாயை தானும்
படரா தொழித்து மறையின்
முடிமீ துறத்தி டமாயி ருந்த
முளரிச் சிறந்த மலர்நேர்
அடிமீது சேர்த்து விடுமா றுரைத்த
தமிழ்மாற னாகு மவனை
மடிமீ திருத்தி மிசைதேவர் சிந்து
மலர்மாரி பந்தர் நிழலில்; 294

இருபாலி னங்கை யொருபாலு ளானு
மலரோனு மேத்தி வரவும்
புருகூத னாதி முடிவெண்ணி லாத
புலவோர் பணிந்து வரவும்
அருமாத வத்து முனிவோர்கள் வேத
மதுநாலு மோதி வரவும்
திருமா லெவைக்கு முயர்வா யுயர்ந்த
திருநா டடைந்த னனரோ. 295

மாறன் பனுவலால் மாண்புற்றார் பலர்

(வேறு)

அனைய வாறுமா லுடன்திரு வைகுந்த மடைந்த
வினையி லாச்சட கோபனார் விளம்பிய பாடல்
தனையு ணர்ந்திரு வினைகளுந் தடிந்துதண் டுளவம்
புனையு மாயவ னுயர்பதம் புகுந்தனர் புவியோர். 296

---

294 — 295. உலகிலே தோன்றி மாயையை உதறி ஒழித்து, வேதத்தின் முடிவில் இருக்கும் மலரடியில் சேர்த்துவிடும்படி உரைத்த ஆழ்வாரை, எம்பெருமான் மடியின்மேல் அமர்த்திக்கொண்டு, தேவர்கள் பொழியும் மலராலான பந்தலின் நிழலில், சிவபிரான் முதலான தேவர்கள் பக்கத்தில் புகழ்ந்து வரவும், முனிவர்கள் நான்கு வேதம் ஓதிவரவும் திருநாட்டை அடைந்தான்.

294. மலர் மாரி பந்தர் நிழலில் - மலர்மழை பந்தர்போல் இருக்க அதன் நிழலிலே.

295. இருபாலின் - இரண்டு பக்கங்களிலும். நங்கையொருபால் உளோன் - உமையம்மையை இடப்பாகத்திற் கொண்ட சிவபிரான். புருகூதன் - இந்திரன். புலவர் - தேவர். (மணக்குடவர் நிலமிசை என்ற குறளில் புலவர் என்ற சொல்லுக்குத் தேவர் என்றே உரை வரைந்துள்ளார்.)

296. நம்மாழ்வாரின் பாசுரங்களை உணர்ந்து இருவினைகளை அழித்துப் பூமியில் உள்ளவர்கள் பரமபதம் அடைந்தனர். தண்துளவம் - குளிர்ந்த திருத்துழாய்.

ஆழ்வார் மங்களாசாசனம் செய்த பதிகள்

அந்த நான்கென வுரைசெயும் பிரபந்த மதனுள்
பைந்து ழாயணி மாதவ னுவந்துவாழ் பதிகள்
வந்த தைந்தொடு முப்பதாம் வடமது ரையும்வை
குந்தஞ் சீவர மங்கைசீர் குறுங்குடி வெஃகா; 297

அரங்கம் வேங்கடம் விண்ணகர் செங்குன்றூர் அனந்த
புரம யோத்திபாற் கடல்துவ ரைப்புளிங் குடிகாட்
கரை குளந்தைவாட் டாறு மூழிக்களம் மோகூர்
குருகை வல்லவாழ் துலைவிலி மங்கலங் கோளூர்; 298

சீர்பெ றுந்திரு மாலிருஞ் சோலைவெற் புபரி
சார மாம்பதி திருக்கடித் தானநா வாய்வண்
டூர்கு டந்தையா றன்விளை கணபுரம் புலியூர்
பேரை சீவர குணமங்கை பேரெனும் நகரே. 299

பயன்

இந்த மாக்கதை கேட்பவ ரிரும்புவி யதன்மேல்
மைந்த தரும்பல வளங்களுஞ் செல்வமும் மருவிச்
சிந்தை யின்புற வாழ்ந்துநாள் சென்றிடுங் கடையில்
பைந்து ழாய்மது மாலையன் பதம்பெறு வாரால். 300

முதிரு நான்மறை தனையருந் தமிழினால் மொழிந்து
சதிரு டன்பராங் குசன்பதஞ் சார்ந்துள சரித
விதமி யம்பின மவன்விளம் பியகவி வரைந்த
மதுர மாக்கவி பரமவீட டைந்ததும் வகுப்பாம். 301

சடகோபாழ்வார் திருவவதார அத்தியாயம்
முற்றும்.

---

297 — 299. நம்மாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திவ்ய தேசங்கள் முப்பத்தைந்தின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடல்களின் திருந்திய வடிவம் அரிசமய தீப உரையாசிரியர் சே. முத்துகிருஷ்ண நாயுடு அவர்களால் கிடைத்தது. இவர்கள் அரிசமயத்தில் காட்டிய மேற்கோள்களால் பல திருத்தங்கள் கிடைத்தன. அவருக்கு வைணவ உலகம் நன்றிக்கடன் பட்டுள்ளது.

300. நம்மாழ்வார் வரலாற்றைப் பயில்பவர் பெறும் பேறு பேசப்பட்டுள்ளது.

301. மதுரகவிகள் திருநாடலங்கரித்ததைக் கூறுவோம் என்கிறார்.

மதுரகவியாழ்வார் மோட்சமடைந்த அத்தியாயம்

வெண்பா

ஏரார் மதுரகவி இவ்வுலகில் வந்துதித்த
சீராருஞ் சித்திரையில் சித்திரைநாள் — பாருலகின்
மற்றுமுள ஆழ்வார்கள் வந்துதித்த நாள்களினு
முற்றதெமக் கென்றுநெஞ்சே ஓர்.

(உபதேசரத்தினமாலை, 25.)

மதுரகவியாழ்வார் திருப்பணி

மாயவ ரருட்படி மதுர மாக்கவி
ஏயவம் மாறனல் லெழிலு ருத்தனை
தூயவிக் கிரமதாய்த் துலங்கச் செய்ததை
ஆயவப் புளிமரத் தடியில் வைத்தரோ; 1

பொன்னொடு மரகதம் புட்ப ராகமும்
மின்னிடு மணிகளும் மேய்ந்தி ழைத்துவான்
மன்னிடு மண்டப மதிள்வி மானமும்
துன்னிடு கோபுரந் துலங்கச் செய்தனன். 2

பூடண வகைகளும் பொருந்து வத்திரம்
ஏடவிழ் பூமலர் முதல யாவையும்
சூடிட லருத்துதல் முதல சோர்விலா
நாடொறு முபசரிப் புடன்ந டத்தியே; 3

வெண்பா: நெஞ்சே! மதுரகவிகள் தோன்றிய நாள் சித்திரை மாதத்தில் சித்திரை நட்சத்திரமாகும். மற்றைய ஆழ்வார்கள் தோன்றிய நாள்களைவிட இந்நாள் நமக்கு மிகவும் சிறப்புடைய நாளாகும். மதுரகவிகளின் சிறப்பால் இந்நாள் உயர்ந்தது. மதுரகவிகளின் சிறப்பைக் கண்ணிநுண் சிறுத்தாம்பின் வியாக்கியானத்திற் பரக்கக் காணலாம்.

1 — 2. எம்பெருமான் கட்டளைப்படி மதுரகவிகள் நம்மாழ்வாரின் அர்ச்சா விக்ரகத்தை வடித்தெடுத்துத் திருப்புளிமரத்தின் அடியில் பிரதிஷ்டை செய்தார். பொன் முதலான பொருள்களால் கோவில், மண்டபம், விமானம், கோபுரம் முதலானவற்றைத் துலங்கச் செய்தனர். மேய்ந்து - பதித்து (வேய்ந்து என்பதன் திரிபு).

கருமுகின் மேனியுங் கமலக் கண்களும்
முருகவிழ் துளவமும் பொலிமு குந்தனார்
மருவுமா லயமுறை வழுவு றாமலே
திருவிழா முதலவுஞ் செய்வித் தானரோ. 4

வருதினம் பலவுமவ் வாற தாய்ப்புரிந்
தொருபக லாய்நொடி உளம்வ ருத்திட
மருமகிழ் தொடையணி மாற னம்புயத்
திருவடி பிரிகிலான் சேர்ந்து வாழுநாள்; 5

(வேறு)

காசி லாவருந் தமிழினாற் பராங்குசன் கவிசெய்
ஆசி லாதவா சிரியமும் விருத்தமந் தாதி
தேசு றுந்திரு வாய்மொழி யாமெனச் செப்பும்
மாசி லாப்பிர பந்தங்கள் மலிவுசெய் வகையாய்; 6

மாத வர்க்கும்வே தியர்முதல் நால்வரு ணருக்கும்
ஓது வித்துமாங் கதன்பொரு ளுணர்வுற வுரைத்தும்
ஏத மில்லென வருடநூற்றி ருபதி னிரட்டி
பூத லத்தவர் புகழ்ந்திடப் பொருந்தியங் கிருந்தான். 7

ஆழ்வாரின் பரமபத வேட்கை

இருக்கு நாளிடை யுயர்பத மடைகுவா னெண்ணிப்
பொருக்கெ னாளனைக் கொண்டணைந் திடுஎனப் பொருவில்
திருப்பு ளிக்கிடை யமர்ந்தருள் மாறன்சே வடியை
உருக்க மோடுதன் மனத்துற நினைந்தன னொருநாள். 8

---

4. மேகம் போன்ற மேனியும், தாமரைக் கண்களும், திருத்துழாய் மாலையும் அணிந்த திருமாலின் கோவிலில் நடத்தும் முறை வழுவாதபடி நித்திய நைமித்திய கருமங்கள் செய்தார்.

5. நம்மாழ்வாரைப் பிரிந்த மதுரகவிகள் ஒரு நொடியினையும் ஊழியாகக் கருதி, வருந்தியிருந்தார். பகல் - ஊழி. "துஞ்சலுறாஉம் பகல்புதும் மாலை" என்ற பதிற்றுப்பத்துப் பாடலின் உரையைக் காண்க. "நாழிகை பல்லூழியா நவிலரிய மறுக்கத்தால் — ஏழைபடும் பாடு" என்பது மேகநாதம்.

6 — 7. நம்மாழ்வாரின் பிரபந்தங்களை, தவம்புரியும் முனிவர்களுக்கும் வேதியர் முதலாகிய நான்கு குலத்தவர்க்கும் உபதேசித்து 240 வருடம் வாழ்ந்தார். 'ஓதும் ஆண்டன் றிருநூற்றிரு பதிருந்தில் வுலகனைத்தும் — பூதநாதன் அடியவ ராய்ப் பொருந்துவித்து" என்பர் வடிவழகிய நம்பிதாசர்.

8 — 9. அடியேனைப் பரமபதத்துக்குக் கொண்டு செல்க என்று நம்மாழ் வாரின் திருவடியைத் தியானித்தார் மதுரகவிகள். உடனே நம்மாழ்வார் அருளால் மணிகள் ஒலிக்க விமானம் வந்தது.

விமானம் வந்தது

நினைந்த காலையி லவ்வண நேர்ந்துள வகுளம்
புனைந்து ளான்றன தருளினாற் புவியுளோர் புகழக்
கனைந்த ணிந்தமா மணியொலி கறங்கிடக் கனகம்
வனைந்தி டுந்திரு வைகுந்த விமானம்வந் துளதால். 9

வந்த பொன்மணி விமானமேன் மருவிவீற் றிருப்பச்
சிந்தை யன்பொடு மதுரமா கவிதமைத் திகழுந்
தந்த மம்புய நிகர்கரங் கொடுதழீஇ யெடுத்துச்
சுந்தரம் பெற விருத்தினர் சூழ்ந்திடு மடியார். 10

மணிமண்டபம் அடைந்தார்

அந்த ரத்தவர் மீமிசை யலர்மழை பொழிந்து
துந்து மிக்குழா முழக்குறப் பதவிபோய்த் துடர்ந்து
பைந்து ழாயனை வகுளனை யன்பொடு பணிந்து
முந்து மாமணி மண்டப முத்தரோ டமர்ந்தான். 11

மாற னேபர மெனமது ரக்கவி வகுத்துக்
கூறு செந்தமி ழினிலிசை குலவுமப் பாடல்
ஆறோ டைந்தையு முளமகிழ் வொடுபடித் தனேகர்
மாறி லாதுயர் பதவிசென் றெய்தினர் மாதோ. 12

---

9. கனைந்து அணிந்த - நெருங்கக் கட்டப்பட்ட. கறங்க - ஒலிக்க. "கறங்கு திரைப் பெருங்கடலும் காரவுணக் கருங்கடலும் கலங்க" என்பர் கவியரசர் பரஞ்சோதியார் (திருவிளையாடற் புராணம்).

10. வந்த விமானத்தில் இருந்த திருமாலின் தொண்டர்கள் மதுரகவிகளைத் தழுவியெடுத்து விமானத்தில் எழுந்தருளுவித்தனர்.

11. தேவர்கள் மலர்மழை பொழிய, துந்துமி முழங்க, பரமபதம் அடைந்த மதுரகவிகள், திருமாலை வணங்கி, நம்மாழ்வாரை அன்புடன் பணிந்து மணி மண்டபத்தில் வீற்றிருந்தார்.

12. மதுரகவிகளின் "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்ற பிரபந்தத்தைப் பயின்று பலர் பரமபதம் அடைந்தனர். மாறனே பரம் - நம்மாழ்வாரே பரம் பொருள். "மானிடவன் என்றும் குருவை; மலர்மகள் கோன்தானுகந்த கோலம் உலோக மென்றும்; ஈனமதா எண்ணுகின்ற நீசர் இருவருமே எக்காலும் நண்ணிடுவர் கீழாம் நரகு" என்று அருளாளப்பெருமாள் எம்பெருமான் அருளியுள்ளார் (ஞான சாரம்).

பயன்

இவ்வ ருங்கதை மனமகிழ்ந் தெழுதிடு மவரும்
செவ்வி திற்படிப் பவர்களுஞ் செப்பிடு மவரும்
எவ்வ மற்றிடக் கேட்டிடு மவர்களும் மிணைவேறு
ஒவ்வி லாதுயர் வைகுந்த பதவிசென் றுறுவார். 13

மதுர மாக்கவி பதவிசேர்ந் தமைவகுத் துரைத்தேம்;
பதும மாமுகக் கோதையாய்ப் பார்மகள் சிறந்த
புதுவை மாநக ருதித்ததும் புரிந்தது மரங்கர்
வதுவை செய்ததும் இவ்வித மெனவகுத் துரைப்பாம். 14

மதுரகவியாழ்வார் மோட்சமடைந்த அத்தியாயம்
முற்றும்.

---

13. மதுரகவிகளின் வரலாற்றைப் பயில்பவர் பெறும் பேறு பேசப்படுகின்றது. எவ்வம் - துன்பம். ஒவ்விலாது - ஒப்பற்று.

14. மதுரகவிகளின் வரலாற்றைப் பேசினோம் இனி. கோதைநாச்சியார் வரலாற்றைப் பேசுவோம் என்று தோற்றுவாய் செய்கிறார். வதுவை செய்ததும் - திருமணம் செய்துகொண்டதும்.

ஆண்டாள் திருவவதார அத்தியாயம்

வெண்பா

பெரியாழ்வார் பெண்பிள்ளை ஆண்டாள் பிறந்த
திருவாடிப் பூரத்தின் சீர்மை — ஒருநாளுக்கு
உண்டோ? மனமே! உணர்ந்துபார் ஆண்டாளுக்கு
உண்டாகில் ஒப்பிதற்கும் உண்டு.

(உபதேசரத்தினமாலை, 23.)

நாரணன் சிறப்பு

மராமரம் அனையதோள் வாலி தன்னொடும்
இராவணன் முதலினோர் உயிர்இழந்திட
அராவணை துயில்துறந்து அயோத்தி எய்திய
பராபர வத்துவாம் படிவ நாரணன்; 1

புண்டரீ கன்சிவன் முதற்புத் தேளிரோடு
அண்டங்கள் பலசரா சரம்அ னைத்தையும்
உண்டுஒரு பாலனாய் உருவம் தாங்கியே
வெண்டிரைப் பாற்கடல் பள்ளி மேவியே; 2

வெண்பா : மனமே! திருவாடிப்பூரத்தின் சீர்மை (வேறு) ஒரு நாளுக்கு உண்டோ? ஆண்டாளுக்கு ஒப்பு உண்டாகில் இதற்கும் ஒப்பு உண்டு. நட்சத்திரங்களில் இரண்டு 'திரு' என்ற அடைமொழியைப் பெற்றது. ஆனால், எம்மாதமும் திரு என்ற அடைமொழி பெறவில்லை. ஆண்டாள் பிறந்தபின் ஆடி மாதமும் 'திரு' என்ற அடைமொழி பெற்று, திருவாடிப்பூரம் என்றாயிற்று. "திருவாடிப்பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே" என்று அப்பிள்ளை திருவாய் மலர்ந்தருளுவார்.

1 முதல் 4 வரை ஒருதொடர். பராபரப் பொருளாகிய நாரணன், பாற்கடலில் யோகநித்திரையை மேற்கொண்டு (பல நாள்களுக்குப்பின்) விழித்து, திருமகளுக்கும் நிலமகளுக்கும் நீளாதேவிக்கும் முகமன் கூறி, மார்பில் இலக்குமியும் இருபுறத்தில் பூமியும் நீளையும் வீற்றிருக்கத் தாமரை மலர்ந்த மேகம்போல் அமர்ந்திருந்தான்.

1. வாலி, இராவணன் முதலானோர் இறக்க, துயில் துறந்து அயோத்தி எய்திய நாரணன். பராபர வத்து - மேலான பரம்பொருள்.

2. பிரமன், சிவபிரான் முதலான தேவர்களையும், சராசரங்கள் எல்லாவற்றையும் விழுங்கிவிட்டுப் பின்பு பாலகனாய்ப் பாற்கடலில் துயின்று. புத்தேளிர் - தேவர். பள்ளி மேவி - உறங்குதலை விரும்பி.

யோகநித் திரைதனை ஒருவி தம்தெளிந்து
ஆகமுற்று உரைதிரு அணங்கு பார்மகள்
பாகுசொல் நீளையாம் பாவை மூவரும்
மோகம்உற் றிடும்வகை முகமன் கூறியே; 3

இருபுறம் மருவிவீற் றிருப்ப அம்பொனின்
குருமணி அரியணை மிசையில் கோலமார்
முருகவிழ் தாமரை வனம்ம லர்ந்ததோர்
கருமுகில் எனஒளி கவின வைகினான். 4

பூமிதேவியின் வினா

வைகிய காலையில் மருங்கு வைகிய
மைகணார் புவிமகள் எழுந்து வாள்விழிக்
கைகயன் மகள்தரும் கானம் சென்றுள
செய்கழல் வணங்கிஓர் மொழியைச் செப்பினாள். 5

கரியமா முகில்நிறக் கடவுள் மூர்த்தியே!
விரிகடல் உலகினர் இடத்தில் மேவிநீர்
பிரியம்உற்று இருப்பதுஆ ரிடத்தில்? பெண்மையேன்
தெரிதரு மாறுஅதைச் செப்பு கென்னவே. 6

---

3. யோக நித்திரையை ஒருவாறு விட்டு, திருமகள் முதலான தேவிமார்களுக்கு இன்னுரை பகர்ந்து. ஆகம் உற்று - திருமார்பில் வீற்றிருந்து. மோகம் உற்றிடும் வகை - காதல் பெருகும்படி.

4. இருதேவியர் இருபுறமும் இருப்ப, அரியணைமிசை தாமரைவனம் மலர்ந்த கருமுகில்போல் அமர்ந்திருந்தான். குருமணி - ஒளி வீசும் மணி. கவின - அழகு உண்டாக. வைகினான் - வீற்றிருந்தான்.

5 — 6. புவிமகள் திருமாலை வணங்கி, நீ எவரிடம் மிக்க விருப்பம் கொண்டுள்ளாய் என்று கேட்டாள்.

5. மை கண் ஆர் புவிமகள் - மை பூசிய கண்களையுடைய நிலமடந்தை. கைகயன் மகள் – கைகேயி, கானம் சென்றுள - காட்டுக்குப் போன. செய்கழல் - செம்மையான திருவடி.

6. கடவுள் மூர்த்தியே - தெய்வங்களுக்குத் தலைவனே. பெண்மையேன் - பெண்மைத்தன்மை உடைய யான் (பெண்மைத் தன்மை - அறியாமை). "பிழைத்தனை பாவி உன் பெண்மையால்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (கிட்கிந்தா காண்டம்).

எம்பெருமான் விடை

அம்மொழி கன்னமூடு அணுகும் காலையில்
இம்மொழி தனைஎடுத்து இனிது இயம்புவான்
நம்மலர் அடிகளைப் பற்றி நண்ணுறச்
செம்மனத்து அன்புடன் சேர வைத்தரோ; 7

பாடுறும் அருந்தமிழ்ப் பாவின் மாலையும்
ஏடவிழ் நறுமல ரினிற்செய் மாலையும்
நாடொறும் இயற்றியே நாம்அ ணிந்திடச்
சூடுறு செய்கையார் தொழில்பு ரிந்துளோர்; 8

பூமிதேவியின் விருப்பம்

எவர்கள்ஆ யினும்அதற்கு உளம்இ ரங்கியாம்
அவதரித்து அனுதினம் அணுகு வோம்எனா
உவரிநேர் வண்ணன்ஆங்கு ஓதக் கேட்டுஉளம்
துவர்இதழ்ப் புவிமகள் தொழுது சொல்லுவாள். 9

நாத!இம் முறையெனில் நளினம் ஒக்கும்நின்
பாதமேல் பத்தியும் பரிவும் எய்தியான்
ஓதும்அம் முறைவழாது உஞற்றின் அல்லது
மாதெனப் பிறந்துள பயன்வந்து எய்துமோ? 10

ஆதலால் அடிச்சியேன் ஆழி சூழ்வுறும்
பூதலத்து உதித்துப்பூ மாலை தன்னொடும்
ஓதுபா மாலையும் உகப்பச் செய்திடப்
போதல்என் கடன்எனப் போற்றி நின்றனள். 11

---

7 — 9. ஒருதொடர். கன்னமூடு - காதில் (கர்ணம் - என்ற சொல் கன்னம் என்று வந்துள்ளது). நம்முடைய மலரடிகளைப்பற்றி, பாவின் மாலையும் பூவின் மாலையும் நாம் அணியச் சூட்டுபவர்கள் எவர்களாயினும் உள்ளம் இரங்கித் தினமும் அவர்களை அடைவோம் என்று திருமால் பகர்ந்தான்.

8. ஏடவிழ் நறுமலர் - இதழுடன் மலர்ந்த பூ. உவரிநேர் வண்ணன் - கடல் போன்ற நிறமுடைய திருமால். துவர் இதழ் - சிவந்த வாயிதழ்கள்.

10—11. நிலமகள் தன் விருப்பத்தைக் கூறுகிறாள். நான், நீ கூறிய முறைப் படியே செய்தால் அன்றிப் பெண்ணாகப் பிறந்த பயன் கிட்டாது. யான் உலகில் பிறந்து பூமாலையும் பாமாலையும் உனக்குச் சூட்ட, பூமிக்குச் செல்வது என் கடமை என்றாள்.

10. நளினம் ஒக்கும் - தாமரை போன்ற. பத்தியும் பரிவும் - பக்தியும் காதலும். உஞற்றின் அல்லது - செய்தால் அல்லது. அடிச்சியேன் - உன் அடியவளாகிய யான். "அடிச்சியோம் தலைமிசை நீ அணியாய், ஆழியங் கண்ணா உன் கோலப்பாதம்" என்பர் சடகோபர் (திருவாய்மொழி).

பெரியாழ்வாரின் புகழ்

நின்றவள் மாமுகம் நோக்கி நேமிமால்
மன்றலங் கோதைநின் மனம்அவ் வாறெனில்
ஒன்றுரைத் திடுவன்யான் உவந்து கேட்டுஅதை
நன்றெனக் கொள்கென நவில்வது ஆயினான். 12

வில்லிபுத் தூர்வரும் விப்பி ரோத்தமன்,
நல்லியல் உடையவன்; நகைகொள் வாண்முகன்;
மெல்லிய மொழியினன்; விளையும் மாயையைக்
கல்லிய செய்கையன்; கருணைஉள் ளத்தான். 13

எப்புவி தன்னினும் இணைத னக்குவேறு
ஒப்பிலா நிறைவுபெற்று உறும்மெய்ஞ் ஞானத்தான்;
செப்பிடும் பெயர்விட்டு சித்தன் என்பவன்;
துப்புற எனதுஅடித் தொண்டு பூண்டுளோன்; 14

இன்னவன் மடியைப்பெற்று எழிலின் ஓங்கிட
அன்னமா நகரிடை அணுகு வாய்;அவன்
தன்னுடைச் சிறுவியாய் அவத ரித்தபின்
நின்னுளத்து உறும்இடர் நீக்கு கென்றனன். 15

சொன்னமா மொழியெனும் அமுதம் தூயதன்
கன்னம்ஊ டுறஉளம் களிது ளங்கியே
பின்னரும் புவிமகள் என்னும் பெண்கொடி
நன்னய முடனிவை நவில்வது ஆயினாள்: 16

---

12 முதல் 15 வரை திருமால் கூற்று. பெருமான் பெரியாழ்வாரின் சிறப்புக்களைக் கூறி அவன் மகளாய்த் தோன்றுக என்று கூறினன். நேமிமால் - சக்கரம் ஏந்திய திருமால். மன்றல் அம் கோதை - மணம் வீசும் மாலையை அணிந்தவளே.

13. விப்பிர உத்தமன் - அந்தணர்களுக்குள் மேலானவன். நகைகொள் - புன்னகை கொண்டுள்ள. விளையும் மாயை - தீமைகள் விளைகின்ற நிலமாகிய மாயையை. கல்லிய - தோண்டி எறிந்த. "அகந்தைக் கிழங்கை" எடுக்கும் தொழும்பர் என்பர் குமரகுருபரர்.

14. நிறைவுபெற்று - பூரணத்துவம் அடைந்து. துப்பு உற - வன்மை உண்டாக.

15. மடியைப்பெற்று - மடியில் தங்கும் பாக்கியத்தை அடைந்து. சிறுவியாய் - மகளாக. இடர் நீக்குக - துன்பத்தைப் போக்குக.

16 — 18. நிலமகள் வில்லிபுத்தூரின் வரலாற்றைக் கூறுக என்றாள். இறைவன் கூறிய மொழியாகிய அமுதம் செவியிற்பட மகிழ்ந்த நிலமகள் பேசத் தொடங்கினாள்.

பூமிதேவியின் வினா

வில்லிபுத் தூர்எனும் விளங்கு மாணகர்
தொல்லைநாள் யாவரால் தோன்றிற்று; ஆங்கதும்
நல்லவந் நகரில்நீ நணுகும் ஆறதும்
சொல்லும்அவ் விட்டுணு சித்தன் தோற்றமும்; 17

ஆங்கவன் செயும்கைங் கிரிய மாவதும்
ஈங்கிது முதலிய யாவும் ஏழையேன்
பாங்குற உணர்வகை பகர்தி என்னலும்
தேங்கமழ் துளவினான் செப்பல் ஆயினான். 18

வில்லிபுத்தூரின் மான்மியம்

பூதலம் தனில்சம்புத் தீவில் பொங்குஅலை
மோதுதென் கடலினுக்கு அருகில் மொய்ம்புஉடை
நீதிசேர் பாண்டிய நெடிய நாட்டினில்
சேதுவிற் குமரிமா வரையின் கீழ்த்திசை; 19

காவதம் ஒன்றினில் கருதும் ஓர்தலம்
ஆவதுஉண்டு; அதனிடை ஆதி காலம்யாம்
மூவகை உலகமும் பொருமு ரண்வலி
மேவும்ஓர் வராகமாய் விளங்கத் தோன்றியே; 20

நினையனாள் தன்னிடை நெடிய தாங்கொடு
வினைபுரி இரணிய வக்க வெய்யவன்
தனைவதை புரிந்துபல் தருமம் என்பவை
அனையயா வையும்உனக்கு அருளிச் செய்தனம். 21

---

17. தொல்லைநாள் - பழங்காலத்தில். நீ அணுகும் ஆறு - நீ அந்த நகரில் எழுந்தருளிய வரலாறு. விட்டுணு சித்தன் தோற்றம் - பெரியாழ்வாரின் அவதாரம்.

18. கைங்கிரியம் - தொண்டு. பகர்தி - கூறுக.

பாடல் 19 முதல் சீவில்லிபுத்தூரின் வரலாறு திருமாலால் சொல்லப்படுகிறது.

19. சம்புத்தீவில் - நாவலந் தீவில். தென் கடலுக்கு அருகில் - தெற்கின் கண் உள்ள கடலுக்குப் பக்கத்தில். குமர் பருவதம் - குமரி மலை. "வடவேங் கடம் தென்குமரி" என்பர் பனம்பாரனார். குமர் - கன்னி (லெக்ஸிகன்).

20. குமரிமலைக்குக் கிழக்குப் பக்கத்தில் ஒரு காவத தூரத்தில் ஒரு தலம் உண்டு. அத்தலத்தில் யான் வராகமூர்த்தியாய்த் தோன்றி. முரண்வலி - மிக்க பலம்.

21. உனக்குத் தீங்கு செய்த இரணியாட்சனைக் கொன்று பல தருமங்களை உனக்குக் கூறினேன்.

அத்தரு மங்களை அனைத்துங் கேட்டறிந்து
இத்தலம் அதனில்எக் காலும் நீங்குறாது
ஒத்துஉறைந் திடுதிஎன்று உள்ளம் அன்பொடு
மெத்தவும் வருந்தியே வேண்டல் செய்தனை. 22

ஓதும்அம் மொழிப்படி யாம்உவந்து உனோடு
ஏதமில் கற்பங்கள் அனந்தம் எய்திடப்
பேதியாது உறைதலால் அதனுக்கு ஓர்பெயர்
ஆதியில் வராகக்ஷேத் திரம்என்று ஆயதால். 23

அன்புறக் கேட்டி;யான் உறையும் அத்தலம்
பின்புறு நெடியநாள் பிறஉ யிர்க்குறு
துன்புஇழை உழுவையும் அரியும் சூழ்ந்திடும்
வன்புஉறு வனமதாய் மருவி உற்றதால். 24

காலநேமி வதம்

அரியஆ ரணியமாம் அத்த லம்தனில்
உரிமையோடு எந்தனை உளம்இ ருத்தியே
பிருகுமார்க் கண்டனே முதல பெற்றியோர்
மருவியுற்று அரியமா தவம்இ ழைத்தனர். 25

இழைத்திடுந் தவத்தரைக் கால நேமிஎன்று
அழைத்திடும் பெயருடை அரக்கன் எய்தியே
குழைத்துளம் வெருவுறக் கொடிய தாம்பல
பிழைத்தனை இழைத்தனன் பெருக என்பவே. 26

அத்துயர் பொறுக்கொணாது அவர்கள் யாவரும்
இத்திருப் பாற்கடல் எய்தி எம்மொடும்
தத்தமக்கு அவன்தனால் சார்ந்த யாவையும்
சித்தமது இரங்கிடச் செப்பி னார்களால். 27

---

22. அத்தலத்தில் நீங்காது வாழ வரம் கேட்டாய்.

23. அம் மொழி மறாது யாம் பலகற்பகாலம் அங்கு வசித்தோம். அதனால் அது வராக க்ஷேத்திரம் என்னும் பெயரைப் பெற்றது.

24. பின்பு அத்தலம் காடாயிற்று. உழுவை - புலி. அரி - சிங்கம்.

25. ஆரணியமாம் - காடாக மாறிய. பிருகு முதலானோர் தவம் இழைத்தனர். பெற்றியோர் - நற்குணம் உடையவர்.

26. காலநேமி அம் முனிவர்களுக்கு இடர் செய்தான். உளம் குழைந்து வெருவுற என மாற்றுக. குழைந்து என்பது எதுகை நயங் கருதி, குழைத்து என மாற்றப்பட்டது. பிழை(த்)தனை - குற்றங்களை.

27. அவர்கள் பாற்கடல் எய்தி அவனால் நேர்ந்த துன்பங்களைக் கூறினர்.

ஓலம்இட்டு உரைத்தல்கேட்டு உவண னாய்உறும்
சூலபா ணியன்மிசை துரிதத்து எய்தியே
காலனை அனையஅக் கால நேமிதன்
மேலுற நேமியை விடுத்து வீட்டினேம். 28

முக்குளம்

மாய்ந்தவன் உடல்புண்நீர் மற்ற வன்தனைக்
காய்ந்துள கொடியசெங் கதிர்கொள் நேமியில்
தோய்ந்திட அதனைநீர் கொண்டு தொல்நிறம்
வாய்ந்துற 'அலம்பு'என வருணற்கு ஓதினேம். 29

என்றனம் மொழிவழாது எமுனை சான்னவி
சான்றமா சரஸ்வதி என்னச் சார்ந்திடும்
மூன்றுமா நதியையும் அழைத்து மொய்ம்புண்நீர்
கான்றநே மியைஅவன் கழுவித் தந்தனன். 30

அக்கடி நகரிடை வருணன் ஆனவன்
சக்கரம் அலம்பும்நீர் மூன்றும் சார்ந்துஒரு
முக்குளம் என்னவே மொழியும் பேரொடு
மிக்கநல் தீர்த்தமும் விளங்கிற்று என்பவே. 31

ஓதும்அவ் அரக்கன்செய் உபத்ர வந்தனால்
போதநேர்ந்து அயர்வொடு புழுங்கி நொந்துள
மாதவர் தமையினி வருந்த லீர்என
ஆதர வுரைகள்யாம் அறையும் எல்லையில்; 32

---

28. கருடன்மீது ஏறிச் சென்று காலநேமியைக் கொன்றோம். உவண ணாய் - கருடனாக. உறும் சூலபாணியன் - தோன்றிய சிவபிரான்.

29. காலநேமியைக் கொன்றதால் என் சக்கரத்தில் குருதிக்கறை படிந்தது. அதை அலம்புக என்று வருணனிடம் கூறினோம்.

30 — 31. வருணன், சரஸ்வதி-கங்கை-யமுனை என்ற மூன்று நதிகளைக் கொண்டு திருவாழிக்கு மஞ்சனம் செய்தான், அம் மூன்று நதிகளும் முக்குளம் என்று பெயர்பெற்றுத் தீர்த்தமாகிவிட்டது. (சீவில்லிபுத்தூர்ப் புராணம் முக்குளப்படலத்தில் இதன் விரிவைக் காண்க.)

32 முதல் 35 வரை அம் முனிவர்கள் நீ இங்கேயே தங்குக என்றனர். யாம் அவ்வரத்தை வழங்கினோம்.

முனிவர் கேட்ட வரம்

மீண்டும் எந்தமை இவண்விளங்கு மாதவம்
பூண்டுள இருடியர் பொருந்தும் ஓர்வரம்
ஈண்டுநீ மறுத்திடாது எமக்கு அருள்செய
வேண்டும்என்று உளந்தனில் விரும்பிக் கேட்டனர். 33

என்னநீர் வேண்டுவ தியம்பு மென்றலும்
அன்னவர் ஓதினர் அணிகொள் பாற்கடல்
மன்னுதல் ஒழிந்துஇவண் வந்து தோன்றியே
முன்எமை நலிந்தவெம் மூர்க்கன் தன்னையே; 34

பொங்குஒளி நேமியால் பொருது அழித்துநீ
எங்கள்ஆ பத்துஒழித் திடும்இ யற்கையால்
இங்குநீ உறைந்திடு வரம்அது என்னலும்
அங்குஅவர்க்கு அவ்வரம் தனைஅ ளித்துளேம். 35

ஆதலால் அத்தலம் அதனுக்கு ஒப்பதாய்
ஓதமுன் னாள்தனில் ஒளிர்வ டத்துஇலை
மீதுகண் வளர்வபோல் விளங்குஅ ராவின்மேல்
காதலோடு அமர்ந்துகண் காட்சி நல்கினேம். 36

ஆங்குநம் பெயர்வட வேச்சு ரன்எனப்
பாங்குற ஆங்குஅவர் பகர்ந்து பின்னரும்
தீங்கிலா அத்தலம் தனக்கும் செவ்விதாய்
ஓங்கும்அப் பெயர்கொளும் புரம்என்று ஓதினார். 37

---

33. இருடியர் - முனிவர்கள்.

34. மன்னுதல் - தங்கியிருத்தல்.

36. அத் தலம் அதனுக்கு ஒப்பதாய் ஓத - அதனுக்கே ஒப்பான தலம் அதுவே என்னும் புகழ்பெற. ஆலிலையில் துயில்வதுபோல் அங்கு ஆதிசேடன்மேல் உறங்கும் காட்சி வழங்கினோம். வடத்து இலைமீது - ஆல் இலையின்மேல்.

37. அத் தலத்தில் நம் பெயர் வடவேச்சுரன். அத் தலத்தை வடவேச்சுர புரம் என்று முனிவர்கள் கூறினர்.

அத்தலத்து அவ்விதத்து அமர்ந்த மாதவர்
சித்தர்கள் முதலினோர் வணங்கச் சேர்வைகுந்
தொத்துரு சதுரமா முகம தோரறு
பத்துநான்கு அணுகுறும் அளவும் பண்பொடும்; 38

உன்னையும் அம்புயத்து உகந்து வாழ்வுறும்
பொன்னையும் அருகுஉறப் பொருந்தி வைகினேம்
பன்னும்அவ் உகங்கள்தீர்ந்து உறலும் பார்மினே
பின்னரும் வனமதாய்ப் பெருகிற் றாம்அரோ. 39

தருவொடு செடிகளும் சார்ந்தது அவ்வனத்து
அருகுபுத் தூர்என அறையும் ஓர்சிறு
திருநகர் உண்டு;அதைச் சேர வேமிகும்
பெருவலி வேடர்கள் பிரப லித்தனர். 40

முன்னுறும் உழுவையே முதல்வி லங்கெலாம்
உன்னரும் கொலைத்தொழில் உஞற்று வேடரே
அன்னகர் தன்னகத்து அதிக ராயினார்
பின்னருற்று அடைந்தமை பேசு வாம்அரோ. 41

வில்லியும் கண்டனும்

அல்லிஅம் புயமலர் அனைய மாமுக
மல்லிஎன் றுரைபெறு மாது அகட்டினில்
கல்லியல் தோளினர்; கமலக் கண்ணினர்;
வில்லியும் கண்டனும், விளங்கத் தோன்றினார். 42

---

38 — 39. மாதவர் முதலானவர்கள் வணங்க, யான் அத் தலத்தில் 64 சதுர் யுகம் உன்னொடும் திருமகளோடும் தங்கியிருந்தோம். அவ்வுகங்கள் நீங்கியபின் அத் தலம் காடாயிற்று. அம்புயத்து - தாமரையில். பொன் - திருமகள். பார் மின்னே - பூமிதேவியே.

40. அவ் வனத்தருகு - அந்த வனத்தின் பக்கத்தில். பிரபலித்தனர் - சிறப் படைந்தனர்.

41. உழுவை - புலி. "மெசிவாய் உழுவையும் பசிவாய் முசுவும்" என்பர் கொங்குவேளிர் (பெருங்கதை). கொலைத்தொழில் உஞற்றும் - கொலையையே நலத்தொழிலாகச் செய்யும்.

42. வேடர்குலத்தில் தோன்றிய 'மல்லி' என்பவள், வில்லி, கண்டன் என்ற இரு வீரர்களைப் பெற்றெடுத்தாள். அல்லி அம்புயம் - புற இதழ்களைப் பெற் றுள்ள தாமரை. கல்லியல் - கல்போன்ற.

அன்னவர் நாள்தொறும் அமுத அம்புலித்
துன்னரும் கலையென வளர்ந்து சோர்விலாப்
பன்னுதம் குலமுறைத் தொழில்ப யிற்றியே
மன்னுறு காட்சியாய் வாழும் நாளிடை; 43

அனையவர் இருவரும் வேட்டை யாடுவான்
நினைவுகொண்டு ஒருபகல் நிறைந்த தூணியும்
புனைமணிச் சிலையும்புங் கவமும் கொண்டுதம்
மனைஒழிந்து அரியஅவ் வனத்தின் ஏகியே; 44

மானொடு கலைகளும் கடம்பும் வைகுகோட்டு
ஏனமும் உழுவையும் எண்குஇ னங்களும்
தானமர்ர் கரிகளும் சரியச் சாடியே
கானக முழுவதும் கலக்கி னார்களால். 45

கூறுறு நிணங்களும் குருதித் தோயமும்
பாறுநாய் நரிகழு கினம்ப ரிந்துண
வேறுள மிருகமும் வேட்டை யாடிநாம்
மாறிலாது உறங்கும்அவ் விடத்து வந்தனர். 46

இளையவன் புலியால் இறத்தல்

அவ்விடந் தனில்இளை யவனும் மற்றொரு
வெவ்விய புலிதனைக் கண்டு வெங்கணை
எவ்வினன் பலபல ஏவும் அம்பினுக்கு
ஒவ்விடாது அதுவிரைந்து ஓட லுற்றதால். 47

---

44. புங்கவம் - அம்பு.

பாடல் 45 முதல், கண்டனும் வில்லியும் வேட்டையாடியதும், இளையவன் புலியால் இறந்ததும், மூத்தவன் சோகமுற, திருமால் கனவில் தோன்றி, இளையவனுக்கு உயிர்வழங்கித் தன் கோவிலைப் புதுப்பிக்கச் சொல்லியதும், வில்லிபுத்தூர் தோன்றியதும் பிறவும் பேசப்படும்:

45. மான் முதலான விலங்குகள் கலங்கியோடிட, கண்டனும் வில்லியும் வேட்டையாடினர். கடம்பு - ஒருவகை மான். ஏனம் - பன்றி. எண்கு - கரடி. சரிய - தோற்றோட.

46. கண்டனும் வில்லியும் வேட்டை முற்றியபின் நாம் இருக்குமிடத்துக்கு வந்தனர். (இங்கு நாம் என்றது வரலாறு சொல்லி வரும் திருமாலை). பாறு - கழுகு.

47. அங்கு இளையவன் (கண்டன்) ஒரு புலியைக் கண்டு அதன்மேல் கணையை ஏவினான். எவ்வினான் - ஏவினான். ஒவ்விடாது - அகப்படாது.

ஓடிடும் அதைத்தொடர்ந்து இவனும் ஓடலும்
நீடிய புதலிடை மறைந்து நின்றிட
வாடிய மனதொடும் இவனும் மற்றதைத்
தேடிஅங்கு அதன்முனம் செல்லும் எல்லையில்; 48

பின்தொடர்ந் துறும்ஒலி பெறவெ குண்டுமேல்
சென்றுறப் பாய்ந்துஅவன் சிதைவு றும்படி
கொன்றுடல் கிழித்துவெங் குருதி சோர்வுற
வென்றிகொண்டு அப்புலி விரைவில் போயதால். 49

தம்பியைக் காண்கிலான் தமய னானவன்
வெம்பிய கானிடை விரைந்து தேடலும்
செம்புண்நீர் ஒழுகிடச் சிலைக்கை அம்பொடும்
அம்புவி மேற்கிடந் தவனைக் கண்டனன். 50

அண்ணன் புலம்பல்

(வேறு)

கண்டான்; புலியாற் கிழிபட்ட
செய்கை தெளிந்தான்; கண்மலரை
விண்டான்; கொட்டினான்; உரத்திற்
புடைத்தான்; பொருந்தா வெந்துயரங்
கொண்டான்; அவன்பொன் மேனியெல்லாம்
தடவித் தடவி கொடுநஞ்சம்
உண்டான் போல மெய்தளர்ந்தான்;
உயிர்த்தான்; கரைந்தான்; உருகினான். 51

---

48 — 49. புதலிடை - புதரின்கண். பதுங்கி நின்ற புலி கண்டன்மீது பாய்ந்து தாக்கிக் கொன்றுவிட்டுப் போய்விட்டது.

50. வில்லி, தம்பியைத் தேடிக் காணாது கலங்கி, அவன் இறந்து கிடப்பதைக் கண்டான்.

பாடல் 51 முதல் தம்பியை இழந்த தமையனின் சோகம் விவரிக்கப்படுகிறது.

51. மேனியெலாம் தடவித் தடவி, நஞ்சம் உண்டான்போல் தளர்ந்தான். இப் பாடலில் வில்லியின் மெய்ப்பாடு இயற்கையாகப் பேசப்பட்டுள்ளது. இலக்குவன் பிரம்மாத்திரத்தாலும் நாகபாசத்தாலும் பிணிப்புற்றுக்கிடந்தபோது இராமபிரான் அடைந்த துயரத்தின் தன்மைகள் இப்பாடல்கள் படிக்கும்போது காட்சி தருகின்றன. ஒப்பு நோக்குக.

ஆவி அழிந்திட் டவர்போலுள்
அழிந்தே புலம்பத் தொடங்கினான்
வாவி அறைந்த கொடும்புலியை
வதைப்பத் துணையாய் உடன்வாராப்
பாவி என்றன் கொடியமுகம்
பார்க்கொ ணாதென் றுளங்கருதித்
தாவி வானம் படர்ந்தனையோ?
என்னோ? ஐயா! சாற்றாயால்! 52

பனிமா மலரோன் விதிமுறையோ?
பாவி யேன்செய் கொடுவினையோ?
தனியா யொருவர் துணையின்றித்
தரக்கின் உகிர்க்கை தனிலகப்பட்டு
அனியா யமதாய் உயிர்இழந்த
ஐயா! உலகத் துனையிழந்திட்டு
இனிநான் உயிர்வா ழேன்வாழேன்;
உடனே வருவேன் என்உயிரே! 53

அன்னை தந்தை குருதெய்வம்
அண்ணன் தம்பி மனைமக்கள்
பொன்னை முதலாம் பலபலவாம்
பொருளும் நீயாம் எனநம்பும்
என்னை விடுத்துஅம் பரம்புகுதற்கு
எண்ணிச் சென்றாய் கொடியன்இலை?
உன்னை விடுத்தும் இவண்இருந்தேன்;
உன்னிற் கொடியேன் நான்அன்றோ? 54

---

52. வாவி - தாவி. உதவி செய்யவராத என்முகம் பார்க்கக்கூடாது என்று கருதி வானகம் புகுந்தனையோ?

53. மலரோன் விதிமுறையோ - பிரம்மன் இட்ட விதியோ? உனையிழந்து வாழேன் வாழேன், உடன் வருவேன். தரக்கு - புலி. "தழற்கண் தரக்கின் சரும ஆடையன்" என்பது கல்லாடம்.

54. அன்னை, தந்தை முதலான யாவும் நீயே என்று கருதி என்பால் அன்பு கொண்ட நீ என்னை விடுத்துச் சென்றாய். முறையோ? நீ கொடியவன் அன்று; உன்னைப் பிரிந்து வாழும் நானே கொடியவன். "தாயும் நீயே, தந்தையும் நீயே, தவமும் நீயே, சேயும் நீயே, என்னுயிர் நீயே" என்னும் இராமாவதாரப் பாடல்கள் இங்குக் காட்சி தருகின்றன. "நின்னினும் நெஞ்சம் வலியேன்" என்ற பகுதியை நோக்குக.

எந்தை யேஇங்கு எனைத்தனிவிட்டு
ஏக மனமுந் துணிந்தனையோ?
சிந்தை கனிவாய் வனம்சென்ற
சிறுவர் வருவார் எனப்பார்க்கும்
நந்தாய் உனைஎங்கு எனக்கேட்கில்
நான்என் நவில்வேன்? நவில்என்னா
இந்த வகையால் பற்பலவாய்
எடுத்தே புலம்பி மெய்தளர்ந்தே; 55

விழுந்தான்; புவிமேல் புரண்டுஅழுதான்;
வெதும்பித் தேம்பி வெகுண்டுவிரைந்து
எழுந்தான்; புலிபோம் வழிசென்றான்;
காணாது ஏங்கித் திரும்பினான்;
செழுந்தார் அனுசன் கிடந்தவிடஞ்
சேர்ந்தான்; அவனோடு உடன்படுத்தான்;
அழுந்தாத் துன்பக் கடல்படிந்தான்;
ஆவி சோகித்து உறங்கினான். 56

வில்லியின் கனவு

உறக்கம் கொள்ளும் அவன்கனவில்
உறங்கு வேமிங் குளமுவப்ப
நிறக்கு மணிபொன் கோபுரமும்
நெடுமா மதிளும் மண்டபமும்
துறக்கம் எனவே அமைத்தூரும்
துலங்க வமைத்துக் குடியேற்றிச்
சிறக்கும் படிநீ செய்விப்பாய்,
என,யாம் அடைந்து செப்பினோம். 57

---

55. எங்கே உன் தம்பி? என்று கேட்கும் அன்னைக்கு யான் என்ன சொல்வேன். நம் + தாய் = நந்தாய். நவில்வேன் - சொல்வேன். "பங்கேரு கத்து மலர்போல் விளங்கு வதனா மகிழ்ந்து பரிவால் எங்கே என் ஆசை மகன் என்று கேட்கில் எதிரேது சொல்வன் மகனே" என்று சந்திரமதி புலம்பியது நினைவுக்கு வருகின்றது.

56. புலியைத் தேடினான்; ஏங்கித் திரும்பினான்; ஆவிசோர்ந்து உறங்கினான். அனுசன் - தம்பி. அனு - பின். சன் - பிறந்தவன். இலக்குவனை இராமானுசன் என்று கூறும் வழக்கை நோக்குக.

57. நாம் அவன் கனவில் தோன்றி என் கோவிலைத் திருத்திப் பணி செய்க என்றோம். துறக்கம் - சுவர்க்கம்.

அன்னது ஆகும் மொழிதனைக்கேட்டு
அடர்வெம் புலிஎன் உயிர்த்தம்பி
தன்னை வீட்டிற் றதுவல்லாற்
சமைக்கும் கோயிற் பணிகளுக்குப்
பொன்னும் வெகுவாய் வேண்டியிடும்
அதற்குஎங் கேயான் போவன்என
இன்னது ஆகும் மொழியதனை
அவனங் கெடுத்திட்டு இயம்பினனால். 58

அம்மா மொழிகேட்டு 'உனதுதம்பி
அவனை எழுப்பி அவற்கொன்ற
வெம்மா புலியங் கதுதனையும்
வீட்டி யதுவாழ் குகையிடத்தில்
செம்மாப் பொருள்கள் பலவுளது
காண்பித் திடுவேம் தெளிந்திடு'கென்று
இம்மா மொழியை மீண்டும்அவர்க்கு
இயம்பிக் கனவின் மறைந்தனமே. 59

எழுந்தான் தம்பி

அந்தக் கனவு தனைக்கண்டிட்டு
அவனும் மலர்க்கண் விழித்தென்னோ
விந்தை உளதாம்; இதுபொய்யோ?
மெய்யோ? அறிய வேண்டுமெனச்
சிந்தை யுணர்ந்தாங்கு இருந்திடலும்;
சீறும் புலியால் மடியனுசன்
முந்தத் துயில்கொடு எழுந்தவன்போல்
உணர்ந்தாங்கு எழுந்தான் முகமலர்ந்தே. 60

---

58. வில்லி, "யானோ, தம்பியை யிழந்து வாடி உள்ளேன். திருப்பணி செய்யப் பொன் வேண்டும். அதற்கு எங்கே போவேன்" என்று இயம்பினான். வீட்டிற்று - கொன்றது.

59. 'உன் தம்பிக்கு உயிர் கொடுப்போம்; அப் புலியைக் கொல்வோம்; அப் புலி வாழும் குகையில் பொருள்கள் உள்ளன; காண்பிப்போம்' என்று கனவில் கூறி மறைந்தோம்.

60—61. தம்பி உயிர் பெற்றான். வில்லி கண்டான்; மகிழ்ந்தான்; தம்பியைத் தழுவிக்கொண்டான்; உச்சி மோந்தான்; கண்ணீரால் மஞ்சனம் ஆட்டினான்; மகிழ்ச்சிக் கடலில் குளித்தான். உச்சியை மோத்தல் அன்பின் அடையாளம். "தாக்கி அரக்கன் மகுடத்தலை தகர்த்த மூக்கினால் உச்சி முறை முறையே மோக்கின்றான்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (சடாயுமோட்சப் படலம்).

எழுந்த தம்பி தனையணைத்தங்கு
இருகை யாலு மணிமார்பில்
அழுந்தப் புல்லி உச்சியைமோந்து
அலர்க ணீர்மஞ் சனம்ஆட்டி
கொழுந்துஉற்று ஓங்கும் களிக்கடலில்
குளித்தான்; புலியாற் றான்புவிமேல்
விழுந்த செயல்கள் அனைத்தினையும்
விளைந்த வாறே விளம்பினனால். 61

விளம்பு மொழிகள் தனைக்கேளா
வில்லி தானும் தன்கனவில்
களங்கம் இலை;இங்கு உறங்குவம்யாம்;
எமக்குக் கனக கோபுரமும்
வளங்கொள் நகரும் படையெனவும்
திருமால் வந்து பகர்ந்தவெலாம்
உளங்கொண்டு உணரும் படிதம்பிக்கு
உரைத்தான்; அவனும் களிப்புற்றான். 62

இருவர் களும்அவ் விடம்நீங்கிச்
சிலதூ ரம்சென்று ஏகிடலும்
உருவும் கணைகள் பலதைத்து
உடலம் திறந்த வழியதன்வாய்
பெருகும் குருதி மழையதுபோல்
பெய்யப் புவியும் சிவப்புஎய்தப்
பொருவெம் புலிசெற்று அவண்கிடக்க
அதனைக் கண்டுஅற் புதமடைந்தார். 63

பின்னும் அவண்விட்டு இருவர்களும்
கடிதிற் சென்றுஅப் பெரும்உழுவை
மன்னி யிருந்த வரைக்குகையில்
மருவிப் பார்க்க வகைவகையாய்ப்

---

62. வில்லி, தம்பியிடத்தில் பெருமான் கனவில் கூறியவற்றை விவரித்தான். படை - படைப்பாயாக (ஏவல் வினைமுற்று).

63. கண்டனும் வில்லியும் சில தூரம் சென்றனர். அங்குப் புலி, கணைகள் பட்டு இறந்து கிடப்பதைக் கண்டனர். செற்று - இறந்து.

பொன்னும் மணியும் பணிதிகளும்
பொருந்தக் கிடத்தல் தனைக்கண்டே
துன்னும் கனவில் கண்டதெலாம்
மெய்யென்று உளத்தில் துணிவுற்றார். 64

இந்த இடத்தில் அத்திருமால்
இருத்தற்கு ஐய மிலை;உறையும்
அந்த இடம்நாம் அறிகுதும்என்று
அவண்விட்டு ஏகி, அவ்வனத்தில்
எந்த இடத்தும் புதல்புதலாய்
இருகண் இமையாது ஆராய்ந்து
சிந்தை கனிவாய் விரைவினொடும்
தேடித் தேடி திரியுங்கால்; 65

வேடர்கள் வடபத்ரசாயியைக் கண்டது

முன்னாள் தனில்ஆ ராதித்தோர்
முயன்ற அணிஆ லயம்கிலமாய்
பின்னாள் முளைத்த வடவிருக்கப்
பெருக்கால் மூடு பட்டதனுள்
பன்னா கணையும் அதன்மிசையே
படுத்த எமையும் தாமரைவாழ்
பொன்னோடு உனையும் இருகண்ணும்
பொருந்தக் கண்டே மகிழ்வாகி; 66

துயிலுங் காலை யுறுங்கனவில்
களிப்பத் தோன்றித் தகவுடனே
பயிலுங் கடவுள் இவராம்என்று
உன்னிப் பலகா லம்புவியில்

---

64. இருவரும் குகைக்கண் சென்று, பொன், மணி, பணிதிகள் கிடப்பக் கண்டு மகிழ்ந்தனர். உழுவை - புலி.

65. இருவரும், புதர்கள்தோறும் திருமாலைத் தேடினர். கண் இமையாது தேடினர். இங்கு, "எவ்வண்ணம் சிந்தித்து இமையாதிருப்பரேல்" என்ற பிரபந்தப் பாசுரம் நினைவுக்கு வருகிறது.

66. அவர்கள் கோவிலையும் பெருமானையும் கண்டனர். அணி ஆலயம் - அழகிய கோவில். கிலமாய் - சிதைவுற்று. வடவிருக்கம் - ஆலமரம். என்னையும் பொன்னையும் உன்னையும் கண்டனர். (பொன் - திருமகள். உன் என்றது நிலமடந்தையை.)

சயிலம் பொருவும் திணிதோளார்
தாழ்ந்து வணங்கி அடிபோற்றி
அயில்வெங் கண்ணாய்! கனவிலுரை
அவ்வாறு அமைக்கச் சிந்தித்தே; 67

கோவில் எழுந்தது

மலையின் குகையின் இடைகிடந்து
வளம்சேர்ந் திரவைப் பகலாக்கும்
விலையில் மணியும் பணிதிகளும்
மிளிரும் பைம்பொன் முதலியவாய்
நிலைகொண்டு அதைப்பண் டியில்பொதியில்
நிரப்பிப் பின்னும் மனிதர்கள்தம்
தலையின் மிசையும் வருவித்தும்
தன்கைப் பொருளும் உடன்கலந்தே; 68

நிலைபெற்று உயர்பொன் கோபுரமும்
நிரப்பு மணிமண் டபம்மதிலும்
அலையுற்று எழுநீர்ப் பொய்கையும்மற்று
அவைபோற் பலவாம் திருப்பணியும்
மலையொத்து உயரும் மணிமாட
கூடங் களுஞ்சேர் வளநகரும்
சிலைபொற் கரம்சேர் வில்லியக்கான்
அழித்துச் சிறக்கச் செய்வித்தே; 69

---

67. கனவில் தோன்றியவர் இவரே என்று உண்மை உணர்ந்து, என்னைப் புகழ்ந்து, நான் கனவில் கூறியபடி செய்யத் தொடங்கினர். சயிலம் - மலை. திணி தோளார் - வன்மைடான தோளையுடையவர். அயில் - வேல். கண்ணாய் - கண்ணையுடைய பூமிதேவியே.

68 — 69. மலைக் குகையிற் கிடைத்த பொருள்களையும் தம் கைப் பொருள்களையும் கொண்டு, கோபுரம், மண்டபம், மதில் முதலானவற்றை அமைத்தனர். இரவைப் பகலாக்கும் மணி - இரவு நேரத்தையும் இருள் ஓட்டிப் பகலாகச் செய்யும் மணிகள். குகைப்பொருளை வண்டியிலும் மூட்டையிலும் மனிதர்களின் தலையிலும் வருவித்தனர்.

69. அக் கான் - அந்தக் காட்டை.

வில்லிபுத்தூர் மலர்ந்தது

அருகில் உறையும் திருப்புத்தூர்
அந்த ணாளர் தமைஅழைத்துத்
திருவை குறயாம் அமைத்திடும்இத்
திருமா நகரம் அதனிடைநீர்
மருவி உறைந்து பெருவாழ்வு
மலியச் சிறப்புஎய் திடும்குடியாய்
வருதல் வேண்டும் எனஉரைப்ப
மற்றுஅங்கு அவர்கள் வகுத்துரைப்பார். 70

நன்று புகன்றது இத்திருமா
நகரந் தனக்கும் அழகுசிறப்பு
ஒன்று நாமம் புத்தூர்என்று
உரைத்தால் யாங்கள் அவண்வருவேம்
என்று புகல அப்பெயர்தன்
பெயரோடு இசையு மாறுஉரைத்தான்;
அன்று குடியாய் அவர்களும்சேர்ந்து
அணுகச் சிறக்க வாழ்ந்தனரால். 71

அதனால் அவ்வூர் அமைத்தவன்பேர்
அருகு புத்தூர் கலந்துஇரண்டு
விதமாய் ஒன்றி வில்லிபுத்தூர்
எனும்ஓர் நாமம் விளங்கியதால்;
மதிசேர் சிகரக் கோபுரமும்
வளமா நகரும் புராதனத்தைப்
புதிதாய்ச் செய்த தால்ஒருபேர்
புதுவை எனவும் பொருந்தியதால். 72

---

70 — 71. வில்லியும் கண்டனும் அருகில் (புத்தூரில்) உறையும் அந்தணர்களைத் தாம் அமைத்த நகரில் தங்கியிருக்க வேண்டினார்கள். அவர்கள் எங்கள் ஊரின் பெயரை அமைத்தால் வருவோம் என்றனர். அதற்கு உடன்பட்ட வேடர்கள் அவ்வூர்க்கு "வில்லிபுத்தூர்" என்று பெயரிட்டனர்.

70. திரு வைகுற - திருமகள் தங்கும்படி.

71. குடியாய் - குடியிருப்பவராய். தாயார் பெயர் நாட்டுக்கு வந்தது. "மல்லிநாடு" என்ற வழக்கை நோக்குக.

72. புதிதாக ஆக்கப்பட்டதால் "புதுவை" என்ற பெயரும் அவ்வூர்க்கு அமைந்தது.

சீரார் அனுமன் பொற்கருடன்
சிவிகைப் பரிதண் டிகைசேடன்
தேர்ஆ னைஇன முதலாகும்
திருவூர் திகள்பல செய்வித்து
ஆரா தனம்பிரம் மோற்சவமோடு
அணியார் மற்றைத் திருவிழாவும்
தோராது அமரர் தாமும்அதி
சயித்துத் துதிக்கப் புரிவித்தான். 73

அவ்வா றாக நாடொறும்ஆங்கு
அவன்செய் பலவும் குறைவுஇலதாய்ச்
செவ்வே புரிந்து வருநாளில்
சிலகா லம்சென் றுற்றபினர்
எவ்வேறு உலகங் களினும்இதற்கு
இணைஎன்று எடுத்திட்டு இயம்பிடுதற்கு
ஒவ்வாது உயர்நம் பரமபதத்து
உற்றான் அவன்தம் பியினோடும். 74

பெரியாழ்வாரின் வரலாறு

மண்நா டினையே முதற்பலவாய்
வகுத்தும் புகல்அண் டங்களினும்
நண்ணாப் புகழ்நண் ணிடும்அந்த
நகரின் சரிதம் நவின்றனமால்;
விண்ணா டர்களும் புகழ்ந்துஏத்தும்
விட்ணு சித்தன் சரிதம்அதைப்
பெண்ணார் அமுதம் அனையாய்!யாம்
பேசக் கேட்டி எனப்பேசும். 75

---

73. வேடர்கள், ஊர்திகள் அமைத்தனர். விழாக்கள் செய்தனர். தோராது - தோல்வியடையாதபடி. "தோராத பெருவீரன் தொழுத கோவில்" என்பர் வேதாந்த தேசிகர்.

74. சிலகாலம் சென்றபின் அவர்கள் பரமபதம் அடைந்தனர். பின் இரண்டு அடிகளும், பரமபதச் சிறப்பைப் பேசுகின்றன. எவ்வேறு உலகம் - எத்தகைய உலகமும். இணை - சமம். ஒவ்வாது - ஒப்புமை இல்லாமல்.

75. 'வில்லிபுத்தூர் வரலாறு புகன்றோம். இனி, விஷ்ணுசித்தன் புகழைப் பேசுவோம்' என்கின்றான் திருமால். மண்ணாடு முதலாகச் சொல்லப்பட்ட அண்டங்களில் எவ்வூரும் அடையாத புகழ்பெற்ற வில்லிபுத்தூர். பெண்ணார் அமுதம் அனையாய் - பெண்களுக்குள் அமுதம் போன்றவளே.

(வேறு)

ஆழிசூழ் உலகில் அவதரித் துடையோர்
அனைவரும் நமைஅறி கிலராய்ச்
சீழ்உறு மலமூத் திரஉடல் எடுக்கும்
செனனசா கரம்கடந் திலராய்ச்
சூழ்உறு மாயை வயத்தராய் நரகில்
துன்னுதற்கு இரங்கிஆங்கு அவர்கள்
வாழ்உறும் பரம பதம்தனில் புகுந்து
மகிழ்வுற யாம்உளம் மதித்தே; 76

பெரியாழ்வார் அவதாரம்

மருள்தரும் உளம்சேர் மாநிலத்து எவர்க்கும்
மயக்கற விளங்குமெய்ஞ் ஞானப்
பொருள்தனை விரித்துஉள் உணர்ந்திடு மாறாய்ப்
புகன்றுபின் வருதிநீ என்னக்
கருடனுக்கு உரைப்ப அவனும்அம் முறைஅக்
கடிநகர் முகுந்தன்பத் தினியாம்
இருள்தரு குழல்சேர் பற்புமை வயிற்றி
னிடைவிட்ணு சித்தன்என்று உதித்தே; 77

திருப்பணிகள்

துஞ்சுறு மாயை இருளினைத் துறக்கும்
சுடரவ னாம்என விளங்கி
அஞ்சுமா வயதின் ஞானஉற் பவமாய்
அன்புநம் மிடத்தில்உண் டாகி

---

76 முதல் 85 பாடல் வரை விஷ்ணுசித்தன் பெருமையைத் திருமால் பூமி தேவிக்குப் பகர்கின்றான்.

76. மக்கள் மாயை வயப்பட்டு, நம்மை அறியும் அறிவற்று, பிறவிக் கடலைத் தாண்ட முடியாதவராய் நரகில் வாடினர். அவ்வுயிர்கள் பரமபதம் அடைய வேண்டுமெனக் கருதினோம். சென்ன சாகரம் - பிறவிக்கடல்.

77. மக்கள் உய்ய மெய்ஞ்ஞானப் பொருளை விளக்கிப் பின் வருக என்று கருடனை அனுப்பினோம். அவன் விட்டுணுசித்தராய் அவதரித்தான். மெய்ஞ் ஞானப் பொருள் - இறைவனுக்கு நாம் மெய்யாக (உடலாக) இருக்கின்றோம் என்பதைத் தெரிந்துகொள்ளுதல். "பொய்யிரு ளகல ஞானப்பொருட் கதிர் விரித்த புத்தேள்" என்று பட்டனார் பகர்வர் (பகவத்கீதை). உணர்ந்திடுமா றாய் - உணரும்படி (தெளியும்படி).

விஞ்சுமல் லிகைமுல் லையும்நறுந் துளவும்
விளங்குறு திருநந்த வனமும்
கஞ்சமும் கழுநீர் முதலிய மலர்கள்
கவின்பெறு தடமும்ஆங்கு இயற்றி; 78

கிழியறுத்தல்

காலையில் கடன்கள் கழித்துப்பூ மலர்கள்
கசங்குறாக் கூடையின் எடுத்து
மாலைகள் தொகுத்து நமக்குஅணி வித்தே
வருகுவன் அதுவும்அல் லாமல்
வேலைசூழ் புவியின் மிகுவளம் பொருந்தி
மேவுசீர்ப் பாண்டிய வேந்தன்
மேலைநாள் பரம வத்துஎவன்? என்ன
விளங்குறத் தெரிகுவான் விரும்பி; 79

தனதுவா யிலினோர் கிழிதனைத் தூக்கித்
தர்க்கத்தில் வென்றுள பெரியோர்
இனதுகொண் டடைமின் எனத்திரு முகங்கள்
எங்கணும் பரவிட விடுத்தான்
அனதுணர்ந்து உலகிற் பல்பல விதமாய்
அறையும்அச் சமயவா தியர்கள்
மனதுவந்து அமைதம் விருதுடன் மதுரை
மாநகர் வந்துஅணு கினரால். 80

---

78. துஞ்சுறும் - அழிகின்ற. துறக்கும் - ஓட்டுகின்ற. ஞானம் உற்பவமாய் - உண்மையறிவு உண்டாகி. நந்தவனமும் தடமும் இயற்றினார். தடம் - குளம்.

79 — 81. நமக்குத் திருமாலை தொடுத்து வழங்குவான். பாண்டிய வேந்தன், யார் பரம்பொருள்? என ஆராய விரும்பினான்.

80. தன்னுடைய ஆசார வாசலில் பொற்கிழி கட்டி எங்கும் திருமுகம் விடுத்தான். பல சமயவாதியர் மதுரையை அடைந்தனர்.

ஒத்தடைந் தவர்கள் தமதுநூன் முறைகொண்டு
உரைத்திடும் தர்க்கமா முறைகள்
எத்தனை விதத்தால் கேட்பினும் அதனுக்கு
இசைவுறத் தனதுநூல் எடுத்திட்டு
அத்தனை விதங்கட்கு எண்மடங்கு உரைத்திட்டு
ஆங்குஅவர் தமையெலாம் விட்ணு
சித்தன்வென்று அவைமுன் நமைப்பரம் எனவே
செப்பிஅக் கிழியையும் அறுத்தான். 81

ஏனைய சமயத் தவர்களும் துதிசெய்து
ஏத்தும்அப் பட்டர்பி ரானைச்
சோனைஅம் புயலின் பொழிகர அரசன்
தொழுதுபொன் னடிமுடி யணிந்து
சேனைநால் வகையும் செயசெய என்னத்
தேவர்கள் மலர்மழை பொழிய
ஆனைமேல் ஏற்றி அணிமுரசு அதிர்வித்
தந்நகர் வலம்வரும் போதில்; 82

பல்லாண்டு

சிவனயன் முதலோர் சேவடி வணங்கச்
செம்பொன்அங் கிரியினை நிகரும்
உவணமீ திவர்ந்து திருவுளம் பொலிய
உலகுளோர் பலரும்ஆங்கு உணரப்
பவனிவந் திடுவோன் கண்டுஉளம் உருகும்
படிஎதிர் எளியதாய் அடைந்தேம்;
அவனும்அன் புடனே தொழுதுபல் லாண்டுஎன்று
அணிபெறும் காப்புஅணிந் தனனால். 83

---

81. சமயவாதியர் பலரும் பலவித வினாக்களை வினவினர். அவற்றிற்கு ஏற்ப, விடை கூறி, அவர்களை வென்று நம்மைப் பரம்பொருள் என்று நிலை நிறுத்திக் கிழியறுத்தான். கிழி - பொன்முடிப்பு. "கேடில் சீருடையாய்! விஞ்சைக் கிழியொன்றில் பலபொன் தூக்கி ஈடுறச் செய்தி" என்று கூடற்புராணம் பேசும்.

82 — 83. சோனை - மழை. புயலின் - மேகத்தைப் போல. யானைமேல் வரும் விஷ்ணுசித்தருக்கு யாம் காட்சி வழங்கினோம். அங்குப் பல்லாண்டு பாடி மங்களாசாசனம் செய்தார். 'உளம் உகுகும்படி' என்ற இடத்தில் "திருமால் கருணைப் பேரழகாம் தெய்வத் திருப்பாற் கடல்மூழ்கி — வரும் ஆதரத்தால் பேர்ன்பு விளரத் தளரா மொழிவிம்மக் — கருமாணிக்கச் செழுந்திரளே! கண்ணே! மணியே! சுற்பகமே! பெருமர்! என்று புதுவை நகர்ப் பெம்மான் வாழி வாழ்த்து கின்றான்" என்ற கூடற்புராணப் பாசுரத்தை நோக்குக.

முன்புறு சைவ சமயமாம் அதனை
விடுத்துப்பொன் முடியுடை அரசன்
அன்புடன் வேண்டத் திகிரிசங்கு அவன்தன்
அணிபுயம் இரண்டினும் அணிந்தே
பின்புஉவந்து அளித்த பொருள்மணி முதலாம்
பெருவெகு மதிகள்கொண் டருளித்
தன்புகழ் எவரும் துதிசெய மதுரை
தனைவிடுத்து அணிநகர் அணுகி; 84

பாமாலையும் பூமாலையும் அணிவித்தல்

கண்ணனாய் உதித்துயாம் இருந்தபோது இயலும்
காரிய சம்ப்பரமம் அதன்தன்
வண்ணம்யா வையும்செந் தமிழினால் கவியாய்
வழங்கும்அப் பாவின்மா லைகளும்
தண்ணறாத் துளிக்கும் மலரினால் தொடுத்துச்
சமைத்தபூ மாலையும் சாத்தி
எண்ணரும் கால மாய்இருக் கின்றான்;
அவன்உளத்து யாமும்வீற் றிருப்போம். 85

இந்தவா றாம்அத் தலம்அமைந் துளதும்
யாம்அவண் உறைந்துள செயலும்
செந்தமிழ்க் கவிவல் விட்டுணு சித்தன்
செனித்தசெய் கையும்புவி மானே!
சிந்தைகொண்டு உணர்தி; எனவழங் கினனால்,
செழித்தபாற் கடல்முகட்டு ஆலின்
பைந்தளிர் அதன்மேல் பாலனாய் உறங்கும்
பராபர னானநா ரணனே. 86

84—85. அரசன் சைவ சமயம் விடுத்து, வேண்டிக்கொண்டபடி அவன் புயங்களில் சங்கு சக்கரங்களைப் பொறித்து, மன்னன் வழங்கிய பரிசிற் பொருளுடன் மதுரையை விடுத்துப் புதுவையை அடைந்தார் ஆழ்வார். யாம் கண்ணனாய்ப் பிறந்த காலத்தில் நிகழ்ந்தவற்றைப் பாமாலையாக்கி அத்துடன் பூமாலையும் தொடுத்து எனக்குச் சாத்தி வாழ்கிறார். அவர் உள்ளத்து யாம் எப்போதும் இருப்போம்.

84. திகிரி - சக்கரம்.

85. நறாத்துளிக்கும் - தேன் சிந்துகின்ற.

86. புவிமானே - பூமாதேவியே! வழங்கினான் - கூறினான். பாற்கடல் முகட்டு - பாற்கடலின் உச்சி. "முடக்கும் திரைப்பாலாழி நெடுமுகட்டில் துயில்" என்பது அழகர் பிள்ளைத்தமிழ். ஆலின் பைந்தளிர் - ஆலிலை. பராபரன் - மேலான பொருட்கெல்லாம் மேலானவன்,

புவிமகள் விண்ணப்பம்

உரைசெயும் திருவா சகம்பல பலவும்
உற்றுவந்து இருசெவி யுருக
விரைசெய்பூந் தொடையல் கரியகார்க் குழலின்
மிலைந்தசீர் அம்புவி மகளும்
கரைசெயற்கு அரிதாம் களிக்கடல் அழுந்தி
ஓர்விதம் கரைஉணர்ந்து எழுந்து
திரைகடல் நிறத்தான் இணைந்ததா மரைப்பூந்
திருவடி பணிந்துஇவை தெரிப்பாள்: 87

பூமிதேவியின் அவதாரம்

திருவுளப் படியான் புதுவையில் பட்டர்
பிரான்எனுந் திருப்பெயர் புனைந்து
மருவும்அப் பெரியாழ் வார்மக ளாய்ப்பூ
மாலைபா மாலைஎன்று உரைக்கும்
இருவகைக் கயிங்கி ரியமும்யான் இழைப்பான்
இசைந்தனன்; ஏகுஎன விடைதந்து
அருளெனக் கேட்டாள்; அம்முறை புரியென்று
ஆழிமா யனும்அளித் தனனால். 88

(வேறு)

விடைகொண் டதன்பின் திருவெனவும்
நீளை எனவும் விளம்பிடும்அப்
படைகண் ணினர்தம் மொடும்புகன்று
பலதே வர்கள்சித் தர்கள்இயக்கர்
சடைகொள் முனிவோர் முதலானோர்
தாழ்ந்து வணங்கக் கடலாலின்
அடைகண் வளர்மால் உளம்தொடர
அவைவிட்டு அகல்அம் புவியடைந்தே; 89

---

87. பூந்தொடையல் - பூமாலை. மிலைந்த - அணிந்த. அம்புவி மகள் - பூமாதேவி. திரைகடல் நிறத்தான் - அலை வீசும் கடல் போன்ற நிறமுடைய திருமால். பூமிதேவி இறைவனை நோக்கித் தன் கருத்தைக் கூறுகிறாள்.

88. 'உன் திருவுளப்படியே யான் பெரியாழ்வார் மகளாய்ப் பிறந்து இருவகை மாலைகளையும் உனக்கு அளிப்பேன்; விடையருள்' என்றாள். மாயனும் விடை வழங்கினான். ஏகு - போவாயாக. ஆழி - சக்கரம்.

89 — 90. பூமிதேவி, மால் உளம் தொடரப் புவியை அடைந்து, பெரியாழ்வார் வளர்க்கும் நந்தவனத்தில் திருத்துழாயில் ஆடி மாதத்தில் அவதரித்தாள். திரு, நீளை என்ற தேவிமார்களிடம் விடை பெற்று, தேவர் முதலானோர்

வில்லி புத்தூர் எனும்நாமம்
விளங்கு நகரில் பெரியாழ்வார்
அல்லும் பகலும் ஒழிவிலதாய்
அமைத்த நந்த வனத்திலிலே
எல்லும் துளவ நறுஞ்செடியில்
ஏரார் சிறுபெண் வடிவுடனே
சொல்லும் கடக மதிஅதனில்
துணையில் கணையில் தோன்றினளால். 90

அந்தத் துளவம் எனும்மடவாள்
அகலம் புவிமான் தனதுஇடத்தில்
வந்துஉற் பவிக்கப் பூருவநாள்
வகுத்த தவம்யா தென்னஇடந்
தந்து பலவாய் உபசரித்துத்
தளிர்க்கை கொடுபொற் றாள்தடவிச்
சிந்தை கனிந்து மகிழ்சிறக்கத்
திருமா முடியில் தாங்கினளால். 91

பெரியாழ்வாரின் செயல்

பெரியாழ் வாரும் அன்றுஉதயம்
பெறுமுன்பு அமையும் துயில்உணர்ந்து
விரியார் புனலின் தடந்தோய்ந்து
விதியிற் காலைக் கடன்பலவும்
புரியா துளவம் அணிதிருமண்
பொலியத் திருப்பூங் கூடையுடன்
பரிவாய் இதழ்விண்டு அலர்ந்தமலர்
பறிப்ப நந்த வனம்அடைந்தான். 92

வாழ்த்த, புவியை அடைந்தாள். ஆலின் அடை - ஆலிலை. கடக மதி - ஆடி மாதம். துணையில் - நிகரற்ற. கணையில் - பூர நட்சத்திரத்தில். "பகவதி நாள் கணை, நாவிதன், பூரம்" (பிங்கலம்).

91. திருத்துழாய் என்கின்ற பெண், பூமிதேவி குழந்தையாய்த் தன்பால் வந்திருப்பதை அறிந்து, உபசரித்து, தளிர்களாகிய கைகளால் திருவடிகளை வருடித் திருமுடியில் தாங்கினாள். புவிமான் - பூமாதேவி.

இங்கு, சீவில்லிபுத்தூர் புராணம் "கருவாய் மதிபத்தாய் உடல் கருல் நாடிகள் பசவா — இருவாரிள முலை கண் கரிதெய்தா இதழ் வெளிறாப் — பொருவாழ் விழி குழியா வளைபுளி மண்சுவை காணா — ஒரு தாயின் வயாநோவுறல் இலதாக உதித்தாள்" என்று நயம்படக் கூறும்.

92. பெரியாழ்வார் காலைக்கடன் முடித்துக்கொண்டு நந்தவனம் அடைந்தார். புனலின் தடம் - பொய்கை.

சோதியைக் கண்டார்

வந்து நோக்கும் பொழுதுஅவன் தன்
மனமும் மலர்க்கண் களும்களிப்பக்
கந்தம் பரந்து நெடுந்தூரம்
கமழும் துளவம் அதன்மிசைஓர்
சந்த்ர வதனப் பெருங்கதிரோன்
தான்வந்து உதய மானதுபோல்
முந்தும் சோதி தோன்றுதலும்
முதிரும் பெரிதுஅற் புதம்அடைந்தே; 93

அருகுஉற்று அமைய நோக்குதலும்
மதிமா முகமும் அம்புயம்நேர்
இருகண் கரம்பா தமும்ஒளிரும்
பெண்கண் மணிதன் எழில்நோக்கி
முருகுஉற்று ஒளிரத் துளவுஅணியும்
முகுந்தப் பெருமான் தனக்குஉகப்பாம்
திருமற்று இவளாம் எனஉளத்திற்
சிந்தித்து அநேக விதம்துதித்தே; 94

இங்கே இம்மாது இரத்தினம்வந்து
இருக்கும் செயல்என் னோ?இதெல்லாம்
பங்கே ருகம்வாழ் திருவினொடும்
பார்மின் னோடும் பாம்பணையில்
செங்கேழ் மலர்க்கண் வடபத்ர
சாயி தன்னை வினவியிடில்
அங்கே உணர லாம்எனத்தன்
அகம்உள் தெளிந்துஆ னந்தமொடும்; 95

---

93 — 94. பெரியாழ்வார் திருக்கண்களுக்கு முதலில் ஒளி தோன்றிற்று. அணுகி நோக்கும்போது கோதை காட்சி தந்தாள்.

93. நெடுந்தூரம் கமழும் துளவம் - நீண்ட தூரம் வாசனை வீசும் திருத்துழாய். "காதமோர் நான்கு தெய்வக் கடிகமழ் கமலை கொண்கன் — பாத தாமரையில் சாத்தும் பைந்துழாய்" என்பர் செவ்வைச்சூடுவார் (பாகவதம்).

94. மதிமுகம், அம்புயம் நேர் கண், கரம், பாதம் கொண்ட கோதையை நோக்கிய ஆழ்வார், திருமாலுக்கு உகப்பாம் செல்வி இவளே எனப் போற்றித் துதித்தார். முகுந்தப்பெருமான் - திருமால்.

95 — 96. இங்கே இவள் தோன்றிய காரணம் யாது? வடபத்ரசாயியை வினவில் தெரியலாம் என்று, கோதையை ஏந்தியவண்ணம் இறைவன் முன்சென்று காணிக்கை என்று சொல்லித் தரையில் வைத்தார் ஆழ்வார்.

ஆழ்வார் காணிக்கை

அந்த காந்த மணிவிளக்கை
உபய கரஅம் புயம்அதுகொண்டு
உந்தி எடுத்துத் தாங்கிவிரைந்து
ஒளிர்நந் தனமா வனந்தனைவிட்டு
இந்து தவழும் உயர்ந்தவட
பெருங்கோ யில்முன் எய்தித்தான்
தந்த பெருங்கா ணிக்கைஎனத்
தரைமேல் வளர்த்தி இவைபுகன்றான்: 96

இவள் யார்?

துமுதம் தெரிக்கும் பாற்கடலின்
துயில்நீத்து இவண்வந்து உறைந்திடுவோய்!
குமுதம் பொருவாய் கரியகுழல்
மதிமா முகம்கூ ரியவேல்கண்
அமுத மொழிஇப் பெண்அணங்கார்?
இவண்வந் ததும்மேல் அமைவனவும்
உமது திருவாய் மலர்ந்திடும்என்று
உபய மலர்த்தாள் வணங்கினனால். 97

நின் திருமகளாய் வளர்க்க எனல்

அன்போடு அவ்வாறு உரைத்துவணங்கு
ஆழ்வார் அணிமா முகம்நோக்கி
மின்போல் ஒளிரும் திருமேனி
விளங்கு மணித்தா மரைவளரும்
பொன்போல் வாள்நின் திருமகளாம்;
அதனால் பொலிவு சிறந்தோங்கும்
நின்மா ளிகையி னிடைகொடுபோய்
நேய முடனே வளர்த்திடுவாய். 98

---

97. ஆழ்வார், ''இவள் யார்? இங்கு வரக் காரணம் யாது? இனிமேல் நிகழும் நிகழ்ச்சிகள் யாவை? கூறுக'' என்றார். துமுதம் - துளி. நீத்து - நீக்கி. மேல் அமைவன - இனி நிகழும் நிகழ்ச்சிகள். உபய மலர்த்தாள் - இரண்டு மலர் போன்ற பாதங்கள்.

98. பொன் போல்வாள் - திருமகளைப் போன்ற இவள். நேயமுடன் - விருப்பத்தோடு.

கோதை எனப் பெயரிடுக

முன்பின் இயைந்த செயலும்இவட்கு
இனிமேல் முயலும் செய்கைகளும்
பின்பின் உணர்தி என அருளப்
பெருகப் புகன்று பின்பும்இவள்
தன்பேர் கோதை யாகுமெனத்
தரிப்பாய் எனவும் சாத்தினனால்;
வன்போடு அடைந்த மல்லரைமுன்
மலைந்து குமைத்த மாமாயன். 99

உரைசெய் மொழியார் அமுதுசெவி
வழிவந் துறலும் பட்டர்பிரான்
கரைசெய் திடுதற்கு அரியபெருங்
களியா முவரி தனில்அழுந்தி
விரைசெய் துளவம் கமழ்பதத்தோய்!
விளம்பு முறைசெய் வேன்எனத்தா
மரைசெய் மலர்போல் முகங்கவின
மறித்தும் வணங்கி நிற்றலுமே; 100

இறைவன் கட்டளை

ஈண்டுஇம் மடவார் இரத்தினத்தை
மணிபொற் சிவிகை யிடையேற்றித்
தாண்டுந் தரங்கக் கடலின்ஒலி
தரும்வாத் தியங்கள் பலகறங்க
வேண்டும் சம்ப்ரம முடன்கொடுபோய்
விட்ணு சித்தன் மனைவிடுத்து
மீண்டுஇங்கு உறுமின் என்னபரி
சனத்தாற்கு அருள்மால் விடையருளா; 101

---

99. முன்பின் செயல் - முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சி. பின்பின் - பிறகு. 'கோதை' என்று பெயர் சூட்டுவாயாக, என்றான் பெருமான். மல்லரை - சாணூர முஷ்டிகள் என்ற பெயருடைய மல்லர்களை (இவர்கள் கம்சனால் ஏவப்பட்டவர்கள்). மலைந்து - போர் செய்து. குமைத்த - அழித்த. "கூற்றிருக்கும் கூர்நுதி வெண்கோடு வெளிற்றறி விரண்டும் குமைப்ப" என்பர் கவிராட்சசர் (தணிகைப் புராணம்).

100. கரை செய்திடுதற்கு அரிய பெருங்களியாம் உவரி - கரை அமைக்க முடியாதபடி பெருகுகின்ற மகிழ்ச்சிக்கடல். "கரை செய்தற் கரியதொரு பேருவகைக் கடல்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (பால காண்டம்). கவின - அழகுபெற.

101. வடபுத்ரசாயி, விருதுகளுடன் இப்பெண்மணியை ஆழ்வார் மனையில் விட்டு வாருங்கள் என்று பரிசனத்தார்க்கு ஆணை பிறப்பித்தான். பரிசனம் -

நன்றுஎன்று அவர்கள் திருவுள்ளம்
நயந்துஅம் பொன்னின் நவமணியும்
துன்றும் சிவிகை மிசைஅணங்கின்
தூய்மா மணியை இருகரம்கொண்டு
ஒன்றும் படியாய் எழுந்தருளச்
செய்தே முழங்கா ரொலிஓங்கிச்
சென்றுஎண் திசையின் உறைவோர்தம்
செவியுற்று அடைந்து களிப்பாக; 102

மேளம் பேரி நாகசுரம்
விளங்குந் தாரை திருச்சின்னம்
தாளம் ஒளிர்மத் தளம்மற்றும்
சாற்றும் பலவாத் தியமுடனும்
வாளங் கண்ணார் நாடகமும்
மருவச் சிறந்த மாநகர்வாய்
நீளுந் தெருக்கள் வலம்புரிந்தந்
நெடியோன் மனைவிட்டு அவர்போனார். 103

நாச்சியாரை ஆழ்வார் வளர்த்தல்

(வேறு)

மனைய டைந்துறு மங்கலந் தினந்தொறும் வளர
வினையி லாதவவ் விட்டுணு சித்தனும் விதியால்
அனைய பெண்ணினுக்கு அழகுறக் கோதையாம் என்னப்
புனைது ழாயவன் மொழிப்படி நாமமும் புனைந்தே; 104

பரிவாரம். "சேவித்தணையும் பரிசனங்கள் சூழத் திருவாரூர் இறைஞ்சி" என்பர் சேக்கிழார் (பெரிய புராணம்).

102 — 103. விருதுகளுடன் பரிசனத்தார் கோதை நாச்சியாரை நகர்வலம் செய்து ஆழ்வார் வீட்டில் விட்டுவிட்டு வந்தனர். வாளம் - வாள். "பூணார் சுடரக் கையொடு புகர்வாளமும்" என்பர் வில்லியார் (பாரதம்). நெடியோன் - பெரியாழ்வார்.

104—107. ஆழ்வார் கோதை நாச்சியாரை வளர்த்தமுறை கூறப்பட்டுள்ளது. கோதை என்னும் நாமம் புனைந்து, தொட்டில் அமைத்துச் செவிலித் தாய்மார்களையும் பாங்கியர்களையும் ஏற்படுத்தி, கலன்கள் அணிவித்து வளர்த்தார் ஆழ்வார்.

வச்சி ரம்வயி டூரியம் செழியுமா ணிக்கம்
பச்சை யோடுகோ மேதகம் புகர்புட்ப ராகம்
தச்சி ழைத்தசெம் பொன்னினார் வடமொடு தயங்கி
உச்சி தம்பெறும் தொட்டிலும் ஒளிபெற அமைத்தே; 105

ஆட்டுந் தோழியர்; தொட்டிலிட்டு அஞ்சன மலர்க்கண்
தீட்டும் பாங்கியர்; மடிமிசைத் திருத்தி அம்புலியைக்
காட்டும் தாதியர்; கண்ணிறை கழித்துஅருந்து அமுதம்
ஊட்டும் சேடியர் முதலினர் உபசரிப் புறவே; 106

பேதை யாம்பரு வந்தனில் இயைவன பெரியோர்
ஓதும் அம்முறை யாவையும் வழுவிலாது உஞற்றிக்
கோதி லாத்தனிக் கலன்களும் குறைவிலாது அணிந்து
தீதி லாமதிக் கலையெனத் தினம்தினம் வளர்த்தார். 107

வளரும் நாளிடை பெதும்பையாம் பருவம்வந் துறலும்
அளகம் சூழிய மாய்முடித்து அலங்கலும் புனைந்தே
ஒளிரும் நெற்றியில் பிறையெனத் திருமண்காப் புடனே
தளத ளத்திருச் சூரணம் தன்னையும் அணிந்தார். 108

காதில் கல்லிழை கம்மல்நற் சிமிக்கிகத் தரிப்பால்
தீதி லாநவ மணிஇழை செம்பொனின் முருகும்
கோதி லாமயிர் மாட்டிசேர் அழகுறும் கொப்பும்
ஓது மற்றுள வகைகளும் ஒளிபெற அணிந்தார். 109

---

106. கண்ணிறை கழித்து - கண் எச்சில் போக்கி.

107. வழுவிலாது உஞற்றி - குற்றமில்லாமல் செய்து.

108. பெதும்பைப் பருவம் வந்தது. அளகம் - கூந்தலை. சூழியமாய் முடித்து - உச்சிக் கொண்டையாகக் கட்டி. "மொய் பூங்குழல் குறிய" என்ற திருவிருத்தப் பகுதிக்குப் பெரியவாச்சான் பிள்ளை வழங்கிய விளக்கம் ரஸபுஞ்சகம். "செறிந்து அழகியதாயிருந்துள்ள குழல்களானவை நாயகன் பேணிச் சுழியம் சுற்றினால் இவள் வினை கேட்டாலே குலைத்தால் அதுக்கு அவன் கால்பிடிக்கும் அளவல்ல" என்று விளக்குவார். பிறை எனத் திருமண் காப்புடன் திருச்சூரணம் அணிவித்தார். இங்குத் "தண்பிறையும் ஈசன் சடைப்பிறையும் நாணவே—வெண் பிறை நாமத்தை விதானித்து" என்ற திருவேங்கட உலா நினைவுக்கு வருகின்றது.

109 — 114 வரை நாச்சியார் அணிந்த ஆபரண வகைகள் பேசப்படுகின்றன. இன்றும் இவற்றைக் கோதை நாச்சியாரின் திருமேனியிற் காணலாம்.

தேசு லாம்செழுங் குவளைநேர் கண்களில் திகழக்
காசி லாதொளிர் அஞ்சனம் கவின்பெற அணிந்து
மாசி லாஇள நகைபெறு மதிமுகத் தொளிரும்
நாசி தன்னின்மூக் குத்திபி லாக்குடன் அணிந்தார். 110

சங்கம் போன்றுள கழுத்தினில் தாழ்வடம் பதக்கம்
பொங்கு ஒளிக்கட்டு வடம்பொலி மோகன மாலை
செங்க திர்ச்செழும் பருதிபோல் சரப்பளி பதக்கம்
தங்கு முத்தினா ரமும்பல பொலிவுறத் தரித்தார். 111

ஏட லர்ந்தபூங் கரங்களில் எழில்செய் மதாணி
ஆட கப்பசுந் தோள்வளை அணிகொள்கே யூரம்
சூட கத்தொடு வளையலும் நவமணித் தொடியும்
நீடு றும்விர லாழியும் அணிமுறை நிறைத்தார். 112

அய்ய மெய்தியுண் டிலையெனு மிடையிடை யழகாய்
செய்ய பட்டின்சிற் றாடையும் சிறுமடி சாறும்
துய்ய பொன்னரை ஞாணொடு துலங்கும்ஒட் டியாணம்
வெய்ய வன்ஒளி காந்துறும் படிமிலைந் தனரால். 113

பளப ளென்னசெம் பஞ்சணிந்து அம்பொன்பா டகமும்
கிளரு மாமணித் தண்டையும் கெச்சையும் கொலுசும்
முளரித் தாள்களின் மோதிர வகையுடன் அழகு
வளமு றும்படி அணிந்தவை யாவரே வகுப்பார்? 114

இன்ன வாறதாய் வானகத் திடையிருந்து இழிந்த
மின்ன னாள்ஒளிர் மெல்லிய மேனியின் நிறையப்
பொன்னின் மாமணி நிரப்புபல் பூடணம் அணிந்தார்
வன்ன முற்றபொன் ஓவியம் நிகர்த்திட மாதோ. 115

பொன்னின் மாறுகோ லொடுமணி முச்சிலும் பொலியும்
மின்னு வெண்கல வடுப்பொடு தாம்பலா விறகும்
வன்ன வெண்பொனின் பலபல பாண்டத்தின் வகையும்
அன்ன மென்னடை யாள்விளை யாடுதற்கு அமைத்தார். 116

---

116. நாச்சியாரின் விளையாட்டுப் பொருள்கள்: மாறுகோல் - துடைப்பம். முச்சில் - முறம். தாம்பலா ? "தாம்பர விறகு" என்பது மாறிவிட்டதோ ? என்னவோ? யாரறிவார்? தாம்பரம் - தாமிரம்.

இனைய யாவும்கொண்டு எழில்பெறும் தோழிய ருடனே
அனைய நாள்தனில் நடைபெறும் திருவிளை யாடல்
தனைஒவ் வாதஅக் கோதையும் நாள்தொறும் தமது
மனையின் ஊடுஇருந்து ஆடுவள் மகிழ்வொடு மாதோ. 117

நாச்சியார் திருப்பணி

அந்த நாள்தனி லேபத்தி தலைஎடுத் தவளாய்
தந்தை அன்பினோடு உஞற்றிடும் தன்மைபோல் தானும்
நந்த மாவன கயிங்கர்யம் இயற்றுவான் நலஞ்சேர்
சிந்தை ஊடுஉற நினைந்துஇது செய்யல்உற் றனளால். 118

உதைய காலையில் தந்தையோடு இயல்வன உஞற்றி
இதையம் அன்புற நந்தன வனந்தனில் ஏகித்
ததையு மாமலர் எடுத்துத்தண் ணீர்தனைப் பாய்ச்சி
அதையும் ஓர்விளை யாட்டுஎன அனுதினம் இழைப்பாள். 119

சூடிக்கொடுத்தாள்

இன்ன வாகப்பற் பலதினம் இயைவுறும் அமைதி
பன்னு மோர்பகல் பன்மலர் பறித்துவந் ததனைத்
துன்னு மாலைகள் அணிபெற வகைவகை தொடுத்து
மன்னு பூந்திருக் கூடையுள் நிறப்புற வைத்தே; 120

ஆய கூடைஓ ரிடத்துவைத்து உலவலுக்கு ஆழ்வார்
போய காலையில் கோதைஎன்று உரைசெய்பூங் கொடியும்
ஏய மாலைகள் தன்னின்ஓர் மாலையை எடுத்துத்
தூய நாசியின் அதன்மணம் சோதிப்பான் மோந்தாள். 121

---

118 — 119. கோதையார், தந்தையைப் போலவே நந்தவன் கைங்கரியம் செய்தார்.

120 — 124. நாச்சியார் மாலை முதலானவற்றைச் சூடிக் கொடுத்தமை பேசப்படுகின்றது. ஆழ்வார் புனைந்த மாலையின் வாசனையை முகர்ந்து பார்த்து, அதில் ஈடுபட்டு மாலை முதலானவற்றை அணிந்து, தன் அழகைக் கண்ணாடி போன்ற கிணற்று நீரில் பார்த்துவிட்டுப் பழையபடி மலர்க்கூடையில் வைத்துவிட்டுப் பாங்கியர் இருக்கும் இடத்தை அடைவார்.

121. உலவலுக்கு ஆழ்வார் போய காலையில் - உலாவுவதற்கு ஆழ்வார் சென்ற சமயத்தில்.

மோந்த போதினில் பரிமள மிகுந்துற முழுதும்
காந்து மாமணித் தொடியுறும் கரங்களால் எடுத்து
வாய்ந்து றும்படி அளகத்தும் வளைகழுத் தகத்தும்
வேய்ந்து தன்திரு மேனியின் விளங்குஅழகு உணர்வாள். 122

தோன்று கின்றகண் ணாடியின் கிணற்றிடைத் தொடர்ந்தே
ஏன்ற பேரொளி யழகுகண்டு இன்புறும்; மீண்டும்
சான்ற தந்தையார் வருவர்என்று அதன்முனம் தரித்த
ஆன்ற மாலைகள் அனைத்தையும் அமைவுற வாங்கி; 123

திருந்து மாமலர்க் கூடையிற் சிக்கென முறையிற்
பொருந்த வைத்துஅதை உணர்ந்திடா வகைமுன்பு போல
இருந்தி டந்தனிற் கொண்டுபோய் இயைவுறத் தூக்கிக்
கருந்த டங்கணாள் பாங்கியர் உறும்இடம் கலந்தாள். 124

மாத வற்குஅர சாகிய பெரியஆழ் வாரும்
கோதை செய்தமை உணர்ந்திலார்; திருமனை குறுகிப்
போது மாலையின் குடலையை எடுத்துத்தன் புயத்தின்
மீது தாங்கியே விரைவொடும் வீதிகள் கடந்தே; 125

வடபெ ருந்திருக் கோயிலின் மருவிநஞ் சமரும்
படஅ ராஅணை அதன்மிசை பள்ளிகொள் பவர்க்குக்
குடலை மாலையை அருச்சகர் திருக்கரங் கொடுத்திட்டு
அடைவு டன்உகப்பு எய்துறு முறைஅணி வித்தே; 126

தீர்த்த மும்பிர சாதமும் திகழ்வுறும் இருகை
ஏர்த்து வாங்கித்தன் இதயமும் இருகணும் களிப்பச்
சீர்த்த நாரணன் அம்புயச் சீரடி வணங்கிப்
பேர்த்து மாளிகை குறுகிவீற் றிருந்தனன் பெரியோன். 127

---

122. காந்தும் - ஒளிவீசும். பணித்தொடி - மணிகள் பதித்த வளையல்.

126 — 127. பூக் குடலையைத் தோளில் தாங்குவது மரபு. அடைவுடன் - மரபின்படி. ஏற்று - என்பது ஏர்த்து என்று வந்துளது. எதுகை நயம் கருதி, (புதிய பிரயோகம்) ஏற்று, ஏத்து ஆகி, ஏர்த்து என்றாயிற்று. பேர்த்து - மீள.

என்றும் ஆங்குஅவன் கொணர்ந்துதற் கணிந்திடு தலினும்
அன்ற லங்களில் பரிமளம் அதிகமாய் உறலும்
இன்று இதற்குள்இம் முறையுறல் எவ்விதம் எனவே
குன்றி னால்மழை விலக்கிய கோவலன் குறியா; 128

வென்றி வேல்கண்அம் கோதையாள் விட்டுணு சித்தன்
சென்று நீங்கிய காலைத்தன் குழலிடைச் சேர்த்த
மன்ற லாம்என நடந்துள வாறுஉணர்ந் தருளி
நன்று நன்றுஎன ஆனந்தம் மிகவும்நண் ணினனால். 129

ஆங்குஅவ் வாறதாய் மாலையைத் தொடுத்துவைத்து ஆழ்வார்
நீங்கு காலையில் நாடொறும் நிர்மலக் கோதை
தேங்கு ழற்கணே அணிந்துகண் ணாடிநேர் கிணற்றில்
பாங்கி னோடுஅழ குணர்ந்துஅதைப் பண்டுபோல் வைப்பாள்.

தந்தை அச்செயல் உணர்ந்திடாது அதைப்பின்பு தகவாய்
வந்தெ டுத்துப்போய்க் கொடுப்பவை வடபத்ர மாலும்
சிந்தை இன்புற அணிந்துஉளம் ஆனந்தம் சேர்வன்
இந்த வாறதாய் நாள்தொறும் இயலும்அந் நாள்வாய்; 131

உவரி போல்நிற வடபெருங் கோயில்உள் உறைவோன்
புவனி மங்கையாள் கோதையாம் திருப்பெயர் பொருந்தி
அவத ரித்துதற்கு இயற்றுறு கயிங்கர்யம் அதனை
எவர்க ளும்தெரிந்து உணர்வகை புரிகுவான் எண்ணி; 132

வடபத்ரசாயி நாச்சியார் சிறப்பை உலகுக்குணர்த்தல்

ஒருதி னம்பெரி யார்கொணர்ந்து உதவுபூங் குடலை
இருக ரங்களால் அருச்சகர் இனிதொடும் ஏந்தி
மருவு மாலையில் ஒன்றுஎடுத் திடலும்மற்று அதின்ஓர்
கரும யிர்தெரி வுறும்வகை காண்குவித் தானால். 133

---

128 — 129. மாலை முதலானவைகள் முன்னைய நாள்களினும் இன்று மணம் அதிகமாக இருக்கும் காரணம், கோதையார் சூடிக் கொடுத்ததால் என வுணர்ந்து திருமால் ஆனந்தம் நண்ணினான். பரிமளம் - மிக்க வாசனை. "பலவும் தோய்தலின் பரிமளங் கமழ்வன பாராய்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (அயோத்தியா காண்டம்). கோவலன் - கோபாலன் (வடபத்ரசாயி).

130 — 132. கோதையார் சூடிக்கொடுத்த செயலால் உவந்த பெருமான் கோதையாரின் சிறப்பை உலகுக்கு உணர்த்த எண்ணினான்.

132. உவரி - கடல்.

133 — 134. ஒரு நாள் ஆழ்வார் கொணர்ந்த மாலையில், ஒரு கருங்கேசம் கிடப்பதை அர்ச்சகர் காணும்படி செய்தான் மாயவன். அர்ச்சகர், இதில் பங்கி

காண்ட லும்அதைச் சாத்துறாது அர்ச்சகர் கருத்தில்
ஈண்டு இதன்இடை பங்கிஉற் றிடுதலால் எவரோ
பூண்ட மாலையைப் போன்றுளது எனஐயம் பொருந்தி
ஆண்டு உறும்பெரி யார்முகம் அமைவுற நோக்கா; 134

அர்ச்சகர் செயல்

அய்ய! இக்கரு மயிர்தனைக் கண்டிரோ? அதலால்
செய்ய மாலையும் கசங்கியது; இச்செயல் இதனுக்கு
எய்த வேணகா ரணம்எனோ? உணர்கிலன்; இதனைப்
பைய ராஅணை யார்தமக்கு அணிதல்பண் பாமோ? 135

தீதி லார்கள்கொண்டு அடைதலில் இம்முறை சேரின்
ஓதும் மற்றவர் கொணர்வதை என்என உரைப்பேன்?
பேதை யேன்நினது அடிக்குஅப சாரமே பெறினும்
ஈது மாதவர் தமக்குஅணி குதல்இழி வாமால். 136

அல்ல வென்றுநான் அணிந்திடில் பவம்தனக்கு ஆளாய்
தொல்லை மாநர கம்தனில் தொடர்ந்துற அழுந்தி
எல்லை யில்லதாம் காலம்ஆங்கு எய்திடல் வேண்டும்;
நல்லை நீஉண ருறாததை அடியன்என் நவில்வேன்? 137

ஆய வாற்றினால் யான்இதை அணிகுவன் எனஇம்
மாய னார்மனம் உகப்பினும் மனம்அறிந்து அடியேன்
நேய மோடுஅணி வித்திலன் எனநில மிசைஅத்
தூய மாமலர்க் குடலையைச் சோரவிட் டனனால். 138

(மயிர்) இருப்பதால் இம் மாலை பிறரால் சூடப்பட்ட மாலை என்று ஐயுற்றார். பெரியாழ்வார் முகத்தை நோக்கிப் பின்வருமாறு கூறினார்.

135 — 136. வேண காரணம் - வேண்டிய காரணம் (நாட்டு வழக்கு) மாலையில் பங்கியும் உள்ளது; கசங்கியும் உள்ளது. இதனை இறைவனுக்கு அணிவிக்கலாமோ? தீமையற்றவர்கள் செய்யும் பணியே இப்படி இருந்தால், மற்றவர் கொணர்வதைப்பற்றி என்ன சொல்வேன். நின் திருவடிக்கு அபசாரம் என்றாலும் இதனை இறைவற்கு அணிவது இழிவாம். பையரா அணையார் - திருமால்.

137—138. இம் மாலையை அணிவித்தால் நான் நரகில் அழுந்த நேரும். நீங்கள் உணராததை நானோ கூறவல்லேன். ஆதலால் இம் மாலையை அணிவியேன் என்று கூறிய அர்ச்சகர் பூக்குடலையை நழுவவிட்டார். மாயனார் உகப்பினும் அணிவியேன் என்றது அர்ச்சகரின் திருத்தொண்டின் உறைப்பைக் காட்டுகிறது.

எடுத்த மாலையோடு அம்மலர்க் குடலையை எதிரில்
கடுத்த மாமுகத்து அருச்சகர் புவியிற்காண் குறவே
விடுத்த வாறும்அங்கு அதுதுவண்டு ஒருமயிர் விளங்க
அடுத்தி ருந்ததும் அகமுறப் பெரியரும் அறிந்தே; 139

வடுவில் அம்புய மலர்முக மண்டலம் வதங்கிச்
சுடுகை யாய்மனம் பதைத்திடத் துடைகளும் கரமும்
நடுந டுங்கிட மேனியும் குலைந்திட நலியும்
கடுவுண் டார்களின் உடலுயிர் கலங்கிடக் கரைந்தான். 140

வெருவ லோடுவீழ்ந்து அழுந்திய வெந்துயர்க் கடலை
ஒருவி தம்கடந்து அக்கணம் விரைவினில் ஓடித்
தெருஅ கன்றுநந் தனவனம் அதனிடைச் சேர்ந்து
மருவு றும்மலர் தேடிஉள் ளனமறித்து எடுத்தே; 141

சரங்கள் தம்மொடும் தார்தொடுத்து ஆலயம் சார்ந்து
தரங்க மாக்கடல் வண்ணருக்கு அருச்சிப்பான் தன்பொற்
கரங்கள் தன்னில்அக் கடிமலர்க் குடலையை அளித்திட்டு
இரங்கு உளத்தொடும் அவன்தனது எழில்முகம் நோக்கி; 142

அடியன் நெஞ்சறி யாமல்இங்கு அடுத்துஉள தாகும்
கொடிய தீவினை யாவையும் உளம்கொளாது அருளி
நெடிய நாரணற்கு இங்குஇதை நேரம்எய் திடுமுன்
கடிது சாத்திட வேண்டும்என்று இருகரம் குவித்தான். 143

139—140. இவற்றை யெல்லாம் கண்ட ஆழ்வார் மிகவும் வருத்தமுற்றார். விடமுண்டவரைப்போல உடலும் உயிரும் கலங்கக் கரைந்தார். கடு உண்டார் களின் - விஷம் உண்டவர்களைப் போல.

141—142. ஆழ்வார் மீளவும் நந்தவனம் அடைந்து மலர்பறித்து மாலை தொடுத்து அர்ச்சகரின் பொற்கரங்களில் வழங்கினார். முப்போதும் திருமேனி தீண்டும் பாக்கியம் பெற்றதால் பொற்கரம் எனப் புகழப்பட்டது.

143. ஆழ்வார் அர்ச்சகர்பால் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். 'விரைவில் மாலை சாத்துக' என்று வேண்டிக்கொண்டு கரம் குவித்தார். "பணியுமாம் என்றும் பெருமை" என்ற குறளின்படி வாழ்பவர் ஆழ்வார் என்னும் உண்மை புலனாகிறது.

அனைய மாலையை வாங்கிஅவ் அரவுஅணை அமலன்
புனையு மாறுஅணிந் தருச்சகன் உலகெலாம் புகழும்
வினையி லான்முக மண்டலம் நோக்கியே மீட்டும்
இனைய மாமொழி தனைஎடுத்து இயம்புவான் நன்றே. 144

அய்ய! கேட்டருள்; ஐயுறேல்; நின்னொடும் அடியேன்
பொய்ய தாம்மொழி புகல்கிலேன்; புகலும்இங்கு இதனை
மெய்ய தாம்என உணர்தி; மேனாளிடைக் கொணர்ந்த
செய்ய மாலைகள் போன்றில பின்புசின் னாளாய்; 145

கொணரு மாலையில் வதக்கமும் கசக்கமுங் குறுகி
நணுகு மாங்குஅதை நவின்றிடில் நல்லுளத்து என்என்று
உணர்வை யோஎன்றும் உனதிடத்து என்அப சாரம்
அணுகுமோ என்றும் அறிவியாது இருந்தனன் அன்றே. 146

அந்த மாலைகள் தமைஅவர்க்கு அணிந்துவந் ததனால்
சிந்தை ஊடுஅதை இன்றுநீ தெளிந்தனை அலவோ?
இந்த வாறுநம் மாலையின் எய்துமாறு ஓதி
வந்தது என்?அதை வகுக்கஎன; மற்றுஅவன் வகுப்பான். 147

விளங்கு மாலைகள் தமைஎன்றும் ஓர்விதம் பெறவே
வளங்கொ ளும்படி தொடுத்துஇவண் வருவன் மற்றுஅதனில்
களங்கம் உள்ளதுஎன்று உணர்ந்திலன் கண்டிலன் எனத்தன்
உளங்க லங்கிஆ ராமையி னோடுஉரைத் தலுமே. 148

கேட்ட லோடும்உள் இரக்கமாய்ப் பெரியரே! கெழுமும்
வாட்ட மோடுஉளம் வருந்தலீர்! இனிபுனை மாலை
ஈட்டல் எச்சரிக் கையினுடன் இயற்றுக என்றுஇயம்பி
வீட்ட கம்தனில் அருச்சகன் மேவினன் அன்றே. 149

---

144 — 147ஆம் பாடல்வரை அர்ச்சகர் மொழிகள்: ஆழ்வாரே! அடியேன் கூறுவதைக் கேளுங்கள். தற்போது மாலைகள் முன்போல் இல்லை. சில நாள்களாகவே மாலைகள் வதங்கியும் கசங்கியும் உள்ளன. அபசாரம் நேருமோ என்று கூறவில்லை. தாங்களே கண்டீரல்லவா? காரணம் யாது? கூறுமின், என்றார்.

147. ஓதி வந்தது என் - மயிர்வந்த காரணம் யாது? ஓதி - குழல். "மஞ்சொக்கும் அளக ஓதி; மழை ஒக்கும் வடித்த கூந்தல்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (ஆரண்ய காண்டம்).

148 — 149. ஆழ்வார் நிகழ்ந்தவை குறித்து வருந்தினார். அர்ச்சகர் வருந்த வேண்டா என்று ஆறுதல் பகர்ந்தார். எச்சரிக்கை - ஜாக்கிரதையாக (விழிப்பாக).

(வேறு)

ஆழ்வார் தானும் கிலேசமுடன்
அரவின் அணையின் மிசைகிடந்து
வாழ்வாய் உனது திருவிளையாட்டு
ஆமோ? மறித்துஉன் திருவடிக்குத்
தாழ்வாம் கருமம் புரிந்துளனோ?
எனத்தாள் வணங்கி இவ்வாறு
சூழ்வார் எவரோ? எனநினைந்து
திருமா ளிகையில் தொடர்ந்தடைந்தான். 150

ஒப்பாய் எடுத்து உரைப்பதனுக்கு
ஒவ்வாத் துயர்உற்று உளந்தன்னில்
இப்பூங் கூடை தனைத்தாரோடு
இருத்தி உலாவல் தனக்கெய்தும்
அப்போ தேதா வதுசங்கை
அடைதல் உளவோ? அங்குஅதனைத்
தப்பாது உணர்தல் வேண்டும்என
நினைந்துஅன்று இரவைத் தான்கழித்தான். 151

உண்மை தெரிந்தது

மறுநாள் அருணோ தயத்துஎழுந்து
வாவி நீர்தோய்ந்து ஆதவனுக்கு
உறும்அக் கடன்கள் விதியின்முடித்து
ஒளிர்நந் தனமா வனம்அணுகி
அறுகால் முகர்முன் பரிவட்டம்
அதனை நாசி தனக்குஅணிந்து
நறுமா மலர்கள் எடுத்துஅகத்தில்
நண்ணி அலங்கல் தனைத்தொடுத்தே; 152

---

150. உனது விளையாட்டோ? தாழ்வாம் கருமம் புரிந்துளனோ? என்று முறையிட்டுவிட்டு ஆழ்வார் இல்லம் அடைந்தார்.

151. நாம் உலாவப் போம்போது குற்றம் நிகழ்ந்திருக்குமோ? இதனை அறிய வேண்டும் என்று எண்ணி உறங்காது இரவைக் கழித்தார் ஆழ்வார். சங்கை - குற்றம்.

152. ஆதவனுக்கு - சூரியனுக்கு. சூரியனுக்குச் செய்ய வேண்டிய கடமை காயத்ரி மந்திரம் ஜெபித்தல். அது, சூரியனைத் திருமேனியாகக் கொண்டுள்ள திருமாலை அடையும். காயத்ரி மந்திரத்தைச் "செங்கதிர்த் தேவன் சிறந்த ஒளி

என்றும் இருத்தும் இடந்தன்னில்
இருத்தி உலாவற்கு எய்துவன்போல்
அன்றும் எய்தி ஓர்இடத்தில்
கரவாய் அதனைப் பார்த்திடலும்
சென்ற தாதை ஒளித்திருத்தல்
தெரியாள் தொல்நா ளைப்போல
மன்றல் கமழ்பூங் குழற்கோதை
மருவார் அலங்கல் தனைஎடுத்தே; 153

கோதையாரின் அச்சம்

அளகம் தனிலும் மார்புஅகத்தும்
அணிந்திட்டு அதன்பே ரழகுஉணர்வான்
புளக மொடும்கண் ணாடியுறும்
கிணற்றில் பொருந்தி நிழல்பார்க்க
உளம்உட் புழுங்கப் பெரியாழ்வார்
அதுகண்டு ஓடி வரலும்மனம்
இளகிக் கோதை வெருவலொடும்
இருகால் கரம்மெய் நடுக்குறவே; 154

சூடி யுறும்அம் மாலைஎலாம்
துரிதத் துடனே வாங்கிஅப்பூங்
கூடை யுறவைத்து அதன்அருகில்
குருதி வாள்போல் செவ்வரிதோய்

யினைத் தேர்கின்றோம். அவன் எங்கள் அறிவினைத் தூண்டி நடாத்துக'' என்று மொழிபெயர்த்தார் பாரதியார் (பாஞ்சாலி சபதம்). நாசிதனக்கும் பரிவட்டம் அணிந்து ஆழ்வார் மலர் கொய்வார்.

''தமது நாசியில் வாசனை ஏறாதபடி திருப்பரிவட்டத்தால் கட்டிக்கொண்டு விண்டுகள் மொய்த்து எச்சில்படுத்தா முன்னமே திருவுகிர் படாதபடி, பக்குவமாகக் கொய்து, திருப்பூக் கூடையிற் சேர்த்துக் கொண்டுவந்து, பிணையல், கண்ணி, கோவை முதலாகப் பலவித மாலைகளாகக் கட்டிக்கொண்டுபோய் வடபெருங் கோவிலுடையானுக்குச் சமர்ப்பித்துக்கொண்டிருந்தார்'' என்ற குருபரம்பரை (பன்னீராயிரப்படி) நோக்குக.

153 — 155. ஆழ்வார், கோதை நாச்சியார் மலர்மாலைகளால் தம்மை அலங்கரித்து அழகு பார்ப்பதைக் கண்டுகொண்டார். ஆழ்வார் தெரிந்து கொண்டதை அறிந்துகொண்டார் நாச்சியார். கோதையார் விரைவில் அவற்றைக் கூடையில் வைத்துவிட்டு வருந்தி அழுது நின்றனர்.

153. கரவாய் - மறைவாக. தாதை - தந்தை.

154. அளகத்திலும் மார்பினிலும் அணிந்து கிணற்றில் தன் நிழலைப் பார்த்தாள். மனம் இளகி - மனம் குழைந்து.

ஓடை மலர்க்கண் நித்திலங்கள்
உதிர்தல் தனைஒத்து ஒழுகிடுநீர்
ஆடை நனைந்து புவியினில்வீழ்ந்து
ஆறாய்ப் பெருக அழுதுநின்றாள். 155

ஆழ்வார் மொழிகள்

விம்மா அழுதல் தனைநோக்கி
விட்ணு சித்தன் மனம்இளகி,
அம்மா! கிளியே! மடமயிலே!
அனமே! குயிலே! ஆரமுதே!
இம்மா அலங்கல் அரவணைமேல்
எழிலார் திருக்கண் வளர்ந்தருளும்
நம்மா தவனுக்கு அணிவதுஎன
நாடாய் கொல்லோ! என்நினைந்தாய்? 156

அடியேன் புரிந்த தவப்பயனால்
அமுதத்து எழுந்த திருமகள்போல்
கடியார் துளவந் தனில்உதித்தாய்!
காலி மேய்த்து வரைஎடுத்த
வடிஆ ழியனும் எனக்குஉன்னை
மகளாம் என்னும் வகைபுகன்றான்;
படிமீது ஒருவர் நிகர்இலைஎன்று
இருந்தேன்; பெற்ற பயன்இதுவோ? 157

---

155. குருதிவாள்போல் - இரத்தம் தோய்ந்த வாளைப் போல. செவ்வரி தோய் - சிவந்த அரிகள் பரவிய (அரி - கண்ணின்கண் உள்ள சிவந்த கோடு). கண் நித்திலங்கள் உதிர்தல்போல - கண்களிலிருந்து முத்துகள் உதிர்வதுபோல். கண்ணீர் ஆறாய்ப் பெருக நாச்சியார் அழுது நின்றனர்.

156 — 159 வரை பெரியாழ்வாரின் அறிவுரைகள். "கிளியே! மயிலே! இம் மாலை நம் மாதவனுக்கு அணியப்படும் புனிதமானது என்று உனக்குத் தெரியாதா? என் தவத்தால் நீ திருத்துழாய் அடியில் பிறந்தாய். திருமாலும் 'இவள் உன் மகள்' என்றான். மாதவன் புனைந்த மாலையினை நாம் புனையலாம்; நாம் புனைந்த மாலையை அவனுக்கு அணிவிப்பது முறையா? என்ன காரியம் செய்தாய்? அறிவு மழுங்கிவிட்டதா?" என்று அன்பு கலந்து ஆழ்வார் கடிந்துகொண்டார்.

157. காலி மேய்த்து - பசுக்களை மேய்த்து. வடி - கூர்மையான. ஆழியன் - சக்கரம் ஏந்திய திருமால்.

புதனைப் பயந்தோன் நிகர்முகத்தாய்!
புவியில் பலவாம் உயிர்பூப்ப
மதனைப் பயந்த மாயவற்கு
வனைந்து கழிக்கும் மருமாலை
அதனைப் புனைய லாம்யாம்;யாம்
அணிமா லைகள்அங்கு அவர்க்குஆமோ?
இதனைத் தெளிய நினக்குஒருவர்
இயம்பக் கேட்டும் உணராயோ? 158

என்ன கருமம் புரிந்தனை? இம்
முறையார் இழைப்பர்? எவர்களுக்கும்
பன்னும் அறிவு விளங்குமுறை
பகரும் தகைமை உனக்குஉளதே!
துன்னு மதியும் மழுங்கினைகொல்!
துலங்கா மதியார்க்கு ஒவ்வுதலாம்;
இன்ன புரிதல் நின்போல்வார்க்கு
ஒவ்வா ஒவ்வா ஏந்திழையே! 159

மனங்குளிரச் செய்தார்

இவ்வா றாக நன்மையொடும்
பலநன் மொழிகள் எடுத்துஇயம்பி
வெவ்வாட் கண்கள் ஒழுகிடும்நீர்
முத்தம் துடைத்து விளம்பிஅவள்
ஒவ்வா மதியின் முகம்தடவி
உச்சி மோந்திட்டு உறத்தழுவி
செவ்வே அவள்தன் மனங்குளிரச்
செய்து மறித்துஇங்கு இதுசெய்வான்: 160

---

158. புதனைப் பயந்தோன் - புதனை மகனாகப் பெற்ற சந்திரன். மதனைப் பயந்த மாதவன் - மன்மதனை மகனாகப் பெற்ற திருமால். "மாயவற்கு வனைந்து கழிக்கும் மாலை புனையலாம் யாம்" என்று கூறிய இடத்தில், "உடுத்துக் களைந்த நின் பீதக ஆடை உடுத்து—தொடுத்த துழாய் மலர் சூடிக் களைந்தன சூடும் இத் தொண்டர்களோம்" என்ற திருப்பல்லாண்டை அனுசந்திக்கவும்.

159. துலங்கா மதியார்க்கு ஒவ்வுதலாம் - அறிவு விளக்கம் பெறாதவர்க்குப் பொருந்தும்; நின் போல்வார்க்கு ஒவ்வா ஒவ்வா என்றார்.

160. வருந்திய மகளைத் தேற்றி, கண்ணீர் துடைத்து, உச்சி மோந்து, அவள் மனங்குளிரச் செய்தார், ஆழ்வார்,

நந்த வனம்பேர்ய் மீதியுள
நறுமா மலர்கள் தனைஎடுத்து
வந்து சிறந்த மாலைகளாய்
வகுத்துஅங்கு அதனைக் கொடுசென்றே
சிந்தை கலங்கிக் கொடியவிடங்
கரின்வாய்ச் சிக்கி யகப்பட்ட
தந்த மலைஅன்று அழைத்தபிரான்
தனக்குச் சமர்ப்பித்து அகம்சார்ந்தான். 161

திருமால் கனவில் கூறுதல்

அன்றை இரவில் பெரியாழ்வார்
அமுதம் பருகித் திருவணைமேல்
சென்று மலர்க்கண் வளர்பொழுதில்
திருமால் அவன்தன் கனவினிடைத்
துன்றி யுததி யுடைபுவிமான்
நமக்குச் சொலும்பா மாலையொடும்
மன்றல் மாலை கயிங்கிரியம்
வகுப்பான் துளவின் உற்பவித்தே; 162

உனது மகளாய் வளர்கின்றாள்;
உவளும் இந்நாள் உவப்பினொடும்
தனது குழற்கண் அணிந்துநிழல்
தனைக்கண் ணாடி தனில்உணர்ந்து

---

161. ஆழ்வார் மீளவும் நந்தவனம் புகுந்து மலர்கொய்து மாலை தொடுத்து இறைவனுக்குச் சமர்ப்பித்துவிட்டு அகம் சார்ந்தார். விடங்கர் - முதலை. தந்த மலை - யானை. தந்தமலைக்கு முன் நின்ற பிரான் என்பர் திவ்யகவி (திருவரங்கத்தந்தாதி). அழைத்த - அழைக்கப்பட்ட.

பெருமான், ஆழ்வார் கனவில் பேசிய இப் பேச்சுக்கள், நிகமாந்த மஹா தேசிகரின் திருவுள்ளத்தில் ஸ்ரீகோதாஸ்துதியில் 18ஆம் சுலோகமாக வடிவம் கொண்டன. "ஓங்குமிவ் வரங்கத்து உத்தமன் உன்றன் உத்தரீயத்தையும் குழலிற் பாங்குறச் சூட்டிப் பரிமளம் ஊட்டிப் பரிந்தருள் பகந்தெரியலையும்— மிலைதலில்—மங்கல நீள் செல்வமா முடியைத் தாங்கிடும்" என்று அந்த ஸ்லோகத்தைக் கவிபூஷணம் நரசிம்மாசாரியர் நயம்படப் பாடியுள்ளார். கோதையார் மாலையைச் சூடி அதற்கு மணமேற்றிக் கொடுக்கிறார்.

162 — 166. நிலமகள் நமக்குப் பாமாலையும் பூமாலையும் வழங்கவே பிறந்தாள். அவள், மகிழ்வால் பூமாலை புனைந்து வழங்கினாள்; நீ அதனை எமக்குச் சூட்டினாய். அதனால் அது மிக்க மணம் பெற்றது. அம் மாலை புனைந்து மகிழ்ந்தோம். இன்று மணமற்ற மாலை வழங்கினாய். இதில் வாசமும் இல்லை;

மனது மகிழ்விற் கழித்தருள்பூ
மாலை அதனை நீகொணர்ந்து
தினமும் அளித்தாய்; அதுநறவம்
திகழ்ந்திட்டு அழகும் சிறந்துளதால். 163

அன்ன அழகார் அலங்கலையாம்
அணிந்துஆ னந்தக் களிசிறந்தேம்;
நென்ன லொடுஇன்று அவள்அணியா
வெறுமா லையினை நீகொணர்ந்தாய்!
இன்ன அலங்கல் நனிநறவ
முடனே எழில்என் பதுசிறிதும்
துன்ன விலை;அங்கு அதனால்எம்
உளமும் உவப்புத் தோன்றிலதால். 164

ஆத லால்பின் னாள்முதலாய்த்
தொடுக்கும் அலங்கல் தனைஎல்லாம்
தீதி லாநின் திருமகளாய்த்
திகழ வளர்அம் புவிமாதாம்
கோதை குழலில் அணிவித்துஆங்கு
அவள்பின் கழித்துக் கொடுக்கஅதை
நீதி உடையோய்! கொணர்ந்தளித்தி!
எனஆங்கு அதனை நிகழ்த்தினனால். 165

அத்த கவின்அவ் வில்லிபுத்தூர்
எனும்மா நகரின் அமர்ந்துறைவோர்
சித்த மகிழ்வை ணவரர்ச்ச
காதி யரசர் முதலனைத்துக்
கொத்து தனக்கும் பாலர்முதல்
குரவர் ஈறாய் யாவர்கட்கும்
தத்தங் கனவில் உணர்வகையாய்ச்
சாற்றித் தனதுஆ லயம்சார்ந்தான். 166

அழகும் இல்லை. இதனால் எனக்கு உவப்பு உண்டாகவில்லை. இனி, கோதை அணிந்து கழித்துக் கொடுக்க அதைப் பெற்று வழங்குக'' என்று பெருமான் கூறினான். கனவை அர்ச்சகர் முதல், பாலர் ஈறாக யாவருக்கும் உணர்த்தி விட்டுத் தன் திருக்கோவிலையுற்றான். இங்கு ''வாடற் பழஞ்சருகு வேட்டு அரங்கேசனும் மலை குனிய நின்ற முகிலும், மால்லங்காரனும் இரப்ப அருள் புதுவைவரு வல்லி'' என்ற கவி காளருத்திரர் திருமொழியைச் சுவைக்க (அழகர் பிள்ளைத் தமிழ்).

கனையுற்று இரங்கு நள்ளிருளார்
இரவும் துயிலும் கழிந்துஅகல
நினைவுற்று உணர்ந்து காலையின்வாய்
நியமம் முடித்துஅங்கு எவர்களும்தம்
மனைவிட்டு எழுந்து வீதியின்வாய்
வந்துஅன்று இரவில் உணர்கனவு
தனையுற்று ஒருவர் ஒருவரொடுஞ்
சாற்றி மிகஅற் புதம்அடைந்தே; 167

பெரியாழ் வார்தன் மகிமையும்ஆங்கு
அவர்பெண் கோதை மகத்துவமும்
தெரியாது இருந்தோம் இந்நாள்வாய்;
தெரிந்தோம் இன்றுஇங்கு இவர்தமைப்போல்
வரியார் அரவின் அணைமிசைகண்
வளரும் திருநா ரணன்பதங்கட்கு
உரியார் யாவர்? எனஎவரும்
உவந்து போற்றித் துதிசெய்தார். 168

சூடிவழங்கினாள் சுந்தரக்கோதை

அந்நாள் முதலாய்த் தொடுத்திடும்பூ
அணியார் அலங்கல் தனைஎல்லாம்
முந்நாள் தனைப்போல் கோதைகுழல்
முடித்துக் கழித்துக் கொடுப்பஅதைப்
பொன்னாம் மடந்தை ஒருபுறத்தும்
புவிமாது ஒருபா லினும்பொருந்தப்
பன்னா கணையில் துயில்முகுந்தற்கு
அணிந்தார். அவரும் பரிவடைந்தார். 169

---

167. கனை உற்று - செறிவு மிகுந்து. நியமம் - கடமை. "நித்திய நியமம் முற்றி நேமியான் பாதம் சென்னி வைத்தபின்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (பால காண்டம்). மக்கள் தாங்கள் கண்ட கனவைப் பரிமாறிக்கொண்டனர்.

168. பெரியாழ்வார், கோதை இவர்கள் சிறப்பைத் தெரிந்துகொண்டோம். திருமாலுக்கு உரியவர், இவரைப்போல் வேறு யார் உளர்? என்று பேசிக் கொண்டனர்.

169. கோதை குழல் சூடிக் கழித்தபின் கொடுப்ப அதனை முகுந்தனுக்கு அணிவித்தனர். அவரும் விருப்பம் அதிகமாயினார். பொன்னாம் மடந்தை - திருமகள். புவிமாது - நிலமகள். பன்னாகணை - பாம்புப் படுக்கை.

ஆடிக் களிக்கும் பணஅரவின்
அணைமாற்கு அணிபா மாலைதனைப்
பாடித் தருமுன் அணிஅலங்கல்
அணிந்திட்டு அளித்த பரிசுஅதனால்
வாடித் துவளும் கொடியிடைசேர்
கோதை எனும்அம் மடவாட்குச்
சூடிக் கொடுத்தாள் எனும்ஒருபேர்
அதுவும் துலங்கப் பொருந்தியதால். 170

கோதை காதல்

(வேறு)

அம்மா நகரில் பெரியார்
மகளாய் வளர்அம் புவிமாது
இம்மா முறையில் புகலும்
இருபே ருடனும் வளர்நாள்
நம்மால் நவிலற்கு அரிதாம்
பரம பத்தி நாளும்
விம்மா வரியை யணையும்
பருவம் உடன்மே விடலும்; 171

பாராய் வானாய் நரகாய்ப்
பகரும் பலவாம் உயிரின்
வேராய் முளையும் வித்தாய்
விளைவிப் பவனும் தானாம்
நாரா யணனைத் தழுவும்
வகையா தெனவே ஒருநாள்
சீரார் உள்ளந் தனில்அங்கு
அவளும் சிந்தித்து உணர்வாள். 172

---

170. இந்த நிகழ்ச்சியால், கோதை நாச்சியார் "சூடிக் கொடுத்தாள்" என்ற பெயர் பெற்றாள். புவிச்சக்ரவர்த்தியாகவும் கவிச்சக்ரவர்த்தியாகவும் விளங்கிய ஸ்ரீ கிருஷ்ணதேவராயர் தாம் திருவாய்மலர்ந்த ஆண்டாள் வரலாற்றுக்கு "ஆமுக்த மால்யதா" என்று பெயரிட்டார்.

171 — 172. கோதை நாச்சியாருக்குச் சொல்லமுடியாத பரமபக்தி தலை யெடுத்துத் திருமாலை அணையும் பருவம் வந்தது. திருமாலை அடையும் வழி யாது என்று சிந்தித்தாள்.

172. திருமாலின் விபூதிகள் பேசப்படுகின்றன. பாராகவும், வானாகவும், நரகாகவும், உயிர்களின் வேராகவும், வித்தாகவும், விளைவிப்பவனாகவும் இருக்கும் நாராயணன்,

அளகம் தனில்யாம் அணியும்
மணிபூந் தொடையாம் அதனைப்
புளகம் முடனே அணிசெய்
அரவத்து அணையிற் பொலியும்
களவின் கனிவண் ணனுமர்ச்
சாரூ பமதா கையினால்
இளகும் மனதோடு அவரைப்
புணர்தற் கிசையா ததனால்; 173

இதனுக்கு இசையும் படியாம்
என்செய் வோம்என்று உணர்கால்
மதனிக் குவில்கொண்டு எறியும்
மலர்ஐங் கணைவந்து உருவ
விதனத் துடன்உற் றிடும்அவ்
விரகம் பலவும் தனிநெஞ்சு
அதனுக்கு குள்ளே பிறர்கண்டு
அறியாது அடைவுற் றனளால். 174

உபாயம் தேடல்

திருமா லினையாம் அணையும்
செயல்யார் புரிவார்? என;அப்
பெருமா நகர்வாய் மடவார்
அவரிற் பெரியா ராகி
வருகா ரணமும் நிகழ்அவ்
வகையும் செலும்கா ரியமும்
அருகாய் கண்டுஉற் றவர்போல்
அறைவார் தம்மைத் துடரா; 175

---

173. நாம் வழங்கும் மாலையைச் சூடும் வடபத்ரசாயி அர்ச்சை வடிவுடையவன்; ஆதலால், அவனை அடைவது முடியாது என்று கருதினார் கோதையார். அளகம் - குழல். அரவத்தணையில் - பாம்புப் படுக்கையில். களவின் கனி வண்ணன் - களாக்கனி போன்ற நிறமுடைய திருமால். "சேமங்களாவின் கனியனையார் பதம் சேர்குவரே" என்பர் திவ்யகவி (அழகரந்தாதி).

174. கோதையார், இறைவன்பால் கொண்ட காதலால் விளைந்த விரக தாபத்தைப் பிறர் அறியாதபடி மறைத்து வைத்தார். மதன் இக்கு வில்கொண்டு எறியும் ஐங்கணை - மன்மதன் கரும்பு வில்லைக்கொண்டு ஏவும் ஐந்து அம்புகள். உருவ - துளைத்த. விதனம் - விசனம். விரகம் - பிரிவால் உண்டாகும் நோய்.

175 — 177. திருமாலை அடையும் உபாயம் உணர்த்துவாருண்டோ என்று ஆராய்ந்த கோதையார், முக்காலமும் நேரே கண்டவர்போல் சொல்லும்

அவரோடு இவளும் மகிழ்வாய்,
அம்மா நீவிர் புவிமேல்
துவர்வாய் மடவார் உருவாய்த்
தோன்றுற் றவர்கள் தம்மில்
எவரா யினுமுன் னொருவர்
இறைவா யரவிற் றுயிலும்
உவரா ழியின்வண் ணரினோடு
உறவாய்க் கலந்தார் உண்டோ? 176

உண்டாம் எனில்இங்கு என்னோடு
ஒளியாது உளவா றுங்கண்
கண்டால் அதையும் அலது
காதில் கேள்வி தனையும்
வண்டார் குழலீர், பகர்வீர்!
எனவே கோதை மடவாள்
தண்டா மரைநேர் வதனம்
கவினச் சாற்று தலுமே; 177

திருப்பாவை உதயம்

அம்மா! கோதாய்! கேளென்று
அறியும் கதையாம் எனவே
தம்மா மனம்இன் புறவங்கு
அவர்தாம் இதுசாற் றுவரால்:
எம்மா உலகும் புகழ்ஆய்ப்
பாடி எனுமா நகரில்
நம்மால் கண்ணன் எனவே
நந்தன் மனையில் வளர்நாள்; 178

திறம் பெற்ற அம்மையார் ஒருவரை அணுகி, உலகில் தோன்றிய மகளிரில் கண்ணனை மணந்தவர் உண்டோ? கூறுங்கள்; என்று கேட்டார்.

175. வருகாரணம் - எதிர்கால நிகழ்ச்சிக்குரிய காரணம். நிகழ் அவ்வகை - நிகழ்காலத்துக்குரிய காரணம். செலுங்காரியம் - இறந்தகால நிகழ்ச்சி. துடரா - தொடர்ந்து. (தொடர் என்ற சொல்லைத் துடர் என்று ஆள்வது இவ்வாசிரியரின் இயல்பு.)

176. உவர் ஆழி - கடல்.

178—179. ஆயர்பாடியில் நம் திருமால் கண்ணனாய்ப் பிறந்த காலத்தில் ஆய்ப்பெண்கள் அவனை மணவாளனாகப் பெற்றது உண்டு என்றனர்.

178. நம் மால் - நம்முடைய திருமால். கனம் ஒத்து - மேகம் போன்று. சயிலம் - மலை. கலவா - கலந்து. மருவிற்று - பொருந்தியது.

அனம்ஒத்து இளமா நடைசேர்
ஆயக் குலமா மடவார்
கனம்ஒத்து இருள்அங் குழலும்
கலையும் கலையச் சயிலத்
தனம்ஒத்து அணிமார்பு இறுகக்
கரமா மலரில் தழுவி
மனம்ஒத்து அவரைக் கலவா
மருவிற்று உண்டுஎன் றனரால். 179

கோதையின் ஏக்கம்

என்றுஅங்கு அவர்சொன் மொழிவந்து
இருசெஞ் செவியில் குறுக
மன்றல் கமழும் குழலங்
கோதை மனது மகிழ்வாய்
அன்றங்கு அவர்கள் புரியும்
விரதம் என்னோ? அதனால்
குன்றம் குடைகோ வலனைக்
கூடிச் சேர்ந்தார் கொல்லோ? 180

என்னோ? அதனை இனதுஎன்று
எளிதா நெஞ்சே! உணரேம்;
அன்னாள் தனில்ஆய்ப் பாடி
அதனுள் பிறவாது ஒழிந்தேம்;
பொன்னாள் அணையும் புனிதன்
நமைஓர் பொருளாய் நினையா
இந்நாள் தனில்ஓர் உருவம்
எடுக்கும் தகவுஎய் திடுமோ? 181

180—187. கோதையாரின் நினைவோட்டங்கள். கண்ணனை அடைய இடைப்பெண்கள் புரிந்த விரதம் யாது? அக் காலத்தில் ஆயர்பாடியில் பிறவாமல் இருந்துவிட்டோம். இன்று நம் பொருட்டாக அவன் அவதரிப்பானா? கண்ணன் திருவடிகள் பட்ட கோகுலத்தையும், கோவர்த்தன மலையையும், யமுனா நதியையும் காணலாம் என்னும் காதலோடெழுந்தார். ஆனால், நடக்க முடியாதபடி தடை உண்டாயிற்று.

181. பொருளாய் நினையா - பொருட்டாகக் கருதி. உருவம் எடுக்கும் தகவு - அவதரிக்கும் அளவான பெருமை.

நந்தன் மனையா ளுடனே
நயனம் மகிழ்வுஎய் துறவே
அந்தத் திருவாய்ப் பாடி
அதனில் கண்ணன் எனவே
வந்துஅத் திருநா ரணனும்
வளரும் அந்நாள் தன்னில்
இந்தப் புவிஅங்கு அவர்தம்
இருதாள் மிதிபட் டுளதால். 182

மெருகுற் றுளஅந் நிலமும்
மேகம் பொழிகல் மழையால்
விருகத் தினமோ டிடையர்
மிகவும் தளர்வுற்று அலறப்
பரிவுற் றவர்கை விரலிற்
படியும் படிகொண்டு அழகாய்
தரிபொற் குடைஒத்து ஒளிரும்
கோவர்த் தனமா வரையும்; 183

மண்ணார் அளகம் குதிகால்
மருவப் பெருகி வளர்ஆய்ப்
பெண்ணார் அமுதம் அனையார்
உடனே காமம் பெருகப்
பண்ணார் குழலார் மருவிப்
பரிவின் விளையா டிடும்அத்
தண்ணார் புனலின் மணியார்
எமுனா நதித்தண் கரையும்; 184

---

182. நந்தனும் அவன் மனையாளும் மகிழக் கண்ணன் வளரும் காலத்தில். "நந்தன் மனையில் அசோதை யிரு நயனம் களிப்ப விளையாடும் மைந்தன்" என்பர் வில்லியார்.

183. மெருகுற்றுள அந் நிலம் - ஆயர்பாடி. விருகத்தினம் - பசு, ஆடு முதலான மிருகம். "பல்விருகமாகிப் பறவையாய்" என்பர் மணிவாசகர். பொற் குடை - ஒத்து ஒளிரும் கோவர்த்தனம். "குன்று குடையாய் எடுத்தாய்" என்பது திருப்பாவை.

184. குதிகால் வரை வளர்ந்த கூந்தலுடைய மகளிர். மண்ணார் - கமுவப் பட்ட. அளகம் - கூந்தல். பண்ணார் குழலார் - இசை நிரம்பிய புல்லாங்குழலை யுடைய கண்ணன்.

மற்றும் விளையாட் டவர்செய்
வகையால் அமைமற் றதுவும்
உற்றங்கு ஒளிரும் அதனால்
உளதாம் பலவும் காணப்
பெற்றுஅங்கு உறுவா னுளமுள்
பெருகும் காதல் வளரா
இற்றைப் பொழுதே அடைவேம்
எனவே அவளுற் றெழலும்; 185

கவசத் தொடுகுண் டலம்நல்
தருமங் கவருங் கருடத்
துவசத் தினன்மீது அமையும்
விரகத்து எழுவெந் துயரால்
அவசத் துடனே யுடலம்
அயர்வாய் கைகா லவைதன்
சுவசப் படலுற் றிலதாய்ச்
சோர்வுற்று அவண்நின் றனளால். 186

நின்றாள் நிலமீது அசையா
நிலைபெற் றிடும்ஓ வியமாய்
தன்றாள் தரைபா வாமற்
றளர்வா யசைவுற் றுளமுள்
துன்றா விதனம் துன்றக்
கனலில் துவள்பூங் கொடிபோல்
குன்றா உடலம் குன்றக்
குறியா இவைஉன் னுவளால். 187

---

185. அங்கு உறுவான் - அங்கு அடைவதற்காக.

186. விரகாக்கினியால் கோதையார் அங்கங்கள் தம் வயம் இழந்தன. சோர்வுற்றாள். கவசம், குண்டலம், தருமம் யாவற்றையும் (கர்ணனிடமிருந்து) கவரும் கண்ணன். கருடத்துவசன் - கருடனைக் கொடியாகப் பெற்றவன்.

187. ஓவியமாய் - ஓவியம்போல (விக்ரஹம்போல்). விக்ரகத்தைப் பூரண சித்திரம் என்பர் சிற்பநூல் வல்லுநர் (சிற்பச் செந்நூல் காண்க). ஓவியம் மூன்று வகைப்படும் என்பர் கம்பனடிப்பொடியார். இவ்விடத்தில், "இனி, அவன் உலாவிப் போன அடிச்சுவடும், அவனும் பெண்களுமாகத் திளைத்த யமுனையும், அவன் எடுத்த கோலர்த்தனமும் கிடைத்ததாகில், அவற்றைக் கண்டாகிலும் தரிப்போம் என்று பார்க்க" என்ற திருப்பாவை வியாக்கியான அவதாரிகையை இணைத்துப் பார்க்கவும்.

கோதை நினைவு

கனகம் மணியால் அமையும்
கனமார் மதில்சூழ் மிதிலைச்
சனகன் மடமா மகளாம்
சனகிப் பெயர்சேர் திருவும்
பனகம் துயில்விட்டு அணிரா
கவனாய்ப் படியில் வரும்அவ்
அனகன் தனைக்கண் டமையா
விரகம் அதுகொண் டனளால். 188

தனதத் தனுரைப் படிபோற்
சயிலத் தினைஒத்து ஒளிரும்
கனவில் தனையம் புயம்நேர்
கைக்கொண் டணிதோள் வலியால்
குனிவிடுத் திடுபின் பவரைக்
கூடுஞ் செயலுண் டெனவே
மனதில் துணிவாய் தயிர்யம்
வைத்தங்கு உற்றா என்றே. 189

பொன்னைத் தழுவும் புனிதன்
புவியில் கண்ணன் எனவே
முன்னைப் பகலின் வருநாள்
காணா விரகம் முடுகும்

---

188 — 191 வரை நாச்சியாரின் ஏக்கம் பேசப்படுகின்றது. "ஸ்ரீ ஜனக ராஜன் திருமகளைப் போல 'வில்' என்று ஒரு அவதி பெறுதல்; நப்பின்னைப் பிராட்டியைப் போலே 'ரிஷபங்கள்' என்ற ஒரு அவதி பெறுதல் செய்யப்பெறாமையாலே மிகவும் தளர்ந்து" என்ற திருப்பாவையின் அவதாரிகைப் பகுதியின் விளக்கங்கள் பாடலாக வருகின்றன.

188 — 189. பனகம் - பன்னகம் - பாம்பு. ராகவனாய், படியில் வரும் அவ் அனகன் எனப் பிரிக்க. படியில் - பூமியில். விரகம் - காதல் நோய். சயிலத் தினை ஒத்து - மலையைப் போன்று. கன வில் - பெரிய வில். அம்புயம் நேர் - தாமரை போன்ற. கைக் கொண்டு அணி தோள்வலியால் எனப் பிரிக்க. குனிவித்திடு பின் - வளைக்கச்செய்த பிறகு. உற்றான் - அடைந்தான். தயிரியம் என்று திரியாது தயிர்மாகவே இருக்கிறது. ஆண்டு, மாவே வேண்டும்: விளம் அன்று. அதனால் தயிர்யம் வந்துவிட்டது.

பின்னைப் பெயர்கொண் டிடும்அப்
பிராட்டி தனையே ழிடபம்
தன்னைத் தழுவி அடக்கித்
தழுவும் திறம்உற் றனளால். 190

உள்ளஞ் சோர்ந்தாள்

நாம்என் வலிமை அதனால்
நணுகுற் றிடவே கொடிய
காமன் புரியும் விரகம்
களைவோம்? எனவே மனதுள்
ஊமம் துடர்வா ரவர்போல்
உரையாது அதனை அடையாத்
தாமம் கமழும் குழலாள்
தளர்வாய் உள்ளஞ் சோர்ந்தாள். 191

சோர்வுஉற் றிடும்அங்கு அவள்தன்
மனதுள் துடர்பைக் குறியால்
தேர்வுஉற்று உணரா இவரில்
பலவும் தெரியும் பெரியாள்
நீர்வற்று இளமைப் பயிரில்
நிறைகார் பொழிகின் றதுபோல்
ஆர்வத் துடன்இம் மொழியை
அவள்தே றிடஅங்கு அறைவாள்: 192

---

190. பின்னைப் பிராட்டி ஏழு இடபம் (ஏழு எருது) தழுவி அடக்கியபின் கண்ணனால் தழுவப்படும் பேறு பெற்றாள்.

191. "நமக்குத் தரிக்கைக்கு விரகு என்?" என்ற வியாக்கியானப் பகுதியின் விளக்கம். "நாம் எந்த வலிமையைக் கொண்டு விரகம் களையலாம்" என்று கருதி வாடினார் கோதையார். ஊமம் துடர்வார் போல - ஊமமடரைப் போல. "நோம்; உறும் நோய் நிலை நுவலகிற்றிலள், ஊமரின் மனத்திடை உன்னி விம்முவாள்" என்று பிராட்டியின் விரக தாபத்தைக் கவிச்சக்ரவர்த்திகள் பகர்வர். தாமம் கமழும் - மாலைகள் கமழச்செய்கின்ற கூந்தலை யுடையவள் (கோதையார்).

192. கோதை நாச்சியாரின் பாங்கியர்களுக்குள் பெரியாள் ஒருத்தி ஆண்டாளின் மனக்கருத்தை யறிந்து, நீரின்றி வாடிய பயிரில் மழைபொழிவதைப் போல் சில உறுதிமொழிகள் கூறினாள். இளமைப்பயிர் - இளம் பயிர். கார் பொழிவதுபோல் - மேகம் மழையைக் கொட்டுவதுபோல். பெரியவாச்சான் பிள்ளை அவர்கள் பாவை நோன்புக்கு விவரித்த முன்னுரையைப் பாங்கியின் வாயிலாக விவரிக்கின்றார். கண்ணனும் இடைப்பெண்களும் கொண்ட காதலும், அதற்கு நேர்ந்த தடையும், அதனால் மழைபொழியாமையும், நோன்பு நோற்று (கண்ணனும் கோவியரும்) மழைபொழியச் செய்ததும் பிறவும் பேசப்படுகின்றன.

(வேறு)

முன்னர்நாள் தன்னில் கோவியர் பலரும்
முயன்றுள விரதமும் அதனைத்
துன்னுமாறு இழைக்க விடுத்தகா ரணமும்
சூழ்ந்ததற்கு அவர்கள்செய் உபாயம்
தன்னையும் இவ்வாறு எனத்தெளி வுறஅச்
சரிதங்கள் நடந்துள படியே
பன்னுவன் அதனைச் செண்பகக் கோதாய்!
பரிவொடுங் கேட்டுஉளம் உணர்வாய். 193

கோவியர் காதல் நோன்பு

விரிகடல் உடையாய் அணியும்அம் புவியாம்
மின்அனாள் பரம்தொலைத் திடுவான்
வரிஅர வணையில் துயிலும்நா ரணனும்
கண்ணனாய் வளரும்அந் நாள்வாய்
பரிவொடும் அவன்தன் விரியுரம் அதனைப்
பாடிவாழ் கோவியர் பலரும்
சரிகரம் அதனால் இறுகுற முலையில்
தழுவியே அனுபவித் திருந்தார். 194

---

193 முதல் 220 வரை உண்மை உணர்ந்த பாங்கியின் மொழிகள். கண்ணன் மேல் கோவியர் காதல் கொண்டனர். அதனால் தம் குலத்துக்கே இழிவென்று பெண்களை நிலவறையில் அடைத்தனர். கண்ணன் பிரிவாற்றாமல் மகளிரின் வேண்டுகோளால் மழை இல்லாமற் போயிற்று. மழைபொழிய மகளிர்களை நோன்பியற்ற வெளியில் விட்டனர். அந்த நோன்பைச் சிறக்கப் புரிவோன் கண்ணன் என்று உணர்ந்து அவனைத் தலைமைதாங்கச் செய்தனர். கோவியர் கண்ணனைப் பெற்று இன்புற்றனர். அந்த நோன்பே மேற்கொள்ளத் தக்கது என்று கூறினாள்.

193. கோவியர் - இடைப்பெண்கள். விரதமும் அதைப் புரிய அவர்களை விடுத்த காரணமும், அவ்வாறு விடுப்பதற்கு அவர்கள் செய்த உபாயமும் நடந்த படியே சொல்வேன். செண்பகக் கோதாய் - செண்பக மாலையைத் தரித்த கோதையே.

194. திருமால் கண்ணனாய்ப் பிறந்த காலத்தில் கோவியர் அவனைத் தழுவி இன்புற்றனர். புவியாம் மின்னனாள் - பூமிதேவி. விரி உரம் - விரிந்த மார்பு. சரிகரம் - வளையல் அணிந்த கை. 'அங்கைச் சரிவளையும் நாணும்' என்பர் பெரியாழ்வார்.

கழுதுயர் முலைகொள் விடமுடன் அருந்தும்
கண்ணனைத் தமதுமா மடவார்
தழுவுமாறு அவர்தாம் நடந்துள குறிப்பின்
சாயலால் உணர்ந்ததோ பாலர்
இழுதுஎன உருகா இவர்புரி வதுநம்
குலம்தனக்கு ஒக்குமாறு அலதாம்
பழுதுறும் பிறர்தாம் உணர்ந்திடில் எனவே
பதைபதைத்து உளமுற நினைந்தார். 195

நினைவுறும் அவர்கள் என்கொல்யாம் இதற்கும்
நிரப்புவது எனஒரு விதமாய்
அனையமா மடவார் தமையெலாம் அங்கங்கு
அவரவர் அணுகும்ஓர் பகலில்
தினையளவு உறும்அப் பொழுதெனும் பிறர்பால்
செல்லொணா வகையதாய்த் தத்தம்
மனையிடைப் பதன மாக்கஅக் கண்ணன்
மருவுறா வகையின்வைத் தனரால். 196

வைத்தபோது அந்த மடந்தையர் காமம்
மருவுறு பருவநாண் முதலாய்ச்
சித்தசன் கணையுள் ளகப்படா வண்ணம்
சேர்ந்துதம் கொவ்வைவா யமுதம்
நித்தமும் அருந்துங் கண்ணனை அந்நாள்
நெருங்குறா வகையில்தம் உள்ளம்
பித்தரின் மயங்கிப் புரிதல்தோன் றாமல்
பெருந்துயர்க் கடல்உழந் தனரால். 197

---

195. இடையர்கள் கண்ணனைத் தங்கள் புதல்வியர் தழுவுவது உணர்ந்து பழிவரும் எனக் கருதினர். கழுது - பூதனை என்ற பேய். "கழுதும் கண்ணயர்ந் துறங்குமிக் காரிருள் நடுவண் பழுது வந்தது பாண்டியா உறக்கமா" என்று ஜெகவீரபாண்டியர் கூறியதை நோக்குக (வீரபாண்டியம்). குறிப்பின் சாயலால் - அடையாள மென்மையால். "நாற்றமும் தோற்றமும்" என்ற தொல்காப்பியத்தைச் சிந்திக்கவும். இழுது - வெண்ணெய்.

196. ஆயர் மகளிரைப் பிற இடங்கட்குப் போக முடியாதபடி காவலில் வைத்தனர். பதனம் - பாதுகாப்பு. "பதன கவசத்துடன் மேவிப் பரந்த சேனை" என்பது ஞானவாசிட்டம்.

197. மகளிர் கண்ணனைக் காணப்பெறாமையால் வாடினர். பருவநாள் முதலாய்ச் சித்தசன் கணையுள் அகப்படாவண்ணம் வாயமுதம் அருந்தும் கண்ணன் என்க. சித்தசன் - மன்மதன். மனதிலே பிறந்ததால் மன்மதன் சித்தசன் எனப் பட்டான். (சித்தம் + ஜன்). "மனதிலே பிறந்தோன் மனம் உண்ணுவோன் மதன தேவன்" என்பர் நம் பாரதியார்.

எண்ணரும் துயர்கொண் டிடுமட வார்அம்
எழிலிபோல் நிறக்கண்ண னார்தம்
வண்ணமா முகமண் டலத்தின தழகும்
மங்கலக் குணஅதி சயமும்
பண்ணமை குழல்சேர் பவளவாய் ஒளியும்
பாங்குடன் உற்றனு பவித்துக்
கண்ணினால் காண்பது என்றுகொல் எனவே
கருத்துற நினையும் அக்காலை; 198

ஆங்குஅவர் பலரும் ஒருதினம் பிறர்தாம்
அறிவுறாது ஓர்இடத்து அணுகி
ஈங்குஇதற்கு யாம்என் செய்திட லாம்என்று
எண்ணுறும் தத்தம துணர்வைப்
பாங்குற ஒருவர் ஒருவரொடு உரைத்து
வினவும்அப் பரிசுஉணர்ந் தவரில்
தீங்கிலாள் ஒருத்தி மற்றவர் தமக்குத்
தெரியவோர் உபாயம்செப் புவளால்: 199

கொம்மைமா முலையீர்! சகடுஇற உதைத்துக்
குன்றினால் கல்மழை தடுத்து
வெம்மைசேர் பாந்தள் பணமிசை நடித்து
வெவ்விடப் பேய்முலை அருந்தி
நம்மைஆ ளுடைய தகைமையிற் பெருகும்
நந்தகோ பன்திரு மகனை
மும்மையாம் உலகும் ஈன்றுகாத் தழிக்கும்
மூவர்க்கும் முதல்வனே எனலாம். 200

---

198. கண்ணனின் முகமண்டல அழகும், குண அதிசயமும், பவளவாய் ஒளியும் காண்பது என்றுகொல் என்று மகளிர் நினைந்து வாடினர். எழிலி - மேகம். "என்றுகொலோ கண்குளிரக் காணும் நாளே" எனக் குலசேகரர் பட்ட துன்பம் அனைத்தையும் பட்டனர்.

199 — 202. மகளிர் அனைவரும் ஒரு நாள் பிறரறியாமல் ஓரிடத்தை அடைந்து ஆலோசித்தனர். அவர்களுள் ஒருத்தி, "கண்ணன் பரம்பொருள். அவனால் முடியாத செயல் இல்லை. அவனருளால் மழை பொழியாமல் செய்விப்போம். அப்போது நம்மை வேண்டிக்கொள்வார்கள். நோன்புகள் இயற்றுங்கள் என்பர்.

199. பரிசு - கண்ணபிரான் அருளின் தன்மை.

200. சகடு - சகடாசுரன். குன்றினால் - கோவர்த்தனகிரியால். பாந்தள் பணமிசை - பாம்பின் படத்தில். நந்தகோபன் மகனை மும்மூர்த்திகளுக்கும் தலைவன் என்றே மொழியலாம்.

ஆதலால் அவனால் அமைகிலாக் கருமம்
யாதொன்றும் இலை;அவன் அருளால்
பூதலம் அதன்மேல் சிலபகல் வானம்
பொழிகிலாது அமையுமாறு உஞற்றில்
சீதளம் அடங்கி வெம்மைமேல் எழுந்து
செழிப்பெலாம் தீய்ந்தழிந்து ஒடுங்கும்;
போதவா னிரைநொந் தருந்துநீ ரொடுமேய்
புல்லுமற் றல்லல்எய் துறுமால். 201

அத்தகவு அமையின் இத்திரு நகரத்து
அணுகுறும் தலைவர்கள் பலரும்
சித்தம்நொந் தவராய் நமதுஇடத்து அணுகித்
திருந்துநல் லுரைபல புகன்று
கத்தினம் செழியு மாறுவான் பொழியக்
கவின்பெறு வருணநோன்பு அதனை
ஒத்துஇழைத் திடுமின் எனஉரைத் திடுவார்
அதற்குநாம் ஒத்துளோம்; ஆனால், 202

அனையமா விரதம் வழுவுறாது உஞற்றல்
அன்றுஇளங் கன்றினைச் சுழற்றி
நனைவிளா எறிந்த கண்ணனை அலது
நடந்திடாது ஆதலி னாலே
இனையவ ரொடுசென் றனையகா ரியம்நீ
முடித்திட வேண்டும்என்று அன்னான்
தனையவர் வேண்டி நல்லுரை புகன்று
தம்முடன் சார்கென விடுப்பார். 203

---

201. அவனால் அமைகிலாக் கருமம் - அவனால் செய்ய முடியாத செயல்கள். உஞற்றில் - செய்தால், சீதளம் - குளிர்ச்சி. போத ஆன்நிரை - மிக்க பசுக் கூட்டம். அல்லல் எய்தும் - துன்பம் அடையும்.

202. அத் தகவு - அந்தத் தன்மை. கத்தினம் - கற்றினம் - கன்று + இனம். வருண நோன்பு - வருணனைக் கருதிச் செய்கின்ற விரதம் (பாவை நோன்பு). இழைத்திடுமின் - செய்யுங்கள்.

203 — 204. அனைய விரதம் கண்ணனின் உதவியில்லாமல் நிகழாது. அவனுடன் சேர்ந்து நோற்கச் சொல்வர். அப்போது நம் விருப்பம் நிறைவுறும் என்று கூறியவளைப் புகழ்ந்தனர்.

203. கன்றினைச் சுழற்றி விளா எறிந்த கண்ணன் - வத்சாசுரனைக் கொண்டு கபித்தாசுரனைக் கொன்ற கண்ணன் (கருத்துடையடைமொழி அணி),

விடுத்திடில் அவனோடு அடைந்துஉரை செயும்அவ்
விரதமும் வழுவுறாது இயற்றித்
தொடுத்தஎண் ணமும்நாம் முடிக்கலாம் எனஅத்
தோகையாள் உரைத்தல்கேட்டு அதனுக்கு
அடுத்ததன் மையைநீ உரைத்தனை எனஆங்கு
அனைவரும் அவள்தனைப் புகழா
எடுத்தபே ருவகைக் கடல்படிந் தவராய்
இன்னதே முடித்தும்என்று இசைந்தே; 204

அனநடை மடவார் அனைவரும் ஒருமித்து
அலர்க்கரம் குவித்துநீர் அருந்துங்
கனநிற வணம்சேர் கண்ண!இந் நாட்டில்
கலந்துகார் மழைபொழிந் திடுதி;
நினதுபே ரருளால் சில்பகல் பொழியாது
ஒழிந்திட நீசெய்க! என்றே
மனதுற நினைந்து துதிசெய்து தத்தம்
மனைதனிற் கலந்துஉறைந் திருந்தார். 205

கண்ணனும் அருளார் இதயமா மலருள்
கனதனக் கொடியிடைத் துவர்வாய்
பண்ணமை இளஞ்சொற் கிளிஅன மடவார்
பரிவொடும் தனதுதாள் மலரை
எண்ணிவேண் டுறும்அவ் வாறுஉணர்ந் தருளி
இனிதொடும் ஆங்குஅவர் குறித்த
வண்ணம்அந் நாட்டில் சிலபகல் வானம்
வழங்கிடா வகைபுரிந் தனனால். 206

---

204. தோகையாள் – மயில் போன்ற மங்கை. உவகைக் கடல் - மகிழ்ச்சிக் கடலில்.

205. மகளிர் கரம் குவித்துக் 'கண்ணா! மழைபொழியாமல் செய்க' என்று பிரார்த்தித்துத் தத்தம் வீட்டையடைந்தனர். அன்ன நடை அன நடையாயிற்று. நீர் அருந்தும் கனம் - நீருண்ட மேகம். மழை பொழிந்திடுதி - மழைபொழியச் செய்கின்றாய்.

206. கண்ணன், மகளிரின் சங்கற்பத்தால் மழையில்லாதபடி செய்தான். இதயமா மலருள், கிளி அன்ன மடவார் வேண்டுதலை உணர்ந்து, கண்ணன் வானம் வழங்காதபடி செய்தான்.

மழையிலாது ஒழியப் பெருகும்அக் குளங்கள்
மருவுநீர் சுவறியே பசும்புல்
தழைவிலாது எரிந்து விடுதலால் நிரைகள்
தயங்கிட இவ்வகை யுறும்அப்
பிழைஎனோ எனத்தம் முள்ளம்ஊடு எழுந்து
பெருகுறுந் துயர்அடைந் தவராய்
குழையுறு செவிநந் தனேமுத லாகும்
கோவலர் பலர்களும் குறித்தே; 207

குறைவிலாது எவர்க்கும் நிறையமா தானம்
கொடுத்தும்வான் பொழிகிலாது ஆக
மறையவர் இணைஅம் புயமல ரடியை
வணங்கியே பின்னரும் அவர்இம்
முறைமழை யிலதாய் ஒழிந்ததுஎன்? இதற்குயாம்
முயல்வதுஎன்? மொழிகுமின் எனவாங்கு
அறைதலும் அதனைக் கேட்டுறும் அவர்கள்
அரியநூல் முறைஎடுத்து அறைவார். 208

சேட்டுறு மதிநேர் திருமுகம் உடையீர்!
தினகரன் முதலிய ஒன்பான்
கோள்தவ றுதலால் வக்கிரித் திடலால்
குவலயம் அதன்மிசைக் குறியின்
நாட்டிடை வானம் பொழிந்திடாது எவரும்
நலம்பெற மழைபொழி வதனுக்கு
ஈட்டுறும் முறையும் இயம்புதும் கேண்மின்
என்னமீண்டு இவைஎடுத்து இசைப்பார்; 209

---

207. மழையின்மையால் உண்டான துன்பம். ஆயர்களின் சிந்தனை. சுவறி — வற்றி. நிரைகள் - பசு எருது ஆடு முதலானவைகள். நந்தன் முதலானவர்கள் சிந்தித்தனர். குழை - குண்டலம்.

208. அந்தணர்களை வணங்கி ஆயர்கள் மழை இன்மைக்குக் காரணம் கேட்டனர்.

209. நவ கோள்களின் குற்றத்தாலும் வக்கிரிப்பாலும் மழை பொழியாது. 'முறை ஒன்றுளது' கேளுங்கள் என்றனர் அந்தணர். சேட்டுறு - பெருமை பொருந்திய. தினகரன் - சூரியன்.

வாட்டொழில் நெடுங்கண் மடந்தையர் எனஇம்
மாநகர் மருவுவோர் பலரும்
கூட்டமுற்று எமுனா நதிக்கரை அருகில்
வருணனைக் குறித்துஒரு விரதம்
சூட்டுறு மலரின் அருச்சனை முதலாம்
சோடச உபசரிப் புடனே
நாட்டிய முறையின் வழுவுறாது இழைக்கில்
நல்லன மழைபொழிந் திடுமால். 210

அவ்விர தத்தை உஞற்றிடாது ஒழியில்
அகல்விசும் படைந்துகார் முகில்கள்
எவ்விதத் தேனும் ஓர்துளி வழங்காது
ஆயிடும்; இழைக்கும்ஆங்கு அதனுக்கு
ஒவ்வுறும் உபசா ரம்புரி குதலில்
ஒன்றெனும் வழுவுதல் உறினோ
இவ்வுலகத்தின் மழைத்துளி என்பது
இலாமையாய் முடிந்திடும்; இன்னும், 211

நதியுறு மணலுள் பெருகுநீர் அதுவும்
நண்ணுறாது ஒழிவதும் அல்லால்
பதியுறு கிணற்றுள் உறும்சிறு புனலும்
பலித்திடா; அழல்கொளும்; அதனால்
சதிர்பெறும் அந்நோன் பினுக்குஉறு பொருள்கள்
தருவித்துப் பராமரித் திடற்கு
மதியுறும் சர்வக் கியர்இருந்து அதில்ஓர்
வழுவுறாது இயற்றவேண் டிடுமால். 212

---

210. இந்த நகரப் பெண்கள் யமுனைக் கரையில் வருணனைக் குறித்து விரதம் இருந்து, மலரால் அருச்சனை முதலாகிய 16 உபசாரங்கள் புரிந்தால் மழை பொழியும் என்றனர். வாள் தொழில் நெடுங்கண் - வாள் தொழிலைப் (கொலை) புரிகின்ற நீண்ட கண்கள். சோடசம் - பதினாறு.

211. விரதத்தைப் புரியாமற் போனால் முகில்கள் மழை பொழியா. உஞற்றிடாது ஒழியில் - செய்யாமல் விட்டால். அகல் விசும்பு - பரந்த ஆகாயம்.

212. நதியில் புனல் வராது. கிணறும் வற்றும். வெப்பம் அதிகமாகும். ஆதலால் தகுதியுடையவரைக் கொண்டு நோன்பை நடத்துங்கள். சதிர்பெறும் - திறமையாகச் செய்ய வேண்டிய. சர்வக்கியர் - பேரறிவுடையவர்.

ஆதலால் இவ்வாறு இழைமின்என்று அவர்கள்
அறைதலும் ஆயர்கள் பலரும்
ஓதும்அவ் வாறே புரிகுதும் எனஉள்
உவப்பொடும் விரைவினோடு எழுந்து
தீதிலா எழுனைக் கரையின்ஓர் சாலை
செய்வித்துஅங்கு அதனிடைத் தமது
மாதர்க ளானோர் தமையெலாம் நீர்போய்
மருவுமின் எனவகுத் துரைத்தார். 213

அவ்வகை அவர்போய் அடைந்தபின்பு அவர்கள்
அவ்விர தந்தனை வழுவாது
ஒவ்வுறப் புரிவிப் பவர்கள்யா ரெனஆங்கு
ஒருவரை யொருவர்கள் வினவி
எவ்வகை யவற்கு மொவ்வொரு செயலால்
இயைவுறா தெனவுநம் மிறையாஞ்
செவ்விசேர் நந்த குமரனால் முடியும்
என்னவும் சிந்தைசெய் தவராய்; 214

கண்ணனை வருவித்து அந்தணர் புகன்ற
காரணம் பலவும்ஓர்ந் தனையால்
பண்ணுறு மொழிநம் பாவையர் பலரும்
பரிவொடு புரியும்நோன்பு அதனுக்கு
எண்ணரும் பொருள்கள் யாவையும் வருவித்து
ஈந்துஒரு முறையினும் வழுவா
வண்ணம்நீ நிறைவேற்று; ஆங்குஅடைந்து எனஉள்
மகிழ்வொடும் வகுத்துஉரைத் தனரால். 215

---

213. ஆயர்கள் அவர் மொழி கேட்டவுடனே யமுனைக் கரையில் சாலை அமைத்து, அதில் தங்கள் புதல்வியர்களைத் தங்குங்கள் என்றனர். இழைமின் - செய்யுங்கள்.

214. இந்த அரிய நோன்பைத் திறம்பட முடிப்பவன் கண்ணன் என்று அறிந்தனர். ஒப்புற - வருண பகவான் சம்மதிக்க. நந்தகுமரன் - நந்தனின் புதல்வன்.

215. கண்ணனை வருவித்து நீயே நோன்பைத் தலைக்கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். ஓர்ந்தனை - உணர்ந்தாய். ஆங்கடைந்து நிறைவேற்று என்று உரைத்தனர் என மாற்றுக.

அம்மொழி பலவும் இருசெவி உறவந்து
அணுகலும் ஆங்குஇடங் கொள்ளா
விம்முறும் உவகைக் கடலைஓர் கரைசெய்
விதம்பெற அகத்தினுள் அடக்கி
இம்மொழி களைஇங்கு என்னொடு நீவிர்
இசைத்தது நன்றுநன்று எனவே
செம்மனம் அதனில் சினம்கொளும் அவர்போல்
சிலமொழி தெரித்திடல் ஆனான். 216

முன்னர்நாள் தனில்ஓர் களங்கமாம் அதனை
மொழிந்திடற்கு இடமிலா உமது
கன்னிய ரொடுயான் கலந்துபே சியதாய்ப்
பழியுரை கழறியும் மனைவாய்
அன்னமா மடவார் தமைநில வறையுள்
அடைத்துவைத் திருந்துவந்து இந்நாள்
இன்னமா மொழிகள் இயம்பினீர் இதனுக்கு
இயைகிலன் எனஎழுந்து அகன்றான். 217

அகன்றிடு பொழுதுஅவ் வாயர்கள் பலரும்
அருந்ததி நிகர்அசோ தையின்சீர்
மகன்தனை விரைவில் பின்துடர்ந்து ஓடி
வழிமறித்து அறிவிலாது அந்நாள்
புகன்றுள எமது கொடியமா வசையாம்
பொய்மொழி யானவை பலவும்
மிகுந்திடும் புகழோய் உளந்தனில் பொறுத்தல்
வேண்டும்என்று உபசரித் தவராய்; 218

---

216. இம் மொழியைக் கேட்ட கண்ணன் மனத்துள் மகிழ்ச்சியுற்று அதனை வெளிப்படையாகக் காண்பிக்காமல் "இம் மொழியை என்பால் உரைத்தது, நன்று! நன்று!" எனச் சினம் கொண்டவன்போல் பேசினான். விம்முறும் உவகைக்கடல் - பூரிக்கின்ற மகிழ்ச்சியாகிய கடலை. தெரித்திடல் ஆனான் - சொல்லத் தொடங்கினான்.

217. முன்பு என்மேல் பழிச்சொல் பகர்ந்தீர். மகளிரை நிலவறையில் அடைத்தீர். இப்போது இப்படிப் பேசுகின்றீர். யான் இசையேன்; எனக் கூறி எழுந்தான். களங்கம் - குற்றம். உமது கன்னியரோடு கலந்து பேசியதாகத் தூற்றினீர். "கிருஷ்ணன் தூர்த்தனாயிருக்கிறான். இவன் முகத்திலே பெண்கள் விழிக்கலாகாது என்று பார்த்து அவர்களைக் கொண்டுபோய் நிலவறைகளிலே அடைக்க"— என்ற வியாக்கியானப் பகுதியைப் பார்க்கவும்.

218. கோவலர்கள் கண்ணனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர். வசையாம் பொய்மொழி - உண்மை கலவாத வசைச்சொற்கள்.

அய்ய! என்பவரும்; அத்த! என்பவரும்;
அருந்தெய்வ மே!எனும் அவரும்;
துய்யபங் கயத்தா ளினைவரு டுவரும்;
துணைக்கர மலர்பிடிப் பவரும்;
செய்யமோக் கட்டை தனைப்பிடிப் பவரும்;
செழுங்கரம் குவித்துவேண் டுவரும்;
வையமீது எதிர்வீழ் பவரும்ஆ யினர்அவ்
வகைஎடுத்து உரைக்குமாறு இலதால். 219

இத்தகை பலவாய் வருந்திஆங்கு அவர்கள்
யாவரும் அந்தணர் உரைத்த
அத்தகை விரதம் தனைவழு வாமல்
அமைத்திட வேண்டும்நீ எனவே
சித்தமது இரங்கி உரைத்தல்கேட் டருளிச்
சிறுநகை நிலவுஎழ அதனுக்கு
ஒத்துஉளம் மகிழ்வாய் எழுனையின் கரைபோய்
உற்றனன் புற்றுஅரா அணையான். 220

ஆங்குஅடைந்து அந்நோன்பு அதற்குவேண் டுவதாம்
அரும்பொருள் குறைவிலாது யாவும்
பாங்குற வருவித்து அவர்களால் இயற்றும்
பரிசெலாம் முறைவழு விலதாய்
தேங்குழல் மடவார் செங்கரம் அதனில்
திருந்துறப் புரிமுறை கதிரோன்
வீங்குநீர் மேல்பாற் கடலிடை மருவி
வீழுறும் அளவும்ஆங்கு இயற்றி; 221

---

219. சிலர், ஐயா! என்றனர். சிலர், அத்த! என்றனர். சிலர், தெய்வமே! என்றனர். சிலர், திருவடியைப் பற்றிக்கொண்டனர். சிலர், கரத்தைப் பிடித்துக் கொண்டனர். சிலர், கரங் குவித்தனர். சிலர், பூமியில் விழுந்து வணங்கினர்.

220. இங்ஙனம் பலர் பலவாறு புகழக் கண்ணன் உடன்பட்டு யமுனைக் கரையை அடைந்தனன். அராவணையான் - ஆதிசேஷனாகிய படுக்கையை உடையவன்.

221 — 222. யமுனைக் கரையை அடைந்த கண்ணன் வேண்டும் பொருள்களை வருவித்துக்கொண்டான். மேற்பால் உள்ள கடலில் சூரியன் மறைந்ததும் கோபியர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கண்ணனாய் வடிவம் கொண்டு இன்பம் வழங்கினான். நள்ளிரவில் இடைப்பெண்கள் இல்லம் சென்று உறங்குவார்கள்.

221. வீங்கு நீர் மேற்பால் கடல் - மிக்க நீரை உடைய மேற்குக் கடல்.

நள்ளிருள் அடையும் காலையில் எழுந்துஅந்
நதிக்கரை இசையுநல் லிடத்துஅக்
கள்ளவிழ் மலர்ப்பூங் குழலினர் பலர்க்கும்
ஒவ்வொரு கணவனாய் அவரோடு
உள்ளம்ஒத்து அணையா அவர்கள்வா யிதழ்த்தேன்
உண்டுஉழன்று அழுந்திய காம
வெள்ளம்நீத்து அர்த்த ராவினில் தத்தம்
வீடுஅணைந்து உண்டுஉறங் குவரால். 222

மற்றநாண் முதல்அவ் வாறதாய் நந்தன்
மகனொடும் பாடியின் மருவும்
பொற்றொடி மகளிர் பலரும்ஆங்கு ஒருவர்
ஒருவரை புரிதுயில் உணர்த்தி
நற்றுரை யமுனா நதிக்கரை அணுகி
நலம்புரி நோன்பையும் நடத்தி
உற்றமை காமக் களிநற வருந்தி
யூர்புகுந்து அணிமனை உறைவார். 223

இந்தநன் முறையே பலதினம் அவர்கள்
இனிதொடும் கண்ணனை அணைந்தார்;
அந்தநன் னாட்டின் வானமும் பொழிந்திட்டு
ஆனினங் களும்செழித் துளதால்;
முந்துநாள் நடந்த செயல்கள்இம் முறையாம்;
முழுமதி நிகர்முகக் கோதாய்!
சிந்தையூடு உணர்தி என்னஅம் மடவாள்
தெரிதரப் புகன்றனள் மாதோ. 224

---

222. பூங்குழலினர் - கோவியர். காம வெள்ளம் நீத்து - காமக் கடலைக் கடந்து. "நிரையிதழ்ப் பூங்கொம் பன்னார், மகிழ்தரு மின்பத் தேறல் மாந்தினன் மணிவண் டன்னான்" என்பர் செல்வைச்சூடுவார்.

223. கோவியர் ஒருவரை ஒருவர் துயில் எழுப்பி, யமுனையை அணுகி, நோன்பையும் நடாத்தி இன்பமும் பெற்றுத் தம்மனை அடைவர். துயில் உணர்த்தி - உறக்கத்திலிருந்து எழுப்பி. களி காம நறா என மாற்றுக. களிப்பை வழங்கும் காமமாகிய மது.

224. "இந்த விதமாக நோன்பை மேற்கொண்டு கோவியர் கண்ணனை அடைந்தனர். மழையும் பொழிந்தது. பசுக்களும் செழித்தன. கோதையே அறிக" என்று அவள் மொழிந்தாள். சிந்தை உணர்தி - உள்ளத்தில் உணர் வாயாக.

பாவை நோன்பு

(வேறு)

கேட்டவம் மயிலின் சாயல்
கிளிமொழி மடவாள் தானும்
வாட்டமுற்று உளத்தி னூடு
மகிழ்சிறந் தோங்க அவ்வா
றீட்டுதும் யாமும் என்றாங்கு
அவள்இணை அடிகள் ஏத்தி
வீட்டகம் தன்னில் சென்றோர்
வினையமது இழைக்க லுற்றாள். 225

நண்ணுசீர் புதுவை என்னும்
நகரம்ஆய்ப் பாடி யாயும்
வண்ணமா மணிகள் ஆர்ந்த
வடபெருங் கோயில் தானே
விண்ணவர் புகழும் நந்தன்
வீடதாய்க் கோவி லின்மால்
கண்ணனாம் எனவும் தன்சீர்
கருத்துளே திருத்தி; பின்னும், 226

---

225. கோதையார் இந்த நோன்பை யாமும் புரிவோம் என்று கருதி, அவள் பாதம் வணங்கி வீட்டையடைந்து முயற்சி செய்தாள். வினையம் - முயற்சி. "வினைக்கண் வினையுடையான் கேண்மை" என்பது திருக்குறள். வினையுடையான் என்ற தொடர்க்குப் பரிமேலழகியார் "முயறலை உடையான்" என்று பொருள் கூறுவார். ஏற்பன கொள்க.

226 — 228. "ஸ்ரீ வில்லிபுத்தூரே ஆயர்பாடியாகவும், அங்குள்ள பெண்களே இடைப் பெண்களாகவும், தானும் அவர்களில் ஒருத்தியாகவும், வடபெருங் கோவிலே ஸ்ரீ நந்தர்கோன் திருமாளிகையாகவும், உள்ளே நிற்கின்றவன் கிருஷ்ணனாகவும் அனுசந்தித்து" என்ற திருப்பாவை வியாக்கியானம் இங்கே கருத வேண்டும்.

"சீர் புதுவை ஆயர்பாடியாகவும், வடபெருங்கோவில் நந்தன் வீடாகவும், அக் கோவில் மால் கண்ணன் ஆகவும், தோழப் பூவையர் கோபாலர் மகளிராகவும், தான் அவர்களில் ஒருத்தியாகவும் பாவித்து, அம் மடந்தையர்களை எழுப்புவதாகவும் கருதித் திருப்பாவையைத் திருவாய்மலர்ந்தருளினார்"— "அண்டர் திருவாய்ப்பாடியாய்" என்று தொடங்கும் ஆண்டாள் பிள்ளைத்தமிழ் காண்க. (என். வி. நாயுடு அவர்கள் பதிப்பு.)

புனைமலர்க் குழல்சேர் தோழப்
பூவையர் புகழ்கோ பாலர்
மனைவிய ராயும் அம்மா
மடந்தையர் தங்கட் குள்ளாய்
தனைநிகர் தான்அ லாதாள்
தானும்ஓர் மடந்தை யாயும்
இனையவாம் தன்மை யாக
நியமித்துஇங்கு இனிதி னோடும்; 227

அப்பெரு மடவார் தம்மை
அருந்துயில் உணர்த்தல் போலும்
செப்பரு வருண நோன்பு
செய்தபா வனைய தாயும்
இப்புவி தணிய வானம்
வழங்கிய தெனவும் பாவை
முப்பது கவிதைத் தீந்தேன்
தமிழினால் மொழிந்தா ளன்றே. 228

ஏழிரு புவனத் துள்ளும்
இணையில்செந் தமிழின் பாவை
வாழிய உரைத்தும் அண்டம்
அனைத்தையும் வயிற்றுள் வைத்து
ஊழிகள் பற்பல் கோடி
உலப்பிலாது உறங்கும் செங்கேழ்
ஆழிமா யவனும் இன்புற்று
அணுகிடா முறைமை தன்னால்; 229

---

227. நியமித்து - தீர்மானித்து. "உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்துச் செய்யும் செய்தல் ஒப்புமை நோக்கி" என்று அகத்திணையியலில் நச்சர் விளக்கிய விளக்கம் கருதுக.

228. பாவனை - நினைவு. "பாவனா ப்ரகர்ஷத்தாலே" என்று வியாக்யானப் பகுதியைக் கருதுக.

229 முதல் 248 வரை நாச்சியார் திருமொழியின் கருத்துகள் சுருக்கமாகப் பேசப்படுகின்றன. பாவை நோன்பு நோற்றும் கண்ணன் அருளாமையால் கோதையார் காமனை நினைந்து நோன்பு நோற்றார். காம நோன்பின் முடிவில் கண்ணன் வந்து சேவை வழங்கினான். கோதையார், அவன் காலதாமதமாய் வந்ததால் ஊடல்கொண்டு, சிறுமியர் சீறிச் சிற்றில் சிதையேல் என்று கூறுவதாகப் பாடினார். கண்ணன் மறைந்தான். பின்னர் கோதையார், துகிலைப் பணித்

நாச்சியார் திருமொழி நவின்றது

சித்தசன் தன்னை யன்னாள்
திருந்துறப் போற்றி செய்து
பைத்தலைப் பணியின் வாழும்
பரமனை யடியேன் தன்னோ
டொத்துவாழ்ந் திடுமா றாக
வுனதுகைக் கருப்பு வில்லில்
வைத்தபூங் கணையே வென்னா
வழங்கினள் கவிதை மாதோ. 230

ஆங்கணவ் வாற தாக
அனங்கனை வேண் டலாகப்
பாங்குறு கவிகள் தம்மைப்
பாடலு மதனைக் கேளாப்

தருள் என்று கண்ணன் விளையாடியதைப் பாசுரமாக்கினார். மீளவும் கண்ணன் மறைந்துவிட்டான். கண்ணனை நினைந்து உருகிய கோதையார் கூடல் இழைத்துப் பார்க்கிறார். கண்ணன் வரக் கூவுக என்று குயிற்பத்துப் பாடினார். குயில் அழைக்கக் கண்ணன் கனவில் வந்து, திருமணச் சடங்குகள் யாவும் நிகழ்த்திக் காண்பித்தான். (வாரணமாயிரம் உதயமாயிற்று.) மறுபடியும் பாஞ்சசன்னியத்தைப் பதுமநாபனோடும் சுற்றமாக்கிக் கண்ணனின் பவளவாயின் சுவையும் மணமும் அறிவாயா? என்று பாசுரமிட்டார். மீளவும் மேகத்தை நோக்கி, மதயானை போலெழுந்த மாமுகில்காள், பாம்பணையான் வருவானோ என்று மேக சந்தேசம் பாடினார். திருப்பாவை 30 பாடியும், நாச்சியார் திருமொழி 173 பாடியும் கண்ணன் வாராமையால், வெண்ணெய்போல் உருகினார். இனியும் தாமதித்தால் நாச்சியாருக்கு இறுதி வருமோ என்று அஞ்சிய கண்ணன், அன்புடன் வந்து கலந்து இன்பம் வழங்கி மீண்டு போனான். (வடிவழகிய நம்பிதாசர் திருப்பாவைப் பாடல்களுக்கு விளக்கம் தந்தார். விஜயராகவர் நாச்சியார் திருமொழிக்கு விளக்கம் தந்துள்ளார்.)

229. உலப்பிலாது - குறைவில்லாமல். செங்கேழ் ஆழி - சிவந்த ஒளியோடு கூடிய சக்கரம்.

230. சித்தசன் - மன்மதன். பைத்தலைப் பணி - பையையும் தலையையும் பெற்ற பாம்பு. கருப்பு வில்லில் - கரும்பு வில்லில். கணை ஏவு - என்னை அம்பாகக் கொண்டு ஏவுக. "வித்தக வேங்கடவாணன் விளக்கினிற் புக என்னை விதிக்கிற்றியே" என்ற நாச்சியார் மொழியை நோக்குக (பதிகம் — தையொருதிங்களும்). வேதாந்த தேசிகர் சங்கற்ப சூர்யோதயத்தின் தொடக்கத்தில், "ஓங்காரவில்லில் ஜீவாத்மா என்ற அம்பைத் தொடுத்துத் திருமால் என்கின்ற குறிபார்த்து ஒருவன் வில்லாளியின் நிலையில் இருந்து எய்தால் அந்த ஜீவன் அவன் திருமார்பில் கௌவுத்துவம் போல் விளங்குவான்" என்றது அனுசந்திக்க வேண்டும். இதுவே தையொருதிங்களின் உள்ளுறை.

பூங்கழல் திருமால் தானும்
புவிமிசை விரைவின் வந்தே
தேங்கமழ் குழலி னாட்குச்
சேவைதந்து அருளி னானால். 231

அன்னமால் அடைந்து சேவை
அளித்தலும் அன்னம் அன்னாள்
இன்னதோ ரளவு மிங்ங
ணெய்திடா திருந்த செய்கை
என்னவென் றுரைத்துச் சிந்தை
யிடையுறு வெகுளி பொங்கப்
பின்னரொன் றுரையா தூடற்
பிணக்குறு செய்கை யாளாய்; 232

வீழிவாய்க் குவளைப் பூங்கண்
விற்பிறை புருவ நெற்றித்
தோழிய ருடனே சிற்றில்
தொகுத்தவ ளுறைத லோடும்
தாழியாம் அதற்கும் வீடு
தந்தகோ விந்தன் என்னும்
ஆழியான் அதனைத் தான்கொண்டு
அழிவுறச் சிதைத்தா னன்றே. 233

மற்றும்அச் செய்கை தேறா
மயிலியற் குயிலின் மென்சொற்
பொற்றொடி மடவாள் தான்அப்
புண்ணியன் வதனம் நோக்கி

---

231. கேளா - கேட்டு. தேங்கமழ் குழலினாட்கு - கோதை நாச்சியாருக்கு.

232. ஊடல் பிணக்கு - ஊடலால் வந்த கோபம்.

233. வீழிவாய் - வீழிக்கனி போன்ற வாய். "வீழியின் கனிவாய் ஒரு மெல்லியல்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (பால காண்டம்). தாழி - பானை. பானைக்கும் முத்தி கொடுத்த கண்ணன். "தாழிதனக்கு முன் வீடு கொடுத்தருள் தாள்" என்பர் வில்லியார். இச் செயலைப், பிள்ளைப்பெருமாளையங்கார் "சிந்திக்க நெஞ்சில்லை" என்ற திருவரங்கமாலைப் பாடலில் வியந்து பேசுவார். ஆழியான் சிற்றிலைச் சிதைத்தான்.

உற்றுயாம் வருத்தம் தோன்ற
உகப்பொடு உளுற்றும் இந்தச்
சிற்றிலைச் சிதையேல் என்னச்
செய்யவாய் மலர்ந்து சொன்னாள். 234

கன்னியர் தமக்கெ லாம்ஓர்
கண்மணி துவர்வாய் விண்டு
சொன்னசொற் புணர்ச்சி யாகத்
தூயமா மனத்துட் கொண்டு
தன்னுரு தெரிந்தி டாதுஓர்
சாம்பதாய் மறைந்து போனான்
அன்னமாய் அயனுக்கு அந்நாள்
அருமறை புகன்ற மாயோன். 235

மாயவன் இருகண் காணா
தோர்முறை மாய மாகப்
போயகன் றிடலு மந்தப்
பூங்குழற் கோதை யாளும்
சேயரிக் கண்க ளோடு
சிந்துநீர் முத்தம் பொங்கத்
தூயநல் லுளமுட் கொண்ட
துயரமும் அடைந்தா ளாகி; 236

பாங்கியர் எனும்அம் மாதர்
பலர்களும் உடன்சென்று எய்த
ஆங்கொரு பொய்கை தன்னை
அணுகிஆங்கு அதனிற் பூத்த

---

234. மயிலியல் குயிலின் மென்சொல் பொற்றொடி என்றது கோதை நாச்சியாரை. பெருமான் உள்ளங்கவர்ந்த அழகைப் பேசுகின்றார் கவிஞர். உளுற்றும் - செய்யும்.

235. சிதையேல் என்று கோதை சொன்னதே கண்ணனுக்கு சம்ஸ்லேஷ மாயிற்று. சம்ஸ்லேஷம் - கூடல். அன்னமாய் மறை அறைந்தவன் - கண்ணன். அயன் - பிரமன்.

236. மாயன் மறைதலும் கண்ணீர் சிந்திக் கோதையார் துயரம் உற்றார். சேயரிக் கண்கள் - சிவந்த அரிபடர்ந்த கண்கள். "சேயரிக்கண்கள் முத்தம் சிந்துபு சிதறிப் போனாள்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள். அங்குச் சிதையின் ஊடல்; இங்குக் கோதையின் ஊடல்.

தேங்கமழ் முளரி யோடும்
செங்கழு நீர்ப்பூக் கொய்தே
நீங்கரும் உவகை தோன்ற
நீர்விளை யாடும் எல்லை; 237

மருந்துண வமரர்க்கு அந்நாள்
வழங்கிநல் விதுரன் இல்வாய்
விருந்துண வமைந்த மாயோன்
மிளிர்தடக் கரையின் மீதுஅக்
கருந்தடங் கண்ணார் வைத்த
கலையெலாம் கைக்கொண் டேஓர்
குந்தமீ தேறித் தோள்கள்
குலுங்குற நகைகொண் டானால். 238

குலுங்குற நகைசெய் வோனைக்
கோதையாள் நயந்து நோக்கி
இலங்கிழை மடவா ரெல்லாம்
என்சொலார்? நகைத்துஏ சாரோ?
துலங்குற யாமுன் வைத்த
தூசெலாம் அளித்தி என்னா
நலங்கெழு கவிதை யாக
நவின்றனள் என்ப மன்னோ. 239

தலைமிசை கரங்க ளோடு
தன்னைவேண் டிடுத லாய்அம்
முலைமலைக் கொடியின் அன்னாள்
மொழிந்திடும் கவிகள் கேளா

---

237. கோதையார் பாங்கிகளுடன் ஒரு பொய்கையணுகி நீர் விளையாடலை மேற்கொண்டாள். உவகை தோன்ற - மகிழ்ச்சி வெளிப்பட.

238. கண்ணன், கரையில் மகளிர் வைத்த கலைகளை எல்லாம் கைக்கொண்டு குருந்தமரத்திலிருந்துகொண்டு சிரித்தான். மருந்து - அமிர்தம். தேவருக்கு மருந்து கொடுத்துவிட்டு விதுரன்வீட்டு விருந்து உண்ட கண்ணன்.

239. மடவார் என் சொலாரோ? ஆடை தா என்று கவிதை வழங்கினாள். தூசு - ஆடை. "தீயினில் தூசாகும்" என்ற திருப்பாவை கருதுக.

விலையிதென்று யாவ ராலும்
விளம்புதற்கு அரிதாம் பாட்டில்
கலையெலாம் அளித்து மீளக்
கண்ணனும் அகன்று போனான். 240

சூடிய மாலை தன்னைத்
துளவமாற் களித்தாள் பின்னும்
வாடிய மனதோ டெந்நாள்
வருவரோ வவர்தா மென்னாக்
கூடலாங் கிழைத்திட் டேயக்
கொள்கையைக் கவிக ளாகப்
பாடினாள் பாடி யும்ஆய்ப்
பாடியான் வராமை தன்னால்; 241

மயில்இயல் கிளியின் இன்சொல்
மடவன நடைபோர் வேலும்
அயில்விழித் தடங்கண் கோதை
யாள்அர வணையின் மீது
துயிலமை நறவப் பைந்தேன்
துளவமால் அணுகு மாறாய்க்
குயிலினைக் கூவு கென்னக்
கவிகளும் கூறி னாளால். 242

கோதையார் கனா

இக்குநேர் கவிதை பாடி
இரங்குதல் உணர்ந்தி ராவில்
புக்கவன் கனவின் மேற்றான்
புரிவது வையினிற் செய்யும்

---

240. அப் பாசுரங் கேட்டுக் கண்ணன் கலைகள் வழங்கிவிட்டு நீங்கிச் சென்றான்.

241. கண்ணன் வருவானோ? வாரானோ? என்று ஐயுற்றுக் கூடவிழைத்துக் கவிதை பாடினார் கோதையார்.

242. கண்ணன் வாராமையால், "குயிலே! கண்ணன் வரக்கூவு" என்று பதிகம் இசைத்தார். இப் பாடலில் கோதை நாச்சியாரின் ரூப சௌந்தரியம் பேசப் படுகிறது. நறவப் பைந்தேன் - மணம் பெற்ற தேன்,

அக்குறி யனைத்தும் காண்பித்
தகன்றனன் அன்பா லன்பு
மிக்கவ ருளத்தும் வேதச்
சிரத்தினும் விளங்குந் தாளான். 243

மத்தளங் கொட்ட

கனவுறும் இரவில் கண்ட
கடிமணக் கோலம் யாவும்
மனதுற உணர்ந்த வாற்றை
மருங்குறும் உயிரொப் பாகும்
தனதுபாங் கியர்க ளோடும்
சாற்றிய வாறு தன்னை
அனநடைக் கோதை தானும்
கவிகளாய் அறைந்தா ளன்றே. 244

கருப்பூரம் நாறுமோ!

பின்னுறும் இரவின் காலம்
பெருகுறும் கனவிற் கண்ட
பன்னுறும் அனுப வத்தைப்
பாஞ்சசன் னியமே! நீசேர்
அன்னசீர்ப் பவள வாயின்
சுவைதனை யறியு மாறாய்
என்னுடன் புகறி யென்ன
இயம்பினள் கவிகள் மாதோ. 245

நீருறு வெள்ளம் எங்கும்
நிரம்பிட மிகுந்து பெய்யும்
காருறு காலம் தோன்றக்
கனந்தனை நோக்கி அன்பால்

---

243 — 244. கண்ணன், இரவில் கனவில் திருமணச் சடங்கை நிகழ்த்தி அவற்றை முறையாகக் காண்பித்தான். நாச்சியார் தாம் கனவிற் கண்ட காட்சிகளைக் கவிதையாக வடித்துக் கூறினாள் (வாரணமாயிரம்). "வாரணமாயிரம்" என்ற பாசுரம் "மீரா" இதயம் வரையிலும் சென்று பாய்ந்துள்ளது. அவரும் இதேபோற் பாடியுள்ளார். (கவிமணி மொழிபெயர்ப்பால் உணருங்கள்).

245 — 246. கண்ணன் வாயமுது இத்தகையது என்று பகர்க என்று, "கருப்பூரம் நாறுமோ" என்று பதிகத்தாற் பாடினார். கார்காலத்தில் மேகத்தைத் தூதாக விட்டாள். கனந்தனை நோக்கி - மேகத்தைப் பார்த்து.

ஏறுரு கடலின் வண்ணர்
எய்துவர் கொல்லோ என்னச்
சீருறு பாடல் தன்னைச்
செப்பினள் மறித்து மன்றே. 246

ஈங்கிவ்வா றாகப் பாடல்
ஈறெழு பதின்மூன் றோடும்
ஓங்குறும் பாவை முப்ப
தொன்றிநூற் றெழுப தின்மூன்
றாங்கவள் மகிழ்விற் பாடி
யனுபவஞ் செய்யா வாற்றால்
ஏங்கியுள் ளழிந்து சோகித்
திழுதென வுருகி னாளால். 247

எம்பிரான் கலந்து மீண்டான்

உருகுறு நிலைமை காணா
உயிரினி தெறுமென் றஞ்சி
முருகவிழ் துளவ மாலை
முகுந்தனு முளத்து ளன்பு
பெருகுற விரைவின் வந்தப்
பிறைநுதற் பவள வாயாள்
அருகுற மருவி யன்போ
டளித்துமீண் டகன்று போனான். 248

அன்பின்தாம் அணிந்த மாலை
அணிந்தருள் ஆழி யான்தன்
இன்பமுண் டதற்பி னுள்ளத்
தெழுந்த பேருவகை யோடும்

---

247 — 248. இங்ஙனம் பாவை பாடியும் திருமொழி பாடியும் கண்ணன் வாராமையால் சோகத்தின் எல்லை யடைந்து உருகினாள். கோதையின் காதலின் திறம் கண்ட கண்ணபிரான் பிறைநுதற் பவளவாயாளை அணைத்து மருவி இன்பம் வழங்கி மீண்டான்.

இதுவரை நிகழ்ந்த நிகழ்ச்சிகள் யாவும் நினைவின் முதிர்ச்சியால் — கோதை யாரின் — இதயக் கோவிலில் நிகழ்ந்ததாகும். நாச்சியார் திருமொழி முற்றும் காதற் கடலில் முகிழ்த்த அமுதம்.

தன்புகழ்த் தாதை யாகும்
பெரியர்பால் விரைவிற் சார்ந்து
பொன்புரை சரணஞ் சென்னி
புனைந்துஇவை புகல்வது ஆனாள்: 249

அரங்கம் செல்லல்

அய்ய!யான் அரங்கம் என்னும்
அணிபெரு நகரம் தன்னுள்
பையரா வணையின் மீது
பசியகார் முகிலே போலச்
செய்யகண் வளர்த லாகச்
செழிக்குநம் பெருமா ளின்பொன்
துய்யதாள் இணைகள் தம்மைத்
தொழுதிட வேண்டு மன்றே. 250

ஆதலால் அடியேனைக் கொண்டு
அரைக்கண மெனுந்தங் காமல்
போதுதல் வேண்டும் இந்தக்
கணத்துஎனப் புகழ்ந்து கூற;
மாதவர் தமக்கெ லாமோர்
மணியனான் அதனைக் கேளா,
ஓதும்அம் முறைசெய் வேனென்று
உரைத்துஉள மகிழ்வி னோடும்; 251

---

249 முதல் 255 வரை பெரியாழ்வாரும் கோதை நாச்சியாரும் திருவரங்கயாத்திரை மேற்கொண்டது பேசப்படுகிறது.

249. தந்தையாரை வணங்கிக் கோதையார் பேசத் தொடங்கினாள். ஆழியான்றன் இன்பம் - சக்கரத்தை ஏந்திய திருமால் வழங்கிய இன்பத்தை. பொன் புரை சரணம் - பொன் போன்ற திருவடி.

250. கோதையார், நான் திருவரங்கனைப் பணிய வேண்டுமல்லவா? என்று வினாவினார். கண் வளர்தலாக - உறங்குவது போலக் காண்பித்து. செழிக்கும் - செழிப்படைகின்ற (யோகம் புரிகின்ற). தாள் இணைகள் - இரண்டு பாதங்களையும்.

251. ஆதலால், அரைக்கணமும் தங்காமல் போக வேண்டும்; இப்போதே போக வேண்டும் என்று கோதையார் திருவரங்கனைப் புகழ்ந்து பேசினார். பெரியாழ்வார், "இப்போதே ஓதியபடி செய்வேன்" என்றார். மாதவர் தமக்கெலாம் ஓர் மணியனான் என்றது பெரியவாச்சான்பிள்ளையின் விளக்கவுரையால் பெற்ற பயன். "தேக ஆத்மா அபிமானிகளுக்கும் ஆத்ம ஸ்வரூபம் கைவந்திருக்கும் ரிஷிகளுக்கும் பர்வத பரமாணு வோட்டைவாசி போரும்; ரிஷிகளுக்கும் ஆழ்வார்களுக்கும் அத்தனை வாசி போரும்; ஆழ்வார்களுக்கும் பெரியாழ்வாருக்கும் அத்தனை வாசி போரும்; பெரியாழ்வாருக்கும் ஆண்டாளுக்கும் அத்தனை வாசி உண்டு" என்பர் ஸ்வாக்யான சக்ரவர்த்தி பெரியவாச்சான்பிள்ளை.

வடபெருங் கோயில் தன்னை
விரைவொடு மருவி நஞ்சப்
படவர வணையிற் றுஞ்சும்
பரமனைப் பணிந்து போற்றிக்
குடமுலை, கழையின் மென்றோள்
கோவியர் மலர்க்கை கோத்து
நடனம்அன்று இழைத்துஅன் னார்பால்
நயமொழி நவின்ற நாதா! 252

சரிகரக் கோதை என்னும்
தையலாள் அரங்கம் தன்னுள்
வரியர வணையின் மீதோர்
மஞ்சென வளர்கின் றானைப்
பரிவொடு வணங்கு மாறாய்ப்
பகர்ந்தனள்; அதற்கு நாயேன்
புரிதல்வேண் டுவதை யின்னே
புகன்றிட வேண்டும் என்றான். 253

உரைத்தமா மொழிகள் கேளா
உகப்பொடும் அவனை நோக்கி
வரைத்தடங் கொங்கை யாள்நின்
மகள்தனை மணிகள் தன்னால்
நிரைத்தபொற் சிவிகை ஏற்றி
நீயுடன் கொண்டு சென்று
திரைத்தவழ் மணிகா வேரி
சூழும்தென் னரங்கம் சென்றே; 254

---

252 — 253. ஆழ்வார் வடபெருங் கோவிலை யடைந்து "நாதா, கோதை அரங்கனை வணங்க விரும்புகிறாள். யான் எதைப் புரிய வேண்டுமோ அதைப் புகல்" என்றார்.

252. நஞ்சப் படவணையில் துஞ்சும் பரமன் - விடமும் படமும் பெற்ற பாம்புப் படுக்கையில் உறங்கும் பரம்பொருள். கழை - மூங்கில். நயமொழி - இனிய மொழிகள்.

253. சரி - வளையல். மஞ்சென - மேகம் போல. "மஞ்செனத் திரண்ட கோல மேனிய" என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (கிட்கிந்தா காண்டம்). இன்னே - இப்போதே.

254 — 255. பெருமான், "உன் மகளை அலங்கரித்த சிவிகையில் ஏற்றி அழைத்துக்கொண்டு, நீயும் உடன் போய், அரங்கம் அடைந்து, அரங்கனைக்

ஆங்குறை அரங்க நாதர்
அடியிணை மலர்கள் தம்மைப்
பாங்கொடு மனமும் கண்ணும்
பரிவுறத் தொழுது போற்றி
ஈங்கடைந் திடுமின் என்ன
இசைத்தலும்; விடைபெற்று அன்னோன்
பூங்கழல் தொழுது வாழ்த்திப்
பொன்மனை புகுந்தா ன்றே. 255

அத்தினம் அதனில் அந்தக்
கணத்திலம் புவிமா னாகும்
தத்தைமென் மொழியி னாளைத்
தமனியத் தகட்டின் வேய்ந்த
முத்தணி சிவிகை யேற்றி
ஆங்கதைப் பட்டால் மூடி
ஒத்துடன் தானும் வேறோர்
சிவிகைமீ துகந்து சென்றான். 256

அந்தரத்து அமரர் மேன்மேல்
அலர்மழை பொழிந்து வானத்
துந்துமி முழங்கக் கோதைத்
தோழியர் பலரும் சூழச்
செந்திரு மணாளன் கோயில்
பரிசனம் பலரும் சேர்ந்து
வந்திட மேள தாள
வாத்திய முழங்க மாதோ. 257

பணிந்து வருக'' என்று விடை கொடுத்தான். மனமும் கண்ணும் பரிவுற - உள்ளமும் கண்களும் இன்பம் அடைய.

256. அன்றே ஆழ்வார் கோதையுடன் திருவரங்க யாத்திரை மேற் கொண்டார். தமனியத் தகடு - பொன் தகடு. வேய்ந்த - வேயப்பட்ட, போர்த்தப் பட்ட. தானும் சிவிகைமீது சென்றார்.

257 — 258. ஆழ்வாரும் கோதை நாச்சியாரும் பலவித விருதுகளுடன் புதுவை நீங்கி மதுரையை அடைந்தனர். அமரர் - தேவர். அலர்மழை - மலர் மழை. செந்திருமணாளன் கோவில் பரிசனம் - வடபத்ரசாயி கோவிலைச் சார்ந்த பணியாளர்கள்.

கதுவிஎண் திசையும் போற்றக்
கவின்புகழ் பட்டர் பாடச்
சதுர்மறை யவர்கள் வாழ்த்தச்
சகலசம் பிரமத் தோடும்
முதுமலர்க் குழலார் மூரல்
மதியெனக் குமுதம் விள்ளும்
புதுவைமா நகரம் நீங்கிப்
பொன்மதில் மதுரை புக்கார். 258

பணித்தலை வைப்பின் ஒப்பாய்ப்
பகருதற்கு இணைவே றில்லா
அணிக்கெழு கூடல் தன்னில்
அமர்ந்தமல் லாண்ட தோளன்
மணிக்கழற் பாதம் செங்கேழ்
மலர்க்கரம் நோக்கிக் கண்கள்
தணிப்புற இனிதி னோடுந்
தாழ்ந்தவா றேத்திப் போனார். 259

மதுரையிற் கூட னீங்கி
மாலிருஞ் சோலை யென்னும்
விதுவொடு கதிரோன் சூழ்ந்து
விலங்குற வுயர்ந்த வெற்பில்
சதிர்பெற உறையுஞ் சீர்கள்
ளழகர்பொற் சரணந் தன்னைத்
துதிசெய்து மகிழ்ந்து வாழ்த்தித்
தொழுதன ரகன்று போனார். 260

---

258. 'கதுவி - மொய்த்து. பட்டர் - புலவர்கள். "காதலால் மறை நான்கும் மூன் ஓதிய பட்டனை" என்று திருமங்கைமன்னன் பணிப்பர் (பெரியதிருமொழி). மறையவர்கள் - அந்தணர்கள். (பழங்காலத்தில் புலவர்களும் வேதம் பயின்றிருந்தனர் போலும்) இத்தொடர் மயக்கம் தருகின்றது. மங்கையின் புன்னகையால் குமுதப் பூக்கள் மலரும் புதுவை.

259. கூடலழகரைப் பணிந்தனர். பணித்தலை வைப்பு - ஆதிசேடன் தலையில் உள்ள உலகம். இணை - சமம். மல்லாண்டதோளன் - கூடலழகர். "புத்தூரன் பல்லாண்டு பாட வந்த மல்லாண்ட தோளனடி பணிதல் செய்வாம்" என்று கூடற்புராணம் பேசும்.

260. கூடல் நீங்கிக் கள்ளழகரைப் பணிந்து சென்றனர். சூரியனும் சந்திரனும் விலகிப் போம் அளவுக்கு உயர்ந்த சோலைமலை. விது - சந்திரன். கதிரோன் - சூரியன். விலங்குற - விலக. சதிர்பெற - அழகு உண்டாக. தொழுதனர் - தொழுது; முற்றெச்சம்.

ஏகும்அக் காலை மூடுஞ்
சிவிகையின் இருந்த வாறே
நாகரும் புகழும் சீர்த்தி
நலம்புனை தாதை யோடும்
மேகமொத் திருண்ட கூந்தல்
வெற்பிளந் தனத்துக் கன்னல்
பாகன மொழியாள் சாலப்
பரிவுடன் இதனைச் சொன்னாள். 261

கோதை விருப்பம்

அய்ய!கேள்; நமது மால்வாழ்
அரங்கமா நகரத் துற்ற
துய்யமா மதிளும் பொன்னின்
துலங்குகோ புரமும் சேவை
செய்யநின் மலர்ப்பூங் கண்ணில்
தெரிவுறில் அடியேன் தானும்
வையமீ திழிந்து போற்றி
வணங்குறத் தெரித்தி என்றாள். 262

ஆங்கவள் உரைத்த பின்னர்
அருநெறி கடந்து செல்ல
வீங்கலை மணிசிந் துங்கா
விரிக்கரை யருகி னூடு
பாங்குட னேகுங் காலைப்
பன்மணி மதிளும் வான்மீ
தோங்குகோ புரமுந் தோன்ற
வுரைத்தனன் தோன்றிற் றென்றே. 263

---

261 — 262. சிவிகையில் ஏகும்போதில் கோதை நாச்சியார் தந்தையிடத்தில் "ஐயனே! திருவரங்கக் கோபுரமும் மதிளும் தெரிந்தால் எனக்குத் தெரிவிப்பீராக! யான் வணங்க வேண்டும்" என்று கூறினாள்.

261. சிவிகையின் இருந்தவாறே – பல்லக்கில் இருந்தபடி. நாகரும் - தேவர்களும். கன்னல் - கரும்பு. பாகனைய மொழியாள் - பாகுபோல் இனிக்கப் பேசுகின்ற கோதை. நமது மால் — உரிமைபற்றி இங்கனம் கூறினார். வையமீதிழிந்து - பூமியில் இறங்கி.

263. அவர்கள் காவிரிக்கரையை அணுகும்போது, மதிளும் கோபுரமும் தெரிந்தது. அதனைப் பெரியாழ்வார் கூறினார். வீங்கு - பூரிக்கின்ற. அலை - அலைகளில்,

881
TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY,
Acc No.
Date
CHENNAI-600 008

(வேறு)

அடர்ந்த மும்மல மறுத்துவெம் பிறவியங் கடலைக்
கடந்த தாதையா ருரைமொழி கேட்டலுங் கம்பு
மடந்தை போன்றவக் கோதையும் வையமீ திழிந்து
நடந்து சென்றிட வேண்டுமென் றுளந்தனில் நங்கிதான்.

நயந்த வாற்றினை யுந்தியி னான்முகத் தவனைப்
பயந்த சீரழ கியமண வாளரும் பரிவாய்
வியந்து தன்திருத் தேவியும் மெல்லிய பதவம்
புயந்த னக்கிடர் பொருந்துற வருந்துவ ளென்றே; 265

அரங்கன் திருவிளையாடல்

கஞ்ச நாண்மல ரூடுறும் அளியினைக் கடுப்ப,
பஞ்ச ரத்துறுந் தத்தையிற் பல்லக்கின் வருமவ்
வஞ்சி நேரிடை யாள்திரு மேனியு மருவும்
நெஞ்சி னூடுதன் னிடமணைத் திடநிரு மித்தான். 266

அவன ருட்படி பிறரொரு வருமறி யாமல்
துவரி தழ்க்குயின் மழலையாள் கோயிலுட் டொடர்ந்திட்
டுவரி வண்ணர்தம் பதமல ருவப்பொடும் வணங்கி
நவமு றத்திரு வுளத்திடை நண்ணிவீற் றிருந்தாள். 267

---

264 — 266. தந்தையின் மொழியைக் கேட்ட கோதையார் திருவரங்கத்திற்கு நடந்து செல்ல வேண்டும் என்று கருதினார். அரங்கன், கோதையார் நடந்தால் பாதமலர் வாடும் என்று கருதினான். கருதிய திருவரங்கன், மலரில் உள்ள வண்டைப் போலவும், கூட்டில் உள்ள கிளியைப் போலவும் வருகின்ற கோதை நாச்சியார் பிறரறியாமல் தன்னிடம் வரும்படி சங்கற்பித்தான்.

264. மும்மலம் - மூன்று குற்றம்; காமம், வெகுளி, மயக்கம். (ஆணவம், கன்மம், மாயை என்பதே பெருவழக்கு. ஆணவம் சைவசித்தாந்தத்துக்கே உரிய தத்துவம்.) பிறவியங் கடல் கடந்த தாதை - பிறப்பாகிய கடலைத் தாண்டிய தந்தை (ஆழ்வார்).

265. நான்முகனைப் பயந்த - பிரம்மனை மகனாகப் பெற்ற. அழகிய மண வாளர்; திருவரங்கனின் பெயர். "அழகிய மணவாளர் கொற்றப் புயங்களே" என்பர் திவ்யகவி (திருவரங்கக் கலம்பகம்). பதவம்புயம் — பத + அம்புயம் (தீர்க்க சந்தி பெறாமல் உடம்படுமெய் பெற்றது) - திருவடித்தாமரை.

266. கஞ்ச நாண்மலர் - புதிய தாமரைப்பூ. அளி - வண்டு. பஞ்சரம் - கூடு. தத்தை - கிளி. சீவில்லிபுத்தூர் புராணம் கோதை நாச்சியாரை "ஓங்காரம் எனும் கட்சி உறை பைங்கிளி எனவும். தூங்கார்வமெனும் தேறல் துளிக்கும் கமலத்தே நீங்காது படிந்து ஓகை நிவக்கும் பெடை ஞிமிறு" எனவும் புகழ்ந்து பேசும்.

267. திருவரங்கனின் சங்கற்பத்தின்படியே கோதை நாச்சியார் பிறர் அறியாமல் திருவரங்கம் பெரிய கோவிலை அடைந்து, மணவாளனை வணங்கி, அங்கு வீற்றிருந்தார். துவர் - சிவந்த. குயில் மழலையாள் - குயிலைப் போல் பேசுகின்ற கோதையார்.

ஆங்க ரங்கனோ டம்முறை யவடொடர்ந் தணைந்தாள்
ஈங்கிவ் வேந்திழை யுறுஞ்சிவி கையைப்புய மேந்தித்
தாங்கு வோர்கண்முன் பரமது சமைந்திடா மையினால்
ஏங்கி யீதென மாயமென் றெண்ணிநின் றனரால். 268

கன்று காவுறுஞ் சுரபியிற் கலந்துபின் சிவிகை
யொன்றி மேவுமப் பெரியரென் றுரைக்குமுத் தமனும்
நின்று ளார்தமை நோக்கிநீர் நின்றுள தென்னோ
என்று ரைத்தல்கேட் டாங்கவ ரிம்மொழி யிசைப்பார். 269

இன்ன செய்கையென் றெவ்வித மிதையியம் பிடுவோம்
அன்ன மென்னடை யாரணங் கமர்ந்துள பரந்தான்
முன்னர் போலவிச் சிவிகையின் இலைமுயன் றாய்ந்து
என்ன மாயமென் றேங்கியா மிருந்தன மென்றார். 270

ஆங்க வர்புகன் றுளமொழி செவியின்வந் தணுக
வீங்கெ னோவசதி சயமெனச் சிவிகைவிட் டிழிந்து
பாங்கொ டும்மகள் சிவிகைமேன் மூடுபட் டதனை
வாங்கி யேயுற விருகண்மா மலரில்நோக் கினனால். 271

நோக்க லும்மக ளிலாமையி னுணங்குகேள் வியினான்
போக்கெ னோவெனத் திருவுளம் புழுங்கினன்; துடித்தான்;
ஏக்க மோடயர்ந் திரங்கினன்; நடுங்கினன்; இனைந்தான்;
வாக்கி னாலவன் துயரினை வகுத்திட லரிதால். 272

---

268 — 272. கோதை நாச்சியார் பல்லக்கில் இல்லாததை அறிந்த ஆழ்வார் வருந்தியது பேசப்படுகிறது.

268. சிவிகையைத் தாங்குவோர் - பல்லக்கைச் சுமப்பவர். பரமது சமைத்திடாமையால் - பாரம் இல்லாததால். மாயம் என்று - ஆச்சரியம் என்று எண்ணி. நின்றனர் - நடவாமலிருந்தனர்.

269. கன்று காவுறும் சுரபியில் - கன்றைப் பாதுகாக்கின்ற பசுவைப்போல. ஆழ்வார் நிற்கின்ற காரணம் யாது என்று கேட்டார்.

270. சிவிகை சுமப்பவர் சிவிகையின் பாரங் குறைந்ததைக் கூறினர். பரம் - பாரம். முன்னர்போல் பாரம் இல்லை என்றனர்.

271. மூடுபட்டதனை - மூடியபட்டுத்துகிலை. வாங்கி - எடுத்து. ஆழ்வார் சிவிகையைப் பார்த்தார்.

272. நுணங்குகேள்வியினான் - நுட்பமான வேதத்தை உணர்ந்த ஆழ்வார். "நுணங்கிய கேள்வியர்" என்பர் வள்ளுவர். "நுணங்கிய கேள்வியான் நுவல்வதாயினான்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (யுத்த காண்டம்). கோதையார் சிவிகையில் இல்லாமையை அறிந்த ஆழ்வார் பட்ட துன்பம் பகர முடியாது என்கிறார். "ஒரு மகள் தன்னையுடையேன்" என்று பெரியாழ்வார் இவ்வமயத்தில் பாடியிருப்பார் என்று கருதுகின்றேன்.

ஆய தன்மைய னாகியே பின்னரு மறிவுற்
றேய காரணம் பிறிதிலை யரங்கமுள் எழிலார்
பாய லாய்விடப் பைந்தலை யரவின்மேற் படுத்த
மாய னார்செயுங் களவென மனத்துற மதித்தே; 273

விரைவி னோடுடன் மேவிவந் தவர்களு மேவ
தரையின் மீதுகா னடையொடுஞ் சென்றுதண் டரளந்
திரையெ றிந்துயர் காவிரி கடந்துசெங் கனகம்
நிரைசெய் கோயிலுட் புகுந்தரங் கேசர்முன் நின்றே; 274

ஆழ்வாரின் முறையீடு

இருக ரங்குவித் தடியுற வணங்கிமீண் டெழுந்து
பொருத ரங்கவெண் கடலினோ ராலடை பொருந்தல்
ஒருவி வந்திவ ணரவின்மே லுவப்பொடு முறங்கும்
கருமு கிற்கொழுந் தேயெனக் கட்டுரைத் திடுவான்: 275

அடியன் மேலையம் பிறவியு ளருமையுற் றிழைத்த
நெடிய மாதவப் பேற்றினால் நேர்ந்தவோர் மலர்ப்பூங்
கொடிய னாள்தனைக் கொண்டுநின் பதமலர் குறுகி
முடியு றப்பணிந் தேகுமம் முறைமைகொண் டடைந்தேன். 276

---

273 — 275. இஃது அரங்கன் திருவிளையாடலே என்று உணர்ந்த ஆழ்வார் திருவரங்கம் அடைந்து, அரங்கனிடம் முறையிட்டார்.

273. ஏய – பொருந்திய. பைந்தலை யரவின்மேற் படுத்த மாயன் - அழகிய மணவாளன்.

274. காவிரியைக் கடந்து கோவிலுள் புகுந்து அரங்கர் முன் நின்றார் ஆழ்வார். தண்தரளம் - குளிர்ந்த முத்துக்கள். செங்கனகம் - செம்பொன். "செம்பொன் அரங்கம்" என்பர் திவ்யகவி.

275. ஆலடை பொருந்தல் - ஆலிலையில் உறங்குவது. இவண் - இங்கே. அரவின்மேல் துயிலும் - பாம்பின்மேல் உறங்கும். தளிரின்மேல் துயிலும் போது இருந்த கருணை அரவின் சார்பால் குறைந்ததோ என்பது உள்ளுறை. "பள்ளித் தோழமை பலித்தபடி" என்பர் நம்பிள்ளை. கருமுகிற் கொழுந்தே - கரிய மேகத்தின் கொழுந்து போன்றவனே. "கருமுகில் கொழுந்தெழில் காட்டும் சோதி" என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (பால காண்டம்).

276 முதல் 280 வரை ஆழ்வார் முறையீடு. "தவத்தால் யான் பெற்ற கோதையை உன்னிடம் அழைத்து வந்தேன். கண்ணனாய்ப் பிறந்தபோது நீ வெண்ணெய் களவாடியது போல் இன்று பெண்ணைக் களவாடினாய். இது முறையா? இப்படி நீ செய்தால் எவர் உன்னை வணங்க வருவார்?

276. இதனைத் திருமகள் அறிந்தால் உன்னைப் பரிகசிப்பாள். ஆதலால் என் மகளைக் காண்பியும். பிரம்மனுக்கும் சிவனுக்கும் எட்டப்படாத முதல்வனே" என்று பகர்ந்தார்.

அடைந்து ளேன்மல ரடியரு கணுகுமுன்பு அளிகள்
குடைந்த ருந்துதேன் பூங்குழற் கோதையைக் குறுகி
முடைந்து யர்ந்துறி யாச்சியர் முறையடுக் குறும்பால்
கடைந்த வெண்ணையிற் களவிழைத் திடுவது கணக்கோ? 277

கணக்க லாமலென் மகள்தனைக் கவர்ந்துள துணரின்
வணக்க மோடலை கடலுடை வையகத் திடையே
மணக்கு மாமலர்க் குழன்மடந் தையருமா டவரும்
இணக்க மோடுவந் தெவருனது இணையடி தொழுவார்? 278

வடுத்த விர்ந்தமா மதிமுகத் திருவினோ டுரைக்கின்
அடுத்தி லாதென நகைசெய்வ ளாதலாற் களவில்
எடுத்து வந்தவென் மகள்தனைக் காண்பியு மென்னாக்
கடுத்த சிந்தையான் போலுளத் தன்பொடுங் கழறி; 279

ஓதி மாமறை முறைமையி னொளிர்மல ரவனும்
பாதி மாமதி சூடியும் பணிந்துகண் டறியாச்
சோதி யேகரி மூலமாம் பெயர்சொலி யழைத்த
ஆதி யேயெனத் துதிசெய்தாங் கெதிரில்நின் றனனால். 280

---

277. நெடிய மாதவப் பேற்றினால் - பெரிய தவத்தின் பாக்கியத்தால். பூங் கொடியனாள் - கொடி போன்ற நாச்சியார் கணக்கோ? முறையோ? பெண் ணிழந்தார் பக்கல் கண்ட பேச்சைக் கண்ணிழந்தார் பக்கலிலும் காணலாம். "மூன்றுகண்ணுடையாய் அடியேன் கண்கொள்வதே கணக்கு வழக்காகில்" என்பர் கண்ணிழந்த நிலையில் திருவாரூரர். ஆய்ச்சியர் முறையடுக்குறும் பால் கடைந்த வெண்ணெய் - ஆயர் மகளிர் கிரமமாக அடுக்கி வைத்த வெண்ணெய். கிரமமாவது இன்னின்னார்க்கென்று வைப்பது. வெண்ணெயின் - வெண் ணெயைப் போல.

278. மகள்தனை - என் புதல்வியை. கவர்ந்தது - நீ களவாடியது. உண ரின் - தெரிந்தால். உனது இணையடி எவர் தொழுவார் என மாற்றுக.

279. வடுத்தவிர்ந்த - குற்றமில்லாத. திருமகளுக்கு அடைமொழி, மதிக்கு அன்று. மாமதித்திரு என்பது பெயராக நின்றது. (நச்சர், இங்கனம் உரை வழங்க வேண்டும் என்பர்.) நகைசெய்வான் - பரிகசிப்பான். "நப்பின்னை காணிற் சிரிக்கும்" என்றவர் அல்லவா? (பெரியாழ்வார் திருமொழி — வெண்ணெ யளைந்த என்ற பதிகம் காண்க). திருமகள் சிரிப்பாள். அவள் சிரிப்பதற்கு முன் என் மகளைக் காண்பியும்.

280. துதிமொழிகள். மறை ஓதி ஒளிர் மலரவன் - வேதத்தை ஓதியதால் ஒளிபெற்ற பிரம்மன். மதிசூடி - சந்திரசேகரன் (சிவபிரான்); மதியால் ஒளி பெற்ற சிவபிரான். ஒளிமயமான சிவனுக்கும் பிரம்மனுக்கும் எட்டாத சோதியே. கரி - கஜேந்திரன்.

அரங்கன் மாற்றம்

நின்ற வில்லிபுத் தூரவ னிகழ்த்துரை செவிக்குள்
ஒன்ற லோடுநெஞ் சுருகுறப் பெருகுவப் புடனே
கன்று கொண்டுயர் விளவினை யெறிந்தகார் முகிலும்
நன்று நன்றென விளநகை தோன்றிட நவில்வான். 281

ஒன்று மஞ்சலை யுன்மக ளுந்தனி நடந்திங்
கின்று றும்படி நினைந்தன ளெண்ணுமம் முறையே
சென்று றிற்பதஞ் சிவப்புறு மெனத்தெறும் புலனை
வென்று ளாய்வருந் தாவரு வித்தனம் வெகுளேல். 282

என்ன வேபல நன்மொழி புகன்றெழில் பெறுநின்
கன்னி யிங்குறை கின்றனள் காண்கெனக் காட்ட
அன்ன மாதினைக் காண்டலு மானந்த முடனே
பின்னு மோர்மொழி யாங்கருண் மகிழ்வுறப் பேசும். 283

முறைப்படி மணக்க மொழிந்தனர் ஆழ்வார்

மாய னே!திருப் பாடியுள் வளருமந் நாள்வாய்
ஆய ரீன்றரு ளிளமுலை யனநடை யவரை
நேய மோடடைந் திணைந்துள கள்ளமா நெறிபோல்
நாயி னேன்றிரு மகளையு நயந்திட நினையேல். 284

---

281 — 283. சுரியமேகம் போன்ற அரங்கன், ஆழ்வாரை நோக்கி, "அஞ்சாதே, உன் மகள் நடந்து இங்கு வரக் கருதினாள். அவள் பாதம் பூமியில் நடந்தால் சிவக்கும் என்று கருதி அவள் வருந்தாதபடி வருவித்துக்கொண்டோம்; சினங்கொளாதே!" என்று கூறிக் கோதை நாச்சியாரைக் காண்பித்தான்.

282. தெறும் புலனை - ஞானங்களை அழிக்கின்ற ஐந்து புலன்களை. வெகுளேல் - கோபிக்காதே. அரங்கன் கோதையாரைக் காண்பித்தான்.

284 — 286. ஆழ்வார் மாற்றம். "மாயனே! ஆயர் மகளிரை மணந்தது போல் என் மகளைக் களவு மணத்தால் விரும்பாதே. உலகம் அறிய மணப் பந்தலில் அக்கினி சாட்சியாக மங்கல நாண் புனைந்து, பின் கூடுக. இதுவே முறையாகும். புதுவை வந்து நீ என் புதல்வியைத் திருமணம் செய்துகொள். அதனைக் காண விரும்புகின்றேன்" என்று கூறித் திருவடி பணிந்தார் ஆழ்வார்.

284. கள்ள மாநெறி - களவுத் திருமணம். நயந்திட - விரும்ப.

உலகம் யாவினு முறைபவ ரொவ்வுமவ் வகையாய்ப்
பலருங் காண்குறப் பந்தருட் பழமறை விதியின்
அலகின் மாதவர் வளர்க்குமவ் வனலின்முன் னிலையில்
இலகு மங்கலம் புனைந்தபின் னிணங்குத லியல்பாம். 285

ஆத லாலடி யேனுறை புதுவைவந் தணைந்திம்
மாத ராள்தனை விதிமுறை வதுவைசெய் திடுமக்
கோதி லாமணக் கோலமுட் குளிர்ப்புறக் காணுங்
காதல் கொண்டுளே னெனக்கழல் பணிந்துநின் றனனால். 286

உலகறிய மணப்போம்

நின்ற வன்திரு மாமுக நோக்கிநீ டுலகோர்
ஒன்று மாறுரைத் தனையலாற் பிறிதுரைத் திலையால்
நன்றி தென்றுள முவந்தனம் புதுவைமா நகரில்
சென்ற டைந்துநற் றினந்தனிற் றிருமணம் புரிவேம். 287

மங்க லந்தரித் திடுதலுக் குன்மகள் தனக்குப்
பங்கு னித்திரு வுத்திரப் பகற்பொருந் துறுமன்
றங்கு வந்துநா மடைகுது மதற்குமுன் பாக
இங்கி ருந்துநின் சிறுவியோ டேகென விசைத்தே; 288

---

285. உலகம் ஒவ்வு மவ்வகையாய் - உலக மனிதர்கள் அங்கீகரிக்கும்படி. அனலின் முன்னிலையில் - வேள்விக் கனலுக்கு எதிரில். மங்கலம் - மங்கலநாண். "மங்கல அங்கி வசிட்டன் வகுத்தான்" என்பர் கவிச்சக்ரவர்த்தியார். ஈண்டு இராமபிரான் பிராட்டிக்கு மங்கலநாண் புனைந்ததைக் குறிப்பாகக் காட்டினார். "மற்றுள அணிகள் காண் உன் மங்கலம் காத்த" என்பர் சுந்தர காண்டத்தில்.

286. விதி முறை - சாத்திரங்கள் விதித்தபடி. உள் குளிர்ப்புற - மனம் குளிர்ச்சியடைய.

இனி, அரங்கன், பங்குனி மாதத்தில், தான் திருமணம் செய்ய வருவதாகவும், இப்போது கோதையுடன் புதுவை செல்க என்பதாகவும் கூறி, விருதுகளுடன் ஆழ்வாரையும் நாச்சியாரையும் விடை கொடுத்து விடுத்தது தெரிவிக்கப்படுகிறது.

287. நீடு உலகோர் ஒன்றுமாறு - பெரிய உலகில் உள்ளவர்கள் உடன் வரும்படி. பிறிதுரத்திலை - வேறொன்றும் கூறவில்லை. நன்று இது என்று உளம் உவந்தனம் - இது நன்று என்று மனம் மகிழ்ந்தனம். நன்று - நன்மை (அறம்).

288. மங்கல நாண் புனைவதற்கு ஏற்ற நாள் பங்குனி உத்திரம். அன்று வருவோம். உன் மகளுடன் இன்று செல்க. சிறுவி - மகள். புது வழக்கு. சூடாமணி நிகண்டு இச் சொல்லை உடன்படுகின்றது. "சிறுவி புத்திரியினோடு சிறந்திடும் தநயை" என்று கூறும் (மக்கட்பெயர்.)

வில்லிபுத்தூர் மேவுதல்

விடைய ளித்தலுங் கோயிலில் மேவுவோர் தமக்கும்
படைநெ டுங்கணா ரொடுப கவர்கள் தமக்கும்
புடைதி ரண்டுபோ யிவர்தமைப் புதுவையின் விடுத்திங்
கடையு மென்றுரைத் தவற்கிரு சிவிகையு மளித்தான். 289

அளித்த தன்மிசைக் கோதையும் பெரியஆழ் வாரும்
களிப்பொ டும்புகத் துந்துமி முழக்கியே கடிதின்
தளிர்த்த பூமழை சொரிந்திடச் சாமரை தயங்க
விளித்த சங்கின முரசொலிக் கறங்கின மென்மேல். 290

ஆட கத்தியாழ்த் தும்புரு நாரத ரிசைத்துப்
பாட வின்னிசை முனிவரர் பரிந்துதோத் திரிக்கச்
சூட கக்கர மடந்தையர் சோபனஞ் சொல்ல
நாட கத்தொழில் வல்லவ ரெதிருற நடிப்ப; 291

விருதொ லித்திடப் பட்டர்கள் புகழவே நுலகில்
பொருவில் வேங்கடப் பொருப்பனு முடன்சென்று புகுதக்
குரும ணிச்செழுங் கோயில்விட் டுயர்சுர நதியுங்
கருது காவிரி யெனுந்திரு நதியினைக் கடந்தே; 292

---

289. திருவரங்கன் தன் பரிவாரத்தாரிடம் "ஆழ்வாரையும் கோதை நாச்சியாரையும் புதுவையில் விட்டுவிட்டு வாருங்கள்" என்று இரண்டு சிவிகைகளை வழங்கினான். பகவர்கள் - திருமாலைப் போற்றும் முனிவர்கள். முக்கோற் பகவர் என்பது பெருவழக்கு. "பக்தர்களும் பகவர்களும் பழமொழிவாய் முனிவர்களும்" என்பர் பெரியாழ்வார்.

290 முதல் 296 வரை ஆழ்வாரும் கோதை நாச்சியாரும் புதுவையை அடைந்ததைப்பற்றிப் பேசப்படுகின்றது.

290. ஆழ்வாரும் நாச்சியாரும் சிவிகை ஏறியதும் தேவர்கள் மலர் மழை சொரிந்தனர். துந்துமி என்ற வாத்தியம் முழங்கிற்று. சாமரைகள் வீசப் பட்டன. சங்கினம் ஒலித்தன. முரசுகள் முழங்கின.

291. தும்புரு நாரதர் யாழிசைத்தனர். சூடகக் கர மடந்தை - வளையல் அணிந்த கைகளையுடைய பெண்கள். "சூடகமே தோள் வளையே" என்பர் கோதையார்.

292. பட்டர்கள் - வேதம் உணந்தவர்கள். சுர நதியும் கருது காவிரி - கங்கையும் போற்றும் காவிரி. "கங்கையிற் புனிதமாய காவிரி" என்பர் தொண்டரடிப்பொடியாழ்வார். கோதை நாச்சியாரைப் பின்பற்றித் திருவேங்கடமுடையானும் சென்றனன்.

சோழ நாடது பின்படத் துருவிப்பாண் டியன்றான்
வாழு நாடுறு மாலிருஞ் சோலைவந் துறலும்
ஆழு மன்புட னத்தலத் துறையனை வோரும்
சூழ வந்துப சரித்திடக் கோயிலுள் தொடர்ந்தே; 293

அழகர் பூந்திரு வடிகளாம் அம்புய மதனைக்
குழையு நெஞ்சொடுந் துதிசெய்து வணங்கியே கொடுத்த
தழைது ழாயுறு தீர்த்தப்பிர சாதமு மருந்தி
விழைவி னோடுமத் தலத்திடை யன்றுவீற் றிருந்தே; 294

மறுதி னந்துடர்ந் தழகரு முடன்வர மதுரை
யுறுத லோடுமத் தலந்தனி லுறைபவ ரெவரும்
குறுகி வந்தெதிர் கொண்டிடக் கூடலுண் மருவி
நறும லர்பொரு மழகிய நம்பிதாள் வணங்கி; 295

மன்ற லார்வன படிகநீ ராங்கவர் வழங்கித்
துன்று நற்பிர சாதமு மளித்திடத் துய்த்தாங்
கன்று வைகியவ் வழகரு முடன்கலந் தணுகச்
சென்ற டைந்தனர் புதுவையின் மற்றைய தினமே. 296

ஆங்கு றும்வட பத்திர சாயியம் புயச்செம்
பூங்க ழற்றொழு தரங்கர்பாற் போயடி பணிந்திட்
டீங்கு வந்தன மெனநடந் துளவெலா மெடுத்துப்
பாங்கொ டும்மவர் செவியுறப் புதுவையன் பகர்ந்தான். 297

---

293 — 294. ஆழ்வாரும் நாச்சியாரும் சோழநாடு கடந்து பாண்டிய நாட்டையடைந்து திருமாலிருஞ்சோலை அழகனை வணங்கி, அன்று அங்குத் தங்கினர். தழைதுழாய் - செழிப்பான திருத்துழாய்.

295 — 296. மறுநாள் அழகருடன் மதுரை அடைந்து, மல்லாண்ட தோளனை வணங்கி, அன்று தங்கி, மறுநாள் கூடலழகருடன் புதுவையை அடைந்தனர்.

295. கூடல் - மதுரை.

296. படிகநீர் - கற்பூரங் கலந்த தீர்த்தம்.

297. கோவிலுக்குப் போய் வடபத்ரசாயியை வணங்கிய ஆழ்வார் நிகழ்ந்த வற்றை விண்ணப்பித்தார். பாங்கொடு - பக்குவமாக.

கேட்ட வாறதாய் நடத்துக கேள்வியோ யெனவச்
சூட்ட ராவணை யவன்சொலக் களித்தனன் துடர்ந்த
கூட்டம் யாவர்க்கும் தீர்த்தப்பிர சாதமுங் கோயின்
மாட்டு ளோரளித் திடக்கொண்டு மாளிகை கலந்தார். 298

வேங்க டாசல மதன்மிசை விளங்கிவாழ் பவரும்
ஓங்கு மாலிருஞ் சோலைவெற் புகந்துறை பவரும்
தீங்கி லாச்செழுங் கூடலிற் சேர்ந்துவை குவரும்
தாங்கள் தாங்களுற் றுறைதலஞ் சார்ந்துவை கினரால். 299

அருந்து மாறதா யணிகெழு மரங்கமா நகரத்
திருந்து வந்துளோர்க் கருங்கடல் கடைந்திட வெழுந்த
மருந்து நேரென அறுசுவைப் பதார்த்தம தோடும்
விருந்து செய்துசெய் வெகுமதி வழங்கியே விடுத்தான். 300

விடுத்த லோடுமாங் கவர்களும் விடைகொடு விசும்பின்
எடுத்த பொன்மதி ளரங்கர்முன் னெய்திப்பாம் பணையில்
படுத்து ளான்பதம் பணிந்துதாம் போய்வரு மளவும்
அடுத்த வாறெலாம் அறைந்துதம் மாளிகை யடைந்தார். 301

---

298. கேட்டபடி நடாத்துக என்றான் பிரான். அனைவரும் தீர்த்தப் பிரசாதம் பெற்றனர். அனைவரும் வீடு திரும்பினர். சூட்டராவணையான் - பாம்பில் உறங்கும் பிரான். சூடு - உச்சிக்கொண்டை. "சூட்டுவா ளராவணைத் தோன்றல்" (பாகவதம்).

299. திருவேங்கடமுடையானும், சோலையழகனும், கூடல் மல்லாண்டதோன்றலும் தங்கள் தங்கள் பதியினை அடைந்தனர்.

300. ஆழ்வார் திருவரங்க நகரிலிருந்து வந்த பரிசனங்கட்கும், பகவர்கட்கும் அமுதுபோன்ற விருந்து வழங்கிச் சன்மானமும் கொடுத்து அனுப்பினார். கடல் கடைந்திட எழுந்த மருந்து - அமிர்தம்.

301. பரிசனத்தார் திருவரங்கம் அடைந்து பெருமானிடத்தில் நிகழ்ந்தவற்றை விளம்பித் தங்கள் தங்கள் திருமாளிகையை யடைந்தனர். விசும்பின் எடுத்த - ஆகாயம் அளாவிய.

(வேறு)

அங்கவ ரம்முறை யகன்று போயபின்
கொங்குறு மலர்க்குழற் கோதை யென்பவள்
சங்குறை கரவரங் கேசர் சாற்றுமப்
பங்குனி யுத்திரம் பலிப்பதென் றென்றும்; 302

செங்கம லம்பல சிறக்கப் பூத்ததோர்
மங்குலி னழகிய வடிவந் தாங்கினோன்
இங்குவந் துறுமந்நா ளெந்தநா ளென்றும்
கங்குலும் பகலுந்தன் கருத்து ளுன்னியே; 303

இன்னவா றன்றியே வேறொன் றெண்ணிலா
தன்னவள் வைகவவ் வாறு தந்தையும்
தன்னுள மதனிடை தரித்து வைகினான்
பின்னருற் றடைந்தமை பேசு வாமரோ. 304

ஆழ்வார் மணநாள் அறிதல்

ஒருபக லதனிடை யுவப்பு ளத்தொடுந்
திருநகர் வாழுறுஞ் சீர்கொள் வைணவர்
பெருமிதம் பொருந்துமப் பெரிய ரின்புற
மருவுமா ளிகையிடை வந்து ளார்களால். 305

வந்துளோர் பெரியர்தாள் வணங்க லும்மவர்
தந்தம தடிகளைத் தானுந் தாழ்ந்தபின்
அந்தவே தியரருந் தவனை நோக்கியே
இந்தவா சகமெடுத் தியம்பு வார்களால். 306

---

302 — 307. கோதை நாச்சியார் பங்குனி உத்திரம் எப்போது வரும் என்று எதிர்பார்த்தவண்ணம் இருந்தார். ஒரு நாள் சில ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆழ்வாரை அடைந்து அரங்கர் நும் மகளைத் திருமணம் செய்யும் நாள் நாளை என்றனர்.

302. கொங்குறு மலர் - மகரந்தப் பொடிகளைப் பெற்றுள்ள மலர். சங்குறை கர அரங்கேசர் - சங்கேந்திய திருவரங்கன். "சங்குறை கரத்தொரு தனிச் சிலை தரித்தான்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள். பலித்தல் - நேர்தல்.

303. "பங்கயம் பூத்த மேகம் போன்று அழகிய வடிவுடைய அரங்கன் இங்கு வருவதும் என்றோ" என்று கங்குலும் பகலும் கருதியபடி இருந்தார் கோதையார். மங்குலின் - மேகம் போன்ற.

305. ஒரு பகல் - ஒரு நாள். "பகலே நாள்" என்பது சூடாமணி நிகண்டு. பெரியார் - ஆழ்வார்.

306 — 307. வந்தவர் ஆழ்வாரை வணங்கினர்; ஆழ்வாரும் வணங்கினர். இது வைணவ மரபு. உன் மகளைத் திருவரங்கன் மணம் புரியும் நாள் நாளைய

அய்ய!நின் தனையளை யரங்கர் மாமணஞ்
செய்யுநாள் நாளையென் றவர்கள் செப்பவத்
துய்யமா மொழியது துஞ்சி யெஞ்சினோர்
மையிலாச் செவியுறு மருந்து போன்றதால். 307

ஆயமா தவர்களம் மொழிய றைந்துதம்
தூயமா ளிகையிடைத் துடர்ந்து வைகினார்;
ஏயவப் பெரியரு மிதய மூடெழும்
நேயமோ டிவ்வகை நிரப்ப லுற்றனன். 308

நகரவலங்காரம்

தேனைவென் றுளசொனஞ் சிறுவி கோதையாம்
மானையவ் வரங்கர்செய் வதுவை நாளையால்
ஏனைய ரின்னக ரெழில்செய் வாறதாய்
ஆனைமேன் மணிமுர சறையு மின்றெனன். 309

அந்தவா சகஞ்செவி யுறவரங் கம்வாழ்
சேர்திரு மகிணனைச் சேர்ந்த ழைத்திட
முந்துற வேகுவான் போன்மு ழங்கலைச்
சிந்துவின் மறைந்தனன் தினஞ்செய் வோனுமே. 310

தினம் என்றனர். அவர்களின் மொழிகள், இறந்தவர் செவியில் ஊற்றிய மருந்து போன்றிருந்தது. துஞ்சி - இறந்து. எஞ்சினோர் - உடலோடு இருப்பவர். செவியுறு மருந்து - செவியில் ஊற்றிய மருந்து.

308 — 309. பெரியாழ்வார் நகரை அலங்கரியுங்கள் என்று ஊருக்கு யானை மேல் முரசு அறையச் செய்தார். இதயம் ஊடெழும் - உள்ளத்தில் எழுகின்ற. நிரப்பல் உற்றனர் - செய்யத் தொடங்கினர். எழில்செய் வாறதாய் - அலங்கரிக்கும்படி.

310. அரங்கனை அழைத்து வருவதற்குச் செல்பவன்போல் சூரியன் மறைந்தான். திருமகிணன் - இலக்குமியின் கணவன். ஏகுவான் போல - செல்பவனைப் போல. தினம் செய்வோன் - பகலைச் செய்கின்றவன் (சூரியன்). தினகரன் என்ற வடமொழி இங்கனம் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. சிந்து - கடல்.

அன்னவன் மறையமா முரசம் ஆனைமேல்
மன்னுசீர்க் கோதைக்கும் அரங்கற் கும்மணம்
பின்னைநா ணகரணி பெருக்கு மின்னெனப்
பொன்னகர் முழுவதும் புகுந்து சாற்றினார். 311

முரசறை தரவெழு முழக்கங் கேட்டலும்
விரசுமம் மாணகர் மேவு மாந்தரும்
பிரசமென் கிளவியும் பேதை யார்களும்
கரைசெயற் கருங்களிக் கடலுள் ஆழ்ந்தனர். 312

கோதையாள் வதுவையைக் குறித்துப் பூந்திரு
மாதைமார் பணியரங் கேசர் வந்திடுஞ்
சேதியை யாவருந் தெரியு மாறுமுன்பு
ஓதவந் தெனஇன னுதைய மாயினான். 313

மதுகமழ் மலர்த்திரு மகளை மற்றொரு
சதுர்பெற வணியுமத் தன்மை யாமெனப்
புதுவையென் றுரைக்குமப் பொன்னின் மாநகர்
கதிர்செய முறவலங் கரிப்ப தாயினார். 315

கடலிடை யுறுதுயில் கழித்து வந்தொரு
படவர வணைமிசை பள்ளி கொண்டுளான்
வடபெருங் கோயிலை வகைவ கைபுரிந்
தடவுடன் புதுக்கினர் அமுது துன்னவே. 316

311—312. பின் நாள் - மறுதினம். நகரணி - நகரின் அழகை. பெருக்கு மின் - அதிகப்படுத்துங்கள்.

312. பிரச மென் கிளவி - தேன் போன்று பேசும் நாச்சியாரும். கரை செயற்கரிய - கரையிட முடியாத.

313. திருமணச் செய்தியை உலகுக்கு உணர்த்துபவன் போல் சூரியன் உதித்தனன். இனன் - சூரியன். "விண் இனன் பல கோடி போல் வடிவொடும்" என்று அரிசமய தீபம் பகரும் (நாதமுனிகள்).

315. இயல்பாகவே அழகுமிக்க திருமகளை அலங்கரிப்பது போல் மக்கள் புதுவையை அணிசெய்தனர்.

316. துயில் கழித்து - உறக்கத்தை ஒதுக்கி விட்டு. பட அரவு அணை மிசை - ஆதிசேடன்மேல். அடவு - முறை, அடைவு என்ற சொல் எதுகை நயம் கருதி அடவு என்றாயிற்று.

அந்தர வுலகினை நகைத்த லாமென
மந்தர மனையசீர் மாட மாளிகை
சுந்தரம் பெறவடி முடி துடங்கியே
சந்திர னொளியைவெல் சாந்து தீற்றுவார். 317

ஒத்திட வாயின்முன் புயர்ச்சி யெய்திட
முத்தணி பந்தர்கண் முடுகிப் போடுவார்;
கொத்துறு மலர்ச்சரங் குலவத் தூக்குவார்;
வைத்திழை மணிக்கொடி மலிய நாட்டுவார். 318

பூரண பொற்கல சம்பொ ருத்துவார்;
ஏரணி பாலிகை யினம்நி ரப்புவார்;
காரணி மகரதோ ரணங்கள் கட்டுவார்;
சீரணி பதுமைகள் செழியத் தூக்குவார். 319

பொன்னிறச் சுளைபலா முதற்பு கன்றிடும்
மன்னுநற் சுவைகனி வகைகள் தூக்குவார்;
கன்னலும் வாழையுங் கமுகும் நாட்டுவார்;
பன்னக மணிவிளக் கொளிப ரப்புவார். 320

அரைபடு கலவைசேர்ந் தமைத்த சாந்தினால்
தரையுற மெழுகுவார்; சார்ந்த பாங்கெலாம்
நிரைநிரை விளங்குகோ லமும்நி ரப்புவார்;
விரைபனி நீர்தெரு வீதி வீசுவார். 321

ஆடைக ளழகுற வணிகு வார்;புதுப்
பாடகஞ் சரிவளை பதக்க மாதிபல்
பூடண வகைகளும் பொருந்தப் பூணுவார்;
ஏடவிழ் நறுமல ரிலங்கச் சூடுவார். 322

---

317. மந்தரமனைய - மந்தரமலை போன்ற. சாந்து - சுண்ணாம்பு.

319. மகரதோரணம் - தோரண வகை. "மதிதொட நிலைத்துயர் மகர தோரணம்" என்பர் கவிச்சக்ரவர்த்திகள் (பால காண்டம்). பாலிகை - நவ தானியங்களின் இளம் பயிர் பெற்றுள்ள தாழி. "பூரண கும்பமும் பொலம் பாலிகைகளும் என்பர் சாத்தனார் (மணிமேகலை).

321. சந்தனத்தினால் தரை மெழுகுவார். கோலத்தைப்பற்றிக் காவியங் களுள் இந்த நூலில்தான் காண்கிறோம். "தரை மெழுகிக் கோலம் இடு" என்பர் குமரகுருபரர் (மீனாட்சியம்மை குறம்).

கந்தமார் புனுகுபல் கலவை சேர்த்தியே
சந்தனக் குழம்புடல் தணியப் பூசுவார்;
சிந்துரஞ் சூரணந் திருமண் சாத்துவார்;
சுந்தர மாயிரந் துலங்கக் காணுவார். 323

அன்னமந் தணர்தமக் கருத்து வார்;புவி
பொன்னிவர் மணியுடைப் பூட ணம்பசு
இன்னவாம் பலபல தான மேற்றுளோர்
உன்னிய முறையவ ருவப்ப நல்குவார். 324

இன்னவை யாவையு மெழில்பெ றும்படி
பொன்னக ரொப்பவப் புதுவை மாநகர்
தன்னையாங் கவரலங் கரித்த தன்மைகள்
பன்னநா வாயிரம் படைத்தி லேனரோ. 325

விட்டுணு சித்தன்மா ளிகைவி ளங்குற
மட்டிலா வைகுந்த மண்ட பந்தனக்
கெட்டுணை யாயினும் எழுவி லாமலே
திட்டமாய்ச் செய்முறை யாவுஞ் செய்தபின்; 326

பணங்கெழு பணித்துயில் பயில ரங்கனார்
குணஞ்சிறந் துடையபூங் கோதை யாள்தனை
மணம்புரி வதற்குச்செய் வகைகள் யாவையும்
இணங்குமா றவரவ ரியைவித் தாரரோ. 327

பேரிகை மத்தளம் பிறங்குதா ளங்கள்
தாரைகள் திருச்சினம் சங்க மற்றுள
தூரிய வகையெலாந் தொனிக்கு மோதையால்
வாரியின் முழக்கமும் மறைந்தொ ளித்ததால். 328

---

324. புவி - பூமி (பூதானம்). மணியுடைப் பூடணம் - மணிகள் பதித்த ஆபரணம் (ஆபரண தானம்). பசு - கோ (கோதானம்). பல்வகையான தானங்கள் வழங்கப்பட்டன.

326. விட்டுணுசித்தரின் திருமாளிகையைப் பரமபத அழகிற்கு எள்ளளவும் குறையாதபடி அலங்கரித்தனர். எள் + துணை = எட்டுணை.

வாடுற விடைதன வரைகு லுங்குற
நாடக மாதர்கள் நடம்ப யின்றிட
சூடுபூங் குழலினர் சோப னஞ்சொலப்
பாடகர் கின்னர கீதம் பாடவே. 329

மணங்காண வந்தவர்

இங்கிவ ரிவ்வண மிசையு மெல்லையில்
பொங்கரீன் றருளிய பூவை யாளிடந்
தங்கவெள் ளிடபமாம் ஊர்தி தன்மிசை
சங்கரன் மகிழ்வொடுஞ் சார்ந்து ளானரோ. 330

தேவரும் பணிதிருத் தேவ னுந்தியம்
பூவரு மெண்புயப் புனித நான்முகன்
நாவரு மயில்விழி நங்கை தன்னொடும்
தூவிசே ரனமிசை வந்து தோன்றினன். 331

அந்தர வுலகினர்க் கரச னாகிய
இந்திரன் சீரயி ராணி யென்னுமச்
சுந்தர மதிமுகத் தோகை யாளொடுந்
தந்தவெண் கரிமிசை சார்ந்து ளானரோ. 332

மற்றுள முனிவர்கள் சித்தர் வானவர்
வெற்றிவே லரசர்விஞ் சையர்க ளாதிதம்
பொற்றொடி யவரொடும் புதுவை மாநகர்
முற்றிலு மிடங்கொளா முறைவந் தீண்டினர். 333

---

330. சிவபிரான் நந்தி வாகனத்தில் உமாதேவியோடு வந்தான். பொங்கர் ஈன்றருளிய - மலையரசன் பெற்ற. பூவை - உமையம்மை. இடபமாம் ஊர்தி - ரிஷப வாகனம். பொங்கர் - மலை. "பொருப்பு, பொங்கர், பொறை, கோ, பூதரம், பொற்றை, நாகம், சிலை பொதியும் மலைப்பெயர்" என்பது பிங்கலம்.

331. பிரமன் நாமகளுடன் அன்னவாகனத்தில் வந்தான். எண்புயப் புனிதன் - எட்டுத் தோள்களைப் பெற்ற தூயவன். நாவரும் அயில்விழி நங்கை - நாமகள். "நாவீற்றிருந்த புலமாமங்கை" என்பர் திருத்தக்கதேவர் (சிந்தாமணி).

கோதையாரின் மணக்கோலம்

இங்கிவர் யாவரு மீண்டி யுற்றபின்
வெங்கொலைத் தொழில்வல வேற்கண் கோதையைச்
சங்கரி கலைமகள் சசியிம் மூவரும்
மங்கலக் கோலஞ்செய் வான்தொ டங்கியே; 334

கங்கையே முதலெழு கடவுண் மாநதி
தங்கிய தீர்த்தங்கள் தமைக்கொ ணர்ந்ததில்
பொங்கலை யாழியின் புனித நீர்கலந்
தங்கவர் மஞ்சன மாட்டி னார்களால். 335

முகமலர் மஞ்சளின் முயங்கப் பூசியே
அகில்முத லிந்தன மனலி லிட்டதின்
புகைகொடு முகிற்குழல் புலர்த்திக் கைவிரல்
நகமதிற் கோதிநன் குறமு டித்தனர். 336

ஈரநீத் துயர்ந்தபட் டிலங்கச் சாத்திநூல்
நேரிடை வருந்துற நிமிர்ந்த கொங்கையில்
வாரணிந் திருகுற வலிந்து வாளைவேல்
கூர்விழிக் கஞ்சனங் குளிர இட்டனர். 337

மறைமுதல் வன்குறி வைத்த தென்னவே
கறையின்மா மதிமுகங் கவினு மாறிளம்
பிறையெனத் திருமணும் பிறங்கச் சிந்துரம்
நிறைதிருச் சூரணம் நிரம்பச் சாத்தினார். 338

---

334. கோதை நாச்சியாரை, உமையும், கலைமகளும், இந்திராணியும் அலங்கரித்தனர்.

335. கங்கை முதலாகிய தீர்த்தங்களில் கடல் நீரைக் கலந்து நாச்சியாரை நீராட்டினர்.

336. கோதையாரின் ஈரமான குழலை அகில் முதலியவற்றின் புகையால் புலர்த்தினர். "சுமையிரும் காவின் முகில் தவழ்ந்தென்னச் சுரிகுழற்கு அகிற்புகை கமழ்த்தி" என்பர் உமறுப்புலவர் (சீறாப்புராணம்). பிறகு கோதி முடித்தனர்.

338. இளம் பிறைபோல் திருமண்ணும், திருச்சூரணமும், சிந்துரமும் சாத்தினார். "நேயமாகிய மடந்தைதன் நெற்றியின் அணிந்த தூய நாமம் மூன்றாம் பிறையாமெனத் துலங்க" என்று அருளாளதாசர் பகர்வர் (9 ஆயிரம் பாகவதம்).

பொன்னினா லமைந்திடும் புதிய பாவையின்
வன்னமார்ந் தொளிபெற வரையு மாறெனப்
பன்னறு நவமணி யிழைத்த பைம்பொனின்
மின்னுபல் பூடணம் விளங்கச் சாத்தினார். 339

கந்தமோர் காவதங் கமக மத்தசெஞ்
சந்தனம் புனுகுசவ் வாத ணிந்துபின்
சுந்தர நறுமல ரலங்கல் சூட்டினார்
அந்தரத் தவர்களு மதிச யிப்பவே. 340

இன்னவை யாவையு மியைந்த பின்றிருப்
பொன்னரங் கந்துயில் புரியு நாரணன்
துன்னுமந் நெறிகளைத் தூய கண்களால்
அன்னவர் நோக்கியங் கிருக்கு மாயிடை; 341

பிரம்மன் வினா

மட்டவிழ் தாமரை மலரின் வைகயன்
விட்டுணு சித்தனை விருப்பின் நோக்கியே
அட்டதிக் கினும்புக ழரங்கம் வாழுறும்
வட்டச்செந் திகிரிமால் வருவதென் றென்றான். 342

என்றலு மணவினை யியற்று மங்கலம்
ஒன்றுபங் குனிமதி யுத்தி ரம்மெனும்
இன்றுவந் தெய்துவ மென்ன யானடை
அன்றுரைத் தருளினா ரரங்க ரென்றனன். 343

---

339. பொன்னினால் அமைந்த பாவையை ஒளிபெற அலங்கரிப்பதுபோல் கோதைக்குப் பல்வகை ஆபரணங்கள் பூட்டினர்.

340. ஒருகாவத தூரம் வாசம் வீசும் சந்தனம், புனுகு, ஜவ்வாது அணிந்து மாலை சூட்டினர். கண்ட விண்ணவர்களும் வியப்புற்றனர். அலங்கல் - மாலை.

341. தேவியை அலங்கரித்தபின், திருவரங்கன் வரும் வழியைத் தூய கண்களால் நோக்கியபடி யிருந்தனர்.

342. பிரமன், ஆழ்வாரை நோக்கி, அரங்கன் எப்போது வருவான் என்று கேட்டான். வட்டச் செந்திகிரி - வட்டமான சிவந்த சக்கரம். "வட்டஆழி, தவள சங்கு, முட்டவாழி திருவிருந்த வற்சம்வாழி, பெருகு கங்கை துளவேறும்" என்பர் பாலபாரதி (இராமஜெயம்).

343 — 344. ஆழ்வார், அரங்கன், "பங்குனி உத்திரத்தில் வருகின்றேன்" என்று கூறியதைச் சொன்னார். இந்திரன், "அரங்கன் கூறியதை, யானும் கேட்டேன். அவன் மாயை யாருக்குத் தெரியும்?" என்றனன்.

அவ்வுரை கேட்டலு மமரர் கோமகன்
இவ்வுரை யானுமன் றிருந்து கேட்டனன்,
திவ்விய வுருவமை திருவ ரங்கனார்
ஒவ்விய மாய்கையா ருணர்வர் என்றனன். 344

எனவுரைத் தவனொடு மேறு வாகனும்
அனமதை யூர்தியு மனைத்து ளோர்களுங்
கனநிற மேனிமால் கமலத் தாள்களை
மனமுற நினைந்தவர் வருந்து மெல்லையில்; 345

கோதைபாற் பெரியருங் குறுகி யம்ம!பூ
மாதுறை மார்பக மணிய ரங்கனார்
ஏதுகா ரணமின மெய்தி லாததென்
வேதனே முதலினோர் வினாவு கின்றனர். 346

வருதுமென் றத்தினம் வழங்கும் வாறதாய்
மருதிறத் தவழ்ந்தமால் வந்தி லானினங்
கருதுவ தென்னினிக் கழறு கென்னலும்
பொருதுவெல் வேற்கணாள் புகல்வ தாயினாள். 347

கோதையின் செயல் — கருடன் வருதல்

அன்னவர் யாவரு மகங்க ளிப்புற
இன்னமோர் கடிகையி னுள்வந் தெய்துவார்
நின்னுளம் வருந்தலை யெனநி கழ்த்தியே
பின்னர்வே றிடந்தனி லிருந்தப் பெண்கொடி; 348

---

345 முதல் 348 வரை. ஆழ்வார் அரங்கன் வாராமையால் வருந்தியதும் கோதை நாச்சியார் அவன் வருவான் என்று உறுதி கூறியதும் கூறப்படுகின்றன.

345. சிவபிரானும். பிரம்மனும், மற்றவர்களும் இன்னும் அரங்கன் வரவில்லையே என்று வருந்தினர். ஏறுவாகன் - சிவபிரான். அனமதை ஊர்தி - பிரமன். இவர்கள் திருமாலைத் தியானித்தனர். கனநிற மேனி மால் - மேகம் போன்ற நிறத்தை உடைய திருமால். கனம் - மேகம்.

346 — 347. கோதை நாச்சியாரை அணுகி. ஆழ்வார், அரங்கனார் அடையாத காரணம் யாது? பிரம்மன் முதலானவர் வினாவுகின்றனர். அன்று வருகின்றேன் என்று கூறியபடி வரவில்லை. இனிமேல் எண்ண என்னுள்ளது? சொல் என்று வினாவினார். பூமாது - திருமகள். உறை - தங்கியுள்ள. வேதன் - பிரமன்.

347. மருது இறத் தவழ்ந்த மால் - மருதமரம் முரியும்படியாகத் தவழ்ந்த கண்ணன். அதற்குக் கோதை பின்வருமாறு விடை புகன்றாள்.

348 — 349. "அவர்கள் அனைவரும் மகிழும்வண்ணம் ஒரு நாழிகையில் திரு அரங்கர் வருவார். வருந்த வேண்டா" என்று கூறிய ஆண்டாள், தனித்திருந்து

பன்னக வயிரிதோத் திரம்ப ரிவ்வொடுந்
தன்னக மதனிடைத் தரித்த வன்வர
உன்னலு மக்கணத் தோங்கல் போன்றிரு
பொன்னவிர் சிறகொலி பொருந்த வந்தனன். 349

வந்தவன் றிருமுக நோக்கி மாண்புறும்
உந்தலைக் காவிரி யுடைய ரங்கனார்
இந்தநா ளின்னகர்க் கெய்து வேமென
அந்தநா ளடியனோ டறைந்து ளானரோ. 350

அன்னமா மொழிமுறை யந்த மாதவன்
இன்னமு மிங்குவந் தெய்தி லாமையால்
என்னகா ரணம்வரா தெனவிங் கியாவரும்
பன்னுகின் றதற்கெனோ பகர லாகுமால். 351

ஆதலா லிக்கணத் தணிய ரங்கரென்
மீதுறு கருணையால் விரைவி னோடடைந்
தீதெலா மிசைத்தவ ரெய்து மாறழைத்
தோதுமோர் கடிகையுள் ளுறுதல் வேண்டுமால். 352

இன்னவா றழைத்துவந் தெய்தி லாங்கவர்
தன்னொடும் யானொரா தனத்து வைகுபோ
துன்னையு மந்தவா தனத்தி னொக்கவே
மன்னுறப் புரிகுவ னெனவ ழங்கினாள். 353

கருடனைத் துதித்தாள். அப்போதே சிறகொலியுடன் கருடன் வந்தான். ஒரு கடிகை - ஒரு நாழிகை. "முடிபுனை கடிகை நாள் மொழிமின் என்றனன்" என்பது இராமாவதாரம் (அயோத்தியா காண்டம்).

349. பன்னக வைரி - பாம்புகட்குப் பகையாகிய கருடன்.

350 — 352. கருடனிடம் கோதையார், "அரங்கனார் இன்று வருவேன் என்று கூறினார். ஆனால் வரவில்லை. அரங்கன்பால் இவற்றைக் கூறி அழைத்து வருக. அரங்கரை அழைத்து வந்தால் யானும் அவரும் அமரும் ஆதனத்தில் உன்னையும் எழுந்தருளச் செய்வேன்" என்று கூறினார். இப்போதும் ஸ்ரீவில்லிபுத்தூரில் கருடாழ்வார் அரங்கமன்னாருடன் எழுந்தருளியிருப்பதைச் சேவிக்கலாம்.

352. அரங்கர் என்மீதுறு கருணையால் - திருவரங்கர் என்னிடம் கொண்ட அன்பால்.

353. வைகுபோது - தங்கும்பொழுதில். மன்னுறப் புரிகுவன் - தங்கச் செய்வேன்.

வழங்குரை கேட்டவல் வயின னுங்களித்
தழங்குற லிக்கணஞ் சார்ந்த ரங்கம்வாழ்
முழங்குகார் வணரையோர் கடிகை மூன்றினில்
கழங்குறு திருக்கையாய் கொணர்வன்; காண்டியால். 354

எனப்புகன் றிருசிறை புடைத்தி யாதினுந்
தனக்குநேர் தானலான் தாவி வான்மிசை
மனக்கொடு வேகமோ டேகி வண்டுறை
புனைத்துழா யரங்கர்தாள் போற்றி நிற்றலும். 355

அரங்கன் வினா

எங்கிருந் தெய்தினை யெனச்செஞ் சக்கரம்
சங்கொடு மணிகரன் சாற்ற மேருவாம்
பொங்கரி னோங்கெழில் பொருந்து மேனியான்
அங்கவ னிருசெவி யணுக வோதுவான். 356

(வேறு)

பாதிமா மதியம் புனைசடைச் சிவனும்
பங்கய மலருறை யயனும்
ஆதிமா மறைகொண் டனுதினந் துதிசெய்
தலர்சொரிந் தடிமிசை வணங்குஞ்
சோதியே! விரிகா விரியிரு புறமுஞ்
சூழ்ந்தபொன் னரங்கநா யகனே!
மாதிரம் புகழும் புதுவை மாநகரி
னிருந்துவந் தேனென வகுத்தான். 357

---

354. கருடாழ்வார், "வருந்த வேண்டா. அரங்கம் அடைந்து மூன்று நாழிகையில் அழைத்து வருவேன்" என்று கூறினார். வயினன் - கருடாழ்வார். முழங்குகார் வண்ணர் - ஒலிக்கின்ற (இடிக்கின்ற) மேகம்போன்ற திருமால். கொணர்வன் - கொண்டு வருவேன். காண்டி - பார். "கண்ணனை என் நெடும் வெரிநில் காண்டியால்" என்ற கம்ப நாடகப் பாடலை இணைத்துக் காண்க. சீதைக்குச் சிறிய திருவடி பேசிய பேச்சை, இங்கே கோதைக்குப் பெரிய திருவடி பேசுகின்றார்.

355 — 356 எனக் கூறிய கருடாழ்வார் இருசிறை புடைத்து வான்மிசை வேகமுடன் சென்று, அரங்கர் தாள் போற்றி நின்றதும், அரங்கரும் எங்கிருந்து வந்தாய் என்று கேட்டார். கருடன் விடையிறுக்கின்றனன். தனக்கு நேர்தான் அலான் - தனக்குச் சமானமாகத் தன்னையே கூற முடியாதபடி உயர்ந்த கருடன். "ஆரொப்பார்? இவர் குணங்கள் அனைத்தும் கண்டால் — அருளாளர் தாமெனினும் தமக்கொவ்வாரே" என்று ஸ்வாமி தேசிகன் திருவாய் மலர்ந்த "மெய்விரதமான்மியம்" இங்கு நினைவுக்கு வருகிறது. மனக்கொடு வேகம் - மனத்தைப் போன்ற மிக்க வேகம். மேருவாம் பொங்கர் - மேருமலை.

357 முதல் 373 வரை. கருடன் பேச்சு. சீவில்லிபுத்தூர் தல புராணத்தில் இங்கு, தாயார் பாசுரம் போல் பல பாடல்கள் உள்ளன. இந்நூலில் கோதை

என்னகா ரியமிங் கடைந்ததென் றுணரான்
எனவவ னியம்பவப் புதுவைப்
பொன்னக ரிடைவாழ் பொருந்துமப் பெரியார்
புதல்விகோ தைப்பெயர் புனைந்தாள்
நின்னுடை யெழிலுக் குகந்தபே ரழகாள்
நிகழ்த்துமா றடைந்தனன் எனவே
அன்னவள் வடிவத் தெழிலெலா மவர்கா
தறிவுறும் வகையெடுத் தறைவான். 358

சௌந்தர்ய லகரி

இருளொளிர் மதிய முறிலகன் றிடும்;கார்
எனில்வெயர்ப்பப் புதிர்த்துள மறுகும்;
பொருதிரை கொழிக்கு மறலில்வெண் மணலும்
பொருந்திடும்; சைவலங் கசியும்;
முருகவிழ் மலரும் நானமும் புழுகும்
முதிரகிற் புகைகளுங் கதுவிக்
கருநிறங் கவினும் வளர்குழல் நிகராய்க்
கருதுதற் கியாதுமொன் றிலையேல். 359

நாச்சியாரின் சௌந்தர்ய லகரி (அழகு வெள்ளம்) பேசப்படுகிறது. காவியத்தில் பாதாதி கேச வருணனையோ, கேசாதி பாத வருணனையோ இருக்க வேண்டும் என்று கருதிய ஆசிரியர், கோதை நாச்சியாரை வருணிக்கிறார். நடையாலும் கருத்தாலும், இப் பகுதி, நைடதம், அரிச்சந்திர புராணம், குமார சம்பவம், தணிகைப் புராணம், புவனேந்திர காவியம், அருச்சுனன் தீர்த்த யாத்திரை முதலான நூல்களின் வருணனையை ஒத்துள்ளது. எனினும் இதில் வருண குலாதித்தன் மடலின் தாக்கம் மிகுதியாகக் காணப்படுகிறது.

357. கருடாழ்வார் அரங்கரைப் போற்றுகின்றார். சிவபிரானாலும் பிரம்மனாலும் வணங்கப்படும் ஜோதியே! அரங்கநாயகனே! அடியேன் புதுவையிலிருந்து வந்துள்ளேன். பாதி மதி - பிறை. பங்கயமலர் - தாமரைப்பூ அயன் - பிரமன். அஜன் என்ற வடசொல் அயனாயிற்று. பிறப்பற்றவன் என்பது பொருள். அலர் சொரிந்து - பூக்களைக் கொட்டி. மாதிரம் - திக்கிலிருப்பவர்கள் (ஆகுபெயர்).

358. திருவரங்கன் ஒன்றையும் உணராதவன்போல் என்ன காரியம் அடைந்தது என்று கேட்டான். கருடாழ்வார், புதுவைக்கோதை அனுப்ப வந்தேன் என்று கூறி, அவளுடைய சௌந்தரியங்களைப் பேசினான். அவற்றை 359 முதல் 373 ஆம் பாடல்கள் வரை காணலாம். கேசாதி பாத வர்ணனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

359. கூந்தல் வருணனை: கோதையாரின் கூந்தலை இருள் என்னலாம்; ஆனால் அது மதியின் முன் மறையும். மேகம் என்றால் வியர்க்கும். (மழையை வியர்ப்பு என்கிறார். தோற்றவர்களின் மெய்ப்பாடு வியர்த்தல்.) ஆற்றுக் கரு

கறைமிடன் நுதற்க ணென்னச் சிந்தூரங்
கவினுறத் தீட்டுவா ணுதற்குப்
பிறைநிக ரென்னிற் பிறைதனிற் றிலதம்
பெறாமையிற் பேசுத லெளிதாம்;
நறைதுள வரங்க நினதுளங் குழைக்க
நயனவம் பேவுதற் கெனவே
மறைமுதற் கிழவன் வெஞ்சிலை யெனவே
வகுத்ததோ? புருவங்கண் டிலனால். 360

வேலெனில் மழுங்கும்; வாளெனின் மடியும்;
விடமெனி லரன்மிடற் றொளிக்கும்;
சேலெனில் நீருட் பதுங்கிடும்; கயலின்
செய்கையு மஃதெனில்; அவள்தன்
பாலென வெளிறி நீலமொத் திருண்டு
செவ்வரி பரவிமை தோய்ந்து
காலனிற் கொலைசெய் தொழில்பயின் றுளகூர்ங்
கண்ணினுக் கொப்புக்காண் கிலனால். 361

மணலைப் பகரலாம்; ஆனால், அதில் வெண்மணல் உண்டே (இங்கு நரையில்லையே). பாசியைப் பகரலாம்; அது கசியும். ஆதலினால் கோதையின் திருக்குழற்கு உவமைப் பொருள்கள் இல்லை. அறல் - கருமணல். சைவலம் - பாசி. நானம் – கஸ்தூரி. புழுகு - புனுகு. "அரிய நெய் புழுகு நாவி மென்பனி நீர் அளைந்து, அகிற் புகையொடும் குலவி, விரிமலர்த்தார் வேய்ந்து, அளியினம் பாட மினுமினுத் தறலினும் மிளிர்ந்து கள்ளொழுகிய குழலாள்" என்பது புவனேந்திர காவியம்.

360. நெற்றியின் வருணனை: சிவபிரானின் நெற்றிக் கண்ணைப்போலக் குங்குமப் பொட்டணிந்த நெற்றிக்குப் பிறையை உவமை பேசக்கூடாது. ஏன்? பிறையில் திலகம் இல்லை. "கொந்தார் சடையோன் குலவு நுதற்கண் போலச் சிந்தூரம் தீட்டும் சிலை நுதலாள்" — வருணகுலாதித்தன் மடல். உன்மேல் கண்களாகிய அம்பை ஏவுதற்கு வைக்கப்பட்ட வில் போன்றுள்ளது புருவம். கறைமிடன் - விடம் பெற்ற கழுத்தையுடைய சிவபிரான் சிந்தூரம் - குங்குமப் பொட்டு. நயன அம்பு - கண்களாகிய அம்பு. மறைமுதற் கிழவன் - பிரம்மன். "மாப்பெருஞ் சூரை வென்றிடும் நின்னை வணக்க வார்செவி யணிக் குவளை ஏப்புழை படுத்த திருக்குழல் நாணில் இருபெரும் புருவ வில்" என்பது தணிகைப் புராணம்.

361. திருக்கண் வருணனை: கோதையாரின் கண்களுக்கு வேலை உவமையாக்கின் அது மழுங்கும்; வாள் முறிபடும்; விடம் சிவபிரான் கழுத்தில் அஞ்சிப் பதுங்கும்; சேலும் கயலும் நீருட் பதுங்கும்; ஆதலால், வெளறி, இருண்டு, செவ்வரி படர்ந்து, மை தோய்ந்து, காலனிடம் கொலைத்தொழில் பயின்றுள்ள கண்களுக்கு உவமப் பொருள்கள் தெரியவில்லை. அரன் மிடறு - சிவபிரான் கழுத்து. நீலம் - நீலோற்பலப் பூ. "கமலமென் மலரை வனம் புகுத்திய வேற்கண்" என்று நைடதம் பேசும்.

கொள்ளைபோர் புரியுங் கூரிய வேற்கண்
கூடுறுஞ் செவிதனக் குவமை
வள்ளையென் றுரைக்கின் மகரமாக் குழைகள்
மருவிடா; வேறுமொன் றிலையால்;
கள்ளவிழ் மலரைங் கணைமதன் றிருத்தேர்
கடாவுதற் கமைத்தவீ திகொலோ?
எள்ளினன் மலரோ? குமிழ்கொலோ? அவள்மூக்
கிணையென யாதினை யிசைப்பாம்? 362

மண்ணவர் விபுதர் விஞ்சைய ருரகர்
மதன்முத லினர்வடி வழகைக்
கண்ணினால் நோக்கற் கென்னவே அயனார்
அமைத்தகண் ணாடியோ கபோலம்?
பண்ணினின் னிசையைக் கன்னலை அமுதைப்
பாகினைத் தேனினை வெகுண்ட
பெண்ணினுக் கணங்கின் கிளிமொழிக் குவமை
பெற்றுள தேதென வுரைப்பாம். 363

முல்லையி னரும்பை முருந்தினை முத்தை
முகிண்முலைத் தடங்கண்மெல் லியல்தன்
பல்லினுக் குவமை யுரைத்திடி லதன்பாற்
பரவுசெங் காவிதோய்ந் திலையால்;
சொல்லில வலரிற் றூதுளை வீழித்
தொண்டையங் கனிகளி லமுதம்
இல்லையா தலினான் மதுரமூ றிதழுக்
கிணையென வுரைக்குமா றெளிதோ? 364

---

362. திருச்செவி வருணனை: செவியை வள்ளை என்று கூறலாம்; அதில் குண்டலம் இல்லை. நாசியின் வருணனை: மன்மதனின் தேராகிய தென்றல் உலாவுதற்கு அமைத்த வீதியோ நாசி. "விற்காமன் தேரோடும் வீதி எனச் சந்தத்தும் நற்கால் வழங்குகின்ற நாசியாள்" என்பது வருணகுலாதித்தன் மட்டல். எள்ளின் மலரை நாசிக்கு உவமையாக்குவது மரபு. "எட்பூ ஏசிய நாசியாய்" என்பர் சுந்தரம் பிள்ளை (மனோன்மணியம்).

363. கபோலச் சிறப்பு: மன்மதன் முதலினோர் அழகைப் பார்க்க வைத்த கண்ணாடியோ கன்னம். "வேனில்வேள் வனப்பு நோக்குதற் கமைத்த விளங்கு கண் ணாடியோ? ஒளிரும் பானலங் கண்கள் தீட்டிய கிடந்த சாணையின் படிவமோ கபோலம்" என்பர் அதிவீரராம பாண்டியர் (நைடதம்). மொழியின் சிறப்பு: பண்களையும், கரும்பையும், அமுதையும், பாகையும், தேனையும் வெகுண்ட மொழிக்கு உவமப் பொருள்கள் உண்டோ?

364. பற்களின் சிறப்பு: முல்லையின் அரும்பை, மயிலிறகின் அடியை, முத்தை உவமையாக்கலாம்; ஆனால் அவற்றில் (வெற்றிலையால்) காவிநிறம் இல்லையே.

முழுமதி தனக்கோர் முயற்கறை கதுவும்;
முளரியில் வண்டினந் துவைக்கும்;
வழுவிலா நிறைகற் பருந்ததிக் கருள்வாள்
வதனத்துக் கிணையெதை வகுப்பாம்?
விழுகதிர் பாளை மடலவி ழாத
கமுகமோ? நினதுகை மேவும்
பழுதிலா வளையோ? கந்தர மதனை
யாதெனப் பகர்ந்திட லாமால்? 365

பூரண கலசம் அதன்மிசை யணிந்த
பூந்தொடை பொலிதலைப் பொருவ
வாரணி தனங்கண் மிசையுறக் கவிந்து
வளைந்தவேய் நிகர்தடந் தோளாள்;
சீரணி யரங்கத் திறைவ!நின் புகழ்கள்
திருத்துநா ரதன்செழுங் கரங்கொள்
ஏரணி யாழ்முன் கைக்குநா ணிடுமென்
றிசைக்கின்மற் றெவைநிக ரிசைப்பாம்? 366

"முல்லையும் முருந்தும் நிரைத்தன போன்று, முத்தெனத் திகழ்ந்து, அற நெருங்கி, மெல்லெனச் சிவந்த மணியினிற் பிரித்து விளக்கி, மயிலிருளினைத் துணித்திட நகைக்குமென் நகையாள்" என்பர் உமறுப்புலவர் (சீறாப் புராணம்). இதழ்ச் சிறப்பு: இலவம்பூ முதலான பொருள்களில் அமுதம் இல்லை; ஆதலின் மதுரம் ஊறும் இதழுக்கு உவமையில்லை. இதழுக்கு உவமையாக இலவம்பூ, தூதுவளைக்கனி, வீழிக்கனி, தொண்டைக்கனி முதலானவற்றை உவமையாக்குவர்.

365. திருமுகச் சிறப்பு: மதியில் கறையுண்டு. தாமரையை வண்டுகள் சிதைக்கும். ஆதலால், கோதையாரின் முகத்துக்கு உவமையில்லை. திருக் கழுத்தின் சிறப்பு: மடல் அவிழாத கமுகோ? உன் கைச் சங்கோ? கழுத்துக்கு இணையாக எவற்றைப் பகர்வேன். கமுகு - பாக்கு மரம். வளை - சங்கு. கந்தரம் - கழுத்து. "வன்னிக்கும் பாளை மடலவிழ நான் செல்லும் கன்னிக் கமுகனைய கந்தரத்தாள்" (வருணகுலாதித்தன் மடல்).

366. திருத்தோள் சிறப்பு: பூரண கலசத்தில் அணிந்த மாலை போல மார்பின் இருபுறத்திலும் பொருந்திய, மூங்கில் போன்ற தோள்களையுடையவள். பூந்தொடை - பூமாலை. வேய் - மூங்கில் முன்கைச் சிறப்பு: நாரதனின் கைகளில் உள்ள யாழும் முன் கையைக் கண்டால் நாணும். (நாணும் - சிலேடை. வெட்கமடையும்; வளையும்.) நின் புகழ்கள் திருத்து நாரதன். "செவிக்குத் தேனென இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகன்" என்பது கம்ப நாடகம் (சுந்தர காண்டம்). திருத்துதல் - பரிமாறுதல் (வைணவ வழக்கு).

திங்களி னொளியாற் பங்கயம் மலரும்;
செழித்தசெங் காந்தளின் அரும்புஞ்
செங்கதி ரொளிக்குங் குவியுமால்; அங்கைக்
கிணையெனச் செப்பவே றிலையாள்;
அங்குலிக் கிணையாய்ச் செங்கணங் கெளிற்றை
யறையலாம்; செழுமலர்ச் சோலைப்
பைங்கிளி யணிமூக் கதனையம் மடவாள்
நகநிகர் பகருத லெளிதால். 367

சக்கர வாகஞ் சிறைகொளும்; இளநீர்
சந்தன மணிந்திடா; சூதின்
மிக்கவட் டதுதான் வெட்டுணும்; கலசஞ்
சுணங்குறா; மேருமா வரைதான்
நக்கனால் வளையும்; நளினமென் முகைதான்
நாயிறாங் குதித்தகா லலரும்;
மைக்கருங் குழலாள் மணிகணார் தனத்துக்
கேதினை யிணையென வகுப்பாம்? 368

---

367. அங்கைச் சிறப்பு: தாமரை திங்களின் நிலவால் குவியும். காந்தள் சூரியன் ஒளி முன் குவியும். ஆதலால், கரங்கட்கு உவமையில்லை. "குவிகமார்ந் தனபோல் அரக்கினும் சிவந்த கொழுமடற் காந்தளங் கரத்தான்" என்பது சீறாப் புராணம். கெளிற்று மீனை விரல்களுக்கு உவமையாக்கலாம். கிளியின் மூக்கை நகத்துக்கு உவமையாக்கலாம். "புனக்கிளி நாகியின் வடிவாய் நலிவிலா திழைத்த வயிரநன் கதிராய் நலங்கிடந்து இலங்கிய உகிரான்" என்பது சீறாப் புராணம்.

368. திருநகிற் சிறப்பு: தனத்துக்கிணையாக ஆறு உவமைப் பொருள்களைக் கூறி, அவைகள் பொருந்தாமைக்குக் காரணங்களும் காட்டுகின்றார். சக்கரவாளப் பறவை சிறைகொள்ளும் (சிறை - இறகு). இளநீரில் சந்தனம் இல்லை. சூதாடு கருவி வெட்டப்படும். கலசங்களில் தேமல் இல்லை. மேருமலை - சிவனால் வளைக்கப்படும். தாமரை அரும்பு சூரியனால் மலரும். ஆதலால் அப்பொருள்கள் பொருந்தா.

"சக்கரவாளம்; சரி உரைக்கலாம். அதுவும் மிக்க சிறகுடைத்தாய்விட்டதே. சூதாடு வட்டென்று உவமை மதிக்கலாம்; மற்றதுவும், வெட்டென்று சொல்ல விதியுண்டே. பூரண கும்பங்களெனப் போற்றலாம். அக் கும்பம் தாரணியும்; ஒண் சுணங்கு தாராதே. மாகனக வெற்பெனலாம்; மற்றுமந்த வெற்பரனார் கோகனகக் கையால் குனிந்ததே. சீதவனசத் தரும்பைச் செப்பலாம்; அவ்வரும்பும் ஆதவனைக் கண்டால் அலருமே" என்ற வருணகுலாதித்தன் மடலுக்கு இந்நூல் மூல நூல்போல் தோன்றுகிறது. எவர் முந்தியோ? எவர் பிந்தியோ? ஆய்வாளர் முடிவு செய்யக்கடவர். இப் பகுதியை எல்லாப் புலவர்களும் நயம்படப் பாடி உள்ளனர். ஆனால் முதலிடம் பெறுவது நம் விஜயராகவப் பிள்ளையே.

புடவியை முதலா மனைத்தையும் மகட்டுள்
பொருந்திநீ விளங்குகண் வளரும்
வடவிலை யதனை யொருமுறை யவள்தன்
வயிற்றினுக் கிணையென லாகும்;
கடலெழு தரங்கம் வரையென லாகும்;
கட்டெறும் பூர்மயி ரொழுங்காம்;
துடியதோ? தந்தோ? அனங்கவே ளுருவோ?
யாதெனத் தொகுக்கலா மிடையே? 369

நீருறு சுழியை யுந்தியை நிகராய்
நிகழ்த்துதல் அரிது; நீர் வளரிப்
பேரராப் பணமோ? இனித்ததேன் கூண்டோ?
பெருகுபோர் மதனன்பொக் கிசமோ?
தேரதோ? வாசி நிலைகொலோ? பரந்த
செம்பொ னாலவட் டமதோ?
வாருறை தனத்தா ளல்குலா மதனை
யாதென வகுத்துரைத் திடலாம்? 370

வாழையோ? மோகக் கடலினைக் கடக்க
வகுத்திடுந் தெப்பமோ? வசஞ்செய்
வேழமா மதனைப் பிணித்திடுந் தறியோ?
மென்றொடை யாதென விசைப்பாம்?

---

369. வயிற்றின் சிறப்பு: நீ உலகத்தை யெல்லாம் உண்டபின் உறங்கும் ஆலின் இலையைக் கோதையாரின் வயிற்றுக்கு இணையாகப் பகரலாம். "தன் காதலன் வைகும் ஆலிலை அன்ன வயிற்றினை" என்பது கம்ப நாடகம். வயிற்று மடிப்பைக் கடலின் அலை என்று சொல்லலாம். வரை - வயிற்று மடிப்பு. உரோமாவளியை எறும்பின் வரிசை என்னலாம். இடை, உடுக்கையா? நூலா? மன்மதன் வடிவமா? எதை உவமை என்று சொல்லலாம். தரங்கம் - அலை. எறும்பு ஊர் - எறும்பின் வரிசை. துடி - உடுக்கு. தந்து - நூல். "உற்றமால் பூட்டும் உதரவட பத்திரத்தில் கொற்றமால் பள்ளி கொண்ட கோலமோ" என்பது வருணகுலாதித்தன் மடல். "இடை தேர்மிசை வதியும் அனங்கனோ" என்பது நைடதம்.

370. நிதம்பச் சிறப்பு: இங்குப் பல உவமைகளைக் காட்டி, இதுவா? இதுவா? என்று வினவி, யாதென வகுப்பேன் என்கிறார். அராப்பணம் - பாம்பின் படம். வருணகுலாதித்தன் மடலுடன் ஒப்பிட்டுக் காண்க,

ஆழியைக் கரந்தந் தாழிசூ ழிலங்கைக்
கன்றுநீ செல்கென விடுத்த
பாழியந் தடந்தோள் தூதனை மருட்டும்
பரிசமை யணிமுழந் தாளாள். 371

சினைவரால் கணைக்கா லென்னலாம்; கமடஞ்
செப்பலாம் புறவடிக் கிணையாய்;
நினையுன தழகுஞ் தனதுமா வழகும்
நிறுத்தறிந் திடுமுறை முளரி
மனையுறை யயன்றான் வகுத்திடுஞ் துலையோ?
மற்றவள் பரடு;மென் குதிக்குப்
புனைமலர்க் குழலா ராடுகந் துகந்தான்
பொரும்விரற் றுகிரென லாமால். 372

தேங்கம ழனிச்ச மலர்மிசை நடந்தோ?
செய்யபஞ் சூட்டியோ? கரத்தால்
பாங்கியர் வருடப் பொறாமையி னாலோ?
பாரெலா மலைந்துபோர் வயங்கொள்

---

371. தொடைச் சிறப்பும் முழந்தாள் சிறப்பும்: வாழையா? தெப்பமா? யானை கட்டும் தறியா? எதனை உவமையாக்குவேன்? இங்கு நைடதம் இயல்பாகப் பேசும் — "சேந்தநுண் பஞ்சின் மென்மையவாகிச் செழுமணி மேகலை தாங்கி ஏந்தெழிற் கன்னி யரம்பையின் குலங்கள் யாவையும் எளிதின் வென்றனவே." முழந்தாள் - அனுமனையே மயங்குறச் செய்யும் முழந்தாள். "அமையும் இலங்காபுரியில் அன்று சென்ற தூதர் தமையும் மருட்டும் முழந்தாளால்" என்பது மட்டல். ஆழியை - மோதிரத்தை. கரந்து - மறைத்து வைத்து. ஆழி - கடல். மருட்டும் பரிசு - மயக்கும் தன்மை.

372. கணைக்கால், புறவடி, பரடு முதலானவற்றின் சிறப்பு: வரால் மீன் போன்றது கணைக்கால். ஆமையைப் புறவடி என்று சொல்லலாம். கமடம் - ஆமை. பரட்டை நயம்படப் பேசுகின்றார். பரட்டையைத் தராசின் தட்டுக்கு நிகராகச் சொல்வர். அதில் கற்பனைத் தேனைச் சேர்க்கிறார் ஆசிரியர். அரங்கா! உன் அழகு அதிகமா? கோதையாரின் அழகு அதிகமா? என்பதை அறிய அமைக்கப்பட்ட தராசின் தட்டோ பரடுகள்? "நிறைகோல் தட்ட மற்றெழுந்து தாழ்ந்திடப் பணித்துத் தவழ்ந்தழகெழும் பரடுடையாள்" என்பது "அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை" (ஆசிரியர்: அரங்கநாதக் கவிராயர்). முளரி மனை - தாமரை வீடு. குதிகால், பந்துபோன்றுள்ளது. கந்துகம் - பந்து.

பூங்கணை மதனன் மகுடமா முடிமேல்
பொருத்தியோ? யாதினோ சிவந்த?
மாங்குயின் மொழியா ளன நடை வனச
மலரடிக் கொப்புவே றிலையால். 373

இந்தமா வடிவத் தருந்ததி கற்பி
னிரும்புவிப் பொறைத்திரு வெழில்சேர்
அந்தமா தினைநீ மணம்புரி வதற்கின்
றணைவையென் றாங்கவ ளுடனே
முந்துநாள் நவின்ற தாகவவ் வதுவை
முடிப்பதற் கியாவையு மமைத்துத்
தந்தியன் றுரித்தோன் முதலினோர் சார்ந்துன்
றன்வழி பார்த்திருக் கின்றார். 374

ஆதலாற் புதுவை நகர்க்குகந் தணுகா
யாயிடிற் பெரியரோ டந்த
கோதையே முதலோர் பொறுத்திடன் முடியாக்
கொள்கைய ராவர்;என் புயத்தின்
மீதமர்ந் திடிலிக் கணமவண் கொடுபோய்
விடுகுவ னேறுக வெனவிப்
பூதனை யெடுத்துண் டுமிழ்ந்திடந் தளந்தோன்
பொன்னடி பணிந்துநின் றனனால். 375

---

373. திருவடிச் சிறப்பு: திருவடிகள், அனிச்சப் பூவில் நடந்ததனாலோ? செம்பஞ்சு ஊட்டியோ? பாங்கியர் வருடியதாலோ? மன்மதன் முடிமேல் வைத்தோ? எதனாலோ சிவந்தன? அதற்கு உவமையில்லை.

இங்கு, "நீதமேவு அனிச்சச் செழும்போ தெனுமினிய பூமேல் நடக்கப் பொறாமலோ? செங்கைச் சிலைவேள் திருமுடியின் மேல் வைத்தோ? மங்கையர்தம் கையால் வருடியோ? வாட்டிய வானோரை வசீகரிக்கச் செம்பஞ்சு தீட்டியோ கோலம் சிவந்ததென" என்ற வருணகுலாதித்தன் மடல் நோக்கத் தக்கது.

374. ரூப சௌந்தரியம் பேசிய ஆசிரியர், கோதையாரின் குண சௌந்தரியம் பேசுகின்றார். கற்பில் அருந்ததி; பொறையில் புவி; அழகில் திரு. கோதையாரை நீ மணக்க வேண்டும். சிவபிரான் முதலானவர்கள் உன் வருகையை எதிர்பார்த்துள்ளனர். வதுவை முடிப்பதற்கு - திருமணத்தை நிறைவேற்ற. தந்தி - யானை. உரித்தோன் - உரித்த சிவபிரான். கஜ சம்ஹார மூர்த்தம் பேசப்படுகிறது.

375. "நீ, புதுவைக்குச் செல்லாவிடின் கோதை முதலானவர் வருந்துவர். என் புயத்தில் ஏறுக. கணத்திற் கொண்டுபோய் விடுவேன்" என்று கூறி அரங்கனைப் பணிந்தான் கருடன். பூ தனை - பூமியை, எடுத்து. உண்டு, உமிழ்ந்து, கிடந்து, அளந்தோன். நம்மாழ்வார், "இடந்து, இருந்து, நின்று, அளந்து,

அரங்கன் புதுவையை அடைந்தான்

நின்றவன் புயமேற் பொன்மலை மிசையோர்
நீலமால் வரைபடிந் தெனலாய்
நன்றென மகிழ்வோ டரங்கம்வா ழிறைவன்
நணுகலு மேந்திவான் வழியாய்ச்
சென்றுதன் மனமும் பிற்பட விசைத்துச்
செஞ்சிறை புடைத்திடும் வளியால்
குன்றொடுந் தருவேர் பரிந்துபின் தொடரக்
கோதிலாப் புதுவைசென் றடைந்தான். 376

அடையுமா முகில்நே ராழிமா தவனை
யாழியை மந்தர வரையால்
கடையுநா ளெழுந்த வமுதினைக் கண்ட
காட்சியிற் கண்டுளங் கனிவாய்
சடையவ னயனிந் திரன்முதற் பலருஞ்
சயசயென் றடிதொழு தவர்மேல்
மடைதிறந் தருளார் கடைக்கணித் தருளி
வயினனம் புயத்தைவிட் டிழிந்தான். 377

கேழலாய்க் கீழ்புக்கு இடந்திடும்; தன்னுள் கரக்கும் உமிழும்; தடம் பெருந் தோள் ஆரத் தழுவும்; பார் என்னும் மடந்தையை மால் செய்கின்ற மால் ஆர் காண்பாரே" என்று திருவாய்மலர்ந்தருளிய பாசுரம் ஆசிரியர் திருவுளத்தில் பதிந்துள்ளமை புலனாகின்றது. இது கவிச்சக்ரவர்த்தி கம்பனே வியந்த பாசுரம் அல்லவா?

376. திருவரங்கன் பெரிய திருவடியின்மேல் ஏறிப் புதுவையை அடைந்தான். பொன்மலை மிசை - தங்கமலையின் மேலே. மனமும் பின்பட - மனங்கூடப் பின்னிடும்படி. சிறை வளி - சிறையின் காற்று. கருடன் சென்ற வேகத்தால் மலை மரம் முதலானவை பின்தொடர்ந்தன. ஆசிரியர், கம்ப நாடகத்தில் சுந்தர காண்டத்தில் உள்ள கடல் தாவு படலம் பயின்றுள்ளார் என்பது புலனாகின்றது. "ஆயவன் எழுதலோடும் அரும்பணை மரங்கள் யாவும், வேயுயர் குன்றும் எல்லாம், நாயகன் பணியிது என்னா நளிர்கடல் இலங்கை தாமும் பாய்வன என்ன, வானம் படர்ந்தன" என்பர் கவிச்சக்ரவர்த்திகள்.

377. கடல் கடைய வந்த அமுதைக் கண்டபோது அடைந்த இன்பத்தை, சிவபிரான் முதலானவர்கள் அடைந்து திருவடிகளில் பணிந்தனர். அரங்கன் அவர்களைக் கடைக்கண்ணால் நோக்கி யருள் செய்து கருடன் தோளிலிருந்து இறங்கினான். ஆழியை - கடலை. மந்தர வரை - மந்தர மலை. சடையவன் - சிவபிரான். "செஞ்சடைக் கடவுள்" என்று அருமையாகப் பேசுவார் கம்பநாட்டாழ்வார். "மடைதிறந்தருளார் கடைக்கண்" என்ற பிரயோகம் நயம் மிக்கது.

மீனமர் கடல்போற் றுந்துமி முழக்கி
விண்ணவர் மழையெனப் பொழியும்
தேனமர் மலரின் பந்தரின் நிழற்கீழ்த்
தேவர்கோன் பாதுகை தாங்கப்
போனகங் கடுவோன் விதியிரு புறத்தும்
புகுந்துகை லாகுதந் தடைய
வானக மளவா யுயர்ந்தபொன் மணியார்
வடபெருங் கோயில்புக் கனனால். 378

புக்கபின் னாங்கோர் செழுமணி யினங்கள்
பொருந்துமண் டபத்தின்மத் தியினோர்
தக்கவா தனமேல் வெண்குடை நிழற்றச்
சாமரை யிருபுறம் இரட்ட
மிக்கசீர் மதிவீற் றிருந்தென விருந்தான்;
மீனினம் பலவிளங் குவபோல்
அக்கர வணிந்தோன் முதலினோர் பலரு
மமையுமா தனத்தரு கிருந்தார். 379

இருந்த வவ்வமைதி யிந்திரன் வதனம்
இடைச்சிய ருடைகவர்ந் தெடுத்துக்
குருந்தமீ தடைந்த கோவல னோக்கிக்
கோதிலாப் பெரியர்பாற் குறுகிக்
கருந்தட நயனக் கோதையாள் தனையாம்
கடிமணம் புரிந்திடு வதற்குப்
பொருந்துமா றுரைத்து வருகவென் றிசைப்பப்
புரிவனம் முறையெனப் போனான். 380

---

378. அரங்கன், தேவர்கோன் பாதுகை தாங்க, பிரம்மனும் சிவனும் கைலாகு கொடுக்க வடபெருங்கோவிலை யடைந்தான். மீனமர் - மீன்கள் உள்ள. தேவர் மழையாகப் பொழிந்த பூக்கள் பந்தராக மாறிற்று. தேவர்கோன் - இந்திரன். போனகங் கடுவோன் - உணவாக விடத்தை நுகர்பவன் (சிவபிரான்).

379. திருவரங்கன் வடபெருங் கோவிலில் மதிபோல் வீற்றிருந்தான். மற்றைய தேவர்கள் நட்சத்திரங்கள் போலிருந்தனர். வெண்குடை நிழற்ற - வெண்மையான குடை நிழலை யெழுங்க. இரட்ட - வீசப்பட. "இருந்தார் இவர் குளிர்சாமரை இருபாலும் இரட்ட" என்பர் வில்லியார் (பாரதம்).

380. திருவரங்கன், இந்திரன் முகம் நோக்கி, "கோதையாரை யான் மணம் புரிவதற்குப் பேசி வருக" என்றான். கோவலன் - அரங்கன். கருந்தட நயனக் கோதை - கரிய பெரிய கண்களையுடைய கோதை.

போனவன் விரைவிற் பெரியவாழ் வார்தம்
பொன்மனை புகுந்துநின் மகளாம்
மானினோக் கினளை யரங்கநா யகனார்
மணஞ்செய்வா னடைந்திருக் கின்றார்;
ஆனதா லுனதுள் ளறிகுவா னவரின்
றனுப்பவந் தனன்புக லெனுமவ்
வானவ ரரசன் றிருமுகம் நோக்கி
மற்றவன் இதைவகுத் துரைப்பான்: 381

முன்னர்நா ளிழைத்த அருந்தவத் தீன்ற
முயற்கறை யிலாமதி முகத்தென்
கன்னியைத் தருவே னென்னயாத் திரையாக்
கடிநகர்க் கேகிய ஞான்றில்
அன்னவற் குரைத்த தொனியுமஃ தறிவாய்;
ஆதலா லம்மொழி மறுத்துப்
பின்னரொன் றுரைப்ப துளகொலோ? எனதுட்
பெற்றிகண் டறிந்திலாய் போலும்! 382

அளித்திடு வதனுக் கையமொன் றிலையா
லாங்குநீ விரைந்தடைந் தியானை
விளித்தமா முதலை யழைத்து வாவெனலும்
மீண்டவன் கடிதுசென் றருந்தேன்
துளித்தபைந் துளவோ னம்புய மலரின்
துணையடி வணங்கியப் பெரியார்
களிப்புடன் மகளைத் தருவதற் கிசைந்தார்
கடிதெழுந் தருள்கெனப் பணித்தான். 383

---

381. இந்திரன், பெரியாழ்வாரை அணுகி, "அரங்கநாயகர் வந்துள்ளார்; தங்கள் திருவுள்ளம் அறிய அனுப்பியுள்ளார்; என்றனன். மானின் நோக்கினள் - மான் போன்ற விழிகளையுடைய கோதை. பெரியாழ்வார் பின் வருமாறு கூறினார்.

382 — 383. "முன்பு யான் பெருமான்பால் உரைத்ததை மாற்றுவேனோ? என் மனம் உனக்குத் தெரியாதோ? என் மகளை வழங்குவதில் தடையில்லை. அரங்கரை அழைத்து வா" என்றார் ஆழ்வார். இந்திரன், திருவரங்கரிடம் "ஆழ்வார் இசைந்தார்; எழுந்தருள்க" என்று பணித்தான். முயல் கறை - முயலாகிய களங்கம். மதிமுகத்து - சந்திரனைப் போன்ற முகமுடைய. என் பெற்றி - என் தன்மை.

383. யானை விளித்த மா முதலை - யானையால் அழைக்கப்பட்ட திருவரங்கனை. கடிது - விரைந்து.

பணித்தசொற் றன்து திருச்செவி யுறலும்
பரிவினோ டாங்குவீற் றிருந்த
மணித்தவி சினைவிட் டெழுந்தழ கெறிக்கும்
மரகதச் சிவிகைமேற் பொருந்தித்
திணித்தட வரைத்தோட் கணிச்சியன் முதலோர்
சேர்ந்திரு புறத்தினும் நெருங்கக்
கணித்தநூன் முறைநல் லோரையிற் பெரியார்
கனகமா ளிகைகலந் தனனால். 384

கலந்தமா தவனைக் கண்டவப் பெரியார்
கனலிகா ணம்புய மலரின்
மலர்ந்திட வதன முளங்களி துளங்க
வந்தெதிர் பணிந்துநீ வருக
நலம்புரிந் துளதிக் குடிகொலோ? கோதை
நங்கையோ? அடியனோ? நாயேன்
குலங்கொலோ? உணரேன்; எனப்புகழ்ந் தேத்திக்
குருமணித் தவிசினுய்த் தனனால். 385

அரங்கன் மணக்கோலம்

தஞ்சமென் றடியிற் றாழ்ந்துளோர்க் கெல்லாம்
தாமரைக் கடைக்கணித் ததற்பின்
அஞ்சன வண்ண னெழுகநன் முகூர்த்த
மகலுமுன் றிருமண முடிப்பான்

---

384. அரங்கன், பெரியாழ்வார் வீட்டையடைந்தான். அழகு எறிக்கும் - அழகை நான்கு பக்கத்திலும் வீசுகின்ற. கணிச்சியோன் - மழு ஏந்திய சிவபிரான். நூல் முறை நல்லோர் கணித்த ஓரை என மாற்றுக. கணித்த - நிர்ணயித்த. ஓரை - முகூர்த்தம்.

385. பெரியாழ்வார், அரங்கனைக் கண்டதும் சூரியனைக் கண்ட தாமரை போல் முகம் மலர்ந்தார். நீ, இங்கு வரத் தவம் புரிந்தது இந்த வீடோ? கோதையோ? அடியனோ? அடியேன் குலமோ? அறியேன்! என்று புகழ்ந்து தவிசில் அமரச் செய்தார். குடி - வீடு. பாரதத்தில் விதுரன் இப்படியே பேசுகிறான். "முன்னமே துயின்றருளிய" என்ற கிருட்டிணன் தூதுச் சருக்கப் பாடலைப் பார்க்கவும்.

மஞ்சன மாட வேண்டும்நீ யெனவவ்
வானவற் கிறைவனுஞ் சிவனுங்
கஞ்சனு மணிநீ ராடுமண் டபத்துட்
கடிதுகொண் டடைந்தனர் மாதோ. 386

தாண்டிய தரங்கப் பெருகடல் நீருஞ்
சத்தமா நதிகணீர் முதலாய்
வேண்டுவ வருவித் தவற்குநீ ராட்டி
மெய்யெலாம் பட்டினாற் றடவி
மீண்டலங் கரிக்குங் கூடமுட் கொடுபோய்
விளங்குபொன் னுடைமுடி முதலாம்
பூண்டயங் கிடுமா றணிந்துசந் தனமும்
பூந்தொடை முதலெலாந் தரித்தார். 387

திருமணக் கோல மமைத்தபின் பவர்பூஞ்
செங்கர மணிவிர லதற்குள்
ஒருவிர லதனைச் சங்கரன் பிடித்திட்
டுவப்பொடு மழைத்துவந் தனனவ்
விருவரு மிருபா லினுமிரு புயமு
மேந்தியெச் சரிக்கையோ டெழிலார்
குருநவ மணிக ளிழைத்தகல் யாண
மண்டப முட்கொடு புகுந்தார். 388

---

386 — 387. சிவபிரான் முதலானவர்கள் நல்ல முகூர்த்தத்தில் திருமணம் முடிக்க வேண்டும்; மஞ்சனம் ஆடுக என்றனர். பெருமான் தீர்த்தமாடியபின் பல்வகை அலங்காரம் செய்தனர். தாண்டிய தரங்கம் - வீசுகின்ற அலைகள். "தாண்டிய தரங்கக் கருங்கடற் புவி" என்பர் வில்லிபுத்தூரார். சத்த மாநதிகள் - ஏழு நதிகள். பூண் தயங்கிடுமாறு - ஆபரணங்கள் அழகு பெறும்படி.

388 — 389. சங்கரன், திருவரங்கனின் ஒரு விரலைப் பற்றிக்கொண்டு அழைத்துச்சென்று கல்யாண மண்டபம் அடைந்து மணவறையில் கிழக்கு முகமாய் அமரச் செய்தனன். பிரமனும் சிவபிரானும் தங்கள் மனைவியரைப் பார்த்தனர். அவர்கள் கோதை நாச்சியாரை அழைத்துவந்து வேதநாயகனின் வலப்புறத்தில் அமரச்செய்தனர். அவ்விருவர் - பிரம்மனும் இந்திரனும். முகுந்தன் - திருமால். தந்தால் அல்லது யாம் தரியோம் என்று அடியார்கள் பிரார்த்திக்கும்போது முத்தி கொடுப்பவன் முகுந்தன் என்பது ஸ்ரீ சகஸ்ரநாம பாஷ்யம். தமது மடவார்

புகுந்தவ ணமைத்த பைம்பொனா தனமேற்
பொருந்துறக் குணதிசை முகமாய்
முகுந்தனை யிருத்தித் தமதுமா மடவார்
முகந்தனை நோக்கவாங் கவரும்
மிகுந்தவன் பொடுபோய்க் கோதையைக் கொணர்ந்தவ்
வேதநா யகன்வலப் புறத்தில்
தகுந்தவம் முறையோ ராதன மிசையே
சார்வுற இருத்தினர் மாதோ. 389

ஏற்றனன்

தூரிய வகைகள் கறங்கிடு முழக்குஞ்
சுரிமுகங் களினெழு முழக்கும்
ஆரியர் வாழ்த்தும் மங்கல வொலியும்
அருமறை முனிவரோ தொலியும்
வாரியின் முழங்கப் பெரியர்வந் தென்பெண்
கோதையை வழங்கின னுமக்கென்
றோரிரு கரத்தும் நீர்பொழிந் தளித்தான்
உலகளந் தவனுமேற் றனனால். 390

மாதவன் மங்கல நாண் புனைந்தான்

மருவமை முளரி மலருறை யயனார்
மங்கலச் சடங்குகள் எழுவா
தருமறை முறையில் பலவுமாங் கியற்றி
யாவினெய் சொரிந்தெரி வளர்த்தித்

என்றது, பிரம்மனின் மனைவியான கலைமகளையும், சிவபிரானின் மனைவியான உமையையும், இந்திரனின் மனைவியான சசிதேவியையும். சார்பு உற - பொருந்த.

390. வாத்தியங்கள் முழங்க, பெரியவர்கள் வாழ்த்த, "என் கோதையை உமக்கு வழங்கினேன்" என்று கூறித் தாரை வார்த்தான். உலகளந்தவன் ஏற்றுக் கொண்டான். தூரிய வகைகள் - வாத்திய விதங்கள். சுரிமுகம் - சங்கு. ஆரியர் - அசாரியர்கள். வாரியின் - கடலைப் போல. "வாரி நீரினை வாரிமேல் வரும் மாரிநேர்தரு மாமதாச வதனப்பரன்" என்பது காவடிச் சிந்து. உலகு அளந்தவன் — கருத்துடையடைமொழி. கோதை பூமிதேவியே. வழங்கினும் வழங்காமற் போயினும் அவள் அவனுக்கே உரியள் என்பது கருத்து. "எனது ஆவி யார்? யார் ஆர்? தந்த நீ கொண்டாக்கினையே" என்பது திருவாய்மொழி.

திருமரு மார்பன் கோதையாள் கழுத்திற்
திருந்துமங் கிலியமங் கரத்தால்
பொருவுமா றணிந்தான்; அந்தரத் தவர்கள்
பூமழை பொழிந்துவாழ்த் தினரால். 391

மற்றுள சடங்கு நடந்தபின் பெரியார்
மகிழ்ந்துபல் லாண்டெடுத் தோதப்
பொற்றொடி மடவார் பலர்திரண் டிசைசீர்
பொருந்துசங் கீர்த்தன மிசைப்ப
விற்றிரு நுதற்கு டிக்கொடுத் தவள்தன்
மெல்விரல் பிடித்தம்மி மிதித்திட்
டுற்றெழு கனலை வலம்புரிந் தாழி
யுதகமார் குடத்திலிட் டெடுத்தே; 392

எதிருற அடையு மருந்ததி தனையு
மெழிற்கணா னோக்கிவந் திருப்ப
மதிதவழ் சடையா னெழுந்துவெண் பொரிகை
வாரியிட் டிடுதலு மகிழ்வாய்
கதிர்செயு மணிமோ திரமழ குறவாங்
கவர்திரு விரற்கணிந் தெவரும்
அதிசய முடனே துதிசெய மடவா
ராலநீர் சுழற்றிட வெழுந்தார். 393

---

391. பிரம்மன் மங்கலச் சடங்குகள் செய்தான். ஆவின் நெய் சொரிந்து வேள்விக் கனலை வளர்த்துத் திருவரங்கன் கோதையாரின் திருக்கழுத்தில் திருமங்கலநாண் பூட்டினான். தேவர்கள் பூமழை பொழிந்து வாழ்த்தினர். "ஆர்த்திடும் சுருதி அந்தம் வாழ்பவன் எம் அன்னைதன் கரந்தனைப் பிடித்துச் சேர்த்த மங்கலமாம் சூத்திரம் தன்னைச் செய்யவள் மிடற்றினில் பூட்டி" என்பர் இராமாநுஜ நாவலர் (பாத்ம புராணம்).

392. மற்றைய சடங்குகள் முடிந்தபின் பெரியாழ்வார் பல்லாண்டு இசைத்தார். மகளிர் இசை பாடினர். குடிக்கொடுத்த நாச்சியாரின் திருவடி விரலைப் பற்றி அம்மி மிதிக்கச்செய்தான் அரங்கன். பிறகு மோதிரத்தை நீர்க்குடத்தில் இட்டு எடுத்தனர்.

393. எதிரிலே அருந்ததி வந்தாள். அவளைப் பார்த்தார்கள். சிவபிரான் வெண்பொரி இறைத்தான். சிவபிரான் கரத்தில் மோதிரம் அணிந்தான் அரங்கன். பொரியிறைத்து மோதிரப் பரிசு மைத்துனன் பெறுவான் என்று சிலர் கூறுகின்றனர். மடவார் ஆலநீர் சுற்றி எடுத்தனர். பின்னர், மணமக்கள் மணவறையை விட்டு எழுந்தனர்.

எங்கிருந் தெம்மாப் பொருளையு மெடுத்திட்
டெய்திடு மிரவலர் பலர்க்கும்
தங்கண்மா மனதுள் வெறுப்புறும் வகையோர்
சாமமா மளவுமோய் விலதாய்ச்
செங்கன கமுமா மணியும்பட் டுடையுஞ்
செழித்தவா பரணமும் பிறவும்
மங்குலி னுதவி யறுசுவை பதார்த்த
வகையமு தியாவரு மருந்தி; 394

வெண்கரி யதனை யலங்கரித் ததன்மேல்
வீதியிற் கோலமாய் விளங்கி
மண்படு துகளுந் தூரிய வொலியும்
வானகம் போர்த்திடப் பலருங்
கண்படு காட்சிக் கடங்குறா வணம்அக்
கடிநகர் முழுவதும் வலமாய்
விண்படு கனக மாளிகை யதனின்
மேவினர் மீட்டுமின் புறவே. 395

விஞ்சொளி மணிகள் பைம்பொனி னிழைத்து
விளங்குறச் சித்திர வறைக்குள்
அஞ்சன வண்ணத் தரங்கநா யகனும்
அனநடைக் கோதையும் புகுந்து
பஞ்சணை மருவிக் காமமாங் கடலிற்
படிந்தின்ப நறவமுண் டுறங்கிச்
செஞ்சுடர்க் கதிரோன் குணகட லெழலுஞ்
செழித்தபஞ் சணையைவிட் டெழுந்தார். 396

---

394. ஆபரணமும், கனகமும், மணியும், பட்டாடையும் ஒரு யாமம் அளவும் தானம் வழங்கினர். அறு சுவை விருந்து அருந்தினர். மங்குலின் - மேகத்தைப் போல.

395. வெள்ளை யானையின்மேல் மணமக்கள் ஊர்வலம் வந்தனர். கடி நகர் - காவலுடன் கூடிய நகர்; விளக்கமான நகர். விண்படு கனக மாளிகை - ஆகாயம் வரை வளர்ந்துள்ள (ஆழ்வார்) வீடு. ஆழ்வாரின் வீட்டைக் கிருஷ்ண தேவராயர் வைதிக நயம்படப் பாடியுள்ளார். வல்லார்வாய்க் கேட்டு மகிழ்க.

396. சித்திர அறையில் அரங்க நாயகனும் கோதையும் காமக் கடலிற் படிந்து இன்பமாகிய தேனைச் சுவைத்தனர். கடரோன் எழ எழுந்தனர். விஞ்சு ஒளி - மிக்க ஒளி. குணகடல் - கிழக்குக் கடல்.

ஆழ்வார் சீர்வரிசை செய்தல்

அனங்கவேள் தனைவென் றுளபெரி யாழ்வார்
அரங்கமா நகரிற்பைந் தலைகொள்
சினங்கெழு மரவிற் றுயிலுமா தவனார்
சேர்ந்துதன் திருமக ளாகுங்
கனங்குழை கோதை தனைமணம் புணர்ந்த
காட்சியைக் கண்டுகண் களித்து
மனங்கொளா மகிழ்வுற் றவர்க்கரு ளிடுஞ்சீர்
வரிசைகள் பலவுமீந் தனரால். 397

ஈய்ந்தபின் பலவா முபசரிப் புடன்றன்
இணையடி தொழுதிடும் பெரியார்
வாய்ந்தவம் புயமா மலர்முகம் நோக்கி,
மாதவன், மறைமுதற் பலநூல்
ஆய்ந்தநல் லுளத்தோ யினிச்சில நாளின்
அரங்கமா நகரம்வந் தணைகென்
றேய்ந்தநல் லுரைகள் பலபல வாக
எடுத்தவன் களிப்புற விசைத்தே; 398

மணமக்கள் அரங்கம் அடைந்தனர்

மாதினுக் கரசாங் கோதையா ளுடனே
வயினனா மேறுவெற் பதன்தோள்
மீதெழுந் தருளி யரங்கமா நகர
மேவிவாழ்ந் திருந்தனன்; விரிஞ்சன்
பூதமார் படையோன் புரந்தரன் முதலாம்
புலவர்க ளாதிமற் றெவரும்
தீதிலாத் தத்தம் மடந்தைய ருடனே
சேர்ந்துதம் பதியில்வாழ்ந் தனரால். 399

---

397. பெரியாழ்வார் திருவரங்கனுக்குச் சீர் வரிசைகள் வழங்கினார். அனங்க வேள் - மன்மதன். அரவில் துயிலும் மாதவன் - திருவரங்கன். சீர் வரிசை - சீதனம்.

398 — 399. சீதனம் பெற்ற திருவரங்கன் ஆழ்வார் முகம் நோக்கிச் சில நாள்களில் அரங்கம் வருக என்று கூறி, கோதை நாச்சியாருடனே திருவரங்கத்தில் சென்று வாழ்ந்திருந்தான். மறை நூல் பலவும் - வேதங்களையும் ஆகமங்களையும் பிறவற்றையும். ஆய்ந்த - ஆராய்ந்த. ஏய்ந்த நல்லுரைகள் - பொருந்திய உபசார மொழிகள். வயினன் - கருடன் (விநதையின் புதல்வன். தந்திதாந்த நாமம்). சிவபிரான் முதலானவர்கள் தம் மடந்தையருடன் தங்கள் இருப்பிடத்தை அடைந்தனர்.

(வேறு)

அனையவர் யாவரு மகன்ற பின்னரின்
வினையற நோற்றவவ் விட்டு சித்தனும்
கனைகுரல் முரசதிர் கனக மாளிகை
புனைகொடி விசும்பினார் புதுவை வைகினன். 400

ஆழ்வார் அரங்கம் அடைதல்

பற்பல நாளகன் றதற்பி னோர்பகல்
வெற்பமை வடபெருங் கோயின் மேவியே
சற்பமேற் றுயில்வட பத்ர சாயிதன்
பொற்பதம் பணிந்திவை புகல்வ தாயினான்: 401

விரிபுக ழரங்கமுள் விளங்கிக் கண்வளர்
வரியர வணையினான் வருக வென்றெனைப்
பரிவொடு மற்றைநாள் பணித்த தற்கியான்
புரியவேண் டுவதெனோ புகல்தி யென்றனன். 402

என்னலும் யாமுவவ் வெழில ரங்கரும்
ஒன்றென வுளந்தெளிந் தொளிய ரங்கமுள்
சென்றணைந் தாங்கவர் செப்பு மம்முறை
நன்றெனப் புரிகென விடையும் நல்கினான். 403

---

400 முதல் 409 வரை ஆழ்வார் திருவரங்கம் சென்றதும், அரங்கன் கட்டளைப்படி கோவில் எழுப்பி, அக்கோவிலில் கருடனையும், நாச்சியாரையும், திருவரங்கனையும் பிரதிஷ்டை செய்ததும், பரமபதம் அடைந்ததும் கூறப் பட்டுள்ளன.

400. பெரியாழ்வார் அனைவரும் நீங்கியபின் புதுவையில் தனித்து வாழ்ந்தார். கனைகுரல் - ஒலிக்கின்ற குரல். கனக மாளிகை - பொன்னாற் செய்யப் பட்ட மாளிகை. வைகினன் - தங்கியிருந்தார்.

401 — 402. பற்பல நாள்களுக்குப் பின் ஆழ்வார் ஒரு தினம் வடபெருங் கோவிலையடைந்து இறைவனைப் பணிந்து, அரங்கநாதன் என்னை வரும்படி அன்று கூறினான். யான் செய்ய வேண்டியதைப் புகல்க என்றனர்.

401. வெற்பமை - மலை போன்ற.

402. வரியரவு - கோடுகளைப் பெற்ற ஆதிசேடன்.

403. யானும் திருவரங்கரும் ஒன்றே. வேறுபாடில்லை. தெளிவுபெற்றுத் திருவரங்கம் சென்று அவர் கட்டளையைப் புரிக என்று விடை கொடுத்தான் வடபத்ரசாயி.

நல்கிய விடைகொடு நளினம் போன்முகம்
மல்கிடப் புதுவைமா நகரம் நீங்கியே
பல்கலைக் கேள்வியர் பரவுங் கூடல்சேர்ந்
தல்கலி லழகர்பொன் னடிவ ணங்கியே; 404

விழைவொடு மாலிருஞ் சோலைமே விக்கள்
ளழகரம் புவிமல ரடிவ ணங்கியே
முழவொலி யுருமென முடுகிப் புற்றரா
நுழையரங் கந்தனை நோக்கிப் புக்கனன். 405

புக்குநல் திருவடி போற்றி நின்றவத்
தக்கசீர்ப் பெரியர்தா மரையின் றண்மலர்
ஒக்குமா முகந்தனை நோக்கி யொண்கதிர்
சக்கரக் கரவரங் கேசர் சாற்றுவார்: 406

ஈங்கொரு கோயிலொன் றியற்றி யெம்மையித்
தேங்குழற் கோதையைக் கருட தேவனைப்
பாங்குற விக்ரக மாகப் பண்ணியே
ஆங்கொரா சனமிசை யணுக வைத்தரோ; 407

---

404. ஆழ்வார் விடைபெற்று மதுரையை அடைந்து அழகரின் திருவடியைப் பணிந்தார். நளினம்போல் முகம் மல்கிட - தாமரைபோல் முகம் மலர. சங்கம் இருந்த நகர் ஆதலின் பல்கலைக் கேள்வியர் பரவும் கூடல். கேள்வியர் - வேதம் உணர்ந்தவர். "நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப ஏம இன்றுயில் எழுதல் அல்லதை வாழிய வஞ்சியும் உறந்தையும் போலக் கோழியின் ஏழாதெம் பேரூர் துயிலே" என்று பரிபாடல் மதுரையை நயம்படப் புகழும்.

405. திருமாலிருஞ் சோலை மலையில் கள்ளழகரைப் பணிந்த ஆழ்வார் திருவரங்கம் அடைந்தார். மத்தள ஒலியை இடியெனக் கருதிப் பாம்புகள் புற்றிலே நுழையும் திருவரங்கம். முழவு - மத்தளம். உரும் - இடி. முடுகி - வேகமாக.

406 — 408. திருவடியை வணங்கி நின்ற ஆழ்வார் முகத்தை நோக்கிய திருவரங்கனார், இங்கே ஒரு கோவிலை எடுத்து, அதில் எம்மையும், கோதையையும், கருடனையும் விக்ரமாகச் செய்து ஓராசனத்தில் எழுந்தருளப் பண்ணி ஆராதனம் செய்து இங்கே தங்குக" என்றனர்.

406. ஒண்கதிர் - ஒளிவீசிப் பிரகாசிக்கின்ற.

407. அணுக - ஒன்றி ஒரே ஆசனத்தில் இருக்க. முன்பு கோதை நாச்சியார் சொல்லியதை நினைந்து அரங்கன் பேசிய பேச்சுக்கள்.

பத்தியோ டுச்சவா திகள்பல் பூடணம்
நித்யவா ராதனம் நிகழ்த்தும் யாவையும்
ஒத்திடப் புரிந்திவ ணுறைதி யென்னலும்
அத்தகை புரிந்தவ ணணுகு நாளிடை; 408

ஆழ்வார் திருநாடலங்கரித்தார்

கோதில்பூ மாலை சூடிக் கொடுத்தவம்
மாதுமுன் னிலைத்திரு மந்தி ரந்தனை
ஓதியப் பெரியரு மொருதி னத்திடை
ஆதிநா ரணன்திரு வடிய டைந்தனர். 409

கோதையாரின் பாசுரம்

அன்னவ ளுரைத்தபா மாலை யாமதை
துன்னிய வன்பொடுந் துதித்து நாவினாற்
பன்னியுங் கேட்டுமிப் படியின் மீதுளோர்
மன்னின ரனேகர் வைகுந்த மாநகர். 410

(வேறு)

உரையப் பாமா லையிற்றிருமா
லுறையும் பதிகள் பதினாறாம்
அரங்கம் பிருந்தா வனங்குடந்தை
யணியா ரெமுனைக் கரைக்கண்ண
புரமா லிருஞ்சோ லைவில்லி
புத்தூர் பாண்டி வடம்வடம
துரைபத் தவிலோ சனந்திருவேங்
கடஞ்சீர் துவரா பதியோடும்; 411

(வேறு)

நீரார் பாற்கடலும் — ஏரா ராய்ப்பாடிப்
பேரார் வைகுந்தம் — சீர்கோ வர்த்தனமே. 412

---

408. உச்சவாதிகள் - விழா முதலானவை.

409. ஆழ்வார் சூடிக்கொடுத்த நாச்சியாரின் முன்னிலையில் பெரிய திரு மந்திரம் ஓதியபடியே நாரணன் திருவடியைச் சார்ந்தார்.

410. ஆண்டாள் திருவாய்மலர்ந்த பாசுரங்களைப் புகழ்ந்தும், பாடியும், கேட்டும் பலர் வைகுந்தம் உற்றனர். படியின்மீதுளோர் - உலகில் வாழ்ந்தவர்.

411 — 412. ஆண்டாள் மங்களாசாசனம் செய்த திவ்ய தேசங்கள் பேசப் படுகின்றன. இப் பாசுரங்கள் மூலத்தில் பிழைபட்டிருந்தன. அரிசமய தீப மேற் கோள் திருத்த உதவிற்று.

ஆண்டாள் சிறப்பு

(வேறு)

உலகந் தனில்வாழ் மானிடற்குள்
உயர்ந்த பெரியோர் முனிவர்களாம்;
இலகு முனிவோர் தமக்குயர்ந்தோ
ரெழிலாழ் வார்க ளாம்;அவற்குள்
நலமார் பெரியாழ் வாருயர்வாம்;
அவர்க்கும் நாச்சி யாரென்னும்
திலக நுதற்சூ டிக்கொடுத்தா
ளுயர்வாம் அதன்செய் கையுந்தெரிப்பாம். 413

இனிதாம் புண்ய மிதுபாப
மிதுநன் மைகளீ திதுதின்மை
அனியா யந்தீ திதுநியாய
மெனவே யனைத்து மறிவகையாய்
முனிவோர் பலசாத் திரநூல்கள்
புகன்ற முறையா லிவ்வுலகின்
மனிதர் தமக்குள் ளம்முனிவோர்
பெரியோ ரெனவைக் கப்படுமால். 414

காயைத் தின்னு மவர்தமக்குக்
கனியைத் தருமங் கவர்போல
மாயைத் தொடர்புள் ளுழல்வோரம்
மயக்கைக் கழிக்கும் வகையயனாஞ்

---

413 — 414. மனிதர்களுக்குள் முனிவர்கள் உயர்ந்தவர்கள். முனிவர்களை விட ஆழ்வார்கள் உயர்ந்தவர்கள். ஆழ்வார்களுக்குள் பெரியாழ்வார் உயர்ந்தவர். பெரியாழ்வாரைவிட நாச்சியார் உயர்ந்தவர் (பெரியவாச்சான் பிள்ளை).

414. முனிவர்களின் சிறப்பு. இது நன்மை, இது தீமை; இது நியாயம், இது அநியாயம்; என்று உலகம் உணரச் சாத்திரங்கள் உரைத்தமையால் முனிவர்கள் உயர்ந்தவர்கள். தின்மை - தீமை. "தின்மையும் பாசமும் சிதைந்து தேயுமே" (கம்பராமாயணத் தனியன்).

சேயைத் தருமுந் தியங்கமலத்
திருநா ரணனைச் செப்பியிடும்
ஆய வாற்றா லாழ்வார்கள்
முனிவோர்க் கதிக மெனவறைவார். 415

மாயன் றனக்குக் கண்திட்டி
வாரா வகைகாப் பணிந்திடுமா
றாய பல்லாண் டினையிசைத்தும்
அவரே பரமா மெனவிசைத்திட்
டேய கிழியும் அறுத்ததனா
லிசைக்கு மாழ்வார் தங்களுக்குள்
தூய பெரியாழ் வார்பெரியா
ரெனவே சொல்லும் முறைதெளிமின். 416

சூடும் நறும்பூ மாலைகளுஞ்
சுருபம் பெண்ணாய்ப் பத்தியொடும்
பாடு மிசைசேர் பைந்தமிழின்
பாமா லைகளும் பணவரவின்
ஆடுந் திருமாற் களித்தவரைப்
புணர்ந்த வதனா லருவினையைச்
சாடும் பெரியாழ் வாற்குமவள்
பெரியாள் எனவே சாற்றுவரால். 417

---

415. காயை உண்பவர்க்குக் கனியைக் கொடுப்பவர்போல் — மாயையோடு தொடர்பு கொண்டவர்களுக்கு நாராயணனையே காண்பிப்பதால் ஆழ்வார்கள் முனிவர்களைவிட உயர்ந்தவர்கள். மயக்கைக் கழிக்கும் வகை - மயக்கத்தைப் போக்கும்படி.

416. திருமாலுக்குத் திருஷ்டி தோஷம் வருமோ? என்று பரிவாலே பல்லாண்டு திருவாய்மலர்ந்ததாலும், திருமாலே பரம்பொருள் என்று நிலை நாட்டிக் கிழியை அறுத்ததாலும் பெரியாழ்வார் மற்றைய ஆழ்வாரினும் சிறந்தவர். "மங்களாசாசனத்தில் மற்றுள்ள ஆழ்வார்கள் — தங்களார்வத்தளவு தாளன்றிப் பொங்கும் — பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்—பெரியாழ்வார் என்னும் பெயர்" என்று மணவாள மாமுனிகள் திருவாய்மலர்ந்தருள்வர். கண் திருஷ்டி வாரா வகை - கண் எச்சில் படாதபடி. திருஷ்டி என்பதைத் திட்டி என்றார்.

417. ஆண்டாள் சிறப்பு. மலர்மாலையைச் சூடிக் கொடுத்ததனாலும், பெண்ணாகப் பிறந்ததால் காதல் பள்ளமடையாயிருத்தலினாலும், பெருமாளைத் திருமணம் செய்துகொண்டமையாலும் சூடிக்கொடுத்த சுடர்க் கொடியே பெரியவள் (திருப்பாவை வியாக்கியானம் — இதற்கு மூலம்).

இந்தக் கதையைப் படித்தவரும்
எழுது மவரு மிதன்பொருளைச்
சிந்தை தெளிய வுரைப்பவருங்
கேட்கும் செய்கை யுடையவரும்
முந்தை வினையைக் களைந்துபத்தி
முயன்று பலபாக் கியங்களொடும்
மைந்தர்ப் பெருஞ்செல் வமுமடைந்து
கடையிற் பதவி மன்னுவரால். 418

ஆசாரியர்களின் வரலாறு பேசுவோம்

புதுவைப் பெரியாழ் வார்மகளாய்ப்
புவிமா துதித்திட் டரங்கர்தமை
வதுவை புரிந்த சரித்ரமதின்
வகைகள் பலவும் விரித்துரைத்தோம்;
இதுகா றாழ்வார் களின்சரிதம்;
இனியா ரியர்க ளியற்சரிதம்;
அதனுள் நாத முனிசரிதம்
அதனை யிவ்வா றெனவறைவாம். 419

ஆண்டாள் திருவவதார அத்தியாயம் முற்றும்.

(முதலாம் காண்டம் முற்றும்)

ஆழ்வார் எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

---

418. இந்த வரலாற்றைப் படித்தவர்கள், எழுதுபவர்கள், உரைப்பவர்கள், கேட்பவர்கள் யாவரும் தீவினைகளைக் களைந்து பல பாக்கியங்கள் பெற்று மைந்தர்களையும் செல்வத்தையும் பெற்று முடிவில் வைகுந்த பதவி பெறுவார்கள்.

419. இதுவரை ஆழ்வார்களின் வரலாற்றைப் பகர்ந்தோம். இனி, ஆசாரியர்கள் வரலாற்றைப் பேசப் புகுகின்றோம். முதலில் நாதமுனிகள் சரிதம் புகல்வோம் என்று தோற்றுவாய் செய்கின்றார்.